திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் கால்நடை மருந்தகம் என்பது சுமார் 50 ஆண்டு காலமாக இயங்கி வருகிறது. உத்திரமேரூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள 10 கிராமங்களிலிருந்தும் சுமார் 60 கால்நடைகள் அந்தக் கால்நடை மருந்தகத்திற்குத் தினசரி சிகிச்சைக்காக வருகின்றன. அதுமட்டுமல்லாமல், செயற்கை முறை கருவூட்டலும் சுமார் 15 முதல் 20 கால்நடைகளுக்கு நடைபெறுகிறது. மேலும், 5,800 பசுக்கள், 325 எருமை மாடுகள், 3,400 செம்மறியாடுகள், 5,800 வெள்ளாடுகள், 6,000 கோழிகள் என அந்த மருந்தகத்தைச் சுற்றியுள்ள தாலுகாவிலுள்ள சுமார் 10 கிராமங்களிலும் இருக்கின்றன. நீண்ட காலமாக இருக்கின்ற அந்த மருந்தகம் 47 சென்ட் நிலத்தில் இருக்கிறது. அங்கு ஆடுகள் கட்டுவதற்கான இடமும் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள்.*

[2023 மார்ச் 29

திரு. க. சுந்தர்: *இல்லை, இல்லை, அந்த மருந்தகம் தரமுயர்த்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிதிநிலைமைக்கேற்றாற்போல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்களே?*

திரு. க. சுந்தர்: *அந்தக் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், அந்த மருந்தகம் தரமுயர்த்தப்படுமா அல்லது தரமுயர்த்தப்படாதா என்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருந்தகத்தைத் தரமுயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தால், அதை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கான நிதியாதாரத்தோடு, அதைச் செயல்படுத்துவதற்கான நடைமுறைகளைக் கொண்டு வருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், இந்த நிலைகளையெல்லாம் அறிந்து, தற்போது 245 நடமாடும் கால்நடை வேன்களை இயக்கும் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். அந்த வகையிலே, எந்தெந்தப் பகுதிகளில் தேவைகள் இருக்கின்றனவோ, எந்தெந்தப் பகுதிகளில் கால்நடைகளுக்கு சிகிச்சை தேவைப்படுகிறதோ, அங்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கின்றார்கள்; அதை நடைமுறைப்படுத்துவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 மார்ச் 29]
65—

காதிபவன் கிளை

***39020—திரு. சி. மகேந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளத்தில் காதிபவன் கிளையைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *திருப்பூர் மாவட்டத்தின் தலைமையிடமான திருப்பூர் குமரன் நகரில் காதி கிராப்ட் பெயரில் கதர், பட்டு, சோப்பு, தேன் மற்றும் காலணிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் தற்காலிக கதர் அங்காடிகள் அமைத்து, கதர் மற்றும் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன், பொது விநியோகத் திட்ட கடைகளில் சோப்பு வகைகளும், பனை வெல்லமும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே, மடத்துக்குளத்தில் காதிபவன் கிளையை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.*

திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நெஞ்சங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு அம்மா ஆகிய இருபெரும் தெய்வங்களின் அருளாசியுடன், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) புகழ்பெற்ற தமிழக சட்டமன்றப் பேரவைக்கு வருகை தந்திருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் மூன்றாம் தலைமுறைத் தலைவர் புரட்சித் தலைமகன் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொழுமம் மற்றும் கணியூர் பகுதிகளில் மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின்கீழ் சர்வோதயச் சங்கத்தின் நூல் நூற்பு நிலையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேலும், உடுக்கம்பாளையம், சின்னபொம்மன்சாலை, கொடுங்கயம், வாளவாடி, குரல்குட்டை, மலையாண்டிபட்டணம், பாப்பான்குளம் மற்றும் காரத்தொழுவு ஆகிய பகுதிகளில் நெசவாளர்கள் மற்றும் குறு, சிறு தொழில்முனைவோர்கள் அதிகளவில் உள்ளனர். அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட கதர், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின்கீழ் புதிய கதர் நூல் நூற்பு நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் என்பது ஒரு பேரூராட்சியாகும். என்னைப் பொறுத்தமட்டிலும் நான் தெரிவித்துக்கொள்வது என்னவெனில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் கதர் அங்காடிகள் இல்லாத பகுதிகளிலுள்ள பொதுமக்கள் காதி பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களைப் பெற்று, பயன்பெறும் நோக்கில், விருப்பம் தெரிவிக்கும் இளைஞர்களுக்கு தனி கிளைக்கான உரிமம், அதாவது, franchise உரிமம் வழங்கப்படுகின்றது. யாராவது அங்காடி வைத்து நடத்த முன்வந்தால் அவர்களுக்கு franchise கொடுக்கிறோம். அதன்படி, மடத்துக்குளம் பேரூராட்சிப் பகுதி என்பதால் வைப்புத் தொகையாக ரூ.20,000/– செலுத்த வேண்டும். அந்தத் தொகையைச் செலுத்தினால் உடனடியாக உரிமம் வழங்கப்படும். மடத்துக்குளம் பேரூராட்சிக்கு கதர் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் வழங்கப்படும். அப்படிப்பட்ட இளைஞர்களுக்கும் ஒரு மாதத்திற்கு ரூ.20,000/– முதல் ரூ.30,000/– வரை இலாபம் கிடைக்கும். ஆகவே, franchise முறையில் விற்பனை செய்வதற்கு உங்களுடைய தொகுதி, மடத்துக்குளம் பேரூராட்சியிலே நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நீங்கள் செய்து மனுக்களைத் தந்தால், உடனடியாக உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

2023 மார்ச் 29]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.*

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் புதிதாக உருவாக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி. அதனை நகராட்சியாகத் தரமுயர்த்த கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது; விரைவில் தரமுயர்த்த வாய்ப்புள்ளது. எனவே, அந்தப் பகுதியிலே உங்கள் துறையின்கீழ் மத்திய அரசின் திட்டங்களாகட்டும், மாநில அரசின் திட்டங்களாகட்டும் அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி, கிராமப்புறங்கள் சார்ந்த அந்தப் பகுதிகளை மேம்படுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியில் சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்கள், ஊராட்சிகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார். அனைத்து நியாய விலைக் கடைகளிலும் கதர் பொருட்களை விற்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கதர், பட்டு, தேன், கருப்பட்டி மற்றும் பல்வேறு பொருட்கள்—இப்போது நீரிழிவு நோய் அதிகமாக இருப்பதால் சர்க்கரைக்கு பதிலாக கருப்பட்டியைக் கேட்கிறார்கள்–இவற்றையெல்லாம் விற்பனை செய்வதற்குத் தமிழ்நாடு முழுவதும் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே, உங்கள் கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளில், உங்கள் தொகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளில் பொருட்கள் ஏதேனும் விடுபட்டுப் போயிருந்தால், நீங்கள் எழுதித் தந்தால், உடனடியாக அங்கே கொண்டு சென்று விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

ஆற்றல்மிகு மின் விளக்குகள்

***12641—திரு. பெ. ராமலிங்கம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மலைக்கோட்டையின் கீழ் பகுதியிலிருந்து மேல் பகுதி வரை ஆற்றல்மிகு மின் விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வரலாற்றுச் சிறப்புமிக்க நாமக்கல் மலைக்கோட்டையானது நாமக்கல்லிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில் வசதிகளை ஏற்படுத்தித் தருகின்றது. இக்கோட்டைக்கு ஆண்டுக்கு தோராயமாக 20,000 முதல் 25,000 வரையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். இங்கே வருகைப் புரியும் சுற்றுலாப் பயணிகள் இலவச அனுமதியில் மட்டுமே சென்று வருகின்றனர். இக்கோட்டையின் கீழ் பகுதி முதல் மேல் பகுதி வரை LED விளக்கு வசதிகள் சுற்றுலாத் துறையின் மூலமாக அமைக்க வேண்டுமெனில் தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு திட்டத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி, பணிகளைச் செயல்படுத்தும் தொடர்புடைய துறையின் மூலமாக மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் உரிய கருத்துரு மற்றும் விரிவான திட்ட மதிப்பீடு பெறப்படுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

2023 மார்ச் 29]

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள மலைக்கோட்டை, 16 ஆம் நூற்றாண்டில் சேந்தமங்கலம் பாளையக்காரரான ராமச்சந்திர நாயக்கர் அவர்களின் காலத்தில், மைசூர் அரசின் அதிகாரி லட்சுமி நரசைய்யா அவர்களால் கட்டப்பட்டது. மன்னர் திப்பு சுல்தான் அவர்கள் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்து போரிட இக்கோட்டையைப் பயன்படுத்தினார் என்பது வரலாறு. மிகப் பெரிய ஒற்றைப் பாறையின் உச்சியில் கோட்டை உள்ளது. மலையைச் செதுக்கி, குடைவரைக் கோயில்கள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள நரசிம்மர் கோயிலும், ரங்கநாதர் கோயிலும் மலையைக் குடைந்து செய்யப்பட்டவையாகும். இக்கோயில்கள் கி.பி. 784–ல் அதியமான் மரபைச் சேர்ந்த குணசீலன் கட்டியதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. நைனா மலையின் வட கிழக்கில் கமலாலயக் குளம் அமைந்துள்ளது. நாமக்கல் ஆஞ்சநேயர் சுவாமி கோயிலும் இதனருகில் அமைந்துள்ளது. எனவே, வெளி மாவட்டங்களிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளும், நாமக்கல் நகரின் பொதுமக்களும் கண்டுகளிக்கின்ற வகையிலே இக்கோட்டைக்கு கீழிருந்து மேல் வரை ஆற்றல்மிகு மின் விளக்குகள் அமைத்து, அத்துடன் அங்கு அமைந்துள்ள கமலாலயக் குளத்தில் படகு சவாரியும் ஏற்படுத்திக் கொடுத்தால், அது மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக அமையும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் கோரிக்கை வைத்துள்ளோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டம், நைனா மலையில் அமைந்துள்ள அருள்மிகு நைனா மலை வரதராஜபெருமாள் திருக்கோயில் மலைப் பாதை அமைக்க மற்றும் சுற்றுலா அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காக ரூ.719.55 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டது. 2020–2021 ஆம் ஆண்டில் மேற்காணும் திட்டத்திற்காக திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ.13.06 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, நாமக்கல்

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஜனவரி 2021–ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பணிகள் தொடங்கப்பட்டு, சுமார் 600 மீட்டர் பணிகள் முடிக்கப்பட்ட நிலையில், மேற்காணும் சாலை அமைக்கும் பணியின் இடம் வனத் துறையின் கட்டுப்பாட்டில் வருவதால் பணிகள் செய்வது தடைபட்டது. எனவே, வனத் துறையின் தடையின்மைச் சான்று வழங்கிட முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர், சென்னை அவர்களிடம் 1–11–2022 நாளிட்ட கடிதம்மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட பகுதியிலுள்ள நைனா மலையில் அமைந்துள்ள அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயிலுக்கு மலைப் பாதை அமைக்க தடையின்மைச் சான்று வழங்க அரசு பரிசீலிக்கலாம் என முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், நைனா மலையில் அமைந்துள்ள அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில் மலைப் பாதை திட்டப் பணியினை மேற்கொள்ள ஏதுவாக, அரசு முதன்மைச் செயலாளர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அவர்களை வனத் துறையிடம் விரைவில் தடையின்மைச் சான்று வழங்க ஆவன செய்யுமாறு சுற்றுலா இயக்குநர் அவர்களால் 27–3–2023 அன்று கேட்டுக்கொள்ளப்பட்டது. விரைவில் தடையின்மைச் சான்று பெறப்பட்டு பணிகள் முடிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த கமலாலய குளத்தில் படகு சவாரி இயக்குவதற்கு நாமக்கல் நகராட்சியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாமக்கல்–கரூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சுற்றுலாத் துறைக்குச் சொந்தமான தமிழ்நாடு ஓட்டலில் உணவகத்துடன்கூடிய தங்கும் விடுதி அறைகளைச் சீர்செய்து உடனடியாக பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நாமக்கல்–கரூர் நெடுஞ்சாலையில் 1.96 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தமிழ்நாடு ஓட்டல், 16 அறைகள், 2 பொதுப் படுக்கைகள் மற்றும் உணவக வசதியுடன் 2000 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்நிலையில், தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டதால் தமிழ்நாடு ஓட்டல், சேவை சாலையில் அதாவது* Service Road*-ல் வந்துவிட்டது. இந்நிலையில் வணிகரீதியான சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தினால் தமிழ்நாடு ஓட்டல் 2004 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பெண்கள் தொழிற்பயிற்சி பள்ளிக்கு வாடகைக்கு விடப்பட்டது. மேலும், தமிழ்நாடு ஓட்டலை தனியாருக்குக் குத்தகைக்குவிட இரண்டு முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட போதிலும் யாரும் ஓட்டலை எடுத்து நடத்த முன்வரவில்லை. எனவே, மீண்டும் அந்த ஓட்டலைப் புனரமைத்து நடத்த ஆவன செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

67—

துணை மின் நிலையம்

***3806—திரு. தி. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி வட்டம், கிருஷ்ணாஜிபட்டினத்தில் உள்ள காரக்கோட்டை பாலம் சந்திப்பில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[*2023 மார்ச் 29*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி வட்டம், காரக்கோட்டை கிராமம், புல எண் 288/3–ல் 0.49 ஹெக்டேர் அரசு நிலத்தில் 33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைத்திட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்திட புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் 24–3–2023 அன்று ஆணை வழங்கியுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த ஆண்டு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் தி. ராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காரக்கோட்டை துணை மின் நிலையத்தோடு சேர்த்து, கடந்த மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட மதகம் ஊராட்சியிலும் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், இன்னும் அது மக்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை. போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகையால், இந்த நிதியாண்டில் அதற்கும் நிதி ஒதுக்கி, காரக்கோட்டை மற்றும் மதகம் ஊராட்சிகளிலே துணை மின் நிலையங்கள் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 9 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அறிவிக்கப்பட்டது.*

2023 மார்ச் 29]

அதில் அறந்தாங்கி தொகுதிக்கும் 3 புதிய துணை மின் நிலையங்கள் அறிவிக்கப்பட்டன; அதிலே மதகம் பகுதியில் 4 கோடியே 70 இலட்சம் ரூபாயில் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. இப்போது ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட இருக்கின்றன. இந்த ஒப்பந்தப்புள்ளிகள் நிறைவு பெற்ற பிறகு பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துடன் சேர்த்து அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், கிழக்குக் கடற்கரைச் சாலை அதாவது, ஒரு முக்கிய பிரதான சாலையான* East Coast Road*-ல் மீமிசல் முக்கிய பகுதியாக இருக்கின்றது. அதைச் சுற்றி நிறைய கிராமங்களும் இருக்கின்றன. அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மக்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்துக்கொண்டு வருகிறார்கள். எனவே, அங்கு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்ன 3 துணை மின் நிலையங்களில், ஆவுடையார்கோவில் துணை மின் நிலையமும் இருக்கிறது. அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு முன்பாக, நிலம் கண்டறியக்கூடிய தேவை இருக்கிறது. ஒன்றுக்கு நிலம் கண்டறியப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, டெண்டர் கோரக்கூடிய நிலையில் இருக்கின்றது. இன்னொன்றுக்கு இப்போதுதான் நிலம் வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது துணை மின் நிலையத்திற்கு நிலம் தேவையிருக்கிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடத்திலே பேசி, விரைவாக, அதற்கான நிலத்தைப் பெற்று, பணிகள் தொடங்கப்படும் என்பதை*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார் அவர்கள்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் (வடக்கு) தொகுதியில் அருள்மிகு கொண்டாத்து காளியம்மன் திருக்கோயில் உள்ளது. அக்கோயிலின் குண்ட திருவிழாவின்போது, கிட்டத்தட்ட 4 இலட்சம் மக்கள் கலந்துகொள்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள மின் கம்பிகள் அனைத்தும் மேலே செல்கின்றன. அந்தப் பகுதியில் தேரை வடம் பிடித்து இழுக்கும்போது அந்த மின் கம்பிகளால் இடையூறு ஏற்படுகின்ற காரணத்தினால், தேர் உலா வருவதற்கு ஏதுவாக புதைவடக் கம்பிகளாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேரோடும் வீதிகளில் புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய முக்கிய திருக்கோயில்கள் குறித்து இந்து சமய அறநிலையத் துறையோடு பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தத் திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத் துறையின் ஒப்புதலைப் பெற்று, முன்னுரிமை அடிப்படையில், அதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

2023 மார்ச் 29]

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மின்கம்பிகளைப் புதைவடக் கம்பிகளாக மாற்றியமைக்கும் பணிக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாக அறிகிறேன். என்னுடைய தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ள இந்தப் பணிகள் வரும் நிதியாண்டிலே துவங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் மட்டுமல்ல, மொத்தம் 7 கோட்டங்களுக்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பெற்றுள்ளது. நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்ற பிறகு, சென்னை மாநகராட்சியில் இருக்கக்கூடிய அந்த 7 கோட்டங்களில் புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கயிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள்.*

திரு. மு. பூமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் புகழ்பெற்ற டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்கு மதுரையில் சிலை அமைக்க அனுமதி அளித்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாகவும், மதுரை மக்களின் சார்பாகவும் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

Sourashtra School–*ல் ஒரு பெரிய* tower *இருக்கிறது. அந்தப் பள்ளியில் 2,000 மாணவர்கள் படிக்கின்றார்கள். அதைக் கேபிளாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே கடிதம் வழங்கியிருக்கிறார்கள். துறையினுடைய அதிகாரிகளுக்கு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டு, அந்த இடத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* JMH. *அசன் மௌலானா அவர்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரிக்கு இன்னொரு* sub-station *வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். தற்போது, வாக்காளர்கள் பட்டியலில் பார்த்தால்கூட சென்னை கோட்டத்தில், வேளச்சேரி தொகுதி, அதிகமான வாக்காளர்கள் உள்ள சட்டமன்றத் தொகுதியாகும். நிறைய* transformers-*மின்மாற்றிகள் வழங்கியிருக்கிறீர்கள். இந்த* backfeeding, *மற்ற சட்டமன்றத் தொகுதியிலிருந்து வரக்கூடிய* backfeeding, *அதாவது* Raj Bhavan Colony-*யிலிருந்து வரும்* feeding-*லிருந்து, வேளச்சேரிக்கு பிரத்யேகமாக ஒரு* substation *அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்தில் மட்டும் 25 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். வேளச்சேரி பகுதியில் ஆய்வு செய்யப்பட்டு, தேவை ஏற்படின், சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023 மார்ச் 29]

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். நான் முதல்வன் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியைச் சார்ந்த 10 கோரிக்கைகளில் குறிப்பிட்டுள்ள, திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் 110 கே.வி. துணை மின் நிலையமும், கந்திலி ஒன்றியப் பகுதியில் 33/11 கே.வி. துணை மின் நிலையமும் அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியில் இரண்டு துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒன்று, கந்திலி பகுதியில் தரம் உயர்த்தக்கூடிய பணிக்கு நிருவாக அனுமதி பெறுவது செயல்முறையில் உள்ளது. அதேபோல, நத்தம் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. எனவே, இரண்டு துணை மின் நிலையங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி இந்த ஆண்டு அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***50420—திரு. S. ஜெயக்குமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2023 மார்ச் 29

(அ) ஊத்துக்குளி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியில் பள்ளகவுண்டம்பாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. பள்ளகவுண்டம்பாளையம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் விஜயமங்கலம் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்ற காரணத்தால், பள்ளகவுண்டம்பாளையம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் தற்போது ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்கி, எங்களுக்கும் காலம் வரும், காலம் வந்தால் வாழ்வு வரும், (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்வு வந்தால் தமிழகத்தையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களையும் வாழவைப்பேன் என சூளுரைத்து, தடைகளைத் தகர்த்தெறிந்து கழகப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் எங்கள் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்தி வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதிக்குட்பட்ட, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றிய, நடுப்பட்டி துணை சுகாதார நிலையம், சேலம்–கொச்சின் தேசிய நெடுஞ்சாலை அருகே பள்ளகவுண்டம்பாளையம் என்ற கிராமத்தில் அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில், விஜயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்ட விஜயபுரி, கம்பளியம்பட்டி,

2023 மார்ச் 29]
மேட்டுப்புதூர் சின்னவீரசங்கிலி, பெரியவீரசங்கிலி, கராண்டிபாளையம் போன்ற கிராம ஊராட்சிகளினிடையே அமைந்துள்ளது. அங்கு மக்கள் அதிகளவில் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள். எனவே, எங்கள் பகுதியைச் சுற்றியுள்ள நடுப்பட்டி, கஸ்தூரிபாளையம், காவுத்தம்பாளையம், குவனம்பட்டி, செங்காளிபாளையம், புத்தூர் பள்ளப்பாளையம், புஞ்சைதுறையம்பாளையம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், எந்த இடத்தில் என்ன வேண்டுமென்று நேராக கேள்விக்கு வாருங்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *போன்ற ஊராட்சிகளுக்குட்பட்ட 40-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் இந்த துணை சுகாதார நிலையத்தை சிகிச்சைக்காக பயன்படுத்தி வருகின்றனர். எனவே, இப்பகுதி மக்கள், மேல்சிகிச்சைக்காக, 10 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள குன்னத்தூர், ஊத்துக்குளி ஆகிய பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தேடிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, ஊத்துக்குளி வட்டாரத்தில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டுமே உள்ளதால், மேற்சொன்ன நடுப்பட்டி துணை சுகாதார நிலையத்தை, ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், இரண்டு மாவட்டங்களில் வருகிறது. ஊத்துக்குளி ஒன்றியம் என்பது திருப்பூர் மாவட்டத்திலும், மற்ற ஒன்றியங்கள் ஈரோடு மாவட்டத்திலும் வருகின்றன. ஒரு சட்டமன்றத் தொகுதி இரண்டு மாவட்டங்களில் வருவது பெருந்துறை சட்டமன்றத் தொகுதியாக இருக்கிறது. அந்த நிலையில்தான், ஊத்துக்குளி ஒன்றியத்தில் உள்ள நடுப்பட்டி ஊராட்சியில் அமைந்திருக்கின்ற பள்ளகவுண்டம்பாளையம் துணை சுகாதார நிலையத்தை இ-சஞ்சீவினி முறையில் ஏற்கெனவே, 5 கிலோ*

மீட்டர் தொலைவில் இயங்கி கொண்டிருக்கின்ற விஜயமங்கலம் பகுதியில் இருக்கின்ற மருத்துவமனையோடு இணைக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர் சொல்வது போன்று, 10 கிலோ மீட்டர் என்பது ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சொல்கிறார். நான் சொல்வது திருப்பூர் மாவட்டத்தில் இருக்கின்ற விஜயமங்கலம் பகுதி 5 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. ஒன்றிய அரசின் விதிமுறைகளில், 8 கிலோ மீட்டர் இடைவெளியில் இன்னொரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமையக் கூடாது என்று உள்ளது. இயற்கையாகவே அவரது தொகுதி என்பது இரண்டு மாவட்டங்களில் அமைந்திருக்கக்கூடிய தொகுதியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.*

முற்பகல் 10–45

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஜயமங்கலம் என்பது ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட, விஜயபுரி ஊராட்சிக்குட்பட்ட பகுதி. அதேபோல, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி என்பது சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் வளர்ந்துவரக்கூடிய தொகுதியாக உள்ளது. பெருந்துறை நகரை ஒட்டியுள்ள கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் நாளது வரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு அருகாமையிலே தனியார் பங்களிப்புடன்கூடிய 1.50 ஏக்கர் இடமும் தயாராக உள்ளது. எனவே ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யவேண்டும். மேலும், எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காஞ்சிக்கோவில் பேரூராட்சி, பெத்தாம்பாளையம் பேரூராட்சி, பள்ளபாளையம் பேரூராட்சி உள்ளிட்ட பேரூராட்சிகளை உள்ளடக்கிய காஞ்சிக்கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர தேவைக்காக 108 ஆம்புலன்ஸ் சேவையும், நல்லாம்பட்டி பேரூராட்சி மற்றும் 18 கிராமங்களை உள்ளடக்கிய, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எத்தனை கேள்விகள்?*

2023 மார்ச் 29]

திரு. S. ஜெயக்குமார்: *திங்களூர் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் அவசரத் தேவைக்காக 108 ஆம்புலன்ஸ் சேவையும் தற்போதைய நிலையில் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றை வழங்குவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே, 48 துணை சுகாதார நிலையங்களும், 8 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 2 நடமாடும் மருத்துவ வாகனங்களும் இருந்து கொண்டிருக்கின்றன. அவை மட்டுமல்லாது, இரண்டு வட்ட மருத்துவமனைகள் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் மேலாக ஓர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அந்தத் தொகுதியில்தான் இருக்கிறது. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலைப் பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதாகவும் அதற்கு சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார், அதைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

ஏற்கெனவே ‘Hospital on Wheels’ *என்கின்ற வகையில் இரண்டு நடமாடும் வாகனங்கள் இருக்கின்றன. இரண்டு 108 வாகனங்களைக் கேட்டிருக்கிறார். அவற்றையும் அங்கே புதியதாக ஏற்படுத்தித் தருவதற்கான நடைமுறை மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழப்புலிவார் ரோடு, இப்ராகிம் பார்க்கில் அமைந்திருந்த, கொடும்பலூர் பிரசவ மருத்துவமனை* EB *ரோடு பகுதியில் உள்ள பீரங்கிகுள பகுதிக்கு மாற்றிவிட்ட*

காரணத்தினால் தற்சமயம் அந்த மருத்துவமனை செயல்படாமல் பூட்டப்பட்டுள்ளது. மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக GH மகாத்மா காந்தி நினைவு மருத்துவமனைக்கு வரவேண்டியுள்ளதால் அங்கு மக்கள் கூட்டத்தைக் குறைக்கின்ற வகையில் கொடும்பலூர் மருத்துவமனையை அனைத்து வசதிகளையும் கொண்ட Multispeciality Hospital ஆக மாற்றித் தந்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர இயலுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேசமயம், நீண்ட காலமாக அந்த GH–க்கு lift வசதி இல்லாமல் இருந்தது. அதைப் பெற்றுத் தந்தமைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்து, இந்த Multispeciality Hospital–ஐயும் உருவாக்கித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை Multispeciality Hospitals ஏற்கெனவே ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் தற்போது மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனை கிண்டியிலும் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் இரண்டுதான் அமைந்திருக்கின்றன. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஆசைதான்; அவரவர்களுடைய தொகுதியிலும் ஒரு Multispeciality Hospital வேண்டுமென்பது; இருந்தாலும், தேவைக்கேற்ப மருத்துவக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

திருமதி க. சிவகாமசுந்தரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி, மைலம்பட்டி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவ வசதி இல்லாததால் இப்பகுதி மக்கள், மகப்பேறு மருத்துவத்திற்காக 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அல்லது 30 கிலோ

2023 மார்ச் 29]

மீட்டர் தொலைவிலுள்ள குளித்தலை அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியதாகயிருக்கிறது. ஆகவே, கடவூர் வட்டாரப் பகுதி, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளம் தாய்மார்களின் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, மைலம்பட்டி அரசு மருத்துவமனையை ஒருங்கிணைந்த அவசரகால அரசு தாய்-சேய் நல மையமாக மாற்றி, 24 மணி நேரமும் மகப்பேறு மருத்துவம் பார்க்கும் வகையில் மகப்பேறு மருத்துவர்கள் நியமனம் செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைலம்பட்டி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவத்திற்கான சிகிச்சைப் பிரிவு ஒன்று புதியதாகத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கொரோனா தொற்றுக் காலத்தில் தொண்டுள்ளத்தோடு மருத்துவப் பணி செய்த டாக்டர்களுக்கும், செவிலியர்களுக்கும் வழங்கப்பட்ட உணவு, அவர்கள் தங்கியிருந்த விடுதிகளுக்கும்,* Restaurant*-களுக்கும்-உணவு விடுதிகளுக்கும் இன்னும் உரிய பணத்தைத் தரவில்லை என்ற செய்தி என்னிடம் தரப்பட்டது. இதுகுறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சட்டமன்றத்தில் இதுசம்பந்தமாக நாம் பலமுறை விவாதித்திருக்கிறோம். நியாயமான*

கட்டணத்தையும், நியாயமான உணவு வகைகளை வழங்கிய அந்த நியாயமான bill *எல்லாம்* settle *செய்தாகிவிட்டது. அநியாயமான வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஓட்டலே இல்லாமல் வெறும் உணவு* supply *செய்ததாகத் தரப்பட்ட* bill, *அதைமட்டும்தான்* settle *செய்யாமல் வைத்திருக்கிறார்கள். அதுவும்கூட ஆய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. உண்மையிலேயே உணவைத் தரமாக வழங்கியிருப்பார்கள் என்றால் அதற்கான* bill settle *செய்யப்படும். அதுமாதிரி ஏதாவது இருந்தால் மாண்பிற்கினிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி அரசு பொது மருத்துவமனை மிகப் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்போது சிதலமடைந்து இருக்கிறது. இம்மருத்துவமனையில் 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயனடைந்து கொண்டிருக்கின்றன. புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அந்த மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று அங்கே இருக்கிற மாவட்ட அரசு மருத்துவர்களின் கருத்துருக்களையும் பெற்று நிச்சயம் நிறைவேற்றித் தருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 மார்ச் 29]
69—

வணிக வரி அலுவலகக் கட்டடம்

***21542—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் வணிக வரிக் கோட்டம், திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் புதிதாக வணிக வரி அலுவலகக் கட்டடம் தரை தளம் மற்றும் முதல் தளம் சேர்த்து சுமார் 5,512 சதுர அடியில் கட்டுவதற்காக ரூபாய் ஒரு கோடியே 48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 9–7–2022 அன்று கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, தற்போது 85 சதவிகிதப் பணிகள் நிறைவுற்ற நிலையில் எஞ்சிய பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு இந்த ஆண்டிலேயே போளூர் வணிக வரி அலுவலகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிரிகளின், துரோகிகளின், (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சியாளர்களின், சூது மதியாளர்களின் (மேசையைத் தட்டும் ஒலி), துன்மதியாளர்களின் பாய்ந்து வருகின்ற ஈட்டி முனைத் தாக்குதல்களைக் கூட எதிர்கொள்கின்ற ஆற்றலையும், வீரத்தையும், விவேகத்தையும், அறிவையும் ஒருங்கே பெற்றிருக்கின்ற . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள்.*

[2023 மார்ச் 29

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: ஒரே ஒரு நிமிடம். சூரியனால் உருக்க முடியாத பனிமலைக்குள் நிமிர்ந்து நிற்கும் எங்களின் இமயமலையே (குறுக்கீடு) தலைகளை மட்டுமே எண்ணுகின்ற தமிழக தலைவர்கள் வாழும் தமிழ் மண்ணில் (குறுக்கீடு) ஏழை இதயங்களை எண்ணிப்பார்க்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மூன்றாம் தலைமுறையான எங்களுடைய மரியாதைக்குரிய கழகத்தினுடைய ஒப்பற்ற பொதுச் செயலாளர், ஒரே பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலையில் ஒரு துணை ஆணையர், இரண்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் ஒருங்கிணைந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, போளூர், வந்தவாசி, செய்யாறு ஆகிய மூன்று இடங்களில் மாநில வணிக வரி அலுவலர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் திருவண்ணாமலையில் உள்ள அலுவலகத்திற்கு வணிகர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்த ஒரு கூட்ட அரங்கமும், Enforcement Wing மூலம் பிடிக்கப்படுகின்ற வாகனங்களை நிறுத்துவதற்கு உரிய இடத்தையும், தற்போது போளூரில் கட்டப்பட்டு வரும் வணிக வரி அலுவலகத்தைத் துரிதமாகக் கட்டி முடிக்கவும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருவண்ணாமலை மாவட்டம், வணிகர்கள் அதிகம் நிறைந்த ஒரு மாவட்டமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வி இருக்கிறது. இதற்கு பதில் சொல்லட்டும்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: எட்டு சட்டமன்றத் தொகுதிகள், மூன்று வருவாய் கோட்டங்கள், ஒன்பது வருவாய் வட்டங்கள், பதினெட்டு ஒன்றியங்கள் உள்ளடங்கியுள்ள பெரிய மாவட்டம். எனவே, வணிகர்களுடைய நலன் கருதி, பொது மக்களுடைய நலன் கருதி போளூர் சட்டமன்றத் தொகுதியிலே உள்ளடங்கியிருக்கிற சேத்துப்பட்டு வருவாய் வட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாநில வணிக வரி அலுவலகமும், அதேபோல செங்கத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வணிக வரி அலுவலகமும் கட்டுவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலாக, இந்த ஆண்டு அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அத்தனைக் கேள்விகளுக்கும், நிதிநிலைக்கேற்ப வரக்கூடிய காலங்களில் எங்கெங்கு கட்டடங்களின் தேவையிருக்கின்றனவோ அங்கங்கு கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது எத்தனை வணிக வரி அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதையும் எத்தனை வணிக வரி அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 85 வணிக வரி அலுவலகங்கள் மட்டுமே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள அனைத்து அலுவலகங்களும் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அணுகி, நிதிநிலைக்கேற்பவும், நிதி ஒதுக்கீட்டிற்கேற்பவும், சில கட்டடங்கள் இந்த ஆண்டு கட்டப்படும். மீதமுள்ள கட்டடங்கள், படிப்படியாக வரக்கூடிய ஆண்டுகளில் கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

குடமுழுக்கு

***7540—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், துக்காச்சி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தவும், சிதிலமடைந்த கல்வெட்டுகளைச் செப்பனிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூரிலுள்ள ஆபத்சகாயேஸ்வரர் ஆலயம் 1,000 ஆண்டுகள் பழமையானது. இந்த ஆலயத்தில் 2016 ஆம் ஆண்டு பாலாலயம் செய்யப்பட்டு, அதோடு அப்பணிகள் அப்படியே நிறுத்தப்பட்டிருந்த சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன், கடந்த ஆண்டு, 11–5–2022 அன்று அதற்கான தொல்லியல் துறை அனுமதி, மண்டலக் குழு அனுமதி, மாநிலக் குழு அனுமதியைப் பெற்று, சுமார் 16 பணிகள் ரூ.5.50 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதியில் கார்த்திகை மாதத்திற்குள் அத்திருக்கோயிலின் கும்பாபிஷேகம் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

2023 மார்ச் 29]

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற வார்த்தைக்கேற்ப, கேள்வியை எழுப்புவதற்கு முன்பாகவே 'கார்த்திகை மாதத்திற்குள் குடமுழுக்கு நடைபெறும்' என்று அறிவித்த மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி.

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, துக்காச்சி கிராமத்தில் ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் உள்ளது. அக்கோயில் 1,000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. விக்கிரம சோழன் காலத்தில் கட்டப்பட்டு, எப்பொழுது குடமுழுக்கு நடந்தது என்ற விவரமே இல்லாமல் சிதிலமடைந்த, பாழடைந்த அந்தத் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த வேண்டுமென்பது அந்த ஊர் மக்களுடைய கோரிக்கையாகும். எங்களுடைய கோரிக்கையையேற்று, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய தீவிர முயற்சியால் தற்போது அக்கோயில் புனரமைக்கப்பட்டு, பக்தர்களாலும், அருளாளர்களாலும் நன்கொடை வழங்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அந்தத் திருக்கோயில் தமிழர் கட்டடக் கலையையும், சோழர் காலக் கட்டடக் கலையையும் சேர்ந்து கட்டப்பட்டு, சிறப்புற விளங்கும் கோயில். அதோடு, சோழர் காலக் கல்வெட்டுகள் மிகவும் சிதிலமடைந்துள்ளன. சிதிலமடைந்தவற்றையெல்லாம் சரி செய்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு, துக்காச்சி திருக்கோயிலில் இருக்கக்கூடிய கல்வெட்டுகளையும், சிதிலமடைந்துள்ள கல்வெட்டுகளையும் சரி செய்து, விரைவில் நல்லதொரு நாளில் குடமுழுக்கு நடத்த முன்வருமா என்பதை நன்றியோடு, தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடமுழுக்கைப் பற்றி ஒரு சிறிய குறிப்பு. மாண்புமிகு தமிழக அரசால் கடந்த 20 ஆம் தேதி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, 574 திருக்கோயில்களுக்கு இதுவரையில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. 20 ஆம்

[2023 மார்ச் 29

தேதிக்குப் பிறகு, தற்போது வரையில் 615 திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கின்றது. கடந்த 10 நாட்களில் 41 திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்தியிருக்கின்ற ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையில் நடைபெறுகின்ற ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையேற்று, கல்வெட்டுகளும் சரிசெய்யப்படும்; குடமுழுக்கும் விரைவில் நடத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சற்று முன்பு பேசிய மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் அவர்கள், பனிமலை, அந்த மலை என்று பேசினார். ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும், இந்த ஆதவனை யாராலும் மறைக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் சூரிய பகவானுக்குரிய சூரியனார் கோயில், சுக்ர பகவானுக்குரிய கஞ்சனூர் திருக்கோயில், திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயில், ராகு ஸ்தலம் திருநாகேஸ்வரம், தென் திருப்பதி என்று சொல்லப்படுகிற உப்பிலியப்பன் கோயில் உள்ளிட்ட அதிகமான திருத்தலங்கள் இருக்கின்றன. ஆனால், பக்தர்கள் தங்கிச் செல்வதற்கு வசதியான, பாதுகாப்பான தங்கும் இல்லம் இல்லை. எனவே, இல்லையென்று சொல்லும் மனம் இல்லாமல், அள்ளிக் கொடுக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களோடு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துபேசி, கூடியவிரைவில் திருவிடைமருதூர் தொகுதியில் பக்தர்கள் தங்கிச் செல்வதற்கான தங்கும் விடுதி அமைத்துத் தருவார்களா என்கிற நல்லதொரு செய்தியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

2023 மார்ச் 29]

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பகுதியையொட்டித்தான் நம்முடைய அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், அருள்மிகு சுவாமிமலை முருகன் திருக்கோயில் ஆகியவை அமைந்திருக்கின்றன. இந்த 3 திருக்கோயில்களுக்கும் ஏற்கெனவே பக்தர்கள் தங்கும் விடுதிகள் இருக்கின்றன. கூடுதலாக 2021–2022 ஆம் ஆண்டில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு ரூபாய் 3 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டிலும் பக்தர்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் உள்ளிட்ட மாண்புமிகு உறுப்பினர்களது கோரிக்கையினை ஏற்று, அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு மேலும் ரூபாய் 8 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக ஒரு பக்தர்கள் தங்கும் விடுதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று, கட்டுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. எனவே, நம்முடைய திருவிடைமருதூர் பகுதியைச் சார்ந்த இத்திருக்கோயில்களுக்கான பக்தர்கள் தங்கும் விடுதிகள் அனைத்தும் 2 கி.மீ., 5 கி.மீ. சுற்றளவில்தான் அமைந்திருக்கின்றன. தேவையென்றால், குடமுழுக்கு முடிந்த பிறகு, அங்கிருக்கின்ற இடத்தைப் பொறுத்து, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதியில் அருள்மிகு தத்தகிரி முருகன் கோயில் அமைந்துள்ளது. அந்த ஆலயத்திற்கு மாண்புமிகு அமரர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 2008 ஆம் ஆண்டில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. கிட்டத்தட்ட 16 ஆண்டுகளாகியும் அத்திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு விழா நடைபெறவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கண்டிப்பாக அத்திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு*

விழாவினை நடத்துவதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய நாமக்கல் அருள்மிகு முருகன் கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு முடிவுற்று, தற்போது 14 ஆண்டுகள்தான் ஆகின்றன. இருந்தாலும், குடமுழுக்கு மேற்கொள்ளப்பட்டு 12 ஆண்டுகள் முடிவுற்ற அனைத்துத் திருக்கோயில்களுக்கும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், 1,000 கோடி ரூபாய் மதிப்பில் 1,500 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்யப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, இந்தத் திருக்கோயிலுக்கும் தற்போது மண்டலக் குழுவின் உத்தரவினைப் பெற்று, மாநிலக் குழுவிற்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாநிலக் குழுவிடமிருந்து ஒப்புதல் வரப்பெற்றவுடன், வரைபடம் தயாரிக்கப்பட்டு இத்திருக்கோயில் திருப்பணிக்கு வெகுவிரைவில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை முறை படை எடுத்தாலும் அத்தனை முறையும் வெற்றி பெறும் ஒரே தலைவர், எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்டு வெகுநாட்களாகிவிட்டன. கோவை*

2023 மார்ச் 29]

வடக்கு தொகுதிக்குட்பட்ட மருதமலை முருகன் கோயிலுக்கு கடந்த எங்கள் அம்மா அவர்களின் ஆட்சியில், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் முதல்வராக இருந்த சமயத்தில் ஒப்பந்தம் கோரப்பட்டு, பூமி பூஜைகளும் போடப்பட்டன. ஆனால், இதுவரை பணிகள் துவங்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படைக்கஞ்சா எங்கள் படைத் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆட்சியில் நீங்கள் ஆரம்பித்துவிட்டுச் சென்ற பணிகளுக்குக்கூடத் தற்போது ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, நிறைவு பெற்று, இன்னும் 4 அல்லது 5 தினங்களில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் மருதமலை முருகன் கோயிலுக்கு தானியங்கி* lift *அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுடன் பூமி பூஜை எந்தவகையில் போட முடியும்? இப்படிப்பட்ட விந்தைகள் அனைத்தும் கடந்த காலங்களில்தான் நடைபெற்றிருக்கின்றன. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்ட பிறகுதான் பூமி பூஜை போடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட வடிவீஸ்வரம் அருள்மிகு இடர்தீர்த்த பெருமாள் திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளாமல் கொடுக்கின்ற மனம், கேட்டதெல்லாம் தருகின்ற குணம் எங்களது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குணம் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான கோயில்களுக்கு, தலா ஒரு கோயிலுக்கு 15 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 100 கோயில்களுக்கும் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 28 கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. இப்படி 100 கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்கின்ற இந்த ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்தி அவர்கள் கேட்ட வடிவீஸ்வரம் கோயிலுக்கா நாங்கள் குடமுழுக்கு செய்து தரமாட்டோம் என்று மறுக்கப் போகிறோம்! நிச்சயமாக, இன்னார், இனியவர் என்று பார்க்காமல் எல்லோரும் கோரும் திருப்பணிகளைச் செய்து தர உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் நிச்சயம் நீங்கள் கோரிய இந்தத் திருப்பணி நிறைவேற்றித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதியில் உள்ள கடையம் ஒன்றியத்தில் ஸ்ரீகார்த்தீஸ்வரர் சமேத அழகம்மாள் திருக்கோயில் பாப்பான்குளத்தில் உள்ளது. பழமைவாய்ந்த கோயில். பல ஆண்டுகளாக அந்தக் கோயில் பராமரிக்கப்படாமலும், அதேநேரத்தில் கும்பாபிஷேகமும் நடைபெறாமல் இருக்கின்ற சூழ்நிலையும் உள்ளது. கிட்டத்தட்ட 50 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அந்தக் கோயிலில் திருமணத்தை நடத்துவதற்கு வந்து செல்கின்றனர். எனவே, அந்தக் கோயிலைப் புனரமைப்பதற்கும், கும்பாபிஷேகம் நடத்துவதற்கும், ஓர் அழகிய திருமண மண்டபத்தைக் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

2023 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13–9–2022 அன்று இதற்குண்டான தொல்லியல் வல்லுநர் குழுவினுடைய கருத்துரு பெறப்பட்டிருக்கின்றது. இதன் பின்னர் மண்டல வல்லுநர் குழு கருத்துரு பெறப்பட்டு, மாநில வல்லுநர் குழு கருத்துரு பெறப்பட்டு நிச்சயமாக அந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். இது சதுர்வேதி மன்னர் காலத்தில் கட்டப்பட்டது. இதனுடைய சிறப்புவாய்ந்த அம்சம் என்னவென்றால், ஆயகலைகள் 64-ம் ஒருங்கிணைந்த அம்மன் அந்த சந்நிதானத்தில் வீற்றிருக்கின்றார். அதற்காகவாவது இந்தக் திருக்கோயில் புனரமைக்கப்பட, திருப்பணிக்கு உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது திருக்கோயிலுடைய திருப்பணி, குடமுழுக்கு முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் கோரிய திருமண மண்டபம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உத்தரவு பெற்ற பிறகு அதுவும் கால அளவில் நடத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையின் மையப் பகுதியான கோயம்பேடு பகுதியில் அமைந்துள்ள 1,100 ஆண்டுகள் பழமைவாய்ந்த குறுங்காலீஸ்வரர் கோயிலுக்குட்பட்ட வைகுண்டபெருமாள் கோபுரம் மொட்டை கோபுரமாக இருக்கிறது. அது ஐந்து நிலை கோபுரமாக மாற்றித் தரப்படுமா என்பதையும், கார்த்திகை தீபம், மகாசிவராத்திரி, பங்குனி உத்திரம் போன்ற சிறப்புவாய்ந்த நாட்களில் திருத்தேர் ஓட்டம் நடைபெற—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய* number *1 முதலமைச்சர், 1,500 கோடி ரூபாய் கோயில் சொத்துகளை மீட்டெடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—அந்தக் கோயிலுக்குத் திருத்தேர் வழங்குவார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமைகிறேன்.*

[*2023 மார்ச் 29*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுங்காலீஸ்வரர் கோயிலுக்கு ஏற்கெனவே கல்மண்டபம் இருக்கின்றது. புதிதாக ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டுவதற்கு உபயதாரர் ஒருவர் 50 இலட்சம் ரூபாய் நிதி தரவிருக்கிறார். இன்னும் ஓரிரு மாதங்களில் அதற்குண்டான உத்தரவை வழங்கி, நிச்சயமாக அவர் கோரிய ஐந்து நிலை இராஜகோபுரம் ஏற்படுத்தப்படும்.*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் 2021–2022, 2022–2023 ஆகிய காலக்கட்டங்களில் சுமார் 31 திருத்தேர்கள் புதிதாகச் செய்வதற்கு ரூபாய் 18 கோடியை ஒதுக்கீடு செய்து தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திருக்கோயிலுக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தேர் கோரியிருக்கின்றார். அந்தத் திருக்கோயிலில் ஏற்கெனவே 6 கோடி ரூபாய் அளவிற்கு வைப்பு நிதி உள்ளது என்ற காரணத்தினால் அந்தத் திருத்தேர் செய்கின்ற பணியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று இந்த ஆண்டே மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

வியாசர்பாடி, அ.தி.மு.க. நிர்வாகி, திரு. இளங்கோவன் கொலை செய்யப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். நான் கூப்பிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

2023 மார்ச் 29]

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். சென்னை, வியாசர்பாடியில், இராணி மெய்யம்மை காலனியைச் சேர்ந்த திரு. இளங்கோவன், வயது 47, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரம்பூர் தெற்குப் பகுதி கழகச் செயலாளராக இருந்து வந்தார். கடந்த 27–3–2023 அன்று இரவு அலுவலகத்தைப் பூட்டிவிட்டு, மோட்டார் சைக்கிளில் வீட்டிற்குச் செல்லும் வழியில், முத்துமாரியம்மன் கோயில் தெருவில் செல்லும்போது, ஆட்டோவில் வந்த 5 நபர்கள் அவரைப் பட்டா கத்தியால் சரமாரியாகத் தாக்கி, கொடூரமான முறையில் கொலை செய்துள்ளார்கள்.*

முற்பகல் 11–10

தாக்குதல் சத்தம் கேட்டு, மக்கள் ஓடி வருவதைக் கண்டு கொலையாளிகள் ஆட்டோவில் ஏறி, தப்பி ஓடிவிட்டனர். கொலையான இளங்கோவன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரம்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் ஆவார். இவர் கொலையான தகவல் அறிந்ததும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் பெருமளவில் மருத்துவமனையில் கூடியதால், அங்கொரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. மறைந்த இளங்கோவன் அவர்கள், இப்பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெற்று வருவதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும், காவல் நிலையத்தில் பலமுறை புகார் செய்துள்ளார். இந்நிலையில் கஞ்சா வியாபாரி சஞ்சய், வயது 19 உட்பட 5 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளன. தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது முதல் தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெறவில்லை என்றாலும், சட்டம்–ஒழுங்கு மிகவும் சீர்குலைந்துள்ளது என்றும், கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன என்றும், காவல் துறை அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை என்றும் நான் சட்டமன்றத்திலேயே பேசியுள்ளேன். எனவே, காவல் துறைக்கு முழு சுதந்திரம் வழங்கி, தவறிழைப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சட்டமன்றத்தில் வலியுறுத்தியிருக்கிறேன். குறிப்பாக, சென்னையில் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் நடமாட்டம் பற்றியும், இதனால் பள்ளி, கல்லூரி மற்றும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமே, போதும். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *முக்கியமானது இது. மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.* Zero hour*-ல், உங்களுக்குத் தெரியாததா? (குறுக்கீடு) சீக்கிரமாக முடியுங்கள். சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *சீக்கிரமாகத்தான் முடிக்கிறேன். எவ்வளவு நேரம், இன்னும் ஒரு நிமிடம்கூட ஆகவில்லை. எப்படிப் பேசுவது? ஒரு நிமிடம்கூட ஆகவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு நிமிடங்கள் முழுமையாக ஆகிவிட்டன (குறுக்கீடு) இரண்டு நிமிடங்கள் முழுமையாக ஆகிவிட்டன. (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஒரே பக்கம்தான். ஒன்றரை பக்கம்தான் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அரசாங்கத்திற்கு எதுவுமே கவனத்திற்குக் கொண்டுவரக் கூடாது என்று சொன்னால் எப்படி முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவனத்திற்குக் கொண்டு வருவதை சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதைத்தான் கொண்டு வருகிறேன். குறிப்பாக, சென்னையில் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் நடமாட்டம் பற்றியும், இதனால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பாதிக்கப்படுவது பற்றியும் பேசியுள்ளேன். கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் விற்பவர்கள் பற்றிய விவரங்களைக் காவல் துறையிடம் புகார் கூறுபவர்கள், தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, தெற்கு பகுதி கழக செயலாளர் இளங்கோவன் கொலைக்குக் காரணமாக, கஞ்சா விற்பனை பற்றி அவர் காவல் துறையிடம் புகார் கூறியதால், அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்நிகழ்வு தமிழகத்தில் சட்டம்–*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒழுங்கு எவ்வளவு மோசமான நிலையில் உள்ளது என்பதை வெட்டவெளிச்சமாகக் காட்டுகிறது. இதனை நான் மிகுந்த மனவேதனையுடன் இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். தமிழகக் காவல் துறைத் தலைவர் DGP அவர்கள், தமிழகத்தில் கஞ்சா விற்பனையை முற்றிலும் ஒழிக்க Operation Ganja Vettai 2.0 என்ற திட்டத்தை அறிவித்தார். ஆனால், இது முழுமையாகச் செய்யப்படாத காரணத்தினால், இப்படிப்பட்ட நெஞ்சைப் பதற வைக்கும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இனியாவது, அரசு இத்தகைய குற்றவாளிகள்மீது இரும்புக்கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன். போதைப் பொருட்களின் பிடியிலிருந்து மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் சமுதாயம் விடுபட வேண்டுமென்றும், கஞ்சா வியாபாரிகள் பற்றி தகவல் கூறுபவர்களின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டுமென்றும், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக (குறுக்கீடு) உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். இதுசம்பந்தமாக, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. இரா. அருள் அவர்கள், திரு. ச. சிவகுமார் அவர்கள் ஆகியோரும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் உதவி காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேலும், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், உதவி காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கைகள்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், திரு. தி. வேல்முருகன் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள், திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள், திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள், திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், திரு. V.P. கந்தசாமி அவர்கள், திரு. K.C. கருப்பணன்

[பேரவைத் தலைவர்] [2023 மார்ச் 29

அவர்கள், திரு. சு. ரவி அவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக, திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, திரு. இரா. அருள் அவர்கள், திரு. ஜி.கே. மணி அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக, திரு. சிந்தனை செல்வன் அவர்கள், திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) சார்பாக திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், திரு. மா. சின்னதுரை ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பாகக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சுருக்கமாகக் கொண்டுவரலாம். இன்று காலை 2-00 மணி வரைதான் சட்டமன்றம் நடைபெறும். அதன்பின், மாலை 4-00 மணிக்குதான் கூடும். 9 உறுப்பினர்கள் பேச வேண்டும். 2 அமைச்சர்கள் தங்களுடைய மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்து, பதில் சொல்ல வேண்டும். ஆகவே, பேச வருகின்றவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள்.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் உதவி காவல் கண்காணிப்பாளர், திரு. பல்வீர் சிங் அவர்கள், சிறு குற்றங்கள் செய்ததற்காக, விசாரணைக்காகக் குற்றவாளிகளை அழைத்து வந்து, விசாரணை செய்யாமல், அவர்களின் பற்களைப் பிடுங்கியதாக எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையில், நான் உடனடியாக திருநெல்வேலி மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களைத் தொடர்புகொண்டபோது, அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரியின்மீது உள்ள குற்றங்களை, உயர் காவல் துறை அதிகாரிகளிடம் எடுத்துக்கூறி, அதற்காக அந்த உதவி காவல் கண்காணிப்பாளர்மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாகக் கூறினார்கள். அந்த அடிப்படையில் அம்பாசமுத்திரம் உதவி காவல் கண்காணிப்பாளர் பல்வீர் சிங் அவர்களைக் காத்திருப்போர் பட்டியலில் வைத்துவிட்டார்கள். மாவட்டத் துணை ஆட்சியர்மூலம் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29] [*முனைவர் இசக்கி சுப்பையா*]

முற்பகல் 11–15

அதேசமயம் அந்த உதவி காவல் கண்காணிப்பாளர், அவர்களின் பதவியையும், பொறுப்பையும் மறந்து எந்த விசாரணையும் இன்றி, இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்களின் பற்களைப் பிடுங்கி, அதிலும் முக்கியமாக திருமணமாகாமல் அதிக இளைஞர்கள் உள்ளார்கள். அவர்களின் வாழ்க்கை இப்போது கேள்விக் குறியாக உள்ளது. மாவட்டத் துணை ஆட்சியர் அவர்கள் இந்த விசாரணையைத் தீவிரப்படுத்த ஆவன செய்ய வேண்டும். அதேசமயம், அந்த அதிகாரியைக் கைது செய்து . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

முனைவர் இசக்கி சுப்பையா: *அதேசமயம், அந்த அதிகாரியைக் கைது செய்து, அவருக்கு சட்டத்தின்படி தண்டனை வழங்க வேண்டும். "பல் போனால் சொல் போச்சு" என்று ஒரு பழமொழியே உள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட அந்த இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். உரிய காலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை பாதிக்காத அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை. ஆரம்பிக்கவில்லை, முடிக்கவில்லையென்பது இல்லை. நீங்கள், அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள். விஷயம் முடிந்துவிட்டது; இதுபோதும். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையை நவீனப்படுத்துவதற்கும், சீரமைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளைச் சிறப்பாக எடுத்து வரக்கூடிய சூழலில், நெல்லை மாவட்டம், சேரன்மாதேவி, உதவி காவல் கண்காணிப்பாளர் பல்வீர் சிங்கினுடைய நடவடிக்கை மிகப் பெரிய அதிர்ச்சியை அளிக்கின்றது. சாதாரண குற்றங்களுக்காக விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட இளைஞர்களுடைய வாயில்*

முக்கால் inch, 1½ inch ஜல்லிகளை போட்டு, அவர்களுடைய பல்லை உடைப்பது, உயிர் நாடியை கெடுப்பது போன்ற செயலில் ஈடுபட்டிருக்கின்றார். அவர் புதிதாக I.P.S. அதிகாரியாகப் பதவியேற்று, இப்போதுதான் முதல் பொறுப்பு வகிக்கிறார். இந்த நிலையிலேயே இப்படி ஓர் அப்பட்டமான, மனித உரிமை மீறலில் ஈடுபடும்போது, 30 ஆண்டுக்காலம் சேவையில் அவர் என்ன மனநிலையில் இருப்பார் என்பது ஒரு மிக முக்கியமான கேள்வியாக இருக்கின்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இதே அவையில் சென்னையில் விக்னேஷ் என்கிற ஓர் இளைஞர் உயிரிழந்தது தொடர்பாக ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டு வந்தபோது, இரவு நேரத்தில் தேவையில்லாமல் விசாரணைக்கு மக்களை அழைக்கக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டுள்ளார்கள். அதையும் அவர் மீறியிருக்கின்றார். எனவே, இவர்மீது criminal குற்றம் பதிவு செய்யப்பட வேண்டும். இப்போது அவரை காத்திருப்போர் பட்டியலில் உடனடியாக மாற்றியிருப்பது சிறப்பான நடவடிக்கை. அதற்குமேல் இவர்மீது criminal குற்றம் பதிவு செய்யப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுத்து, பதவி நீக்கம் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கு சிறப்பாக நடத்துகின்ற அரசு என்று போற்றக்கூடிய இந்தச் சூழ்நிலையில் அம்பாசமுத்திரம் A.S.P. சட்டத்தைத் தன் கையில் எடுத்து, காட்டுமிராண்டித்தனமாக இளைஞர்களை அடித்து, உதைத்து, வித்தியாசமான முறையில் ஜல்லி கற்களை வாயில் போட வைத்து, அவர் முன்னாலே கடிக்க வைப்பது, கல்லால் இடிப்பது, பற்களை உடைப்பது என்பது ஏற்றுக்கொள்ள இயலாத ஒரு விஷயம். மிக மோசமான, கொடூரமான செயலைச் செய்திருக்கிறார். I.P.S. officer ஆக training பெற்று வந்து இந்தப் பணியை செய்கிற இந்த ஆரம்பக் காலத்திலேயே,*

2023 மார்ச் 29] [*திரு. ஜே.ஜி. பிரின்ஸ்*]

இப்படிப்பட்ட கொடுமையான தவறுகளைச் செய்யும்போது தொடர்ந்து அவரை எப்படிப் பணியில் வைக்க முடியும்? அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. காத்திருப்போர் பட்டியலில் வைத்திருக்கிறது. அது மட்டும் போதாது. He will be removed from the service *என்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது மற்ற காவலர்களுக்கும், காவல் துறைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். கண்ணியமிக்க காவல் துறையில் தங்களுடைய பணிகளைச் சிறப்பாக செய்து, அரசிற்கு பெருமை சேர்க்கக்கூடிய அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறபோது, தண்டிக்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

***திரு. இரா. அருள்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டம், அம்பாசமுத்திரம் காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதியில்* A.S.P. *பல்வீர் சிங், விசாரணைக்கு அழைத்து வருபவர்களின் பற்களை உடைப்பது என்பதைத் தன்னுடைய வாடிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார். அவர் ஒரு மன நோயாளிபோல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இப்போதுதான் பணிக்கு வந்த ஒரு* I.P.S. *அதிகாரி. இதுபோன்று செயல்பட்டால், இன்னும் 30 ஆண்டுக்கால பணியில் அவர் இன்னும் எவ்வளவு கொடுஞ்செயல்களை செய்வாரோ என்ற அச்சம் உள்ளது. மனித உரிமை ஆணையம் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இதுகுறித்து விரிவான விசாரணை செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர் பணிக்கே வராதவாறு, காவல் துறைக்கே ஒரு முன்னுதாரணமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இனிமேல் காவல் துறையில் அவர் பணியாற்றக் கூடாது. அவரைக் கைது செய்ய வேண்டும், அதேபோன்று, வியாசர்பாடி அ.தி.மு.க. தெற்குப் பகுதி கழகச் செயலாளர் திரு. இளங்கோவன் அவர்களுடைய கொலைக்கும் விரிவான விசாரணை செய்து அதற்குரிய தண்டனை வழங்க வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் எங்கும் நடக்கக் கூடாது என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

[2023 மார்ச் 29

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலியவர்களைக் கண்டால் பம்முவதும், எளியவர்களிடம் பாய்வதும் சில காவல் அதிகாரிகளின் செயலாக இருக்கிறது. இதுவரையில் நடைபெற்ற காவல் நிலைய வதைகள் அனைத்தையும் எடுத்துப் பார்த்தால் எளிய மக்கள்தான் இலக்காகியிருக்கிறார்கள். எளிய மக்களின்மீதுதான் இப்படிப்பட்ட கொடூரமான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது நடக்கக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதில் மிகவும் கண்டிப்புக் காட்டியிருக்கிறார்கள். அதன் பிறகும் இப்படிப்பட்ட செயல்கள் நடப்பது மிக, மிக வேதனையளிக்கிறது. இப்படி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும்போதே தண்டனை வழங்கக்கூடிய முறை, நீதிமன்றம் கொடுக்க வேண்டிய தண்டனையை காவல் நிலையத்தில் கொடுப்பது என்பது நீதி அமைப்பு முறையையே கேள்விக்குள்ளாக்குகிறது. அதுபோல, நீதிமன்றத்தில் மேஜிஸ்டிரேட் முன்பு ஆஜர்படுத்தப்படும்போது இவர்களுக்குக் காயம் இருக்கிறதா என்பதைப் பார்த்து உறுதி செய்து, அவர்கள் அதைக் கவனப்படுத்துவதில்லை. அதுவும் இத்தகைய சிக்கல்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. எனவே, இதற்கு என்ன தீர்வு என்றால், எந்த அதிகாரி இப்படிச் செய்தாலும் அது நம்முடைய ஒட்டுமொத்த ஆட்சிக்கும் களங்கத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது. எனவே, இந்த அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும். அவர்களைப் பணி மாற்றம் செய்வது, அவர்களைக் காத்திருப்போர் பட்டியலில் வைப்பது என்பதெல்லாம் தீர்வு இல்லை. அவர்களைப் பணி நீக்கம் செய்து, கைது செய்ய வேண்டும். அப்போதுதான் இப்படிப்பட்ட குற்றச்செயல்கள் நடைபெறாமல் தடுக்க முடியும் என்று சொல்லி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

2023 மார்ச் 29]

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம் சரக காவல் நிலையத்திற்கு வரும் விசாரணைக் கைதிகளை அந்த மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளராக உள்ள திரு. பல்வீர் சிங் அவர்கள் கொடூரமாகத் தாக்கி, அவர்களுடைய பற்களைப் பிடுங்கியது என்பது ஒரு கொடிய, இதுவரை காவல் துறை செய்திராத ஓர் அக்கிரமமான செயலாக நாம் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் சொன்னதைப்போல, இவர் இளைஞர்; ஆரம்ப காலத்திலேயே இப்படி ஒரு மனிதாபிமானமற்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: ஒரே ஒரு நிமிடம். ஆரம்ப காலத்திலேயே இவர் இப்படி மனிதாபிமானமற்ற செயல்களைச் செய்வாரேயானால், தொடர்ச்சியாக எப்படிப்பட்ட கொடூரமான செயல்களைச் செய்வார் என்பதை நாம் உணர வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த IPS பதவியையே அவரிடமிருந்து பறித்து, அவரைக் கைது செய்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ** அதிலும் குறிப்பாக, தென்காசி மாவட்டத்திற்கு ** ஏற்கெனவேகூட. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்பாசமுத்திரம் A.S.P.-ஐப் பற்றி மட்டும் பேசுங்கள். மற்றதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் அதைப் பற்றி மட்டும் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: சரி. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், அவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து, அவர்கள் மனம் பக்குவப்பட்டு, பொதுமக்களை எப்படி அணுக வேண்டும், விசாரணைக் கைதிகளை எப்படி அணுக வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்கள் பணியாற்ற நமது அரசு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். இதில் இரண்டுவிதமான கருத்துகள் இருக்கின்றன. கஞ்சா, அபின், போதை மாத்திரைகள்; கல்லூரிகள், பள்ளிகளின் அருகே பல இடங்களில் விநியோகிக்கப்பட்டதாகவும், இவர் நேர்மையாகவும், IIT-ல் படித்த gold medalist என்ற காரணத்தாலும், நேர்மையாக தன்னுடைய கோட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தீவிரமாகப் பணியாற்றி இந்தத் தொழில்களில் ஈடுபட்டவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் அங்கே ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தீர விசாரித்து, விசாரணைக் கைதிகள்மீது இவரே தண்டனை கொடுப்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: முடித்துவிடுகிறேன். தண்டனை கொடுப்பது தவறு என்பதை உணர்த்துகின்ற வகையில் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

முற்பகல் 11–25

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

வியாசர்பாடி, அ.தி.மு.க. நிர்வாகி, திரு. இளங்கோவன் கொலை செய்யப்பட்டது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2023 மார்ச் 29]

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், திரு. இரா. அருள் அவர்கள், திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள், திரு. வி.பி. நாகைமாலி அவர்கள் மற்றும் திரு. தி. வேல்முருகன் உள்ளிட்ட பலரும் இதுகுறித்து தங்களது கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார்கள்.*

அ.தி.மு.க. பெரம்பூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இளங்கோவன் என்கிற வியாசை இளங்கோ என்பவர், நேற்று முன்தினம் 5 பேர் கொண்ட கும்பலால் கத்தியால் வெட்டப்பட்டு, ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டார். அவரது மனைவி திருமதி சுமலதா கொடுத்த புகாரின் அடிப்படையில், செம்பியம் காவல் நிலையத்தில் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணையில் கொலையுண்ட இளங்கோ 2 ஆண்டுகளுக்கு முன்பு சஞ்சய் என்பவரை பொதுவெளியில் வைத்து தாக்கியதாகவும், அந்த முன்விரோதம் காரணமாக சஞ்சய் இந்த கொலைத் திட்டத்தைத் தீட்டியுள்ளதும் தெரியவந்தது. காவல் துறையினர், இரவோடு இரவாக 2 மணி நேரத்தில், வழக்கில் தொடர்புடைய சஞ்சய், கணேசன், கௌதம், வெங்கடேசன் மற்றும் அருண்குமார் ஆகிய 5 குற்றவாளிகளைக் கைது செய்துள்ளார்கள். இவர்களில் ஒருவர் இளஞ்சிறார் குற்றவாளி.

மேலும், கொலை செய்யப்பட்ட இளங்கோ போதைப்பொருளுக்கு எதிராக இருந்ததாகச் சொல்லப்படுவது குறித்து விசாரணையில் இதுவரை தெரியவில்லை. இச்சம்பவம் குறித்த புலன்விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் காவல் உதவி கண்காணிப்பாளர் நடவடிக்கைகள்—தொடர்ச்சி

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்தபடியாக, அம்பாசமுத்திரம் ஏ.எஸ்.பி. விவகாரத்தைப் பொறுத்தமட்டில், குற்றச் செயல்களில் ஈடுபட்டு, விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட சிலருடைய பற்களைச் சேதப்படுத்தியதாகக் குற்றச்சாட்டு வந்தவுடன், சேரன்மாதேவி சார்–ஆட்சியர்/உட்கோட்ட நடுவர் தலைமையில் உத்தரவிடப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டது. அந்த ஏ.எஸ்.பி. காத்திருப்போர் பட்டியலுக்கு உடனடியாக மாற்றப்பட்டார். காவல் நிலையங்களில் மனித உரிமை மீறல் சம்பவங்களில் எந்தவித சமரசத்தையும் இந்த அரசு மேற்கொள்ளாது என்பதை இந்த அவையில் நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். அந்த வகையில், இந்த விரும்பத்தகாத சம்பவத்தில் ஈடுபட்ட அம்பாசமுத்திரம் கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளரைப் பணியிடை நீக்கம் செய்ய உத்தரவிட்டிருக்கிறேன் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், முழுமையான விசாரணை அறிக்கை வந்தவுடன் இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள்மீது உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுதியளிக்கிறேன். இவையெல்லாம் சம்பவம் நடைபெற்ற உடனேயே இந்த அரசு எடுத்த விரைவான நடவடிக்கைகள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த இரண்டாண்டுகளில் சாதி மோதல்கள், ரௌடிகளால் நடத்தப்பட்ட கொலைகள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. 2019–ல், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், 1,670 கொலைச் சம்பவங்கள் நடைபெற்றன. தி.மு.க. ஆட்சியில், அதாவது, 2022–ல் அது 1,596 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஆண்டு ஒன்றுக்கு 74 கொலைகள் இந்த ஆட்சியில்தான் குறைக்கப்பட்டுள்ளன; அப்படிச் சொல்வதைவிட அது தடுக்கப்பட்டிருக்கிறது.

நமது ஆட்சியைப் பொறுத்தவரையில், காவல் துறை சுதந்திரமாகவும் விரைவாகவும் செயல்பட்டு, கொலையாளிகள் யாராக இருந்தாலும், கொலை செய்யப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அதில் எந்தவித பாரபட்சமோ, அரசியலோ

2023 மார்ச் 29] [திரு. மு.க. ஸ்டாலின்]

எதுவும் பார்க்காமல் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கொலையாளிகள் உடனடியாகக் கைது செய்யப்படுகிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்து, என் விளக்கத்தை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

4. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2023-2024, முன்மொழிதல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

Message

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby give my recommendation, to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Financial Year 2023–2024."

5. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 40 – நீர்வளத் துறை

(ஆ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

(அ) கோரிக்கை எண் 40 – நீர்வளத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்*

கோரிக்கை எண் 40–நீர்வளத் துறை. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.80,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிகிற மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் இருக்கின்ற காரணத்தினால் நேரத்தின் அருமை கருதி, பெயரைக் குறிப்பிட்டதும் மாண்புமிகு உறுப்பினர்கள் கையை உயர்த்தினாலேயே நீங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்ததாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைப் பேரவையின் அனுமதியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானம் எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2313, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3223, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

2023 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 74, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 701, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 853, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1697, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1998, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–,

மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2389, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2961, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/–

மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 338, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 476, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1943, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2243, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2623, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3061, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

2023 மார்ச் 29]

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 442, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 494, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 757, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1471, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1621, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2853, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–,

2023 மார்ச் 29] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியப் பகுதியில்* P.A.P *வாய்க்கால் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட மதுக்கரையிலிருந்து கேரள மாநிலம் நோக்கி செல்லும் ஆற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதிக்குட்பட்ட* K. *ஈச்சம்பாடி அணை*

நீரேற்று திட்டத்தின்மூலம் அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிபட்டி பகுதிகளில் உள்ள ஏரிகள்மூலம் விவசாய நிலங்களுக்கு நீர் கொண்டுவரும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

***திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், உத்தப்பநாயக்கனூர் கிராமத்தில் அமைந்துள்ள மலட்டாறு அணைக்கட்டை தூர்வாரி, மதகுகளைச் சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட அம்பலூர் ஊராட்சியில் தடுப்பணை (*Check Dam*) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாப்பிரெட்டிபட்டி தொகுதிக்குட்பட்ட வேப்பாடி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 584, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீரமங்கை வேலுநாச்சியார், காளையார்கோவில் தெப்பக்குளத்திற்கு ஆண்டுதோறும் பெரியார் பாசன தண்ணீர் நிரப்பும் விதமாக லெசீஸ் நீடிப்பு கால்வாயிலிருந்து புதிய கால்வாய் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 623, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தோவாளை, பெரியகுளம், மதகுகள் சீர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 831, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

***திரு. மா. சின்னதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தினிகுளம், பொதியகுளம், அண்டகுளம், செனையக்குடி, வீரக்குடி, மின்னாத்தூர், வத்தனாக்குறிச்சி, கீரனூர் அம்மன்குளம், பாப்புடையான்பட்டி, கலைக்குடிப்பட்டி, கிள்ளுகுழவாய்ப்பட்டி, வத்தனாக்கோட்டை மற்றும் குளத்தூர் பெரிய குளங்களைச் சீரமைத்து பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 953, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.A. *பாண்டியன்.*

2023 மார்ச் 29]

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,155,82,53,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,051,59,40,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 989, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், வெள்ளாற்றுப் பகுதியில் சுமார் 20 கி.மீ. தூரத்திற்குக் கடல்நீர் உட்புகுவதைத் தடுக்க ஆதிவராகநல்லூரில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2193, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம்–காரமடை இடையில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,483,78,26,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.202,90,62,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,20,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2685, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புலம்பெயர் தொழிலாளர்களைப் பதிவு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,483,78,26,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.202,90,62,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,20,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2720, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பொறியியல் கல்லூரி, பல்தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்குத் தொழில் பழகுநர் வாய்ப்பினை தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு காகித உற்பத்திக் கழகம் போன்ற அரசு சார்ந்த நிறுவனங்களில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,483,78,26,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.202,90,62,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,20,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2760, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பொள்ளாச்சி தொகுதியில் தென்னை மரம் ஏறும் வயது முதிர்ந்த தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,483,78,26,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.202,90,62,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,20,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2814, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,483,78,26,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.202,90,62,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,20,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2872, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பகுதியில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு குறித்தும், திறன்மேம்பாட்டுப் பயிற்சி மையங்களின் செயல்பாடுகள் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,483,78,26,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.202,90,62,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,20,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3125, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் அனைத்து தனியார் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு முகாம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,483,78,26,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.202,90,62,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,20,00,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய

@ 341 முதல் 460 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 461 முதல் 597 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்று முற்பகல் இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இன்று மொத்தம் 9 மாமன்ற உறுப்பினர்கள் பேசவிருக்கின்றீர்கள்; இரண்டு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்லவிருக்கின்றார்கள். சரியாக பிற்பகல் 2–00 மணிக்கு அவை நிறைவுபெற்று, மீண்டும் மாலை 4–00 மணிக்குத்தான் கூடும். ஆகவே, அவற்றையெல்லாம் மனதில் வைத்து, பிற்பகல் 2–00 மணிக்குள் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் விவாதம் செய்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்லவிருக்கின்ற காரணத்தினால், பேச வருகின்ற மாமன்ற உறுப்பினர்கள் குறித்த நேரத்திற்குள் தங்களுடைய உரையை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டு, முதலில் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கு 10 நிமிடங்களும், ஏனைய உறுப்பினர்கள் ஐந்து, ஐந்து நிமிடங்களும் என மொத்தம் 9 உறுப்பினர்கள் பேசவிருக்கின்றீர்கள். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் தந்திட்ட சரித்திர நாயகன், பாரத ரத்னா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கி,

“எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்–இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்”

என்று தன் வாழ்நாளெல்லாம் உழைத்திட்ட தமிழர் குலசாமி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

காவேரி டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த காவேரி காப்பாளர்; அரசுப் பள்ளி மாணவ, மாணவிகளின் மருத்துவப் படிப்புக் கனவை

நனவாக்க (மேசையைத் தட்டும் ஒலி) 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை, இந்தியாவிலேயே முதன்முதலாக தந்த முதலமைச்சர் என்ற வரலாற்றுப் பெருமைக்குச் சொந்தக்காரர்; சமூக நீதிக் காவலர்; 11 மருத்துவக் கல்லூரிகளையும், 6 புதிய மாவட்டங்களையும் உருவாக்கித் தந்தவர்; எதிர் வருகின்ற சூதுகளையும், சூழ்ச்சிகளையும், ஏச்சுகளையும், பேச்சுகளையும் தன் புன்னகையால் கடந்து, தன் நிதானத்தாலும், பொறுமையினாலும், ஆழ்ந்த அறிவாற்றலாலும், அயராத உழைப்பாலும், சாமானிய முதல்வராகச் சரித்திரம் படைத்திட்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்; எளிமையின் இலக்கணம் (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது நெருப்பாற்றிலே நீந்தி மக்கள் பணியாற்றி வருகின்ற உலகத் தமிழினத்தினுடைய ஒரே நம்பிக்கை; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களால் ஏகமனதாக, ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மகத்தான மக்கள் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) அடிமட்டத் தொண்டனாகத் தன்னைக் கிளைக் கழகத்தில் இணைத்துக் கொண்டு, எந்தவித அரசியல் பின்புலமும் இல்லாமல், 49 ஆண்டுகள் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் தொடர்ந்து ஒரே கொள்கை, ஒரே இலட்சியம், ஒரே தலைமை, ஒரே கட்சி என்று (மேசையைத் தட்டும் ஒலி) இரத்தத்தை வியர்வையாக்கி, விசுவாசத்தை உழைப்பாகத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு மகத்தான திட்டங்களை வாரி, வாரி வழங்கிட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மறுவடிவமாகிய ஈடு இணையற்ற தலைவர்; (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் பொதுச் செயலாளராக இன்றைக்கு தொண்டர்களின் இதயங்களிலே (மேசையைத் தட்டும் ஒலி) இமயம் என உயர்ந்திருக்கின்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற மாபெரும் மக்கள் இயக்கம் அம்மாவின் மறைவிற்குப் பிறகு சுனாமியிலே தத்தளித்தபோது, இதோ நான் இருக்கிறேன் என்று கலங்கரை விளக்கமாக, (மேசையைத் தட்டும் ஒலி) காவல் அரணாக இயக்கத்தை மீட்டெடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இரட்டை இலையை மீட்டெடுத்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தினுடைய அடையாளம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாசமிகு அண்ணன் வருங்கால முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) என்றைக்கும் அயராத மன உறுதியோடு இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன்

திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தைத் தலைநிமிரச் செய்கின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டிலே பசுமைப் புரட்சிக்குப் பிறகு விவசாய முறையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் எல்லோரும் அறிவோம். நீர்ப்பாசன வசதி என்பது அவசியமானது மட்டுமல்ல, அது மனித வாழ்வோடு இரண்டறக் கலந்திருக்கிற ஒரு நிகழ்வாக இருக்கின்றது. ஆனால், இந்த நீர்ப்பாசன வசதி பற்றி நீர்வளத் துறையிலே என்ன அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையைப் படித்துப் படித்துப் பார்த்தோம்; தேடித் தேடிப் பார்த்தோம்; மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலும் தேடித் தேடி பார்த்தோம்; நீர்வளத் துறையிலே, நிலத்தடி நீர் குறைந்திருக்கிறதே என்று அதை உயர்த்துவதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மழைநீர் சேகரிப்புத் திட்டம் என்கிற ஒரு புரட்சிகரமான திட்டத்தைத் தந்தார்களே! (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வழித்தோன்றலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 2018–2019, 2019–2020, 2020–2021, 2021–2022 என ஒவ்வோராண்டும் ரூ.2,000 கோடி, ரூ.3,000 கோடி, ரூ.4,000 கோடி என படிப்படியாக நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கீடு செய்து, நீர்வளத் துறையின் முக்கியத்துவத்தை இந்த நாட்டு மக்கள் வரவேற்கின்ற வகையில் திட்டங்களைச் செயல்படுத்தினார்களே! ஆனால், தற்போது நீர்வளத் துறையின் முக்கியத்துவத்தை இந்த அரசு உணரவில்லையோ என்கின்ற அளவிலே, தற்போது நிதிநிலை அறிக்கையிலே 35–வது பக்கத்தில் இரண்டே இரண்டு பத்திகளில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீர்வளத் துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரம் கூட காணாமல் போனதற்கு என்ன காரணம் என்று எங்களுக்குப் புரியவில்லை. சென்ற இரண்டு நிதிநிலை அறிக்கைகளில் இதற்குரிய அறிவிப்பு இடம் பெற்றிருந்தது. ஆனால், மூத்த அமைச்சராக இருக்கக்கூடியவர் வகிக்கின்ற நீர்வளத் துறைக்கான அறிவிப்பு இந்த ஆண்டு இடம் பெறவில்லை. தற்போது நிலத்தடி நீர் என்பது தற்போது மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 1970–71–ல் ஆற்று நீர்ப்பாசனம்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2023 மார்ச் 29

என்கிற பழமையான நீர்ப்பாசன முறை 34 சதவிகிதமாக இருந்தது. தற்போது நிலத்தடி நீர் அதிகமாக உறிஞ்சப்பட்டு, அந்தப் பழைய முறைகளெல்லாம் மாற்றப்பட்டு, தற்போது 64 சதவிகிதம் நிலத்தடி நீர் பயன்பாட்டிற்கு வருகிற காரணத்தினாலே நீர்ப்பாசனத் துறையினுடைய அவசியத்தை இந்த அரசு உணரத் தவறிவிட்டது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று ஒவ்வோராண்டும் மார்ச் 22 ஆம் தேதி உலக தண்ணீர் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது. சென்ற ஆண்டுகூட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இதே அவையிலே தண்ணீர் தினத்தை முன்னிட்டு வாழ்த்துகளைப் பதிவு செய்திருக்கின்றார்கள். 'நீரின்றி அமையாது உலகு' என்று நாடெங்கும் தண்ணீருடைய அவசியத்தை உணர்ந்து, விவாதித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, 2021–2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு–செலவுத் திட்டத்தில் அடுத்த 10 ஆண்டுகளில் 1,000 தடுப்பணைகளும், கதவணைகளும் கட்டப்படும் என்ற அறிவிப்பு எல்லோரும் மேசையைத் தட்டி வரவேற்கின்ற வகையில் கொடுக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கடந்தும்கூட அறிவிப்பு, அறிவிப்பு நிலையிலேயே இருக்கிறது. ஆயிரம் தடுப்பணைகள் எப்போது பயன்பாட்டிற்கு வரும் என்று தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். தடுப்பணைகள் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா அல்லது எப்போதும்போல இதுவும் அறிவிப்பாகவே இருக்குமா என்பதையும் இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

மேலும், மேட்டூர், அமராவதி, வைகை, பேச்சிப்பாறை போன்ற முக்கிய அணைகளின் நீர்த்தேக்கக் கொள்ளளவை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்தத் தேவையான திட்டங்களை இந்த அரசு வகுக்கும் என்ற அறிவிப்பும், அதேபோன்று 2021–2022 ஆம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையிலே ஆனைமலையாறு, நீராறு–நல்லாறு, பாண்டியாறு–புனம்புழா திட்டம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் திட்டங்களைச் செயல்படுத்த கேரள மாநிலத்துடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளில் இந்த அரசு ஈடுபடும் என்ற அறிவிப்பும், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் நபார்டு

2023 மார்ச் 29] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

வங்கி உள்ளிட்ட பல்வேறு முகமைகளிடமிருந்து தேவையான உதவிகளைப் பெற்று, நீர்வளத் துறையில் சிறப்புத் திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என்றும், கல்லணை கால்வாய் புதுப்பித்தல், விரிவுபடுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்திற்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிலிருந்து ரூ.2,639.15 கோடி நிதியுதவி பெறப்பட்டுள்ளதாகவும், இரண்டாவது அணை சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் திட்டமானது 610.26 கோடி ரூபாய் செலவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் என்கின்ற அறிவிப்பும், பருவநிலை மாற்றத்திற்கான தழுவல் திட்டத்தின் இரண்டாம் கட்டம், காவேரி டெல்டா பகுதியிலே 1,825 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்கின்ற அறிவிப்பும், தமிழ்நாடு நீர்ப் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் மூன்றாம் கட்டமும், நான்காம் கட்டமும், உலக வங்கியின் நிதியுதவியுடன் 779.89 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்கின்ற அறிவிப்பும், இதுபோன்ற அடுக்கடுக்கான அறிவிப்புகள் நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருந்தன. ஆனால், அவை செயல்வடிவத்திற்கு எப்போது வரும் என்று தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள். அதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் எடுத்து வைக்கிறேன்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்திலே அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக 2020 ஆம் ஆண்டு தேசிய நீர் விருது 2019 ஆம் ஆண்டு நீர் மேலாண்மையில் நாட்டிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாகக் கையாண்ட முதலமைச்சர் என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விருதை Jal Shakti அமைச்சகம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வழங்கியது என்பதையும் இந்த அவையிலே எடுத்துவைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமராமத்துத் திட்டம். நிலத்தடி நீர் அதள பாதாளத்திற்குச் சென்றிருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பான குடிமராமத்துத் திட்டத்திற்கு மீண்டும் உயிரூட்டி, நிலத்தடி நீரை உயர்த்துவதற்காக மழை நீர் சேகரிப்புத் திட்டம் தந்த அம்மா அவர்களின் வழியிலே இந்தத் திட்டத்தை இந்த நாட்டிலே விவசாயிகளுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக

அறிவித்தவர் முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலனுக்காக, மக்களாலே செயல்படுத்தப்படுகின்ற மகத்தான திட்டம், குடிமராமத்துத் திட்டம். 13–3–2017 அன்று இந்தத் திட்டம் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தப் புரட்சிகரமான திட்டத்திலே 2016–2017, 2017–2018, 2019–2020 ஆம் ஆண்டுகளிலே மாநிலத்தின் 30 மாவட்டங்களிலே 4,824 குடிமராமத்துப் பணிகள் 9,119.20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 4,782 பணிகளை வெற்றிகரமாக முடித்த வரலாறு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 34 மாவட்டங்களிலே 2020–2021 ஆம் ஆண்டிலே 498 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 1,387 குடிமராமத்துப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, விவசாயிகளிடத்திலும், பொதுமக்களிடத்திலும் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்ற இந்தத் திட்டம் குறித்து நிதிநிலை அறிக்கையிலும் இடம் பெறவில்லை; ஏறத்தாழ 200 பக்கங்களுக்கு மேலே கொண்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலும் தேடித் தேடிப் பார்த்தோம். விவசாயிகளிடம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்ற இந்தத் திட்டத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக விட்டுவிட்டார்களோ என்கின்ற ஐயம் விவசாயிகளிடம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச்சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்து நிமிடங்கள் முடிந்துவிட்டன. நானும், பத்து நிமிடங்கள் முடிந்துவிட்டன என்பதை எடுத்துச் சொல்கிறேன்.

முற்பகல் 11–50

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டல் மண் இலவசமாக எடுக்கின்ற திட்டம். இது மிகப் பெரிய திட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இதுகுறித்து எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதுகூட பேசியிருக்கிறார்கள்; விவாதித்திருக்கின்றார்கள். இன்றைக்கு உழுது, உழுது அந்த மண்ணின் உயிர்ச்சத்து குறைகிறபோது என்னதான் நாம் உரம் போட்டாலும்கூட, அந்த வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்துச்சென்று பயன்படுத்துகிறபோது, மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது. ஆகவே, தொழில் துறை அரசாணை எண் 50–ன்மூலம்,

இதனை இலவசமாக எடுத்துக்கொள்ளலாம் என்று இந்தியாவிலேயே முதன்முதலாக அறிவித்தவர் அன்றைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வரலாற்றுப் பெருமை அவர்களையே சாரும். அதுகுறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. ஆனால், செயல்வடிவத்திலே இன்றைக்கு வருவாய்த் துறையைச் சார்ந்த அதிகாரிகளாக இருந்தாலும் சரி–தொழில் துறையில் இருக்கக்கூடிய Mines அவருடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது–தொழில் துறை அதிகாரிகளாக இருந்தாலும் சரி வண்டல் மண் எடுப்பதற்கு அனுமதிப்பதில்லை என்ற நிதர்சனமான உண்மையை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். ஆகவே, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, இந்தத் திட்டத்தினுடைய வரவேற்பு குறித்து நாடெங்கும் விவாதிக்கப்பட்டாலும்கூட, மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டு, 83 ஆண்டுகளுக்குப்பின் முதன்முதலாக தூர்வாரிய பெருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களுக்கு, விவசாயிகளுக்கு, மண்பாண்டம் செய்பவர்களுக்கு, விளைநிலங்களுக்கு வண்டல் மண் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 2 இலட்சத்து 70 ஆயிரத்து 173 கன மீட்டர் அளவுக்கு வண்டல் மண் அகற்றப்பட்டு, விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டது என்பது ஒரு வரலாற்றுச் சாதனை. 15–12–2020 வரை நீர்வளத் துறையின்மூலம் 1 இலட்சத்து 26 ஆயிரத்து 658 பயனாளிகளுக்கு வண்டல் படிவங்கள் இலவசமாக வழங்கப்பட்டதும் ஒரு வரலாற்றுத் திட்டமாகும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச்சொல்கிறேன்.

நதிநீர் இணைப்புத் திட்டம் குறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலே, பக்கம் 76–ல் இடம் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள திருச்சி, கரூர், புதுக்கோட்டை, விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள வறட்சிப் பகுதிகளில் நிலவும் குடிநீர் மற்றும் இதரத் தேவைகளுக்காகக் காவிரியின் வெள்ள உபரி நீரை காவிரி–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டம் என்கிற ஒரு வரலாற்றுத் திட்டத்தை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். இதுகுறித்த விவரமும், வழக்கு விவரமும் கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 29–லும், அதேபோன்று இந்தத் திட்டத்தினுடைய விவரமும் கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம்

76–லும் இடம் பெற்றிருக்கின்றன. ஆனாலும், இத்திட்டம் எப்போது செயல்பாட்டுக்கு வருமென்று வறட்சி மிகுந்த தென்மாவட்ட மக்கள், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்ட மக்களெல்லாம் எதிர்பார்க்கிறார்கள். வானம் பார்த்த பூமியாக, காலம் காலமாக வானத்தைப் பார்த்து கண்ணீரைச் சிந்துகிற அந்த மக்களின் கண்ணீரைத் துடைத்த தலைவர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாற்றுத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலுரையில் சொல்வார்கள். (குறுக்கீடு)

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசவே இல்லையா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 13 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: சுருக்கமாக முடித்துவிடுகிறேன். நடந்தாய் வாழி காவேரி திட்டம், அத்திக்கடவு–அவினாசித் திட்டம், மேட்டூர்–சரபங்கா நீரேற்றத் திட்டம் ஆகியவை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்த வழக்கு விவரத்தையும் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 29–லே தெரிவித்திருக்கிறார்கள். அவற்றை நாங்களும் படித்துப் பார்த்தோம். 'நடந்தாய் வாழி காவேரி' திட்டம் என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாகும். கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், 135–வது பக்கத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு மாசுபடுகிற இந்தச் சுற்றுச்சூழலை மேம்படுத்துகிற வகையில், முதன்முதலாக 20–7–2019 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ், நீர்நிலைகளை அகற்றும் சூழலை மீட்டெடுத்தல், பேணிக்காத்தல் மற்றும் நீராதாரங்களை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக்

கொண்டு, தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கத்தின் செயல்பாடுகளை அறிவித்தார்கள். இதிலே முக்கியத் திட்டமாக, காவேரி ஆறு மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்கும் 'நடந்தாய் வாழி காவேரி' திட்டம் வருமா என்று இந்த நாடே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இதற்கான அத்தனை முன்முயற்சிகளையும் எடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எந்தவித குறுக்கீடும் இல்லாமல் நீங்கள் 15 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். போதும். (குறுக்கீடு) குறுக்கீடே இல்லை. (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: இதெல்லாம் மக்களுக்குத் தேவையான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தேவையில்லை என்று சொல்லவில்லை.

திரு. ஆர்.பி. உதயகுமார்: நீங்களும் ஒரு விவசாயி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசும் விஷயங்களைத் தேவையில்லை என்று யாரும் சொல்லவில்லை. (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: பனை புனரமைப்பு மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமாக்கும் திட்டம், வேளாண்மைக்கு நேரடித் தொடர்புடைய நீர்நிலைகளைச் செப்பனிடுதல், புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் ஏரிகளைப் புனரமைத்தல். அதேபோன்று, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 7–லே இடம் பெற்றிருக்கிறது. ஐக்கிய நாடுகள் பொது அவை உச்சி மாநாட்டிலே 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்–2030 செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக (மணியடிக்கப்பெற்றது) இதை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஒரு மக்கள் இயக்கமாகவே உருவாக்கிக் காட்டினார்கள் என்று சொல்லி, நிறைவாக முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட பல்வேறு திட்டங்களை இன்றைக்குச் செயல்படுத்துவதாக இந்த அவையில் தொடர்ந்து அறிவித்து வருகிறார்கள்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் வழங்கியதற்கு நன்றி சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடு) உரையை சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *தேர்தல் அறிக்கை எண் 83–ல் காவேரி–குண்டாறு தொடங்கி 84, 85, 86, 87, 88 என்று வரிசையாக 113 வரை 31 அறிவிப்புகள் நீர்நிலைக்காக தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருக்கிறது. அதில் ஒன்றைக்கூட, இன்றுவரை இந்த அரசு செயல்படுத்தவில்லை என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலும் சரி, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்திலும் சரி, வட மாநிலத் தொழிலாளர் பிரச்சினையே இந்த மாநிலத்தில் எழவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து பிறகு பேசலாம். (குறுக்கீடு) அடுத்து பேசும் உங்கள் உறுப்பினரிடம் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள், நீர்வளத் துறையில் மிகவும் தெளிவாகப் பேசி முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, உரையை முடியுங்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *கொரோனா காலத்தில்கூட, அம்மா உணவகத்தின் மூலமாக வட மாநிலத் தொழிலாளர்களுக்கு உணவு வழங்கி தன் பிள்ளைகள்போல் பாதுகாத்த முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். ஆனால், அண்டை மாநிலங்களிலெல்லாம் அன்றைக்குக் கொரோனா காலத்தில், வட மாநிலத் தொழிலாளர்களுக்குப் பிரச்சினை எழுந்தபோது. . .*

2023 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து விவாதித்தாகிவிட்டது. (குறுக்கீடு) முதலிலேயே, அந்தப் பிரச்சினை வேண்டுமென்றே எழுப்பப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்தானே? (குறுக்கீடு) அதில் உண்மை இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததுதானே!

திரு. ஆர்.பி. உதயகுமார்: பத்து ஆண்டுகள் வராத வட மாநிலத் தொழிலாளர் பிரச்சினை, இப்போது இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து விவாதிக்கப்படுவது, இன்றைக்கு அச்சம், . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் அமைச்சராக இருந்தவர். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். அந்தப் பிரச்சினை தவறாக, வட மாநிலத்தவர் புரளியைக் கிளப்பி, இந்த அரசுக்கு கெட்டப் பெயர் வரவேண்டுமென்று எழுப்பியதாக, எல்லா பத்திரிகைகளும், ஊடகங்களும், சம்பந்தப்பட்ட குற்றவாளியைக் கைது செய்து விசாரணையில் இருக்கிறது. அடுத்த பொருள் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் உள்ள ஜீவாதாரப் பிரச்சினையான முல்லைப் பெரியாறு பிரச்சினை என்பது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுவதில் ஒன்றும் குறையில்லை. ஆனால், என்னுடைய இலாகா பற்றிப் பேசினார். அது அவருடைய உரிமை. அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். வட மாநில தொழிலாளர் பிரச்சினை குறித்து ஒரு புரளி கிளப்பப்பட்டது. பிறகு அரசாங்கத்தின் சார்பிலேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அதுகுறித்து விளக்கமாக அறிக்கை வெளியிட்டார்கள். வட மாநிலத்திலிருந்து அதிகாரிகள் இங்கே வந்து பார்வையிட்டபின், அந்த மாதிரி ஒன்றும் இங்கே நடக்கவில்லை என்று அவர்களும் சொல்லிவிட்டுப் போனார்கள். ஆக, அடங்கிப் போன ஒரு விஷயத்தை, முடிந்துபோன ஒன்றை, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுவது அதை மீண்டும் கிளறுகிறார் என்று நினைக்கின்றேன். இதைச் சபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்துபோன பிரச்சினை பற்றி அவர் பேசவில்லை. எதிர்காலத்தில் இனி நடக்கக் கூடாது என்பதற்குத்தான் அந்தச் செய்தியை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தப் புரளியைக் கிளப்பியவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும். தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அடுத்த விஷயத்திற்கு வாருங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக, சமூக ஊடகங்களில் தவறான செய்தி பரப்பப்பட்டவுடனேயே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தெளிவான அறிக்கையை வெளியிட்டார்கள். அந்த அறிக்கை, அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கி, உலகத்திலே இருக்கின்ற அத்துணைப் பேரும் பாராட்டுகின்ற வகையிலே அமைந்தது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும். . .*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *ஒரே ஒரு நிமிடம். அதுசம்பந்தமாக ஆய்வு செய்ய பீகார், ஜார்கண்ட் மாநிலங்களிலிருந்து ஒரு குழு தமிழ்நாட்டிற்கு வருகை தந்தது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுமே, இது அரசின் கவனக்குறைவு இல்லை; திட்டமிட்டே புரளியைக் கிளப்பியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் இப்படி நடக்க வேண்டாமென்று ஆலோசனைதான் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) பத்து நிமிடங்கள் உங்களுக்கு வழங்கி, குறுக்கீடு இல்லாமல் 20 நிமிடங்கள் தந்திருக்கிறேன். போதும். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்மாவட்ட மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையான*

முல்லைப் பெரியாறு பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக அறிவார்கள். நீரின் அளவை 152 அடியாக உடனே உயர்த்த வேண்டும்.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில்தான் மாமன்ற உறுப்பினர்களுடைய திறமை இருக்கிறது. குறைந்த நேரத்தில் எல்லா விஷயங்களையும் அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவது.

திரு. ஆர்.பி. உதயகுமார்: முல்லைப் பெரியாறு அணையை கட்டிய John Pennycuick அவர்களுக்கு சிலை அமைப்பதற்காக மாண்புமிகு மூத்த அமைச்சர் அண்ணன் திரு. இ. பெரியசாமி அவர்கள் London சென்றார்கள். அங்கே Queen Elizabeth II அவர்கள் இறந்ததால் அந்த விழா சம்பிரதாயமாக நடத்தப்பட்டது. அந்தச் சிலை அமைப்பதற்கான தொகை இன்னும் கொடுக்கவில்லை என்று அங்கிருந்து John Pennycuick-ன் வாரிசுகள் பேசுகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், அவையில் பதிவு செய்தாகிவிட்டது. நன்றி. (குறுக்கீடு)

திரு. ஆர்.பி. உதயகுமார்: வெள்ளத் தணிப்பு. ஒன்றே ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்று சொல்லி முடியுங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களிலெல்லாம் பேரிடர் வருகிறபோது, பேரிடர் வந்ததற்குப் பின்பு நிவாரணம் வழங்குவதைத்தான் மரபாக, நடைமுறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால், முதன்முதலாக வெள்ளத் தணிப்பு நடவடிக்கை என்பதை இந்தியாவிலேயே முன்மாதிரியாக உருவாக்கிய தலைவர் அண்ணன் எடப்பாடியார் என்பதை அவையில் எடுத்துச்சொல்லி, (மணியடிக்கப்பெற்றது) பவானிசாகர் அணையிலிருந்து . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள். (குறுக்கீடு) முன்னாள் முதல்வருக்கு நன்றிச் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். போதும், போதும். (குறுக்கீடு) போதும், போதும். நிறைய தந்திருக்கிறேன். (குறுக்கீடு)

***திரு. எஸ். காந்திராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், 2023–2024 ஆம் ஆண்டிற்கான தனது துறையினுடைய கொள்கைககள் மற்றும் திட்டங்கள் குறித்து, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், உங்கள் உறுப்பினர் கடைசியாகப் பேசுகிறார் அவரிடம் கொடுங்கள். மாண்புமிகு எஸ். காந்திராஜன் அவர்கள்.

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தனது மானியக் கோரிக்கையினை அவையில் விவாதத்திற்கு சமர்ப்பித்துள்ளார்கள். இந்த மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு எனக்கு பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'நீரின்றி அமையாது உலகு' என்று தொடங்குகிற வள்ளுவரின் அந்தக் குறளினுடைய அர்த்தத்திற்கேற்ப அந்த வரிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நீர்வளத் துறைக்கு ஒரு பொறுப்பான நீண்ட அனுபவம் வாய்ந்த, தமிழ்நாட்டில் உள்ள அணைக்கட்டுகள், ஏரிகள் என்று எல்லாவற்றையும் விரல் நுனியில் வைத்திருக்கின்ற ஒருவரை இந்தத் துறைக்கு அமைச்சராக்கி இந்தத் துறையினுடைய முக்கியத்துவத்தைத் தெரிவித்திருக்கின்ற காரணத்தினால் அவருடைய நிர்வாகத் திறமையினை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குறிப்பிட்டுள்ள அத்துணைப் பெருமைகளுக்கும் உரிய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், இந்த அவையில் வைத்துள்ள மானியக் கோரிக்கையின்மீது ஆதரித்து பேசுவதற்கு எனக்குக் கிடைத்த அந்த வாய்ப்பை நான் பெருமையாகக் கருதுகிறேன். இந்திய திருநாடு சுதந்திரம் பெற்ற பிறகு முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கென்று முக்கியத்துவம் தரப்பட்டது. அன்றைய பாரதப் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், விவசாயத்திற்கு ஏராளமான நிதிகளை ஒதுக்கி, இந்தியா முழுமைக்கும் பல்வேறு அணைக்கட்டுகளைக்

கட்டி, பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கென்று முக்கியத்துவத்தைக் கொடுத்தாலும்கூட, தமிழ்நாட்டினுடைய வரலாற்றை நாம் பார்த்தோம் என்றால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் கட்டிய அணைகளான கீழ்பவானி, மணிமுத்தாறு, ஆரணியாறு, வைகை அணை, அமராவதி அணை, சாத்தனூர் அணை, கிருஷ்ணகிரி அணை, புல்லம்பாடி அணை, வீடூர் அணை, பரம்பிக்குளம், நெய்யாறு ஆகியவை குறிப்பிடத்தக்க அணைகளாகும். ஆனால், அதற்குப் பிறகு இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் இத்தகைய அணைகள் இன்றைக்கும் பேசப்படும் முக்கியத்துவம் வாய்ந்த அணைகளாக இருந்து வருகின்றன. அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைந்தபோது அண்ணா அவர்கள் காலத்தில் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள். அண்ணா அவர்களின் மறைவிற்குப் பின்பு தமிழ்நாட்டில் ஐந்து முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நம்முடைய முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களுடைய காலத்தில் கட்டப்பட்ட அணைகளுடைய எண்ணிக்கை 42 என்கிற வகையில் இந்திய அரசியல் வரலாற்றில் மிக அதிக அளவிலான அணைக்கட்டுகளைக் கட்டி சாதனைப் படைத்திருக்கிற ஓர் ஒப்பற்றத் தலைவராக விளங்குகின்றவர்தான், விளங்கியவர்தான் நம்முடைய தானை தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு முன்னால் பேசிய அ.தி.மு.க.—வினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் நீர்ப்பாசனத்திற்கு வறண்டுபோய் இருக்கின்ற நிலத்தடி நீரைக் கொண்டு வருவதற்கான திட்டங்கள் ஏதுமில்லை என்று சொன்னார். நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது அவர்கள் groundwater recharge அதற்கு மட்டும்தான் முக்கியத்துவம் கொடுத்து பேசினார்கள். இதையும் அவர்கள் ஒழுங்காகச் செய்யவில்லை,

நீர்ப்பாசனத்திற்காக ஏதாவது அணைகளை அ.தி.மு.க. ஆட்சியில் கட்டினார்களா? அல்லது கட்டப்பட்டதா என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பதில் இல்லை, அதற்கான விளக்கம் இல்லை, அவர்கள் அதைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). அதுதான் வேதனையாக இருக்கிறது; விந்தையாக இருக்கிறது. எனவே,

எதையாவது, ஒரு சாதாரண திட்டத்தைக்கூட பெரிதுபடுத்தி, மிகப் பெரிய அணைக்கட்டுகளைக் கட்டியதைப் போன்றும், சாதனை படைத்ததாகவும் இங்கே சொல்லிக்கொண்டிருப்பது உண்மையிலேயே வேடிக்கையும், விந்தையுமாகும்.

பிற்பகல் 12–05

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட 42 அணைகளுடைய பெயர்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். தும்பலஹள்ளி அணை, சின்னாறு அணை, குண்டேரிப்பள்ளம் அணை, வரட்டுப்பள்ளம் அணை, பாலாறு பொருந்தலாறு அணை, வரதமாநதி அணை, வட்டமலைக்கரை ஓடை அணை, பரப்பலாறு அணை, பொன்னியாறு அணை, மருதாநதி அணை, பிளவக்கல் (பெரியாறு) அணை, பிளவக்கல் (கோவிலாறு) அணை, கடனாநதி அணை, இராமாநதி அணை, கருப்பாநதி அணை, சித்தாறு 1 அணை, சித்தாறு 2 அணை, மேல் நீராறு அணை, கீழ் நீராறு அணை, பெருவாரிப்பள்ளம், மோர்தானா அணை, இராஜாகோப்பு அணை, ஆண்டியப்பனூர் அணை, குப்பநத்தம் அணை, மிருகண்டாநதி அணை, செண்பகத்தோப்பு அணை, புத்தன்துறை அணை, மாம்பழத்துறையார் அணை, பொய்கை அணை, நல்லாறு அணை, வடக்கு பச்சையாறு அணை, கொடுமுடி அணை, அடவிநயினார் அணை, சாஸ்தாகோவில் அணை, இருக்கன்குடி அணை, சென்னம்பட்டி அணை, கிருதமால் அணை, நல்லத்தங்காள் ஓடை அணை, நங்காஞ்சியார் அணை, வரட்டாறு வள்ளி மதுரை அணை, பச்சைமலை அணை, ஆனைவிழுந்தான் ஓடை அணை என இன்னும் ஏராளமாக சொல்லிக்கொண்டே போகலாம். அப்படிப் படைக்கப்பட்ட சாதனைகளையெல்லாம் மறைத்துவிட்டு, ஏதோ ground water recharge, நிலத்தடி நீரை நாங்கள் மேம்படுத்தினோம் என்று சொல்வது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக, அந்த வித்தியாசத்தை உணராமல் தமிழ்நாட்டுக்கு தாங்கள்தான் ஏதேதோ செய்ததைப்போல ஒரு போலியான வெளிப்புறத் தோற்றத்தை உருவாக்க விரும்புகிறார்கள். பத்திரிகைகளில் வெளிவருவதற்காக இந்தச் செய்திகளையெல்லாம் சொல்கிறார்கள் என்பதுதான் நான் கூற விரும்புகிற கருத்து.

அந்த வகையிலேதான், வறட்சியான, மிகவும் வறண்ட பகுதியான என்னுடைய வேடசந்தூர் தொகுதிக்கு குடகனாறு அணை கட்டும் திட்டம், 1973 ஆம் ஆண்டு அன்றைக்கு

2023 மார்ச் 29] [திரு. எஸ். காந்திராஜன்]

முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்பொழுது பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் முன்னிலையிலும் இந்த அணை திறக்கப்பட்டது. குடகனாறு அணையினுடைய மொத்த உயரம் 27 அடி. 12–11–1977 அன்று வரலாறு காணாத வெள்ளத்தால் masonry dam என்று சொல்லப்படுகின்ற அணையின், மத்தியில் சிமெண்டால் கட்டப்பட்ட அந்தப் பகுதியைத் தவிர, மற்ற இருபுறங்களிலும் இருந்த மண் கரைகள் உடைந்து ஏராளமான உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டது. இதனைக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால், அப்பொழுது இந்த அணையினுடைய கட்டுமானம் சரியில்லை என்று விமர்சனம் செய்யப்பட்டது. ஆனால், அதுவல்ல உண்மை. 50,000 கன அடி தண்ணீர் வரவேண்டிய அளவில் கட்டப்பட்ட அணையில் இரண்டரை இலட்சம் கன அடி தண்ணீர் ஒரே நேரத்தில் வந்த காரணத்தினால்தான், அந்த அணையின் மண் கரைகள் உடைந்ததே தவிர, வேறொன்றுமில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதற்குப் பின்னால், அந்த அணைக்கு என்ன செய்ய வேண்டுமென்று ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில், கூடுதலாக 10 மதகுகள்கொண்ட ஓர் அணை கட்டப்பட்டது. அதிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் கரூர் மாவட்டம், வெள்ளியணை ஏரி, உப்பிடா மங்கலம் ஏரி, வீரராக்கியம் ஏரிகளுக்கு அனுப்பப்பட்டு, தண்ணீர் நிரப்பப்படுகிறது. (குறுக்கீடு) உரையை முடித்துவிடுகிறேன். அந்த அணையிலிருந்து எங்களுடைய வேடசந்தூர், குடகனாறு பகுதியிலுள்ள எந்தக் குளத்திற்கும் தண்ணீர் விடுவதற்கு அனுமதியில்லை; G.O. இல்லை. எனவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இதையெல்லாம் சரி செய்து, எதிர்காலத்தில் எங்களுடைய பகுதியிலுள்ள குளங்கள் நிரம்பக்கூடிய வகையில் தண்ணீர் திறந்துவிட G.O. அதாவது, அரசாணை வெளியிட வேண்டுமென்று பேரன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். காந்திராஜன்] [2023 மார்ச் 29

மேலும், 2023–2024 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 215–ல் ஏற்கெனவே குடகனாறு அணையிலிருந்து பாசன வசதி பெற்றுவரும் மேற்கண்ட வெள்ளியணை, வீரராக்கியம் அணை, உப்பிடாமங்கலம் அணைகளுக்கு மீண்டும் நீரேற்று மூலமாக காவிரியிலிருந்து தண்ணீர் வழங்குவதற்கு ஒரு திட்டம் தொடங்குவது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அப்படி வருகின்றபொழுது, அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் வழங்குவதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. இருந்தாலும் அந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது, குடகனாற்றினுடைய நீர்ப்பாசனம் முழுமையாக எங்களுக்குப் பயன்படுகின்ற வகையில், அங்கு வலதுபுறமாக வருகின்ற 53 கிலோ மீட்டர் நீள வாய்க்காலை எங்கள் பகுதிக்குத் திருப்பி, வேடசந்தூர் தொகுதி மக்கள் முழுமையாகப் பயன்பெறும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டும். அதற்கான G.O.–அரசாணை வெளியிட வேண்டுமென்று நான் பேரன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த அணை 1977 ஆம் ஆண்டு உடைந்த பின்னால், கூடுதலாக 10 மதகுகள் கொண்ட அணை கட்டப்பட்ட பிறகும்கூட, 27 அடி வரையில் தண்ணீர் தேக்கவேண்டிய இந்த அணையில், இதுவரை 22 அடி வரை மட்டுமே தண்ணீர் தேக்கப்படுகிறது. எனவே, நாங்கள் கூடுதலாக தண்ணீரைப் பயன்படுத்துகின்ற அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் revised G.O. போட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

மேலும், அணைக்கட்டின் 10 மதகுகளும் திண்டுக்கல்லிலிருந்து வருகின்ற தோல் தொழிற்சாலைத் தண்ணீரால் அரிக்கப்பட்டு பழுதுபட்டுவிட்டன. அதைச் சரிசெய்கின்ற அளவிற்கு நிதியொதுக்கப்பட்டு அந்தக் கதவுகள் அனைத்தும் சரிசெய்யப்பட்டுள்ளன. மேலும், பழைய அணையின் 5 main shutters சரிசெய்யப்படாமல் உள்ளன. அதற்காக ரூ.15 கோடி நிதியை எங்கள் வேண்டுகோளின் அடிப்படையில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அளித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று வலதுபுற பிரதானக் கால்வாயின் தண்ணீர் 100 கன அடியிலிருந்து 200 கன அடியாகச் செல்வதற்கான பணிகளும் தற்போது 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த நிதியினை ஒதுக்கிக் கொடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு அனுமதியளித்துள்ளார்கள். அந்தப் பணி நடைபெறுகின்ற காரணத்தினால், இந்தப் பணிகளுக்கு ஒத்துழைப்பாக இருந்து, எங்களுக்காகப் பரிந்துரை செய்து எங்களுக்கு இந்த நிதியைப் பெற்றுத் தந்த மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் திரு. இ. பெரியசாமி அவர்களுக்கும், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரான அண்ணன் மாண்புமிகு திரு. சக்கரபாணி அவர்களுக்கும், மேலும் நம்முடைய கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரான அண்ணன் திரு. V. செந்தில்பாலாஜி அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் தம்பி திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள், 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் பேசுகின்ற உறுப்பினர்களுக்கு 15 நிமிடங்கள் உரையாற்றும் வாய்ப்பு அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இல்லை, 5 நிமிடங்கள் மட்டும்தான் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் இந்த Dam கட்டப்பட்டபோது Project Report-ல் என்ன போடப்பட்டுள்ளதென்றால், வேடசந்தூரில் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, வறண்ட பகுதியான அந்தப் பகுதிக்கு நிலத்தடி நீரை செறிவூட்டுவதற்காக என்று சொல்லியிருக்கின்றார்கள். இவற்றில் முதலில் கூறப்பட்ட அந்தக் குடிநீர் என்பது எந்தக் காலத்திலும் பயன்படுத்த முடியாது என்பது அந்த அதிகாரிகளுக்கே தெரியும்.

தெரிந்தும் அவ்வாறு போட்டிருக்கின்றார்கள். ஏனென்றால், திண்டுக்கல் தோல் தொழிற்சாலையிலிருந்து வருகின்ற அனைத்து chemical கலந்த கழிவுகளும், இந்த அணைக்கட்டில்தான் வந்து சேருகிறது. எனவே, அதனை எப்போதும் பயன்படுத்த முடியாத நிலைதான் இன்றுவரை உள்ளது. இருந்தாலும், அந்த Project Report-ல் அப்படிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று, எங்களுக்குக் குளங்களில் தண்ணீரை நிரப்புவதற்குக்கூட, அனுமதியில்லை என்கிற மிகப் பெரிய வருத்தத்தை இந்த அரசாணைமூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. எனவே வலதுபுற பிரதானக் கால்வாயிலிருந்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் உரையைத் தொடங்கி 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இக்காரணங்களால் எங்கள் பகுதிக்கு ஒரு புதிய நீர்ப்பாசனத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களின்மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இதற்கு ஒரு புதிய திட்டம் கொண்டுவந்தால்தான், எதிர்காலத்தில் எங்கள் சந்ததியினர் அங்கு குடியிருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். மனிதாபிமான அடிப்படையில், இதுகுறித்துப் பேசுவதற்கு இரண்டு நிமிடங்கள் வாய்ப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தற்போது நாங்கள் வசிக்கின்ற பகுதி உயரமான பகுதியாக உள்ளது. ஆனால், காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டுவந்தால்தான் அப்பகுதியிலுள்ள குளங்கள் நிரப்பப்பட்டு, அப்பகுதிக்கான பாசன வசதியைப் பெற முடியும். ஏற்கெனவே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக காவேரி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. பொதுமக்களின் தாகத்தைத் தீர்த்துக்கொண்டிருக்கிறது. ஆனால், எவ்வளவோ காலமாக எங்கெங்கோ மழை பெய்தும், காவேரி நீர் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடியும்கூட, இந்த ஆண்டு எங்கள் வேடசந்தூர் பகுதியின் எந்தக் குளமும் நிரம்பவில்லையென்றால், அதன் வறட்சி எத்தகைய கொடிய வறட்சி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே

2023 மார்ச் 29] [திரு. எஸ். காந்திராஜன்]

தெரியும். எனவேதான் கேட்கிறோம், மாயனூர் கதவணையிலிருந்து pumping மூலமாக தண்ணீர் கொண்டுவந்து எங்கள் குளங்களில் நிரப்புவதன் மூலமாகத்தான் எங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்க முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இத்திட்டத்தில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் தற்போது அளிக்கப்பட்டிருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 215–ல் தருமபுரி, கிருஷ்ணகிரி, கரூர், திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களுக்கான 4 நீரேற்று திட்டங்கள்மூலம் அளிப்பதாக கூறப்பட்டுள்ளது. ஆனால், வேடசந்தூர் பகுதிக்கு இதுபோன்ற ஒரு திட்டத்திற்கான நடவடிக்கையில் என்ன முன்னேற்றம் உள்ளது என்பதைத் தெரிவிக்காமல் இருப்பது ஒரு மனக் கஷ்டமான காரியம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. அவையை 2.00 மணிக்கு முடித்து பிற்பகல் 4–00 மணிக்கு துவக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரே நிமிடம். ஏற்கெனவே 13 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. எஸ். காந்திராஜன்: Please give me one minute. எனவே, இந்தத் திட்டத்தைக் கண்டிப்பாக எங்களுக்கு விரைந்து தருவதற்கு உரிய அத்துணை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2021 சட்டமன்றப் பொதுத் தேர்தல் பிரச்சாரத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வாக்குறுதி கொடுத்த திட்டம் இது. மக்களிடத்தில் நாங்கள் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு உதவியாக இருந்து, எங்களுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்தக் கோரிக்கையை விடுக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயகுமார் அவர்கள் ground water பற்றிப் பேசினார்கள். ஒன்றை அவருக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். 33 சதவிகிதமாக இன்றைக்கு இருக்கின்ற வனப்பரப்பினை, நீர்வளத்தைப் பெருக்குவதற்காக 50 சதவிகிதமாக உயர்த்த, மரங்களை வளர்க்க வேண்டுமென்று திட்டமிட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வனப்பரப்பை 50 சதவிகிதமாக உயர்த்த தமிழ்நாடு முழுவதும் மரங்களை நடுகின்ற இயக்கத்தைத் துரிதப்படுத்தி எல்லா இடங்களிலும் மரத்தை வளர்க்கின்ற அந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் மறந்துவிட்டு, ஏதோ இவர்கள்தான் எல்லாவற்றையும் செய்ததைப்போல, சொல்லிக்கொண்டிருப்பது என்பது முழு பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது என்பதாக உள்ளது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் அளித்துள்ள எனது தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையும் இந்தச் சட்டமன்றத்தில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிந்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனக்குக் கொடுத்த வாய்ப்பிற்காக நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

வேடசந்தூர் வட்டம், குளத்தூர் கிராமம், சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே உள்ள பெரிய சமுத்திர அணைக்கட்டை மாற்றி புது அணை கட்டவேண்டும்.

வேடசந்தூர் தாலுகா, பாலப்பட்டி கிராமம், குடகனாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், நாயக்கனூர் கிராமம், சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், நல்லமனார்கோட்டை கிராமம் மற்றும் பெரும்புள்ளி கிராமம், வரட்டாறு குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும்.

அய்யலூர் பேரூராட்சி, அ. கோம்பை பகுதியில் தடுப்பணை அமைக்க வேண்டும். வடமதுரை ஒன்றியம், பாகாநத்தம் ஊராட்சி, மலைப்பட்டி பகுதியில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும்.

இரண்டு ஆண்டுகளாக காலியாக, நிரப்பப்படாமல் உள்ள திண்டுக்கல் மாவட்டம், Mines, A. D. பணியிடத்தை உடனடியாக நிரப்ப வேண்டும். திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பச்சையாறு அணைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

வேடசந்தூர் பேரூராட்சி, புதிய பஸ் நிலையக் கட்டடத்திற்கும், பாளையம், எரியோடு மற்றும் வடமதுரை பேரூராட்சிகளுக்கும், புதிய அலுவலகங்கள் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை வட்டம், ஆர். கோம்பையில், ஏற்கெனவே அனுமதியளிக்கப்பட்ட SIDCO தொழிற்பேட்டையை உடனடியாகத் தொடங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். வேடசந்தூர் தொகுதி, அரசு தலைமை மருத்துவமனை, உள்நோயாளிகள் பிரிவு, குழந்தைகள் நல பிரிவு மற்றும் பிணவறை ஆகியவற்றிற்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். வேடசந்தூர் தாலுகா, ஸ்ரீராமபுரம், மேற்கு மாத்தினிபட்டி கிராமங்களில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை தாலுகா, வெம்பூர் கிராமம், கோவிலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், வேடசந்தூர் தொகுதி, பத்திரப் பதிவு அலுவலகத்திற்கும் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை வட்டம், ராமகிரி அருள்மிகு கல்யாண நரசிங்கப் பெருமாள் திருக்கோயில், ஆர். வெள்ளோடு, அருள்மிகு முனியப்பன் திருக்கோயில், அய்யலூர், அருள்மிகு வண்டிக் கருப்பண்ணசாமி கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு தலா ஒரு தங்கும் மண்டபம் கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பரப்பளவில் இந்தியாவில்

4 சதவிகிதம்; மக்கள் தொகையில் 7 சதவிகிதம். ஆனால், தண்ணீரில் 3 சதவிகிதமாக மட்டுமே உள்ளது. இருப்பினும், தமிழ்நாடு நீர் மேலாண்மையில் சிறந்து விளங்குகிறது. தமிழ்நாட்டை முதலிடத்தில் வழிநடத்தும் இந்தியாவின் No.1 முதல்வர், திராவிட மாடல் ஆட்சி தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2019 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. அப்போது தனிமனிதனாக தி.மு.க. இளைஞரணி சார்பில் எங்களால் முடிந்த அளவிற்கு நீராதாரங்களைத் தூர்வார உள்ளோம் என்று தமிழகம் முழுவதுமுள்ள குளங்களைத் தூர்வார இளைஞர்களுக்கு அன்புக் கட்டளையிட்டு, திருவாரூர் திருவாசல் குளத்தைத் தூர்வாரும் பணியில் ஆரம்பித்து, தமிழகத்தின் நீர்நிலைகளைத் தூர்வாரி, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்"

என்ற குறளின் வரிகளுக்கு இலக்கணமாகத் திகழும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கம். இத்துறை சிறப்பாக நடைபெற்று வருகிறது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனக்கு வாய்ப்பளித்த கொறடா அவர்களுக்கும், எனது ஆற்காடு தொகுதி மக்களுக்கும் மற்றும் நீர்வளத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழந்தமிழ் காலத்தில், சங்க கால இலக்கியத்தில், அந்தக் காலத்தில் விவசாயத்தைச் சேர்ந்த சொற்களான குளம், குட்டை, ஊருணி, ஏந்தல், தாங்கல், கரணை, கண்மாய், ஏரி என இவ்வளவு விஷயங்கள் இருந்தன. நமக்கு குளம், குட்டை, ஏரி இவைதான் தெரியும். கண்மாய்கூட ஒரு சிலருக்குத் தெரியும். ஊருணி, ஏந்தல், தாங்கல் இவையெல்லாம் யாருக்கும் தெரியாது. காலப்போக்கில் மக்களின் வளர்ச்சியினால் அவையெல்லாம் ஆக்கிரமிப்புகள், காணாமல் போய்விட்டன. பல பரிணாமங்களில் நீர்பிடிப்புப்

2023 மார்ச் 29] [திரு. J.L. ஈஸ்வரப்பன்]

பகுதிகளில் இருக்கும் இடங்களில் கொள்ளளவிற்கேற்ப பயிரிடப்பட்டு அதற்கேற்றவாறு அழைக்கப்பட்டன. மழைக்காலங்களில் கிடைக்கும் நீர் ஆங்காங்கே சேமிக்கப்பட்டு நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட்டது. அந்தக் காலத்தில் மூன்று போகம் விளைவித்தார்கள். முதல் போகத்தில் surface water–ஐ, மேற்பரப்பு தண்ணீரை வைத்து பயிர் செய்தார்கள். இரண்டாம் போகத்தில் நிலத்தடி நீர், ground water–ஐ வைத்து பயிர் செய்தார்கள். நிலத்தடி நீரைக்கூட அந்தக் காலத்தில் 24 மணி நேரமும் உடல் உழைப்பினால் ஏற்றம்மூலம் எடுப்பார்கள். அந்த water flow கீழே இருக்கிறபோது, அதிகமாக motor போட்டு உறிஞ்சுவதால்தான் நிலத்தடி நீர் குறைகிறது. அந்தக் காலத்தில் 3 போகங்கள் விளைவித்தார்களென்றால், நிலத்தடி நீர் குறையாமல் அவர்கள் பார்த்துக்கொண்டார்கள். அதேபோல், மூன்றாவது போகம், உலர் பயிர் பயிரிட்டார்கள். தண்ணீரே தேவையில்லாத பயிரைப் பயிரிட்டார்கள். கிராமத்தில், ஊர் மக்கள் எல்லோரும் ராஜா அல்லது சிற்றரசர்களின் தலைமையில் வீட்டிற்கு ஒருவர் சென்று மராமத்து வேலைகளைச் செய்தார்கள். அதனால்தான், அந்தக் காலத்தில் இந்தத் துறைக்கு முதன்முதலில் மராமத்துத் துறை என்று பெயர் வைத்தார்கள். பிறகு பொதுப் பணித் துறை–பாசனம் என மாறியது. இப்போது நீர்வளத் துறை என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆனால், இன்றைக்குத் தமிழகத்தில் நம்மை இயக்கிக்கொண்டிருக்கிற தி.மு.க. தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீர்வளத் துறையை உயிர்வளத் துறையாக எண்ணி பேணிக் காக்கின்றார். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஏரிகளைக் குழந்தையாகப் பார்க்கிறார்; ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு வரும் நீர்ப் பிடிப்புப் பகுதிகளைத் தாயாகப் பார்க்கிறார்; ஏரிகளையும், நீர்ப் பிடிப்புப் பகுதிகளையும் இணைக்கும் நீர்வரத்துக் கால்வாய்களைத் தொப்புள் கொடியாக பாவித்து, இன்றைக்கு நீர்வளத் துறையை மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையில், நீராதாரங்களைப் பாதுகாக்கின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

“வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயரக் குடி உயரும்,
குடி உயரக் கோல் உயரும்,
கோல் உயரக் கோன் உயர்வான்”

என்று ஔவை பாட்டி பாடினார். இன்றைக்குத் திராவிட மாடல் ஆட்சியில் நீர் உயருகிறது, நெல் உயருகிறது, நெல்லுக்கு விலையும் உயருகிறது, அதனால் குடியும் உயருகிறது என்பதற்கு சான்றாக 2022–2023 ஆம் ஆண்டில் காவேரி டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 4,964 கிலோ மீட்டர் நீளத்திற்கு 683 தூர்வாரும் பணிகள் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் உரிய நேரத்திற்கு முன் முடிக்கப்பட்டு, டெல்டா விவசாயிகள் முழுமையாகப் பயன்பெற மேட்டூர் அணை வழக்கத்திற்கு முன்னதாக, 24–5–2022 அன்றே திறக்கப்பட்டது. சிறப்பு தூர்வாரும் பணிகள்மூலம், குறுவை சாகுபடி 2021 ஆம் ஆண்டில் 4.9 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து 2022 ஆம் ஆண்டு 5.36 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பாக உயர்ந்துள்ளது. இதை எதற்காகச் சொல்ல வருகின்றேன் என்றால், அணையிலிருந்து, நீரைத் திறந்தது மட்டுமல்ல, வரலாற்றில் எந்த முதலமைச்சரும் செய்திராத சாதனையாகக் கடைமடை வரை தூர்வாரப்பட்டுள்ளதா, நீர் கடைமடைக்குச் சென்றுள்ளதா என்று நேரடியாகச் சென்று ஆய்வு செய்த ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை இந்தச் சமயத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

திராவிட மாடல் ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிகிறது. ஏனென்றால், எங்கள் மாவட்டத்தில் பாலாற்றில் தண்ணீரே செல்லாது. நான் எட்டாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும்போது பார்த்தேன். அதற்குப் பிறகு தண்ணீரே செல்லவில்லை. இப்பொழுது பார்த்தீர்களென்றால், தண்ணீரே தங்காத எங்கள் மாவட்டத்தில், தளபதி முதல்வராகப் பதவியேற்ற பிறகு, தண்ணீர் முழுமையாகச் செல்கிறது. ஏனென்று பார்த்தீர்களென்றால், ஒரு மன்னர் ஆட்சி செய்வதற்கு இயற்கையே அவருக்கு வழிவகுக்கும்; அவருக்குத் துணையாக இருக்கும். இந்த system–ல் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது இரண்டாம்பட்சம். இயற்கை, மக்களுக்கும், நல்லவர்களுக்கும், ராஜாக்களுக்கும், சிறந்த அரசர்களுக்கும் என்றைக்கும் துணையாக இருக்கும் என்பதற்கு இது ஒரு சான்று. எங்கள் மாவட்டத்தில் 369 ஏரிகள் உள்ளன. அதில் 300 ஏரிகள் முழுக் கொள்ளளவுடன் நிரம்பி காட்சியளிக்கின்றன.

2023 மார்ச் 29] [திரு. J.L. ஈஸ்வரப்பன்]

தமிழ்நாடு நீர்வள மேலாண்மையில் சிறந்து விளங்குவதற்குச் சான்றாக, நெல் சாகுபடி 1.04 கோடி டன்னிலிருந்து, 1.24 கோடி டன்னாக இன்றைக்கு பெருகியிருக்கிறது. 2021–2022 நிதியாண்டில் விவசாயத் துறைக்கு மொத்த நிதியில் ஒதுக்கப்பட்டது 6.5 சதவிகிதம் ஆகும். இது ஒட்டுமொத்தமாக ஒன்றிய அரசிலுள்ள மாநிலங்களின் சராசரி நிதிப் பங்கீட்டான 5.5 சதவிகிதத்தைவிட அதிகம். ஏன் இந்த விவசாயத் துறையைப் பற்றிக் கூறுகிறேன் என்றால், நீர்வளத் துறை என்பது வெறும் நீர்வளத் துறையைச் சார்ந்தது மட்டுமல்ல; விவசாயத் துறையையும் சார்ந்ததுதான்; நகராட்சி நிர்வாகத் துறையையும் சார்ந்ததுதான். அனைத்து துறைகளையும், ஏனென்றால், குடிநீர் மக்களுக்குக் கொடுப்பதும் நீர்வளத் துறைதான். விவசாயத்திற்கும் நீர்வளத் துறைதான் கொடுக்கிறது. குட்டை, குளம் பராமரிப்பு எல்லாம் இன்றைக்கு நகராட்சி நிர்வாகத் துறைக்கு சென்று விட்டன. விவசாயத் துறைக்கு ஏன் நிதி அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்களென்றால், நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்ட, அந்தக் காலத்தில் நான் சொன்னது போல, நிலத்தடி நீரை அவர்கள் ஏற்றம் வைத்து, சரியான flow–ல் slow ஆக எடுத்ததால் நிலத்தடி நீர் குறையாமல் இருந்தது. ஆனால் இன்றைக்கு motor போட்டு, அதிகப்படியான தண்ணீர் உறிஞ்சப்படுவதால், சாகுபடி பரப்பளவு குறைந்திருக்கிறது. இந்த நிலையில் நுண்ணீர் பாசனத்தைப் பயன்படுத்த மொத்த நிதியான ரூ.744 கோடியில்—சதவீதம் நிதியான—சுமார் 450 கோடி ரூபாயில் இக்குறுவட்டங்களில் 53,400 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர் பாசன அமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்பது மிகச் சிறந்த நீர் மேலாண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. (குறுக்கீடு).

அடுத்ததாக, நீர் நிலைகளை மீட்டெடுத்து, புத்துயிர் அளிக்க பல முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமாக்கல் திட்டத்தில் 462 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 341 ஏரிகள், 67 அணைக்கட்டுகள், 11 கால்வாய்களைப் புனரமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, மேலும் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 309 ஏரிகளைப் பழுதுபார்த்தல், புனரமைத்தல், மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அடுத்ததாக, நீர்வளத் துறை என்பது ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்ததுதான். கிராமப்புறங்களில் கடந்த 2 ஆண்டுகளில் 6,618 நீர்நிலைகளில் மொத்தம் 638 கோடி ரூபாயில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்த இரண்டு ஆண்டுகளில்,

மேலும் 10,000 சிறிய நீர்நிலைகள், குளங்கள், ஊருணிகள் 800 கோடி ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்படும் என்று நம்முடைய பட்ஜெட்டில் அறிவித்துள்ளார்கள். நீர் மேலாண்மைக்கு இதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

அடுத்ததாக, எங்கள் மாவட்டத்தின் பாலாற்றைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லியாக வேண்டும். பொதுவாக, perennial river என்று சொல்வார்கள். Perennial river என்பது வற்றாத ஜீவ நதி. எங்கள் பாலாறு வற்றாத ஜீவநதி கிடையாது. மழை பெய்தால் மட்டுமே தண்ணீர் வரும். கிட்டதட்ட 369 ஏரிகளைக் குறிப்பிட்டேன். அதில் 150 ஏரிகளுக்கு மழை பெய்தால் மட்டும்தான் தண்ணீர் வரும். மீதமுள்ள சுமார் 100–லிருந்து 140 ஏரிகளுக்கு பொன்னையாற்று அணைக்கட்டிலிருந்தோ, பாலாற்றின் அணைக்கட்டிலிருந்தோ தண்ணீர் வந்துவிடும். மழை பெய்தால் மட்டும் தண்ணீர் வரக்கூடிய ஏரிகள் நிரம்ப வேண்டுமென்றால், பாலாற்றில் அதிகப்படியான தடுப்பணைகள் கட்ட வேண்டும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடந்த நிதியாண்டிலேயே நெமிலி வட்டம், கரியக்கூடல் கிராமத்தில் 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 70 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பணை மூலமாக சுற்றுவட்டாரத்திலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் நீர்ப்பாசன வசதி தங்குதடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், வளனூர் முதல் திருப்பாற்கடல் வரை தரைகீழ் தடுப்பணை 48 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இது பாலாற்றில்தான் கட்டப்பட்டுள்ளது. நாங்கள் எந்தத் தடுப்பணையையும் பார்க்கவில்லை என்று சொன்னவர்களுக்கு இது பதிலாக இருக்கும்.

அடுத்ததாக, ஆற்காடு தொகுதிப் பிரச்சினைகள் பல இருக்கின்றன. அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் குறிப்பிட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். 2010–ல் நகர மன்றத் தலைவராக இருந்தபோது அவரிடம் இந்தக் கோரிக்கையை வைத்திருந்தோம். DPR ready செய்து அது cancel ஆகிவிட்டது. Town நடுவில் மூன்று channels போகின்றன. அந்த channels சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளன. DPR தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சருடைய பார்வையில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, இந்த நிதியாண்டிலேயே

அதைச் செய்துகொடுத்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன். அதை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும் இணைந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அது நகராட்சி உள்ளேதான் செல்கிறது. அவரும் ஒருங்கிணைந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், திமிரி ஒன்றியத்தில் புங்கனூர்–வெள்ளக்குளம் பகுதியில் நீர்த்தேக்கத் தடுப்பணையும், சொரையூர் கமலநதியின் குறுக்கே நீர்த்தேக்கத் தடுப்பணையும், கணியம்பாடி ஒன்றியம், நாகநதியின் குறுக்கே நீர்தேக்கத் தடுப்பணையும், வாழப்பந்தல் மற்றும் தோணிப்பட்டு பகுதிகளில் தடுப்பணையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

“ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும்
ஆதவன் மறைவதில்லை,
ஆணைகள் இட்டே யார் தடுத்தாலும்,
அலை கடல் ஓய்வதில்லை”

என்பதைப்போல ஆயிரத்திற்கும் எங்கள் அன்பான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் ஒரு தொடர்பு உண்டு. 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உயர் கல்வி உதவித் தொகை திட்டத்தைக் கொண்டு வந்தவர் எங்களுடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, ஆயிரம் தடுப்பணைகளும், கதவணைகளும் அமைப்பதற்கான திட்டத்தைக் கொண்டு வந்தவர் எங்களுடைய முதல்வர் அவர்கள். செப்டம்பர் 15, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் முதல் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என ஆணையிட்டவர் எங்களுடைய முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காக பாடுபடும் நீங்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகள் பூரண நலத்துடன் வாழ வேண்டுமென்று தாய்மார்கள் வாழ்த்துகிறார்கள். சூரியனை நம்பி வாழ்வது மண்ணில் பயிர்கள் மட்டுமல்ல, உங்களை நம்பியிருக்கும் எங்கள் உயிரும்தான் எனக் கூறி, இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

ஆற்காடு புறவழிச்சாலை மற்றும் ஆற்காடு நகரத்தில் இருந்து ஆரணி வழியாக செல்கின்ற பேருந்துகள் அனைத்தும் பஜார் வீதி வழியாக இயங்கி அதிக அளவில் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்துகின்றன. எனவே, 12 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள ஆற்காடு நகரத்திலிருந்து ஆரணியை இணைக்கும் புறவழிச்சாலை அமைக்கும் திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்த வேண்டும்.

ஆற்காடு நகரப் பகுதியில் கிளைவ்பஜார் ஏரியைச் சுத்தம் செய்து கழிவு நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மாசடைந்த பாலாற்றை பொதுப் பணித் துறைமூலம் நேரடியாக பார்வையிட்டு ஒரு சிறந்த தீர்வினைக் காணவேண்டும். புதிதாகக் கால்வாய்கள் அமைத்து மக்கள் குறைகளைத் தீர்க்க வேண்டும்.

ஆற்காடு நகரத்தில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனைக் கட்டடம் சிறிது, சிறிதாக விரிசல் ஏற்பட்டு நோயாளிகள் அச்சம்கொள்ளும் வகையில் உள்ளது. எனவே, ஆற்காடு நகரத்தைச் சுற்றியுள்ள சுமார் 50 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் ஆற்காடு அரசு கண் மருத்துவமனையின் பின்னுள்ள காலியிடத்தில் Multi Speciality Hospital ஒன்று அமைக்க அரசு உதவிட வேண்டும்.

ஆற்காடு நகரத்தில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் போக்குவரத்து பணிமனை அமைந்துள்ள இடத்தில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும்.

ஆற்காடு தொகுதி, திமிரி மேற்கு ஒன்றியம், புங்கனூர் ஊராட்சிக்குட்பட்ட வெள்ளைக்குளம் பகுதியில் புதியதாக நீர்த் தேக்கத் தடுப்பணை ஒன்று அமைக்க வேண்டும்.

ஆற்காடு தொகுதிக்கு ஓர் அரசு கல்லூரி அமைக்க வேண்டும். தொகுதி மக்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்தித் தர வேண்டும். கணியம்பாடி ஒன்றியம், நஞ்சுகொண்டபுரம் பகுதியில் ஒரு நீர்த் தேக்கத் தடுப்பணை அமைக்க வேண்டும்.

ஆற்காடு தொகுதி, திமிரி கிழக்கு ஒன்றியம், சொரையூர் பகுதியில் கமண்டலநாக நதியின் குறுக்கே நீர்த் தேக்கத் தடுப்பணையும், பென்னகர் பாரிமங்கலம் ஆற்றின் குறுக்கே நீர்த்

2023 மார்ச் 29] [திரு. J.L. ஈஸ்வரப்பன்]

தேக்கத் தடுப்பணையும் அமைக்க வேண்டும். கலவை தாலுகாவில் அமைந்துள்ள கலவை ஏரியைத் தூர்வாரும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர் வளம் மற்றும் தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பங்கேற்று பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கு எனது வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நேற்று திடீரென ஏற்பட்ட சூறைக் காற்று, கன மழையின் காரணமாக, அங்கே பயிரிடப்பட்டுள்ள வாழை மரங்கள் முழுவதுமாக, குலை தள்ளுகின்ற நேரத்தில், சாய்ந்து விழுந்திருக்கின்றன. அதற்கு நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வறட்சியான பகுதிகளுக்கு பாசனமும், குடிநீரும் வழங்கும் வகையில் சிற்றாறு பட்டணங்கால்வாய் திட்டம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் உருவாக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. சிற்றாறு அணை–II மற்றும் சிற்றாறு அணை–I ஆகிய அணைகள் இத்திட்டத்திற்காகவே கட்டப்பட்டன. சிற்றாறு பட்டணங்கால்வாயின் பிரதான கால்வாயிலிருந்து 200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு, 109 மதகுகள் வழியாக பாசனத்திற்காக நீர் விநியோகிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பட்டணங்கால்வாய்த் திட்டத்தைப் பெருந்தலைவர்

காமராஜர் திறந்து வைத்தார் என்று சொன்னீர்கள். ஆனால், பட்டணங்கால்வாய்க்கு ஊற்றுக் கால்வாயான, சிற்றாறு–I மற்றும் சிற்றாறு–II ஆகிய அணைகளைக் கட்டி தண்ணீர் கொடுத்தவர் கலைஞர் அவர்கள். அதனை ஏன் நீங்கள் சொல்லவில்லை?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிற்றாறு பட்டணங்கால்வாய் முழுவதுமாகத் தூர்வாராமல், அந்தப் பகுதிகளிலெல்லாம் இரண்டு அடி, மூன்று அடி என்கிற அளவில் மண் இருக்கிறது. 2021 ஆம் ஆண்டு, நவம்பர் 12 ஆம் தேதி மிகப் பெருமழை வந்தது. நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து அந்த இடத்தையெல்லாம் பார்வையிட்டார். அந்த இடத்தில் சிற்றாறு பட்டணங்கால்வாயைத் தூர்வாருவதற்கு, கடந்த 2021 ஆம் ஆண்டு 42 கோடி ரூபாய் நிதியொதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த நிதியை ஒதுக்காத காரணத்தினால் அங்கு பணிகள் நடைபெறவில்லை. ஆனால், வெள்ளச் சேதத்தை முற்றிலுமாகத் தடுப்பதற்கு 70 கோடி ரூபாய் நிதி அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அந்த வேலையும் தொடர்ச்சியாக நடைபெறவில்லை. ஏன் அவர்கள் அந்த வேலையைச் செய்யவில்லை என்று அதிகாரிகளிடம் கேட்டால், இன்றைக்கு இருக்கக்கூடிய அந்த current rate, அதாவது இன்றைக்கு இருக்கக்கூடிய விலைக்கு எங்களால் first call, second call, third call இப்படி tender அறிவிக்கப்பட்டும், அந்த tender–ஐ எடுப்பதற்கு ஆட்கள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நீங்கள் ஒரு திட்டத்திற்கு நிதியை ஒதுக்குகின்றீர்கள். ஆனால், அங்கே பணிகள் நடப்பதற்கு, வேகப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: எல்லா ஊர்களுக்கும் contractor போகிறார்கள். உங்கள் ஊருக்கு contractor–ஐ போங்கள் என்று சொன்னால், போகமாட்டேன் என்கிறார்கள். ஏனென்றால், உங்கள் ஊரில் contract–காரர்கள் கல் போடுகிறார்கள் என்றால், அதற்கு ஆயிரம் கேள்விகளைக் கேட்கிறார்கள். இதனை

contractor ஆல் பொறுக்க முடியவில்லை. இரண்டாவது ஓர் இடத்தில் கல் போட்டால் அங்கே அதனைக் கடல் அரித்துவிடும். அந்த ஊர்க்காரர்கள் வந்து கல் போடக் கூடாது என்பார்கள். ஆகவே, யாராவது contract எடுத்துவிட்டால், மீண்டு வருவது மிகவும் கஷ்டமாக இருக்கும். அதனால் contractor–களுக்கும் மக்கள் கொஞ்சம் சாதகமாக நடக்க வேண்டும். அங்கு வருகிற contractor–களை விரட்டிவிட்டால் எப்படி அவர்கள் வருவார்கள்?

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சிற்றாறு பட்டணங்கால்வாயில் முழுவதுமாக மண் விழுந்து, தண்ணீர் கடைநிலையில் உள்ள விவசாயிகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே Superintending Engineer திருமதி பத்மா உள்ளிட்ட அதிகாரிகளெல்லாம் நேரடியாக வந்து பார்த்தார்கள். அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அந்த அளவிற்கு ஒரு மோசமான சூழ்நிலை அங்கு இருக்கிறது. விவசாயிகளுக்கு வாழை மரத்தைத் தவிர பயிரிடுவதற்கு வேறு வாய்ப்பு இல்லை. அந்த வாழை மரங்களெல்லாம் தண்ணீர் இல்லாமல், முற்றிலும் அழிந்துவிடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. சிற்றாறு பட்டணங்கால்வாயில் முழுவதும் JCB Hitachi இயந்திரங்களைக் கொண்டு அதிலுள்ள மண்ணை எடுத்தால் side–ல் உள்ள பக்கச் சுவர்களெல்லாம் உடைந்துவிடுகின்றன. ஆகவே, முடிந்த அளவிற்கு manpower, அதாவது, ஆட்களை வைத்து வேலை செய்ய வேண்டும். இதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டால், அதற்காக வேலை செய்யும் ஆட்களுக்குக் கூலி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அங்குள்ள சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அந்த சிற்றாறு பட்டணங்கால்வாயை முழுவதுமாகத் தூர்வாரி, பக்கச் சுவரைக் கட்டி, அங்கிருக்கக்கூடிய துருப்பிடித்த shutter–களையெல்லாம் மாற்றி கடைநிலை வரப்புகள், அந்த மடைப் பகுதிகளையெல்லாம் சீர்செய்து, தண்ணீர் கொண்டுவருவதற்கு நிதியொதுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் இந்த அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு இப்போதே பதில் சொல்லி முடித்துவிடுகிறேன். சிற்றாறு பட்டணங்கால்வாய் கட்டி கிட்டத்தட்ட 79 வருடங்களாகிவிட்டன. சில இடங்களில் நீங்களே பார்த்தீர்களென்றால் deep cutting இருக்கும். அந்த deep cutting இருக்கின்ற இடங்களில் உங்கள் ஊரில் உள்ள மண்ணின் தன்மைக்கு அது சரிந்து, சரிந்து விழுகின்றது; maintain செய்ய முடியவில்லை. இரண்டாவது, உங்களுடைய geographical அமைப்பே சரிவாகத்தான் இருக்கும். அதன் விளைவாக எல்லாமே கீழே விழுந்துவிடுகின்றன. இருந்தாலும் சரி, வேலை செய்யலாம் என்றால், நீங்கள் 10, 20 நாட்களுக்குத் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதால், தண்ணீர் திறந்துவிட்டதால் வேலை நடக்காமல் நின்றுவிட்டது. அதற்கு என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நெய்யாறு பாசனத் திட்டம் குறித்து ஏற்கெனவே 2021-ல் கொள்கை விளக்கக் குறிப்பில் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறீர்கள். நெய்யாறு பாசனத் திட்டத்தின்கீழ் 2004 ஆம் ஆண்டில் நெய்யாறு இடதுகரை கால்வாயில் தண்ணீர் விடுவது முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு, 2019-ல் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், கேரள மாநில முதலமைச்சர் அவர்களும் இதுகுறித்து நேரடியாகப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு திரும்பவும், 17-9-2021 அன்று, அப்போது covid பிரச்சினை இருந்ததனால், உயர்மட்ட அதிகாரிகள் video conference மூலம் பேசியிருப்பதாகப் பத்திரிகைகளின்மூலம் தகவல் வந்தது. 2004 ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்போது கிட்டத்தட்ட 19 ஆண்டுகளாகிவிட்டன. ஆனால், நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்குத் தண்ணீர் வராமல் இருக்கிறது. ஏற்கெனவே, உச்ச நீதிமன்றத்தில் இதுகுறித்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்கைத் தமிழக அரசில் முறைப்படி follow செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த நெய்யாறு இடதுகரை கால்வாய் இன்றைக்குப் பாலைவனமாக இருக்கிறது.

அது விளையாடக்கூடிய இடமாக மாறிப் போய்விட்டது. அங்கு பெரிய பெரிய மரங்கள், 80 அடி உயரம் இருக்கக்கூடிய மண் சரிந்து, waste, கழிவுகளெல்லாம் கொட்டப்பட்டு நிரம்பியிருக்கிறது. அந்தக் கால்வாயைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு நிதியொதுக்கி, போர்க்கால அடிப்படையில் அதில் தண்ணீர் கொண்டு வர வேண்டும். இன்றைக்கு மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் மிகவும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். இந்தச் சமயத்தைப் பயன்படுத்தி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் முழுவதுமாகத் தண்ணீர் கொண்டுவருவதற்கான நடவடிக்கையையும், அதேபோல், அந்தக் கால்வாயை முழுமையாகத் தூர்வாரி செப்பனிடவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களும், நெருக்கமாக இருப்பதைவிட கலைஞர் அவர்கள், அன்றைய மாண்புமிகு கேரள முதலமைச்சர் நாயனார் அவர்களிடம் மிக நெருக்கமாக இருந்தார்கள். மாண்புமிகு திரு. அச்சுதானந்தன் அவர்களிடமும் மிக நெருக்கமாக இருந்தார்கள். ஆனாலும், நெய்யாறு இடதுகரையில் பிரச்சினை என்ன என்பதைப் பற்றி நான் திரும்பத் திரும்ப பேசிப் பழக்கப்பட்டவன். பிரிவினையின்போது, சட்டப்படி அன்று பேசியபடி திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து நமக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும். இதில் எப்போது break வந்தது என்றால், அவர்கள் நாங்கள் கொடுக்கின்ற தண்ணீருக்கு நீங்கள் விலை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். உலகத்திலேயே எந்த நாட்டிலும் தண்ணீருக்குப் பணம் வாங்கியது கிடையாது. அங்குதான் பேச்சுவார்த்தையில் break ஏற்பட்டது. அதன் விளைவாகத்தான் நெய்யாற்றில் தண்ணீர் வருவது நின்றுவிட்டது. இன்றும்கூட அந்தப் பேச்சுவார்த்தை தொடராததற்குக் காரணம் they are demanding money for water; it is not fair. That is the problem.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் ஒரு முக்கியமான பிரச்சினை. கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு வழிச் சாலைகள் இல்லை. அங்குள்ள பூகோள அமைப்பின்படி சாலைகளனைத்தும் குறுகலாக உள்ளன. மேலும், மழை அதிகம் பெய்து வருவதால் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. இந்நிலையில் கேரள மாநிலத்திற்கு அதிகனரக வாகனங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிக அளவில் கனிம வளங்களான கல், ஜல்லி, M-sand போன்றவை பெருமளவில் கொண்டு செல்லப்படுகின்றன. கேரளாவில் குவாரிகள் தடை செய்யப்பட்டதால் தேவை அதிகமாக உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதிகளாகிய நெல்லை, குமரி மாவட்டங்கள் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக உள்ளதாலும், பொதுமக்கள் மத்தியில் கேரளாவிற்கு கொண்டு செல்லப்படுவது மிகுந்த எதிர்ப்பை ஏற்படுத்தி வருகின்றன. சாலைகளில் அதிகனரக வாகனங்களில் பாரம் ஏற்றிச் செல்வதால் சாலைகள் பழுதடைவதும், விபத்துகள் நிகழ்வதும் அன்றாடம் நடக்கின்றன. அதேநேரத்தில் குமரி மாவட்டத்தில் பல வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதாலும் கல், மணல், M-sand போன்றவை தேவைப்படுகின்றன. எனவே, இந்த இக்கட்டான சூழலைக் கருத்தில்கொண்டு, அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து, ஆற்று மணல் கேரளாவிற்கு கொண்டு செல்லப்படுவதைத் தடை செய்யவும், குமரி மாவட்டத்தின் தேவைகளுக்கு, விதிமுறைகளுக்குட்பட்டு குவாரிகள் இயங்க அனுமதிக்குமாறும் பணிவுடன் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடற்கரை மணலில் கிடைக்கக்கூடிய கனிமங்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்டக் கடலோரக் கிராமங்கள், தமிழ்நாட்டில் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்குக் கடல் சீற்றத்தாலும், கடல் அரிப்பினாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு, மக்களின் குடியிருப்புகளும் வாழ்வாதாரமும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பாதிப்புகளைத் தடுக்கும் வகையில், கடலரிப்புத் தடுப்புச் சுவர் மற்றும் தூண்டில் வளைவுகளை அமைத்து தமிழ்நாடு அரசு மக்களைப் பாதுகாத்துவரும் சூழலில், மேற்படி மீனவக் கிராம மக்கள் கடற்கரையிலிருந்து கிடைக்கும் கனிமங்களைப் பிரித்தெடுக்கிறோம் என்று கூறி, தினசரி பல்லாயிரக்கணக்கான டன் கடல் மணலை அள்ளிச் செல்லும்போது, மிகக் குறுகிய நிலப்பரப்பில் மிக அதிகமான அளவில் கட்டப்பட்டுள்ள மீனவர்களின் குடியிருப்புகள் மீண்டும் கடல் சீற்றத்தால் மிகுந்த பாதிப்புக்குள்ளாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. 10 நிமிடங்களுக்கும் மேல் ஆகிவிட்டன. (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மேலும், இந்தியாவின் மிக அதிகப்படியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைக் கொண்ட மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் ஆகும். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள IREL மணல் ஆலையின் கதிரியக்கத்திற்குட்படுத்தப்பட்டு, உபரியாக வரும் மணலை எவ்வித பாதுகாப்புமின்றி பொதுவெளியில் கொட்டுவதாலும், மேற்படி ஆலையின் கழிவுநீர் கடலில் கலப்பதாலும் மாசு ஏற்பட்டு, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, ஒட்டுமொத்த மக்களின் வாழ்வாதாரத்திற்கும் சுகாதாரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில், குமரி மாவட்ட கடலோரங்களிலிருந்து கனிம மணலை எடுப்பதற்கான முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஒரேயொரு விஷயம் மட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு நீர் ஆதாரமாக விளங்கும் தாமிரபரணி ஆற்றைச் சுத்தப்படுத்தி, தூர்வாரி இரண்டு பக்கங்களிலுமுள்ள கருவேல மரங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுக்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இவ்வளவு நேரம் பேச அனுமதி அளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை அலுவல்களை 2 மணியுடன் முடித்துக்கொண்டு, பிற்பகல் 4 மணிக்கு மீண்டும் துவக்க வேண்டியுள்ளதால், பேசவிருப்பவர்களுக்கு 5 நிமிடங்கள் நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 5 நிமிடங்களுக்குள் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் உரையை முடித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், 2 அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டியிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அதை மனதிற்கொண்டு, தங்களது உரையினை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்ற திருக்குறளுக்கேற்ப, நாளெல்லாம் உழைத்து, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்ற வேண்டுமென்று அயராது உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்குப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணச் சலுகை தந்தீர்; அது மங்கையரின் வாழ்வுப் பயிர் தழைக்க வந்த மடைமாற்றப் பாசனமாய் விளங்கக் காண்கின்றேன். பெண்களுக்கு 1,000/– ரூபாய் உரிமைத் தொகை; அது உரிமைத் தொகை மட்டுமல்ல, மாதர் குலத்தின் மதிப்பை உயர்த்த வந்த பெருமைத் தொகை. பள்ளிச் சிறுவர்கள் பல்லாயிரம் பேருக்கு காலைச் சிற்றுண்டியை அன்றாடம் அள்ளி வழங்குகின்ற அன்புக் கரங்கள் உங்கள் அமுதத் திருக்கரங்கள். இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, 5 சவரன் நகைக் கடன் தள்ளுபடி, நான் முதல்வன் திட்டம், விவசாயிகளுக்கு வங்கிக் கடன் தள்ளுபடி, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், மீண்டும் மஞ்சப்பை, புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என தினம் ஒரு திட்டத்தைப் புகுத்தி, தமிழகத்தை வளர்ச்சிப் பாதையிலே வழிநடத்தும் மாண்புமிகு

முதல்வர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கங்களை இந்தச் சபையின் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்"

என்ற திருவள்ளுவனின் கூற்றிற்கேற்ப. விளையாட்டுத் துறையில் எழுச்சியாகப் பாடுபடும் இளைஞர் தளபதியே, இளைஞர் நலன் காக்கும் இளைஞரே, அன்றைய முதல்வர் தலைவர் கலைஞரின் அருமைப் பேரரே, இன்றைய முதல்வரின் இன்பப் புதல்வரே, உங்களை உளமார வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் கலைஞரின் தம்பியே, கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் தளபதியார் தலைமையில் நீர்வளத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, சிறப்பாகச் செயல்பட்டுவரும் கழகப் பொதுச் செயலாளரே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, உங்களுக்கு எனது அன்பான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கக்கூடிய கும்மிடிப்பூண்டி தொகுதி மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

நீரின்றி அமையாது உலகு. இரண்டு ஆண்டுக் காலமாக நல்ல மழை பெய்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியிலே இன்றைக்கு நல்ல நெல் விவசாயம் நடந்திருக்கின்றது. அதேபோல, ஆங்காங்கே கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கெல்லாம் நல்ல விலை கிடைத்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

தமிழகம் முழுவதுமுள்ள ஏரிகளைத் தூர் வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏரிகளைத் தூர் வாரினால் அவற்றிலிருந்து எடுக்கப்படும் மண் பொது மக்களுக்கும், அரசின் கட்டுமானப் பணிகளுக்கும்

பயன்படும் என்பதும், அதேநேரத்தில் ஆக்கிரமிப்புகளைக் குறைக்கலாம் என்பதும், நீரை மிக அதிகமாகச் சேமித்து, நிலத்தடி நீரை அதிகப்படுத்துவதற்குப் பயன்படும் என்பதால் இந்தத் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்பதை இதன் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சைக்கு அடுத்து திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்கள் அதிகமாக நெல் விவசாயம் செய்யக்கூடிய பகுதிகள். அதுமட்டுமல்லாது, அதிகமாக ஏரிகள் இருக்கக்கூடிய மாவட்டங்கள் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள். எப்படி தஞ்சை பகுதிகளில் கால்வாய்களையெல்லாம் சீர்செய்து, ஏரிகளையெல்லாம் சீர் செய்கின்றீர்களோ, அதேபோல, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் கால்வாய்களையெல்லாம் சீர்செய்து, ஏரிகளைத் தூர்வாரி நீராதாரத்தை அதிகப்படுத்துவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். நீர் சேகரிப்பு மற்றும் நீர்ப்பாசனம் முறைப்படுத்தப்பட்டால் அருகிலுள்ள சென்னை மாநகரத்திற்குள் வெள்ளம் புகுவது தடுக்கப்படும். அதேபோல, சென்னை மாநகரத்திற்கும் நிலத்தடி நீர் உயருமேயானால், அது சென்னையினுடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழியாக இருக்குமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியிலே கொசஸ்தலையாறு, ஆரணியாறு போன்ற இரண்டு ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகளிலே இடங்கள் ஒதுக்கி தேவைக்கேற்ப தடுப்பணைகளை அமைத்துத் தர வேண்டும். அதேபோல, அந்தத் தடுப்பணைகளில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் அந்த நீரை பூமிக்குள்ளே செலுத்துவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்தோமேயானால், நிச்சயமாக நிலத்தடி நீர் உயர்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. அதுமட்டுமல்லாது, எங்களுடைய திருவள்ளூர் மாவட்டம், கடற்கரையோர மாவட்டமாக இருப்பதால் அங்கே கடல்நீர் உள்ளே புகுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. இப்போது உவர்நீர் ஆங்காங்கே சில கிராமங்களில் வந்து கொண்டிருக்கின்றது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் இது உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

2023 மார்ச் 29] [திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்]

எங்களுடைய கும்மிடிப்பூண்டி தொகுதியில் கண்ணன்கோட்டை, தேர்வாய்கண்டிகை ஏரி புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஏரிக்கு கிருஷ்ணா நதி கால்வாய்மூலம் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய 4 மாதங்களும், ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய 4 மாதங்களும் என 8 மாதங்கள் தண்ணீர் வரத்து வந்துகொண்டிருக்கின்றது. அந்த ½ டி.எம்.சி. தண்ணீர் கொள்ளளவு முழுமையடைந்தவுடன் கலங்கல் வழியாக ஏறக்குறைய 8 மாதங்கள் மட்டுமல்லாமல், எஞ்சிய 4 மாதங்கள் என 12 மாதங்களும் ஏறக்குறைய 1 டி.எம்.சி. அடி தண்ணீர் வீணாகி, நேரடியாகக் கடலுக்குச் சென்றடைகின்றது. அதற்கு ஓர் ஆய்வு செய்து, ஆரணியாற்றில் விட்டாலும் 40 ஏரிகளுக்குச் செல்லும் அல்லது தடுப்பணை அமைத்து நேரடியாக ஏரிகளுக்கு அனுப்பி வைத்தாலும் கிட்டத்தட்ட 60 ஏரிகள் பயனடையும். ஆக, நிலத்தடி நீரும் உயரும். அதேநேரத்தில் குடிநீர் பிரச்சினையையும் தீர்க்கலாம் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு தகவலாக இதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் ஏரி பராமரிப்புப் பணிகளை செய்து முடித்துவிட்டார்கள். ஆனால், அதிலே நிறைய பணிகளை முடிக்காமலே விட்டுவிட்டிருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் மீண்டும் ஆய்வு செய்து பணிகளை மேற்கொள்ள வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசும்போது குடிமராமத்துத் திட்டம் பற்றிச் சொன்னார்கள். நான் ஒரு விவசாயி. எங்கள் ஊரிலும் குடிமராமத்து வேலைகள் நடந்தன. ஆனால், அதிலே ஏரி வேலைகள் நடந்ததா என்றால், நிச்சயமாக இல்லை. ** கூடி ஒரு மராமத்தை அங்கே நடத்தினார்களே தவிர, குடிமராமத்து என்பது நடைபெறவே இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) இது உண்மை. இது உண்மை. நான் ஒரு விவசாயி. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் யாரையும் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *எங்கள் ஊர் ஏரியிலே நடந்ததைத்தான் நான் பேசுகின்றேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இல்லை, அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவர் பொதுவாகத்தான் சொன்னார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். யாராவது குறிப்பிட்டு, ஒருவர்மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *குடிமராமத்து என்பது ஊர்க்கூடி செய்ய வேண்டிய பணி. ஆனால், ஒருவர்தான் அந்த வேலையை செய்தார். அதையும் சரியாக. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உங்களுடைய தொகுதிப் பிரச்சினைகள் குறித்து பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *அதைத்தான், நான் பேசிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு துறை அமைச்சர் அவர்கள், அதனை ஆய்வு செய்து அந்தப் பணிகள் சரியாக நடந்திருக்கின்றனவா என்பதற்குத் தீர்வுகாண வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளின்மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நேரமாகிவிட்டது, உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *தொழிலாளர் நலத் துறை. எங்கள் கும்மிடிப்பூண்டி தொகுதியில் தொழிற்சாலைகள் அதிகம். (குறுக்கீடுகள்) அதனடிப்படையில். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னார். (குறுக்கீடுகள்) அதை நாங்கள் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, திருத்திக்கொள்கிறோம். (குறுக்கீடு) அதை நாங்கள் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, திருத்திக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

2023 மார்ச் 29]

*__மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அந்தக் கட்சியின் பெயரைச் சொன்னதைத் தவிர்த்துவிட வேண்டும். தவறு நடந்திருக்கிறது என்பதை மட்டும் பதிவு செய்துகொள்ளுங்கள். ஆனால், கட்சியின் பெயரை சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அது, கட்சியின் பெயர், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: கும்மிடிப்பூண்டி தொகுதியிலே (குறுக்கீடுகள்) தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** என்று அவர் பேசியிருந்தால், அதுவும் நீக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: தொழிற்சாலைகள் நிறைந்த தொகுதியாக கும்மிடிப்பூண்டி தொகுதி இருக்கின்றது. இங்கே அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுவதை உரிய அலுவலர்களால் உறுதி செய்யப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு வகையான தொழிற்சாலைகளில் பணித் தன்மைக்கேற்ப அவ்வப்போது அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை பல நிறுவனங்கள் முழுமையாக வழங்குவதில்லை. பெரும்பாலான தொழிலாளர்களுக்கு அரசு உத்தரவுகளின் விவரங்கள் தெரியாததால் பாதிக்கப்படுகின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனவே, அரசு உத்தரவின்படி குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுகிறதா என்பதை அதிகாரம் பெற்ற அரசு அலுவலர்கள் 6 மாதங்களுக்கொரு முறை தொழிற்சாலைகளை ஆய்வு செய்து, முழுமையான சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தொழிற்சாலைகள் அதிகமாக

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கக்கூடிய கும்மிடிப்பூண்டி பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, ESI Hospital அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். நீங்கள் பேசியதாகக் கருதி, அவற்றை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: கும்மிடிப்பூண்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இயங்கிவரும் தனியார் தொழிற்சாலைகளில் பல ஆண்டுக் காலமாக தற்காலிகத் தொழிலாளர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும். நேரமில்லை.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: அவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்குவதற்கு (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுதித் தாருங்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும், ஒரு வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: கும்மிடிப்பூண்டி அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கப்பட்டு போக்குவரத்துத் துறைக்கு enter upon permission certificate-கூட கொடுத்துவிட்டார்கள். நமது ஆட்சியில் வந்தது என்பதற்காக சென்ற பத்தாண்டுக் காலம் அது கிடப்பில் போடப்பட்டு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் பார்த்து சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள். (குறுக்கீடு) நன்றி. (குறுக்கீடு) நன்றிதானே! நான் பதிவு செய்துவிடுகிறேன். (குறுக்கீடு) நன்றியையும் சேர்த்து பதிவு செய்துவிடுகிறேன், நன்றி. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: இந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு

2023 மார்ச் 29] [திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்]

அமைச்சர் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக்கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டையில் தனியார் கட்டடத்தில் மாவட்ட உரிமையியல், குற்றவியல் நீதிமன்றம், செயல்பட்டு வருகிறது. புதிய அரசு கட்டடங்கள் கட்ட இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, கட்டடம் கட்ட ஆவன செய்ய வேண்டும்.

எல்லாபுரம் ஒன்றியம், மாளந்தூர் ஊராட்சி, ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்திட வேண்டும். திருக்கண்டலம் ஊராட்சி, கொசஸ்தலையாற்றின் குறுக்கே பூச்சி, அத்திப்பேடு திருக்கண்டலம் இடையே தரைப்பாலம் அமைத்திட வேண்டும்.

கும்மிடிப்பூண்டி தொகுதி, சிப்காட் முதல் ஆவடி, கும்மிடிப்பூண்டி மற்றும் திருவள்ளூர் பகுதிகளுக்குப் புதிய வழித்தட பேருந்துகள் இயக்கிட வேண்டும். கும்மிடிப்பூண்டி–பிராட்வே இடையே சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கும்மிடிப்பூண்டியில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க வேண்டும்.

கும்மிடிப்பூண்டி தொகுதி, அரசு நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தர வேண்டும். கவரப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும். கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆத்துப்பாக்கம், திருக்கண்டலம் பாலவாக்கம், தண்டலம் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலை பள்ளிகளாகவும், அயநல்லூர், ஆரம்பாக்கம், நொச்சிக்குப்பம், நம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்த வேண்டும்.

கண்ணன்கோட்டை–தேர்வாய்கண்டிகை ஏரியில் அதிநவீன தடுப்பணைகள் கட்ட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள். சரியாக ஐந்து நிமிடங்கள்; time-ஐ பார்த்துக்கொள்ளுங்கள். பிற்பகல் 12–54 மணிக்கு உரையை முடித்துவிட வேண்டும்.

பிற்பகல் 12—50

***திரு. மா. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே தினத்திற்கு விடுமுறை, மே தினப் பூங்கா அமைத்து மே தினத்திற்குப் பெருமை சேர்த்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிதான். நீர்வளத் துறை மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கைகளில் பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஒன்றிய அரசு தொழிலாளர்களின் நலனைப் பறிக்கும் வகையில் தொழிலாளர்களுக்கு விரோதமாக நிறைவேற்றியுள்ள 4 சட்டத் தொகுப்புகளைத் தமிழ்நாட்டில் அமல்படுத்தக் கூடாது என வலியுறுத்துகிறோம். தொழிலாளர் நல வாரியங்களுக்கு முத்தரப்புக் குழுக்களை அமைத்து, 17 தொழில்வாரியான நல வாரியங்களுக்குத் தொழிற்சங்கங்கள் பரிந்துரை செய்த பிரதிநிதிகளை உடனே நியமனம் செய்ய வேண்டுகிறேன். 18 வகையான நல வாரியங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, திட்டங்களை அறிவித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் விவரங்களைப் பதிவு செய்து, அவர்களின் ஊதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும். தமிழ்நாட்டில் ஒருபுறம் ஆலைகள் அதிகரிப்பதும், மறுபுறம் வேலைவாய்ப்புகள் சுருங்குவதும் அதிகரித்துள்ளன. நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைகிறது; நிரந்தரமில்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கை உயர்கிறது. தொழிலாளர்கள் கண்ணியமாக வாழக்கூடிய வகையில் ஊதியம் மற்றும் சட்டப் பாதுகாப்பைத் தமிழ்நாடு அரசு உறுதி செய்திட வேண்டும். குறைந்தபட்ச ஊதியம் மாதம் ரூ.26,000/– என நிர்ணயிக்க வேண்டுகிறேன். பொதுத் துறை நிறுவனங்களில் எவ்வித பணி மற்றும் சட்டப் பாதுகாப்பு இல்லாமல், outsourcing மூலம் தினக்கூலிகளாக தொழிலாளர்கள் பணிபுரிவது சமூக நீதிக்கு விரோதமானதாகும். இது அடுத்த தலைமுறை தொழிலாளர்களுக்குக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே, அரசாணை எண்கள் 152, 139 மற்றும் 115 ஆகியவற்றை நீக்கம் செய்திட வேண்டும்.

தமிழகத்தில் நடைபெறுவது கூலிக்கான போராட்டம் அல்ல; சங்கம் சேரும் உரிமை; கூட்டுப்பேர உரிமை; தொழிற்சங்க உரிமைக்கானதாகும். சங்கம் அமைக்கப்படுவதற்கு முதலாளிகள் மறுப்பதும், ஏற்கெனவே அமைக்கப்பட்ட சங்கத்தை ஏற்க மறுப்பதும், தொழிலாளர்கள் பழி வாங்கப்படுவதும், பணிமாற்றம்,

நீக்கம் செய்யப்படுவதற்கு எதிரான போராட்டங்களே கூடுதலாக நடந்து வருகின்றன. குறிப்பாக, Yamaha, NSK Bearings, Mentor Printing & Logistics Pvt. Ltd. போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தொழிலாளர் துறை அதிகாரிகளின் அறிவுரைகளை மதிப்பதில்லை. அரசு தொழிற்சங்க அங்கீகாரச் சட்டத்தை இயற்றி, தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும்.

அங்கன்வாடி, சத்துணவு, ASHA, மக்களைத் தேடி மருத்துவம் போன்றவற்றில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள், மனித வளக் குறியீட்டை மேம்படுத்தும் பணியை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு நியாயம் வழங்கிட வேண்டும். இ–சேவை மையத்தில் பணியாற்றும் ஊழியர்களின் வேலையைப் பறிக்கக் கூடாது. டாஸ்மாக் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்து, அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பாதுகாக்கவும், பொதுப் போக்குவரத்தைப் பலப்படுத்தவும் அரசு முனைப்பு காட்டிட வேண்டும். சென்னை மாநகரில் பேருந்துகள் இயக்கும் பணியைத் தனியாரிடம் ஒப்படைத்துவிடக் கூடாது. மின் வாரிய ஊழியர்களுக்கு 3 ஆண்டுகளுக்குமேல் வழங்கப்படாமல் உள்ள ஊதிய உயர்வை பேச்சுவார்த்தைமூலம் சுமுகத் தீர்வு கண்டு வழங்க வேண்டும். ஒப்பந்த முறையில் பணியாற்றுபவர்களைப் பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.

Swiggy, Zomato, Ola, Uber உள்ளிட்ட பல்வேறு பெயர்களில் இயங்கும் GIG ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சட்ட நடவடிக்கைகளை உறுதி செய்யும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும். ஆட்டோ தொழிலாளர்களுக்கு மீட்டர் கட்டணம் மாற்றியமைக்க வேண்டும்; அரசு செயலியை உருவாக்க வேண்டும். தேசிய வங்கிகளில் ஆட்டோ வாங்குவதற்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கிட வேண்டும். காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் அமைத்து, தொழிலாளர்களின் சுகாதாரத்தை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது, படகுகள் அபகரிக்கப்படுவது போன்றவை தொடர் கதையாக உள்ளன; இவை தடுக்கப்பட வேண்டும். தமிழக மீனவர்களின் நலன்களைப் பாதுகாத்திட வேண்டும். பீடித் தொழிலாளர்களுக்கு வீடு, படிப்பு உதவித் தொகை மற்றும் மருத்துவச் செலவு போன்றவற்றிற்கு செஸ் வரி விதிப்புமூலம்

பெறப்பட்ட நிதியினைப் பயன்படுத்த வேண்டும். உழைக்கும் பெண்களுக்குச் சலுகைக் கட்டணத்தில் தங்கும் விடுதிகள் சிப்காட் பகுதியில் கட்டி திறக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் இரவு நேரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அதேபோன்று, இளம் ஆண் தொழிலாளர்களுக்கும் தங்கும் விடுதிகள் தனியாக கட்டித் தர வேண்டும். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு, குறைந்தபட்ச கூலி வழங்கிட வேண்டும். மூடப்பட்ட NTC ஆலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மருந்து விற்பனை பிரதிநிதிகளுக்கு 8 மணி நேர வேலையை உறுதிப்படுத்தி, குறைந்தபட்சக் கூலி வழங்குவதை உறுதி செய்திட வேண்டும். சுமைப் பணித் தொழிலாளர்கள் மற்றும் வீட்டு வேலை செய்யும் பெண்களுக்குத் தனி நல வாரியம் அமைத்திட வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்பந்த ஊழியர்களுக்குக் கூலியை உயர்த்திட வேண்டும். ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படியை உரிய நேரத்தில் வழங்கிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், முடித்துவிடுங்கள். நன்றி மட்டும் சொல்லுங்கள், போதும்.

திரு. மா. சின்னதுரை: மாநிலம் முழுவதும் பாசன ஏரிகள், குளங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நிறைய விஷயங்களைச் சொல்லிவிட்டீர்கள். தமிழ்நாடு முழுவதிலுமுள்ள தொழிலாளர்களுக்குத் தேவையான கருத்துகளையெல்லாம் சொல்லிவிட்டீர்கள். நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. மா. சின்னதுரை: காவிரி–வைகை–குண்டாறு–வைப்பாறு இணைப்புத் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டும். கந்தர்வகோட்டை தொகுதிக்குப் புதிதாக ஒரு கிளை ஆறு உருவாக்கினால், பொதுப் பணித் துறையின்கீழ் உள்ள 75 கண்மாய்களுக்கு நீர் பாய்ந்து, பல ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. புதிதாக ஒரு நீர்வழிப் பாதை அமைத்துத் தர வேண்டுமென அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். காவிரியில் கல்லணைக் கால்வாய் சீரமைப்புப் பணிகளைக் கண்காணிப்பதற்குத் தனியாக உயரதிகாரிகளை நியமித்திட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

2023 மார்ச் 29]

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Good. மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னதுரை போன்று சரியான நேரத்திற்கு உரையை முடியுங்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: நீர்வளம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டிலேயே மிக அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலமாகவும், உற்பத்தியில் இரண்டாவது பெரிய மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. சுமார் இரண்டு கோடி தொழிலாளர்கள் நேரடியாகவும், இரண்டு கோடி தொழிலாளர்கள் மறைமுகமாகவும் இவற்றிலே பணி செய்கிறார்கள். இவர்களுக்குக் கௌரவமான வாழ்க்கையைத் தரக்கூடிய சம்பளத்தை வழங்குவதை உறுதி செய்வதும், சமூகப் பாதுகாப்பு தருவதும் நமது அரசினுடைய இன்றியமையாத கடமையாகும். இந்தப் பணி சரிவர மேற்கொள்ளப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மாநில தொழிலாளர் நல வாரியம் உட்பட பல்வேறு முத்தரப்புக் குழுக்கள் உள்ளன. கடந்த 10 ஆண்டுகளாக இந்தக் குழுக்கள் அனைத்தும் கூட்டப்படாமல் இருந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாப்பதற்கான பல்வேறு கருத்துகள் இவற்றிலே முன்வைக்கப்பட்டன. அவற்றைப் பரிசீலிப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் உரிய முயற்சிகளை துறை எடுக்கும் என்று நம்புகிறேன்.

2 ஆண்டுகள், 480 நாட்கள் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமெனத் தமிழ்நாடு அரசின் நிரந்தர தகுதியளித்தல் சட்டம், 1982 கூறுகிறது. ஆனால், பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்நாள் முழுவதும் வேலை பார்த்தும் நிரந்தரம் செய்யப்படாமல் contract என்ற பெயராலும், outsourcing என்ற பெயராலும் தினக் கூலிகளாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர் நலத் துறை நடத்தும் நல வாரியங்களில் பணிபுரியும் தினக் கூலிகள்தான், பொங்கல், தீபாவளி போன்ற திருவிழாக்கள் ஏன் வருகின்றன என்று கவலைப்படுகிறார்கள். ஏனென்றால்,

அவர்களுக்கு விடுமுறை உண்டு; ஆனால் அந்த நாட்களுக்கு சம்பளம் இல்லை. அண்மையில் தமிழ்நாடு அரசு இடைநிலை மற்றும் கடைநிலைப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களை அதாவது 'C' and 'D' பணியாளர்களை இனி பணி நிரந்தரம் செய்யாமல் outsourcing மூலம் வேலைக்கு எடுப்பது குறித்து ஆய்வு செய்து, அறிக்கை தர ஆணை வெளியிட்டது. அறிக்கை கிடைப்பதற்கு முன்பாகவே நகர்ப்புர உள்ளாட்சி உள்ளிட்ட துறைகளில் அமலாக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் outsourcing முறையிலேயே நிரப்பப்படுகிறார்கள் அல்லது நிரந்தரப் பணிகளுக்கு மனிதர்களை வாடகைக்கு எடுத்துக்கொள்ளும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் இனி துப்புரவுப் பணிகளுக்குத் தொழிலாளர்கள் நியமனம் இல்லை. அவர்கள் யாரோ ஒரு முகவரை வாடகைக்குக் கொண்டு வந்து தருவார்கள். அவர்களுக்கு நிரந்தர ஊழியர்களுக்கான சம்பளம் இல்லை. மூன்றில் ஒரு பங்குகூட இல்லாத தொகையைத் தொழிலாளர் நலத் துறை குறைந்தபட்ச ஊதியமாக அறிவிக்கிறது. அந்தக் குறைந்தபட்ச ஊதியமும் இல்லை. அதைவிடக் குறைவாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஊதியம் நிர்ணயிக்கிறார். அதுவும் வழங்கப்படுவதில்லை. ஒப்பந்தத்தில் தொழிலாளிக்கு என்ன சம்பளம் என்று சொல்லப்பட்டிருக்கும். அந்தச் சம்பளத்தையும்கூட ஒப்பந்ததாரர் தர மாட்டார். கிராம ஊராட்சிகளில் மாதம் 30 நாட்களும், 10 மணி நேரம் வரை வேலை வாங்கிக் கொண்டு பகுதி நேரத் தொழிலாளர்கள் என்று மாதம் ரூ.2,500/– முதல் ரூ.7,000/– வரை துப்புரவுப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

ஒடிசா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் ஒப்பந்தத் தொழிலாளிகள் இல்லையென்று அந்த மாநில அரசுகள் முடிவெடுத்திருக்கின்றன. அதற்கு நேர் மாறாக நம்முடைய தொழிலாளர் நலத் துறை இன்றைக்கு முடிவெடுத்திருக்கிறது. இந்தியாவில் மிகக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்று ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. ILC முடிவுப்படி தொழிலாளர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான செலவு எவ்வளவு என சந்தைகளிலே விசாரித்து நிர்ணயிக்கவில்லை. மாறாக கண்மூடித்தனமாக 8 விழுக்காடு உயர்வு என தொழிலாளர் நலத் துறை முடிவு செய்கிறது. அந்த ஊதியத்தையும்

தராமல் வேலையளிப்பவர்கள் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் சென்று இழுத்தடிக்கிறார்கள். அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தைக்கூட செயலாக்க முடியாத நிலை இருப்பது வருத்தத்திற்குரியது.

மிக அதிகமான பஞ்சாலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதியத்தை நிர்ணயிப்பதற்காக அரசு நியமித்த சிறப்பு தொழில் நடுவர் மன்றம் 17 ஆண்டுகளாக தீர்ப்பு வழங்கவில்லை. இவர்களுக்குக் குறைந்தபட்ச கூலியையாவது நிர்ணயம் செய்யுங்கள் எனத் தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்தன. அரசு அமைத்த குழுவினாலும் 10 ஆண்டுகளுக்கு மேலாக குறைந்தபட்ச ஊதியம்கூட நிர்ணயிக்கப்படவில்லை. மாநில அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனங்களிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் தொழிலாளர் சட்டங்கள் அமலாக்கப்படுவதில்லை. இந்தச் சட்டமீறல்கள் செய்வதை அதிகாரிகள் பெருமிதமாகக் கருதுகிறார்கள். பலதனியார் ஆலைகளில் தர வேண்டிய சம்பளத்தை பல மாதங்களாக முதலாளிகள் தராமல் இருக்கிறார்கள். PF, ESI போன்ற அமைப்புகளுக்குத் தொழிலாளர்களிடம் ஊதியப் பிடித்தம் செய்தும்கூட, அவற்றைச் செலுத்த மறுக்கிறார்கள். பழி வாங்குவதற்காகவே பணி மாற்றம் செய்கிறார்கள். இவற்றையெல்லாம் தொழிலாளர் நலத் துறை கண்டுகொள்வதில்லை. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால், உடனே இது சட்ட விரோதம் எனத் தொழிலாளர் நலத் துறை notice கொடுக்கிறது. காவல் துறை அவர்களைக் கைது செய்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது முடித்துவிடுவார்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: தொழிலாளர் நலத் துறையின் அணுகுமுறை, தொழிலாளர்களுக்கு ஆதரவாக அமையவில்லை என்பதை வருத்தத்தோடு நான் இங்கே பதிவு செய்கிறேன். ஒன்றிய அரசினுடைய வேளாண் சட்டங்களை எதிர்த்து இந்தச் சட்டசபையில் நாம் தீர்மானம் நிறைவேற்றினோம். NEET தேர்விற்கு எதிராகத் தமிழ்நாடு அரசு தொய்வின்றி வாதாடுகிறது. அதேநேரத்தில் ஒன்றிய அரசு பெரு முதலாளிகளுக்கு ஆதரவாக தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் 44 சட்டங்களைச்

சுருக்கி, நான்கு சட்டத் தொகுப்புகளாக வெளியிட்டுள்ளது. ஒன்றிய ஆளுங்கட்சியின் தொழிற்சங்கமான BMS Union உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இதிலே இருக்கின்றன.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், போதும். (குறுக்கீடு) போதும்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: தமிழ்நாடு அரசு இயல்பாக சட்டத்தை எதிர்க்க வேண்டும். ஆனால், இந்தச் சட்டம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், இங்கே பாருங்கள். 1–10–க்கு முடிக்கிறேன். இன்னும் பேசவிருக்கிற இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தலா 5 நிமிடங்கள் என 10 நிமிடங்கள். (குறுக்கீடு) நன்றி, நன்றி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள். (குறுக்கீடு) 1–10–க்கு முடிக்கிறேன். ஒவ்வோர் அமைச்சரும் 25 நிமிடங்கள் பதில் சொல்வார்கள். அவை 2–00 மணிக்கு முடிகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.

***திரு. கே.எஸ். சரவணக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையும், முற்போக்குச் சமத்துவ இந்தியாவின் சிற்பியுமான அண்ணல் அம்பேத்கர், பகுத்தறிவு பகலவன் பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழகத்தின் நவீனகால சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரை வணங்குகிறேன்.

சமூக நீதியை உறுதி செய்வதற்கான தொலைநோக்குப் பார்வை கொண்ட திராவிட மாடல் ஆட்சியின் திராவிட நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், எங்களது இளைய கலைஞர் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஐபியார் ஆகியோரை வணங்குகிறேன். நான் சார்ந்த பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 மார்ச் 29] [திரு. கே.எஸ். சரவணக்குமார்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைகள் கட்டிய நவீன கரிகாலன் என்பது, தலைவர், நவீனகால சிற்பி கலைஞர் அவர்களையே சாரும். பெரும்பான்மையான அணைகள் நம்முடைய கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டன. தென்மாவட்ட மக்களின் நீர் தேவையினைப் பூர்த்தி செய்த, முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய Colonel John Pennycuick அவர்களுக்கு, அவர் பிறந்த மண்ணான லண்டன் மாநகரில் சிலை நிறுவிய திராவிட நாயகனுக்கு தென்மாவட்ட மக்களின் சார்பாக மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதையும் செய்வோம்; சொல்லாததையும் செய்வோம் என்று கூறியதைப்போல, தேர்தலில் அறிவிக்கப்படாத வாக்குறுதியை, மக்களின் தேவைகளை அறிந்து, எனது கோரிக்கையினை ஏற்று, பெரியகுளம் அருகில் முருகமலைவாலாட்டி பகுதியில் புதிய ஏரி அமைக்கும் பணி ஆரம்பித்து, நிறைவடையும் நிலையில் உள்ளது. இதற்குத் தொகுதி மக்களின் சார்பாக திராவிட நாயகனுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியகுளம் தொகுதி, வைகை அணையினைப் புனரமைக்க வேண்டுமென்ற எனது நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, இந்த நிதிநிலை அறிக்கையில் வைகை அணையைப் புனரமைக்கும் பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சோத்துப்பாறை அணைக்கட்டானது 2001 ஆம் ஆண்டு, நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பணிகள் நிறைவடையும் தருவாயில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அப்போது இருந்த ஆட்சியாளர்கள் பாராமுகமாக இருந்த காரணத்தினால், கட்டுமானப் பொருட்களும், வெட்டப்பட்ட மரங்களும், கற்குவியல்களும் முழுமையாக அகற்றப்படாமல் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. இந்த அணையில் வண்டல் மண்ணை மட்டும் அகற்றினால் போதாது; பாறைகளையும், கற்குவியல்களையும் அகற்றி, அணையின் முழு கொள்ளளவையும் பயன்படுத்தும்விதமாக ஆழப்படுத்த வேண்டும்.

பெரியகுளம் தொகுதியில் நிலத்தடிநீர் மட்டம் குறைந்த பகுதிகளான ஏ. வாடிப்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி பகுதிகள் பயன்பெறும் வகையில், மஞ்சளாறு அணையிலிருந்து தெற்கு

கால்வாய்மூலம் எருமலைநாயக்கன்பட்டி வரை வரும் கால்வாயில் மழைக்காலங்களில் நிரம்பி வீணாகச் செல்லும் உபரி நீரை ரெங்கநாதபுரம் சேதுராமன் ஊருணிவரை இரண்டு கிலோ மீட்டர் தூரம் வாய்க்கால் அமைத்துக் கொடுத்தால், சிறு ஓடைகளிலும், குளங்களிலும் உபரி நீர் பெருகி, நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, சில ஆயிரம் ஏக்கருக்குமேல் விவசாய நிலங்கள் பயன்பெறும்.

பெரியகுளம் அருகில் பாம்பாறு மற்றும் கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும். தேனி வீரப்ப அய்யனார் கோயில் அருகில் பனசல் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும். தேனி நகரின் மையப் பகுதியில் செல்லக்கூடிய ராஜ வாய்க்காலை முழுவதுமாகத் தூர்வாரி, வாய்க்காலின் இருபுறமும் தடுப்பு வேலி அமைக்க வேண்டும்.

பெரியகுளம் அருகிலுள்ள செட்டிக்குளம், குக்கலாறு, கைக்கிலான்குளம் ஆகிய சிறிய அணைக்கட்டுகளைப் புனரமைக்க வேண்டும். பெரியகுளம் வட்டம், தாமரைக்குளம் பிட்–1 பகுதியில் நந்தியாபுரம் மற்றும் பொட்டை வண்ணான்குளம் நீரினைப் பயன்படுத்தி விவசாயம் செய்பவர்கள் பயன்பெறும் வகையில், வராக நதியின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும்.

பெரியகுளம் வட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளான பட்டாளம்மன் கோயில் தெரு மற்றும் பங்களாபட்டி அருகிலுள்ள வராக நதியில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்கப்பட வேண்டும். தாமரைக்குளம் கண்மாய்க் கரையின் பின்புறம் அமைந்துள்ள பாரதி நகர் மற்றும் வாரி வாய்க்காலில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும். மேலும், அழகுபாறை அணைக்கட்டு வாய்க்காலில் தடுப்பணைகளுடன்கூடிய மதகு அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பெரியகுளம் வட்டம், தேவதானம்பட்டியில் காமாட்சியம்மன் கோயில், விநாயகர் கோயிலின் அருகே உள்ள மஞ்சளாற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும். இதனால் பக்தகோடிகளும், விவசாயிகளும் பெருமளவில் பயன்பெறுவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. கே.எஸ். சரவணக்குமார்: சுற்றுலாவை ஊக்கப்படுத்தும்விதமாக, வைகை அணை, சோத்துப்பாறை

அணை, மஞ்சளாறு அணை பூங்காக்களை முழுவதுமாகப் புனரமைக்க வேண்டும்.

தொழிலாளர் நலத் துறை சார்பாக வேலைவாய்ப்பு முகாம்மூலம், வேலை தேடிக் கொண்டிருப்பவர்கள் தாங்கள் இருக்கும் இடங்களிலிருந்தே நல்ல வேலையைத் தேடிக்கொள்கிறார்கள். இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் என்பதுபோல, வேலை தேடுவோரைத் தேடி வேலை என்ற திட்டங்கள் மக்களைத் தேடி சென்று கொண்டிருக்கின்றன.

பட்ஜெட் குறித்து நான் ஒரு சிறிய கருத்தினை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். பட்ஜெட் என்பது ஒரு மாநிலமாக இருந்தாலும், ஒரு கிராமமாக இருந்தாலும், ஒரு சமுதாயமாக இருந்தாலும் ஒன்றுதான். உதாரணமாக, ஒரு கிராமத்தில் ஒரு சமுதாயத் தலைவரோ அல்லது ஒரு கிராமத் தலைவரோ இருக்கிறார் என்றால், அந்தச் சமுதாயத்திற்கோ அல்லது அந்தக் கிராமத்திற்கோ நிலையான வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய சொத்துகளை உருவாக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு, அந்தச் சமுதாயத்திற்கோ அல்லது கிராமத்திற்கோ பணம் போதவில்லை என்று கூறிக்கொண்டு. . . (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் தந்துவிடுங்கள். நீங்கள் சட்டமன்றத்தில் பேசியதாகப் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. கே.எஸ். சரவணக்குமார்: முன்னோர்கள் உருவாக்கிய சொத்துகளை விற்று அழித்துவிட்டால், அவர் அந்தச் சமுதாயத்திற்குச் செய்யும் மிகப் பெரிய துரோகமாகும். அந்தச் சமுதாயமோ. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நன்றி மட்டும் சொல்லுங்கள். மீதம் இருப்பவற்றை நான் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. கே.எஸ். சரவணக்குமார்: பொதுத் துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது என்பது, கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவதற்குச் சமமாகும். (மணியடிக்கப்பெற்றது)

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் தம்பி, நன்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

திரு. கே.எஸ். சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியையும் இலக்குகளையும் கொண்ட பல நல்ல திட்டங்களை உள்ளடக்கியதுதான் திராவிட மாடல் அரசு. மீதமுள்ள எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை நான் சட்டமன்றத்தில் பேசியதாகப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

தேனி–அல்லிநகரம் மாவட்டத் தலைநகரமாக விளங்குகிறது. மேலும் 1.25 இலட்சத்திற்குமேல் மக்கள்தொகை உள்ளது. இங்கு தாலுகா மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

தேனி நகர், பெரியகுளம் புறவழிச் சாலையில் அன்னஞ்சி முதல் மதுரை செல்லும் சாலை வரை போக்குவரத்து சீராக செல்வதற்கு சாலையை அகலப்படுத்த வேண்டும். இருபுறமும் வனத் துறைக்கு சொந்தமானதாக உள்ளது.

தேனி நகர் பகுதியில் போக்குவரத்து நெரிசலை சீர்செய்ய பெரியகுளம், குமுளி நெடுஞ்சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும். மேலும், இரயில் நிலையச் சாலையை குமுளி தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்க வேண்டும்.

பெரியகுளத்திலிருந்து அடுக்கம் வழியாக கொடைக்கானல் செல்லும் சாலையை தரம் உயர்த்தி இந்தச் சாலையில் சிற்றுந்து இயக்க வேண்டும். இதன்மூலம் கொடைக்கானல் செல்லும் சாலையில் போக்குவரத்து நெரிசல் குறையும். மேலும், பெரியகுளம் பகுதியின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

ஜல்லிப்பட்டி ஊராட்சியில் அதிகளவில் கால்நடைகள் வளர்ப்பதால் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரவேண்டும். கும்பக்கரை அருவியில் சுற்றுலாப் பூங்கா அமைக்க வேண்டும். பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் அக்ரஹாரம் அருகில் உள்ள வராக நதியின் குறுக்கே பாலம் கட்டினால் பெருமளவில் விவசாயிகள் பயன்பெறுவர்.

2023 மார்ச் 29] [திரு. கே.எஸ். சரவணக்குமார்]

பெரியகுளம் வட்டம், ஜெயமங்கலம் ஊராட்சியில் கருப்பசாமி கோயில் அருகே செல்லும் வராக நதியின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டும். இதனால் விவசாயிகள் பெருமளவில் பயனடைவார்கள்.

தேனி நகர் பகுதியில் அமைந்துள்ள பொதுப் பணித் துறைக்கு சொந்தமான மீறுசமுத்திரக் கண்மாயில் நடைபாதை அமைத்து, சுற்றுலாப் பூங்கா அமைத்துத் தர வேண்டும். தேனி நகர் பகுதியில் உள்ள வார சந்தையை நவீனப்படுத்த வேண்டும். தாமரைக்குளம் பேரூராட்சி முழுமைக்கும் சோத்துப்பாறை அணையிலிருந்து குடிநீர் வழங்கிட ஆவன செய்ய வேண்டும்.

பெரியகுளம் நகரில் 100 ஆண்டுகள் பழமையான தையல்நாயகி உடனுறை மலைமேல் வைத்தியநாதசுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதால் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்து குடமுழுக்கு நடத்த வேண்டும்.

பெரியகுளம் வட்டம், வடபுதுப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அம்மாபட்டி பகுதியிலும், பொம்மிநாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட சிந்துவம்பட்டி பகுதியிலும், எண்டப்புளி புதுப்பட்டியில் ஆரோக்கியமாதா நகர், கக்கன்ஜி காலனி பகுதியிலும் சமுதாயக் கூடங்கள், ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் கட்டித் தரப்பட வேண்டும்.

புதிய இரயில்வே திட்டங்களைக் கண்டறியும்பொழுது திண்டுக்கல்லிலிருந்து கூடலூர் (தேனி மாவட்டம்) செல்வதற்குப் புதிய வழித்தடத்தை இணைக்க வேண்டும்.

தேனி நகரமானது மக்கள் தொகையில் 1.25 இலட்சத்தைத் தாண்டிவிட்டது. ஆனால் ஒரே வருவாய் கிராமமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் எளிதில் சேவைபெறும் வகையில் பிட்–1, பிட்–2 என இரண்டு வருவாய் கிராமங்களாகப் பிரிக்க வேண்டும்.

பெரியகுளம் வட்டம், குள்ளபுரம் வருவாய் கிராமமானது, குள்ளபுரம் ஊராட்சி மற்றும் ஏ. வாடிப்பட்டி ஊராட்சியை உள்ளடக்கியது. இங்கு சுமார் 20 ஆயிரம் மக்கள் தொகைக்குமேல் உள்ளது. இதனை இரண்டாகப் பிரித்து ஏ. வாடிப்பட்டிக்கு தனியாக ஒரு வருவாய் கிராமம் உருவாக்க வேண்டும்.

பெரியகுளம் வட்டம், சில்வார்பட்டி ஊராட்சிக்குட்பட்ட நல்ல கருப்பன்பட்டியிலும் கீழவடகரை ஊராட்சியிலும் நூலகம் அமைத்துத் தர வேண்டும். ஜெயமங்கலம் ஊராட்சியிலும் தேவதானப்பட்டி பேரூராட்சியிலும் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக வகுப்பறைகளும், விளையாட்டு மைதானமும் அமைத்துத் தர வேண்டும். தேவதானப்பட்டி பேரூராட்சியின் மையப் பகுதியில் செல்லக்கூடிய கழிவு நீரோடையை முழுவதுமாகச் சீரமைக்க வேண்டும். தென்கரை பேரூராட்சிப் பகுதியில் பெருமளவில் விவசாயிகள் பயன்படக்கூடிய வகையில் வெள்ளமுத்து சிலையிலிருந்து மூனு கவுறு என்கின்ற இடம்வரை செல்வதற்கு பெரியகுளம் குளக்கரையிலிருந்து தார்ச்சாலை மற்றும் பாலம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள். சரியாக உரையை மணி 1–10–க்குள் முடித்துவிடுங்கள்.

திரு. M. ராஜமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறையாக பேசுகிறேன். கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால்தான், ஐந்து நிமிடங்கள் குறுக்கீடு இல்லாமல் உங்களுக்குத் தந்துவிடுவேன்.

திரு. M. ராஜமுத்து: சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் நான் மக்களுக்காகவே நான் என்று வாழ்ந்த புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முன்னாள் முதல்வர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் மண்ணின் மைந்தர், குடிமராமத்து நாயகர், (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல பல திட்டங்களைத் தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் ஆகியோரை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் மாவட்டம், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் என்னை 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்த வாக்காளப் பெருமக்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் நண்பர்களுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல்,

2023 மார்ச் 29] [திரு. M. ராஜமுத்து]

"வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று."

இந்த உலகில் வாழும் உயிரினங்கள் நிலைபெற்று வாழ்வதற்கு இயற்கையின் வரமான மழையே காரணமாக அமைவதால், வான்மழை அமிழ்தத்திற்கு ஒப்பானது என்பது திருவள்ளுவரின் வாக்காகும். அதைப்போல, எனக்கு இன்று பேச வாய்ப்பளித்த எதிர்க்கட்சிக் கொறடா மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள் பேசுகின்றபோது, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியில் எத்தனை அணைகள் கட்டப்பட்டன என்று கேட்டார்கள். நான் ஒருசில குறிப்புகளை மட்டும் இங்கே சொல்கிறேன். தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 7 அணைகள் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 1) மந்தலப்பள்ளம் அணை 2) தும்பலஹள்ளி அணை 3) கெசரகுல்லா அணை 4) சின்னாறு அணை, 5) நாகவதி அணை 6) தொப்பையாறு அணை, 7) வாணியாறு அணை. இந்த அணைகள் அனைத்தும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நீர்வளத் துறையின்கீழ் உள்ள பல்வேறு செயல்பாட்டுப் பிரிவுகள் நல்ல முறையில் இயங்கினால் மாநிலத்திற்கு வளர்ச்சி உண்டாகும். அவ்வாறு இல்லையென்றால் மக்கள் பெரும் துன்பத்திற்குத் தள்ளப்படுவார்கள். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்தில் நீர்வளத் துறை, அப்போது பொதுப் பணித் துறையின்கீழ் இருந்தது. அதைப் பெரிதும் நேசித்து வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து பல ஆண்டுக் கனவான பல நல்ல பெரிய திட்டங்களைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்தார்கள்.

உதாரணத்திற்கு அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை ரூ.1,652 கோடியில் கொண்டு வந்தார்கள். அத்திக்கடவு–அவினாசி திட்டத்தைப் பொறுத்தவரையில், இப்போது செயல்பாட்டுக்கு வருவதற்காக,சோதனையோட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தச் சோதனையோட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழியில் நிறைய ஏரி, குளம், குட்டைகளில் மரம், செடி, கொடிகள் இருக்கின்றன. அவற்றை அகற்றினால் இன்னும் விவசாயிகள் பயனடைவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மேட்டூர் அணையில் உபரிநீர் திட்டம். 100 ஏரிகளை நிரப்புவதற்காக, விவசாயிகள் கிட்டத்தட்ட 50, 60 வருடங்களாகப் போராடிக்கொண்டிருந்த திட்டத்தைச் செயல்படுத்தியவர் எங்கள் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, காவேரி—அக்னியாறு, வைகை—குண்டாறு இணைப்புக் கால்வாய்த் திட்டங்களுக்கான பணிகள் அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில் முதலில் தொடங்கப்பட்டன. இந்த அரசாங்கம் இவற்றை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முக்கொம்பில் புதிய நீரொழுங்கி பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இராஜவாய்க்கால் பாசன அமைப்பு, கட்டளை உயர்மட்டக் கால்வாய் அமைப்பு, கல்லணைக் கால்வாய்த் திட்டம், காவேரி மற்றும் அதன் கிளை ஆறுகளைப் புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது எங்களுடைய ஆட்சிக் காலத்தில். நடந்தாய் வாழி காவேரி திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆனைமலையாறு—நல்லாறு திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்தது. 27 ஆண்டுகளாகச் செயல்படுத்தாமல் இருந்ததை, கேரள மாநில முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால், இன்றைய தி.மு.க. அரசாங்கம் அதன்மீது தொடர் நடவடிக்கை எடுக்காதது வேதனைக்குரியது. இதனால் 7 மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

பிற்பகல் 1–10

அதேபோல, குடிமராமத்து;த திட்டப் பணிகளைப் பற்றி மாமன்ற உறுப்பினர் ஒருவர் பேசினார். இந்தக் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு விவசாயிகள் பயன் பெற்றார்கள் என்பது ஊருக்கும் தெரியும்; நாட்டு மக்களுக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், 100 ஆண்டுகளாக மேட்டூர் அணை தூர்வாரப்படாமல் இருந்தது. நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தூர்வாரி, வண்டல் மண் எடுக்கப்பட்டு எத்தனை விவசாயிகள் பயனடைந்தார்கள் தெரியுமா? அதேபோல மதுராந்தகம் ஏரி, விழுப்புரம் மாவட்டம், வீடூர் ஏரி போன்றவை பல ஆண்டுகளுக்குப்பின் தூர்வார ஒப்புதல் அளிக்கப்பட்டன.

அரியலூர் மாவட்டம், வேட்டக்குடி பறவைகள் சரணாலயம், கண்டிரா நீர்த்தேக்கம் ஆகிய ஏரிகள் 30 ஆண்டுகளுக்குப் பிறகு தூர்வாரப்பட்டன. அண்டை மாநில முதலமைச்சர்களுடன் கலந்துபேசி, நீர்வளத் துறைக்கு நல்ல முடிவுகளைக் கண்டவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே எண்ணேகொல் புதூர் அணையிலிருந்து, தருமபுரி மாவட்டம், தும்பலஹள்ளி அணைக்குக் கால்வாய்மூலம் தண்ணீர் கொண்டு செல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஆட்சியில் tender விடப்பட்டது. 23 மாதங்களுக்குப் பிறகும் பணிகள் மெதுவாக நடைபெறுகின்றன. இந்தப் பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அணையாளம் அணையிலிருந்து தருமபுரி மாவட்டம், தூள்செட்டி ஏரிக்குக் கால்வாய்மூலம் தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் tender விடப்பட்டு, 23 மாதங்களுக்குப் பிறகும் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவேயில்லை. இதனால் விவசாயிகள் பாதிப்படைகிறார்கள். இந்த வேலையையும் சீக்கிரம் ஆரம்பித்து, முடிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் வேலையை சீக்கிரம் முடித்துத்தர சொல்லுங்கள். நானும் சொல்கிறேன் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. M. ராஜமுத்து: எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிகம் வாய்ப்புக் கொடுங்கள். ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Full ஆக நீங்கள் பேசுவதற்குத்தான் தருகிறேன்.

திரு. M. ராஜமுத்து: சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், வைஸ் நதியிலிருந்து கல்லேரிப்பட்டி ஏரிக்கு, ரூபாய் 12 கோடி மதிப்பில் வாய்க்கால் அமைக்கும் பணி மிகவும் மெதுவாக நடைபெறுகிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் பல ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, முக்கியப் பிரச்சினையான

பாலாறு பிரச்சினையை இந்த அவையில் அப்போது எதிர்க்கட்சி துணைத் தலைவராக இருந்தபோது, தற்போதைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்புவார். ஆனால் 6 மாதங்களுக்கு முன்புகூட ஒரு தடுப்பணைக் கட்டப்பட்டுள்ள விவரம் தெரிந்தும் அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை; இது மிகவும் வேதனையளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசி பக்கத்தை எடுங்கள்; அவ்வளவுதான். கையில் இருப்பது முடிந்துவிட்டது.

திரு. M. ராஜமுத்து: இல்லை, இல்லை, இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழே இருப்பதை கடைசி பக்கத்தை எடுங்கள். அதில் நல்ல செய்தியெல்லாம் இருக்கிறது.

திரு. M. ராஜமுத்து: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள KRP அணை, 1952 ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு வந்தது. சுமார் 70 ஆண்டுக்கால வரலாற்றில் அந்த அணை தூர்வாரப்பட்டு, வண்டல் மண் எடுக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் நலனடைந்தார்கள். அதேபோல, இதுமாதிரி பல்வேறு நலத் திட்டங்களையும், பாசன வசதிகளையும் பெற்றார்கள். ஏனென்றால் எங்கள் பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள், அவரும் ஒரு விவசாயி என்கிற காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) விவசாய மக்களுக்காக பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தார் என்பது பெருமைக்குரிய விஷயம். அதேபோல, என்னுடைய தொகுதி கோரிக்கைகள் ஒன்று இரண்டை மட்டும் சொல்கிறேன். பனமரத்துப்பட்டி ஏரி, சேலம் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போது எந்தவித பராமரிப்பும் இல்லாமல் புதர் மண்டிக்கிடக்கிறது. சுமார் 2200 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் தொகுதியில் உள்ளது எல்லாம் நீங்கள் அவையில் பேசியதாக நான் பதிவு செய்துவிடுகிறேன். please. நன்றி சொல்லுங்கள்.

திரு. M. ராஜமுத்து: ஒரு நிமிடம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுங்கள். அதேபோல சேலம்-நாமக்கல் சாலையில் மல்லூர் என்ற இடத்தில் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். சேலம்–நாமக்கல் சாலையில் சந்தியூர் பிரிவில் உயர்மட்டப் பாலம் அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சேலம்–சென்னை சாலை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் உங்கள் தொகுதி சார்ந்தது, நீங்கள் அவையில் பேசியதாகப் பதிவு செய்து தருகிறேன். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. M. ராஜமுத்து: சேலம் மாவட்டத்தில் பாரம்பரியமிக்க வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பனமரத்துப்பட்டி ஒன்றியத்தில் பூக்கள் நிறைய விளைகின்றன. அந்தப் பூக்கள் இரண்டொரு நாளானால் வாடிவிடுகின்றன. அதனால் அதைப் பராமரிப்பதற்காக ஒரு Cooling Centre அமைத்துக் கொடுக்குமாறு என்னுடைய தொகுதியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவெல்லாம் உங்கள் தொகுதி சார்ந்தது, கொடுங்கள் நீங்கள் பேசியதாகப் பதிவாகிவிடும். Record ஆகிவிடும், உங்களுக்கு copy-யும் தந்துவிடுகிறேன். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. M. ராஜமுத்து: கடைசிக்கு வந்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

திரு. M. ராஜமுத்து: வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தாதகாப்பட்டியை மையமாக வைத்து பத்திரப்பதிவு அலுவலகம் இயங்கி வருகிறது. வீரபாண்டி தொகுதியில் உள்ளவர்கள் தொலைவிலுள்ள தாதகாப்பட்டிக்கு வந்து பத்திரப்பதிவு செய்வதற்குச் சிரமமாக உள்ளதால் பனமரத்துப்பட்டியில் ஒரு புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு அம்மா. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாமே தொகுதி சார்ந்தவை. தொகுதி சார்ந்தவற்றை நான் பதிவு செய்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. M. ராஜமுத்து: கடைசியாக ஒன்றே ஒன்று. வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி ஏழையெளிய மக்களுக்கு அதிகமான இலவச

வீட்டுமனைப் பட்டாக்கள் எங்கள் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் வழங்கினோம். இன்னும் வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி.

திரு. M. ராஜமுத்து:

தொகுதிக் கோரிக்கைகள்:

சேலம்–சென்னை சாலையில் எருமாபாளையம் பிரிவில் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும். சேலம்–சென்னை சாலையில் சன்னியாசிகுண்டில் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் ஜவுளித் தொழில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்காக இளம்பிள்ளையில் ஒரு ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் நெசவுத் தொழில் நடைபெற்று வருகிறது. நாளுக்கு நாள் நூல் விலையேற்றத்தினால் நெசவாளர்கள் நலிவடைந்து வருகிறார்கள். ஆகவே, அரசு நூல் விலைக்கு மானியம் வழங்கிட வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் பாரம்பரியமிக்க வெள்ளி கொலுசு உற்பத்தியாகி வருகிறது. இது இந்தியா மட்டுமல்ல; பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வளவு சிறப்பு பெற்ற வெள்ளி கொலுசுக்கு புவிசார் குறியீடு வழங்க அம்மா அரசு முயன்றது. ஆட்சி மாற்றத்தினால் நிறைவேற்ற முடியாமல் போனதால், அதனை நிறைவேற்றிட வேண்டும்.

சேலம் தாலுகா, ஆண்டிப்பட்டி ஊராட்சி, சின்னகஞ்சமலையில் 25 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அதில் வெள்ளி கொலுசு உற்பத்திப் பூங்கா அமைத்துக் கொடுக்க வேண்டும்.

வெள்ளி நகை உற்பத்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று தொழில் செய்து வர பெரிதும் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. இதனால் அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. அதனால் மத்திய அரசு வெள்ளி நகை உற்பத்தியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தனி அடையாள அட்டை வழங்குவதுபோல் மாநில அரசு வழங்கக் கோருகிறேன். மேலும், வெள்ளி நகை தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்க வேண்டும்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் சுமார் ரூ.652 கோடி மதிப்பில் மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டுவரப்பட்டது. 52 ஊராட்சிகள், 5 பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க இந்த திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தப் பணியானது மிகவும் காலதாமதமாக நடைபெற்று வருகிறது. இதனை விரைந்து முடித்திட வேண்டும். பனமரத்துப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் காய்கறிகளும் அதிகமாக உற்பத்தியாகின்றன. அவை அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில் பாதுகாத்து வைக்கும் வசதி இல்லாத காரணத்தால் கெட்டு விடுகின்றன. எனவே, வீரபாண்டி தொகுதியில் குளிர்சாதனக் கிடங்கு அமைத்திட வேண்டும்.

வீரபாண்டி தொகுதியிலுள்ள பல ஏழை, எளியோர் அரசு புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டு காலமாக வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் பனமரத்துப்பட்டி ஒன்றியம், வீரபாண்டி ஒன்றியத்தில் தீ விபத்துகள் ஏற்படும்போது சேலம் மாநகர தீயணைப்பு நிலையத்திலிருந்து தீயணைப்பு வாகனம் வரவேண்டியுள்ளது. போக்குவரத்து நெரிசலில் தீயணைப்பு வாகனம் வந்து சேர்வதற்குள் பெரும் சேதம் ஏற்பட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, வீரபாண்டி தொகுதியில் பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மல்லூர் பேரூராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை, மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 வயதில் தமிழ்க்கொடி ஏந்தி, 95 வயது வரையில் அதைத் தூக்கிப்பிடித்த தமிழ்நாட்டின் காவல் தெய்வம் கலைஞர். உடன் பிறப்பே என்ற ஒற்றைச் சொல்லில், ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் தட்டி எழுப்பிய சிற்பி, இந்த நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய திருவாரூர் சிற்பி, தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

திராவிட மாடல் கோட்பாட்டைக் கொண்ட ஆட்சியை நடத்துவதில் தந்தை பெரியாராய்; இனம், மொழி காப்பதில் களம் காண எப்போதும் தயாராகயிருக்கும் பேரறிஞர் அண்ணாவாய்; கடமை, கண்ணியம் கட்டுப்பாடு காப்பதில் முத்தமிழறிஞராய் என நம் கண்ணுக்கு முன்னால் முப்பெரும் தலைவராய் உயர்ந்து நிற்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவரை நாடு எத்தனையோ முதலமைச்சர்களைப் பார்த்திருக்கிறது. ஆனால், மன்னிக்கவும். 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்ற குரல் ஒலித்தபோதுதான், தமிழ்நாட்டில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில், ஏன், உலகத்தில் வாழும் தமிழர்களின் கண்களில், தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த அத்துணைத் தமிழ் நெஞ்சங்களின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது. அந்த ஆனந்தக் கண்ணீர்தான் அந்த அதிர்வலை. அந்த அதிர்வலை என்பதுதான் பூமிப் பந்தில் ஏற்பட்ட பூகம்பம். அந்த அதிர்வலைதான் தளபதி மு.க. ஸ்டாலின் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக அனைத்து மாணவிகளுக்கும் தாயாக இருக்கிறார்; நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக அனைத்து இளைஞர்களுக்கும் தந்தையாக இருக்கிறார்; இலவசப் பேருந்து பயணம், ரூ.1,000/– உரிமைத் தொகை வழங்குவதன்மூலம் மகளிர் அனைவருக்கும் எப்போதும் அவர்தான் அன்பான சகோதரராக இருக்கிறார். அவர் வாழும் காலத்தில் நாங்கள் வாழ்கிறோம் என்று பெருமைப்படுகிறேன். அதைவிட, அவர் ஆளும் காலத்தில் அமைச்சராக இருக்கிறேன் என்பது என் தலைமுறைக்குக் கிடைத்த பெருமை; எங்கள் தொகுதிக்குக் கிடைத்த பெருமை; எங்கள் மாவட்டத்திற்குக் கிடைத்த பெருமை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2023–2024 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதங்கள் எடுத்துக்கொள்ளப்பெறும் முதல் நாளிலேயே இந்த எளியோனின் தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறைக்கான நாளாக வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 மார்ச் 29] [திரு. சி.வி. கணேசன்]

இளைஞரணியின் செயலாளராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து இளைஞர் அணியைச் சார்ந்த தம்பிகளுக்குப் பயிற்சிப் பாசறை நடத்தி, கழகத்தின் கொள்கைகளைப் பயிற்றுவித்து, யாராலும் வெல்ல முடியாத பெரும்படையாக இளைஞர் அணியை மாற்றிக் காட்டியவர். உலகத்திற்கு ஒரே சூரியன்தான். ஆனால், தமிழ்நாட்டுக்கு மட்டும்தான் இரண்டு சூரியன்கள். ஒன்று, எங்களின் தலைமைச் சூரியன்; மற்றொன்று, எங்களின் இளைய சூரியன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சியில் அமர்ந்த பிறகுதான், செங்கோல் ஆட்சி சாத்தியம். செங்கல்லை வைத்தே ஆட்சியைப் பிடிப்பது உங்களுக்கு மட்டுமே சாத்தியம். எல்லோரும் உங்களை விளையாட்டுப் பிள்ளை என்றார்கள். உண்மைதான், அதனால்தான் மக்கள், விளையாட்டு மைதானம் இருக்கிற சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியிலே தேர்ந்தெடுத்தார்கள். இப்போது விளையாட்டுத் துறை அமைச்சராகி வியக்க வைக்கிறீர்கள். கதாநாயகனா, கழகமா என்ற கேள்விக்கு, 'நான் என்றுமே கழகத்தின் கதாநாயகன்' என்று சொன்னீர்கள். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகின்றேன்.

கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலன்கள். தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்கும் மாநிலம், தமிழ்நாடு. அதேவேளையில், தொழில் துறையையும் ஊக்குவிக்கிறது நமது திராவிட மாடல் அரசு. நமது அரசு பொறுப்பேற்றதிலிருந்து தொழில் துறையில் எப்போதும் அமைதியைப் பேணிக் காத்து வருகிறது. மாநிலத்தில் இயங்கிவரும் 30,000–க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களில் சுமூகமான சூழ்நிலை நிலவி வருவது ஒன்றே இதற்குக் காரணம். இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, தொழிலாளர்களின் நலனுக்காக பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உதாரணமாக, குறைந்தபட்ச ஊதியம் 45 தொழில் இனங்களுக்கு மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், முதல் முறையாக பல்வேறு தொழில் இனங்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும்

தொழிலாளர்கள் பணி நேரத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வின்போது, அமர்வதற்கு இருக்கை வசதியினை ஏற்படுத்தி, அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

நமது சமூக சீர்கேடுகளான குழந்தைத் தொழிலாளர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் முறைகளை அகற்றுவதற்கு நமது அரசு முனைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராட அனைத்துத் துறைகள் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் விழிப்புணர்வை ஏற்படுத்த, பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23–2–2023 அன்று 'குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்–தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்' மற்றும் 'கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல்–தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்' ஆகிய இரண்டு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அரசு பதவியேற்ற பிறகு, அமலாக்க நடவடிக்கைகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக 461 குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் 403 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள். அமைப்புசாரா தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தவர் நமது நெஞ்சம் நிறைந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் என்றால், அது மிகையாகாது என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்வதில் பெருமிதம் அடைகிறேன். தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம், தையல் தொழிலாளர் நல வாரியம், முடி திருத்தும் தொழிலாளர் நல வாரியம், சலவைத் தொழிலாளர் நல வாரியம், கைவினைத் தொழிலாளர் நல வாரியம் போன்ற 16 தொழிலாளர் நல வாரியங்களை உருவாக்கி மாநிலத்தின் கடைக்கோடி சாமானியருக்கும் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கியதால் தமிழ்நாட்டின் தொழிலாளர்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நீங்கா இடம் பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நமது அரசு, வாரியங்களில் தொழிலாளர்களை அதிக எண்ணிக்கையில் பதிவு செய்வதில் முனைப்புடன் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற

2023 மார்ச் 29] [திரு. சி.வி. கணேசன்]

பிறகு 7–5–2021 முதல் 28–2–2023 வரை 12,66,126 புதிய உறுப்பினர்கள் வாரியங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு, தொழிலாளர்களுக்கு புதிய நலத் திட்ட உதவிகள் அறிமுகப்படுத்தியும், பல்வேறு நலத் திட்டங்களில் உதவித் தொகைகள் உயர்த்தியும் வழங்கியுள்ளது. 7–5–2021 முதல் 28–2–2023 வரையிலான காலத்தில், 9,50,456 தொழிலாளர்களுக்கு ரூ.725 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்கிறேன். 10,000 தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு அல்லது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளை வாங்குவதற்கு ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ.4.00 இலட்சம் வரை நிதி உதவியாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பணிபுரியும் வெளிமாநிலத் தொழிலாளர்கள். ‘வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடு’ என்ற வகையில், வெளி நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு முதலீடு செய்வதற்கு வருபவர்களை எந்த அளவிற்கு வரவேற்கிறோமோ அதே அளவிற்கு வெளி மாநிலத் தொழிலாளர்களையும் வரவேற்கிறோம். அவர்கள் தமிழ்நாட்டில் உணவு விடுதிகளிலும், நகைக் கடைகளிலும், தொழில் நிறுவனங்களிலும், கட்டுமான நிறுவனங்கள், சாலைப் பணிகள், விவசாயப் பணிகள் போன்று பல்வேறு இடங்களில் பல்வேறு பணிகளில் தொழில்கள் செய்துவருகின்றனர். நான் அவர்களைச் சந்தித்து பேசியபோது, “நாங்கள் தமிழ்நாட்டிற்கு வந்து 10, 15, 20, 23 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறோம் நாங்கள் எவ்விதப் பிரச்சினையுமின்றி தமிழ்நாட்டு மக்களோடு ஒன்றிணைந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகிறோம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் எங்களுக்கு எவ்விதக் குறைகளும் இல்லை” என்றும் தெரிவித்தார்கள் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளை Times of India உள்ளிட்ட பல்வேறு ஆங்கில நாளேடுகளும், சென்னை உயர் நீதிமன்றமும் பாராட்டியுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். வெளி மாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் எவ்விதக் குறையுமின்றி பாதுகாப்புடன், மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சி.வி. கணேசன்] [2023 மார்ச் 29

வெளி மாநிலத் தொழிலாளர்கள் நிலை குறித்து அறிந்துகொள்வதற்காக ஜார்கண்ட் மற்றும் பீகார் மாநிலங்களிலிருந்து குழுக்கள் வந்து ஆய்வு செய்தன. அந்தக் குழுக்கள் தொழிலாளர்கள் அதிகம் பணியாற்றக்கூடிய செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்குச் சென்றன. குறிப்பாக, திருப்பூர் மாவட்டத்தில் வெளி மாநிலத் தொழிலாளர்களை அம்மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை ஆணையாளர் ஆகியோருடன் சென்று அக்குழுவினர், சந்தித்து உரையாடினர். அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த பீகார் மாநிலத்தைச் சார்ந்த ஊரக உள்ளாட்சித் துறைச் செயலாளர் திரு. பாலமுருகன் அவர்கள் வெளி மாநிலத் தொழிலாளர்கள் எவ்விதப் பிரச்சினையும் இல்லாமல், மகிழ்ச்சியுடன், பாதுகாப்புடன் பணிபுரிகிறார்கள் என்றும், அதற்காக நாங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் கூறினார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். தொழிலாளர்கள் நலன் என்பது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் எப்படி இருக்கிறது என்பதற்கு நான் ஓர் உதாரணம் சொல்கிறேன். கடந்த காலத்தில் ஒரு தொழிலாளர் விபத்தினால் பாதிக்கப்பட்டாலோ அல்லது விபத்தினால் இறந்துவிட்டாலோ அவர்களுக்கு உதவித் தொகை கிடைப்பதற்கு சற்றேறக்குறைய 5, 6 அல்லது 7 ஆண்டுகளாகும். ஆனால், அண்மையில் கரூர் வட்டம், காட்டுப்பாளையத்தில் 15–11–2022 அன்று septic tank கட்டுமானத்தில் வேலை செய்த திரு. சிவக்குமார் என்கிற சிவா, திரு. ராஜேஷ்குமார் ஆகிய இரண்டு தொழிலாளர்களும் விஷவாயு தாக்கி மரணமடைந்தார்கள். நான் அதிகாரிகளை அழைத்து, இதுபோன்று தொழிலாளர்கள் இறந்துவிட்டால், அவர்களுக்கு எவ்வளவு நாட்களில் உதவித்தொகை கிடைக்கும் என்று கேட்டேன். மிக வேகமாகக் கொடுத்தால் 3 மாதங்களில் கொடுக்கலாம், கொஞ்சம் அவகாசம் கொடுத்து, கொடுத்தோமென்றால் 6 மாதங்களாகும் என்று சொன்னார்கள். இந்த விஷயம் தெரிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். நான் உடனடியாக கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபு சங்கர், இ.ஆ.ப., அவர்களைத் தொடர்புகொண்டு, இருவர் septic tank கட்டுமானத்தில் வேலை செய்யும்போது இறந்துவிட்டார்கள், அவர்களுக்கு 48 மணி நேரத்திலே உரிய தொகை வழங்கப்பட வேண்டுமென்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தளபதியின் ஆட்சியிலே இறந்தவர்களின் குடும்பங்களுக்கு, 48 மணி நேரத்திலே எல்லா சான்றிதழ்களும் பெற்று, ரூ.5 இலட்சம் உதவித் தொகையை வழங்கினார்கள் என்பது மாண்புமிகு தளபதியின் ஆட்சிக்கு உதாரணம் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தொழிற்பயிற்சி நிலையங்கள்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், வேலைவாய்ப்பினைப் பெறுவதற்காக திறன் பயிற்சிகளை மேம்படுத்தவும் பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்து நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 12 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 102 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரையில் I.T.I.-யில் இதுபோன்று நடந்ததே இல்லை. கடந்த கல்வியாண்டில் 53 தொழிற்பயிற்சி நிலையங்களில் 100 சதவிகித மாணவர் சேர்க்கையும், ஒட்டுமொத்த சராசரியாக 93 சதவிகிதம் உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் I.T.I. வரலாற்றில் இல்லாத வகையில் 100 சதவிகிதம் 53 I.T.I.-லும், மொத்த I.T.I.-யில் 93 சதவிகிதம் admission ஆகியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு campus selection மூலமாக 76 சதவிகிதம் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தந்துள்ளோம் என்பதையும் இந்த அவையில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு, 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு மற்றும் திறன் கற்பித்தலை மேம்படுத்தும் இலட்சிய திட்டத்தை TATA Technologies உடன் இணைந்து 2,877.43 கோடி ரூபாய் செலவில் தொழிற்பயிற்சி நிலையங்கள் அதாவது I.T.I. வரலாற்றிலேயே 2,877.43 கோடி ரூபாயைக் கொடுத்து, நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேம்படுத்தச் சொன்னார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மீண்டும் நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தொடர்பான பணிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் வாயிலாக Industrial Robotics and Digital Manufacturing, Mechanic Electric Vehicle, Advanced CNC Machining, Manufacturing Process Control and Automation, Internet of Things, Advanced Additive Manufacturing, Advanced Welding, Advanced Painting Technology, Advanced Plumbing, Advanced Automobile Engineering, Computer Aided Manufacturing ஆகிய 4.0 தரத்திலான நீண்டகால மற்றும் குறுகிய கால தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. I.T.I.–யில் இதுபோன்று நடைபெற்றதே இல்லை. 2,877.43 கோடி ரூபாயை கொடுத்து, நான் குறிப்பிட்ட இந்தப் புதிய வகுப்புகளெல்லாம் வருங்காலத்தில் தொடங்கப்பட்டு, மேலை நாடுகளுக்கு இணையாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முக்கியமான ஒன்று, திட்டமிடப்பட்ட நாளான 2023 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் இத்திட்டத்தினைத் தொடங்குவதற்கு நாங்கள் தயாராகயிருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

வேலைவாய்ப்புத் துறை: இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள். அதனடிப்படையில் 7–5–2021 முதல் 26–3–2023 வரை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மூலமாக 95 மிகப் பெரிய வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, இதுவரையில் 1,42,804 இளைஞர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தந்திருக்கிறோம் என்பதை நான் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த எண்ணிக்கையை இவ்வாண்டு இறுதிக்குள்ளாக 2 இலட்சமாக உயர்த்துவோம் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு 15–10–2022 அன்று சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில், புது கல்லூரியில் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் ஒரு இலட்சமாவது பணி நியமன ஆணையை வழங்கிச் சிறப்பித்தார்கள். அதுபோன்று, இவ்வாண்டு இறுதிக்குள்ளாக இரண்டு இலட்சமாவது பணி நியமன ஆணையையும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது திருக்கரங்களால் வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும், இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–30

ஆண்டுதோறும் நடைபெறும் ஒன்றிய அரசின் பணிகளுக்குத் தேர்வு செய்யப்படுபவர்கள், அதாவது, ஒன்றிய அரசாங்கத்தில் வேலைக்கு செல்பவர்கள், விண்ணப்பிப்பவர்கள், நம்முடைய மாநிலத்தில் மிகக் குறைவாக இருக்கிறார்கள். குறிப்பாக, Staff Selection Commission, Railway Recruitment Board, Banking Service Recruitment Board, NTPC, Port, Steel Authority of India, BHEL போன்ற ஒன்றிய அரசுப் பணிகளுக்குத் தமிழ்நாட்டு மாணவர்கள் விண்ணப்பிப்பது மிகவும் குறைவாக உள்ளது. அவ்வாறு விண்ணப்பித்தாலும், அத்தேர்வுகளில் முறையான பயிற்சி பெற்று, தேர்வு எழுதாததால், மிகக் குறைந்த அளவிலேயே தேர்ச்சி பெறுகின்றனர் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையினை மாற்றி, ஒன்றிய அரசு மற்றும் பொது நிறுவனங்களில் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் அதிகளவில் இடம்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் தோற்றுவிக்கப்பட்டு, இதன்வாயிலாக 12 பயிற்சி மையங்கள் நம்முடைய தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலகப் பாதுகாப்பு. தமிழ்நாட்டில் குறிப்பாக, விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 1,070 பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மற்ற மாவட்டங்களில் 406 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இத்தொழிற்சாலைகளில், நேரடியாகவும், மறைமுகமாகவும், சுமார் 5 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளின் விளைவாக, ஏற்படும் ஒவ்வோர் உயிரிழப்பின்போதும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், மிகுந்த வேதனையடைந்து, தனது வலியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதுபோன்று விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அந்த

ஆணையின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் தீபாவளிக்கு முந்தைய காலக்கட்டங்களில் சிறப்புக் குழு ஏற்படுத்தப்பட்டு 733 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 178 தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினருக்கு, காரணம் கோரும் அறிவிப்பு–show cause notice வழங்கப்பட்டுள்ளது. 50 தொழிற்சாலைகளுக்கு, உற்பத்தித் தடையாணை கொடுக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்ல, 450 முறையான ஆய்வுகள் நடத்தப்பட்டு, 65 தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினருக்கு, காரணம் கோரும் அறிவிப்பு—show cause notice வழங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளுக்கு உற்பத்தித் தடையாணைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆய்வுகளில் காணப்பட்ட முரண்பாடுகளுக்காக 1,063 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு விழிப்புணர்வுக்காக இதுவரை 252 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புப் பயிற்சி வழங்கும்பொருட்டு, சிவகாசியில் பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 26,231 தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் நடமாடும் கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டு, 450 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டத்தில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சரும், நானும் கலந்துகொண்ட பட்டாசு தொழிலாளர்கள் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம் 12–12–2022 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 'தொழிலகப் பாதுகாப்பு, தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்' என்ற தலைப்பில் ஒரு கையேடு வெளியிடப்பட்டது. மேலும், இக்கருத்தரங்கில் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டு விவாதித்து, விபத்துகளைத் தடுக்க பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள்: பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கும் நோக்கத்துடன் ஆய்வுகளுக்கான கால இடைவெளி குறைக்கப்பட்டு, ஆய்வுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். அனைத்து வசதிகளுடன்கூடிய நடமாடும் பிரச்சார வாகனம் வாயிலாக, பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில்

2023 மார்ச் 29] [திரு. சி.வி. கணேசன்]

ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் சென்று, விழிப்புணர்வு குறும்படம் வெளியிடப்படும். பட்டாசு தொழிற்சாலைகளின் உரிமையாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், அவர்களது கடமை மற்றும் பொறுப்புகளை உணர்த்தும் வகையிலும், பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். பட்டாசு தொழிற்சாலையில் ஏற்படும் விபத்துகளைக் குறைக்க petroleum மற்றும் வெடிபொருட்கள் கட்டுப்பாட்டுத் துறையுடன் இணைந்து பட்டாசு உற்பத்தி, நவீன உத்திகளைக் கையாண்டு, விபத்துகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதுதொடர்பாக, அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து விபத்து இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம். தமிழ்நாட்டில் 35.60 இலட்சம் தொழிலாளர்களும் மற்றும் 1 கோடியே 7 இலட்சம் தொழிலாளர்களைச் சார்ந்தவர்களும் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காகவும், அவர்களைச் சார்ந்தோர்களுக்காகவும் செயல்படுகின்ற ஒரு சமுதாய பாதுகாப்புத் திட்டமாகும்.

தமிழ்நாட்டில் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும், 235 ஈட்டுறுதி மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகள் மூலமாக தொழிலாளர்களுக்கு அனைத்து வகையான மருத்துவச் சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 13 மருந்தகங்கள் புதிதாகத் துவங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் 35.60 இலட்சம் காப்பீட்டாளர்களும் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் 1 கோடியே 7 இலட்சம் நபர்கள் E.S.I. மருத்துவமனை மூலமாகச் சிகிச்சை பெற்று வருகிறார்கள். காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தார்கள், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக செலவிடப்பட்ட தொகை கொடுக்கப்படாமல் நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்தது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 23,620 காப்பீட்டாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், தொழிலாளர்களுக்கு என்ன செய்தீர்கள் என்று கேட்டார். அதற்குதான் இந்த விளக்கம். அதாவது கடந்த காலத்தில், நிறுவனங்களில் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்கள் நமது E.S.I. மருத்துவமனையில் சிகிச்சை பெற முடியாமல், உடனடியாக அவசரமாக அனைத்து வசதிகளும் கொண்ட தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றால், அந்தத் தொகையை நாம் கொடுக்க வேண்டும்; E.S.I. மூலமாக அந்தத் தொகையை நாம் settle செய்ய வேண்டும். ஆனால், 23,620 தொழிலாளர்களுக்கு கடந்த காலங்களில் 27 கோடி ரூபாய் கொடுக்கப்படாமல் இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் அந்தத் தொகை விடுவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட அதிநவீன வசதியுடன்கூடிய E.S.I. மருத்துவமனை ரூ.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனை வரும் செப்டம்பர் மாதம் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடியில் 100 படுக்கைகள் கொண்ட அதிநவீன வசதியுடன்கூடிய E.S.I. மருத்துவமனை ரூ.138 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீபெரும்புதூரில் 100 படுக்கைகள் கொண்ட அதிநவீன வசதியுடன்கூடிய E.S.I. மருத்துவமனை ரூ.177 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும்போது ஏற்படும் விபத்துகளினால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு விபத்து அவசர சிகிச்சை அளிக்கும் வகையிலும், பெரும் காயமுற்று அவதிப்படும் தொழிலாளர்களுக்கு விரைவில் குணமடையும் வகையில் plastic surgery செய்யும் வகையில் நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய அவசர விபத்து சிகிச்சை மருத்துவமனை விருதுநகர் மாவட்டத்தில் துவக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் தொழிலாளர் நலத் துறை எடுத்து வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 மார்ச் 29] [திரு. சி.வி. கணேசன்]

உழைப்பாளர்கள் செழித்து வளரும் நாடுதான், செம்மாந்து நிற்க முடியும். அவர்களின் வியர்வைத் துளிகளை மதிக்கின்ற இடத்தில்தான் மகத்தான சாதனைகள் நிகழும். உழைப்பவர்கள் வயிற்றைப் புறக்கணித்துவிட்டு, ஒருபோதும் முன்னேற்றத்தைக் காண முடியாது. நமது அரசு உழைப்பவர்கள் காயங்களுக்கு ஒத்தடம் கொடுக்கும் அரசு; நமது தளபதியின் அரசு உழைப்பவர்கள் காயங்களுக்கு ஒத்தடம் கொடுக்கும் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் கண்ணீர்த் துளிகளைக் களைகின்ற அரசு; அவர்களின் முகத்தில் புன்னகைப் பூக்களை பொருத்திப் பார்க்கின்ற அரசு. தொழிலாளர்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி, அவர்கள் வாழ்வில் வசந்தம் வீச வைக்கின்ற அரசு, நமது அரசு. நன்றி.

தலைமைச் செயலாளர் உயர்திரு வெ. இறையன்பு, I.A.S. அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்கள் உயர்திரு த. உதயசந்திரன், I.A.S. அவர்களுக்கும், உயர்திரு பு. உமாநாத், I.A.S. அவர்களுக்கும், உயர்திரு ம.சு. சண்முகம், I.A.S. அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் உயர்திரு முகமது நசிமுத்தீன், I.A.S. அவர்களுக்கும், முதன்மைச் செயலாளர்/தொழிலாளர் ஆணையர் உயர்திரு டாக்டர் அதுல் ஆனந்த், I.A.S. அவர்களுக்கும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் உயர்திரு கொ. வீர ராகவ ராவ், I.A.S. அவர்களுக்கும், E.S.I. மருத்துவமனை இயக்குநர் உயர்திரு டாக்டர் ராஜமூர்த்தி அவர்களுக்கும், தொழிலக பாதுகாப்புத் துறை இயக்குநர்/சுகாதார இயக்குநர் டாக்டர் M.V. செந்தில்குமார் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறையில் பணியாற்றக்கூடிய அனைத்து அரசுத் துறை அலுவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து 160 வெட்டுத் தீர்மானங்கள் வரப்பெற்றுள்ளன. அனைத்திற்கும் பதில் அளித்துள்ளேன். உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களின் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிப்புகளை விரைவாகப் படித்துவிடுகிறேன்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவருக்கும் அறிவிப்புகள் புத்தகம் வழங்கப்பட்டுள்ளதால் தலைப்புகளை மட்டும் படித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: தலைப்புச் செய்திகளைத்தான் படிக்கிறேன். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மூக்குக் கண்ணாடி உதவித் தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மூக்குக் கண்ணாடி உதவித் தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் சுமார் 550 பதிவு பெற்ற தொழிலாளர்கள் ஒவ்வோர் ஆண்டும் பயன்பெறுவார்கள்.

2. 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள், தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு 25 ஆயிரம் ரூபாயும், பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு 50 ஆயிரம் ரூபாயும் ஊக்க உதவித் தொகையாக வழங்கப்படும்

18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள், உரிய அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் தேசிய அளவில் பங்கேற்கும்பொழுது பங்கேற்கும் ஆண்டில் ஒருமுறை மட்டும் 25 ஆயிரம் ரூபாயும், பன்னாட்டளவில் பங்கேற்கும்பொழுது பங்கேற்கும் ஆண்டில் ஒரு முறை மட்டும் 50 ஆயிரம் ரூபாயும் ஊக்க உதவித் தொகையாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள், தகுதியின் அடிப்படையில் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT),

2023 மார்ச் 29] [திரு. சி.வி. கணேசன்]

இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் (எம்.பி.பி.எஸ்.) சேர்க்கை பெறும்பொழுது கல்விக் கட்டணம், தங்கும் விடுதி முழுக் கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவுக்காக ஒவ்வோர் ஆண்டும் 50 ஆயிரம் ரூபாயும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள், தகுதியின் அடிப்படையில் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் (எம்.பி.பி.எஸ்.) சேர்க்கை பெறும்பொழுது கல்விக் கட்டணம், தங்கும் விடுதி முழுக் கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவுக்காக ஒவ்வோர் ஆண்டும் 50 ஆயிரம் ரூபாயும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும். இதனால், சுமார் 35 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித் தொகை 1.25 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், அன்னாரது குடும்பத்திற்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித் தொகை 1.25 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

5. புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தினால் உயிரிழக்க நேரிட்டால் அவர்களின் உடலை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்ல தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் நிதியுதவி வழங்கப்படும்

தமிழ்நாட்டில் வாழும் கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தினால் உயிரிழக்க நேரிட்டால் அவர்களின் உடலை, உடல் கூராய்வுக்குப் பின்னர் மருத்துவமனையிலிருந்து அரசு அமரர் ஊர்திமூலம் சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்காக ஏற்படும் செலவினம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள்

நல வாரியத்தால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக வழங்கப்படும்.

புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள், பணியிடத்தில் விபத்தினால் உயிரிழக்க நேரிட்டால் அவர்களின் உடலை, உடல் கூராய்வுக்குப் பின்னர் அரசு அமரர் ஊர்தி/தொடர் வண்டிமூலம் எடுத்துச் செல்ல ஆகும் தொகையும், ஆகாய விமானம்மூலம் சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதெனில் அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியாகச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் வழங்கப்படும்.

6. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 60 வயதுக்குட்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில், தீவிர நோய் பாதிப்பு நலத் திட்ட உதவித் தொகையாக ஆண்டொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் முதற்கட்டமாக மூன்றாண்டுகளுக்கு அறிமுகப்படுத்தப்படும்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 60 வயதுக்குட்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில், இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை, டயாலிசிஸ், புற்றுநோய், ஆஸ்துமா (Moderate and Severe Persistant), சிலிக்கோசிஸ் மற்றும் பக்கவாதம் ஆகிய தீவிர நோய்களால் பாதிக்கப்பட்டு, பணி செய்ய இயலாமல் சிகிச்சை மேற்கொண்டு வரும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, தீவிர நோய் பாதிப்பு நலத் திட்ட உதவித் தொகையாக ஆண்டொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் முதற்கட்டமாக மூன்று ஆண்டுகளுக்கு அறிமுகப்படுத்தப்படும்.

இந்நிதியுதவியானது 6 மாதங்களுக்கு ஒரு முறை விடுவிக்கப்படும். இதற்கென ஆண்டுக்கு 60 இலட்சம் ரூபாய் வீதம் மூன்றாண்டுகளுக்கு 1.80 கோடி ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும். இத்திட்டத்தினால் சுமார் 1,500 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

7. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் பணியின்போது

2023 மார்ச் 29] [திரு. சி.வி. கணேசன்]

விபத்து மரணம் அடையும் நேர்வில் 5 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும்

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் பணியின்போது விபத்து மரணம் அடையும் நேர்வில், அவர்களது குடும்ப நலன் கருதி 5 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும்.

இதற்கான உத்தேச செலவினம் 25 இலட்சம் ரூபாய் ஆகும். இச்செலவினம் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் அனுபவத்தின்மூலம் பெற்ற திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 4,000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர் மற்றும் எலக்ட்ரீசியன் ஆகிய கட்டுமானப் பணிகளில் புதிதாக ஈடுபட்டு வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களில் ஆண்டொன்றுக்கு 1,000 நபர்களுக்கு திறன் பயிற்சி ஆகியவை 4.74 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு கட்டுமானக் கழகம்மூலம் அளிக்கப்படும்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள், அனுபவத்தின்மூலம் பெற்ற திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 4,000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர் மற்றும் எலக்ட்ரீசியன் ஆகிய கட்டுமானப் பணிகளில் புதிதாக ஈடுபட்டு வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களில் ஆண்டொன்றுக்கு 1,000 நபர்களுக்கு திறன் பயிற்சி அளித்தல் ஆகியவை தமிழ்நாடு கட்டுமானக் கழகம்மூலம் 4.74 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

9. 1950, 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் துவக்கப்பட்ட 27 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்கட்டமைப்பு

மற்றும் அடிப்படை வசதிகள் 18.70 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்

1950, 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் துவக்கப்பட்ட 27 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், திறன் பயிற்சி பெறுவதற்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்கிடவும் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் 18.70 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

10. 25 இலட்சம் ரூபாய் செலவில் அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களின் திறன் மேம்பாட்டினை அதிகரித்தல்

தொழிற்பயிற்சி நிலையங்களில் கருத்தியல் பயிற்சியினைவிட செய்முறைப் பயிற்சியே முக்கியத்துவமாக உள்ள நிலையில், தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்படும் நவீன தொழில்நுட்ப மாறுதல்களுக்கேற்ப பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டும், நவீன கற்பித்தல் உத்திகள், தொழிற்சாலைகளின் நவீன போக்கு, நவீன தொழில்நுட்பங்கள் போன்றவற்றில் முன்னணித் தொழிற்சாலைகள்மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் 100 பயிற்றுநர்களுக்கு 6 வார கால அளவில் 25 இலட்சம் ரூபாய் செலவில் அறிவுத்திறன் பயிற்சி அளிக்கப்படும்.

11. கட்டுமானப் பணியிடங்களில் பாதுகாப்பாகப் பணிபுரிவது தொடர்பான காணொளிக் காட்சிகள் (Videos) 30 இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்படும்

கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர் உள்ளிட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாகப் பணிபுரிவது தொடர்பான செயல்முறைகள் குறித்து உடையக்கூடிய கூரையில் பாதுகாப்பாகப் பணிபுரிவது உள்ளிட்ட 3 விழிப்புணர்வு காணொளிக் காட்சிகள் (Videos) தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் 30 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து தயாரிக்கப்படும்.

12. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த குறும்படம் 10 இலட்சம் ரூபாய் செலவில் தயாரித்து வெளியிடப்படும்

சமீப காலமாக தொழிற்சாலைகளில் குறுகிய இடத்தில் (Confined Space) பணிபுரிவது போன்றவை விபத்துகள் ஏற்படுத்தக்கூடிய காரணியாக உள்ளது. அறியாமையால் பாதுகாப்பு அம்சங்கள் தொழிலாளர்களால் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படும் விபத்துகளைக் குறைக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 10 இலட்சம் ரூபாய் செலவில் குறும்படம் தயாரித்து வெளியிடப்படும்.

13. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் செயல்படும் தொழில் சுகாதார ஆய்வகம் மேம்படுத்தப்படும் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்யப்படும்

தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடு மேற்கொள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் இயங்கிவரும், தொழில் சுகாதார ஆய்வகம் தற்போதுள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கேற்ப மேம்படுத்தப்படும். மேலும், அபாயகரமான செயல்முறை தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களது உடல் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மருத்துவ அலுவலர்களின் உபயோகத்திற்கென மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்யப்படும். இவற்றிற்காக 19.50 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

14. அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் மயக்கமருந்தியல், காது, மூக்கு, தொண்டை மருத்துவம் மற்றும் குழந்தை மருத்துவம் ஆகிய பிரிவுகளில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்குப் பிறகான இரண்டு ஆண்டு பட்டயப் படிப்புகள் 1.23 கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும்

நேசனல் போர்டு ஆப் எக்சாமினேசன் இன் மெடிகல் சயின்ஸ் (NBEMS) அமைப்பால் நடத்தப்படும் எம்.பி.பி.எஸ். படிப்பிற்குப் பிறகான இரண்டு ஆண்டு பட்டயப் படிப்புகள் NBEMS–DIPLOMA மயக்கமருந்தியல், காது, மூக்கு, தொண்டை மருத்துவம் மற்றும் குழந்தை மருத்துவம் ஆகிய பிரிவுகளில் அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 1.23 கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீண்ட நேரம் பேசி சோதனைக்குள்ளாக்க மாட்டேன். (சிரிப்பு) அவை முன்னவர்தான் எப்படி கட்டுப்பாடோடு இருக்க வேண்டுமென்று மற்ற உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எடுத்துக்காட்டு.

பிற்பகல் 1–45

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நீர்வளத் துறை மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றி, அரிய, பெரிய கருத்துகளை வழங்கிய அனைவருக்கும் முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையில் என்னென்ன செய்ய வேண்டுமென்பதை வெட்டுத் தீர்மானங்கள்மூலம் அறிவுறுத்திய அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கிறபோது, அது ஏதோவொரு வெட்டித் தீர்மானம் என்பதல்ல. அந்தத் தீர்மானத்தில் எதைப் பற்றிக் கேட்கிறீர்களோ, அந்தக் கோரிக்கை, சம்பந்தப்பட்ட Taluk Office, Panchayat Union வரை சென்று அதற்கு ஒரு விதை போட்டுவிட்டுத்தான் வருகிறது. எனவே, ஒரு கேள்வி கேட்கிறீர்கள் என்று சொன்னால், அந்தக் கேள்வியினுடைய தத்துவத்தை அது எங்கு பிறக்கிறதோ அங்கிருந்துதான் எடுக்கிறார்கள். எனவே, கேள்வி கேட்பதும், வெட்டுத் தீர்மானங்கள் தருவதும் ஒரு மன்றத்தின் உறுப்பினருடைய தலையாயக் கடமையாகக் கருதப்பட வேண்டும். அதைச் செய்திருக்கிற அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேசியவர்கள்போக, மற்றவர்கள் இவ்வளவு நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தீர்களே, உங்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989–லிருந்து எப்போதெல்லாம் நான் இந்தத் துறைக்கு அமைச்சர் ஆகின்றேனோ, அப்போதெல்லாம் நான்தான் இந்தத் துறைக்காக மானியக் கோரிக்கையில் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். எத்தனை முறை சொன்னேன் என்று எனக்கும் தெரியாது; எத்தனை பேர் கேட்டார்கள் என்று யாருக்கும் தெரியாது. எனவே, மீண்டும் அந்தத் துறையை எங்கள்

தலைவர் அவர்கள் என்னிடத்தில் ஒப்படைத்தார்கள். மூத்தவன் என்ற முறையில் என்னிடம் கேட்டார்கள், உங்களுக்கு எந்த மாதிரி இலாகா தேவைப்படும் என்று கேட்டார்கள். நீர்வளத் துறைதான் எனக்குத் தேவை என்று நான் உடனே சொன்னேன். ஆனால், அதில் Public Works Department Minister என்ற name இருக்காதே என்றார். எனக்கு name–ஐப் பற்றி கவலையில்லை. ஆனால், இந்தத் துறையில்தான் குடியானவனுக்கு, விவசாயிக்கு என்னால் ஏதாவது செய்ய முடியும் என்று கருதுகிறவன் நான் என்றேன்.

காரணம், தலைவர் கலைஞர் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது 'துரை, உன் இலாகாவில் ஏதாவது புதிதாகச் சொல்ல வேண்டுமேயா' என்று ஒருநாள் சொன்னார்கள். கேட்டார்கள். உடனே நான் சொன்னேன்; அப்போது மின் கட்டணத்தை 12 பைசாவிலிருந்து 13 பைசாவாக increase செய்ததற்காக, 1 பைசாவிற்காக நாராயணசாமி நாயுடு என்பவர் ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார். அந்தப் போராட்டம்தான் பெருமாநல்லூர் போராட்டம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அப்போது தலைவர் அவர்கள் உடனேயே சொன்னார், 'ஒரு பைசாவிற்காக போராடுகிறாரே இவர். இனிமேல் எந்தவொரு விவசாயியும் 5 Horse Power, 10 Horse Power என்று எத்தனை Horse Power மோட்டார் போட்டிருந்தாலும் சரி, ஒரு பைசாகூட மின்சாரக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்ற உத்தரவை நாம் போடுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீ போய் உடனே file–ஐ கொண்டு வா' என்றார். நான் உடனடியாகச் சென்று file–ஐ ready செய்தேன். முருகராஜ் என்பவர் அப்போது Secretary ஆக இருந்தார். பச்சையப்பன் கல்லூரியில் என்னுடைய senior. அவர் file–ஐ கொண்டுவந்து என் முன்னால் வைத்தார். File–ல் கையெழுத்திடும் நேரத்தில் என்னுடைய கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென்று கொட்டியது. என்ன Sir, ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டார். எங்களிடம் 3 pumpset இருக்கின்றன; மூன்றிலும் தண்ணீர் இல்லை. ஆனால், 2 மாதங்களுக்கு ஒருமுறை bill வரும். எங்கள் அம்மாவின் நகைகளெல்லாம் இதனாலேயே போய்விட்டன என்று சொன்னேன். அப்படிப்பட்ட அந்தக் குடியானவனுடைய மகன், இனிமேல் எந்தக் குடியானவனும் bill செலுத்தக் கூடாது என்று ஆணையிடக்கூடிய ஒரு வாய்ப்பை என் தலைவர் எனக்குக் கொடுத்தாரே! (மேசையைத் தட்டும் ஒலி) நான் அமைச்சராக இருந்ததற்கு இது ஒன்று போதும் என்று சொன்னேன். ஆகவே,

இந்தத் துறைமூலம் ஏதாவது செய்கிறபோது, அதாவது, தண்ணீர் வந்தது, பாசனத்திற்கு கிடைத்தது என்று சொல்கிறபோது குடியானவன் என்ற முறையில் எனக்கு ஒரு மகிழ்ச்சி. ஆகையினால், எனக்கு இந்த இலாகாதான் வேண்டுமென்று நான் கேட்டேன். தலைவர் அவர்களும் தந்தார்கள். எனவே, அவருக்கும் இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையை எடுத்து முதன்முறையாக நான் பேச வந்த அன்றைக்கு, இங்கு நான் பேச எழுந்தவுடனேயே, என்னுடைய பேச்சை திடீரென இடைமறித்து எழுந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், என்னைப் பற்றி அன்றைக்கு தன் மனதில் பட்டதையெல்லாம் சொல்லி பாராட்டிப் பேசினார்கள். இங்கு உட்கார்ந்திருக்கும் மாபெரும் தலைவர்களும் பாராட்டிப் பேசினீர்கள். அதுதான் என் ஞாபகத்திற்கு வந்தது. என்னைப் பொறுத்தவரையில், நீண்ட நெடுங்காலம் எங்கள் கட்சியில் இருந்தவன் நான். இன்னும் இருக்கப் போகிறவன். என்றைக்காவது ஒரு நாள் மறையப் போகிறவன். மறைந்துவிட்ட அன்றைக்கு எனக்கென்று எடுக்கிற அந்தப் புதைகுழிமீது, அந்த சமாதியில், ஒரு வரி எழுதினால் போதும். 'கோபாலபுரத்து விசுவாசி இங்கே உறங்குகிறான்' என்று எழுதியிருந்தால் போதும். என் தலைவர் கலைஞருக்கு கோபாலபுரத்து விசுவாசியாகவே நான் வாழ்ந்தேன். இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 100 ஆண்டுகளைக் கடந்து வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நிச்சயமாக. (சிரிப்பு) அதையும் சொல்லிவிடுகிறேன். நானும், தலைவரும் Governor–ஐப் பார்க்கப் போனோம். சண்டை போட்டதற்குப் பிறகு tea–க்கு கூப்பிட்டிருந்தார்; போனோம். அப்போது என் வயதைப்பற்றி அவர் கேட்டார். அண்ணன் முதல்வர் சொன்னார். 53 வருடங்களுக்கும் மேலாக எங்கள் அப்பாகூடவே இருந்தவர்; இப்போது என்னோடு இருக்கிறார் என்றார். அந்தப் பக்கம் உதயா உட்கார்ந்திருந்தார். இப்போது உதயாகூடவும் இருக்கிறார் என்று இவர் சொன்னார். நான் Governor–க்குச் சொன்னேன். உதயாவுக்கு ஒரு பையன் இருக்கிறான். அவன்கூட நான்தான் இருப்பேன் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் What is

your age? என்று கேட்டார். I am nearing 80, but I am crossing 100 definitely என்று நான் சொன்னேன். என்றைக்குமே தனக்கு வயதாகிவிட்டது என்று நினைக்கக் கூடாது என்று, அதையும் சொல்லிக் கொடுத்தவர் எங்கள் தலைவர்தான்; எப்போதும் இளமையிலேயே நிற்க வேண்டுமென்று. LIFT-ல் இறங்குவோம்; அந்த lift-ல் இறங்கும்போதுகூட collar-ஐ எல்லாம் சரி செய்து கொண்டு இறங்குவார். நான் அப்போது இப்போது என்ன? என்று கேட்பேன். தவிடு அள்ளுகிற வரைக்கும் நாம் நிற்க வேண்டும். அதை இளமை என்று சொல்வார். அதனால் hundred years நிச்சயமாக இருப்பேன்; நீங்கள் கவலைப்படாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருடைய வாழ்த்தும் உங்களுக்கு இருக்கிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நன்றி. நன்றி. அதேபோன்று, இந்த மன்றத்தில் அவை முன்னவர் என்ற முறையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல; எதிர்க்கட்சியிலே அமர்ந்திருக்கிற நண்பர்களும் என்னிடத்திலே காட்டுகிற மரியாதைக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். காரணம், எல்லோரும் பல ஆண்டு காலம் ஒன்றாகப் பழகிவிட்டவர்கள். இந்த இடத்தில் நான் அதிகமான நேரம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை. எல்லோரும் அவர்களுடைய தொகுதியைப்பற்றிப் பேசினார்கள். நம்முடைய உறுப்பினர் உதயகுமார் அவர்கள்தான் வழக்கமாக கொஞ்சம் கூட பேச வேண்டுமென்று பேசினார். அதையும் பேசாவிட்டால் ஒன்றுமே இருக்காது எனக்கு. ஆக, நான் கொஞ்சமாவது பேச வேண்டுமென்பதற்காகப் பேசினார். அவர் சொன்னார்; குடிமராமத்து செய்யுங்கள் என்று சொன்னார். நல்ல வேலைதான்; செய்யலாம். ஒரு காலத்தில் அதைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். குடிமராமத்து மூலமாகத்தான் செய்து கொண்டிருந்தார்கள். பழையபெயர் அது; பழைய காலத்து பெயர் அது. ஆனால், இப்போது Court-லேயே சொல்லிவிட்டார்கள். இதற்கு பாசனச் சங்கங்கள் அமைக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். இப்போது ஏதாவது செய்ய வேண்டுமென்றால், பாசனச் சங்கத்தின் மூலமாகத்தான் செய்ய வேண்டுமென்று Court-ல் ஒரு order போட்டிருக்கிறார்கள். சில Society தலைவர்களெல்லாம் இதிலே கொஞ்சம் கிடைக்கிறதென்று சொல்லிவிட்டு, இதிலே இறங்கிவிட்டார்கள். அதனால், அதெல்லாம் முடியாது.

[திரு. துரைமுருகன்] [2023 மார்ச் 29

இரண்டாவது, எல்லா இடங்களிலும் நீங்களும் நிறைய ஏரிகளில் தூர் வாரியிருக்கிறீர்கள்; நாங்களும் தூர் வாரியிருக்கிறோம்; examine செய்திருக்கிறோம். Panchayat Union எடுத்திருக்கிறோம். எல்லா ஏரி, குளங்களிலும் இப்போது தண்ணீர் நிரம்பியிருக்கிறது. இப்போது மராமத்துக்கே வேலை கிடையாது. அதனால் தண்ணீர் இருக்கிறது. ஆனாலும், எல்லா இடங்களிலும் ஒரேமாதிரி செய்யக் கூடாது. முதலில் நீர் இல்லாத பகுதி அதாவது over exploited area எது, critical ஆக இருக்கும் area எது, semi critical area எது, safe எது, saline எது, உப்புத் தண்ணீர் வருகிற area எது என்று இதுபோன்று நிலத்தை ground water தன்மையின் அடிப்படையில் பிரிக்கிறோம். அப்படிப் பிரித்துப் பார்க்கிறபோது, இங்கே நமக்கு இப்போது 360 இடங்கள் over exploited area ஆக இருக்கிறது. அந்த இடங்களையெல்லாம் இப்போது நாங்கள் தேர்ந்தெடுத்து அந்த இடங்களில் check dam கட்டுகிறோம். ஏனென்றால், check dam கட்டினால்தான் அந்த இடத்தில் தண்ணீர் ஊறும். மாயனூர் உங்களுக்குத் தெரியும். அந்த check dam–ஐ ஆரம்பித்து கட்டியவன் நான்தான். அதற்குப் பிறகு நீங்கள் வந்து கொஞ்சம் செய்தீர்கள். மாயனூரை அந்த check dam கட்டுவதற்கு முன்பு பார்த்திருந்தீர்களென்றால், வறண்ட பிரதேசம். ஆனால், அதனுடைய விளைவு இன்றைக்கு வளம் கொழிக்கிற இடமாக அது மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 60 check dams, 70 check dams சென்ற ஆண்டு, இந்த ஆண்டு என எல்லாவற்றையும் சேர்த்து கிட்டத்தட்ட 70 check dams கட்டுகிறோம். 1,000 check dams கட்டுவீர்களா என்று, அவர் கேட்டார். கட்டுவோம்; பத்து அல்லது இருபது ஆண்டுகளில் கட்டமாட்டோமா? நாங்கள்தான் இருபது ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியில் இருக்கப் போகிறோம். (சிரிப்பு) ஆகையால், கட்டி முடித்துவிடுவோம். கவலை வேண்டாம். அது ஒன்று.

பிற்பகல் 1–55

மேலும், காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார். நாங்கள் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறோம்; அதையொன்றும் நாங்கள் விட்டுவிடவில்லை. நேற்றைக்கு முந்தையதினம்கூட, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஓர் அரசாங்கம் நடத்துகிற திட்டத்தை அடுத்து வருகிற அரசாங்கம், அந்தத் திட்டத்தை விட்டுவிடக் கூடாது என்று சொன்னார்; அது எனக்குப் பிடித்திருந்தது. ஏனென்றால், அதுபோன்றுதான் நாம்

செய்துவிடுகிறோம். நீங்கள் செய்து கொண்டிருப்பீர்கள். கருமேனியாறு–தாமிரபரணி ஆறு இணைப்புத் திட்டம் 2009 ஆம் ஆண்டில் நான்தான் ஆரம்பித்தேன். கலைஞர் அவர்கள் ஆரம்பித்துவிட்டு வந்தார்கள். இப்போது வரையிலும், இன்னும் அத்திட்டம் முடிவடையவில்லை; இன்னும் இழுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் திட்டப் பணிகளை முடிவடைகின்ற stage–க்குக் கொண்டுவந்துவிட்டீர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அதை அவர் correct ஆகப் பார்ப்பார். அவர் correct ஆக இருப்பார். (சிரிப்பு) ரூ.390 கோடியிலிருந்து எத்தனையோ கோடி ரூபாய்க்கு போய்விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று வந்தவுடனே, அந்தத் திட்டப் பணிகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்து, அதை உடனே முடிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்தார்கள். அந்தப் பணிகளை வேகப்படுத்தினோம். ஆகையினால், இடையில் சுமார் இருபதாண்டுக் காலம் அதைக் கிடப்பில் போட்டதற்கு யார் காரணம்? அதைப்போன்று, (குறுக்கீடு) இல்லை, நாங்கள் இல்லை. நீங்கள் சரபங்கா நதி திட்டம் ஆரம்பித்தீர்கள். நாங்கள் உடனே, அந்தத் திட்டத்தை விட்டுவிட்டோமா? உடனே சரபங்கா நதி திட்டத்தை நாங்கள் வேக, வேகமாக ஆரம்பித்து, நீங்கள் செய்த வேலைகளையெல்லாம் கொண்டு வந்துவிட்டோம். காவேரி–குண்டாறு திட்டம்போல், சரபங்கா நதி திட்டத்தை நீங்கள் ஆரம்பித்ததை, அய்யய்யோ, அவர்கள் ஆரம்பித்து விட்டார்களே என்று நாங்கள் பார்க்கவில்லை. குழாய் பதிக்கும் பணி, அதுவொன்று. அதேபோன்று பட்டா நிலங்களை எடுப்பது, நேரத்தில் நீர் நிரப்புவது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும், திப்பம்பட்டி என்ற ஊரில் ஏரிக்கு கொண்டு போனார்கள்; அதற்குப் பிறகு எம். காளிப்பட்டிக்கு கொண்டு போனோம். இப்போது எல்லா ஊர்களுக்கும் போய்விட்டது; பணிகள் முடிவடைந்துவிட்டன. இன்னும் கொஞ்ச நாளில் திறக்கப் போகிறோம். நீங்கள் இரண்டாவது RE–ல்கூட நிதி கொடுக்காமல் போனீர்கள். நாங்கள் RE–ல் கொடுத்து வைத்திருக்கிறோம். அதைப்போன்றுதான்,

அத்திக்கடவு–அவினாசி திட்டம். அந்தத் திட்டத்தையும் அடுத்து வருகின்ற ஏப்ரல் மாதத்தில் திறக்கிற நிலைக்கு நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம். ஆகையால், ஒரு சர்க்கார் போட்டுவிட்டுச் சென்றதற்காக இல்லை; ஆனால், அதேநேரத்தில் I don't want to make any politics. இதுபோன்று பார்த்தீர்களென்றால், நான் ஆரம்பித்த திட்டம்தான் பொய்கையாறு திட்டம்; ஆனால், அதை நீங்கள் செயல்படுத்தவில்லை; நான் மறுபடியும் வந்து நடத்தினேன். நான் ஆரம்பித்த திட்டம்தான் கொடுமுடி ஆறு திட்டம்; இடையில் பத்தாண்டுக் காலம் அப்படியே போட்டுவிட்டீர்கள். பிறகு, நான்தான் வந்து அந்தத் திட்டத்தை முடித்துவைத்தேன். நான் ஆரம்பித்த திட்டம்தான் பச்சையாறு திட்டம்; ஆனால், அதை நீங்கள் நிறுத்திவிட்டீர்கள். நாங்கள் மறுபடியும் வந்து ஆரம்பித்தோம். நான் ஆரம்பித்த திட்டம்தான் அடவிநயினார் நதித் திட்டம்; நீங்கள் வந்து, இருபது வருடங்கள் அந்தத் திட்டம் நின்றுவிட்டது. நாங்கள் வந்து அதைச் செயல்படுத்தினோம். நாங்கள் ஆரம்பித்த திட்டம்தான் மோர்தானா திட்டம்; ஆனால், நீங்கள் அந்தத் திட்டத்தை விட்டுவிட்டீர்கள்; நாங்கள் வந்துதான் மறுபடியும் ஆரம்பித்தோம். ஆகையால், அந்த மாதிரி வேலைகளையெல்லாம் செய்வது என்பது ஓர் அரசாங்கம் அல்ல. ஓர் அரசாங்கம் செய்ததை இன்னொரு அரசாங்கம் செய்ய வேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்து எதுவும் கிடையாது. ஆகையினால், அதைச் செய்கிறோம்.

இரண்டாவது, நடந்தாய் வாழி காவேரி. அந்தத் திட்டத்தை இப்போது என்ன செய்தீர்கள் என்று கேட்டார். ஒன்றுமில்லை, நீங்கள்தான் ஆரம்பித்தீர்கள். அது நல்ல திட்டம்; வரவேற்கிறேன். நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்காக நீங்கள் என்ன செய்தீர்கள்? நீங்கள் அறிவித்து, in principle approval ஆக ரூ.11,700 கோடிக்கு ஒரு திட்டத்தைக் கொடுத்தீர்கள். அவர்கள் ஒரு DPR தயார் செய்து கொண்டு வாருங்கள் என்று உங்களைச் சொன்னார்கள். அதற்குள் உங்கள் ஆட்சி போய்விட்டது. சரி போய்விட்டதே, போகட்டும் என்று நாங்கள் விடவில்லை. நாங்கள் என்ன செய்தோம், DPR தயாரிக்கும் பணியை, இன்றைக்கு ஒரு பெரிய கம்பெனியிடம் ஒப்படைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, அதன் first phase–க்கு ரூ.3,900 கோடி மதிப்பீட்டிற்குக் கருத்துரு தயாரித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பிவிட்டோம். ஆகையினால், நாங்கள் நடந்தாய் வாழி காவேரியை நடுரோட்டில் விட்டுவிடவில்லை. அதை நடத்திக்கொண்டுதான் இருக்கிறோம்.

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

அடுத்து, தாங்கள் பேசியதில் முக்கியமானது, வண்டல் மண் எடுப்பது குறித்து. மேட்டூரில் தண்ணீர் குறைந்துவிட்டபோது, வண்டல் மண்ணை எடுத்துக்கொள்ளட்டுமா என்று மக்கள் கேட்டார்கள்; எடுத்துக்கொள்ளுங்கள் என்றார்கள். ஆக, தண்ணீர் குறைந்து போனால், எடுக்கலாம்; தண்ணீர் இருக்கிறபோது நாம் எவ்வாறு எடுக்கச் சொல்வது? ஆகையினால், தண்ணீர் குறைந்து போனால், நான்கூட எடுத்துக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்வேன். நான் வேண்டாம் என்று சொல்லமாட்டேன்.

அடுத்து, ஆனைமலையாறு திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்; பேசிக்கொண்டுதான் சார் இருக்கிறோம்; நீங்களும் பேசினீர்கள்; நாங்களும் பேசுகிறோம். இதோ வருகிறோம்; அதோ வருகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், நேற்றுகூட எங்கள் துறை Secretary*–யிடம் பேசியிருக்கிறேன். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பிறகு. . .*

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நீங்கள் கூறியதுபோன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அந்த மாநில முதலமைச்சர் அவர்களும் நெருக்கமான நண்பர்கள்தான். நிச்சயமாக தளபதியினுடைய ஆட்சியில்தான்* PAP *திட்டம் நிறைவேறும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)* I have got the confidence. *முயற்சி எடுக்கிறோம்; முடித்துவிடுவோம். அந்தத் திட்டத்திற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.*

இங்கே மற்றொரு நண்பர், எங்கள் கோதையாறு அணை திட்டத்திற்கு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என்று கூறினார்; கஷ்டமாகத்தான் இருக்கிறது. நான் அந்தப் பகுதியிலுள்ள கால்வாய்கள் பற்றிய அனைத்து விஷயங்களையும் இரண்டு நாட்களாகப் படித்தேன்; எல்லாவற்றையும் indepth *ஆக யோசித்துவிட்டேன்; அதன் நிலைமை என்னவென்று பார்த்தேன். கோதையாறு பாசனத் திட்டத்தைப் புனரமைக்கிற விரிவான திட்ட அறிக்கை ரூ.2.59 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது; இது ஒன்று. மேலும், உலக்கை அருவியில் அணை கட்டுவதற்காக ரூ.2 கோடி ரூபாயில்*

அறிக்கை தயாரிக்கும் பணியை முடித்திருக்கிறோம். கோதையாறு பாசனத்தின் கீழுள்ள அனைத்துக் கால்வாய்ப் பணிகளும் மூன்று ஆண்டுக் காலத்திற்குள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தோடு நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அந்த ஊரில் பணி செய்வது மிகவும் கஷ்டம். அங்கு ரோடும், கால்வாயும், கரையும் ஒன்றாகிவிட்டது. அங்குள்ள ஏரிகளைத் தூர்வார முடியாது. தூர்வாரினால், அனைத்து ஏரிகளின்மீதும் ரோடுதான் இருக்கும். மண்ணை வாரினால் ரோட்டில்தான் போட வேண்டும். ஆகையினால், மண்ணை எடுக்க முடியாது. அதற்காக மண்ணை வாரிக்கொண்டு போய்விடவும் முடியாது. மிகவும் கஷ்டமான நிலையில் விவசாயம் செய்கிறவர்கள் நாஞ்சில் நாட்டு மக்கள். அதை நான் உணர்ந்திருக்கிறேன்; பார்த்திருக்கிறேன். ஆகையினால்தான், கலைஞர் அவர்கள் அந்தக் காலத்திலேயே சிற்றாறு–1 மற்றும் 2 அணை கட்டி, ஊத்துக் கால்வாய் கொண்டு வந்து, கோதையாற்றில் கொடுத்தார்கள். ஆகையினால், நிச்சயமாக அந்தப் பணி செய்யப்படும் என்கிற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு நண்பர், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்திராஜன் அவர்கள், குடகனாறு அணையில் 27 அடிக்கு பதிலாக 22 அடியில்தான் தண்ணீர் நிற்கிறது என்று கூறினார்; அது சரிதான். ஷட்டர் போடவில்லை; அதனுடைய விளைவுதான் அது. தற்போது நாங்கள் vertical ஆக ஷட்டர் தயார் செய்து பொருத்துவதற்கு, வைத்திருக்கிறோம். ரூ.14.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. ஷட்டர் மாற்றப்பட்டவுடனேயே, தண்ணீரை 27 அடிக்கு கொண்டு வருவோம் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோருக்கும் நான் இன்னொன்றைச் சொல்லிக்கொள்கிறேன். பொதுவாக, PAP 18 டி.எம்.சி. அடி கொள்ளளவுக் கொண்டது. அங்கு திடீரென ஒருநாள், இரவு 2–00 மணிக்கு செயின் அறுந்து counterweight–ல் விழுந்து, நேராக ஷட்டர் உடைந்துவிட்டது. அப்போது, அதில் தண்ணீர் full ஆக இருந்தது. கடலே உடைந்து வெளியே செல்வதுபோன்று தண்ணீர் கீழே போகிறது. இந்த விஷயம் தெரிந்தவுடனேயே, தலைவர் அவர்களிடம் சொல்லிவிட்டு, உடனடியாக, வேகமாக அங்கு சென்று பார்த்தேன். அங்கு தண்ணீர்

செல்வதைப் பார்த்து, நான் அழுதுவிட்டேன். அதற்குக் காரணம், இந்தத் தண்ணீருக்குத்தானே நாம் கஷ்டப்பட்டு, ஒவ்வொரு சொட்டு, சொட்டாக சேர்க்கிறோம்; இப்படிப் போய்விட்டதே என்பதுதான். மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக பணத்தை ஒதுக்கிக் கொடுத்ததையடுத்து, 20 நாட்களுக்குள்ளாக ஷட்டரை மாற்றி, repair செய்திருக்கிறோம். அங்குள்ள ஷட்டர்கள் பொருத்தப்பட்டு 3 வருடங்கள் ஆகிவிட்டன. அங்குள்ள மூன்று ஷட்டர்களில் ஒன்றுதான் உடைந்துள்ளது. மீதமுள்ள 2 ஷட்டர்களில் பணிகள் மேற்கொள்ள வேண்டும். அந்த செயின் 1957 ஆம் ஆண்டு போடப்பட்டது; அந்த செயின்களில் துரு ஏறியிருக்கிறது. அதற்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. PAP–ல் அந்த வேலைகளையும் செய்ய வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகள் (குறுக்கீடு) நெய்யாறு அணை பற்றி நான் ஏற்கெனவே கூறினேனே! தண்ணீர் கேட்கவில்லையென்றால், நாம் என்ன கேட்டாலும் அவர்கள் கொடுத்துவிடுகிறார்கள். எனினும், மறுபடியும் நம்முடைய தலைவர் அவர்கள், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், நிச்சயமாக பரம்பிக்குளம்–ஆழியாறு மற்றும் முல்லைப் பெரியாறு திட்டங்கள் பற்றி அந்த மாநில முதலமைச்சர் அவர்களுடன் பேசுவார். அப்போது நிச்சயமாக இதைப் பற்றியும் பேசுவார்கள். அதற்குமேல் முக்கியமான ஒன்று, கடலோரப் பாதுகாப்புப் பணிகளில் வருகிறது, தண்ணீர் கொடுப்பது. திரு. மணி அவர்களைப் பார்த்தவுடன், எனக்கு அது ஞாபகம் வருகிறது.

பிற்பகல் 2–05

காவிரி ஆற்றின் பெரும் பகுதியில் கடல் நீர் இப்போது அதிகமாக உள்ளே புகுந்து நீரைக் கெடுத்துவிடுகிறது. அப்படிப் பார்த்தீர்களென்றால், காவிரி வட்டாரத்தில் காவிரியின் உப வடிநிலத்தில் மட்டும் 21 ஆறுகள், 410 வடிகால்கள் இருக்கின்றன. வெண்ணாறு உப வடிநிலத்தில் 14 ஆறுகள், 224 வடிகால்கள் இருக்கின்றன. ஆக, 36 இடங்களில் கடல் நீர் உள்ளே புகுந்திருக்கிறது. அடப்பாறு, அரிச்சந்திரா நதி, வெள்ளையாறு, கிட்டணை உப்பாறு, வெள்ளள்ளம் உப்பாறு, நெய்வாசல், முடிவனாறு, சக்கிலியன் வாய்க்கால், அக்கினியாறு, பருவராசியாறு ஆகிய நான் குறிப்பிட்ட பத்து இடங்களிலும் கடல் நீர் புகுவதை நாங்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், இப்போது மஞ்சளாற்றில் 7.89 கோடி ரூபாய், வீரசோழனாற்றில்

3.89 கோடி ரூபாய், மகிழமலையாற்றிலே 0.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இனி செய்ய வேண்டியவை என்று நாங்கள் வைத்திருப்பது முல்லையாற்றில் 10 கோடி ரூபாய் மதிப்பீடு, சேவகனாற்றிலே 12.50 கோடி ரூபாய், தேவனாற்றிலே 18.61 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பணிகளைச் செய்வதற்காக ஆய்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். கொள்ளிடம் ஆற்றில் 6.80 கோடி ரூபாய், கோதையாற்றிலே 21.31 கோடி ரூபாய், பாமணி ஆற்றிலே 25.90 கோடி ரூபாய், வரக்குவாரி ஆற்றிலே 7.5 கோடி ரூபாய். ஆக, இந்த இடங்களிலே பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மக்கள் விவசாயம் செய்ய முடியாமல் போய்விடுகிறது, குடிப்பதற்கு தண்ணீரும் இல்லை. எனவே, இதுமாதிரியான சில திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம். ஆகையினால், இந்தத் திட்டங்களெல்லாம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை நான் உங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் என்னைப் பார்க்கிறார். (குறுக்கீடு) உங்களைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒன்றும் இல்லையே! (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) Lascar கேட்கிறீர்கள். Lascar போட்டுவிடுவார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் கேட்பதில் ஒன்று உண்டு. எல்லா ஊர் பாசனத்திற்கும், தஞ்சை மாவட்ட பாசனத்திற்கும் வித்தியாசம் உண்டு. தஞ்சாவூரில் வேலை பார்த்த Engineer–களுக்குத்தான் அந்த detail தெரியும். வேலூரில் இருப்பவர்களைக் கொண்டு தஞ்சாவூரில் வேலைக்குப் போட்டால் அது அவர்களுக்கு என்னவென்று தெரியாது. ஆனால், Lascar என்ற வார்த்தையைக்கூட எங்களுடைய தலைவர் அவர்கள்தான் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். உங்கள் Engineer–குக்கூட தெரியாது; Lascar–க்குத்தான் தெரியும் என்று அவர் சொல்வார். அவர்தான் தண்ணீரை மடக்குபவர்; விவசாயிகளுக்கு அவரைத்தான் தெரியும் என்று Lascar–ஐ பற்றிச் சொன்னார். ஆனால், உங்கள் காலத்திலும் Lascar போடாமல் போய்விட்டீர்கள். (குறுக்கீடு) நான்தான் சொல்கிறேனே, எங்கள் காலத்திலும் போட முடியாத நிலையில் இருக்கிறோம். ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே,

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

அவரிடத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். Lascar போட்டால்தான், அவர்தான் நீர்ப்பாசனத் திட்டத்தை முழுமையாகச் செய்பவர். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி அவர்கள் எப்படி ஆதரிக்கிறார் என்று பாருங்கள். தஞ்சாவூர்காரர்களுக்குத்தான் அதனுடைய விவரம் தெரியும். தண்ணீரைக் கட்டுப்படுத்த Engineer யாருமே தேவையில்லை. ஆகையினால், Lascar போடுவதற்குத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று உங்கள் சார்பாக நானும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் காவிரியிலிருந்து வீணாகச் செல்லும் தண்ணீரை மறுபடியும் எங்கள் பகுதிக்கு எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார். காவிரியில் மீதமாகப் போகும் தண்ணீரை எடுத்து சரபங்கா என்று சொல்லிவிட்டார். காவிரியில், காளிங்கராயன் பின் பகுதியிலிருந்து வருகின்ற தண்ணீரைக் கொண்டுபோய் அத்திக்கடவில்—அதுவும் காவிரிதான், முடித்துவிட்டார்கள். அவர்கள் அதையேதான் இன்றைக்கும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு ஒரு திட்டம் தயாரிப்பில் இருக்கிறது. நிதிநிலைமை சரியானவுடன் நிச்சயம் அது கவனிக்கப்படும் என்ற உறுதியை திரு. மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அறிவிப்புகள் அதிகமாக இல்லாவிட்டாலும் ஓரிரு அறிவிப்புகளைப் படிக்க வேண்டுமென்று கருதுகிறேன். மீதமுள்ள அறிவிப்புகளை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

அறிவிப்புகள்

1. பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்ட பகுதிகளில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளைக் குறைக்க ஏதுவாக நீர் வழித்தடங்களில் பருவமழைக்கு முந்தைய பராமரிப்புப் பணிகள் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள ஓட்டேரி நல்லா, அரும்பாக்கம், விருகம்பாக்கம், ஆதம்பாக்கம், நாராயணபுரம் பக்கிங்காம் கால்வாய் ஆகிய நீர் வழித்தடங்களில், குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்புப் பணிகள் மற்றும் கூவம், எண்ணூர், பழவேற்காடு, முட்டுக்காடு, அடையாறு போன்ற முகத்துவாரங்களில், மணல் படிமானங்களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பள்ளிக்கரணை, கீழ்க்கட்டளை, செம்பாக்கம், பெரும்பாக்கம், நாட்டு கால்வாய், பாப்பான் கால்வாய் ஆகியவற்றில் குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஓரத்தூர் ஓடை, ஆதனூர் கால்வாய், நீலி கால்வாய் ஆகியவற்றில் குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள செங்குன்றம் ஏரியின் போக்குக் கால்வாய், அம்பத்தூர் கால்வாய், கொரட்டூர் கால்வாய் ஆகியவற்றில் குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள கெடிலம், உப்பனாறு, பெண்ணையாறு முகத்துவாரங்களில் மணல் படிமானங்களை அகற்றவும், வாலாஜா வாய்க்கால், வெள்ளப்பாக்கம் கால்வாய், செங்கால் ஓடை, தம்பிபேட்டை ஓடை, புலிகுத்தி ஓடை ஆகியவற்றில் குப்பை மற்றும் தாவரங்களை அகற்றி வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேற்கண்ட பணிகளின் மொத்த மதிப்பீடு ரூபாய் 20 கோடி ஆகும்.

2. சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அடையாறு உபவடி நிலத்தில் போரூர், கெருகம்பாக்கம், கொளப்பாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்பினை நிரந்தரமாகத் தடுக்க 6 வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 88 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், மணப்பாக்கம் கிராமத்தில் தர்மராஜபுரம் பகுதியில் உள்ள கொளப்பாக்கம் கால்வாய்–II–ஐ அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், மணப்பாக்கம் கிராமத்தில் உள்ள மணப்பாக்கம் கால்வாயினை அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கெருகம்பாக்கம் கிராமத்தில் உள்ள கெருகம்பாக்கம் கால்வாயினைத் தொலைக்கல் 160 மீட்டர் முதல் 1,500 மீட்டர் வரை மேம்படுத்தும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கெருகம்பாக்கம் கிராமத்தில் உள்ள கெருகம்பாக்கம் கால்வாயினைத் தொலைக்கல் 1,500 மீட்டர் முதல் 2,300 மீட்டர் வரை மேம்படுத்தும் பணி ரூபாய் 16 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளப்பாக்கம் கிராமத்தில் உள்ள கொளப்பாக்கம் கால்வாய்-I-ஐ அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய் 24 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளப்பாக்கம்-பொழிச்சலூர் சாலையில் கொளப்பாக்கம் கால்வாய்-I முதல் இணைப்பு ஓடை வரை “மூடிய வடிவிலான கால்வாய்” அமைக்கும் பணிகள் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

3. பெருநகர சென்னை மாநகராட்சி குடிநீர்த் தேவைக்காக, சென்னை மாவட்டத்தில் கொசஸ்தலையாறு உபவடி நிலத்திற்குட்பட்ட மாதவரம் ரெட்டேரியை குடிநீர் ஆதாரமாக மாற்ற ரூபாய் 44 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்படும்

சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாதவரம் கிராமம், மாதவரம் ரெட்டேரியினை ஆழப்படுத்தி, நீரொழுங்கி அமைத்து ஏரியை மேம்படுத்தி குடிநீர் ஆதாரமாக மாற்றும் பணி ரூபாய் 44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

இப்பணியின்மூலம் ரெட்டேரி குளத்தின் கொள்ளளவு 32 மி.க. அடியிலிருந்து 62 மி.க. அடியாக உயர்த்தப்பட்டு குடிநீர்த் தேவைக்காக கூடுதலாக 30 மி.க. அடி நீர் சேமிக்கப்படும்.

4. செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கவும், பாதிக்கப்பட்ட இடங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளவும் நீண்டகால அடிப்படையிலான 2 வெள்ளத் தணிப்புப் பணிகள் ரூபாய் 106 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் உள்ள ஒட்டியம்பாக்கம், பெரும்பாக்கம், காட்டூர், அம்பத்தூர், அயனம்பாக்கம், அயப்பாக்கம், பருத்திப்பட்டு, கொரட்டூர் ஆகிய இடங்களில் 8 ஏரிகளில் வெள்ளக் காலங்களுக்கு முன்பாக நீரினை வெளியேற்ற ஏதுவாக கலிங்கு பகுதிகளில் நீரொழுங்கிகள் அமைத்து வெள்ளத் தணிப்புப் பணிகள் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும்,

சென்னை மாவட்டம், மாதவரம் மற்றும் அயனாவரம் வட்டங்களில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் வாய்க்காலில் "திறந்த மற்றும் மூடிய நீர் வழித்தடம்" அமைக்கும் பணிகள் ரூபாய் 94 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

5. கடலூர், திருச்சி, மயிலாடுதுறை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கவும், பாதிக்கப்பட்ட இடங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளவும் நீண்டகால அடிப்படையிலான 7 வெள்ளத் தணிப்புப் பணிகள் ரூபாய் 58 கோடியே 45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், முருகன்குடி கிராமம் அருகே வெள்ளாற்றில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பழவார் ஓடை கரையினைப் பலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், அளக்குடி கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் வலது கரையில் நெடுகை 162.208 கி.மீ. முதல் 162.454 கி.மீ. வரை மற்றும் 162.800 கி.மீ. முதல் 163.000 கி.மீ. வரை வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 24 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் உள்ள அன்பில் கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில் வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், வாத்தலை கிராமத்தில், தெற்கு கொள்ளிடத்தில் அமைந்துள்ள மேல் அணைக்கட்டில் நீர்ப்போக்கி எண் 4 முதல் 6 வரை அமைக்கப்பட்டுள்ள காப்பு அணையை அகற்றும் பணி ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் வெள்ள நீர் சூழ்வதை தடுக்கும் வகையில் திருப்பணிகரிசல்குளம் வெள்ள நீரை, நெடுங்குளம், மேகமுடையார் குளம் வழியாக சத்திரம் புதுக்குளம் கண்மாய்க்கு திருப்பும் பணி ரூபாய் 3 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், நரிக்குடி ஒன்றியத்தில் உள்ள உலக்குடி குடியிருப்பு பகுதிக்கு அருகே உள்ள அத்திகுளம் வலது கிளை கால்வாயில் தற்போதுள்ள மதகுகளை மறுகட்டுமானம் செய்தல் மற்றும் வெள்ளத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்யும் பணிகள் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

6. அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருக்கும் பழைய இரும்புக் கதவுகளை புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். அதன் முதற்கட்டமாக நடப்பாண்டில் 17 அணைகளில் கதவுகள் மற்றும் அதனை இயக்கத் தேவையான இயந்திர பாகங்கள் மற்றும் மின்சாரத் தொடர்பு சாதனங்கள் புதுப்பித்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் ரூபாய் 34 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கார்குடி கிராமத்தில் உள்ள சித்தமல்லி நீர்த்தேக்கத்தில் வழிந்தோடி கதவுகள் மற்றும் நீர்ப்போக்கி எண் 1, 2 மற்றும் 3-ன் இயக்கு தளத்தை புனரமைக்கும் பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், பாலாறு பொருந்தலாறு அணையில் உள்ள வழிந்தோடியின் செங்குத்து கதவுகள், ஆற்று மதகு கதவுகள் மற்றும் கால்வாய் கதவுகளை சீரமைக்கும் பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆண்டிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள குதிரையாறு அணையின் வழிந்தோடியின் ஆரவடிவு கதவுகளை சீரமைத்தல் மற்றும் ஆற்று மதகு கதவுகளை சீரமைக்கும் பணிகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், மருதாநதி அணைக்கு மின்னாக்கி மற்றும் மின்சாதனப் பொருட்கள் கொள்முதல் செய்யும் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், வடக்கநந்தல் கிராமம், கோமுகி அணையின் வழிந்தோடி எண் 1, 2 செங்குத்து கதவுகளைச் சீரமைக்கும் பணி ரூபாய் 12 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கோனப்பட்டி கிராமம், சாத்தையாறு அணையில் மின்னாக்கி மற்றும் கதவுகள் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தமிழ்நாடு-கேரள எல்லையில் பாலக்காடு மாவட்டம், சித்தூர் வட்டத்திலுள்ள பரம்பிக்குளம் அணையின் வழிந்தோடியின் கதவு எண் 1 மற்றும் 3-ன் சங்கிலிகளைப் புதுப்பிக்கும் பணிகள் ரூபாய் 2 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், ஸ்ரீமூலபேரி நீர்த்தேக்கத்தில் கதவு எண் 1, 2 மற்றும் 3 ஆகியவற்றைச் சீரமைத்தல் பணி ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கருப்பாநதி அணைக்கு மின்னாக்கி மற்றும் மின்சாதனப் பொருட்கள் கொள்முதல் செய்யும் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், அடவிநயினார் கோயில் அணையில் உள்ள கரிசல்கால் அவசரகால கதவுகள், மின் சாதன வசதி மற்றும் கிரேன் (Gantry crane) புனரமைத்தல் பணிகள் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

தென்காசி மாவட்டம், அடவிநயினார் கோயில் அணையில் உள்ள மேட்டுக்கால் அவசரகால கதவுகள், மின் சாதன வசதி மற்றும் கிரேன் (Gantry crane) புனரமைத்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், வைகை அணையில் உள்ள எடுப்பு அணையின் மதகிலுள்ள கதவுகளைக் கைமுறை இயக்குதலிலிருந்து மின் சாதன முறை இயக்கத்திற்கு மாற்றுதல் மற்றும் மின்னாக்கி அறை கட்டும் பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், உப்பார் அணையின் இடது மற்றும் வலது கால்வாய் கதவுகளைப் புதுப்பித்தல் மற்றும் வழிந்தோடி கதவுகளுக்குச் சிறப்பு சீரமைக்கும் பணிகள் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள அமராவதி அணையின் அமராவதி பிரதானக் கால்வாய் கதவுகள் எண் 2, 3 மற்றும் அவசரகால கதவு மற்றும் மண் அணையில் உள்ள மதகினைச் சிறப்பு சீரமைக்கும் பணி ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மணிமுத்தாறு அணையின் பிரதானக் கால்வாயின் தலைமதகு மற்றும் அதன் கட்டுமானங்களைப் புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்தில் கொடுமுடியாறு அணையிலுள்ள கதவுகளைப் புதுப்பிக்கும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பூண்டி கிராமம், சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்தின் வழிந்தோடி கதவுகளைச் சீரமைக்கும் பணி ரூபாய் 40 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

7. கோயம்புத்தூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில், 15 இடங்களில், புதிய தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் ரூபாய் 70 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையம் கிராமம், கோவில் அறக்கட்டளை நிலத்திற்கு அருகில் க.ச.எண் 31/1A–ல் கோதவாடி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், நரசிபுரம் கிராமம், பாச்சான்வயல் கால்வாயின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பொருளூர் கிராமத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், மல்வார்பட்டி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், அனுக்கூர் கிராமத்தில், வேகவதி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், விளாமுத்தூர் கிராமத்தில், மருதையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், இலாடபுரம் கிராமத்தில், நெடுகை 1.9 கி.மீ.–ல் பொக்குனியாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், லத்துவாடி கிராமத்தில், லத்துவாடி ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், புதுப்பட்டி கிராமத்தில், அய்யாறு ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், வளையப்பட்டி கிராமத்தில் தாழையார் வெளிப்போக்கி வாரியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், சின்னவேப்பம்பட்டு கிராமம் அருகில் கானாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், செங்கம் நகரம் அருகில் செய்யாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், படிஅக்ரஹாரம் கிராமம் அருகில் செய்யாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மேல்கொடுங்காலூர் கிராமம் அருகே சுகநதியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பொன்னை கிராமத்திற்கும், பரமசாது கிராமத்திற்கும் இடையே பொன்னையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 18 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

8. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை கிராமத்தில் கல்லுக்குளம் வாரியில் ஒரு புதிய அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை கிராமத்தில் அமைந்துள்ள தென்னங்காடு ஏரிக்கு நீர் வழங்க கல்லுக்குளம் வாரியின் குறுக்கே நெடுகை 1.85 கி.மீ.–ல் ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் 639.73 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

9. 22 மாவட்டங்களில், 123 கண்மாய்களில், பிரதமரின் வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் "செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு (PMKSY–RRR)" தலைப்பில் பணிகள் ரூபாய் 100 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்போடு, பிரதம மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா திட்டத்தின்கீழ், 2023–2024 ஆம் ஆண்டில், பத்தாம் கட்டமாக (Phase X), வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை, தேனி, தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், கரூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 22 மாவட்டங்களில், 123 ஏரிகள்மூலம் சுமார் 9,661 ஹெக்டர் ஆயக்கட்டுகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 100 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. ஏழு மாவட்டங்களில் புதிய பெரிய பாசனத் திட்டங்களுக்கு ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணி மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூபாய் 13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

இதிலே ஒரு திட்டம் முக்கியமானது என்னவென்றால், அமராவதி மற்றும் காவிரி ஆறுகள் இணையும் இடத்தில் கிடைக்கப்பெறும் உபரிநீரை நீரேற்றம்மூலம் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி கரூர், கிருஷ்ணராயபுரம் தொகுதிகளுக்குட்பட்ட குளங்களும் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், திண்டுக்கல், நத்தம் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட குளங்களும் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள குளங்களுக்குக் கொண்டு செல்லும் திட்டத்திற்கு மண் பரிசோதனை, நில அளவை, மட்ட அளவை மற்றும் புவியியல் ஆய்வுகள் மேற்கொண்டு சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஞாலம் கிராமத்தில் தடவையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தாக்க ஆய்வு அறிக்கை (EIA) தயாரித்தல் மற்றும் அனுமதி பெறுதல் ஆகிய பணிகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயிலிருந்து, வடபழஞ்சி கண்மாய் மற்றும் அதன் தொடர் கண்மாய்களுக்குப் பாசன வசதி வழங்குவதற்கான ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணி ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், வாளையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கான ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டத்தில், காவிரி ஆற்றிலிருந்து நீரேற்ற முறையில் வெள்ள நீரை நாகையநல்லூர் ஏரி மற்றும் பிற சாத்தியமுள்ள ஏரிகளுக்குத் திருப்பும் பணிகளுக்கு ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிகள் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், நாங்குநேரி பெரிய குளத்தின் கீழுள்ள 46 தொடர் குளங்களுக்கு பாசன நீர் வழங்கும் வகையில் நாங்குநேரியின் கால்வாயிலிருந்து புறக்கால்வாய் அமைத்தல் மற்றும் நாங்குநேரியின் கால்வாயை அகலப்படுத்திடும் திட்டத்திற்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தயாரித்தல் மற்றும் அனுமதி பெறுதல் உள்ளிட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூபாய் 2 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், சடையங்குப்பம் மற்றும் இடையஞ்சாவடி கிராமங்களுக்கு இடையே கொசஸ்தலையாற்றின் குறுக்கே கடைமடை நீரொழுங்கி அமைப்பதற்கான ஆய்வு, மட்ட அளவை மற்றும் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், அமுல்லைவாயல் மற்றும் சடையங்குப்பம் கிராமங்களில் புழல் ஏரியின் உபரி நீர்வாய்க்கால் நெடுகை 8.3 கி.மீ. முதல் சடையங்குப்பம் கிராமத்தில் நெடுகை 13.30 கி.மீ. வரை மேம்படுத்துவதற்கான ஆய்வு, மட்ட அளவை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெருநகர சென்னை மாநகராட்சிக்குத் தேவையான குடிநீர் இருப்பினை அதிகரிக்கும் வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலையாற்றில் 4 இடங்களில் "ஆற்றுக்குள் நீர்த்தேக்கங்கள்" அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

11. நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில், இரண்டு இடங்களில், கடல்நீர் உட்புகுதலைத் தடுக்கும்பொருட்டு கடைமடை கட்டமைப்புகள் உருவாக்கும் பணிகள் ரூபாய் 13 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், வடக்கு பொய்கைநல்லூர் கிராமத்தில் பரவையாறு வடிகாலின் குறுக்கே கடைமடை நீரொழுங்கி கட்டும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், சோமநாதபட்டினம் கிராமத்தில் முடியனாறு வடிகாலின் குறுக்கே நெடுகை 12.600 கிலோ மீட்டரில் கடைமடை நீரொழுங்கி கட்டும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 2–15

12. இரண்டு மாவட்டங்களில், 4 இடங்களில், சிறிய ஆறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே பாலங்கள்/தரைப்பாலங்கள், கரைகளில் சாலை, நடைபாதை அமைக்கும் பணிகள் ரூபாய் 49 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டத்தில் பனப்பள்ளம் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் மற்றும் காரப்பட்டி வாய்க்காலில் சரகம் 4,120 கி.மீ.-ல் உள்ள நீர்வழிப் பாலத்தில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் ஆகியவை ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரத்தில் தாழையாத்தம் முதல் சேம்பள்ளி சாலை வரை கௌண்டன்ய மகாநதி வலது ஆற்றங்கரைமேல் சாலை அமைக்கும் பணி ரூபாய் 30 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரம், கங்கையம்மன் கோயில் அருகே மகாநதி ஆற்றின் குறுக்கே நீர்போக்கிகளுடன்கூடிய தரைப்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 14 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரத்தில் கௌண்டன்ய மகாநதி இடது ஆற்றங்கரையின்மேல் நடைபயிற்சி மேற்கொள்ள வசதியாக நடைபாதை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

13. 8135.48 ஏக்கர் ஆயக்கட்டு பகுதிகள் பயன்பெறும் விதமாக பாசன நீர்ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக 2 மாவட்டங்களில் 3 புதிய கால்வாய்கள் அமைக்கும் பணிகள் ரூபாய் 12 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

தென்காசி மாவட்டம், கருப்பாநதி பாப்பான்கால் பாசனம், கள்ளம்புளி குளம் வரத்துக் கால்வாயிலிருந்து குலையநேரி குளம் வரத்துக் கால்வாய்க்கு புறவழிக்கால் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள நிலையூர்–கம்பிக்குடி நீட்டிப்பு கால்வாய் திட்டத்தின்மூலம் பயன்பெறக்கூடிய 18 கண்மாய்களுக்கு நீர் வழங்குவதற்கு வரத்துக் கால்வாயினை அகலப்படுத்துதல் மற்றும் உருவாக்குதல் திட்டப் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், கோல்வார்பட்டி கிராமம், கோல்வார்பட்டி நீர்த் தேக்கத்திலிருந்து, கோல்வார்பட்டி பெரிய கண்மாய்க்கு கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

14. சென்னை மண்டலத்தில் வேலூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் பாசன அமைப்புகளில் புனரமைப்பு, கட்டுமானம் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் 13 பணிகள் ரூபாய் 129 கோடியே 23 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சக்திவிளாகம் கிராமம் வெள்ளாற்றின் வலது கரையில் நெடுகை 1.683 கி.மீ. முதல் 1.770 கி.மீ. வரை பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கழுதைவெட்டி வடிகாலினை புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் அமைந்துள்ள அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயம் முன்பு செல்லும் மணிமுக்தா ஆற்றின் வலதுகரையில் பாதிக்கப்பட்ட பகுதியில் படித்துறை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுகாவில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் புத்தனேந்தல் அணைக்கட்டு நீர்போக்கியினை சீர்செய்தல் மற்றும் அணைக்கட்டிலிருந்து 6 ஏரிகளுக்குச் செல்லும் வாய்க்கால்களைப் பராமரிக்கும் பணி ரூபாய் 82 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆதியூர் கிராமத்தில் உள்ள வாலேரியின் உபரிநீரினைக் கொரட்டி ஏரிக்குக் கொண்டு செல்ல கான்கிரீட் குழாய் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், போரா கானாற்றினை வெள்ளக்குட்டை கிராமம் முதல் எறாக்குட்டை ஏரி வரை புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், R.K. பேட்டை தாலுகா, வெடியன்காடு கிராமத்திலுள்ள வெடியன்காடு ஏரியினைப் புனரமைத்து, புதிய இணைப்புக் கால்வாய் ஏற்படுத்தும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், கே.வி. குப்பம் வட்டத்தில் உள்ள காங்குப்பம் கிராமத்தில் உள்ள மோர்தானா அணையின் இடது பிரதான வாய்க்காலின் தொலைக்கல் 20150 மீட்டர் முதல் 20450 மீட்டர் வரை நீர் ஊடுருவல் தடுக்கும் அமைப்புடன்கூடிய அகவுரை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் காங்கேயநல்லூர் கிராமம் முதல் பாலாற்றில் இணையும்வரை பாண்டியன்மடுவு கால்வாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், கே.வி. குப்பம் வட்டம், கவசம்பட்டு கொட்டாற்றினை மேலூர் கிராமம் முதல் பாலாற்றில் கலக்கும் திருமணி கிராமம் வரை புனரமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், வீரபாண்டி கிராமத்தில் உள்ள வீரபாண்டி ஏரியினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலும்,

2023 மார்ச் 29] [திரு. துரைமுருகன்]

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், அய்யன் கோயில்பட்டு கிராமம், பம்பையாற்றின் குறுக்கே அமைந்துள்ள வாதனூர் நீரொழுங்கியினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், ஏனாதிமங்கலம் கிராமத்தில், தென்பெண்ணையாற்றின் குறுக்கே அமைந்துள்ள எல்லீஸ் அணைக்கட்டினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 86 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

15. திருச்சி மண்டலத்தில் நாகப்பட்டினம், சேலம், கரூர், பெரம்பலூர், திருச்சி, தஞ்சாவூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் பாசன அமைப்புகளில் புனரமைப்பு, மறுசீரமைப்பு மற்றும் மறு கட்டுமானம் செய்யும் 12 பணிகள் ரூபாய் 58 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1309, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1420, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் கொரோனா காலங்களில் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

2023 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1442, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "அரசுப் போக்குவரத்து தொழிலாளர்கள், ஓய்வூதியர்கள் அனைவருக்கும் நிலுவையில் உள்ள பணப் பயன் கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1525, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "பெருந்துறை தொகுதிக்குட்பட்ட கிராமங்களின் வழியாக செல்லும் அரசு டவுன் பஸ்களை சீராக இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1542, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "ஆரணி பணிமனையை நவீனப்படுத்தி பேருந்துகள் இரவு நேரத்தில் வரும்போது மழை, காற்று போன்ற சீற்றங்களிலிருந்து பாதுகாக்க புதியதாக மேற்கூரை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1589, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதிக்குட்பட்ட பேருந்துகளை முறையாக இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1583, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன்.

திரு. A.P. ஜெயசங்கரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதியில் கொரோனா நேரத்தில் நிறுத்திய பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1702, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

2023 மார்ச் 29]

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2021–2022 முதல் 2023–2024 வரை வாங்க இருந்த பேருந்துகள், இதுவரை வாங்காதது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1719, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சி நகராட்சியிலிருந்து அரசு மருத்துவக் கல்லூரிக்கு பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1840, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் மாவட்டம், உடுமலையில் 105 பேருந்துகளைக் கொண்டு பணிமனை இயங்கி வருகிறது. அதனை இரண்டாகப் பிரித்து மடத்துக்குளத்தில் புதிய பணிமனையை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1902, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு போக்குவரத்துத் துறையில் ஓடாமல் நிறுத்தப்பட்டுள்ள பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2041, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2091, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வுபெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் காலதாமதமின்றி பணப்பயன்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2128, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, மரக்காணம் பேரூராட்சியில் அனைத்து வசதிகளும் நிறைந்த அரசு போக்குவரத்து பணிமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 மார்ச் 29 [திரு. பொ. அர்ஜுனன்]

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2194, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் நகராட்சி, செல்வபுரம் பகுதிக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2633, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்துத் தொழிலாளர்கள் நலன், மாவட்ட போக்குவரத்து வழித்தடங்கள், மகளிர் இலவசமாகப் பயணம் செய்யும் பேருந்துகள் வழித்தடம் பற்றி விவாதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2698, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.*

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் வரை இயக்கப்படும் மாநகரப் போக்குவரத்துக் கழக சேவையினை மானாமதி வரை நீட்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2738, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்குக் காப்பீட்டுத் தொகையினை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2807, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழுதடைந்தப் பேருந்துகளுக்கு பதில் புதிய பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

2023 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2834, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்துத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களின் தொழிலாளர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3056, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, கயத்தார் புதிய வட்டமாக செயல்பட்டுவரும் நிலையில் அப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதிகளை நிறைவு செய்ய ஏதுவாக கயத்தாரில் புதிய போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3175, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் செல்லும் பேருந்துகளைப் பள்ளி நேரங்களில் மாணவ, மாணவிகளை ஏற்றி வர பள்ளி வரை பேருந்து சேவையை நீட்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.900,00,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.700,80,09,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் மற்றும் போக்குவரத்துத் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய, பெரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். தற்போது இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள். இந்த விவாதத்தில் மொத்தம் 6 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவிருக்கின்றீர்கள். முதலில் பேச வருகின்ற மாமன்ற உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்களுக்கு 15

@ 598 முதல் 745 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் III மற்றும் IVஆக அச்சிடப்பட்டுள்ளன.

நிமிடங்களும், ஏனைய 5 உறுப்பினர்களுக்குத் தலா 10 நிமிடங்களும் வழங்கப்படுகிறது. நேரத்தின் அருமை கருதி குறித்த நேரத்தில் உரையாற்றி அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி,
மக்களின் மனதில் நிற்பவர் யார்'

என்று திரைப்படத்தில் கேள்வி எழுப்பி, அதற்கு விடையாக வாழ்ந்துகாட்டிய, காவியத் தலைவன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மக்கள் இயக்கத்தைத் தோற்றுவித்தத் தலைவர், பொன்மனச் செம்மல், பாரத ரத்னா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை இந்த நேரத்தில் வணங்குகிறேன். அவருக்குப் பின் இந்திய அரசியலில் மாபெரும் கட்சியாக வளர்த்தெடுத்து சுமார் 16 ஆண்டுக்காலம் முதலமைச்சராக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தைத் தன்னிகரற்ற மாநிலமாக மாற்றியமைத்த சமூகநீதி காத்த வீராங்கனை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். அந்த இருபெரும் தலைவர்களுக்குப் பின், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் வீழ்த்திவிடலாம் என்றும், தமிழக அரசியல் வரலாற்றில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் மக்கள் இயக்கத்திற்கு முடிவு எழுதிவிடலாம் என்றும் எதிரிகளும், துரோகிகளும் கூட்டணி அமைத்துக்கொண்டு செயல்பட்டபோது, கட்சி மீதும், ஆட்சி மீதும் கடுமையான விமர்சனங்கள் எழுந்தபோதும், ஏன்? தன்மீதே தனிப்பட்ட தாக்குதல் நடைபெற்றபோதும், எவற்றுக்கும் அஞ்சாது, மிகவும் சாதுரியமாக அம்மா அவர்களின் ஆட்சியினை வழிநடத்திச் சென்று அந்த 4 ஆண்டுக்காலத்தில், காவேரி டெல்டா மாவட்டங்களைப் (மேசையைத் தட்டும் ஒலி) பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றியது, குடிமராமத்துத் திட்டம் அளித்தது, பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடைச் சட்டம் கொண்டு வந்தது, கடுமையான நிதி நெருக்கடியிலும், வேளாண் கடன்களை இரத்து செய்தது, பொங்கல் பரிசாக ரூ.2,000/-ஐ அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கியது, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி அமைத்தது, 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டுடன் கிராமப்புற ஏழை மக்களின் மருத்துவக் கனவை நனவாக்கியது,

(மேசையைத் தட்டும் ஒலி) இவற்றுக்கெல்லாம் மேலாக, சுமார் 75 ஆண்டுக்காலமாக தமிழக அரசியல் கட்சிகளில் ஆத்திச்சூடியாக உச்சரித்த யாரும் செய்யத் துணிந்திடாத அத்திக்கடவு–அவினாசி திட்டத்தினைச் செயல்முறை அறிந்து செயல்படுத்தி, இன்று அதில் மாபெரும் வெற்றி கண்டது என, இந்த அனைத்துப் புகழ்ச்சிக்கும் சொந்தக்காரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் இயக்கத்தினைக் காத்திட்ட காலம் தந்த கொடை, எங்கள் கொங்கு நாட்டின் சிங்கம், முன்னாள் தமிழக முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தின் பொதுச் செயலாளர், அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

பிற்பகல் 4–10

தமிழக சட்டப் பேரவையிலே 2023–2024 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், கோவைக்கு எண்ணற்றத் திட்டங்களைப் பெற்றுத் தந்து, கோவை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட கழகத் தலைமை நிலையச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா அன்புச் சகோதரர் திரு. வேலுமணி அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் அவர்களுக்குக் கிடைக்கும் தரமான போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தே அமைகிறது. இதில் குறிப்பாக, பேருந்து போக்குவரத்து மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இத்துறை மிக வளர்ச்சியடைந்ததும், நவீனமயமாக்கப்பட்டதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா மற்றும் மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலங்களில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கை 7,153, புதிய மலைப் பகுதி பேருந்துகளின் எண்ணிக்கை 208, புதிய சிற்றுந்துகளின் எண்ணிக்கை 200. 2016–2017 ஆம் ஆண்டுகளில் வாங்கப்பட்ட பேருந்துகளின்

எண்ணிக்கை 2,000. மாண்புமிகு முன்னாள் முதல்வர், தற்போது எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் குறிப்பாக 2018–2019 ஆம் ஆண்டு மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகளில் 5,000 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டன. ஆக, 2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளில் கடைசி ஓர் ஆண்டில் கொரோனா என்னும் பெருந்தொற்றால் உலக இயக்கமே நின்று போன நிலையில் 9 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா மற்றும் மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்தில் மக்களின் பயன்பாட்டிற்காகக் கொண்டு வரப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கை 14,153, மலைப்பகுதி பேருந்துகளின் எண்ணிக்கை 208, சிற்றுந்துகளின் எண்ணிக்கை 300. ஆக மொத்தம் 9 ஆண்டுகளில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட மொத்த புதிய பேருந்துகளின் எண்ணிக்கை 14,661. கடந்த 10 ஆண்டுக்கால ஆட்சியில் சராசரியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கை ஆண்டிற்கு 1,629. ஆனால், கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கை பூஜ்ஜியம் மட்டுமே என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கடந்த 2021–2022 ஆம் ஆண்டின் திருத்திய நிதிநிலை அறிக்கையில் சுமார் ஆயிரம் பேருந்துகள் வாங்கப்படும் என்ற அறிவிப்பு வெற்று அறிவிப்பாக ஆகிவிட்டதென சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாது, கடந்த 2011 ஆம் ஆண்டில் இயக்கப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 19,110. இது படிப்படியாக அதிகரித்து கடந்த 2016 ஆம் ஆண்டில் இயக்கப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 20,839. ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, மக்களை இன்னலுக்குள்ளாகாமல் பாதுகாத்து வந்தது மாண்புமிகு அம்மா மற்றும் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அரசுதான்.

உலக இயக்கத்தையே ஸ்தம்பிக்க செய்த கொரோனோ பெருந்தொற்று தாக்கிய சமயத்தில் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான அரசில் 2019–2020 காலக்கட்டங்களில் இயக்கப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 21,513. ஆனால், கொரோனா பெருந்தொற்று முடிந்து மக்கள் அனைவரும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிய நிலையில்

கடந்த 31–3–2022 கணக்கின்படி இந்த ஆட்சியில் இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 20,304 மட்டுமே. ஆட்சிப் பொறுப்பேற்ற ஓர் ஆண்டில் 1,209 பேருந்துகளின் இயக்கத்தினைக் குறைத்து மக்களை சிரமத்திற்குள்ளாக்கியுள்ளதுதான் இந்த அரசின் சாதனையாகும் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

குறிப்பாக, எனது தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த காலங்களில் இயக்கப்பட்ட பேருந்து வழித்தடங்களில் 33 வழித்தடங்களில் தற்சமயம் சரியான நேரத்தில் பேருந்துகள் இயக்கப்படாததால், பள்ளி செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். அந்த வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்க வேண்டும். அந்த வழித்தடங்களின் பட்டியலை காலத்தின் அவசியம் கருதி தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். அவற்றை தாங்கள் அவையில் நான் கூறியதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கோவை கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் தற்சமயம் சரியான நேரத்தில் இயக்கப்படாத பேருந்துகளின் விவரம்

வார்டு எண்	பேருந்து எண்	வழித்தடம்
17	76	மருதமலை–காந்திபுரம்
1	4K	உக்கடம்–அப்பநாயக்கன்பாளையம்
15	S24	சிங்காநல்லூர்–K.N.G. புதூர்
2	S23	சேரன்காலனி–ஒண்டிப்புதூர்
	4	போத்தனூர்–சேரன்காலனி
12	97	உக்கடம்–துடியலூர்
	S9D	சிங்காநல்லூர்–NGGO காலனி
5	S9G	ஒண்டிப்புதூர்–சின்னவேடம்பட்டி
	15G	குனியமுத்தூர்–விஸ்வாசபுரம் பேருந்து உள்ளே வருவது இல்லை
23	20	கணுவாய்–பிருந்தாவன் நகர்
	2M	காந்திபுரம்–பிருந்தாவன் நகர்

வார்டு எண்	பேருந்து எண்	வழித்தடம்
அசோகபுரம்	62	உக்கடம்–கோவில்பாளையம்
குருடம் பாளையம்	4H	உக்கடம்–தொப்பம்பட்டி
	4RS	காந்திபுரம்–கதிர்நாயக்கன்பாளையம்
	140J	காந்திபுரம்–கதிர்நாயக்கன்பாளையம் வழி–நேரு நகர்
	38A	காந்திபுரம்–வெற்றிலைகாளிபாளையம்
நாயக்கன் பாளையம்	32	காந்திபுரம்-கோவனூர் காலை 1st single உழவர் சந்தை சென்றது. இப்போது செல்வது இல்லை 8 மணிக்கு மேல் வருவது இல்லை.
	32K	காந்திபுரம்-கோவனூர் 8 மணிக்கு மேல் வருவது இல்லை.
	2B	மேட்டுப்பாளையம்-கோவனூர் காலை 1st single மேட்டுப்பாளையம் உழவர் சந்தை சென்றது. இப்போது செல்வது இல்லை. 8 மணிக்கு மேல் வருவது இல்லை.
சோமையம் பாளையம்	11D	இரயில்நிலையம்–சோமையம்பாளையம் வழி–கஸ்தூரிநாயக்கன்பாளையம்
	70	காந்திபுரம்–மருதமலை வழி–கஸ்தூரிநாயக்கன்பாளையம்
சின்ன தடாகம்	97	உக்கடம்–தடாகம்
24–வீர பாண்டி	11B	இரயில்நிலையம்–24–வீரபாண்டி
	26	காந்திபுரம்–24–வீரபாண்டி

வார்டு எண்	பேருந்து எண்	வழித்தடம்
நஞ்சுண்டா புரம்	11C	இரயில்நிலையம்–கணுவாய்
கீரணத்தம்	63C	காந்திபுரம்–பெரியநாயக்கன்பாளையம்
	86B	காந்திபுரம்–அத்திபாளையம்
அத்தி பளையம்	62	அன்னூர்–துடியலூர்
கொண்டயம் பாளையம்	57A	உக்கடம்–கோட்டைபாளையம்
	11	கோவில்பாளையம்–மேட்டுப்பாளையம்
வெள்ளமடை	57A	உக்கடம்–வெள்ளமடை
	32G	காந்திபுரம்–வெள்ளமடை
வெள்ளா னைப்பட்டி	44A	உக்கடம்–பச்சாபாளையம்

மேலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில்தான் இயக்கப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டதோடு எரிபொருள் செயல்திறனும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல விபத்துகளின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று 2011 முதல் 2022 வரையிலான காலக்கட்டத்தில் பேருந்து பழுதுபடுதல் என்பது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 4–15

கடந்த 10 ஆண்டுக்கால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 15,588 ஓட்டுநர்கள், 15,200 நடத்துநர்கள், 4,781 தொழில்நுட்பப் பணியாளர்கள், 2,354 கருணை அடிப்படையில் பணி நியமனம் என ஆக மொத்தம் 37,923 பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாமல், 47,515 தினக்கூலி பணியாளர்களைப் பணிவரன்முறை செய்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில், போக்குவரத்துக் கழகங்களில் எந்தவிதமான நியமனங்களும்

செய்யப்படவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்று, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்குக் கடந்த 2011–2012 முதல் 2020–2021 வரையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 49,995 பணியாளர்களுக்கு சேமநல நிதியாக 1,652.97 கோடி ரூபாயும், 59,471 பணியாளர்களுக்குப் பணிக்கொடை மற்றும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்திற்கு என, ஆக மொத்தம், 3326.31 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. இதில் உச்சபட்சமாக கடந்த 2017–2018 ஆம் ஆண்டில் 12,420 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு சேமநல நிதியாக 557.25 கோடி ரூபாயும், 27,845 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்குப் பணிக்கொடைத் தொகையாக ரூபாய் 1,211.07 கோடியும், விடுப்பு ஒப்படைப்பு ஊதியமாக 393.24 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது என்பது போக்குவரத்துத் துறை வரலாற்றில் ஓர் அரிய சாதனை நிகழ்வாகும். இந்தச் சாதனைக்குரியவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்தான் என்பதை இங்கே பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தொழில் தகராறு சட்டம் 1947, பிரிவு 12(3)–ன்கீழ் ஊதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும். அதை 4 ஆண்டுகளாக மாற்றியமைத்தது என்பது தொழிலாளர்களை வஞ்சிக்கும் செயல். எனவே, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, புதிய ஒப்பந்தக் கால அளவை மீண்டும் 3 ஆண்டுகளாக நிர்ணயித்து, 15–வது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை உடனே துவக்க ஆவன செய்ய வேண்டும்.

தி.மு.க–வின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தபடி, ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் கோரிக்கைகளை 100 நாட்களில் தீர்வு செய்யாமல், நீதிமன்ற உத்தரவையும் அமல்படுத்தாமல், இந்த அரசு ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது என்பது தொழிலாளர்களை வஞ்சிக்கும் செயல் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோன்று, பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையினைக் குறைத்திருப்பது என்பது

நேரடியாக, ** மக்களை இன்னலுக்குள்ளாக்கும் செயல். எனவே, அதிக அளவில் பேருந்துகளை இயக்க தேவையான அளவில், உடனடியாக போக்குவரத்துக் கழகங்களில், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது. சொல்லுங்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: அதிகளவில் பேருந்துகளை இயக்க தேவையான அளவில், உடனடியாக போக்குவரத்துக் கழகங்களில் உள்ள காலிபணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்களை ஓய்வுபெறும் தேதியிலேயே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணத்தினை ஆண்டிற்கு ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும். வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலுள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்பொழுது நடைபெறும் ஆட்சியில் சென்னையில் முதற்கட்டமாக 500 பேருந்துகள் தனியார்மயம் செய்யப்படுவதாக அறிந்துள்ளோம். மேற்படி தனியார்மயமாக்கும் முடிவை இந்த அரசு கைவிட்டு, போக்குவரத்துத் தொழிலாளர்கள் நலன் காத்திட வேண்டும். பெண்களுக்கு என இயக்கப்படும் கட்டணமில்லாப் பேருந்து, pink colour (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் அவர்கள் பேசிய பிறகு பதில் சொல்லலாம்.

திரு. P.R.G. அருண்குமார்: முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் சொல்லுங்கள், பதில் சொல்லுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மற்ற செய்திகளுக்கு நான் கடைசியாக பதில் சொல்கிறேன். இந்த ஒரு விஷயத்திற்கு நான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29 [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

இப்போதே பதில் சொல்லி விடுகிறேன். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்கள் தனியார்மயமாக்குவதைக் கைவிட வேண்டுமென்று, சொன்னார்கள். இதோ என்னிடத்தில் அரசாணை இருக்கின்றது. அரசாணை போடப்பட்ட ஆண்டு 2021 பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி. அன்றைக்கு யாருடைய ஆட்சி இருந்தது, யார் முதலமைச்சராக இருந்தார்கள், அந்தக் காலக்கட்டத்திலேதான் இதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அதனுடைய முழுமையான அர்த்தம் புரியாமல், மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார் என்றுதான் எண்ணுகிறேன். பொதுவெளிகளில் இருப்பவர்கள், பொதுமக்களிலே சிலர் பேசக்கூடும். அவர்கள் அதுகுறித்த விவரம் அறியாமல் இருக்கலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அவையிலே இருக்கிறவர். இந்த அவையில் ஏற்கெனவே உங்கள் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஓர் அரசாணை குறித்துப் பேசுகின்றபோது, அதுகுறித்து முழுமையாக அறிந்து கொண்ட பின்பு பேசுவது நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 4–20

Chennai City Partnership என்ற அந்த programme-ன் அடிப்படையில் உலக வங்கியின் நிதியுதவியைப் பெற, போக்குவரத்துத் துறை மட்டுமல்ல, சென்னை மாநகராட்சி, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் பிற துறைகளை இணைத்து, ஒட்டுமொத்தமாக ஒரு திட்டத்தை உலக வங்கி வகுத்துக் கொடுக்கிறது. அதன் அடிப்படையில், நம்முடைய போக்குவரத்துக் கழகத்திற்கு அவர்கள் ஒரு பரிந்துரையை, கருத்துருவைக் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கருத்துருவின் அடிப்படையில் இன்னும் கூடுதலாகப் பேருந்து இயக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு முதலீடு செய்ய வேண்டிய தேவையில்லை. அரசு முதலீடு செய்யாமல், அரசினுடைய வழித்தடத்தில், தனியாருடைய பேருந்துகளை ஒப்பந்த அடிப்படையில் இயக்கலாம் என்பதுதான் இதனுடைய மூலக்கூறு. அதுகுறித்து ஆய்வதற்காகத்தான் இப்போது consultant நியமிப்பதற்கான tender விடப்பட்டிருக்கிறது. ஊடகங்களில், பத்திரிகைகளில் தொடர்ந்து இது குறித்தான செய்தியை நான் சொல்லி வருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேலை நெருக்கடி காரணமாக இந்தத் தகவல் தெரியாமல் இருந்திருக்கலாம். எனவே, மீண்டும் உங்களுக்காக நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் இது தனியார்மயம் கிடையாது. தனியார்மயம் என்றால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில், அன்றைக்கு முதல்வராக இருந்த, மறைந்த அம்மையார் அவர்கள் அரசு வழித்தடத்தையே தனியாருக்குக் கொடுக்கப் போகிறேன், அரசு பேருந்தையே தனியாருக்குக் கொடுக்கப் போகிறேன் என்று ஒரு திட்டத்தைத் தீட்டியதுதான் தனியார்மயம். இது தனியார்மயமல்ல. இது ஏற்கெனவே பல்வேறு மாநிலங்களில் நடைமுறையில் இருக்கிறது. GCC model என்ற அடிப்படையில் அரசினுடைய வழித்தடம், அரசிற்குச் சொந்தமாக இருக்கும். அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க முன் வருகின்ற அந்தத் தனியார் நிறுவனங்கள், பேருந்துகளை இயக்கலாம். அந்தப் பேருந்துகள் தனியார் பேருந்துகள் மாத்திரம்தான். அதன் ஓட்டுநர்கள் அவர்களிடமே இருப்பார்கள். வழித்தடமும், அதில் இருக்கின்ற நடத்துநரும் அரசிற்குச் சொந்தமாக இருப்பார்கள். எனவே, அரசு நிர்ணயிக்கின்ற கட்டணம்தான். ஒரு காலத்திலும் மாறாது. இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதில் தனியார்மயம் என்கிற பேச்சுக்கே இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் சொன்ன சூழ்நிலை என்பது, எங்கள் ஆட்சியில் G.O. போட்டிருக்கலாம். ஆனால், அதனை நாங்கள் செயல்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செயல்படுத்தவில்லை. அடுத்ததற்கு வாருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: செயல்படுத்தினீர்கள்; செயல்படுத்தவில்லை என்பதில்லை. நீங்கள்தான் அந்த G.O.-ஐ போட்டிருப்பதினால், அது என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டும். இப்போதும் சொல்கிறேன், இது தனியார்மயமல்ல. அரசிற்குச் சொந்தமான வழித்தடம். அரசு வசம் இருக்கும்.

ஒப்பந்தக்காலம் முடிந்த பிறகு, அந்தத் தனியாருடைய பேருந்து காலம் முடிந்துவிடும். அதற்குப் பிறகு, அரசே அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்கிக்கொள்ளலாம். எனவே, இதில் எந்தக் குழப்பமும் தேவையில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: அடுத்து, பெண்களுக்கென இயக்கப்படும் கட்டணமில்லா பேருந்தின் முன் பக்கம் மற்றும் பின் பக்கம் மட்டும் pink colour paint அடிக்கப்பட்டு, அதில் மட்டுமே பயணிக்க அனுமதிக்கப்படுவதால், குறித்த நேரத்தில் பெண்கள் பணிக்குச் செல்ல இயலவில்லை. ஆகவே, அனைத்து அரசுப் பேருந்துகளிலும் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். (குறுக்கீடு) ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்டு இந்த ஊரில் வேலைக்குப் போகும் பெண்கள் பேருந்தில் செல்ல வாய்ப்பில்லை என்று சொன்னால், அதனை பரிசீலனை செய்யலாம். பொத்தாம் பொதுவாக பெண்கள் வேலைக்குப் போவதற்கு இது பயனில்லை என்று சொல்லக் கூடாது.

திரு. P.R.G. அருண்குமார்: நான் அப்படிச் சொல்லவில்லை. பேருந்துகளையெல்லாம் குறைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த ஊரில் பெண்கள் வேலைக்குப் போவதற்கு வசதியில்லை என்பதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிற்குச் சொந்தமான 9,000–க்கும் மேற்பட்ட அரசு நகரப் பேருந்துகளில் 7,000–க்கும் மேற்பட்ட பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மீதியிருக்கின்ற பேருந்துகள், சென்னையில் ஓடுகின்ற red bus போன்ற பேருந்துகள்தான். எனவே, பெண்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபடி, அரசு நகரப் பேருந்துகளில்

பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம். அவர்கள் அதனை முழுமையாக அனுபவிக்கிறார்கள். மேலும், புள்ளிவிவரங்களை நான் பதிலுரையாற்றும்போது தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் தெரிவிப்பது, பேருந்துகள் போகவில்லை, அதில் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யவில்லை என்று சொல்ல வரவில்லை. நான் சொல்ல வருவது என்னவென்றால் குறிப்பிட்ட சில இடங்களில், குறிப்பிட்ட பேருந்துகள் தாமதமாக வருவதால், பெண்கள், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில இடங்களில் பேருந்துகள் வரவில்லை என்று எழுதிக் கொடுங்கள். அதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். அடுத்ததற்கு வாருங்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: அதைத்தான் கேட்கிறேன். மற்றபடி நான் தவறாக எதுவும் சொல்லவில்லை. மலைப் பகுதிகளில் இயங்கும் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம் மேற்கொள்ள சிறப்புக் கவனம் எடுத்து, கட்டணமில்லாமல் பயணம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். குறிப்பாக கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை, ஆனைக்கட்டி போன்ற பகுதிகளில் மக்கள் இலவசமாக பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் சிறப்பாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) எனது தொகுதி பிரச்சினைக்குள் போய்விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 17 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: எனது தொகுதி சார்ந்த, எனது மாவட்டத்தைச் சார்ந்த முக்கியமான சில பிரச்சினைகளை மட்டும் சொல்லி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். கவுண்டம்பாளையம் மற்றும் மேட்டுப்பாளையம் தொகுதிகளில் பல்வேறு ஊராட்சிகளில் பிரதான தொழிலாக செங்கல் உற்பத்தி செய்யும் தொழில் உள்ளது. பல ஏழை கூலித் தொழிலாளர்களுக்கு செங்கல் உற்பத்தி வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. பல்வேறு பிரச்சினைகளால் இரண்டு வருடகாலமாக இந்தத் தொழில்

முடங்கியுள்ளது. அதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசு உடனடியாகத் தலையிட்டு, தடைகளைக் களைந்து, செங்கல் உற்பத்தியைத் தொடர்ந்து நடத்திட ஏதுவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–25

அதேபோல, கோவை மாநகராட்சி, அத்திக்கடவு மூன்றாம் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்தி, மாநகர மக்களுக்குச் சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சியையொட்டி அமைந்துள்ள, எனது தொகுதிக்குட்பட்ட S.S. குளம் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியங்களிலுள்ள ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுவரும் குடிநீர் போதுமானதாக இல்லாததால் அங்கு குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. எனவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதி சார்ந்த கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் தந்துவிட்டால் அவற்றை நீங்கள் அவையில் பேசியதாகக் கருதி பதிவு செய்யப்படும்.

திரு. P.R.G. அருண்குமார்: இன்னும் இரண்டு கோரிக்கைகள்தான். அங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை இருக்கிறது. அந்தப் பகுதிகளுக்குக் கூடுதலாக குடிநீர் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் காளப்பட்டி, சரவணம்பட்டி, வெள்ளக்கிணறு, வீரகேரளம், வடவள்ளி உட்பட சுமார் 12–க்கும் மேற்பட்ட வருவாய்க் கிராமங்களில் 1986 ஆம் ஆண்டில் சுமார் 7,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுநாள்வரை சுமார் 400 ஏக்கர் நிலங்கள் மட்டுமே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு, வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள சுமார் 6,500 ஏக்கர் நிலங்கள் பொதுமக்களுக்குப் பட்டா மாற்றவோ, பத்திரப் பதிவு செய்யவோ, வங்கிக் கடன் பெறவோ, விற்பனை செய்யவோ முடியாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தற்போது அவையில் இல்லை.*

திரு. P.R.G. அருண்குமார்: *அவர்களுக்கும் இதுபற்றித் தெரியும். இதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவ்வளவுதான். இந்த நில எடுப்பு நடவடிக்கைகளை இரத்து செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதை அப்படியே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.*

திரு. P.R.G. அருண்குமார்: *அதேபோல, கோவை விமான நிலையத்திலிருந்து சத்தி சாலையை இணைக்கும் குரும்பாளையம் சாலை அமைக்க அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டது. அந்தச் சாலையை அமைப்பதற்கான நிலம் எடுக்கும் பணியை துரிதப்படுத்தி, அந்தச் சாலையை உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *20 நிமிடங்கள் முடிந்துவிட்டன. (குறுக்கீடு) உங்கள் தொகுதிப் பிரச்சினைகளை என்னிடம் தாருங்கள். நான் பதிவு செய்துவிடுகிறேன். (குறுக்கீடு) இந்த ஒன்றை மட்டும் பேசி முடியுங்கள்.*

திரு. P.R.G. அருண்குமார்: *கோவை மாவட்டத்திலுள்ள கோவை வடக்கு வட்டம் சுமார் 10 இலட்சம் மக்கள்தொகைக் கொண்ட மிகப் பெரிய தாலுகாவாகும். அங்கு அதிகரித்துவரும் மக்கள்தொகையினைக் கருத்தில் கொண்டு, கோவை வடக்கு மற்றும் அன்னூர் தாலுகாக்களின் சில பகுதிகளை இணைத்து, பெரியநாயக்கன்பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுகாவை உருவாக்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, வணக்கம் என்று மட்டும் சொல்லிவிடுங்கள்.*

திரு. P.R.G. அருண்குமார்: *இவ்வளவு நேரம் என்னைப் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனக்குப் பேச வாய்ப்பளித்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

2023 மார்ச் 29] [*திரு.* P.R.G. *அருண்குமார்*]

தொகுதிக் கோரிக்கைகள்:

நெ. 24–வீரபாண்டி ஊராட்சி, தடாகம்–ஆனைகட்டி வரையுள்ள பழுதடைந்த தார்ச் சாலையினைப் புதுப்பித்தும், மண் சாலையினை தார்ச் சாலையாகவும் அமைத்துத் தர வேண்டும். பாலமலை பகுதியில் உள்ள பெரும்பதி–பெருகைபதிபுதூர் வரை 1.60 கி.மீ., குஞ்சூர்பதி–பசுமணிபுதூர் வரை 3.50 கி.மீ. தூரத்திற்கு புதிய சாலை வசதி அமைத்துத் தர வேண்டும். வீரபாண்டி ஊராட்சி, ஆனைகட்டி மலைப் பகுதி மக்கள் சாலையை அடைய 2 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதால், அவ்விருப்பிடங்களுக்கு சிற்றுந்து வசதி செய்து தர வேண்டும்.

சின்னதடாகம், நஞ்சுண்டாபுரம், வீரபாண்டி, சோமையம்பாளையம் ஊராட்சிகள், நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியை ஒட்டியுள்ள நிலங்களின் தூர அளவை நிர்ணயித்து, அரசாணை வெளியிட்டு, மற்ற நிலங்களுக்கு HACA NOC *பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். வடமதுரை, விருந்தீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் அறநிலையத் துறை சார்பாக மகளிர் கல்வியியல் கல்லூரி அமைக்க வேண்டும். பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி, குப்பிச்சிபாளையம்–அத்திபாளையம் வரையிலான சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்து தரம் உயர்த்தித் தர வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரை வணங்குகிறேன். தமிழ்நாட்டில் ஆண்களுக்கு சரிநிகராக வாழ்கின்ற பெண் குலத்திற்கு சமூக அந்தஸ்தைப் பெறுகின்ற வகையில், உரிமைத் தொகை வழங்கி, உலகம் போற்றுகின்ற ஓர் உன்னதமான திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற திராவிடர், தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். திராவிட இயக்கத்தின் இளைஞர், வாழும் கலைஞர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நான் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கான வாய்ப்பை தலைவர் கலைஞர் அவர்களிடத்திலும், இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் பரிந்துரை செய்து,*

எனக்காகத் தேர்தல் பணியாற்றி, எங்களுக்கு அனைத்துமாக இருக்கின்ற தமிழ்நாடு அரசில் நெடுஞ்சாலைத் துறைக்குப் பொறுப்பு வகிக்கின்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், உழைப்பால் உயர்ந்தவர், உழைப்பவர்களை மதிப்பவர் ஆற்றல்மிகு ஐயா அவர்களுக்கும், இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாய்க் கழகம் திராவிடர் கழகம். திராவிடர் கழகத்தின் தாய்க் கழகம் நீதிக் கட்சி. நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்ட சமூகத்தில் பிறந்த, அதாவது, தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்தவர்கள் பேருந்தில் ஏறக் கூடாது என அச்சிடப்பட்டு, பேருந்தில் புறக்கணிக்கப்பட்டார்கள். ஆனால், நீதிக் கட்சி ஆட்சியில்தான் தாழ்த்தப்பட்டவர்களைப் பேருந்தில் ஏற்றவில்லை என்றால், பேருந்தின் உரிமம் இரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த நீதிக் கட்சியின் நீட்சி இந்தத் திராவிட மாடல் ஆட்சி. நீதிக் கட்சி ஆட்சிக்கு முன்பு தனியார் வசமிருந்த, தனியார் பெருமுதலாளிகளிடமிருந்த பேருந்துகளையெல்லாம் அனைத்துத் தரப்பு மக்களும் எங்கள் பேருந்து, எங்கள் பஸ் என்று சொல்கின்ற அளவிற்கு அனைத்துத் தனியார் பேருந்துகளையும் அரசுப் பேருந்துகளாக அரசுடைமையாக்கியவர் இந்த ஆட்சிக்கு முன்னுதாரணமாக இருக்கின்ற மறைந்த முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்வதில் நான் பெருமையடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்பதற்காக மறைந்த முதல்வர் கலைஞர் அவர்கள், பட்டிதொட்டிகளுக்கெல்லாம் அரசின் மூலமாகப் பேருந்து வசதிகளை உருவாக்கித் தந்ததோடு, அரசுப் பேருந்து இயக்க முடியாத சிறு, சிறு கிராமங்களையும் இணைப்பதற்காக ‘மினி பேருந்து’ திட்டத்தைத் தந்தார்கள். நான் இங்கே அதைச் சொல்வதற்குக் காரணம், நானும் பேருந்து வசதியில்லாத

கிராமத்தில் பிறந்தவன்தான். என் கிராமத்திற்கும் அந்த மினி பேருந்துதான் முதன்முதலில் வந்தது. தலைவர் தளபதி ஆட்சியில் நகரப் பேருந்து வந்து கொண்டிருக்கிறது. எனவே, மினி பேருந்து திட்டம் கடந்த காலங்களில் முழுமைப்பெறாமல், அதற்கு அனுமதிக்கப்பட்ட 20 கி.மீ. தூரத்தில் 4 கி.மீ. பேருந்துகள் செல்கின்ற சாலையாகவும், 16 கி.மீ. பேருந்து செல்லாத பகுதிக்கும் என அனுமதிக்கப்பட்டிருந்தன. கடந்த பத்தாண்டுக் காலமாக அது நீட்டிப்பு செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து, மினி பேருந்துகளுக்கு நீட்டிப்பு வழங்கி, பேருந்து நிலையம் வரை அவை வந்து செல்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே, திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற திராவிட மாடல் முதல்வர் அவர்கள், பெண்கள் கட்டணமில்லாப் பேருந்து பயணம் மேற்கொள்ளலாம் என்று சொல்லியிருந்தார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதோ நகரப் பேருந்துகள் வண்ணம் தீட்டப்பட்டு, குறைந்த எண்ணிக்கையில் இயக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால், பெருநகரங்களில் இயக்கப்படும் சிவப்பு நிற பேருந்துகளைத் தவிர, மற்ற அனைத்து பேருந்துகளும் இளஞ்சிவப்பு வண்ணம் பூசப்பட்டு, தமிழ்நாட்டிலிருக்கின்ற உழைக்கும் மகளிர் அத்தனைபேரும் அந்தப் பேருந்துகளைப் பயன்படுத்தியதால்தான் இன்றைக்கு 2 கோடியே 56 இலட்சம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2 கோடியே 58 இலட்சம்.*

திரு. மு.பெ. கிரி: *2 கோடியே 58 இலட்சம் நடைகள் பயணம் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இங்கே ஒரு செய்தியை நான் குறிப்பிட விரும்புகிறேன். சொன்னால் எதிர்க்கட்சிக்காரர்கள் கோபித்துக்கொள்வார்கள். இருந்தாலும், நீங்கள் இதைச் செய்தீர்கள், அதைச் செய்தீர்களா, அதைச் செய்யவில்லை என்று சொல்லிவிட்டு, மகளிர் உரிமைத் தொகை எங்கே, மகளிர் உரிமைத் தொகை எங்கே என்று கேட்டார்கள். ஏனென்று சொன்னால், கஜானா காலியாகிவிட்டது; எப்படி அவர்களால் உரிமைத் தொகையைத் தர முடியும்; தராமல்*

விட்டுவிடுவார்கள் என்று சொன்னார்கள். அதற்கும், தன் அறிவால் சிந்தித்து, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 1 கோடி தாய்மார்களுக்கு உரிமைத் தொகையைத் தந்ததோடு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டத்தின்மூலம், ஒரு குடும்பத்தில் இருக்கின்ற ஒரு பெண் பயணம் செய்தாலும், 2 மகளிர் பயணம் செய்தாலும், ஒவ்வொருவருக்கும் ஒரு மாதத்திற்கு சராசரியாக 888/-ரூபாய் சேமிப்பு ஏற்படுகிறது, அவர்களது உழைப்பு மிஞ்சுகிறது என்று ஆய்வு சொல்கிறது. இதை நான் சொல்லவில்லை. இதை தமிழ்நாடு அரசின் ஆய்வு நிறுவனம் சொல்லியிருக்கிறது, நிதிக் குழு சொல்லியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவிட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, பெண்களுக்கு மட்டும்தான் கட்டணமில்லாப் பேருந்து பயணம் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தார்கள். ஆனால், அதிலே மூன்றாம் பாலினமாக இருக்கின்ற திருநங்கைகளை இணைத்து அந்தத் திருநங்கைகளுக்கும் இந்தக் கட்டணமில்லாப் பேருந்து பயணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 4—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்றை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆட்சியிலே மாற்றுத் திறனாளிகள் இந்த கோட்டைக்கு வருகை தந்து, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும், அவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க வேண்டுமென்றும் கேட்டு கடந்த அரசிடம் மண்டியிட்டார்கள். அப்படி மண்டியிட்ட அந்த மாற்றுத் திறனாளிகளை இதே பேருந்தில் அழைத்துச் சென்று அவர்களை செங்கல்பட்டிலே நடுக்காட்டிலே விட்டுவிட்ட வரலாறு கடந்த ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே பதிவுசெய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி விடப்பட்ட அந்த மாற்றுத் திறனாளிகளுக்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கட்டணமில்லாப் பேருந்து பயணச் சலுகையை வழங்கியிருக்கின்றார்கள். அதோடுமட்டுமல்ல; அவர்களோடு பயணிக்கின்ற உறவினருக்கும் உடன் வருவோருக்கும் சேர்த்து கட்டணமில்லாப் பேருந்து பயணம் தந்திருக்கிறார் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய பெருமைப்படுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 மார்ச் 29] [திரு. மு.பெ. கிரி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ கடந்த ஆட்சியில்தான் இங்கே போக்குவரத்துப் பேருந்துகள் வாங்கப்பட்டன, வாங்கப்பட்டன என்று சொன்னார்கள். நான் ஒன்றை இந்த மாமன்றத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றபோது என்ன நிலைமை? கொரோனா முதல் அலையிலே தாக்கம் குறைவு. எதிர்க்கட்சி ஆட்சியில் இருந்தபோது கொரோனா முதல் அலை வீசியது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சராக கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்றபோது என்ன நிலைமை, இரண்டாவது அலை கடுமையாக இருந்தது. நாமே ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளவில்லை. சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கு தயக்கம் இருந்தது. கணவன், மனைவியைப் பார்க்கவில்லை; மனைவி கணவனைப் பார்க்கவில்லை. அப்படி ஓர் இக்கட்டான நிலையில் போக்குவரத்துக் கழகமே நலிந்து போகின்ற அளவிற்கு இருந்த சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 500 கோடி ரூபாய் நிதியைத் தந்து 1,000 புதிய பேருந்துகளை வாங்கி கட்டுமானப் பணி நிறைவடைய இருக்கிறது, மேலும், 1,000 பேருந்துகள், (மேசையைத் தட்டும் ஒலி) 2,000 பேருந்துகளும் இயக்கத் தயாராக இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, மீண்டும் 500 கோடி ரூபாய் ஒதுக்கி 1,000 புதிய பேருந்துகளும், 1,000 பேருந்துகளை, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது.

திரு. மு.பெ. கிரி: இயக்குவதற்கு ஆணையிட்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; இந்த இக்கட்டான நிலையில் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் பல கோரிக்கைகளை வைக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் குறித்தெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த நெருக்கடியிலும் புதியதாக 206 வழித்தடங்களில் 260 புதிய பேருந்துகளை இயக்கி சாதனை படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; 2021–க்கு முன்பு நிறுத்தப்பட்ட 409 வழித்தடங்களில் 510 பேருந்துகள்மூலம் போக்குவரத்தைப் பொதுமக்கள் வசதிக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு சரிசெய்திருக்கிறது.

இவை அத்தனையும் செய்தது மட்டுமல்ல; மாண்புமிகு முதல்வர் அவர்கள் மகளிருக்கு வழங்கப்படுகிற கட்டணமில்லாப் பேருந்து பயணத்திற்கான இழப்பீடாக 2021–2022–ல் உரிய நிதியும், 2022–2023–க்கு உரிய நிதியும், இந்த ஆண்டு முன்கூட்டியே 2,800 கோடி ரூபாய் நிதியும், அந்த மகளிருக்கு வழங்கப்படுகின்ற கட்டணமில்லாப் பயணம் தடைபடக் கூடாது என்று ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஏறி வரும் விலைவாசி; ஒன்றிய அரசு கச்சா எண்ணெய்யின் விலை குறைந்தாலும் diesel விலையைக் குறைக்கவில்லை. அந்த diesel விலையைக் குறைப்பதற்கு அதை வாங்குவதற்கு ஏதுவாக ஒவ்வோர் ஆண்டும் diesel மானியமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடர்ந்து 2021–2022–க்கும், 2022–2023–க்கும் நிதியை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காகவும் என் நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இத்துடன் முடித்து விடுகிறேன்.

பிற்பகல் 4–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக பள்ளியிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு இலவச bus pass–ஐ தலைவர் கலைஞர் தந்தார். அதைத் தந்ததால்தான் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சாமானிய மக்கள் நகர்ப்புறத்திற்கு வந்து படித்து, பெற்ற கல்வியினால் பொருளாதார மேம்பாடு அடைந்தார்கள். இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை பேரும் அதிலே பயன்பெற்றிருப்போம் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். அந்தப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகையினை, இலவச பேருந்து பயணத்தினை, இன்றைய மாண்புமிகு முதலமைச்சர், அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்து அன்றைய மாண்புமிகு முதல்வரிடத்திலே கோரிக்கை வைத்து கல்லூரி மாணவர்கள் வரையில் நீட்டிப்பு பெற்றுத் தந்தார்கள். இப்போது மகளிருக்கு பயன்படுத்துகின்ற நிதி முழுமையாக வழங்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கையாக வைக்கின்றேன். அந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற 40 சதவிகித நிதியினை முழுமையாக வழங்கினால் இன்னும் போக்குவரத்துத் துறை திறம்பட பணியாற்றுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

2023 மார்ச் 29] [திரு. மு.பெ. கிரி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது), இன்னும் ஒரேயொரு கருத்தைக் கூறிவிட்டு, உடனே உரையை முடித்துவிடுகிறேன். திருவண்ணாமலை மாவட்டம் என்பது 8 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய பரந்து, விரிந்த மாவட்டமாகும். அந்த மாவட்டத்திற்கு, ஒரு காலத்தில் போக்குவரத்துத் துறை என்று சொன்னாலே, செய்யாறு பகுதிக்கு காஞ்சிபுரம் மண்டலமும், திருவண்ணாமலை பகுதிக்கு வேலூர் மண்டலமும், பிற பகுதிகளுக்கு விழுப்புரம் மண்டலமும் என்று மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, நாங்கள் போக்குவரத்து வசதி தேவையென்று சொன்னால், மூன்று மண்டலங்களில் இருக்கின்ற நிருவாக இயக்குநர்களை அணுக வேண்டும். ஆனால், மறைந்த முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இடத்திலே, இன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அன்றைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள், கோரிக்கை வைத்ததன் பேரிலே, இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அன்றைக்கு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த, இன்றைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், ஐயா, மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்கள், இந்த மூன்று மண்டலங்களையும் பிரித்து, திருவண்ணாமலைக்கு தனி மண்டலத்தை அமைத்துத் தந்ததால், எங்கள் பகுதியில் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்ட 1,500–க்கு மேற்பட்ட இளைஞர்கள் இத்துறையில் பணி வாய்ப்பு பெற்றார்கள். எங்கள் மாவட்டத்திலிருந்து வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட தெரியும். தி.மு.க. ஆட்சியில்தான் திருவண்ணாமலை மாவட்டத்திலே இருக்கின்ற நடத்துநர்கள், ஓட்டுநர்களுக்கு பணி வாய்ப்பு வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. மு.பெ. கிரி: உரையை முடித்துவிடுகிறேன் ஐயா. கடைசியாக, போக்குவரத்துத் துறையில் தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து மண்டலங்களைக் காட்டிலும், திருவண்ணாமலை மண்டலம்தான் இலாபம் ஈட்டி தருகின்ற மண்டலமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கைகளை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி,

வழங்கப்படவிருக்கின்ற அந்த 2,000 பேருந்துகள், ஜெர்மன் நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் வாங்கவிருக்கின்ற 2,213 பேருந்துகள், மின்சாரத்தில் இயங்குகின்ற 500 பேருந்துகள் என மொத்தம் 4,700–க்கு மேற்பட்ட புதிய பேருந்துகளும், 2,000–க்கு மேற்பட்ட புதுப்பிக்கப்படுகின்ற பேருந்துகள், என ஆக மொத்தம் சுமார் 7,000 பேருந்துகள் இந்த ஆண்டிலே வரவிருக்கின்றன. அந்தப் பேருந்துகள் வந்தவுடனேயே எங்கள் மாவட்டத்திற்குப் போதுமான அளவிற்குப் பேருந்துகளைத் தர வேண்டும். அதைப்போன்று, கடந்த 10 ஆண்டு காலமாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

திரு. மு.பெ. கிரி: *அனைத்துப் போக்குவரத்துப் பணிமனைகளும் சீர்செய்யப்படாமல், பேருந்துகள் உள்ளே சென்றால், சேரிலும் சகதியிலும் இருந்தது. ஏற்கெனவே நலிவடைந்த நிலையிலே இருக்கின்ற பேருந்துகள். . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள்.*

திரு. மு.பெ. கிரி: *அவை மிகவும் பாதிக்கின்ற வகையில் இருக்கின்றன. அவற்றைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியிலே ஒரு பணிமனை கட்டப்பட்டது. எதற்காக கட்டப்பட்டது என்று தெரியவில்லை. அந்தப் பணிமனையை அப்படியே கிடப்பிலே விட்டுவிட்டார்கள். எனவே, கடந்த ஆட்சியில் கட்டப்பட்ட அந்தப் பணிமனையை,* tyre *மாற்றுகின்ற இடமாகவோ அல்லது கூண்டு கட்டுகின்ற இடமாகவோ மாற்றினால், அதற்குரிய தேவைகளை, போக்குவரத்துத் துறைக்கு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்துகூட நிதி கொடுக்கின்றோம்; அரசின் பணம் அங்கே வீணாகிறது; அதைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லி, என் தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடத்தில் நான் தருகின்றேன். அவற்றைப் பதிவு செய்து கொண்டு, நிறைவாக ஒரேயொரு கோரிக்கையைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் படித்த பள்ளியில் 8 ஆம் வகுப்பு வரை இருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் படித்திருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறீர்கள். (சிரிப்பு)*

2023 மார்ச் 29]

திரு. மு.பெ. கிரி: *அந்தப் பள்ளியை கலைஞர் ஆட்சியில் நான் மாவட்ட ஊராட்சித் தலைவராக இருந்தபோது மாண்புமிகு ஐயா அவர்கள், வீட்டு வசதித் துறை அமைச்சராக அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்தபோது தரமுயர்த்தித் தந்தார்கள். கடந்த ஐந்தாண்டு காலம் எதிர்க்கட்சியிலே இருந்து ஒவ்வொரு முறையும் நான் கேட்டேன், கொடுக்கவில்லை. அனைவருக்கும் கொடுக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எனக்கு அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவதோடு, என் தொகுதிக்கு வேண்டிய அத்தனையையும் கோரிக்கைகளாகத் தந்திருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) அனைத்து மாண்புமிகு அமைச்சர்களும், தயவுகூர்ந்து, பின்தங்கிய தொகுதியாக இருக்கின்ற எனது தொகுதிக்கு பெரும் நிதியை ஒதுக்கித் தந்து, எங்கள் தொகுதி வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென்று சொல்லி, இவ்வளவு நேரம் பொறுமை காத்து, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

தொகுதிக் கோரிக்கைகள்:

செங்கம் தொகுதி, சாத்தனூர் அணையிலிருந்து மேற்புற கால்வாய் அமைத்து சாத்தனூர் கோவிந்தம்பட்டு, தரடாப்பட்டு, மேல்கரிப்பூர், கண்ணக்கந்தல், நெடுங்காவாடி, கீழ்வணங்கம்பாடி, பெரும்பாக்கம், திருவண்ணாமலை சமுத்திர ஏரி வழியாக நந்தன் வாய்க்கால் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்திட வேண்டும். செங்கம் சட்டமன்றத் தொகுதி, செங்கத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதியதாகத் தொடங்கிட வேண்டும்.

செங்கம் நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் கடந்த 10 ஆண்டுக்காலமாக எந்தப் பணியும் மேற்கொள்ளப்படாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செங்கம் தொகுதி மக்கள் செல்வதற்கு சுமார் 70 கி.மீ. தூரம் உள்ளது. மேலும், செங்கம் மருத்துவமனை பாண்டி–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால் விபத்துகால தீவிர சிகிச்சைப் பிரிவும், தாய்–சேய் நலப் பிரிவும் மற்றும் நவீன வசதிகளுடன் பிணவறையும் அமைக்க வேண்டும்.

செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு அரசு மருத்துவமனை, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செங்கம் தொகுதி மக்கள் செல்வதற்கு சுமார் 20 கி.மீ. தூரம் உள்ளது. மேலும், புதியதாகத் துவங்கப்பட்ட மருத்துவமனை என்பதால் கட்டுமானம் முழுமை பெறவில்லை. எனவே, விபத்துகால தீவிர சிகிச்சைப் பிரிவும் தாய் சேய் நலப் பிரிவும், சுற்றுச்சுவர் மற்றும் நவீன வசதிகளுடன் பிணவறையும் அமைக்க வேண்டும்.

செங்கம் தொகுதி, தாணிப்பாடி அரசு மருத்துவமனையில் கடந்த 10 ஆண்டு காலமாக எந்தப் பணியும் மேற்கொள்ளப்படாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. தாணிப்பாடி சுற்றுவட்டாரப் பகுதியில் 50–க்கும் மேற்பட்ட கிராமங்களும் பெரும்பான்மை மலைவாழ் மக்கள் வாழுகின்ற பகுதியாகவும் இருப்பதாலும், இந்த மருத்துவமனை துவங்கப்பட்டு 40 ஆண்டுகள் ஆவதாலும், இந்த மருத்துவமனையில் இரண்டு மருத்துவர் பணியிடங்கள் மட்டும் உள்ளதால் பிற மருத்துவமனை போன்று மருத்துவர் பணியிடங்களும், பிற பணியிடங்களும் தோற்றுவித்து உரிய மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்களை நியமனம் செய்தும், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் விபத்துகால தீவிர சிகிச்சைப் பிரிவும், தாய் சேய் நலப் பிரிவும் மற்றும் நவீன வசதிகளுடன் பிணவறையும் அமைக்க வேண்டும்.

செங்கம் தொகுதி, மேல்பள்ளிப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் படுக்கை வசதிகளுடன்கூடிய கட்டடமும், அதிநவீன தாய்–சேய் நலப் பிரிவும் மற்றும் சுற்றுச்சுவரும் அமைக்க வேண்டும். செங்கம் தொகுதி, மேல்பெண்ணாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெரும்பான்மையான கட்டடங்கள் பழுதடைந்துள்ளன. சுற்றுச்சுவர் முழுமையாகப் பழுதடைந்துவிட்டது. எனவே, புதிய நவீன படுக்கையுடன்கூடிய கட்டடமும், புறநோயாளிப் பிரிவுக் கட்டடமும், மருத்துவர்கள் தங்கும் கட்டடமும் மற்றும் சுற்றுச்சுவரும் கட்டித் தர வேண்டும்.

செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஒன்றியம், ரெட்டியார்பாளையம் ஊராட்சியிலுள்ள துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவருடன்கூடிய புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும். செங்கம் தொகுதி, பெரும்பாக்கம் துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய சுற்றுச்சுவருடன்கூடிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

2023 மார்ச் 29] [திரு. மு.பெ. கிரி]

செங்கம் தொகுதி, ரெட்டியார்பாளையம் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையமும், பெரும்பாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகமும் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் தொகுதி, செங்கம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் செங்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் உள்ள பழுதடைந்த பழைய கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஒன்றியம், தரடாப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளி, நாராயண குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளி, தென்முடியனூர் அரசு உயர்நிலைப் பள்ளி, சாத்தனூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் குப்பநத்தம் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்ராவந்தவாடி அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்செங்கம் அரசு உயர்நிலைப் பள்ளி, குயிலம் அரசு உயர்நிலைப் பள்ளி, ஆகிய பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி தர வேண்டும்.

செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு வட்டம், தாணிப்பாடி–கோணமலை செல்லும் சாலையில் பாம்பனாற்றின் குறுக்கே, புதூர் செக்கடி–புளியம்பட்டி செல்லும் சாலையின் குறுக்கே அகரம்பள்ளிப்பட்டு–சுடுகாடு செல்லும் சாலையின் குறுக்கே, தென்முடியனூர் கிருஷ்ணாவரம்–குளத்தூர் கொட்டாய் செல்லும் சாலையின் குறுக்கே மற்றும் செங்கம் பெரியார் நகர்–தளவனாயக்கன்பேட்டை இடையே செய்யாற்றின் குறுக்கே பாலங்கள் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் தொகுதி, செங்கம், தளவனாயக்கன்பேட்டை பச்சையம்மன் கோயில் செய்யாற்றின் குறுக்கே, செங்கம் குப்பநத்தம் ஊர் பகுதியிலிருந்து மாரியம்மன் கோயில் செல்லும் சாலையில் செய்யாற்றின் குறுக்கே, செங்கம் கொட்டா ஊரிலிருந்து கொ. அண்ணாநகர் செல்லும் சாலையில் செய்யாற்றின் குறுக்கே பாலங்கள் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் தொகுதி, செங்கம் பழைய குயிலம்–ஆலப்புத்தூர் செல்லும் சாலையிலுள்ள ஓடையின் குறுக்கே, செங்கத்திலிருந்து கோட்டாங்கல் செல்லும் சாலையில் செய்யாற்றின் துணைக் கால்வாயின் குறுக்கே, செங்கம் கிருஷ்ணாவரம்–பட்டாணிகொல்லை செல்லும் சாலையில் ஓடையின் குறுக்கே,

செங்கம் கிருஷ்ணாவரம் முனீஸ்வரம் நகர்—குமாரசாமி பாளையம் இணைப்புச் சாலையின் குறுக்கே, செங்கம் தீட்டாண்டம்பட்டு—அருந்ததி காலனி, ராஜீவ்காந்தி நகரின் குறுக்கே பாலங்கள் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் தொகுதி, செங்கம் ஆண்டிப்பட்டி—மண்ணாண்டிப்பட்டி சாலையின் குறுக்கே, செங்கம் பெரும்பாக்கம் கிராமத்தில் செ. அகரம் செல்லும் சாலையில் ஏரியின் குறுக்கே, செங்கம் ஆண்டிப்பட்டி—மண்ணாண்டிப்பட்டி சாலையின் குறுக்கே, ஜவ்வாதுமலை ஒன்றியம், பண்டிரேவ் செல்லும் சாலையின் குறுக்கே, ஜவ்வாதுமலை ஒன்றியம், ஊர்கவுண்டனத்தூர் கோயில்கொல்லை செல்லும் சாலையின் குறுக்கே, பாலங்கள் அமைத்துத் தர வேண்டும். செங்கம் தொகுதி, மேல்செங்கத்திலுள்ள 12 ஆயிரம் ஏக்கரில் ஒன்றிய அரசின் அனுமதி பெற்று வேளாண் சார்ந்த தாவரவியல் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் தொகுதி, தென்பெண்ணையாறு—செய்யாறு இணைப்பு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

செங்கம் தொகுதி, சிங்காரப்பேட்டை ஏரியிலிருந்து மேல்செங்கம் தண்டராம்பட்டு ஏரிக்கு வரத்துக் கால்வாய் அமைத்துத் தர வேண்டும். செங்கம் தொகுதி, குப்பநத்தம் அணையிலிருந்து கொட்டாவூர், பரமநந்தல், புதுப்பட்டு, ஆலப்புத்தூர், குயிலம், அன்வராபாத் மற்றும் பல கிராமங்களுக்கு பாசனக் கால்வாய் அமைத்துத் தர வேண்டும். செங்கம் தொகுதி, எறையூர் ஏரியிலிருந்து கிழக்கு புறக் கால்வாய் அமைத்து உச்சிமலைக்குப்பம், விண்ணவனூர், பாய்ச்சல், கண்ணக்குறுக்கை, பீமாநந்தல், சின்னகோளாப்பாடி, பெரியகோளாப்பாடி, அரசுவநாகசுராணை ஆகிய ஊராட்சிகளுக்கு பாசனத்திற்கு கால்வாய் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் தொகுதி, செங்கத்திலிருந்து பரமநந்தல் மேல்பட்டு வழியாக ஜமுனாமரத்தூருக்கு நெடுஞ்சாலைத் துறைமூலம் தடுப்புச் சுவருடன்கூடிய சாலை, நீப்பத்துறை கொட்டாவூரிலிருந்து தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, கருங்காலிப்பட்டிக்கு சாலை, மேல்ராவந்தவாடியிலிருந்து ராமாபுரம் வழியாக கல்லடாவிக்கு சாலை, செங்கம், சின்ன கல்தாம்பாடியிலிருந்து அரியகுஞ்சூர் கிராமத்திற்கு சாலை ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டும். செங்கம் தொகுதி, செங்கத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும்.

2023 மார்ச் 29] [*திரு. மு.பெ. கிரி*]

செங்கம் தொகுதி, சாத்தனூர் அணையையும் குப்பநத்தம் அணையையும் அனைத்து உள்கட்டமைப்புடன் சிறந்த சுற்றுலாத் தலமாகவும் பொழுதுபோக்கு தலமாகவும் அமைத்துத் தர வேண்டும். செங்கம் தொகுதி, சாத்தனூர் அணையின் நடுப்புறத்திலுள்ள நிலத்திட்டில் கம்பிவட ஊர்தி (Rope car) அமைத்துத் தர வேண்டும். செங்கம் தொகுதியில் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற புதிய தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டும்.

பிற்பகல் 4–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா உயிரினங்களும் இடம் பெயர்வதுபோல மனிதனும் இடம் பெயர்ந்தான். முதலில் கால்நடையாக இடம் பெயர்ந்தவன், ஒரு கட்டத்தில் கால்நடைகளைப் பயன்படுத்தி, அதன்மீது சவாரி செய்து இடம் பெயர்ந்தான்; அப்படி இடம் பெயர்ந்தவன் ஒரு கட்டத்தில் கால்நடைகளைப் பயன்படுத்தி வண்டிகள் கட்டிக் கொண்டு இடம் பெயர்ந்தான்; பரிசல்கள் அமைத்தான்; ஓடம் கட்டினான். படிப்படியாக மின் மோட்டார்கள் இணைக்கப்பட்ட படகுகளில் பயணம் செய்தான். அதேபோன்று, மோட்டார் வாகனங்கள் மற்றும் மிதிவண்டி அமைப்புகளை ஏற்படுத்தி இடம் பெயர்ந்தான்; பிறகு கப்பல் கட்டி கடலில் மிதந்தான்; வானத்தில் பறந்தான்; இரயில் வண்டியைத் தயாரித்தான். ஆனால், எல்லா வகையிலும் நம் பொதுமக்களுக்கு எளிதாக உதவுவது பொதுப் போக்குவரத்துதான். சாலைப் போக்குவரத்து பொதுவாக உதவுகின்ற போக்குவரத்தாக இருக்கின்றது. குறிப்பாக, வேலை தேடி அலைகின்ற மக்களுக்கும், வேளாண்மை செய்கின்ற மக்களுக்கும், விவசாயம் செய்கின்ற மக்களுக்கும், வியாபாரிகளுக்கும், மாணவச் செல்வங்களுக்கும், தேர்வு மையங்களுக்குச் செல்லும் மாணவர்களுக்கும், பக்த கோடிகளுக்கும், பண்டிகை காலங்களில் பெருநகரங்களிலிருந்து சொந்த ஊர்களுக்குச் செல்கின்ற பொது மக்களுக்கும் பெரிதும்

பயன்படுவது பொதுப் போக்குவரத்தேயாகும். இப்படிப்பட்ட போக்குவரத்துத் துறை நம் தமிழகத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக இருக்கின்றது.

நகரப் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லாப் பயணம்; மாணவ, மாணவியருக்குக் கட்டணமில்லாப் பயணம் தொடர்வது; திருநங்கைகளுக்குக் கட்டணமில்லாப் பயணம் தொடர்வது; மாநகரப் போக்குவரத்தில் முதியோர்களுக்குக் கட்டணமில்லாப் பயணம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருப்பது; மாற்றுத் திறனாளிகளுக்கும், அவர்களுடைய உதவியாளர்களுக்கும் கட்டணமில்லா பயணம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருப்பது போன்றவை பாராட்டுக்குரியவையாக இருக்கின்றன.

அரசுப் பேருந்துகளில் இதுவரை 258 கோடி கட்டணமில்லா பேருந்து பயணம் மகளிர் மேற்கொண்டிருக்கின்றார்கள் என்று கேட்பது இனிப்பான செய்தியாக இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த சாலைப் பாதுகாப்புத் திட்டத்தில், இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48 போற்றுதலுக்குரியதாக இருக்கிறது. நம்மைக் காக்கும் 48, மருத்துவ சேவைகள் சட்டம் உதவி செய் திட்டத்தின்கீழ் 18–12–2021 முதல் 6–2–2023 வரை விபத்துக்குள்ளான 1,43,175 நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள்; அதற்கு ரூ.125.47 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது என்று கேட்பது மிகவும் பாராட்டும்படியாக இருக்கிறது.

பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்தவும், பேருந்து பணிமனைகளை உயர்தர போக்குவரத்து மையங்களாகத் தரமுயர்த்தவும், முதற்கட்டமாக, வடபழனி, திருவான்மியூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய பணிமனைகளுக்காகவும், இரண்டாவது கட்டமாக தாம்பரம், திருவொற்றியூர் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய பணிமனைகளுக்காகவும் ரூ.1,800 கோடி பணம் ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டுக்குரியதாக இருக்கிறது. 1,000 புதிய பேருந்துகள் வாங்கவும், 500 பழைய பேருந்துகளை புதுப்பிக்கவும் ரூ.500 கோடி ஒதுக்கியிருப்பதும், தொடர் வண்டித் துறையுடன் ஒருங்கிணைந்து மாநிலத்தில் புதிய திட்டங்களைக் கண்டறிந்து செயல்படுத்துவதற்கு சிறப்பு நிறுவனம் உருவாக்கவிருப்பதும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

வேளச்சேரியிலுள்ள அரசு மத்திய தானியங்கிப் பணிமனை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள மற்ற தானியங்கிப் பணிமனைகளிலும்

2023 மார்ச் 29] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

தொழில்நுட்பப் பணியாளர்கள் மிகக் குறைந்த அளவில் இருக்கின்றார்கள். மிக மிக முக்கியமானவர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் அந்த பணிமனைகளில்தான் அதிகமாகப் பராமரிக்கப்படுகின்றன. ஆகவே, அந்தத் தொழில்நுட்பப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்றுதான் மாநில போக்குவரத்துக் கழகங்களிலும் தொழில்நுட்பப் பணியாளர்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஒவ்வொரு பணிமனையிலும் தேவையான அளவு உதிரி பாகங்கள் இருப்பு வைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *4–50*

பொதுவாக, நம் மாநிலத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் இருக்கும் எல்லா இடங்களிலும் உள்ள ஓட்டுநர், நடத்துநர் காலிப் பணியிடங்களை நீங்கள் விரைவில் நிரப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அதிக மக்களால் பயன்படுத்தப்படும் போக்குவரத்து இன்னும் சிறப்பாக இயங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வாகனங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் அதாவது FC வழங்கும்போது அந்த வாகன பராமரிப்புப் பிரிவில் இருக்கின்ற ஒரு வல்லுநரை அந்தக் குழுவில் இடம் பெறச் செய்தால் இன்னும் நன்றாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அனைத்து பணிமனைகளிலும் ஓய்வு விடுதிகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் சில நேரங்களில் *12* மணிக்கு வருகிறார்கள், காலையில் *5* மணிக்குப் போகிறார்கள். அவர்கள் சரியான படுக்கை வசதிகள் இல்லாமல், சரியான ஓய்வு இல்லாமல் மீண்டும் பணிக்குச் செல்ல வேண்டியிருப்பதால் சில விபத்துகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. ஆகவே, அவற்றைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்கு நல்ல தங்கும் இடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டணமில்லாப் பேருந்து பயணம் செய்யும் மகளிர் பேருந்துகள் அனைத்திலும் முன்னும் பின்னும் pink colour ஏற்கெனவே இருக்கிறது. இருந்தாலும், pink colour இல்லாத பேருந்துகளுக்கு pink colour அடித்துவிட வேண்டும்.

ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்கு 58 வயதில் ஓய்வு கொடுத்தால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். ஏனென்றால், மனித உடல் ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு சில வேலைகளைச் செய்வதற்குத் தயக்கம் காட்டும். ஆகவே, 58 வயதிற்கு மேல் அவர்கள் சிறப்பாக பணி செய்வதற்கு வசதி இருக்காது. ஆகவே, இதனைப் பரிசீலனை செய்ய வேண்டும். அதேபோன்று, மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ஓய்வுபெற்றவர்களைக் கட்டாயமாகச் சேர்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, அவர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை வாய்ப்பு கிடைத்தால் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய சட்டங்கள் இருக்கின்றன. Traffic Rules அதாவது போக்குவரத்து விதிகள் நிறைய இருந்தாலும், சமீபத்தில் நான் சாலையில் காரில் வந்து கொண்டிருந்தபோது, என்னைத் தாண்டி ஒரு பையன் motor cycle–ல் பறந்து கொண்டுதான் சென்றான். அநேகமாக 150 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றான் என்று நினைக்கிறேன். அவன் உட்கார்ந்திருந்த seat தொட்டில் மாதிரி இருக்கிறது. அந்தத் தொட்டிலுக்குள் அவன் இருக்கிறான். அவன் பின்புறத்தில் இருப்பவன் அவன் முதுகில் இருப்பதுபோன்று தெரிகிறது. நாங்களும் அவனை விரட்டிப் பிடிக்கலாம் என்று எவ்வளவோ முயற்சி செய்தோம். மேலூரிலிருந்து கிட்டத்தட்ட 50 கிலோ மீட்டர் முயற்சி செய்தோம். ஆனால், அவனைப் பிடிக்கவே முடியவில்லை. அவன் பறந்து போய்க் கொண்டிருந்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பறந்து போகின்ற ஆளை, நீங்கள் road–ல் எப்படிப் போய் பிடிக்க முடியும்? நீங்களும் கொஞ்சம் பறந்து செல்லுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: அதிவேகமாக செல்கின்றவர்களை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்குண்டான கருவிகளையெல்லாம் ஏற்பாடு செய்து, உடனடியாகத் தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு நல்ல அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சில நேரங்களில் லாரிகளின் பின்புறம் உள்ள சிவப்பு விளக்கு எரியாது; Danger light எரியாது. நாம் பக்கத்தில் சென்றால்தான் ஒரு வண்டி முன்னால் சென்று கொண்டிருக்கிறது என்பது தெரிய வருகிறது. ஆகவே, அவையெல்லாம் நன்றாக எரிய வேண்டுமென்று சொல்லுங்கள். அதேபோன்று, ஒலிப்பான்–horn

2023 மார்ச் 29] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

பல்வேறுவிதமான ஒலிகளில் ஒலிக்கும்படி வைத்திருக்கிறார்கள். சில பேருந்துகளில், அதுவும் குறிப்பாக தனியார் பேருந்துகளில் சுற்றிச் சுற்றி வண்ண விளக்குகள் அணைந்து அணைந்து எரிந்து கொண்டேயிருக்கும். மிகவும் அதிகமான sound*–ல் பாடல்களை போட்டுக் கொண்டு வேகமாக ஓட்டிக் கொண்டு போவார்கள். இவையெல்லாம் விபத்துகளுக்குக் காரணமாகிவிடுகின்றன. எனவே, இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும். மேலும், ஓட்டுநர்கள் அலைபேசியைப் பேசிக் கொண்டு வண்டி ஓட்டுவதை நாம் தடை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமா? டாக்டர்தான் சரியான நேரத்திற்கு* correct *ஆக முடிப்பவர்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *என்னுடைய தொகுதியைப் பற்றிய விஷயங்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் நீங்கள் சட்டமன்றத்தில் பேசியதாகப் பதிவு செய்துவிடுகிறேன்.*

பிற்பகல் 4–55

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *என்னுடைய தொகுதிக்கு ஓர் அரசுக் கலைக் கல்லூரி வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், என்னுடைய தொகுதியில், 22–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளும், 30–க்கும் மேற்பட்ட 10 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளும் இருக்கின்றன. ஆகவே, பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றும், அரசு கலைக் கல்லூரி ஒன்றும், ஐ.டி.ஐ. ஒன்றும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேற்கு தொடர்ச்சி மலையில் இருக்கின்ற தலையணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக்க வேண்டுமென்று நான் முதல்வன் திட்டத்தின்கீழ் 10 கோரிக்கைகளில் ஒன்றாக எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதையும் செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதி சம்பந்தமான சில கோரிக்கைகளைத் தங்களிடம் தருகிறேன்.

அவற்றையெல்லாம் நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி நீங்கள் ஏற்றுக்கொண்டு, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

வாசுதேவநல்லூர் தொகுதி, நொச்சிகுளம், வடமலாபுரம், ஆண்டார்குளம், இராமசாமியாபுரம், வடநத்தம்பட்டி, சேர்ந்தமரம் வழியாக சங்கரன்கோவில்–சுரண்டைக்கு நகரப் பேருந்து இயக்க வேண்டும்.

நகரம், இராமசாமியாபுரம், சேர்ந்தமரம் வழியாக புளியங்குடி–சுரண்டைக்கு நகரப் பேருந்து இயக்க வேண்டும்.

தளவாய்புரம், பொய்கை, K.V. ஆலங்குளம், வீரசிகாமணி, அரியநாயகிபுரம், K.M. அச்சம்பட்டி, பாலஅருணாசலபுரம் வழியாக சங்கரன்கோவில்–கடையநல்லூருக்கும், தென்மலை, பருவக்குடி, கரிவலம்வந்தநல்லூர் வழியாக சிவகிரி–சங்கரன்கோவிலுக்கும் மற்றும் இடைகால், கடையநல்லூர், பாலஅருணாசலபுரம், அருணாசலபுரம் வழியாக தென்காசி–வீரசிகாமணிக்கும் நகரப் பேருந்து இயக்க வேண்டும்.

கரிவலம்வந்தநல்லூர் பகுதியில் தொழிற்பூங்கா அமைக்க வேண்டும். சிவகிரி பகுதியில் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும்.

வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனைகளை மேம்பாடு செய்ய வேண்டும்.

ஆயுதப்படை காவல் மையம், புளியங்குடியில் போக்குவரத்துக் காவல் நிலையம், தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும். புளியங்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய் வட்டம் உருவாக்க வேண்டும்.

புளியங்குடி, சேர்ந்தமரம் ஆகிய காவல் நிலையங்களுக்கு அருகிலுள்ள இராமசாமியாபுரம் வருவாய்க் கிராமம், நகரம் வருவாய்க் கிராமம் மற்றும் சங்கரன்கோவில் காவல் நிலையத்திற்கு அருகிலுள்ள நொச்சிகுளம், ஆலங்குளம் வருவாய்க் கிராமங்கள்

2023 மார்ச் 29] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இவற்றை அருகிலுள்ள காவல் நிலையக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டிருக்கின்ற திசையை நோக்கி வணங்குகிறேன். தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியை நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எங்களது வழிகாட்டி, பேராற்றல்மிக்க இளந்தலைவர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். இந்த மன்றத்தில் அமர்ந்துள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாமக்கல் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களை இந்நேரத்தில் நன்றியுடன் நினைவுகூருகிறேன்.

தனியார்வசம் இருந்துவந்த பேருந்துகளையெல்லாம் நாட்டுடைமையாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை சாமானிய மக்கள் என்றைக்கும் நினைவுகூர்வார்கள். அத்தகைய வரலாற்றை அன்றைக்கு முதல்வர் உருவாக்கினார் என்றால், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழையெளிய மகளிர், உழைக்கும் பெண்கள், நடுத்தர உழைக்கும் வர்க்கத்தினர் என்று பாகுபாடு இல்லாமல் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பேருந்து பயணத்தை அறிவித்து, ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே கையொப்பமிட்ட 5 திட்டங்களுள் இதுவும் ஒன்று என்பது வரலாற்று நிகழ்வாகும்.

'மக்களைத்தேடி முதல்வர்' என்ற யதார்த்தமான நடைமுறையை தமிழ்நாட்டு மக்கள் நேரடியாகக் காண்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கை

சாமானியருக்கும் வந்துள்ளதைப் பத்திரிகைகளும், ஊடகங்களும் பாராட்டுகின்றன. வசதி வாய்ப்புள்ளவர்கள் தனியார் சொகுசுப் பேருந்துகளில் பயணம் செய்ய முடியும். போக்குவரத்துத் துறை என்பது சேவை மனப்பான்மையுடன் செயல்படுத்த வேண்டிய ஒரு துறை. அதில், இலாப, நஷ்டக் கணக்கு பார்க்கக் கூடாது என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கருத்து தாயுள்ளத்தின் வெளிப்பாடு.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையானது இந்தியாவிலேயே மிகவும் நகரமயமாக்கப்பட்ட மற்றும் வளர்ந்த மாநிலங்களுள் ஒன்றாக விளங்குகிறது. தமிழ்நாட்டில், 20,127 பேருந்துகளுடன் 10,152 வழித்தடங்களில் இயக்கப்பட்டு, ஏழை, எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் கிராமப்புறங்களிலிருந்து நகரத்திற்கு விவசாயப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் போக்குவரத்துத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள மொத்த நகரப் பேருந்துகளில், 7,164 சாதாரண நகரப் பேருந்துகள் மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத்துக்காக இயக்கப்படுவதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இதுவரையில், 258/- கோடி ஏழை, எளிய பெண்களால் நகரப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். 2022–2023 ஆம் நிதியாண்டில், ஜனவரி 2023 வரை ரூ.2,518.74 கோடியை மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத்திற்காக, இழப்பீடாக தமிழக அரசால் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2023–2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மகளிர் கட்டணமில்லா பயணத்திற்கென ரூ.2,800 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மகளிர் எளிதில் அறியும்வண்ணம் சாதாரணப் பேருந்துகளில் இளஞ்சிவப்பு, pink நிற வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டம் திருநங்கைகளுக்கும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் பயன்படுகின்ற வகையில், 3–6–2021 முதல் அறிவிக்கப்பட்டதன்மூலம் இன்று அவர்களும் பயன்பெற்று வருகிறார்கள்.

7–5–2021 முதல் 28–2–2023 வரை, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 206 புதிய வழித்தடங்களில், 260 பேருந்துகள்மூலம் பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக நிறுத்தப்பட்ட இயக்கப்படாத 510 பேருந்துகள் தற்போது இயக்கப்படுவதால் மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

விழாக் காலங்களில் சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் தற்காலிகமாக பேருந்து நிலையங்களை ஏற்படுத்தி, நகரின் முக்கிய இடங்களில் கூடுதல் பேருந்துகள் காலை முதல் நள்ளிரவு வரை இயக்கப்பட்டு, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கின்ற வகையில் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 5–00

மாணவர்கள் பேருந்து படிக்கட்டில் பயணம் செய்வதை தவிர்க்கும்பொருட்டு, மாவட்ட வாரியாக பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள், தலைமை ஆசிரியர்களுடன் WhatsApp group–ஐ ஏற்படுத்தி சிறப்பாகச் செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

2023–2024 ஆம் நிதியாண்டில் அரசு போக்குவரத்துத் துறைக்கு 8,056 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 1,000 புதிய பேருந்துகளை கொள்முதல் செய்யவும், 500 பழைய பேருந்துகளைப் புதுப்பிக்கவும் ரூ.500 கோடி என்பது குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமின்றி ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதி உதவியோடு 3,313 BS–VI இணக்கமான டீசல் பேருந்துகளையும், 500 மின்சாரப் பேருந்துகளையும் வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் அனைத்து வகை பேருந்துகளிலும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இலவசமாகப் பயணிக்கும் திட்டம் 27–6–2022 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஓட்டுநர், நடத்துநர் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை நிரப்ப இந்த அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணத்தில் 122 ஓட்டுநர்கள் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் 685 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், எஞ்சியுள்ள ஓட்டுநர் மற்றும் நடத்துநர் காலிப் பணியிடங்களையும் நிரப்பிட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு

கேட்டுக்கொள்கிறேன். மேலும், 14–5–2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் போக்குவரத்துத் துறையில் 132 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் சுமார் 6½ இலட்சம் கனரக வாகனங்கள் உள்ளன. லாரி உரிமையாளர்களுக்கு என நல வாரியம் ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று சம்மேளனத்தின் சார்பாக பல முறை அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளார்கள். எனவே, நல வாரியம் ஒன்று அமைத்திட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினரால் ஆன்லைன் அபராதம் விதிக்கப்படும்போது, வாகனங்களைத் தணிக்கை செய்த பின்னர் அபராதம் விதிக்கப்பட வேண்டும். மேலும், வண்டியை நிறுத்தாமலும், helmet அணியாமலும் இருக்கும்போது அபராதம் போடுவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு வேண்டுகிறேன். திருத்தப்பட்ட வாகனச் சட்டத்தில், லாரி அபராதம் மிக அதிகமாக உள்ளது. எனவே, அபராதத் தொகையைக் குறைத்திட வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். அதனை அரசு கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டுகிறேன்.

வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் தமிழகத்தில் உள்ள அனைத்து RTO அலுவலகங்களிலும் வழங்க ஏற்பாடு செய்து தர பரிசீலனை செய்ய வேண்டும். அதேபோல், வாகனத்தின் மொத்த எடை. வெளிமாநிலங்களிலிருந்து வாகனங்களைத் தமிழகத்தில் மறுபதிவு செய்யும்போது அதற்குண்டான ஒன்றிய அரசின் ஆணைப்படி Registered Laden weight (RLW) அதிகப்படுத்தி Axle weight தரப்படவில்லை. இதனால் தமிழக அரசின் வருவாயில் இழப்பு ஏற்படுகிறது. ஒன்றிய அரசின் ஆணைப்படி அதிகப்படுத்தித் தந்து அதனை முறைப்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் மினி பேருந்தினை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2023 மார்ச் 29] [திரு. பெ. ராமலிங்கம்]

அனைத்து நகரங்கள் மற்றும் மாநகரங்களில் மாசு அதிகரிப்பைக் கட்டுப்படுத்த நகர மற்றும் மாநகரப் பேருந்துகளையும், ஆட்டோக்கள் மற்றும் வாடகை கார்களையும் CNG அல்லது LPG Gas மூலம் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

பிற மாநிலங்களில் இயக்கப்படும் multi–axle–Volvo பேருந்துகள்போல் நம் மாநிலத்திலும் இயக்கினால் பொதுமக்கள் அதிக தூரம் பயணம் செய்ய உகந்ததாக இருக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், கிராமங்களுக்குச் செல்லும் நகரப் பேருந்துகளின் ஒரு நாளின் கடைசி இயக்கம் இரவு 9.30–க்கு முன்னதாக அமையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தச் சீர்திருத்தத்தால் பூக்கள், காய்கறிகள் விற்க நகரங்களுக்கு வரும் ஏழை மகளிர், வியாபாரிகள், மருத்துவமனைகளுக்கு வரும் பொதுமக்கள், சிறு நிறுவனங்களில் மிகக் குறைவான ஊதியத்தில் பணிபுரியும் பணியாளர்கள், தம் பணிகளை முடித்துவிட்டு கிராமங்களுக்குச் செல்ல ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர் நடவடிக்கைகள்மூலம் பேருந்துகளில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பயணக் கட்டண வருவாய் மற்றும் பயணக் கட்டணமில்லா ஏனைய வருவாயைப் பெருக்கவும், புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தவும், புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயல்திறனை மேம்படுத்தவும், மக்களுக்கு நிகழ்நேர அடிப்படையில் தகவல்கள் வழங்கவும் மற்றும் அனைத்து நிலைகளிலும் மேம்படவும் போக்குவரத்துத் துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியின் சில முக்கியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு நேரம் போதுமா?

திரு. பெ. ராமலிங்கம்: தொகுதிக் கோரிக்கைகள் மட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் நாமக்கல் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக அக்டோபர் 2021 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. சிறப்பு நிலை நகராட்சி அதிகளவில் வளர்ச்சியடைந்துள்ளதாலும், நகரில் லாரி மற்றும் கோழி தொழில் அதிகரித்துள்ளதாலும், பிரசித்திப் பெற்ற வழிபாட்டுத் தலங்கள், மாநில அளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள், சுற்றுலாத் தலங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளதாலும், சிப்காட் தொழிற்பூங்கா அமையவுள்ளதாலும் தினசரி சராசரியாக சுமார் 25 ஆயிரம் மக்கள் நகராட்சிக்கு வந்து செல்கின்றனர். தற்போது நகராட்சியினைச் சுற்றி புறவழிச் சாலை அமைக்கப்படவுள்ளது. ஆகவே, இந்த ஆண்டு நாமக்கல் சிறப்பு நிலை நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதிப் பிரச்சினைகளையெல்லாம் என்னிடம் தந்துவிடுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. பெ. ராமலிங்கம்: இரண்டு மூன்று points தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு மூன்று points; நான் பதிவு செய்துவிடுகிறேன்.

திரு. பெ. ராமலிங்கம்: நிறைய இருக்கின்றன. இரண்டோடு முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: நாமக்கல், மோகனூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் அமைத்துத் தரவேண்டும். நாமக்கல் புறவழிச் சாலை திட்டத்தில் இப்போது நிலம் கையகப்படுத்திய, 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு உடனடியாக புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் unit office ஆக இயங்கி வருகிறது. இதனை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக மாற்ற வேண்டும். பரமத்தி–வேலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் unit office வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டும்.

நாமக்கல்லில் லாரி தொழில் பிரதானமாக உள்ளதால் லாரிகளை நிறுத்தி வைப்பதற்கு parking yard அமைக்க 2 ஏக்கர் இடம் ஒதுக்கீடு செய்ததற்கான கருத்துரு நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதனை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் மற்றும் சேலம், திருச்செங்கோடு, பரமத்தி, திருச்சி சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக உள்ளன. அதன் நடுவே center median light அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், மீதியை கொடுங்கள் அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. பெ. ராமலிங்கம்: ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: நாமக்கல் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள மோகனூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர ஆவன செய்யவேண்டும்.

நாமக்கல் சிறப்பு நிலை நகராட்சிக்குக் கடந்த ஆண்டு, பாதாள சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை விரைந்து செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மீதமுள்ள கோரிக்கைகளை நான் இங்கே அவையில் பேசியதாகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மோகனூர் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மோகனூரில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

நாமக்கல்–நல்லிபாளையம் காவல் நிலையத்தைத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

நாமக்கல் மாவட்ட விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான நாமக்கல் மாவட்டம்–மோகனூர் மற்றும் கரூர் மாவட்டம்–நெரூர் இடையே கதவணை அமைக்கும் திட்டத்திற்குக் கடந்த நிதியாண்டு நீர்வளத் துறை மானிய கோரிக்கையில் ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டே உடனடியாகத் தொடங்க வேண்டும்

நாமக்கல் மாவட்டம், அணிச்சம்பாளையம் மற்றும் கரூர் மாவட்டம், நஞ்சை புகளூர் கதவணைத் திட்டத்தின்கீழ் மோகனூர் வாய்க்கால் தலைப்புப் பகுதி செயல்படுத்தப்படும் என தெரிவித்தார். ஆனால், ஒப்பந்தம் கோரும் சமயத்தில் கதவணைத் திட்டத்தில் நிதிப் பற்றாக்குறை காரணமாக மோகனூர் வாய்க்கால் தலைப்புப் பகுதி புனரமைக்கும் பணியினை நீக்கி விட்டதாகத் தெரிய வருகிறது. மோகனூர் வாய்க்காலின் தலைப்புப் பகுதியில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் கடைமடைப் பகுதி விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் செல்வதற்காகக் கதவணை அமைக்கும் நோக்கம், கடைமடை விவசாயிகளுக்குப் பயன்தராது. எனவே, கதவணைத் திட்டத்துடன் இணைத்து மோகனூர் வாய்க்கால் தலைப்புப் பகுதியினைப் புனரமைக்க கூடுதல் நிதியொதுக்கித் தர வேண்டும்

காவிரி ஆற்றுக் கரையோரம் மற்றும் வாய்க்கால் ஓரம் உள்ள நிலங்களைச் சிறப்பினமாகக் கருதி நீர்வளத் துறையின்மூலம் தடையில்லாச் சான்று வழங்கி மின்னிணைப்பு பெற்றிட ஆவன செய்ய வேண்டும். மோகனூர் வாய்க்காலின் கடைமடைப் பகுதியான ஒருவந்தூர் முதல் வடுகப்பட்டி வரை 3 கி.மீ. புனரமைப்புப் பணிகளை உடனே செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மோகனூர் வட்டம், ஆண்டாபுரம் எம். களத்தூர் இடையே புதிய கரைபொட்டனாற்றின் குறுக்கே நீர்வளத் துறையின்மூலம் புதிய பாலம் அமைக்க வேண்டும்.

நாமக்கல்–மோகனூர் பேரூராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மற்றும் மோகனூர் ஒன்றியத்தில் உள்ள குமரிபாளையம், இராசிபாளையம், அரசநத்தம் போன்ற ஊராட்சிகளுக்குக் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் குடிநீர் வழங்கி தீர்வு காண வேண்டும்.

2023 மார்ச் 29] [திரு. பெ. ராமலிங்கம்]

மோகனூர் பேரூராட்சி அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு, 30 ஆண்டுகள் ஆகின்றன. அது மிகவும் பழுதடைந்துள்ளது. அதை மறுசீரமைத்துத் தர வேண்டும். நாமக்கல் தொகுதிக்குட்பட்ட புதுச்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட அரசு புறம்போக்கு நிலத்திலுள்ள கோயில்களுக்கு மின்னிணைப்பு வழங்க மறுக்கப்படுகிறது. உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாமக்கல் தொகுதிக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உத்தமபாளையம், மோகனூர், கீரம்பூர், அணியாபுரம் ஆகிய கிராமங்களில் புதிய துணை மின் நிலையம் மற்றும் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் என்பது தேசிய நெடுஞ்சாலை NH 144—ல் அமைந்துள்ளது. புதுச்சத்திரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அடிக்கடி இந்த நெடுஞ்சாலையில் விபத்து நேரிடுவதால் 24 மணி நேரமும் இயங்கும் அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்தித் தர வேண்டும்.

நாமக்கல் தொகுதிக்குட்பட்ட களங்காணி, நவணி, அணியார், புதுச்சத்திரம், மோகனூர், ஆலம்பட்டி, செவிட்ரங்கம்பட்டி, கதிராநல்லூர், ஒருவந்தூர், அரூர், பேட்டைபாளையம், ஆரியூர் துணை சுகாதார நிலையங்கள் மற்றும் செவிலியர் குடியிருப்புகள் மிகவும் பழுதாகியுள்ளன. அதை உடனே புனரமைத்துத் தர வேண்டும்.

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம், நாமக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொட்டணம் ஊராட்சி, கல்சிநாயக்கன்பட்டியில் இயங்கி வரும் தாய்—சேய் நல விடுதி சுமார் 37 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் உள்ளதால், தற்பொழுது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. பழுதடைந்துள்ள தாய்—சேய் நல விடுதி கட்டடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வர வேண்டும்.

மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மரவள்ளிக்கிழங்கு மற்றும் அரிசிமூலம் எத்தனால் தயாரிக்கும் திட்டம் வகுக்க வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம், காரைக்குறிச்சி, புதூர், தாத்தையங்கார்பட்டி, கள்ளணூர்பட்டி களங்காணி, என ஐந்து ஊராட்சிகளுக்கும் சேர்த்து ஒரே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது. அதைப் பிரித்து இரண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டும்.

நாமக்கல் நகருக்கு மிக அருகில் சித்தர்மலை அமைந்துள்ளது. இதற்கு சாலை வசதி, மின் வசதி, பூங்காக்கள் அமைத்தால் நாமக்கல் நகருக்கு ஆன்மிக சுற்றுலாத் தலமாக சித்தர்மலை மாறும். இதற்கு ஆவன செய்ய வேண்டும்

நாமக்கல் மாவட்டம் மைய நூலகத்தில் 1 இலட்சத்து 20 ஆயிரம் புத்தகங்கள் உள்ளன. இங்கு அதிகமான வாசகர்கள் வந்து செல்கின்றனர். இந்த நூலகத்தில் சுற்றுசுவர் மற்றும் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளன. இவற்றைப் புனரமைத்து மின்னணு நூலகமாக செயல்பட ஆவன செய்ய வேண்டும்

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம், பொட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளியில் போதிய கட்டட வசதி இல்லாததால் நடுநிலைப் பள்ளி கட்டடத்தில் இயங்கி வருகிறது. உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்கித் தர வேண்டும்.

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம், பொட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

நாமக்கல் கால்நடை கல்லூரி தொடங்கப்பட்டு 36 ஆண்டுகள் ஆகின்றன. மருத்துவ மாணவர்கள் மற்றும் மருத்துவப் பேராசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கையான கால்நடை கல்லூரிக்கு ஒரு கலையரங்கம் அமைத்துத் தர வேண்டும்.

புதுச்சத்திரம் கால்நடை மருத்துவமனையை தரம் உயர்த்தித் தர வேண்டும். நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம், பொட்டணம் ஊராட்சியில், ஆடு, மாடு, கோழி அதிக அளவில் உள்ளதால் கால்நடைக் கிளை மருந்தகம் அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. வேலு அவர்கள்.

2023 மார்ச் 29]

திரு. த. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உரையைப் தொடங்குவதற்குமுன், நம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மிகப் பெரிய நன்றியை நான் தெரிவித்தாக வேண்டும். நேற்று காலை நடைபயிற்சி செல்லும்போது, பூ விற்கும் விஜயா என்ற பெண்மணியிடம், நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் உங்களுக்கெல்லாம் உறுதிப்படுத்திவிட்டார்; சந்தோஷமா! என்று கேட்டேன். மிகவும் மகிழ்வோடு பதில் சொன்னார். ரொம்ப மகிழ்ச்சி அண்ணா என்று அன்போடு சொன்னது மட்டுமல்லாமல், நான் தினமும் மயிலாப்பூரிலிருந்து பாரிஸ் வரை சென்று பூ வாங்கி வருவேன். அப்போது கட்டணமாக போவதற்கு ஒன்பது ரூபாய், வருவதற்கு 9 ரூபாய் செலவாகும். சில நேரங்களில் கோயம்பேடு செல்வேன் அதற்கு போவதற்கு 15 ரூபாய், வருவதற்கும் 15 ரூபாய் செலவாகும் என்று சொன்னார். தற்போது கட்டணமில்லா பேருந்து பயணத்தால் எனக்கு மாதம் கிட்டத்தட்ட 600 ரூபாயிலிருந்து 800 ரூபாய் வரை மிச்சப்படுகிறது என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்த மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் என்பது எங்களைப் போன்றவர்களுக்கு அறிவித்துள்ளது பெரும் மகிழ்ச்சியாக இருக்கிறது. சமுதாயத்தில் என்னைப் போன்று உழைக்கும் ஏழைப் பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை அறிவித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது சார்பாக நன்றியைத் தெரிவித்துவிடுங்கள் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது நன்றியோடு என்னுடைய தொகுதி அனைத்து ஏழை மகளிரின் சார்பாக இந்தத் தருணத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டாம். இது நன்றிக்காக கொடுத்துவிடுங்கள்.

சுயமரியாதையை பெரியாரிடமும், எதையும் தாங்கும் இதயத்தை அறிஞர் அண்ணாவிடமும், எதையும் எதிர்க்கும் துணிவை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரிடமும் கற்று உங்களில் ஒருவன் நான் என்ற உணர்வோடு, தமிழ்நாட்டை No.1 மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்ற உறுதியோடு மக்களின் மனங்களில் குறிப்பாக, தமிழகத் தாய்மார்களின் மனங்களில் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய தமிழகத்தின் எதிர்காலம், தமிழக இளைஞர்களின் நம்பிக்கை

நட்சத்திரம் உழைப்புதான் எனது அரசியல் வழி என்று தமிழகம் முழுவதும் சுற்றி சுழன்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதி சார்பில் இந்தப் பெருமைமிகு சட்டமன்ற அவைக்கும், அவை முன்னவருக்கும் எனது பணிவான, பாசமான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, பல நூற்றாண்டுகளில் கதை சொல்லும் சாஸ்திரங்கள் பல இருந்தாலும், சமத்துவமும் மத நல்லிணக்கமும் தவழ்ந்து விளையாடும் மயிலைத் தொகுதி மக்களின் பிரதிநிதியாக இந்த அவையிலே, சட்டமன்றத்திலே, மூன்றாம் ஆண்டு தொடக்க உரையை பதிவு செய்வதில் பெருமையடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் நிதிநிலை அறிக்கை என்பது, ஒரு நாட்டின் விவசாயம், கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி, உள்கட்டமைப்பு போன்றவற்றின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டுதான் இருக்கும். ஆனால், இந்த முறை மேலே குறிப்பிட்ட இந்த 5 காரணிகளைத் தாண்டி பெண்களின் முன்னேற்றம், அவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, இந்தியாவிலேயே முன்மாதிரியான, சிறப்பான திராவிட மாடல் நிதிநிலை அறிக்கை என நான் கருதுகிறேன். நிதிப் பற்றாக்குறை, முந்தைய ஆட்சியாளர்களின் தவறான நிதி மேலாண்மை, கடன் சுமை என்ற ஆலகால விஷத்தையும், முட்கிரீடத்தையும் தாங்கிக்கொண்டு, எதையும் தாங்கும் இதயத்தைக்கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில், சீரமைப்புப் பாதையிலே, சரியான பாதையில், தமிழகத்தைக் கொண்டு செல்கின்ற நிதிநிலை அறிக்கையைச், சமர்ப்பித்த, நம்முடைய பெருமைமிகு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வாழ்த்துகள்.

பிற்பகல் 5–10

தமிழகத்தில், சாதி பேதமின்றி, மக்களைத் தாங்குகின்ற சமத்துவத் தேராய், ஏழையெளிய மக்களுக்கு அழகு ரதமாய், ஒட்டுமொத்த ஏழைகளின் உயர்வுக்கு உதவுகிற கழகமாய், ஒட்டுமொத்த இந்தியாவிலேயே மிகச் சிறந்த கட்டமைப்பைக் கொண்டதாகப் போற்றப்படுகிற தமிழகப் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகிற தமிழக அரசின் போக்குவரத்துத் துறை தொடர்பான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பைத் தந்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

2023 மார்ச் 29] [திரு. த. வேலு]

முத்தமிழறிஞரின் வைர வரிகளுடன் எனது உரையைத் தொடங்குகின்றேன்.

'தமிழர்களே, தமிழர்களே,
நீங்கள் என்னைக் கடலில் தூக்கிஎறிந்தாலும்,
நான் கட்டுமரமாகத்தான் மிதப்பேன். அதில் ஏறி
நீங்கள் பயணம் செய்யலாம்,
கவிழ்ந்துவிடமாட்டேன்'

என்று கூறி வரலாற்றிலே என்றும் மறக்க முடியாத வகையில், மக்களின் மனதில் நிலைநிறுத்தி, அதை நாங்களெல்லாம் உணரும்படியும், எல்லா காலத்திற்கும் பொருந்தும்படியும் சொல்லிவிட்டு, வங்கக் கடலோரம் ஓய்வெடுக்கும் நம்முடைய முத்தமிழறிஞரை நினைத்துப் பார்க்கிறேன். காரணம், நல்ல பாதுகாப்பான, நிலையான போக்குவரத்து அமைப்பு என்பது, ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமையாகும். அதுமட்டுமல்ல, தினக் கூலித் தொழிலாளர்கள், தொழில் செய்யும் மக்கள், அத்தியாவசியமான பொருட்களின் இடமாற்றம், இன்னும் சொல்லப்போனால், ஓர் ஊரிலிருந்து பிழைப்புக்காக வரும் மக்கள் இடம் பெயர்ந்து, நிலை உயரவும் போக்குவரத்துத் துறை என்பது முக்கியமான ஒன்று. இதைக் கருத்தில்கொண்டு, தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி, அண்ணாவின் தலைமையிலே பொறுப்பேற்றபொழுது, போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதைத் தானே ஏற்படுத்தி, கருவாக்கி, உருவாக்கி, இந்தியாவிலேயே முதல் முறையாக, செல்வந்தர் கையிலேயிருந்த போக்குவரத்து உரிமையைத் துணிவோடு அரசுடைமையாக்கி, நாட்டுக்கு அர்ப்பணித்தார். இது சாதாரணமாக நடைபெறவில்லை. இப்பொழுது Online Gambling–ஐத் தடை செய்வதற்கான தடைச் சட்டம் கொண்டுவருவதற்கு முதலாளிகளிடம் எவ்வளவு பாடுபடவேண்டியிருக்கிறது என்பது நன்றாக, கண்கூடாகத் தெரிகிறது. அதுபற்றி ஒருசில கருத்துகளை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தி.மு.க. 1957–ல் சட்டமன்றத்தில் நுழைந்தபோதே, பேருந்துகள் அரசுடைமையாக்குவது தொடர்பாக, பேருந்துகளை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தது. ஆனால், அப்போதைய சட்டமன்றத்தில் அது ஏற்கப்படவில்லை. பேருந்துகளை அரசுடைமையாக்க வேண்டுமென்ற கோரிக்கை சுதந்திரத்திற்கு முன்பேயிருந்தது. 1944–ல் அமைக்கப்பட்ட உலகப்

போருக்குப் பிந்தைய மீள் கட்டுமானக் குழுவில் இடம்பெற்றிருந்த, ஆர்.கே. சண்முகம், டி.டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோர்கூட இந்தியா முழுவதும் உள்ள அனைத்து பேருந்துகளும் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு, திட்டக் குழுவும் பேருந்துகளை தேசியமயமாக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியது. ஆனால், சில பல காரணங்களால், அதனை நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை. தி.மு.க. தொடர்ந்து சட்டமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் போக்குவரத்துத் துறையை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று குரல் கொடுத்தது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, முதல்வர் அண்ணாவின் தலைமையில், மிகத் துணிச்சலான நடவடிக்கையை அப்போதைய அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட தமிழினத் தலைவர் அவர்கள் எடுத்தார்கள். 1967 ஆம் ஆண்டு, சென்னை மாகாணத்தில் இயங்கிய பேருந்துகளின் permit-கள் நீட்டிப்பு செய்யப்படாமல், முற்றிலும் அரசுடைமையாக்கப்பட்டன.

1968 ஆம் ஆண்டில் அரசால் நியமிக்கப்பட்ட குழு, தனியார் பேருந்துகளை முழுமையாக அரசுடைமையாக்குவதற்கு வரைவு அறிக்கையைச் சமர்ப்பித்தது. 1969 ஆம் ஆண்டில் Madras State, தமிழ்நாடு என ஆனவுடன் Tamil Nadu State Transport Department உதயமானது. 1971, ஜூன் 18 ஆம் நாள் அன்று கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது பேருந்துகள் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. மோட்டார் வண்டி உடைமையாளர்கள் பயணிப் பேருந்துகள் கையகப்படுத்துதல் சட்டம், ஒப்பந்தப் பேருந்துகள் கையகப்படுத்துதல் சட்டம் என்று அடுத்தடுத்து அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமுன்வடிவுகள், ஓர் உரிமையாளர், 15 பேருந்துகளுக்கு மேல் வைத்துக்கொள்ள முடியாது என்ற சூழலை உருவாக்கியது. அதுவரை பேருந்துகள் வழித்தடங்களுக்கான உரிமம் வழங்கப்படுவதில் முதலாளிகள் நலனுக்கே முக்கியத்துவம் தரப்பட்டது. அதன் பிறகுதான், பொதுமக்கள் நலன் கவனத்தில் கொள்ளப்பட்டது. அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்த இத்தகைய சீரிய நடவடிக்கைகளால், பஸ் முதலாளிகள் தாங்களாகவே முன்வந்து தங்களது வாகனங்களை அரசுக்கு அளித்து ஒத்துழைப்புக் கொடுத்தனர்.

போக்குவரத்துத் துறையைத் துணிவோடு பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் அரசுடைமையாக்கி, நாட்டுக்கு அர்ப்பணித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்கள் அன்றே சமூக சிந்தனையுடன், தனி மனிதனின் உயர்வுக்கு,

சமத்துவத்திற்குப் பயன்படாது என்ற நோக்கில் துணிவோடு அவர் எடுத்த நடவடிக்கைகளை அன்றைய ஆங்கில நாளேடுகள்கூட, 'It is a bold move' என்று வர்ணித்தன. அதனால்தான் இன்று சுமார் 2 கோடி மக்கள் சுலபமாகவும், குறைந்த கட்டணத்துடனும் சலுகைகளுடன் பாதுகாப்பாகத் தினமும் பயணம் செய்கின்றனர் என்றால், அதுதான் கலைஞரின் தொலைநோக்குப் பார்வை.

பிற்பகல் 5–15

அதுமட்டுமல்ல, புதிய வழித்தடங்கள் ஏற்படுத்தி, தடையில்லாப் பயணம், குக்கிராமங்களுக்குப் பேருந்து வசதிகள் தமிழறிஞர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம், மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ், மாற்றுத் திறனாளிகளுக்குச் சலுகைகள், பல பெயர்களைத் தாங்கிச் சுற்றிய பேருந்துகளின் பெயர்களை மாற்றி தமிழ்நாடு அரசு போக்குவரத்து என்று பெயர் மாற்றம், சிற்றுந்து வசதி, அந்த வரிசையில், கலைஞர் வழியில் இன்று எல்லோர்க்கும் எல்லாம் என்ற உணர்வோடு, திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் என்று முதல் திட்டத்தில் தொடங்கி, இந்த நிதியாண்டில் 8,056 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இந்தப் போக்குவரத்துத் துறையினை நவீனமயமாக்கவும், மக்களுக்கான பேருந்து சேவையை உயர்த்திடவும் வழிவகை செய்துள்ளார்கள். குறிப்பாக முதல் கட்டமாக, வடபழனி, திருவான்மியூர், வியாசர்பாடி பணிமனைகளை மேம்படுத்தவும், இரண்டாவது கட்டமாக தாம்பரம், திருவொற்றியூர் மற்றும் சைதாப்பேட்டை பணிமனைகளை மேம்படுத்திடும் அறிவிப்புகளும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அதுமட்டுமல்லாமல், உலக வங்கி நிதியுதவியுடன், 2023 ஆம் ஆண்டில் BS–VI இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. த. வேலு: 500 மின்சாரப் பேருந்துகள் வாங்கவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1,000 புதிய பேருந்துகள் வாங்கவும், 500 பழைய பேருந்துகளைப் புதுப்பிக்கவும், இந்த நிதியாண்டிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்திருப்பது இந்தத் துறையை மேலும் வலுப்படுத்தி, மக்களுக்குப் பயனுள்ளதாக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, திராவிட மாடல் ஆட்சிக்கு சான்றாக நமது அண்டை மாநிலமான கர்நாடகாவின் தலைநகரமான பெங்களூருவில் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் ஆய்வறிக்கை தொடர்பான செய்தியை இந்த அவையில் சுருக்கமாகப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். 'Bangalore Bus Prayanikara Vedike' என்ற அமைப்பின் ஆய்வில் இந்திய பெருநகரங்களான தில்லி, மும்பை, பெங்களூரு, ஐதராபாத் மற்றும் சென்னை ஆகியவற்றின் பேருந்துக் கட்டணங்களை ஒப்பிட்டு ஓர் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையின்படி, பெங்களூரு நகரப் பேருந்துக் கட்டணம் மற்ற நகரங்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது என்பதும், சென்னை மற்றும் மும்பை நகரப் பேருந்துகளின் கட்டணம் மற்ற நகரப் பேருந்துக் கட்டணங்களைக் காட்டிலும் குறைவாக இருப்பதும் தெரியவந்துள்ளது. இது குறித்து பெங்களூரு நகரப் பெண்கள் கூறுகையில், பஸ் பயணத்திற்கு மாதந்தோறும் 1,500 ரூபாய் வரை கட்டணமாகச் செலவாகிறது என்றும், தங்கள் குழந்தைகளுக்கான கல்வி மற்றும் பராமரிப்புச் செலவு அதிகமாகின்ற காரணத்தினால், இந்தப் பேருந்துக் கட்டணம் மிகப் பெரிய சுமையாக இருக்கிறது என்றும் தமிழ்நாட்டைப்போல், பெண்களை நகரப் பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்க அனுமதிக்க வேண்டும் அல்லது கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்றும் அந்த நகரப் பெண்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இதை நான் இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம், தாயுள்ளத்தோடு, பெண்களின் உணர்வுகளையும், சுமைகளையும் புரிந்துகொண்டு, எந்த மாநிலமும் அறிவிக்காத திட்டத்தை நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மாதிரியாக செய்திருக்கிறார் என்றால், அதுதான் திராவிட மாடல் ஆட்சி என்று சொல்லிக்கொள்கிறேன்.

எனது தொகுதிக் கோரிக்கைகள் அதிகமாக உள்ளன. அவற்றில் இரண்டு முக்கியமான கோரிக்கைகளை மட்டும் இந்த அவையில் படித்துவிடுகிறேன். கலைஞருக்குப் பிடித்த இடம் மெரீனா கடற்கரை. அவ்விடத்தில் அதிகமான கூட்டங்களில் உரையாற்றியிருக்கிறார்; ஓய்வெடுத்திருக்கிறார். அங்கு கடற்கரை மீனவ மக்கள் வாழும் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியை ஒட்டி, loop சாலை, அகலமான சாலை, இன்றைய போக்குவரத்திற்கு அது ஒரு முக்கியச் சாலையாக உள்ளது. கலைஞரின் நூற்றாண்டு தொடக்கத்தை முன்னிட்டு அதற்கு நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 மார்ச் 29] [திரு. த. வேலு]

குறிப்பாக, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளிலுள்ள மக்களிடமே பேசியதன் விளைவாக, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சியின்மீது நம்பிக்கை வைத்து, அனைவரும் வீடுகளை காலிசெய்கிறார்கள், அவர்கள் காலி செய்த பிறகு அவர்களுக்கு அரசு சார்பில் 2½ முதல் 3 வருடங்களுக்குள் பணிகள் முடித்துத் தரப்படும் என்று ஓர் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. ஆனால், சில இடங்களில் அப்பணிகள் இன்னும் தொடங்கப்படவேயில்லை. சட்டமன்ற உறுப்பினர்களான எங்களின் வார்த்தைகளை நம்பி மக்கள் வெளியே செல்கிறார்கள். அவ்வாறு அவர்கள் வெளியே சென்றால் மாத வாடகைத் தொகை ரூ.10,000/– அளிப்பது அவர்களுக்கு ஒரு பெரும் சுமையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் அந்த ஏழை மக்களைக் கருத்தில் கொண்டு, திட்டங்களை உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை இந்த அவையில் நான் படித்ததாகக் கருதி பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

ஆர்.ஏ. புரம் நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு, வள்ளீஸ்வரன் தோட்டத்திற்கு கலைஞர் நகர் என்று பெயர் சூட்ட வேண்டும். மயிலாப்பூர், நாட்டான்தோட்டம், பருவா நகர், ஆண்டிமான்ய தோட்டம், பிள்ளையார் கோயில் தோட்டம், முத்தையாபுரம் நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டுக் கட்டடங்களைப் புதுப்பிக்கும் பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

மயிலாப்பூருக்கு தனி பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும். சுற்றுலாத் துறையும், அறநிலையத் துறையும் இணைந்து மயிலாப்பூரை ஆன்மிக சுற்றுலா மையமாக அமைக்க வேண்டும். மயிலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை பழைய வணிக வளாகக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய வணிக வளாகம் மற்றும் Multi Level Car Parking கட்ட வேண்டும். கால்நடைகளைப் பராமரிக்க சென்னை மாநகராட்சி தனி இடம் அமைத்துத் தர வேண்டும்.

120—வது வார்டு, பாரதி நகர் பகுதி மக்களுக்கு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு Sale deed *வழங்கப்பட வேண்டும். கோயில் நிலங்களில் குடியிருக்கும் வாடகைதாரர்களின் வாடகை உயர்த்தியது தொடர்பாக சுமூகமான முடிவை ஏற்படுத்தித் தர வேண்டும். மீனவ மக்களின் வாரியக் குடியிருப்புப் பகுதியில் சிங்காரவேலரின் மார்பளவு சிலை அமைக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள். மணி 5:19 ஆகிவிட்டது.*

திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்

கிறையென்று வைக்கப் படும்".

என்று வள்ளுவர் சொன்னது போன்று, பூமியில் இன்றும் வாழ்வாங்கு தெய்வமாக வீற்றிருக்கின்ற எங்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் எங்கள் குடும்ப குல தெய்வம் அம்மா அவர்களையும் நன்றி உணர்வோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5—20

அடிப்படை உறுப்பினராக, கிளைக் கழகச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினராக, மாவட்டக் கழகச் செயலாளராக, அமைப்புச் செயலாளராகத் துணிவோடு தொடர்ந்து இருபெரும் தெய்வங்களின் வாரிசாக வீற்றிருக்கும் ஒன்றரைக் கோடி தொண்டர்களால் ஒருமனதாகக் கழகப் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் எங்கள் இதயத்தின் நம்பிக்கை நாயகர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழகத்தின் தலைமகன், பச்சை தமிழன் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக் கொறடா முன்னாள் அமைச்சர் சகோதரர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும், எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்லும் விழுப்புரம் மாவட்டக் கழகத்தின் ஆற்றல்மிகு மாவட்டக் கழகச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் சகோதரர் திரு. சி.வி. சண்முகம் அவர்களையும் இந்த நேரத்திலே வணங்கி, எனது உரையைத் துவங்குகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்கிறார்கள், கேளுங்கள்.*

திரு. மு. சக்ரபாணி: போக்குவரத்துத் துறையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலம் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பொற்காலம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறை மூலமாகத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை உருவாக்கித் தந்தது அண்ணா தி.மு.க. அரசு. இதன்மூலம் ஆயிரக்கணக்கான போக்குவரத்துத் தொழிலாளர்களின் பிள்ளைகள் இன்று படித்து, பயன் பெற்று, அவர்களின் வளமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்து, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய அரசு, கழக அரசு.

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில் கடும் நிதிச் சுமையிலும், கொரோனா காலத்திலும் போக்குவரத்து ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் 8 மாத சம்பளம் எந்தவித பிடிப்பும் இல்லாமல் தாயுள்ளத்தோடு வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி வரை ஓய்வு பெற்றவர்களுக்குப் பணப்பலன்களை வழங்கியவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். நான்கு ஆண்டுக் காலத்தில் சுமார் 4,930 கோடி ரூபாய்க்கு மேலாக போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கியதோடு மட்டுமல்லாமல், ஒரே தவணையில் 1,100 கோடி ரூபாயை வாரி வழங்கி சாதனை புரிந்தவர் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 13–வது ஊதிய ஒப்பந்தத்தில் 2.44 என்ற அளவில் சுமார் 21.36 சதவிகிதம் வழங்கப்பட்டது. குறைந்தபட்ச ஊதிய உயர்வாக ரூ.1,965 வழங்கப்பட்டது. ஆனால், அன்று எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. 21.36 சதவிகிதம் போதவில்லையென்றும், குறைந்தபட்ச ஊதிய உயர்வாக ரூ.5,000/– வேண்டுமென்றும் போராடியது. 'பொன் வைக்க வேண்டிய இடத்தில் பூ வைப்பதுபோல' என்பார்கள். ஆனால், தற்போது நீங்களோ பூ காம்பை வைப்பதைப்போல, 5 சதவிகிதம் உயர்வாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) குறைந்தபட்ச ஊதிய உயர்வாக ரூ.1,000/– கொடுத்து, போக்குவரத்துத் தொழிலாளர்களை வஞ்சித்துள்ளீர்கள். போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு நிதி, பணிக்கொடை உள்ளிட்டவை கிடைக்காமல் உள்ளன. அதனை உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 2021 ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்துள்ளபடி, எப்பொழுது

பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1–4–2003–க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டு, நிர்வாகச் செலவிற்காகச் செலவிடப்பட்ட, சுமார் 2,000 கோடி ரூபாய்க்கு அதிகமான பணம் எப்பொழுது ஓய்வூதிய trust–ல் சேர்க்கப்படும்? மேலும், போக்குவரத்து ஊழியர்களுக்கு நிலுவையில் உள்ள அகவிலைப்படியை நீதிமன்ற உத்தரவுப்படி வழங்கி, அவர்களின் சிரமத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் கருணை அடிப்படையில் வருடந்தோறும் தலா 100 தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அத்தகைய நடைமுறையை இந்த அரசு செயல்படுத்தாமல் இதுவரை ஒருவருக்குக்கூட, கருணை அடிப்படையிலான வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மே மாதம் இங்கு சட்டமன்றப் பேரவையின் மேல்தளத்திலுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில்தான் கருணை அடிப்படையிலான பணி ஆணையினை வழங்கினார்கள். தினசரி பத்திரிகைகளில் அனைத்து செய்திகளும் வந்தன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டில் புதிதாக வாங்குவதாக அறிவிக்கப்பட்ட 1,000 பேருந்துகளும், 2022–2023 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட 2,213 diesel பேருந்துகளும், 500 மின்சார பேருந்துகளும் எந்த வழித்தடத்தில் இயங்குகின்றன? கடந்த இரண்டு ஆண்டுகளில் 3,713 பேருந்துகள் வாங்குவதற்காக அரசால் நிதி ஒதுக்கப்பட்டதன் நிலை என்ன என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும். அதுவே இன்னும் நடைமுறைக்கு வராதபோது, 2023–2024 ஆம் ஆண்டு

2023 மார்ச் 29] [திரு. மு. சக்ரபாணி]

நிதிநிலை அறிக்கையில் 1,000 பேருந்துகள் வாங்கப்படும் என்ற அறிவிப்பு காகிதத்தில் மட்டுமே இருக்குமெனத் தோன்றுகிறது.

மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் 3,436 பேருந்துகள் உள்ளன. ஆனால் ஓட்டுநர், நடத்துநர் பற்றாக்குறையால் தினமும் 900 பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். தற்போது இயக்கப்படுகின்ற பேருந்துகளில் 40 சதவிகிதம் நிர்ணயிக்கப்பட்ட வயது மற்றும் கிலோமீட்டர்களைக் கடந்து இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் அதிகளவு விபத்துகள்மூலம் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. பேருந்து உதிரிபாகங்கள் பற்றாக்குறையால் பேருந்துகள் இயக்கப்படாமல் பணிமனைகளில் நிற்கும் சூழ்நிலை உள்ளது. இதனை உணர்ந்து, அரசு உடனடியாக தேவையான உதிரிபாகங்களை வாங்கி இருப்பு வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5—25

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் வழங்கப்படும் ஓட்டுநர் உரிமம், வாகனப் பதிவு அட்டை ஆகியவை கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால், பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள், ஆளுங்கட்சி ஆதரவு தொழிற்சங்கத்தினரால் பழிவாங்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். திருவிழாக் காலங்களில் தனியார் பேருந்துகளில் பயணம் மேற்கொள்பவர்களிடம் மிக அதிக அளவு கட்டணம் வசூலிக்கப்படுவதால், மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, அதனை முறைப்படுத்தி, அரசே இணையம்மூலம் டிக்கெட் விற்பனை செய்து, பொதுமக்களின் சிரமங்களைக் குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தனியார் பேருந்துக்கு எப்படி* Government *டிக்கெட் கொடுக்க முடியும்?*

திரு. மு. சக்ரபாணி: *பொதுப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில், மெட்ரோ இரயில், பேருந்து, இரயில் ஆகியவற்றைப் பயன்படுத்த ஒரே கட்டண அட்டையை அரசு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் அனைவரும் மின்னணு பணப் பரிவர்த்தனைக்கு மாறி வருவதாலும், பேருந்தில் ஏற்படும் சில்லரை நாணயத் தட்டுப்பாட்டைக் குறைக்கவும், அரசுப் பேருந்துகளில் மின்னணு*

பணப் பரிவர்த்தனையை ஊக்குவிக்க வேண்டும். மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ளதுபோன்று, கட்டணச் சலுகை வழங்க வேண்டும்.

எனது தொகுதிக் கோரிக்கைகள்: வானூர் சட்டமன்றத் தொகுதி, வானூர் ஊராட்சி ஒன்றியம் பரப்பளவிலும், மக்கள்தொகையிலும் மிகப் பெரிய ஒன்றியம். இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 65 கிராம ஊராட்சிகள் உள்ளன. இவற்றில் பல ஊராட்சிகள், பேரூராட்சிகள் அளவிற்கு வருவாயிலும், பரப்பளவிலும் மிகப் பெரியவை. இதைக் கருத்திற்கொண்டு, வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, கிளியனூர் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட வேண்டும்.

விழுப்புரம் வட்டம், 123 வருவாய்க் கிராமங்களையும், விக்கிரவாண்டி வருவாய் வட்டம், 116 வருவாய்க் கிராமங்களையும் உள்ளடக்கியது. வளவனூர் பிர்கா, கண்டமங்கலம் பிர்கா, சித்தலம்பட்டு பிர்கா ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் மேற்கண்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகுவது மிகவும் சிரமமாக உள்ளது. இதனால், மக்கள் நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில்லை. எனவே, அரசு வளவனூர் பிர்கா, கண்டமங்கலம் பிர்கா, சித்தலம்பட்டு பிர்காவை இணைத்து கண்டமங்கலத்தை மையமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க வேண்டும். திண்டிவனம் மற்றும் வானூர் தொகுதிகளுக்கிடையே தேசிய நெடுஞ்சாலையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், உங்களிடம் கோரிக்கை வைக்கிறார்கள். என்னவென்று கேளுங்கள்.

திரு. மு. சக்ரபாணி: திண்டிவனம் மற்றும் வானூர் தொகுதிகளுக்கிடையே தேசிய நெடுஞ்சாலையில் இறையானூர் கிராமத்தில் அமைந்துள்ள எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம் 43 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. உதவி வேளாண் அலுவலர் பயிற்சி நிலையம் இதே வளாகத்தில் அமைந்துள்ளதாலும், வானூரில் 51 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயப் பண்ணை இருப்பதாலும், இரண்டையும் இணைத்து வானூரில் வேளாண் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேளாண் கல்லூரிக்கும் வேலு அண்ணனுக்கும் என்ன தொடர்பு? (சிரிப்பு)*

திரு. மு. சக்ரபாணி: *வேளாண் கல்லூரிதானே கேட்டேன். வானூர் வட்டம் கிளியனூர் கிராமத்தைச் சுற்றிலும், தொழில் நிறுவனங்கள் நிறைந்திருக்கின்ற காரணத்தினால், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த அமைச்சருக்கு பக்கத்தில் இருப்பதால்,* recommendation–*ஆகவா?* Good.

திரு. மு. சக்ரபாணி: *கிளியனூர் துணை மின் நிலையத்தினை 33/11 கே.வி.–யிலிருந்து 110/33 கே.வி. திறனுள்ள துணை மின் நிலையமாகத் தரமுயர்த்த வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லலாமே! (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் தந்து விடுங்கள். நீங்கள் படித்ததாகப் பதிவு செய்து கொள்கிறோம்.*

திரு. மு. சக்ரபாணி: *தேர்தல் அறிக்கையில் 100 நாள் வேலைத் திட்டம் 150 நாளாக உயர்த்தி வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஒன்றரை மாதத்திற்கு ஒரு வாரம்தான், அதாவது 50 நாட்களுக்குக் குறைவாகவே வேலை வழங்கப்படுகிறது. இதனால் கிராமப்புற விவசாய மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். அவர்களின் ஒரே வாழ்வாதாரமாக இருக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை 150 நாட்களுக்கு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வானூர் சட்டமன்றத் தொகுதியில், விழுப்புரத்திலிருந்து மணலிப்பட்டு, ஹைவேலி, கோரைக்கண்ணு வழியாக பொன்னம்பூண்டிக்கு ஏற்கெனவே இயங்கி வந்த பேருந்து தடம் எண் 13*C*–ஐ மீண்டும் இயக்கவும், அதேபோல, 226*A *திண்டிவனம், ஒழிந்தியாம்பட்டு, நெசல்–ராயப்புதுப்பாக்கம் வழியாக திருச்சிற்றம்பலம் கூட்ரோட்டிற்கு செல்லவும், திண்டிவனத்திலிருந்து கிளியனூர், சேந்தமங்கலம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். விரைவாகச் சொல்லுங்கள். உங்கள் தொகுதிப் பிரச்சினைகள் அவ்வளவையும் தாருங்கள். பதிவு செய்துகொள்கிறோம். (குறுக்கீடு) எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான். மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்னால் நீங்கள் சீக்கிரம் போய்விடலாம் அல்லவா? அதற்காகத்தான். (குறுக்கீடு) உங்களுக்காகத்தான் நான் முயற்சி செய்கிறேன். (சிரிப்பு)*

திரு. மு. சக்ரபாணி: தலைஞாயிறு to சென்னைக்கு 10 வருடங்களாக இலாபகரமாக ஓடிய பேருந்தை நிறுத்தி விட்டீர்கள். மாண்புமிகு அமைச்சரிடம் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் அவையில் கோரிக்கை வைத்தபோது, பரிசீலிப்பதாக கூறினார்கள். அப்பேருந்து இதுவரை இயக்கப்படவில்லை. அந்தப் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. சரி. சரி.

திரு. மு. சக்ரபாணி: ஐயா, நன்றி சொல்கிறேன். போக்குவரத்துத் துறை நாட்டின் வளர்ச்சிக்கு அதிக அளவில் பங்களிக்கக்கூடிய துறை. இதனைச் செம்மையாக வழிநடத்த வேண்டியது அரசின் கடமை. எனவே, போக்குவரத்துத் துறையில் தனிக் கவனம் செலுத்தி பொதுமக்களின் வாழ்வாதாரமும், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் சிறப்புடன் அமையச் செய்வது ஒவ்வோர் அரசினுடைய கடமையெனக் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 5–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்ந்துவிடுங்கள்.

திரு. மு. சக்ரபாணி: தேசிய அளவிலும், மாநில அளவிலும், ஆதி திராவிடர்களுக்கான ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு என்று தனியாக நிதிநிலை அறிக்கை தயாரிக்கிறீர்கள். அதேபோன்று ஆதி திராவிடர் நலத் துறைக்கு என்று தனியாக ஒரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமெனத் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

வானூர் தொகுதி, கண்டமங்கலத்தில் 230/110 KV துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். வானூர் வட்டம், இரும்பை கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் 110/22 KV பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும். திண்டிவனத்திலிருந்து கிளியனூர், சேமங்கலம், வானூர் திருச்சிற்றம்பலம் கூட் ரோடு வழியாக பாண்டிச்சேரிக்கு பேருந்து இயக்க வேண்டும். கண்டமங்கலம் மற்றும் வளவனூர் காவல் நிலையங்களைச் சீராய்வு செய்து, கோண்டூர் கூட்டு சாலையை மையமாக வைத்து புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டும். திருச்சிற்றம்பலம் ஊராட்சியை

பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும். விழுப்புரம் தாலுகா கண்டமங்கலம் பகுதியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

அனைத்துத் தடங்களிலும் மினி பேருந்துகள் இயக்குவதை உறுதி செய்ய வேண்டும் அல்லது அரசே மினி பேருந்துகளை இயக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு உணவு வழங்கும் உணவகங்கள் தரத்துடன் வழங்குவதை அரசு உறுதி செய்ய வேண்டும். அனைத்து பணிமனைகளிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்க வேண்டும்.

தொலைதூரப் பேருந்து வழித்தடங்களில் அம்மா உணவகம் போன்ற உணவகங்கள் அமைத்து மலிவு விலையில் தரமான உணவுகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தொலைதூரப் பேருந்து வழித்தடங்களில் high–tech ஆவின் பாலகங்கள் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழன் சாதி ரீதியாகப் பிரிக்கப்பட்டு, பெயருக்கு பின்னால் சாதி பெயரைத் தூக்கித் திரிந்த நேரத்தில், அதனை நீக்கி, மனிதர்களாக நடமாட வைத்த தந்தை பெரியாரை இந்த நேரத்தில் வணங்குகிறேன். இருமொழிக் கொள்கையை அறிமுகப்படுத்தி, நம் தாய் மொழியைக் காப்பாற்றி, நாம் இன்றைக்கும் தமிழில் பேச காரணமாயிருக்கின்ற அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். நவீன தமிழகத்தின் சிற்பி; செம்மொழிக் காவலர்; சமூக நீதியின் தந்தை; மாநில சுயாட்சியின் நாயகர்; ஜனநாயகப் போராளி; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

இந்திய ஒன்றியத்தில் இணையில்லா முதலமைச்சராக; பெண்களுக்குக் கட்டணமில்லாப் பயணம்; பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம்; கல்லூரி மாணவிகளுக்குப் புதுமைப் பெண் திட்டம்; குடும்பத் தலைவிகளுக்கு உரிமைத் தொகை என இந்திய மாநிலங்களில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் உன்னதத் திட்டங்களை அறிமுகப்படுத்தி ஒவ்வொரு நாளும்,

ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நொடியும் மக்களுக்காக உழைக்கின்ற இந்திய அரசியலுக்கு, திராவிட சித்தாந்தத்தைப் பாடமாக போதித்துக்கொண்டிருக்கின்ற திராவிட இயக்கத்தின் நாயகர்; மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தன் தொகுதியைத் தினந்தோறும் சுற்றி வந்து, மக்களைச் சந்திப்பதில் அவர்கள் குறைகளைக் கேட்பதில் அவற்றைத் தீர்த்து வைப்பதில் No.1 சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்பவர், இன்றைக்குத் தமிழகம் முழுவதும் சுற்றி வருகிறார். தமிழகத்தின் முக்கால்வாசி மாவட்டங்களை மூன்று மாதத்திற்குள் சுற்றிவந்து, No.1 அமைச்சராகத் திகழ்கின்றவர், மற்றவர்கள் சொல்வதைப்போல், காலிலே skating கட்டியதைப்போல விரைவாகத் தமிழகத்தை சுற்றி வருகிறார் என பாராட்டப்படுகின்ற கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓர் ஆண்டுக் காலத்தில் போக்குவரத்துத் துறையில் நிகழ்த்தப்பட்டிருக்கின்ற பணிகளை இந்த நேரத்தில் பட்டியலிட விரும்புகிறேன். போக்குவரத்துத் துறை என்றால், அதில் தவிர்க்க முடியாத அங்கமாகத் திகழ்வது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய சிந்தனையில் உதித்த உன்னதத் திட்டமான மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக, தமிழகத்தில் தேர்தல் நேரத்திலே, தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு கழகத் தலைவராக இருந்து இதை அறிவித்தபோது, இது சாத்தியமா, இதைச் செயல்படுத்துவதற்கு உரியதா என்றெல்லாம் கேள்வி கேட்டார்கள். ஆனால், இந்த இருபது மாத காலங்களில் சத்தமில்லாத சாதனையாக நேற்று வரை 259 கோடியே 8 இலட்சம் பயணங்கள், கட்டணமில்லாப் பேருந்து பயணங்கள் பெண்களால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிமிடம் வரை 40 இலட்சத்தையும் தாண்டி 259 கோடியே 50 இலட்சத்தை அந்தப் பயணங்கள் கடந்திருக்கும் என்ற செய்தியை நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 மார்ச் 29] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

பிற்பகல் 5–35

கலைஞர் தொலைக்காட்சிக்காக, ஒரு நேரலை நிகழ்ச்சிக்காக, சென்னையில் ஒரு பேருந்தில் நெறியாளர்களுடன் நாங்கள் பயணம் செய்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அந்தப் பேருந்தில் பயணம் செய்த பெண்களிடத்தில் நெறியாளர் கேள்விகளைக் கேட்டு வந்தபோது, நானும் அவருடன் சேர்ந்து அவர்களிடத்தில் அந்தப் பேட்டியைத் தொடர்ந்தேன். ஒரு பெண் சொன்னார்; நான் கல்லூரிக் கல்வியை முடித்து வேலை தேடத் தொடங்கினேன். வேலை தேடத் தொடங்கிய நேரத்தில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டத்தை அறிவித்தார்கள். 6 மாதக் காலம் நான் வேலை தேடுவதற்கு இந்தக் கட்டணமில்லாப் பேருந்து சேவைதான் என் பயணத்திற்குப் பயன்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அப்பாவிடத்திலோ, அண்ணனிடத்திலோ பணம் கேட்கவேண்டிய தேவையில்லாமல் நான் இந்தப் பயணத் திட்டத்தின்மூலம் கடந்த 6 மாதக் காலம் அலைந்து, தற்போது எனக்கு வேலை கிடைத்து, நான் வேலைக்குச் செல்கிறேன். குறைந்த சம்பளம்தான் அதற்கும் நான் இந்தக் கட்டணமில்லாப் பேருந்திலே பயணித்து என்னுடைய வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைக்கு வந்திருக்கிறேன் என்று சொல்லி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை நன்றி கூர்ந்தார்.

அதேபோல, ஒரு பாட்டி. நான் காசிமேடு பகுதிக்குச் சென்று மீன் வாங்கி வந்து என்னுடைய பகுதியில் விற்கிறேன். என்னுடைய வயதான காலத்தில் நான் ஏற்கெனவே மீன்பாடி வண்டி என்று சொல்கின்ற அந்த மூன்று சக்கர வாகனத்தில்தான் செல்வேன். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண்களுக்கு இலவசப் பேருந்து சேவையை அறிவித்த காரணத்தினால் நான் பேருந்திலே சென்று மீன் வாங்கி வந்து என்னுடைய பகுதியில் விற்கிறேன். இதனால் என்னுடைய வாழ்க்கைத் தரமே உயர்ந்திருக்கிறது; நான் பாதுகாப்பாகப் பயணிக்கிறேன் என்று நன்றியோடு நினைவு கூர்ந்தார்.

இன்னொரு சகோதரி திருவள்ளூரிலிருந்து வந்திருந்தார். நான் ராஜீவ் காந்தி மருத்துவமனைக்குப் போய்விட்டு வருகிறேன். நான் வாரம் ஒருமுறை அங்கு வந்து மருத்துவச் சிகிச்சைக்கான சோதனை மேற்கொண்டு, அங்கேயே மருந்துகளைப் பெற வேண்டும். அப்போதுதான் நான் உயிர் வாழ முடியும். அவ்வளவு

கொடூரமான நோய்க்கு எங்களுடைய திருவள்ளூர் பகுதி மருத்துவமனையில் மருந்து கிடையாது. நான் ராஜீவ் காந்தி மருத்துவமனைக்குத்தான் வர வேண்டும். இதற்காக இதுவரை செலவு செய்து வந்து கொண்டிருந்தேன்; தற்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லுள்ளத்தால், கருணையால் செலவில்லாமல் வந்து நான் என்னுடைய உயிரைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னபோது (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் எந்த வகையிலெல்லாம், எந்தத் தளத்தில் இருக்கின்ற பெண்களுக்கெல்லாம், சமூகத்தின் எல்லா தட்டு பெண்களுக்கெல்லாம் எப்படி பயன்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

இன்னும் சொல்லப்போனால், மாநில திட்டக் குழுவிலிருந்து இந்தத் திட்டம் குறித்து ஓர் ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுவைத் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளச் செய்து, பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு நபர்களிடத்தில், கட்டணமில்லாப் பேருந்துகளில் பயணம் செய்கின்ற பெண்களிடத்தில் அவர்கள் நேர்காணல் செய்து அதற்கான தொகுப்பறிக்கையை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையில் அவர்கள் சொல்லியிருப்பது, குறைந்தபட்சம் 600 ரூபாயிலிருந்து அதிகபட்சம் 1,500 ரூபாய் வரை கட்டணமில்லாப் பேருந்து பயணத்தின் மூலமாக அவர்கள் உழைத்து சம்பாதிக்கின்ற பணத்தில் மிச்சமாகிறது. அந்தப் பணத்தை அவர்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்குப் பயன்படுத்துகிறார்கள்; அவர்களுடைய பெற்றோர்களுடைய மருத்துவச் செலவிற்குப் பயன்படுத்துகிறார்கள்; குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்குப் பயன்படுத்துகிறார்கள்; இன்னும் சொல்லப்போனால், சராசரியாக மிச்சப்படுகிற 888 ரூபாய் ஒவ்வொரு பெண்மணிக்கும் பயன்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட உன்னதத் திட்டத்தை, இந்தச் சிறப்பான திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்குக் கடந்த ஆண்டில் ரூ.2,450 கோடியை ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.2,800 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்களுக்குத் துறையின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 மார்ச் 29] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

பெண்கள் பேருந்தில் பயணிக்கின்றபோது, அவர்கள் பாதுகாப்பாகப் பயணிப்பதற்கு சென்னை பேருந்துகளில் CCTV Cameras பொருத்தப்பட்டிருக்கின்றன. பாதுகாப்பான நகரத் திட்டத்தின்கீழ் நிர்பயா திட்டத்தில் 2,500 பேருந்துகளில் CCTV cameras பொருத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல, பெண்களுடைய பாதுகாப்பிற்காக, அவசரக் காலத்தில் அவர்கள் அழைப்பதற்கு ஓர் அவசரப் பொத்தானும் பேருந்துகளில் பொருத்தப்பட்டிருக்கின்றன. இது சென்னை தலைமையகத்தில், பல்லவன் இல்லத்தில் அமைந்திருக்கின்ற control room மூலமாகக் கண்காணிக்கப்படுகின்றபொழுது, பேருந்துகளில் நடைபெறுகின்ற தவறுகள் முற்றிலுமாகக் குறைந்துபோயிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், பேருந்துகள் இரவு நேரங்களில் குறைந்த பயணிகளோடு வருகின்றபோது ஓட்டுநர்கள் சிலர் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, அதை அதிலே கண்காணித்த நேரத்தில்போது, அந்த ஓட்டுநர்மீது நடவடிக்கை எடுப்பதற்குக்கூட அது பயன்பட்டிருக்கிறது என்று துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள் என்றால், இன்றைக்கு சென்னை மாநகரத்தில் பேருந்துகளில் பயணிக்கின்ற பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான சூழல் இந்தக் கழக அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை படிப்படியாகத் தமிழகம் முழுவதும் கொண்டு சென்று, மக்கள் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, பெண்கள் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ளும் பேருந்துகளின் முன்புறமும், பின்புறமும் pink நிறம் அடிக்கப்பட்டு, அத்தகைய பேருந்துகளின் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதாகவும் சொன்னார்கள். அவருக்கு நான் ஒன்றை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நகரப் பேருந்துகளில் 3 வகைகள் இருக்கின்றன. சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகள், Red MTC buses மற்றும் Deluxe பேருந்துகள் இருக்கின்றன. அனைத்து சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் பெண்களுக்கான கட்டணமில்லாப் பயணம் வழங்கப்படுகிறது. 7,000–க்கும் மேற்பட்ட அத்தகைய பேருந்துகளைப் பெண்கள் பயணம் செய்வதற்காகப் பயன்படுத்துகிறார்கள்.

பிற்பகல் 5–40

பேருந்துகளின் முன்புறமும், பின்புறமும் pink colour paint அடித்த அந்த நேரத்தில்கூட பத்திரிகையாளர்கள் கிண்டல் செய்தார்கள்; ஒருசில பத்திரிகையாளர்கள் lipstick bus என்று அதற்காக ஒரு memes கூட போட்டார்கள். ஆனால், பெண்கள் தூரத்திலிருந்தே அந்தப் பேருந்தை அடையாளம் கண்டு கொண்டு இன்றைக்கு மகிழ்ச்சியாக பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) pink நிறப் பேருந்து வருகிறதென்றால் சிரமம் இல்லாமல் ஏறிச் செல்வதற்குரிய ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. மேலும், ஏன் இரண்டு பக்கங்களிலும் pink நிறத்தை அடிக்கவில்லை என்ற கேள்வியும் எழுப்பினார்கள். முழுவதும் pink நிறம் அடித்தால், முழுவதும் பெண்கள் மட்டும் செல்லும் பேருந்து என்றாகிவிடும். ஆனால், அது ஆண்களும் பயணம் செய்யக்கூடிய பேருந்து. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இரண்டு பக்கங்களிலும் paint அடித்து கூடுதலாகச் செலவு செய்வதைவிட, இரண்டு பக்கங்களிலும் விளம்பரங்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, தற்போது விளம்பரம் செய்வதற்காக tender கோரப்பட்டுள்ளது. பின்புறத்தில் மட்டும்தான் விளம்பரம் என்று இதுவரை இருந்த நிலையை மாற்றி, இரண்டு பக்கங்களிலும் விளம்பரம் செய்து, அதன் மூலமாகக் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்தப் பேருந்துகளில் மகளிர் மட்டுமல்லாமல், திருநங்கையரும், 40 சதவிகிதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களுக்கு ஒரு துணையர் ஆகியோரும் இலவச பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள். இந்தத் திட்டங்களின் தொடர்ச்சியாக, நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, வழக்கமாக இயங்குகின்ற பேருந்துகளை மட்டுமல்லாமல், சிறப்புப் பேருந்துகள் இயக்குவதை மிக முக்கியமான பணியாக அரசு போக்குவரத்துக் கழகம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. தீபாவளி நேரத்திலும், பொங்கல் திருநாட்களிலும் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுவதை எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் 3 நாட்கள் அரசு விடுமுறை, 4 நாட்கள் அரசு விடுமுறை என்று வந்தாலே கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டிய தேவை வந்துவிட்டது. அதேபோன்று, திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலம் என்றால் கூடுதல் பேருந்துகள் இயக்க

2023 மார்ச் 29] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

வேண்டிய சூழல்; வேளாங்கண்ணி ஆரோக்கியமாதா கோயில் திருவிழா என்றால் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டிய சூழல்; நாகூர் கந்தூரி விழா என்றால் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டிய சூழல். இவ்வாறாக மாதம் முழுவதும், அவ்வப்போது கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டு, முழுமையான போக்குவரத்து என்பது மற்ற நாட்களில் இயங்குவதுபோல் அல்லாமல், எல்லா நாட்களிலுமே சிறப்பாக இயங்க வேண்டிய சூழல் இன்றைய காலகட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. தீபாவளி நேரத்தில், பொங்கல் நேரத்தில் எந்த சச்சரவுகளும் இல்லாமல், எங்கேயும் சாலை மறியல் என்ற பிரச்சினை வராமல் போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் அதையும் மிகச் சிறப்பான முறையிலே செய்து கொடுத்தார்கள். எனவே, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள் பேசும்போது, புதிய பேருந்துகள் வாங்குவது குறித்து கேட்டார். திரு. மு. சக்ரபாணி அவர்களும் 2,300 பேருந்துகள் எங்கே? 2,300 பேருந்துகள் எங்கே? என்று கேட்டார். 2,300 பேருந்துகள் என்பது ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் வாங்குவதற்கு உங்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தம். ஆனால், அந்த ஒப்பந்தம் முழுமையாகச் செயல்படுத்த முடியாமல் இருந்த சூழலில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகு, அதற்கான பணிகளை விரைவுபடுத்தி, அதன்மீது நடவடிக்கை எடுத்து tender கோரப்பட்டது. டெண்டர் விடுகின்றபோது மாற்றுத் திறனாளிகளுக்கு வசதியாக தாழ்தளப் பேருந்துகள் இயக்க வேண்டுமென்று சிலர் வழக்காடு மன்றத்திற்குச் சென்றார்கள். வழக்காடு மன்றத்திற்குச் சென்று, எத்தனை சதவிகிதம் அவர்களுக்கு ஒதுக்குவது என்ற பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாத சூழலில், அவர்களுக்காக 440 தாழ்தளப் பேருந்துகள் வாங்குவதற்கு ஏற்கெனவே டெண்டர் கோரப்பட்டுள்ளது. இந்த மாதத்திற்குள்ளாக அந்த டெண்டர் இறுதி செய்யப்பட்டு, பேருந்துகள் வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும். எஞ்சிய பேருந்துகளுக்கு வழக்காடு மன்றத்தின் தீர்ப்பு வர வேண்டும். தீர்ப்பிற்காகக் காத்திருக்கிறோம். அதுவும் விரைவாக வந்துவிடும் என்றுதான் எதிர்பார்க்கிறோம். வந்தவுடன் மீதிப் பேருந்துகளும் வரும். ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் வாங்க வேண்டிய பேருந்துகளின் நிலை இது.

இதுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நமது தமிழக அரசு நிதியிலிருந்து 1,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கும், chassis நன்றாகவுள்ள 1,000 பழைய பேருந்துகளில் கூண்டுகள் கட்டுவதற்கும் 500 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் 1,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கும், 500 பேருந்துகளுக்குக் கூண்டுகள் கட்டுவதற்கும் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்கான டெண்டர் கோரும் பணிகளும் தற்போது துவங்கப்பட்டுவிட்டன. புதிதாகக் கூண்டுகட்டும் பணிக்கு டெண்டர் முடிவுற்று, அதற்கான ஆணை வழங்கப்பட்டு, பேருந்துகளும் பணிமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, கூண்டுகட்டும் பணி துவங்கப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டு மாதக் காலத்தில், அந்த 1,000 பேருந்துகளும் புதிதாகக் கூண்டுகட்டப்பட்டு, தமிழகம் முழுவதும் வலம் வருவதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள் காணலாம். அவரும் அதில் பயணிக்கலாம். அதேபோல, புதிய பேருந்துகளைப் பொறுத்தளவில், இன்னும் 4, 5 மாதங்களில் டெண்டர் விடப்பட்டு, அவை வருவதையும் நீங்கள் பார்க்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எத்தனை பேருந்துகள் வாங்கப்பட்டன என்ற புள்ளிவிவரத்தை வெளியிட்டார்; மிகவும் பெருமிதமாகச் சொன்னார்; மகிழ்ச்சி. ஆனால், அதற்கு முன்பாக இருந்த காலத்தில் எத்தனை பேருந்துகள் வாங்கப்பட்டன, உங்கள் ஆட்சிக் காலத்தில் எத்தனை பேருந்துகள் வாங்கப்பட்டன என்பதை நீங்கள் முழுமையாகச் சொல்லியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். உங்களுடைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2011–2012–ல் 3,000 பேருந்துகள்; 2012–2013–ல் 3,117 பேருந்துகள்; 2013–2014–ல் பேருந்துகள் வாங்கவில்லை; 2014–2015–ல் 1,300 பேருந்துகள்; 2015–2016–ல் பேருந்துகள் வாங்கவில்லை; 2016–2017–ல் 2,072 பேருந்துகள், 2017–2018–ல் பேருந்துகள் வாங்கவில்லை; 2018–2019–ல் 3,000 பேருந்துகள்; 2019–2020–ல் 2,000 பேருந்துகள்; உங்கள் பத்தாண்டுக் கால ஆட்சியில் வாங்கப்பட்ட மொத்த பேருந்துகள் 15,489. சரிதானே, மகிழ்ச்சி.

பிற்பகல் 5–45

இதுவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் 2006–2011 ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்

2023 மார்ச் 29] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

முதலமைச்சராக இருந்தபோது, இங்கே வீற்றிருக்கிற அண்ணன் நேரு அவர்கள் அன்றைக்குப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையைச் சொல்கிறேன். கொஞ்சம் கவனத்தில்கொள்ளுங்கள். *2006–2007–ல் 2,480; 2007–2008–ல் 3,025; 2008–2009–ல் 3,500; 2009–2010–ல் 3,000; 2010–2011–ல் 3,000;* மொத்தம் *15,005* பேருந்துகள் (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் பத்தாண்டுக் கால ஆட்சியில் வாங்கிய பேருந்துகளைவிட ஐந்தாண்டு கால ஆட்சியில் கூடுதலான பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை உங்களிடத்தில் நான் பெருமிதத்தோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் *15,000* பேருந்துகள் வாங்கிய காரணத்தால்தான், நீங்கள் குறைந்த பேருந்துகளை வாங்கினாலும் இன்றைக்கும் போக்குவரத்துக் கழகம் சிக்கல் இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் போக்குவரத்துக் கழகத்திற்குப் பணியாளர்கள் நியமிப்பதிலே உங்கள் காலத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கையையும், எங்கள் காலத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அதிலும் இதே பிரச்சினைதான். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது போக்குவரத்துத் துறையிலே பணியமர்த்தப்பட்டவர்கள் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் என எல்லோரையும் சேர்த்து *48,898*. நீங்கள் பத்தாண்டுக் காலத்தில் மொத்தமாகப் பணியில் அமர்த்தியவர்கள் *38,399*. பத்தாண்டுக் காலத்தில் நியமித்ததைவிட கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நியமிக்கப்பட்டவர்கள் *10,000* பேர்கூட. அவ்வளவு பேர் நியமிக்கப்பட்ட காரணத்தினால்தான் உங்கள் ஆட்சிக் காலத்தில்— இன்னும் சொல்ல வேண்டுமென்றால், *2016* முதல் *2021* வரை ஓர் ஓட்டுநர், நடத்துநர்கூட பணிக்கு எடுக்கவில்லை. அதற்கு முன்பாக எடுத்ததுதான் அந்த *38,000* பேரும்கூட. எனவே, நீங்கள் சரியாகப் பராமரிக்காமல் சென்றுவிட்ட காரணத்தினால் இன்றைக்கு இந்தச் சூழல். அதிலும் நீங்களே சொன்னதுபோல, ஆட்சிக்கு வந்த நேரத்தில் கொரோனா. உங்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்திவிட்டுப்போன கடன் சுமை. இதையெல்லாம் தாண்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்திலே கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றி, இப்போது *2,000* புதிய பேருந்துகளை வாங்குவதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார் என்றால், போக்குவரத்துத் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான். இன்னும்

இந்தப் பேருந்துகளெல்லாம் வாங்கப்பட்டு இன்னும் ஆறு மாதக் காலத்திற்குள் நடைமுறைக்கு வருகின்றபோது, நீங்கள் பாராட்டுகின்ற அளவிற்கு இருக்கும் என்பதனை இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும், மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதிலுரையைத் தொடரலாம். மாண்புமிகு அமைச்சர் நீங்கள் தொடரலாம்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: அண்ணன் அவர்களே, பஸ்ஸை thermocol-ல் செய்ய முடியாது. கொரோனா காலத்திலே பேருந்துகள் நிறுத்தப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்கள் குறிப்பிட்டார். அவை நிறுத்தப்பட்டதற்கு கொரோனா காரணமல்ல. போக்குவரத்துத் தொழிலாளர்கள் போதிய அளவில் வேலைக்கு எடுக்காத காரணத்தினால் போதிய ஊழியர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் இல்லாத காரணத்தினால் உங்கள் ஆட்சிக் காலத்தில் 2,000 பேருந்துகள் நிறுத்தப்பட்டன. அதுதான் உண்மையான செய்தி. அந்தப் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்குத்தான் இப்போது பணியாளர்களை எடுப்பதற்கான உத்தரவினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் 625 பேரை பணிக்கு எடுப்பதற்கு இப்போது அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. விரைவிலே அவர்களுக்கு நேர்காணல் வரவிருக்கிறது. அதேபோல, கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்திற்கும் புதிய பணியாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஓய்வுபெற்ற பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணப் பலன்களைக் கடந்த ஆட்சிக் காலத்தில் முழுமையாக வேறு விதங்களில் செலவிட்டுவிட்ட காரணத்தினால், அவர்களுக்குக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. அப்போது என்ன செய்தீர்கள்? 58 வயது retirement என்பதை 60 வயதாக்கிவிட்டுப் போய்விட்டீர்கள். 58 வயதில் retirement ஆனால்தானே நாம் இதையெல்லாம் கொடுக்க

வேண்டும்; 60 வயதென்று ஆக்கிவிட்டுப் போய்விட்டால் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் இல்லையென்று நீங்கள் ஆக்கிவிட்டுப் போய்விட்டீர்கள். அப்படிப்போன காரணத்தினால் (குறுக்கீடு) கொடுத்து விடுவோம். அப்படி நீங்கள் கொடுக்காமல் நிறுத்திவிட்டுப்போனதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இப்போது இரண்டு தவணைகளாக அவர்களுக்கான அந்தத் தொகையை வழங்கியிருக்கிறார்கள். கடந்த 4 மாதங்களுக்கு முன்பாக 250 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. கடந்த வாரத்திலே 300 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக பாதிக்கப்படுகின்ற அந்தத் தோழர்களுக்கு விரைவிலே வழங்குவதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை உங்களுக்கு இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–50

அதேபோல, தொழிலாளர்கள் ஒப்பந்தம் குறித்து நீங்கள் சொன்னீர்கள். 14–வது ஊதியக் குழு ஒப்பந்தம் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் முடிவுற்றிருக்க வேண்டும். மூன்று ஆண்டுக் காலத்தில் அந்த ஒப்பந்தம் முடிவுற்றிருக்க வேண்டியது; முடிக்கவில்லை. நீங்கள், அதை நான்காண்டுக் காலமாக்கிவிட்டோம் என்று வருத்தமாகச் சொன்னீர்கள். மூன்று ஆண்டுக் காலத்தில் நீங்கள் முடிக்காமல், இன்னொரு ஒன்றரை ஆண்டுக் காலம், அந்தக் காலம் கடந்து, அடுத்த ஒன்றரை ஆண்டுக் காலத்திலும் முடிக்காமல், உங்கள் ஆட்சியில் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் சென்றுவிட்டீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகுதான், 14–வது ஊதியக் குழு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப் போனால், உங்கள் ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய ஊதிய விகிதத்தைக் குறைத்துவிட்டீர்கள். அவர்களில் senior, junior என்கிற வித்தியாசம் இல்லாமல், 16 சதவிகிதத்தில் இருந்த சம்பளத்தை 7 சதவிகிதமாக மாற்றியமைத்ததால், அவர்களுக்குள் கொந்தளிப்பு. ஓட்டுநர், நடத்துநர் என நீண்ட நாட்களாகப் பணியாற்றியவர்களுக்கு, ஒரு senior–க்கு உரிய ஊதிய உயர்வு இல்லாமல், எல்லோருக்கும் ஒரே அளவிற்கான நிலையை ஏற்படுத்திவிட்டீர்கள். அதைத்தான், முக்கியமான

கோரிக்கையாகத் தொழிலாளர்கள் அந்தப் பேச்சுவார்த்தையில் முன்வைத்தார்கள். அதை மீண்டும் அமல்படுத்துகின்றபோது, கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் மாதம் கூடுதலாகச் செலவாகும் என்ற சூழலிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு, அதை ஏற்றுக்கொண்டு, pay matrix என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி, அதுமட்டுமல்லாமல், 5 சதவிகித சம்பள உயர்வும் அளித்து போக்குவரத்துத் தொழிலாளர்களின் மனதிலே பால்வார்த்த காரணத்தினால்தான், இந்தக் கடுமையான, நெருக்கடியான சூழலிலும், போக்குவரத்துத் துறை இன்றைக்குச் சிறப்பாக செயல்படுவதற்கு அவர்கள் ஒத்துழைப்பு அளித்து வருகிறார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.இ.அ.தி.மு.க. தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களைப் பழிவாங்குவதாக அண்ணன் திரு. மு. சக்ரபாணி அவர்கள் சொன்னார். எங்கேயும், எந்த நடவடிக்கையும் அதுபோல கிடையாது. நீங்கள் சொன்னால், அதுகுறித்து நாங்கள் நிச்சயமாக ஆய்வு செய்வோம். உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை நிருவாகிகளை ஒட்டுமொத்தமாக இடமாற்றம் செய்வதும், (மேசையைத் தட்டும் ஒலி) தூக்கி வெளியூருக்கு மாற்றுவதுமாகவும் இருந்தது. நாங்கள் அவற்றைச் சரி செய்திருக்கிறோம். எங்கள் தோழர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட்டிருக்கிறது. உங்களை எங்கேயும் நாங்கள் பழிவாங்குகின்ற நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் காலிப் பணியிடங்கள் இருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது ஐந்தாண்டுக் காலமாக வழக்காடு மன்றத்தில் இருந்த காரணத்தினால் TNPSC தேர்வு முடிவுகளை அறிவிக்காமல் இருந்தது. சென்ற வாரத்தில் வழக்காடு மன்றத்தில் முடிவுக்கு வந்து, TNPSC தேர்வு முடிவுகளை அறிவித்து, வருகின்ற 30, 31 ஆம் தேதிகளில் நேர்காணல் நடத்தவிருக்கின்றது. அதற்குப் பிறகு, அவர்கள் தேர்வு செய்த பட்டியலை அளிக்கின்றபோது, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் போக்குவரத்து ஆய்வாளர்களை நியமிக்கின்ற பணி மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஒரு நல்ல கோரிக்கையை வைத்தார். முக்கியமான கோரிக்கை. ஏற்கெனவே,

2023 மார்ச் 29] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

மலைப் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து வைக்கின்ற கோரிக்கை. குறிப்பாக, அண்ணன் திரு. உதயசூரியன், செங்கம் தொகுதியில் திரு. மு.பெ. கிரி ஆகியவர்களும் மலைப் பிரதேசத்திற்குச் செல்கின்ற பேருந்து வழித்தடங்கள் ghat route ஆக இருக்கின்ற காரணத்தினால் அங்கே town bus இயக்கப்படவில்லை; அங்குள்ள பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து சேவை கிடைக்கவில்லை என்ற கோரிக்கையை தொடர்ந்து அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் இப்போது திரு. P.R.G. அருண்குமார் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு சென்று நிச்சயமாக அதற்கு நடவடிக்கை எடுப்போம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள், மினி பேருந்து நீட்டிப்பு குறித்து கோரிக்கை வைத்தார்கள். இதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றோம், அதற்குத் தீர்வு காண எங்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அதுகுறித்து அதிகாரிகள் கொண்ட குழு ஆய்வு செய்து, ஓர் அறிக்கையை அளித்திருக்கிறது. தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்குத் தீர்வு காணப்படும் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள் ஒரு முக்கியமான கோரிக்கையை வைத்தார்கள். 58 வயதில் ஓய்வு அளிக்க வேண்டும் என்பது அந்தக் கோரிக்கை. தற்போது 60 வயதாக இருக்கின்ற காரணத்தால் மிகப் பெரிய நெருக்கடியில் தொழிலாளர்கள் இருப்பது உண்மை. மற்ற துறைகளில் தொழிலாளர்கள் எப்படியோ, போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர்கள் காலை முதல் இரவு வரை அந்த வாகனத்தை இயக்குகின்றபோது முழுவதுமாக உடல் நலம் பாதிக்கப்படுகின்ற சூழல்; அதேபோல, நடத்துநர்கள் நாள் முழுவதும் நின்றுகொண்டே இருக்கின்ற சூழல்; அதன் காரணமாக அவர்களுக்குச் சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு போன்ற நோய்கள் வந்து மிகப் பெரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை நான் சென்னை மாநகரத்தில் இருக்கின்ற போக்குவரத்துப் பணிமனைகளுக்கு

ஆய்வுக்குச் சென்றபோது பல்வேறு தொழிலாளர்கள் என்னிடத்தில் தெரிவித்தார்கள். எங்களுக்கு 58 வயதிலேயே ஓய்வு அளித்தால் போதும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதைத்தான் டாக்டர் சதன் திருமலைக்குமார் அண்ணன் அவர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அதுகுறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர்கள் போக்குவரத்துத் துறையின் சாதனைகளை இங்கே பட்டியலிட்டார்கள். மயிலாப்பூர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலு அவர்கள் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்ட வரலாற்றைச் சொல்லி தலைவர் கலைஞர் அவர்களை இந்த நேரத்தில் நினைவுகூர்ந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்கள் அந்தச் சிறப்பான முடிவை எடுத்த காரணத்தினால்தான், தமிழகம் மற்ற மாநிலங்களைவிட இன்றைக்கு முன்னேறியிருக்கிறது என்பதை நாம் மார்தட்டிச் சொல்லிக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களில் முன்னேறிய மாநிலங்கள் என்ற பட்டியலில் தொழில் சார்ந்து சில மாநிலங்கள் வந்தாலும்கூட, அது மகாராஷ்டிரா மாநிலமாக இருக்கலாம், குஜராத் மாநிலமாக இருக்கலாம், அங்கு சமச்சீர் வளர்ச்சி கிடையாது; பெருநகரங்கள் மாத்திரம்தான் வளர்ந்திருக்கும். ஆனால், தமிழகத்தில்தான் பெருநகரங்களில் உள்ள மக்கள் முன்னேறியதைப் போன்று, கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களும் கல்வி கற்று, புதிய வேலைவாய்ப்புகளைப் பெற்று, புதிய தொழில்களைத் தொடங்குகின்ற வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், கிராமப்புறங்களுக்கும் இந்த பேருந்துகள் சென்றதுதான். அதுவும், அரசுப் பேருந்துகளாக இருந்த காரணத்தினால்தான் தற்போது இந்தச் சூழல் ஏற்பட்டிருக்கிறது.

பிற்பகல் 5–55

இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களில் போக்குவரத்துத் துறை இருக்கிறது. ஆனால், அதிகளவில் பேருந்துகள் இருக்கின்ற போக்குவரத்துத் துறையாக நம்முடைய தமிழ்நாடு, (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடகா, மகாராஷ்டிரா என குறிப்பிட்ட சில

மாநிலங்கள் விளங்குகின்றன. அந்த மாநிலங்களிலும்கூட, கர்நாடகாவை எடுத்துக்கொண்டால், அதிகப் பேருந்துகள் பெங்களூரு மாநகரத்தில்தான் இயக்கப்படுகின்றன; கிராமப்புறங்களுக்குப் பேருந்துகள் இயக்குவது கிடையாது. அதேபோன்றுதான் மகாராஷ்டிராவிலும், அதனுடைய தலைநகர் மும்பையில்தான் அதிகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால், தமிழகத்தில்தான் குக்கிராமங்கள் வரை பேருந்துகள் இயக்கப்படுகின்ற ஒரு நல்ல வாய்ப்பு இருக்கின்றது. இந்த வாய்ப்பு தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்த வாய்ப்பாகும். அந்த வாய்ப்பில், இன்றைக்கு அடுத்தபடியாக பெண்களை முன்னேற்றுகின்ற, மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டத்தையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியதையடுத்து, தற்போது போக்குவரத்துத் துறை என்பது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், சிலருக்கு ஒரு சந்தேகம் இருக்கும். போக்குவரத்துத் துறை ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்குகிறது. இவ்வாறு நஷ்டத்தில் இயங்குகின்ற சூழ்நிலையில், மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கினால் இன்னும் நஷ்டம்தானே ஏற்படும் என்ற சந்தேகம் ஏற்படும். போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், இதனால் எந்த நஷ்டமும் கிடையாது. ஏனெனில், அந்தத் துறைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக 2,800 கோடி ரூபாயைக் கொடுத்துவிடுகின்ற காரணம்தான்; அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தச் சுமையை ஏற்றுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு வழிவகையைக் கண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், போக்குவரத்துத் துறைக்கே புத்துயிர் ஊட்டுகின்ற திட்டமாகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கேரளாவை எடுத்துக் கொண்டால், முதல் தேதியில் சம்பளம் வழங்குவது கிடையாது; 15 நாட்களுக்கு 30 நாட்கள் கழித்துதான் சம்பளம் வழங்கப்படும். கர்நாடகாவை எடுத்துக்கொண்டால், பல பேரை நீங்கள் வேலையை விட்டு போகலாம் என்றால் நீங்கள் போகலாம்; daily wages–ல் வேலைக்கு வருவது என்றால் வாருங்கள் என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. ஆனால்,

தமிழகத்தில் இருக்கின்ற தொழிலாளர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் முதல் தேதியில் சம்பளம் கொடுப்பதற்குக் காரணமாக இருப்பது, இந்த மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்குகின்ற நிதிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், போக்குவரத்துத் துறைக்காக புதிய பேருந்துகள் வாங்குவதற்கும், அடிச்சட்டம் நன்றாக இருக்கின்ற பேருந்துகளுக்கு கூண்டு கட்டுவதற்கும் கிட்டத்தட்ட 500 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத்திற்காக 2,800 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுக்கான பேருந்து கட்டண மானியமாக 1,500 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அரசு டீசல் விலையைத் தாறுமாறாக ஏற்றி வைத்திருக்கின்ற நிலையில், அந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்கு டீசல் மானியமாக 2,000 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி பெரும் மனது வைத்து, இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு இந்த நிதிகளையெல்லாம் வழங்கியிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, வடபழனி, திருவான்மியூர் மற்றும் வியாசர்பாடி பேருந்து பணிமனைகளை தனியார் பங்களிப்புடன் 1,600 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதற்கான ஒரு மகத்தான திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கடுத்த கட்டமாக, இத்திட்டம் தாம்பரம் உள்ளிட்ட மூன்று பேருந்து பணிமனைகளில் செயல்படுத்தப்படவுள்ளது. மொத்தம் 16 பேருந்து பணிமனைகளில் இந்தத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இந்தத் திட்டம் முழுமையாகப் பயன்பாட்டிற்கு வரும்போது, போக்குவரத்துப் பணிமனைகளின் தோற்றமே மாறி, புதுப்பொலிவுடன் விளங்கும். அதற்கான ஒரு நல்ல வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 மார்ச் 29] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

இந்தப் போக்குவரத்துத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு நல்ல கருத்துகளை வழங்கி வருகின்ற தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய செயலாளர்கள் மரியாதைக்குரிய திரு. த. உதயசந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், மரியாதைக்குரிய டாக்டர் பு. உமாநாத், இ.ஆ.ப. அவர்களுக்கும், மரியாதைக்குரிய திரு. ம.சு. சண்முகம், இ.ஆ.ப. அவர்களுக்கும், உள் துறை செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப. அவர்களுக்கும் போக்குவரத்துத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப. அவர்களுக்கும், போக்குவரத்து ஆணையர் திரு. L. நிர்மல் ராஜ் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையில் மிகச் சிறப்பான பல்வேறு பணிகளைச் செய்திருக்கின்ற சூழலில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கின்ற புதிய அறிவிப்புகளை இந்த நேரத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 6–00

அறிவிப்புகள்

போக்குவரத்துத் துறை

1. பெண்கள் பாதுகாப்பாகப் பயணிப்பதற்கு நான்கு இருக்கைகள் தனியாக ஒதுக்கப்படுகின்றன.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பெண்களுக்கென பிரத்யேகமாக இருக்கைகள் ஒதுக்குதல்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களுக்கென பிரத்யேக இருக்கைகள் போதுமான அளவில் இல்லாததால் பெண்கள் தனியாகப் பயணம் செய்ய தயங்குகின்றனர். எனவே, பெண்களுக்குப் பிரத்யேகமாக அதிக இருக்கைகள் வழங்கப்பட்டால் அவர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயமின்றி நம்பிக்கையுடன் பயணிக்க விரும்புவர். இந்தத் தேவையை நிவர்த்தி செய்யும்பொருட்டு, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பெண்களுக்கென தனியாக

4 இருக்கைகள் ஒதுக்கப்படும். பயண நேரத்திற்கு 24 மணி நேரம் முன்புவரை இணையதள முன்பதிவில் பெண் பயணிகளுக்கான இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கும்.

2. அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகளில் உள்ள உணவகங்கள் இப்போது டெண்டர் முறையில் நடத்தப்படுகிறது. அவற்றை மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்த முன்வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகளில் உள்ள உணவகங்களை நடத்துவதற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை

பெண்களுக்கு அதிகாரமளிக்கும் விதமாகவும், தரமான உணவுப் பொருட்களை வழங்குவதில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் விதமாகவும், பேருந்து பணிமனைகளில் உள்ள உணவகங்களை (Canteens) நடத்துவதற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3. அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகளில் நல்ல வசதிகளை செய்ய வேண்டுமென்று டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு முன்பே இந்த ஒரு சிறப்பான அறிவிப்பு. போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் இதுவரை இருந்த சூழலை மாற்றி, குளிர்சாதன வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகளில் உள்ள பணியாளர்கள் ஓய்வு அறைகளுக்குக் குளிர்சாதன வசதியை ஏற்படுத்துதல்

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நீண்ட நேரம் பேருந்துகளில் பணி செய்வதால், அவர்கள் ஓய்வெடுக்க சிறந்த சூழ்நிலையை உருவாக்குவதற்காக, அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் உள்ள பணியாளர்கள் ஓய்வு அறைகளில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்படும்.

4. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள குன்னம் நகரில் புதிய பேருந்து பணிமனை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள குன்னம் நகரில் புதிய பேருந்து பணிமனை அமைத்தல்

குன்னம் நகரம், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள குன்னம் தாலுகாவின் தலைமையிடம், பெரம்பலூரிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரியலூர் மாவட்டத் தலைநகரிலிருந்து 16 கி.மீ. தொலைவிலுள்ள இந்நகரினை ஒட்டி அரசு மருத்துவமனை, பத்திரப் பதிவு அலுவலகம், சார்பு நீதிமன்றம், கால்நடை மருத்துவமனை, அரசு கலை அறிவியல் கல்லூரி ஆகியவை உள்ளன. மேலும், அதிக எண்ணிக்கையிலான சிமென்ட் தொழிற்சாலைகள், அரசு மருத்துவக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி ஆகியவை அரியலூரை சுற்றி உள்ளன. மேலும், குன்னம், கோயில்களுக்கு பெயர்பெற்றது. அதன் அருகே சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோயில் உள்ளது. அக்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். மேலும், குன்னம் வழியாக 29 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. குன்னம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம பொதுமக்கள், மாணாக்கர்கள், பணியாளர்கள் மேற்கண்ட நிறுவனங்களுக்கு பேருந்துகளில் சென்றுவர ஏதுவாக குன்னம் தொகுதியில் புதிதாக ஒரு தனி பணிமனையை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்தின் குன்னம் தொகுதியில் ரூ.3.55 கோடி செலவில் புதிய பேருந்து பணிமனை அமைக்கப்படும்.

5. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் ஆவடி பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையம் ரூ.10.76 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின்கீழ் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் ஆவடி பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையம் மேம்படுத்தல்

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆவடி பணிமனை மற்றும் பேருந்து நிலையத்தில்

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல், சிமென்ட் கான்கிரீட் தளம், உயர் கோபுர விளக்குகள் மற்றும் பயணிகளுக்கான இருக்கை வசதிகளுடன்கூடிய பேருந்து நிழற்குடை அமைத்தல் ஆகியவற்றுடன் ஆவடி பணிமனை மற்றும் பேருந்து நிலையம் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின்கீழ் ரூ.10.76 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

6. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பாடியநல்லூர் பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையமானது ரூ.5.43 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின்கீழ் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பாடியநல்லூர் பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையம் மேம்படுத்துதல்

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பாடியநல்லூர் பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையத்தில் அலுவலகக் கட்டடம், சிமென்ட் கான்கிரீட் தளம் மற்றும் பயணிகளுக்கான போதிய வசதிகளுடன் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின்கீழ், ரூ.5.43 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

7. அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இளைஞர்களுக்கான வர்த்தக வாய்ப்பாக parcel அனுப்புகின்ற திட்டத்தை அவர்கள் செயல்படுத்துவதற்கு முன்வந்தால், அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இளைஞர்களுக்கான வர்த்தக வாய்ப்புகள்

தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் நடவடிக்கையாக சுயதொழில்மூலம் வருமானம் ஈட்டும்வகையில் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் உள்ள பயண சுமைப் பெட்டிகள் ஒரு மாதத்திற்கு ரூ.6,000/-வீதம் வாடகை அடிப்படையில் இளைஞர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் புறப்படும் மற்றும் சேருமிடங்களுக்கு இடையே விவசாயப் பொருட்கள் அல்லது

தொழில் துறை தயாரிப்புகளை சிப்பம்மூலம் (Parcel) அனுப்ப இந்தப் பயணச் சுமைப் பெட்டிகளை பயன்படுத்தலாம். இத்திட்டம் ஓராண்டுக்கு மட்டுமே பொருந்தும்.

8. அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வழக்கமாக அதிகமாக பயணிக்கும் பயணிகளுக்கு சிறப்புப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. ஒரு காலண்டர் மாதத்தில் ஐந்து முறைக்கு மேல் முன்பதிவு செய்து பயணம் செய்தால் அவர்களுக்கு ஆறாவது பயணம் முதல் 50 சதவிகித கட்டணச் சலுகை வழங்கப்படும். இது விரைவு போக்குவரத்துக் கழகத்தில் அதிகம் பயணிப்பதற்கு உற்சாகப்படுத்துகின்ற ஓர் அறிவிப்பாக இருக்கும்.

அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வழக்கமாகப் பயணிக்கும் பயணிகளுக்கு பயணச் சலுகை அறிமுகப்படுத்துதல்

அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஒரு காலண்டர் மாதத்தில் ஐந்து முறைக்கு மேல் முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகளுக்குச் சிறப்புச் சலுகையாக அடுத்த தொடர் பயணங்களுக்கு, அதாவது ஆறாவது பயணம் முதல் 50 சதவிகிதம் கட்டணச் சலுகை வழங்கப்படும். இந்தச் சலுகை அனைத்து அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கும் பொருந்தும்.

9. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிமனை அளவில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ/மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிமனை அளவில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவ/மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்குதல்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள 315 பணிமனைகளில் ஒவ்வொரு பணிமனை அளவிலும், தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பள்ளி இறுதித்

தேர்வில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு முறையே ரூ.1,500/–, ரூ.1,000/–மற்றும் ரூ.500/–என ஆண்டுதோறும் ரூ.18.90 இலட்சம் செலவில் பரிசுத் தொகை வழங்கப்படும்.

10. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளல்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பேருந்துகளில் நீண்ட நேரம் தொடர்ந்து பணிபுரிவதாலும், பணிமனைகள் போன்ற இடங்களில் இயந்திர சூழ்நிலைகளில் பணிபுரிவதாலும் அவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மருத்துவப் பரிசோதனை செய்ய மருத்துவ முகாம்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

இந்தப் புத்தகத்தில் இல்லாத ஓர் அறிவிப்பை மூத்த அமைச்சர், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்து அறிவிப்பில் கேட்டிருக்கிறார்கள். அரசுக்கு செலவு இல்லாமல், அவருடைய ஆத்தூர் தொகுதியிலே ஒரு பணிமனை அமைப்பதற்குண்டான நிதியை அவர் ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார். அரசுக்கு செலவு இல்லாமல் அந்த நிதியை அவர் முழுவதுமாக ஏற்பாடு செய்கின்றபோது அந்தப் பணிமனை அங்கே அமைக்கப்படும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதை அவர் சொல்வார். நாம் ஏன் சொல்ல வேண்டும்.

இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்

11. தென்காசி மாவட்டம், தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினைப் பிரித்து ஆலங்குளம் தாலுகாவில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைத்தல். மதிப்பீடு ரூ.44 இலட்சம்

ஆலங்குளம் மற்றும் வீ.கே. புதூர் தாலுகா மக்கள், ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன பதிவு போன்ற சேவைகளை எளிதில் அவர்களின் பகுதியிலேயே பெறும்வகையில் தென்காசி மாவட்டம், தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினைப் பிரித்து

வீ.கே. புதூர் மற்றும் ஆலங்குளம் தாலுகாவினை உள்ளடக்கி ஆலங்குளம் தாலுகாவில் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி அலுவலகம்) அலுவலகம் அமைக்கப்படும்.

12. விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினைப் பிரித்து ராஜபாளையம் தாலுகாவில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைத்தல். மதிப்பீடு ரூ.43 இலட்சம் (மேசையைத் தட்டும் ஒலி)

ராஜபாளையம் தாலுகா மக்கள், ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன பதிவு போன்ற சேவைகளை எளிதில் அவர்களின் பகுதியிலேயே பெறும்வகையில் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினைப் பிரித்து, ராஜபாளையம் தாலுகாவில் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி அலுவலகம்) அலுவலகம் அமைக்கப்படும்.

13. பொதுமக்கள் நலன் கருதி அரசின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களை உள்ளடக்கிய மொத்தம் 145 அலுவலகங்களில், ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 145 எண்ணிக்கையில் இலகு ரக மோட்டார் கார் வாகனங்கள் (LMV–Motor Car) கொள்முதல் செய்தல். மதிப்பீடு ரூ.625 இலட்சம்

இலகு ரக வாகன ஓட்டுநர் உரிமம் (LMV–CAR) பெற விரும்பும் பொதுமக்களில், பெரும்பாலானோர் சொந்த வாகனம் இல்லாத காரணத்தினால் ஓட்டுநர் உரிமம் பெறும் பொருட்டு, ஓட்டுநர் பயிற்சி பள்ளியை அணுக வேண்டிய நிலை உள்ளது. அதனைத் தவிர்க்கும்பொருட்டு, இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்/ பகுதி அலுவலகங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடத்தும்பொருட்டு, 145 அலுவலகங்களுக்கும் 145 எண்ணிக்கையிலான இலகு ரக மோட்டார் வாகனங்கள் (LMV–CAR) ரூ.625 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

பொதுமக்கள் நலன் கருதி அரசின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களை

உள்ளடக்கிய மொத்தம் 145 அலுவலகங்களில், ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 145 எண்ணிக்கையில் இலகு ரக மோட்டார் கார் வாகனங்கள் கொள்முதல் செய்து பயன்படுத்தப்படும்.

ஓட்டுநர் பயிற்சி உரிமம் பெற வருகின்றவர்கள் தனியார் வாகனத்தை வாடகைக்கு எடுத்து அவர்கள் அங்கே ஓட்டிக் காட்ட வேண்டிய சூழல் இருப்பதை மாற்றி, அரசினுடைய வாகனத்திலேயே அவர்கள், தங்களுடைய திறனை வெளிப்படுத்துகின்ற வாய்ப்பினை வழங்குவதற்காக இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

14. தமிழ்நாட்டில் உள்ள 20 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுதளம் அமைத்தல். மதிப்பீடு ரூ.1,000 இலட்சம்

தமிழ்நாட்டில் உள்ள 145 (91+54) அலுவலகங்களில் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் (Manual Testing) ஓட்டுநர் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. சாலை பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, ஓட்டுநர்களின் தேர்வுத் திறனை மேம்படுத்தும்பொருட்டு இனிவரும் காலங்களில், 20 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுதளம் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள 20 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுதளம் அமைக்கப்படும். மதிப்பீடு ரூ.1,000 இலட்சம்

15. சாலை விபத்தில் காயம் அடைந்த நபர்களுக்கு உதவும் நற்கருணை வீரர்களை (Good Samaritan) ஊக்குவிக்கும்வகையில் ஏற்கெனவே மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த ரூ.5,000/– தொகையுடன், மாநில அரசின் பங்களிப்பாக சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து கூடுதல் தொகையாக ரூ.5,000/–வழங்கப்படும்

தற்போது, சாலை விபத்தில் காயம் அடைந்த நபர்களுக்கு உதவும் நற்கருணை வீரர்களுக்கு மத்திய அரசால் ரூ.5,000/– ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில்,

2023 மார்ச் 29] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

மேற்படி நற்கருணை வீரர்களை மேலும் ஊக்குவிக்கும்பொருட்டு மாநில அரசின் பங்களிப்பாக சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து கூடுதல் தொகையாக ரூ.5,000/–வழங்கப்படும்.

16. ஆதார் அட்டையை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வராமலேயே (நேரடி தொடர்பின்றி) சேவைகளைக் குடிமக்களுக்கு வழங்குதல்

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்மூலம் வழங்கப்படும் சேவைகளை பொதுமக்கள் எவ்வித இடையூறுமின்றி பெறும்வகையில் நடவடிக்கைகள் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் நீட்சியாக, ஆதார் அட்டையை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வராமலேயே (தொடர்பு இல்லாத) ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவு தொடர்பான 42 சேவைகளை இணையதளம்மூலம் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆதார் அட்டையை அடையாள ஆவணமாக பயன்படுத்தி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வராமலேயே (நேரடி தொடர்பின்றி) சேவைகள் குடிமக்களுக்கு வழங்கப்படும்.

17. போக்குவரத்து வாகனங்களை இயக்குவதற்கு பொதுப்பணி வில்லை பெறுவதிலிருந்து விலக்களித்தல்

1989 ஆம் வருட தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் கூறப்பட்டுள்ள விதிகள் 7, 8, 9, 10–ன்படி போக்குவரத்து வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பொதுப்பணி வில்லை பெற வேண்டும். பிற மாநிலங்களில் (கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா) இலகு ரக போக்குவரத்து வாகனம் இயக்க பொதுப்பணி வில்லை தேவையில்லை என்ற நிலை உள்ளது. எனவே, இலகு ரக வாகனங்கள் இயக்க ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள், அனைத்து இலகு ரக போக்குவரத்து வாகனங்களையும் பொதுப்பணி வில்லை பெறாமலேயே இயக்க வசதியாக 1989 ஆம் வருட தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் கூறப்பட்டுள்ள விதிகள் 7, 8, 9, 10 ஆகியவற்றை நீக்கம் செய்ய அறிவிக்கை செய்யப்படும்.

Badge இருந்தால்தான் ஓட்டலாம் என்ற நிலை இருந்தது. இனி அந்த badge–வில்லை தேவையில்லை என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 6–05

18. போக்குவரத்து வாகனங்களுக்கு தகுதிச் சான்று வழங்க தனியார் பங்களிப்பின் (PPP) மூலமாக தானியங்கி சோதனை நிலையங்கள் அமைக்கப்படும்

தமிழ்நாட்டில் தற்போது போக்குவரத்து வாகனங்களுக்கு தகுதிச் சான்று மோட்டார் வாகன ஆய்வாளர்களால் வழங்கப்பட்டு வருகின்றது. ஒன்றிய அரசின் அறிவிப்பு எண் GSR No. 272 (E), நாள் 5–4–2022–ன்படி, 1–4–2023 ஆம் நாள் முதல் அனைத்து கனரக போக்குவரத்து வாகனங்களுக்கும், 1–6–2024 ஆம் நாள் முதல் பிற போக்குவரத்து வாகனங்களுக்கும் தானியங்கி சோதனை நிலையத்தின் மூலமாகவே தகுதிச் சான்று வழங்கப்பட வேண்டும் என விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், அரசுக்கு எவ்வித வருவாய் இழப்பின்றி தனியார் பங்களிப்பின் (PPP) மூலமாக முதற்கட்டமாக பின்வரும் 18 வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட இடங்களில் தானியங்கி சோதனை நிலையங்கள் அமைக்கப்படும்.

செங்குன்றம், தாம்பரம், திருப்பெரும்புதூர், வேலூர், திண்டிவனம், சேலம் (மேற்கு), திருவரங்கம், தஞ்சாவூர், திருப்பூர் (வடக்கு), கோவை (வடக்கு), நாமக்கல் (வடக்கு), ஈரோடு (கிழக்கு), திண்டுக்கல், மதுரை (தெற்கு), இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் அமைக்கப்படும்.

இந்தப் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பதிலளிப்பதற்கு வாய்ப்பளித்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குன்னம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறைமீது மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். அவற்றில் இருக்கின்ற கருத்துகள் தேவைப்படுகின்றபோது பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

2023 மார்ச் 29] [*திரு. எஸ்.எஸ். சிவசங்கர்*]

மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்போடு வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

(இ) கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.610,33,46,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(ஈ) கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ரூ.900,00,03,000/–மற்றும் கடன் கணக்கில் ரூ.700,80,09,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30–3–2023), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6–07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

56. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [2002 ஆம் ஆண்டு ஹஜ் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 35/2002) 34(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

97. 2022–2023 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ்–ஆங்கிலம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

98. 2022–2023 ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ்–ஆங்கிலம்)

99. 2022–2023 ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

100. 2023–2024 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ்–ஆங்கிலம்)

101. 2023–2024 ஆம் ஆண்டு "உடனடிச் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ்–ஆங்கிலம்)

102. மானியக் கோரிக்கை எண் *40*-நீர்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2023–2024.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

103. மானியக் கோரிக்கை எண் *32*-தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2023–2024.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

104. மானியக் கோரிக்கை எண் *25*–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2023–2024.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

105. மானியக் கோரிக்கை எண் *48*-போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2023–2024.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

———

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

இணைப்பு I

(*106 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 40-நீர்வளத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1.0. முன்னுரை

1.1. நீர்வளத் துறையின் செயல்பாடுகள்

“இடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன்”-

— சிலப்பதிகாரம்

ஏரிகள், குளங்கள் போன்றவற்றை உருவாக்கி அதன்மூலம் மழைநீரைச் சேகரித்து, அவற்றைச் சிறந்த பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து தனது நாட்டை வளமாக்கும் மன்னன் என்று தமிழ் புலவர் இளங்கோ அடிகள் நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வரிகளுக்கிணங்க, தமிழ்நாட்டின் அனைத்து நீர் தேவைகளிலும் தன்னிறைவு அடைய நீர் வளங்களைத் திறம்பட மேலாண்மை செய்வதற்கான நடவடிக்கைகளில் நீர்வளத் துறை கவனம் செலுத்துகிறது.

நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் மேம்படுத்தி விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு துறைகளின் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் புதிய கட்டமைப்புகளை உருவாக்குதல், ஏற்கெனவே உள்ள நீர்நிலைகள் மற்றும் அதன் உட்கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்தல் ஆகிய பணிகளில் இத்துறை கவனம் செலுத்துகிறது.

பாசன கட்டமைப்புகளான அணைகள், அணைக்கட்டுகள், தடுப்பணைகள், நீரொழுங்கிகள், கதவணைகள், நிலத்தடி தடுப்புசுவர்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றை உருவாக்குதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. மேலும், ஆறுகளை

TRUTH ALONE TRIUMPHS

இணைக்கும் பணிகளை மேற்கொள்வதன்மூலம் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரைத் திறம்பட அதிகரிப்பதில் கவனம் செலுத்துகிறது. இதுதவிர, நிலத்தடி நீரின் அளவையும், தரத்தையும் மேம்படுத்த செயற்கை முறையில் நிலத்தடி நீரை செறிவூட்டும் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கனமழையால் பொதுமக்கள் மற்றும் அவர்களின் உடைமைகளுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்காக, குறிப்பாக சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வெள்ளத் தணிப்புப் பணிகளைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைமூலம் நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி நீர்நிலைகளைப் பராமரிக்கவும் நீர் தங்குதடையின்றி செல்வதற்கும் சீரிய நடவடிக்கைகளை இத்துறை மேற்கொள்கிறது.

நீர்நிலைகளைத் தூர்வாருவதன்மூலம் அவற்றின் கொள்ளளவினை மீட்டெடுக்கவும் உரிய நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. இந்நடவடிக்கைகளால் வெள்ளம் மற்றும் வறட்சியினால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்க இயலும்.

1.2. நீர்வள ஆதாரங்கள்

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"

–குறள்

மேற்பரப்பு நீர்வளம்

மாநிலத்தில் உள்ள 34 ஆறுகள், 17 பெரிய ஆற்று வடிநிலங்களாகவும், 127 துணை வடிநிலங்களாகவும் வகைப்படுத்தப்பட்டு உள்ளன. மாநிலத்தின் இயல்பான மழையளவு 973 மி.மீ ஆகும். மாநிலத்தின் மேற்பரப்பு நீர்வள ஆதாரம் மொத்தம் 865 டி.எம்.சி. அடி ஆகும். இது அண்டை மாநிலங்களிலிருந்து, பன் மாநில ஒப்பந்தங்களின்படி, பெறப்படும் 260 டி.எம்.சி. அடி நீரினையும் உள்ளடக்கியதாகும்.

நிலத்தடி நீர்வளம்

தமிழ்நாடு, நிலத்தடி நீர் வளத்தில் தன்னிறைவு மற்றும் நிலைத்தன்மை பெற்ற மாநிலமாகத் திகழ்ந்திட, நிலத்தடி நீரை மிகவும் சீரிய முறையில் பாதுகாப்பதும் மேலாண்மை செய்வதும்

2023 மார்ச் 29]

தற்போதைய மற்றும் எதிர்காலங்களுக்கான முதன்மைத் தேவையாகும். நிலத்தடி நீரின் அளவு மற்றும் தரம் ஆகியவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. வருவாய் குறுவட்டங்களை அலகாகக் கொண்டு, 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான, நுண்ணிய நிலத்தடி நீர்வள மதிப்பீட்டின்படி, மாநிலத்தில் உள்ள 1,166 குறுவட்டங்கள், 5 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 435 அதிநுகர்வு குறுவட்டங்களாகவும், 63 அபாயகரமான குறுவட்டங்களாகவும், 225 மித அபாயகரமான குறுவட்டங்களாகவும், 409 பாதுகாப்பான குறுவட்டங்களாகவும் மற்றும் 34 உவர்தன்மை/தரம் குறைவான குறுவட்டங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மாநிலத்தின் நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாப்பதற்கும், சேகரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் தடுப்பணைகள், படுகை அணைகள், நிலத்தடி தடுப்புச் சுவர்கள், நீர் செறிவூட்டும் துளைகள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகள் போன்ற கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் நிலத்தடி நீர்வள மதிப்பீடு 2022 மற்றும் முந்தைய மதிப்பீடுகளுடனான ஒப்பீடு

மத்திய நிலத்தடி நீர் வாரியம் வெளியிட்டுள்ள 'தமிழ்நாடு மாறுதலுக்குட்பட்ட நிலத்தடி நீர்வளங்கள்-2022' அறிக்கையில், 'நிலத்தடி நீர் பயன்படுத்தும் நிலை' அடிப்படையில் தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் செறிவூட்டும் மதிப்பீட்டு அலகுகளை (குறுவட்டம்) வகைப்படுத்தியுள்ளது.

வ. எண்	பிரிவு	நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு 2020	நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு 2022	நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு 2022 ஒப்பீடு 2020
1	பாதுகாப்பான குறுவட்டம்	409	463	54
2	மித அபாயகரமான குறுவட்டம்	220	231	6

[2023 மார்ச் 29

வ. எண்	பிரிவு	நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு 2020	நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு 2022	நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு 2022 ஒப்பீடு 2020
3	அபாயகரமான குறுவட்டம்	63	78	15
4	அதி நுகர்வு	435	360	-75
5	உவர் தன்மை	34	34	--
6	மொத்த மதிப்பீட்டு அலகு	1166	1166	--

அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நிலத்தடி நீர்செறிவூட்டும் நடவடிக்கைகளால் பாதுகாப்பான குறுவட்டங்களின் எண்ணிக்கை உயர்ந்து அதிநுகர்வு குறுவட்டங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. மேலும், அதிநுகர்வு குறுவட்டங்கள் பாதுகாப்பான குறுவட்டங்களாக மாறுவதால் அபாயகரமான மற்றும் மித அபாயகரமான குறுவட்டங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்பதையும் இந்த மதிப்பீடு காட்டுகிறது.

1.3. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)

ஐக்கிய நாடுகள் பொது அவை உச்சி மாநாட்டில் 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்-2030 செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக, 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள் உள்ளன.

உயிர்வாழ்வதற்கு இயற்கையின் அடிப்படை மற்றும் இன்றியமையாத அங்கமான நீரை இத்துறை கையாளுகிறது. நீடித்த நிலையான நீர் மேலாண்மை மிகவும் முக்கியமானதாகும். இது நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 6 மற்றும் 12-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இலக்கின்கீழ் உள்ள நீர்வளத் துறை தொடர்புடைய குறிக்கோள்கள் பின்வருமாறு:-

2023 மார்ச் 29]

குறிக்கோள் 6.4: *2030 ஆம் ஆண்டிற்குள், அனைத்து துறைகளிலும் நீரை திறம்பட பயன்படுத்தும் முறையை மேம்படுத்துதல், நிலத்தடி நீரை பயன்படுத்துவதிலும், நன்னீர் வழங்குவதிலும் நிலைத்த தன்மையை உறுதி செய்வதன் வாயிலாக நீர் பற்றாக்குறையைப் போக்குதல் மற்றும் நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையைப் பெருமளவில் குறைத்தல்.*

குறிக்கோள் 6.6: *2020 ஆம் ஆண்டிற்குள், நீர் தொடர்புடைய சூழலியல் காரணிகளான மலைகள், காடுகள், ஆறுகள், நீர்த்தாங்கிகள், ஈரநிலங்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தல்.*

குறிக்கோள் 6.b: *நீர் மற்றும் சுகாதார மேலாண்மையை மேம்படுத்துவதில் உள்ளூர் மக்களின் பங்கேற்பை ஊக்குவித்து அதிகப்படுத்துதல்.*

குறிக்கோள் 12.2: *2030 ஆம் ஆண்டிற்குள், இயற்கை வளங்களை திறமையாகப் பயன்படுத்துதல் மற்றும் நிலையான மேலாண்மையை அடைதல்.*

துறையின் பல்வேறு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதோடு, சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவதன்மூலம், தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கான விலை மதிப்பற்ற நீர்வளமாக இருக்கும் நீர்நிலைகள், ஈர நிலங்கள், நீர்த்தாங்கிகள், ஏரிகள் மற்றும் ஆறுகள் பாதுகாக்கப்பட்டு, நாட்டின் "நீர்ப்பற்றாகுறை அற்ற மாநிலம்" என்ற நிலையை அடைய அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 2030-க்கான செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பாதையில் இத்துறை பயணித்து வருகிறது.

1.4. தமிழ்நாடு நீர்வள (ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை) ஆணையச் சட்டம்

முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் வளங்களைக் கட்டுப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் மற்றும் நிர்வகிக்கவும் தமிழ்நாடு அரசு மார்ச் 2003-ல் தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டம் 2003-யினை இயற்றியது. நடைமுறை சிக்கல்கள் காரணமாக இச்சட்டம் 14.9.2013 அன்று நீக்கம் செய்யப்பட்டது.

[2023 மார்ச் 29

பல்வேறு கட்ட ஆலோசனைகளின் முடிவிற்குப் பிறகு, தமிழ்நாட்டின் நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்வளத்தினை ஒழுங்குபடுத்தவும், மேலாண்மை செய்யவும், நீரினை மறுமுறை பயன்படுத்தவும் ஓர் ஆணையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க மாநில திட்டக் குழுவின் மூலமாக தமிழ்நாடு நீர்வள (ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை) ஆணையச் சட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

1.5. தமிழ்நாடு மாநில நீர் கொள்கை

நீடித்த நிலையான வளர்ச்சியின் 6-வது இலக்கு, அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பதை உறுதி செய்வதாகும். தூய, தரமான நீர் என்பது 21 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சவால்களில் ஒன்றாகும்.

தற்போதைய சூழ்நிலை மற்றும் அதன் சவால்களைப் புரிந்துகொள்வதும், மாநிலத்தின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ள, ஒரு நீர் கொள்கையை முன்மொழிவதே, தமிழ்நாடு மாநில நீர் கொள்கையின் நோக்கமாகும்.

அனைவருக்கும் போதுமான அளவு நீர் கிடைப்பதற்கான உரிமையை உறுதி செய்வதிலும், பொருளாதார நோக்கில் உற்பத்தித் திறன் மற்றும் நீரைத் திறம்பட பயன்படுத்துவதை ஊக்குவிப்பதிலும், அனைத்து உயிரினங்களும் நீர் ஆதாரங்களை அணுகுதல், பயன்படுத்துதல் மற்றும் மேலாண்மை செய்வதில் தன்னிறைவுப் பெறுவதற்கு நீர் ஆளுமையை மேம்படுத்துவதில் தமிழ்நாடு மாநில நீர் கொள்கை கவனம் செலுத்துகிறது.

இந்தக் கொள்கையானது, நீரைப் பயன்படுத்துதல், பகிர்ந்தளித்தல் மற்றும் நீர் மாசுபாட்டை கட்டுப்படுத்தும் அனைத்துத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், பங்குதாரர்கள் மற்றும் மாநிலத்தின் குடிமக்கள், அதிலுள்ள பிரச்சினைகள் மற்றும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உத்திகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

நிலையான துறை ஒதுக்கீடு, பங்குதாரர்களின் ஈடுபாடு, தமிழ்நாடு நீர்வள ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் கொள்கை ஆராய்ச்சி மையம் அமைத்தல், நீர்வள திட்டமிடல், ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை (IWRM), ஒருங்கிணைந்த நீர் மேலாண்மைத் திட்டம் (IWMP), நீர்வள மேலாண்மையில் கட்டமைப்பு நிர்வாக

2023 மார்ச் 29]

சீர்திருத்தங்கள், இதில் தனித்தனியான நீர் மேலாண்மையிலிருந்து மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மற்றும் கூட்டான மேலாண்மைக்கு மாறுதல், கழிவு நீர் மற்றும் பிற நீர் ஆதாரங்களை மறுபயன்பாடு செய்தல், தேவைக்கேற்ப நீர் மேலாண்மை, நீரின் தரம் மற்றும் அளவை உறுதி செய்தல், நீர் பயன்பாட்டுத் திறன் மற்றும் விவசாயத்தில் உற்பத்தித் திறன், அனைத்து நீர் சுற்றுச்சூழல் அமைப்புகளின் மறுசீரமைப்பு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை போன்றவை நீர் கொள்கையின் நிலையான உத்திகள் ஆகும்.

மாநில திட்டக் குழு மற்றும் நீர்வளத் துறை, நீரைப் பயன்படுத்துவோர்களோடு கலந்தாலோசித்து தமிழ்நாடு மாநில நீர் கொள்கையை உருவாக்கி வருகிறது.

1.6. ஜல் சக்தி அபியான்

*ஜல் சக்தி அமைச்சகத்தின் தேசிய நீர் குழுமம், காலநிலை மற்றும் மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு மக்களின் தீவிர பங்கேற்புடன் பொருத்தமான மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை (*RWHS*) உருவாக்க, மாநிலங்கள் மற்றும் அனைத்து பங்குதாரர்களையும், வலியுறுத்துவதற்காக, 22 மார்ச் 2021 அன்று உலக நீர் தினத்தன்று, "விழும் நேரத்தில், விழும் இடத்தில் மழையைப் பிடித்தல்" என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது.*

மார்ச் 29, 2022-க்குப்பின் நீர்வளத் துறையானது ஜல் சக்தி அபியானின் ஒருங்கிணைப்பு முகமையாக மாற்றப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு, பாரம்பரிய மற்றும் பிற நீர்நிலைகள், நீர் மறுபயன்பாடு மற்றும் நீர்செறிவூட்டும் கட்டமைப்புகளைப் புதுப்பித்தல், நீர்படுகை மேம்பாடு மற்றும் அடர் காடு வளர்ப்பு ஆகிய 5 முக்கியப் பொருண்மைகளின்கீழ் இலக்கு நோக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிரச்சாரத்தின் மேற்கூறிய இலக்கு நோக்கிய பொருண்மைகளில், அனைத்து நீர்நிலைகளின் கணக்கெடுப்பு, புவிசார் குறியிடுதல் மற்றும் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளை உள்ளடக்கி, மேற்கண்ட செயல்பாடுகளின் அடிப்படையில் நீர் பாதுகாப்புக்கான அறிவியல் பூர்வமான திட்டங்களை தயாரித்தல் மற்றும் மாபெரும் விழிப்புணர்வு உருவாக்க ஜல் சக்தி கேந்திராக்களை அமைத்தல் ஆகியவை அடங்கும்.

நீர்வளத் துறை தவிர தொடர்புடைய பிற துறைகள் பின்வருமாறு:

1) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
2) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை.
4) வேளாண்மை-உழவர் நலன் துறை
5) சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை
6) பொதுப் பணித் துறை
7) பள்ளிக் கல்வித் துறை
8) உயர் கல்வித் துறை
9) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை
10) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

இந்த பிரச்சாரத்தின்கீழ், நீர்நிலைகளைப் புவியியல் தகவல் முறைமை (GIS) வரைபடமாக்குதல் மற்றும் அறிவியல் பூர்வமான நீர்ப் பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரித்தல் ஆகியவற்றிற்காகச் செய்யப்படும் செலவினங்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2.00 இலட்சம் ரூபாய் வழங்க ஒன்றிய அரசு முடிவு செய்தது. அதன்படி, தேசிய நீர் குழுமம் தமிழகத்தின் 34 மாவட்டங்களுக்கு (சென்னை, மதுரை, மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை தவிர) முதல் தவணையாக ரூ.1.00 இலட்சம் வழங்கியுள்ளது.

ஒன்றிய அரசிற்கு மாநில ஒருங்கிணைப்பு அதிகாரிமூலம் பயன்பாட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டபின், இரண்டாவது தவணையாக ரூ.1.00 இலட்சம் 34 மாவட்டங்களில் (தஞ்சாவூர், திருவள்ளூர், விழுப்புரம் தவிர) 31 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜல் சக்தி அபியான் பிரசாரத்தின் 5 முக்கியப் பொருண்மைகளின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள், பிரதமரின் வேளாண் பாசனத் திட்டம் (PMKSY) (ஒரு துளி அதிக மகசூல்), தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP), மாநில நிதி மற்றும் நபார்டு நிதித் திட்டம் (NABARD), நீடித்த நீர் பாதுகாப்பு இயக்கம் (SuWaSeM), நீர்படுகை

2023 மார்ச் 29]

*மேம்பாட்டு நிதி (*WDF*), சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (*SADP*), உலர்நில மேம்பாட்டுத் திட்டம்,* MGNREGS, *15*th FC, CAMPA, CFC, SCPAR, *பஞ்சாயத்து/பஞ்சாயத்து யூனியனின் பொது நிதி, நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி (*CSR*), பண்ணை நிலங்களில் நிலையான பசுமைப் பாதுகாப்புக்கான தமிழ்நாடு இயக்கம் (*TNMSGCF*), கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், கலைஞரின் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புற புதுப்பித்தல் மற்றும் மாற்றத்திற்கான அடல் இயக்கம்-2.0 (*AMRUT *2.0), தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (*NADP*), பிரதமரின் மீனவர் வருவாய் பெருக்கத் திட்டம் (*PMMSY*) போன்றவற்றிலிருந்து நிதி ஒருங்கிணைப்புமூலம் மேற்கொள்ளப்படுகின்றன.*

அனைத்து மாவட்டங்களிலும் வட்ட அளவில் 160 எண்ணிக்கையிலான ஜல் சக்தி கேந்திராக்கள் உருவாக்கப்பட்டு, நீர் பாதுகாப்பு நுட்பங்கள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்கும், மக்களுக்குத் தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குவதற்கும் 'அறிவு மையமாக' செயல்பட்டு வருகின்றன. ஜல் சக்தி அபியான் திட்டம் குறித்த தகவல்கள் www.jsactr.mowr.gov.in *என்ற இணைய முகவரியில் கிடைக்கப்பெறும்.*

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் "ஜல் சக்தி அபியான்-2023" என்ற பிரச்சாரத்தை 'குடிநீருக்கான ஆதாரம் மற்றும் நிலைத்தன்மை' என்ற கருப்பொருளுடன் தொடங்கினார். இப்பிரச்சாரம் 4.3.2023 முதல் 30.11.2023 வரை செயல்படுத்தப்படும்.

இப்பிரச்சாரத்தின் செயல்பாடுகளை மாநிலத்தில் செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புத் துறை நீர்வளத் துறை ஆகும்.

"ஜல் சக்தி அபியான்: கேட்ச் தி ரெயின்-2022", ஐந்து முக்கியமான நீர் பாதுகாப்பு தலையீடுகளை உறுதிப்படுத்துகிறது. அதாவது (1) நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு; (2) அனைத்து நீர்நிலைகளையும் கணக்கிடுதல், புவிசார் குறியீட்டுடன் பட்டியலை உருவாக்குதல்; அதன் அடிப்படையில் நீர் சேமிப்புக்கான அறிவியல் திட்டங்களைத் தயாரித்தல் (3) அனைத்து மாவட்டங்களிலும் ஜல் சக்தி கேந்திராக்கள் அமைத்தல் (4) தீவிர காடு வளர்ப்பு மற்றும் (5) விழிப்புணர்வு உருவாக்கம்.

[2023 மார்ச் 29

தேசிய நீர் இயக்கத்தின்படி, ஜல் சக்தி அபியான், 2023-ன் சிறப்பு இயல்புகள் பின்வருமாறு:-

(i) குடிநீர் வளத்துக்கான நிலைத்தன்மை

(ii) நீர் உறுதிமொழிகள்

(iii) அமுத நீர்க்குட்டைகள்

(iv) ஊற்றுநீர் படுகை மேம்பாடு

(v) நேரு இளையோர் மைய சங்கத்தின் (NYKS)மூலம் விழிப்புணர்வு உருவாக்குதல்.

(vi) முனைப்பான தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC) நடவடிக்கைகள்.

(vii) சுதந்திரத் திருநாள் அமுத பெருவிழா கொண்டாட்டம்.

(viii) நீர் பிடிப்புப் பகுதிகளைப் பாதுகாத்தல்.

தலைமைச் செயலாளர் தலைமையில் 14.3.2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில், ஜல் சக்தி அபியான் 2023 திட்டத்தினை, மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

2.0. பன் மாநில நதி நீர் பிரச்சினைகள்

2.1. காவிரி நதி நீர் தாவா

பன் மாநில நதி நீர் தாவாச் சட்டம், 1956-ல் பிரிவு 5(2)-ல் குறிப்பிட்டுள்ளவாறு, காவிரி நடுவர் மன்றம் இறுதி ஆணையை 5.2.2007 அன்று பிறப்பித்தது.

கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம் 16.2.2018 அன்று வழங்கிய தீர்ப்பில் மாநிலங்களுக்குக் கீழ்க்கண்டவாறு நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டது:-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

(டி.எம்.சி. அடியில்)

கர்நாடகா	284.75
தமிழ்நாடு	404.25
கேரளா	30
புதுச்சேரி	7
சுற்றுச்சூழல் பாதுகாப்பு	10
கடலில் சேரும் தவிர்க்க முடியாத உபரி நீர்	4
மொத்தம்	**740**

மேற்கண்ட நீர் ஒதுக்கீட்டின் அடிப்படையில், கர்நாடக அரசு, இருமாநில எல்லையான பில்லிகுண்டுலுவில், தமிழ்நாட்டுக்கு 177.25 டி.எம்.சி. அடி நீர் வழங்க வேண்டும். மேற்கூறிய மாற்றத்தைத் தவிர, காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் பதிவு செய்யப்பட்ட முடிவுகளின்மீது எவ்வித மாற்றத்தையும் உச்ச நீதிமன்றம் செய்யவில்லை.

உச்ச நீதிமன்றம் 16.2.2018 மற்றும் 18.5.2018 அன்று வழங்கிய தீர்ப்புகளின்படி, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் அடங்கிய காவிரி நீர் மேலாண்மைத் திட்டம், 2018 என்ற திட்டத்தை 1.6.2018 அன்று ஒன்றிய அரசு அதன் அரசிதழில் அறிவித்தது.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தில் பொதுப் பணித் துறை (தற்போது நீர்வளத் துறை) முதன்மைச் செயலாளரும், காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவில் நீர்வள ஆதாரத் துறையின் திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளரும் தமிழ்நாட்டின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். காவிரி நீர் மேலாண்மை ஆணையம் இதுவரை 19 கூட்டங்களை நடத்தியுள்ளது. காவிரி நீர் முறைப்படுத்தும் குழு 76 முறை கூடியுள்ளது. இக்குழுவின் கடைசி கூட்டம் 24.2.2023 அன்றும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கடைசி கூட்டம் 10.2.2023 அன்றும் நடைபெற்றன. இக்கூட்டங்களில், காவிரி படுகையிலுள்ள விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் விதமாக, தமிழ்நாட்டிற்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி மாதவாரியாக அளிக்கப்பட வேண்டிய நீரை பெறுவது, கர்நாடகாவின் மேகதாது அணைத் திட்டம்

பற்றிய விவாதத்தை எதிர்ப்பது போன்ற பல்வேறு பொருண்மைகள் தொடர்பான தமிழ்நாட்டின் கருத்துகள் வலிமையாக எடுத்துரைக்கப்பட்டு வருகிறது.

நீர்ப் பாசன ஆண்டு 2022-2023-ல், மேட்டூர் அணையில் சேமிக்கப்பட்ட நீரளவு மற்றும் சாதகமான பருவ மழை முன்னறிவிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குறுவை பாசனத்திற்காக 24.5.2022 அன்று மேட்டூர் அணை முன்கூட்டியே திறக்கப்பட்டது.

இந்த ஆண்டு காவிரி படுகை முழுவதும் இரண்டு பருவ மழைக் காலங்களிலும் நல்ல மழை பெய்தது. ஓர் அரிய நிகழ்வாக, மேட்டூர் அணையின் நீர் மட்டம் மொத்தம் 125 நாட்களுக்கும் (1.6.2022 முதல் 12.1.2023) மற்றும் தொடர்ச்சியாக 69 நாட்களுக்கும் (17.7.2022 முதல் 23.9.2022 வரை) 120 அடியில் இருந்தது.

கர்நாடகாவில் இருந்து காவிரியில் பெறப்பட்ட வெள்ள உபரி நீரை, சேதத்தைக் குறைக்கும் வகையில் முறைப்படுத்தி வெளியேற்றப்பட்டது. பாசன பருவம் முடிவடையும் நிலையில் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கான நீர் வெளியேற்றம் 28.1.2023 அன்று நிறுத்தப்பட்டது.

கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட உத்தேசித்துள்ளதை தடுத்து நிறுத்த தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள்

கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட மேற்கொண்டு வரும் முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு ஆரம்பம் முதலே தொடர்ந்து எதிர்த்து வருகிறது. கர்நாடக அரசு மேகதாதுவில் 67.16 டி.எம்.சி. அடி கொள்ளளவுக் கொண்ட ஒரு அணை கட்ட சாத்தியக்கூறு அறிக்கையைத் தன்னிச்சையாகத் தயாரித்து, மத்திய நீர்வளக் குழுமத்திற்குச் சமர்ப்பித்தது. தமிழ்நாட்டின் எதிர்ப்பையும் மீறி மத்திய நீர்வளக் குழுமம் 22.11.2018 அன்று விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு கர்நாடக அரசிற்கு ஒப்புதல் வழங்கியது. எனவே, இதனை எதிர்த்து 30.11.2018 அன்று தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவினை, மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் வழங்கிய அனுமதியை திரும்பப் பெற உத்தரவிடக் கோரி தாக்கல் செய்தது. மேலும், 5.12.2018 அன்று தொடர்புடைய அலுவலர்கள்மீது தமிழக அரசு நீதிமன்ற அவமதிப்பு மனு ஒன்றினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இவ்விரு வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

2023 மார்ச் 29]

தமிழ்நாடு அரசின் வலுவான எதிர்ப்பையடுத்து, ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், இரு மாநிலங்களுக்கிடையே இணக்கமான தீர்வு எட்டப்பட்ட பின்னர் இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு/சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் (EIA/EMP) தயாரிக்க தேவைப்படும் குறிப்பு ஆணைக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து மறுபரிசீலனை செய்யலாம் என முடிவெடுத்தது. மேலும், தமிழ்நாடு அரசின் எதிர்ப்பினால் இத்திட்டம் தொடர்பாக காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டங்களிலும் விவாதம் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கிடையே, தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (தெற்கு மண்டலம்), மேகதாது திட்டப் பகுதியில் கர்நாடகா கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதாக வெளியான செய்தியின் அடிப்படையில், தன்னிச்சையாக ஒரு வழக்கை எடுத்துக் கொண்டு, ஒரு குழுவினை அமைத்து, ஓர் அறிக்கையை சமர்ப்பிக்க, 21.5.2021 அன்று உத்தரவிட்டது. ஆனால், மேகதாது குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி, தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (முதன்மை அமர்வு), புது டில்லி, இம்மனுவை முடித்து வைப்பதாக 17.6.2021 அன்று ஆணையிட்டது. தமிழ்நாடு அரசு தனது பதில் மனுவைத் தாக்கல் செய்ய வாய்ப்பு அளிக்கப்படாமலேயே இவ்வழக்கு முடித்து வைக்கப்பட்டதால், இந்த ஆணையை எதிர்த்து தமிழ்நாடு அரசு ஒரு மேல் முறையீட்டு மனுவை 11.8.2021 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இம்மனுவும் நிலுவையில் உள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் 17.6.2021 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு வழங்கிய கோரிக்கை மனுவிலும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 6.7.2021 அன்று மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களைச் சந்தித்து வழங்கிய கோரிக்கை மனுவிலும், கர்நாடக அரசு மேகதாது திட்டத்தைத் தொடரக் கூடாது என்று அறிவுறுத்துமாறு வலியுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துச் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் குழு, மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களை 16.7.2021 அன்று நேரில் சந்தித்து ஒன்றிய அரசு மேகதாது அணை திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களின் இசைவைப் பெறாமல் எவ்வித அனுமதியும் வழங்கக் கூடாது என வலியுறுத்தியது.

கர்நாடக அரசு இத்திட்டத்தை மேற்கொள்ள தேவைப்படும் ஆய்வு வரம்புகளுக்கு ஒப்புதல் பெற மீண்டும் ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தை அணுகியுள்ளதாகத் தெரிய வந்ததையடுத்து, மேகதாது அணை திட்டம் தொடர்பான விரிவான அறிக்கையினை மத்திய நீர்வளக் குழுமம் நிராகரிக்கக் கோரி தமிழ்நாடு அரசு 27.8.2021 அன்று கூடுதல் ஆவணங்களுடன் மற்றொரு மனுவை (Miscellaneous Application) உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இம்மனுவும் நிலுவையில் உள்ளது.

இதனிடையே, கர்நாடக அரசு அதன் 2022-2023 நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு ரூ.1000 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிய வந்ததையடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கர்நாடக அரசின் இச்செயலுக்கு 21.3.2022 அன்று கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், இத்திட்டத்திற்கு எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசையும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தையும் வலியுறுத்தி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் 24.3.2022 அன்று ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்திற்கும் அனுப்பப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 31.3.2022 மற்றும் 26.5.2022 அன்று நேரில் சந்தித்த போது வழங்கிய கோரிக்கை மனுக்களிலும், மேகதாது அணை திட்டத்தையோ அல்லது வேறு எந்த திட்டத்தையோ மேற்கொள்ள கர்நாடகாவிற்கு எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது என ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும் வலியுறுத்தினார்கள்.

இதற்கிடையே, 11.2.2022 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 15-வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஒன்றிய அரசு வழக்கறிஞரிடம் (Solicitor General) காவிரி படுகையில் புதிய திட்டங்களைப் பரிசீலிக்க ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளதா என ஒன்றிய அரசு கருத்து கோரியது. ஒன்றிய அரசு வழக்கறிஞர் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு அகன்ற அதிகாரம் உள்ளது எனவும், மேகதாது அணை திட்டத்தை ஆணையம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் எனவும் கருத்து தெரிவித்ததையடுத்து, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் 17.6.2022 அன்று நடைபெற இருந்த தனது 16-வது கூட்டத்தில் மேகதாது அணை திட்டத்தின் விரிவான அறிக்கை பற்றிய பொருளை

2023 மார்ச் 29]

விவாதப் பட்டியலில் சேர்த்தது. இதனையடுத்து, தமிழ்நாடு அரசு 4.6.2022 மற்றும் 9.6.2022 ஆகிய தேதிகளில் ஆணைய தலைவருக்கு எழுதிய கடிதத்தில் இப்பொருளினை விவாதப் பட்டியலிலிருந்து நீக்குமாறு வலியுறுத்தியது.

மேலும், ஆணையத்தின் அதிகார வரம்புகள் குறித்து, தமிழ்நாடு அரசு 7.6.2022 அன்று உச்ச நீதிமன்றத்தில் இரு மனுக்களை (I.A.Nos 84197 & 84201 in M.A. No 3127 of 2018), தாக்கல் செய்தது. இம்மனுக்களில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தைப் பிரதிவாதியாக சேர்க்குமாறும், மேகதாது தொடர்பான வழக்குகள் மீதான தீர்ப்பு அளிக்கப்படும் வரை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மேகதாது அணை திட்ட விரிவான அறிக்கை பற்றி விவாதிப்பதற்கும், அது தொடர்பாக ஆணைகள் பிறப்பிப்பதற்கும் தடை செய்யுமாறும் கோரியுள்ளது. இம்மனுக்கள் நிலுவையில் உள்ளன.

இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 13.6.2022 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்ட அமைப்பு என்பதைக் குறிப்பிட்டு, மேகதாது அணை திட்டம் பற்றி விவாதிப்பது உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு முரணானது எனவும், இது ஏற்புடையதல்ல எனவும் தெரிவித்ததுடன், ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்திற்கு, மேகதாது அணை திட்ட அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டாம் என ஆணையத்தின் தலைவருக்கு உத்தரவிடுமாறு கோரினார்கள். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சட்டப் பேரவை அனைத்துக் கட்சி தலைவர்கள் குழு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களை 22.6.2022 அன்று நேரில் சந்தித்து, இது குறித்த பொருள் பற்றி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என ஆணையத்திற்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

தமிழ்நாடு அரசு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் அதிகார வரம்புகள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு, கர்நாடக அரசு 18.7.2022 மற்றும் 19.7.2022 அன்று பதில் மனுக்கள் தாக்கல் செய்தது. இவற்றின் மீதான பதில்களைத் தமிழ்நாடு அரசு 23.7.2022 அன்று தாக்கல் செய்தது. கர்நாடக

அரசு மற்றுமொரு மனுவை 8.8.2022 அன்று தாக்கல் செய்தது. காவிரி நீர் மேலாண்மை ஆணையம் தனது பதில் மனுவை 7.9.2022 அன்று தாக்கல் செய்தது. தமிழ்நாடு தனது பதிலை 11.11.2022 அன்று தாக்கல் செய்தது. கர்நாடக அரசின் மனுவிற்கு 22.11.2022 அன்று தமிழ்நாடு அரசு தனது பதிலைத் தாக்கல் செய்தது. இம்மனு விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் 14.10.2022 அன்று நடைபெற்ற தனது 17-வது கூட்டத்தில் மேகதாது அணை திட்டத்தின் விரிவான அறிக்கை பற்றிய பொருளை தனது 18-வது கூட்டத்தில் விவாதிக்க உள்ளதாகத் தெரிவித்ததையடுத்து, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 29.10.2022 அன்று மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலும், தமிழ்நாடு அரசு 2.11.2022 அன்று ஆணையத்திற்கு எழுதிய கடிதங்களிலும், இப்பொருளினை விவாதப் பட்டியலிலிருந்து நீக்குமாறு வலியுறுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகளால், 2.12.2022 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 18-வது கூட்டத்திலும், 10.2.2023 அன்று நடைபெற்ற 19-வது கூட்டத்திலும், மேகதாது திட்டத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை.

மேகதாதுவில் கர்நாடகா அணை கட்டும் முயற்சியை எதிர்த்து, தமிழ்நாடு அரசு சட்டபூர்வமான நடவடிக்கைகள் உட்பட அனைத்து முயற்சிகளையும், தமிழக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க, தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் வெள்ள நீரை திருப்பிவிடும் திட்டங்கள், பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல் மற்றும் செயல்திறனை மேம்படுத்தும் திட்டங்கள் ஆகியவற்றை எதிர்த்து கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு

கர்நாடக அரசு பில்லிகுண்டுலு வரை உள்ள காவிரி வடிநிலத்தில் 483 டி.எம்.சி. அடி நீருக்கு மிகுதியாக பெறப்படும் நீரை உபரி நீராகக் கருதி அதன்மீது முழு உரிமை கோரியும், தமிழ்நாடு அரசு வெள்ள சேதத்தைத் தடுக்க வேண்டி வெள்ள உபரி நீரை வறட்சியான பகுதிகளுக்குத் திருப்பிவிட உத்தேசித்து மேற்கொண்டு வரும் காவிரி–தெற்கு வெள்ளாறு (காவிரி–குண்டாறு இணைப்பின் முதற்கட்டம்) மற்றும் மேட்டூர்–சரபங்கா

2023 மார்ச் 29]

நீரேற்றுப் பாசனத் திட்டம் ஆகியவற்றையும், காவிரி வடிநிலத்தில் கதவணைகள்/தடுப்பணைகள் கட்டுதல், பாசன கட்டமைப்புகளை நவீனப்படுத்தவும், பாசன செயல்திறனை மேம்படுத்தவும் மேற்கொண்டு வரும் திட்டங்கள் (கட்டளை உயர்மட்ட கால்வாய், ராஜவாய்க்கால், நொய்யல் ஆறு மற்றும் கல்லணை கால்வாய் ஆகிய 4 பாசன அமைப்புகள்) ஆகியவற்றை நிறுத்தக் கோரி அசல் மனு ஒன்றினை 19.7.2021 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் வெள்ள பாதிப்புகளை குறைக்கவோ அல்லது நீர்ப் பாசனத் திறனை மேம்படுத்துவதற்காகவோ மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும், இத்திட்டங்கள்மூலம் காவிரி வடிநிலத்தில் பாசனப் பரப்பை அதிகரிக்கும் உத்தேசம் ஏதும் இல்லை என்பதையும் குறிப்பிட்டு தமிழ்நாடு அரசு தனது பதில் மனுவை (Written Statement) 3.1.2022 அன்று தாக்கல் செய்தது. கர்நாடக அரசு இதற்கான பதில் மனுவை (Replication) செப்டம்பர், 2022-ல் தாக்கல் செய்தது. புதுச்சேரி 21.7.2022-ல் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் கர்நாடகா தாக்கல் செய்துள்ள அசல் மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளது. ஒன்றிய அரசு 17.11.2022 அன்று தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் கர்நாடகாவின் கோரிக்கைகள் நியாயமற்றவை என்றும் அந்த மனுவை தள்ளுபடி செய்யவும் வேண்டியுள்ளது. கேரளா இன்னும் அதன் பதில் மனுவை தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் பதில் மனு (Written Statement) மற்றும் அதற்கான பதில் மனுக்களை (Replication) தாக்கல் செய்த பின்னர் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி பெங்களூரு மாநகரக் குடிநீர் தேவையிலிருந்து திருப்பி அளிக்கப்பட வேண்டிய நீரை பெறுதல்

காவிரி நடுவர் மன்றம் காவிரி படுகையில் அமைந்துள்ள பகுதிகளுக்கான குடிநீர் தேவையை மட்டும் கணக்கில் கொண்டு, அத்தேவையில் 20 சதவிகிதம் மட்டும் நுகர்வு நீராக கணக்கிட்டு அதனை மாநிலங்களுக்கான நீர்ப்பங்கீட்டில் ஒதுக்கீடு செய்தது. ஆனால், பெங்களூரு மாநகரின் மூன்றில் இரண்டு பகுதி காவிரி படுகைக்கு வெளியே அமைந்துள்ளபோதிலும், உச்ச நீதிமன்றம் அந்நகரின் மொத்த குடிநீர் தேவையையும் கணக்கில் கொண்டு அதில் 4.75 டி.எம்.சி. அடி நீரை நுகர்வு தேவையாகக் கர்நாடகாவிற்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்தது. உச்ச நீதிமன்றத்தின்

[2023 மார்ச் 29

இத்தீர்ப்பின்படி, பெங்களூரு மாநகரின் குடிநீர் தேவைக்காக காவிரி படுகையிலிருந்து எடுக்கப்படும் நீரில் நுகர்வு தேவைப்போக மீதமுள்ள 80% நீரை சுத்திகரித்து காவிரி படுகைக்கே கர்நாடகா திருப்பி அனுப்ப வேண்டும்.

கர்நாடகா காவிரி படுகைக்கு வெளியில் அமைந்துள்ள பெங்களூரு மாநகரின் 2/3 பகுதிக்கு, காவிரி படுகையிலிருந்து குடிநீருக்காக எடுக்கும் நீரில் நுகர்வு பயன்பாடு போக மீதமுள்ள 80% நீரை காவிரி படுகைக்கே திருப்பி அனுப்புவதில்லை. மாறாக, நுகர்வு தேவை போக மீதமுள்ள நீரை (return flows/regenerated flows) தனக்குரியது என உரிமை கோரி வருகிறது. இப்பிரச்சினைக் குறித்து காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவில் தமிழ்நாடு முறையிட்ட போதும், ஆணையம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை பின்பற்றுமாறு கர்நாடகாவிற்கு எவ்வித அறிவுரையோ அல்லது உத்தரவையோ வழங்கவில்லை. பெங்களூரு மாநகரிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவையும் அதன் தரத்தையும் கண்காணிக்க ஆணையம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, பெங்களூரு மாநகரத்திற்கு அளிக்கப்படும் குடிநீரில் நுகர்வு தேவை போக வெளியேற்றப்படும் மீதமுள்ள 80% நீரை தக்க சுத்திகரிப்பிற்கு பின் காவிரி படுகைக்குத் திருப்பி அனுப்புமாறு கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறும், அவ்வாறு திருப்பி அனுப்பப்படும் நீரின் அளவையும் தரத்தையும் கண்காணிக்குமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு உத்தரவிடுமாறும் கோரி, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 30.1.2023 அன்று ஒரு மனு தாக்கல் செய்துள்ளது.

காவிரி ஆற்றிலும் பெண்ணையாற்றிலும் கர்நாடகா கழிவு நீரை விடுவித்தல்

காவிரி மற்றும் பெண்ணையாறுகளில் பெங்களூரு நகரக் கழிவு மற்றும் தொழிற்சாலைக் கழிவு நீரினை கர்நாடக அரசு விடுவிப்பதால், தமிழ்நாட்டிற்கும், அதன் மக்களுக்கும் ஏற்படக்கூடிய கடுமையான விளைவுகளைத் தடுக்கவேண்டி, தமிழ்நாடு அரசு 2015-ல், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு (OS 2 of 2015) ஒன்றினைத் தாக்கல் செய்தது. இந்த வழக்கில் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின்படி, கர்நாடகா-தமிழ்நாடு எல்லையில் காவிரி மற்றும் பெண்ணையாறு நதிகளில் கர்நாடகா சுத்திகரிக்கப்படாத கழிவு நீரை விடுவிப்பதால்

2023 மார்ச் 29]

மாசுபட்டுள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

இதனிடையே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இருமாநில எல்லைக்கருகில் காவிரி மற்றும் பெண்ணையாற்று நீரின் தரத்தினைத் தொடர்ந்து பரிசோதித்து, கண்காணித்து வருகிறது. இதேபோன்று, மத்திய நீர்வளக் குழுமமும் பிலிகுண்டுலுவில் நீரின் தரத்தினைத் தொடர்ந்து பரிசோதித்து வருகிறது.

காவிரி மற்றும் பெண்ணையாறு நதிகள் மாசுபடுவதை தடுக்க, தமிழ்நாடு அரசு இவ்வழக்கின் போக்கைத் தொடர்ந்து கவனித்து வருகிறது.

2012–2013 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நீரை வழங்காததால் இழப்பீடு கோரி கர்நாடகத்தின்மீது வழக்கு

*2012-2013 பாசன ஆண்டில், அப்போது நடைமுறையிலிருந்த காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணைப்படி, கர்நாடக அரசு, தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு நீரை விடுவிக்காததால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட பயிர் இழப்பு, கால்நடை தீவன இழப்பு, மின் உற்பத்தி இழப்பு ஆகியவற்றிற்காக 1045.70 கோடி ரூபாயும் மற்றும் நடுவர் மன்ற ஆணையை செயல்படுத்தாததற்கு இழப்பீடாக (*Punitive Damages*) 1434 கோடி ரூபாயும் வழங்க கர்நாடக அரசுக்கு உத்தரவிடக்கோரி, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 2013-ல் ஒரு வழக்கினைத் தாக்கல் செய்தது. இவ்வழக்கில் தமிழகத்தின் மூன்று சாட்சிகளின் குறுக்கு விசாரணை 28.9.2018-ல் முடிவுபெற்றது. கர்நாடகத்தின் ஒரு சாட்சியின் குறுக்கு விசாரணை 30.4.2019-ல் முடிவுற்றது. மற்றொரு சாட்சியின் குறுக்கு விசாரணை முடிந்தவுடன் இறுதி விசாரணை நடக்கவுள்ளது.*

2.2. முல்லைப் பெரியாறு அணை

திருவாங்கூர் மகாராஜாவுக்கும், மதராஸ் மாகாண அரசுக்கும் இடையே 29.10.1886-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் "பெரியாறு திட்டம்" செயல்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் காலம் 1.1.1886 முதல் 999 ஆண்டுகளாகும். இத்திட்டத்திற்காக சுமார் 8,000 ஏக்கர் நிலம் குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமாராக 2.20 இலட்சம் ஏக்கர் பாசன நிலம் பயன்பெறுகிறது.ஆண்டொன்றுக்கு சராசரியாக 22 டி.எம்.சி. அடி நீர்

பயன்படுத்தப்படுகிறது. முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக இருப்பினும், அணையின் பாதுகாப்பு பற்றி சில அச்சங்கள் 1979–ல் கேரளா மக்களால் எழுப்பப்பட்டன. அதற்குத் தீர்வு காண, அணையை நவீன தரத்திற்கு கொண்டுவர, மத்திய நீர்வளக் குழுமம் பரிந்துரைத்த சில பணிகளைச் செய்துமுடித்தவுடன் 145 அடி வரையில் முதற்கட்டமாக உயர்த்திக்கொள்ளலாம் என்ற மத்திய நீர்வளக் குழுமப் பரிந்துரைகளை கேரள அரசு ஏற்கவில்லை. அணையின் நீர்மட்டம் எப்பொழுதும் 136 அடியிலேயே இருக்க வேண்டும் என்று கேரள அரசு வலியுறுத்தியதால், இப்பிரச்சினை உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களில் 27.2.2006 அன்று, 142 அடிக்கு நீர் மட்டத்தை உயர்த்திக்கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பினைச் செயல்படுத்த விடாமல் கேரள அரசு அதன் 2003 ஆம் ஆண்டு நீர்ப் பாசனம் மற்றும் நீர்வள பாதுகாப்பு சட்டத்திற்கு திருத்தங்களை மேற்கொண்டு அதில் முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவு 136 அடி என நிர்ணயித்தது. இந்தத் திருத்திய சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கில் (O.S No.3 of 2006), உச்ச நீதிமன்றம் 7.5.2014 அன்று தீர்ப்பினை வழங்கியது. இத்தீர்ப்பில், 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், நீரியல் பாதுகாப்பு, கட்டுமான பாதுகாப்பு அடிப்படையிலும் மற்றும் நிலநடுக்கம் ஏற்பட்டாலும், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக இருக்கும் என திட்டவட்டமாக கூறப்பட்டுள்ளது. கேரள அரசின் திருத்திய சட்டம், முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையில், அரசியல் சாசனத்திற்கு முரணானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு, 142 அடிவரையில் நீர் மட்டத்தை உயர்த்திக்கொள்ளலாம் எனவும், அணை முழு கொள்ளளவு + 152 அடி வரை நீரை தேக்குவதற்கு மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளலாம் எனவும் புதிய அணை கட்ட வேண்டும் என்ற கேரள மாநிலத்தின் நிலைபாட்டினைத் தமிழகத்தின்மீது திணிக்க முடியாது எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வப்போது அணையினை ஆய்வு செய்து பரிந்துரை செய்வதற்கும், மேற்பார்வைக் குழுவை அமைக்கவும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

2023 மார்ச் 29]

*அணையின் நீர்மட்டம் 142 அடியை 21.11.2014 அன்று, சுமார் 35 வருடங்களுக்கு பிறகு அடைந்தது. அதன்பிறகு 7.12.2015 மற்றும் 15.8.2018 ஆகிய தேதிகளில் அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டியது. மத்திய நீர் குழுமத்தால் இறுதி செய்யப்பட்ட அணையின் கால வாரியான நீர்மட்டம் (*Rule Curve*) செயல்படுத்தப்பட்டபின், 2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு, நான்காவது முறையாக 30.11.2021 அன்று அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டியது. அன்றிலிருந்து தொடர்ந்து 18 நாட்கள் 142 அடியில், அணை பாதுகாப்பாக இருந்தது. அணையின் நீர்மட்டம் 142 அடியை, ஐந்தாவது முறையாக, 27.12.2022 அன்று அடைந்தது. அனைத்து வகையிலும் அணை பாதுகாப்பாக இருந்தது.*

கேரள தனி நபர்களால் தாக்கல் செய்யப்பட்ட W.P. No. *880* of *2020-ல் உச்ச நீதிமன்றம் 8.4.2022 அன்று வழங்கிய ஆணையின்படி, இரண்டு தொழில்நுட்ப வல்லுநர்கள், தலா ஒரு நபர், தமிழ்நாடு மற்றும் கேரளாவிலிருந்து, மேற்பார்வைக் குழுவில் சேர்க்கப்பட்டு, மாற்றி அமைக்கப்பட்டது. மேற்பார்வைக் குழு கூட்டம் இதுவரை, 15 முறையும் மற்றும் ஒரு இடைக்கால கூட்டம் 18.8.2022 அன்று நடைபெற்றன.*

சிறப்பு பராமரிப்புப் பணி

*உச்ச நீதிமன்றம் 7.5.2014 அன்று வழங்கிய தீர்ப்பினைத் தொடர்ந்து அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் (2010-2012) பரிந்துரையின்படி அணையின் உட்பகுதியில் சிமென்ட் கலவையுடன் இரசாயனக் கலவைகளைச் சேர்த்து உட்செலுத்தி பலப்படுத்துதல் தொடர்பாக, விவரக்குறிப்புகள் மத்திய மண் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையத்திடம் (*CSMRS*) ஆலோசனை மற்றும் மத்திய நீர் குழுமத்தின் ஒப்புதலும் பெறப்பட்டு அதற்கான மதிப்பீட்டிற்குக் தமிழக அரசால் ரூ.9.81 கோடிக்கு 21.11.2019 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனினும், கேரள அரசு இப்பணி தொடர்பான பொருட்கள் மற்றும் இயந்திரங்களை கேரள வன சாலை வழியாக எடுத்துச் செல்வதற்கு பிப்ரவரி 2020 முதல் பலமுறை அணுகியும் ஒப்புதல் வழங்கவில்லை. இது தொடர்பாக, இயக்குநர், மத்திய நீர் குழுமம் 28.7.2021 அன்று கேரள அரசின் கூடுதல் தலைமைச் செயலாளரை தேவைப்படும் உரிய அதிகாரிகளிடம் அனுமதியைப் பெற கோரியுள்ளார். ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகள் தொடங்கப்படும். தமிழ்நாடு அரசால் 2017–ல் தாக்கல் செய்யப்பட்ட செயல்படுத்துவதற்கான மனுவில் (*Execution

Petition), 27.11.2021–ல் ஒரு கூடுதல் மனு (I.A. No. 154780/2021) தாக்கல் செய்யப்பட்டது. அதில் இப்பணிக்குத் தேவையான பொருட்கள் மற்றும் இயந்திரங்களை எடுத்துச் செல்வதற்குக் கேரள அரசிற்கு கட்டளை இடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வழிந்தோடியின் பக்கசுவரின் இடது புறத்தில் உள்ள மண் மேட்டை பழுது பார்ப்பதற்காக ரூ.9.00 கோடிக்கு, தமிழ்நாடு அரசு 4.1.2021 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. கேரள அரசின் ஒத்துழையாமை அணுகுமுறையால் இப்பணியையும் மேற்கொள்ள முடியவில்லை.

கேரள தனிநபர்களால் தாக்கல் செய்யப்பட்ட W.P. No.880 of 2020–ல், தமிழ்நாடு அரசு ஒரு இடைக்கால மனுவை (I.A. No. 174262 of 2022) 14.11.2022–ல், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதில் கேரள மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்களோ, பொருட்கள் மற்றும் இயந்திரங்களை வல்லக்கடவு முல்லைப் பெரியாறு அணை வனச் சாலை வழியாக, அணைப் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தமிழ்நாட்டிற்கு அனுமதி அளிக்குமாறு ஆணையிட வேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வனச் சாலை வழியாக பொருட்கள் எடுத்துச் செல்வதற்கு, கேரளா அனுமதி அளிக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இப்பணியை மேற்கொள்ள அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

18.8.2022 அன்று நடைபெற்ற இடைக்கால மேற்பார்வைக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து, தலைவர், மேற்பார்வை குழு 22.8.2022 தேதியிட்ட தனது கடிதத்தில் இருமாநில தலைமைச் செயலர்களைத் தொடர்பு கொண்டு, இரு மாநில நன்மை கருதி, நீண்ட நாட்களாக நிலுவையிலுள்ள பிரச்சினைகள், அதாவது 15 மரங்கள் வெட்டுவது, மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகளை தீர்க்குமாறு கேட்டுக் கொண்டார். தமிழ்நாட்டின், தலைமைச் செயலர் மற்றும் கூடுதல் தலைமைச் செயலர் கேரளாவில் உள்ள தனது இணை அதிகாரிகளை 25.8.2022 மற்றும் 20.10.2022 தேதிகளில் தொடர்பு கொண்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக 12.12.2022 அன்று சென்னையில் இரு மாநில தலைமைச் செயலர்கள் மட்டத்தில் கூட்டம் நடைபெற்றது. அப்போது கேரளாவின் தலைமைச் செயலர், தமிழ்நாட்டின்

2023 மார்ச் 29]

கோரிக்கையை ஏற்று விரைவில் பதில் அளிப்பதாகக் கூறினார். தமிழ்நாட்டின் தலைமைச் செயலர், கேரளாவின் தலைமைச் செயலருக்கு 23.12.2022 அன்று எழுதிய கடிதத்தில், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பணிகளை மேலும் தாமதிக்காமல் மேற்கொள்வதற்கு, தேவையான அனுமதிகளை விரைவில் வழங்க ஏற்பாடுகள் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இதுதொடர்பான பதில் கேரளாவிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அணையில் தற்போதுள்ள கருவிகள் மற்றும் பூகம்பத்தைப் பற்றி அறிவிப்பதற்காக Seismograph *மற்றும்* Accelerograph *பூகம்ப கருவிகளை நிறுவுவதற்கு ரூ.99.95 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு, 30.6.2020 தேதியிட்ட அரசாணையில் தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியது. இப்பணி மத்திய அரசின், தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் (*NGRI*) ஹைதராபாத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது. கருவிகள் நிறுவுதல் பணி தற்போது நடைபெற்று வருகிறது. கருவிகள் விரைவில் நிறுவப்படும்.*

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முழுக் கொள்ளளவான 152 அடி வரை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய எஞ்சிய பலப்படுத்தும் பணிகள்

மத்திய நீர்வளக் குழுமம், 2000-ல் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, பேபி அணை மற்றும் மண் அணையைப் பலப்படுத்த பரிந்துரை செய்தது. 27.2.2006 தேதியிட்ட உச்ச நீதிமன்றத்தின் ஆணையிலும் அவற்றை நிறைவேற்ற ஆணையிடப்பட்டது. 2010-ல் அமைக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவும் மத்திய நீர்குழுமம் மற்றும் வல்லுநர் குழு வழங்கிய பரிந்துரைகளை வலியுறுத்தியது. உச்ச நீதிமன்றத்தின் 7.5.2014 நாளிட்ட ஆணையிலும், 27.2.2006 அன்று வழங்கப்பட்ட உத்தரவிலும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இதற்காக தமிழ்நாடு அரசு 7.85 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. பேபி அணையை வலுப்படுத்த 23 (தற்போது 15) மரங்களை அகற்ற வேண்டியுள்ளது. அனுமதி தேவையில்லாத மற்ற பணிகள் முடிவடைந்துள்ளன.

மரங்களை அகற்றுவதற்கு உரிய முறைப்படி வன அனுமதி பெற நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், கேரள அரசு ஒத்துழைக்காததால், அனுமதி பெறுவது தாமதம் ஆகி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 17.6.2021–ல் மாண்புமிகு

[2023 மார்ச் 29

பாரதப் பிரதமருக்கு அளித்த கோரிக்கை மனுக்களில் முல்லைப் பெரியாறு, பேபி அணையை பலப்படுத்துவதற்குத் தேவையான மரங்களை அகற்ற வனத் துறை ஒப்புதல் அளிக்க கேரள அரசு, மேலும் தாமதிக்காமல் இருக்க சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாறுதல் அமைச்சகம் கேரள அரசுக்கு அறிவுரை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின், மாண்புமிகு ஜல் சக்தியின் அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 6.7.2021 அன்று அளித்த கோரிக்கை மனுவில், 23 மரங்களை (தற்போது 15) வெட்டுவதற்கு, ஜல் சக்தி அமைச்சகம் கேரள அரசிற்கு உடனடியாக அறிவுரை வழங்குமாறும், வனச் சாலையை கேரளா சரி செய்வதற்கு தமிழ்நாடு அரசு அதற்குண்டான செலவை ஏற்றுக்கொள்ளும் என்றும் அல்லது சரி செய்வதற்கு தமிழ்நாடு அரசுக்கு அனுமதி அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

கேரள அதிகாரிகளுடன் கூடுதல் தலைமைச் செயலாளர் மட்டத்தில் 17.9.2021 அன்று காணொளி காட்சிமூலம் நடைபெற்ற கூட்டத்திற்குப் பிறகு, துணை இயக்குநர், கேரளா 6.11.2021 அன்று, முதன்மைத் தலைமை வன பாதுகாவலர், 15 மரங்களை வெட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளதாக கடிதம் எழுதியிருந்தார். ஆனால், கேரள அரசு, அரசாணை எண் 23/2021/F&WLD நாள் 11.11.2021-ல், ஒப்புதல் அளித்ததை இரத்து செய்து ஆணையிட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட செயல்படுத்துவதற்கான மனுவில் (I.A. 28 of 2017) இது தொடர்பாக ஒரு கூடுதல் மனுவை தமிழ்நாடு அரசு 27.11.2021 அன்று தாக்கல் செய்தது. அதில், மரங்களை வெட்டுவதற்கு கேரள அரசு இரத்து செய்த அனுமதியை மீண்டும் வழங்குமாறு கேரளாவிற்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், 14.11.2022 அன்று தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுவில் (I.A. No. 174262 of 2022 in W.P. No. 880 of 2020), பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு, 15 மரங்களை அகற்ற 5.11.2021 அன்று அளித்த அனுமதியை 11.11.2021 அன்று கேரள அரசால் தன்னிச்சையாக திரும்பப் பெறப்பட்டது. இவ்வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

இதற்கிடையே, இணைச் செயலாளர், ஜல் சக்தி அமைச்சகம், 8.11.2021 தேதியிட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசு மேற்கொள்ளவிருக்கும் பேபி அணை மற்றும் மண் அணையை

2023 மார்ச் 29]

பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்குமாறு கேரள அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். இதற்குக் கேரள அரசு மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்களோ முல்லைப் பெரியாறு அணையில் பலப்படுத்தும் பணிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொள்வதற்கு, எப்போதும் கேரள அரசு தடையாக இருந்ததில்லை என்று 16.9.2022 அன்று பதில் அளித்தது. இதற்கு, 20.10.2022 அன்று தமிழ்நாடு அரசு, ஜல் சக்தி அமைச்சகத்திற்கு எழுதிய கடிதத்தில், கேரள அரசின் தொடர்ச்சியான இடையூறு மனப்பான்மைக்கு சான்றாக, அனைத்து பிரச்சினைகளுக்கும் (issues) முக்கிய காலவரிசை நிகழ்வுகளை (Chronological events) மேற்கோள் காட்டி, உச்ச நீதிமன்ற ஆணையை தமிழ்நாடு அரசு செயல்படுத்த, கேரள அரசின் தலைமைச் செயலாளர், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

12.12.2022 அன்று இரு மாநில தலைமைச் செயலர் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் 23.12.2022 அன்று கேரள தலைமைச் செயலாளர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், நீண்ட காலமாக நிலுவையிலுள்ள எஞ்சிய பராமரிப்பு பணிகளுக்கு அனுமதியளிக்க ஆவன செய்யுமாறு கோரினார். இது தொடர்பாக, ஒரு நினைவூட்டல் கடிதம் மீண்டும் 22.2.2023 அன்று அனுப்பப்பட்டது. பேபி அணையின் கீழ்ப்புறத்தில் உள்ள 15 மரங்களை வெட்டுவதற்கு, விரைவில் தீர்வு காண தமிழ்நாடு கூடுதல் தலைமைச் செயலாளர், 22.12.2022 தேதியிட்ட கடிதத்தில், கேரளாவின் கூடுதல் தலைமைச் செயலாளரை தொடர்பு கொண்டு, நேரிலோ அல்லது காணொளி காட்சிமூலம் இருவருக்கும் வசதியாக இருக்கும் நாளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இதைத் தொடர்ந்து 20.1.2023 அன்று ஒரு நினைவூட்டல் கடிதமும் எழுதியுள்ளார். கேரள அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், துணை இயக்குநர், மத்திய நீர்வளக் குழுமம், 9.3.2023 தேதியிட்ட கடிதத்தில், எஞ்சிய பலப்படுத்தும் பணிகளுக்கும், வனச் சாலையை செப்பனிடவும், தேவையான கட்டுமானப் பொருட்களை கொண்டு செல்ல தமிழ்நாட்டிற்கு வேண்டிய அனுமதி அளிக்குமாறு கேரள தலைமைப் பொறியாளர், பன் மாநில நதி நீர்ப் பிரிவு, அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே தமிழ்நாடு அரசின் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர், 3.3.2022 அன்று கேரள அரசின் நீர்வளத்

துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் மரங்களை வெட்டுவதற்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்த அரசாணையைத் தள்ளுபடி செய்திட வலியுறுத்தியுள்ளார். வனத் துறையின் அனுமதி பெற்றவுடன் பேபி அணை மற்றும் மண் அணையை பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு, அணையின் நீர்மட்டத்தை 152 அடி வரை உயர்த்துவதன்மூலம், தமிழ்நாட்டின் உரிமை மற்றும் முல்லைப் பெரியாறு அணையின் நீரை சார்ந்து இருக்கும் விவசாயிகளின் நலன் கருதி, தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

கேரள அரசால், முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பரப்புப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பெரும் வாகன நிறுத்தத்திற்கான கட்டுமானம்

கேரள அரசு, முல்லைப் பெரியாறு அணையின் நீர்பரப்பு உள்ளடக்கிய பகுதியில் பெரும் வாகன நிறுத்த திட்ட வழக்கை விசாரித்த தேசிய பசுமைத் தீர்ப்பாயம் 15.11.2017 நாளிட்ட ஆணைப்படி வாகனம் நிறுத்த திட்டத்தை பொறுத்தவரையில், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் அனுமதி வழங்கியுள்ளதால், வன பாதுகாப்புச் சட்டத்தின் அனுமதி தேவையில்லை என்று ஆணையிட்டுள்ளது. இந்த அனுமதியை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில், சிவில் மேல் முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளது. உச்ச நீதிமன்றம் 4.12.2017 அன்று கேரள அரசு எவ்வித நிரந்தர கட்டுமானங்களையும் மேற்கொள்ளக் கூடாது என்ற உத்தரவை பிறப்பித்தது. கேரள அரசு நிரந்தர கட்டுமான பணிகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது 8.5.2019-ல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்குகள், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

இது தவிர, கேரள அரசின் வாகன நிறுத்த திட்டம் மற்றும் குத்தகை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டி, தமிழ்நாடு அரசு 26.9.2014 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு சிவில் வழக்கினைத் தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்க, அரசு தேவையான முயற்சிகளை எடுத்து வருகிறது.

2023 மார்ச் 29]

2.3.பாலாறு நதி நீர் பிரச்சினை

பன் மாநிலங்களுக்கிடையே பாயும் நதிகளில் ஒன்றான பாலாறு, கர்நாடக மாநிலத்தில் கோலார் மாவட்டத்தில் உற்பத்தியாகி, ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம் வழியாக, தமிழ்நாட்டிலுள்ள வேலூர், ராணிபேட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் வழியாக சென்று வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு மாநிலங்கள், 1892 மதராஸ்–மைசூர், ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டவை. ஒப்பந்தத்தின் அட்டவணை- A-ன்படி, 15 முக்கியமான பன் மாநில நதிகளின் பட்டியலில், பாலாறு ஒன்றாகும்.

ஆந்திர அரசு, 1892 ஆம் ஆண்டைய மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தை மீறும் வகையில் சித்தூர் மாவட்டத்தில் குப்பம் வட்டத்திலுள்ள கணேசபுரத்தில் பாலாற்றின் குறுக்கே சுமார் 0.6 டி.எம்.சி. அடி கொள்ளளவிற்கு நீரைத் தேக்கும் வகையில் ஓர் அணையினை கட்ட முயற்சித்ததை எதிர்த்து தமிழ்நாடு அரசு 2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை நிறுத்தக் கோரி ஒரு வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இவ்வழக்கில் இரு மாநில சாட்சியாளர்களது குறுக்கு விசாரணை, மே 2018-ல் முடிவடைந்துள்ளது. இவ்வழக்கின் விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு, சித்தூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஏற்கெனவே இருந்த தடுப்பணைகளின் உயரத்தை உயர்த்துவதற்கும், சீரமைப்பதற்கும் மற்றும் புதிய தடுப்பணைகளைக் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டபோது, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 2016 ஆம் ஆண்டில் மற்றுமொரு வழக்கினைத் தாக்கல் செய்தது. பாலாற்றிலிருந்து தமிழ்நாடு இயற்கையாகப் பெறப்படவேண்டிய நீரினை பெறுவதற்காக இத்தடுப்பணைகளின் உயரத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காக தமிழக அரசு 2017, 2018 மற்றும் 2019–ல் இடைக்கால மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

பாலாற்றின் நீரை நம்பி வாழும் வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட

[*2023 மார்ச் 29*

விவசாயிகளின் குடிநீர் தேவை மற்றும் பாசனத் தேவைகளைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது.

2.4. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் ஒப்பந்தம் மறு ஆய்வு

மேற்கு நோக்கி ஓடுகின்ற எட்டு ஆறுகளில், ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், அதன் கிளை ஆறுகளான பெருவாரிப்பள்ளம் மற்றும் துணக்கடவு மற்றும் ஆழியாறு மற்றும் பாலாறு ஆகிய ஆறுகளில் கிடைக்கக்கூடிய நீரைப் பயன்படுத்தும் வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1956-1961) கேரள அரசின் இசைவுடன், தமிழ்நாடு அரசினால், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் உருவாக்கப்பட்டது. கேரளா மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கிடையே, மேற்குறிப்பிட்டுள்ள ஆறுகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீரை இரு மாநிலங்களின் மின் உற்பத்தி, பாசனம், குடிநீர் வழங்கல், தொழிற்சாலை மற்றும் இதர பயன்பாடுகளுக்காக, 9.11.1958 முதல் முன் தேதியிட்டு 29.5.1970 அன்று பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தால் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் ஆகிய வட்டங்கள் பயனடைகின்றன. கேரள மாநிலத்தின் பாலக்காடு மற்றும் திருச்சூர் மாவட்டங்களும் பயனடைகின்றன. இந்த ஒப்பந்தம் 9.11.1988-லும் அதன் பிறகு ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்கும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்வதற்காக இதுவரையில் 27 கூட்டங்கள் பல்வேறு நிலைகளில் தமிழ்நாடு–கேரள அரசுகளிடையே நடைபெற்றுள்ளன. இறுதியாக, 17.9.2021 அன்று காணொளிக் காட்சிமூலம் நடைபெற்ற பன் மாநில கூட்டத்தில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில், ஆனைமலையாறு திட்டம் மற்றும் நீராறு நல்லாறு திட்டம் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளும் விவாதிக்கப்பட்டன, அதன் குறிப்பு பின்வருமாறு:

ஆனைமலையாற்றிலிருந்து 2.5 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிற்கு திருப்பும் திட்டம் மற்றும் நீராறு-நல்லாறு பல்நோக்கு நேர் இணைப்புத் திட்டம்

ஆனைமலையாற்றிலிருந்து பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திற்கு 2.5 டி.எம்.சி. அடி நீரை திருப்புவதற்கு பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தப்படி தமிழ்நாட்டிற்கு உரிமை உண்டு.

2023 மார்ச் 29]

ஆனால், கேரள அரசு அதன் இடமலையாறு திட்டம் முடிவு பெறவில்லை எனத் தொடர்ந்து காரணம் காட்டி, இந்த நீரைத் திருப்ப அதன் இசைவைத் தரவில்லை. இதற்காக ஒரு துணை ஒப்பந்தம் போதுமானது. மேலும், ஆனைமலையாறு திட்டம் குறித்து 12.12.2019 அன்று சென்னையிலும், 11.9.2020 அன்று திருவனந்தபுரத்திலும் மற்றும் காணொளிக் காட்சி வாயிலாக 17.9.2021 அன்று நடைபெற்ற பன் மாநில கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது. கேரள அரசு, ஆனைமலையாற்றின் கிளை ஆறான இட்டலியாற்றின் குறுக்கே ஒரு சிற்றணையை அமைத்து தமிழ்நாட்டிற்கு 2.5 டி.எம்.சி. அடி நீரை திருப்பும் தமிழ்நாட்டின் திட்டத்தை பரிசீலிக்கலாம் எனத் தெரிவித்துள்ளது.

நீராறு-நல்லாறு பல்நோக்கு நேர் இணைப்புத் திட்டம், மேல் நீராறு சிற்றணையிலிருந்து சுரங்க வழியாக பாசனத்திற்காக நீரை நேரடியாக நல்லாற்றுக்கு கொண்டு செல்லவும், நல்லாற்றின் குறுக்கே 7 டி.எம்.சி. அடி நீரைத் தேக்க ஒரு நீர்த்தேக்கம் கட்டவும், மற்றும் நீர் மின் உற்பத்தி செய்ய பயன்படுத்தவும் வழிவகை செய்யும் திட்டமாகும். தமிழ்நாடு அரசு, இந்த நேர் இணைப்புத் திட்டம்மூலம் நீராறு அணையிலிருந்து சோலையாறு அணை, பரம்பிக்குளம் அணை வழியாக திருமூர்த்தி அணைக்கு சமமட்டக் கால்வாய்மூலம் நீரைக்கொண்டு செல்லும் தற்போதைய பாதையில் ஏற்படும் நீர் இழப்பு குறையும் என்பதால் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியது. நீராறு-நல்லாறு திட்டம் குறித்து 12.12.2019 அன்று சென்னையில், 11.9.2020 அன்று திருவனந்தபுரத்தில் மற்றும் காணொளிக் காட்சி வாயிலாக 17.9.2021 அன்று நடைபெற்ற பன் மாநில கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது. திட்டம் பற்றிய தொழில்நுட்பத் தகவல்கள், புள்ளிவிவரங்கள் கேரள அரசுக்கு 8.2.2021 அன்று அளிக்கப்பட்டுள்ளன. காணொளிக் காட்சி வாயிலாக 17.9.2021 அன்று நடைபெற்ற பன் மாநில கூட்டத்தில் கேரள மாநிலத்திற்கு மணக்கடவு சிற்றணையில் வழங்கப்படுகின்ற நீரின் பங்கை 2.5 டி.எம்.சி. அடியிலிருந்து 3 டி.எம்.சி. அடி கூடுதலாக வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்தது.

17.9.2021 அன்று நடைபெற்ற பன் மாநில கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, இரு திட்டங்களுக்கான தொழில்நுட்ப விவரங்களுடன் இரு மாநிலங்களுக்கும் கிடைக்கக்கூடிய பலன்களை எடுத்துரைத்து தீர்வு காண ஒரு தொழில்நுட்ப துணைக் குழுவினை 1.10.2021 அன்று தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

கேரள அரசிடம் இருந்து பதில் எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டவற்றுக்காக கேரள அரசுடன் தமிழ்நாடு அரசு தொடர்பு கொண்டுவருகிறது. தொழில்நுட்பத் துணைக் குழு 20.10.2021 மற்றும் 3.8.2022 ஆகிய தேதிகளில் இரண்டு கூட்டங்களை நடத்தி தொழில்நுட்பப் பிரச்சினைகளை கேரளாவுடன் தகுந்த வழியில் தீர்ப்பதற்குண்டான கலந்துரையாடல் நடத்தியது.

கேரள அரசின் ஒப்புதலைப் பெற்று இவ்விரு திட்டங்களின் அறிக்கை விரைவில் தயாரிக்கப்பட்டு மற்றும் இத்திட்டம் நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் (Necessary Clearances) மேற்கொண்டு ஆனைமலையாறு மற்றும் நீராறு-நல்லாறு திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட பன் மாநில ஒப்பந்த மறு ஆய்வு மற்றும் ஆனைமலையாறு மற்றும் நீராறு-நல்லாறு திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்த, தமிழ்நாடு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, கேரள அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

2.5. நெய்யாறு பாசனத் திட்டம்

நெய்யாறு பாசனத் திட்டம் இரு கட்டங்களாக திருவாங்கூர்–கொச்சி அரசால் திட்டமிடப்பட்டு இரண்டாம் ஐந்தாண்டு திட்ட காலமான 1956-1961-ல் ஒப்புதல் பெற்று கட்டப்பட்டது. அதன்பிறகு 1956 ஆம் ஆண்டு, மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டதால் விளவங்கோடு வட்டத்தில் இத்திட்டத்தின் கீழுள்ள 9,200 ஏக்கர் பாசனப் பரப்பானது தமிழ்நாட்டின், கன்னியாகுமரி மாவட்டத்துடன் இணைந்தது. மத்திய அரசு மற்றும் கேரள அரசின் இசைவோடு, மேற்கூறிய விவசாய நிலங்களுக்கு, பாசன வசதிக்காக, விளவங்கோடு பகுதியில் உள்ள கால்வாய்ப்பணிகளைத் தமிழ்நாடு அரசு செய்தது. இத்திட்டம் 1965 ஆம் ஆண்டிலிருந்து செயல்பாட்டில் இருக்கிறது. கேரள அரசு, மார்ச், 2004 முதல் தமிழ்நாட்டிற்கு நீர் விடுவிப்பதை நிறுத்தி வைத்தது. தமிழ்நாட்டிற்கு நீர் விடுவிப்பதற்காக இரு தரப்பிலும் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 2012 ஆம் ஆண்டு ஓர் அசல் வழக்கைத் தாக்கல் செய்தது.

2023 மார்ச் 29]

தமிழக சாட்சியின் குறுக்கு விசாரணை மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் 16.12.2022 அன்று முடிந்தது. கேரளாவின் சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை விரைவில் நடக்க உள்ளது. நெய்யாறு அணையில் இருந்து தண்ணீரை பெறவும், விளவங்கோடு வட்ட விவசாயிகளின் நலனைக் காக்கவும், தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

2.6. செண்பகவல்லி அணையை சீரமைத்தல்

கேரள எல்லையில் பெரியாறு வடிநிலத்தின் மேற்பகுதியில் புளியம்பட்டிதோடு மற்றும் சொக்கம்பட்டிதோடு ஆகிய இரு ஓடைகள் கூடுமிடத்தில் தமிழகம் நோக்கி தண்ணீரை திருப்பிவிட ஏதுவாக, தமிழ்நாட்டின் மேற்கு எல்லைக்கு அருகில் செண்பகவல்லி அணை கட்டப்பட்டது. இந்த அணை சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பாட்டில் இருந்து வருகிறது. இந்த அணையிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டத்தில் உள்ள முக்கியமான இரு ஏரிகளான குலசேகரப்பேரி மற்றும் இராசிங்கப்பேரி ஆகிய ஏரிகளுக்கு சுமார் 4400 அடி (1341 மீட்டர்) நீளமுள்ள கன்யாமதகு கால்வாய் வழியாக ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள ஏரிகளுக்கு (Chain of Tanks) நீரைத் திருப்பி விடப்படுகிறது. இதனால், தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள சுமார் 10,924 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. தமிழ்நாடு அரசு செண்பகவல்லி அணைக்கட்டை சீரமைப்பதற்காகக் கேரள அரசின் ஒப்புதலை வழங்க தொடர்ந்து கோரி வருகிறது. செண்பகவல்லி அணை மற்றும் கன்யாமதகு கால்வாயைச் சீரமைக்கும் பணியினை விரைவில் மேற்கொள்ள வேண்டி ரிட் மனு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு இவ்வழக்கிற்கான பதிலினைத் தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலனைக் காக்கவும், தீர்வு காணவும், தமிழ்நாடு அரசு இனிவரும் காலங்களில் பன் மாநில நதி நீர் பிரச்சினைக் குறித்து நடத்தப்படும் கூட்டங்களில் இப்பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்.

2.7. பெண்ணையாறு

பெண்ணையாறு, கர்நாடக மாநிலத்தில் உள்ள நந்திதுர்க் மலையில் உற்பத்தியாகி கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் வழியாகச் சென்று

[2023 மார்ச் 29

வங்காள விரிகுடாவில் கலக்கின்றது. பெண்ணையாறு ஒரு பன் மாநில நதியாகும். 1892 ஆம் ஆண்டைய மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தை மீறும் வகையில் கர்நாடக அரசு இந்நதியின் துணை நதியான மார்க்கண்டேய நதியின் குறுக்கே அணை கட்டுதல், பெண்ணையாற்றிலிருந்து நீரை திருப்புவதற்கான கட்டுமானங்களை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதை எதிர்த்து தமிழ்நாடு அரசு 2018-ல் உச்ச நீதிமன்றத்தில் ஓர் அசல் வழக்கினை (O.S. No. 1/2018) இடைக்கால மனுவுடன் தாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த இடைக்கால மனுவின்மீது (I.A.No.95384/2019) உச்ச நீதிமன்றம் 14.11.2019 அன்று பெண்ணையாறு நதி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஒரு நடுவர் மன்றத்தை அமைக்க ஒன்றிய அரசை அணுகுமாறு தீர்ப்பு வழங்கியது. தமிழ்நாடு அரசு, நடுவர் மன்றத்தை அமைக்குமாறு 30.11.2019 அன்று ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தைக் கேட்டுக்கொண்டது. மேலும், உச்ச நீதிமன்றத்தில், கர்நாடக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களின் தற்போதைய நடைமுறை நிலைமையே தொடர வேண்டும் என உத்தரவிடக் கோரி, தமிழ்நாடு அரசு ஓர் இடைக்கால மனுவினை (I.A.No.193417/2019), 16.12.2019 அன்று தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகம், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களுக்கிடையே பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காக, மத்திய நீர் குழுமத்தின் தலைவரின் தலைமையில் ஓர் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக் குழுவை ஜனவரி, 2020-ல் அமைத்தது. இக்குழுவின் இரு கூட்டங்களிலும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. அதன்பின் 31.7.2020 அன்று தனது இறுதி அறிக்கையில், நடுவர் மன்றத்தை ஜல் சக்தி அமைச்சகம் அமைக்கலாம் என பரிந்துரைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசை 21.11.2020. 19.2.2021 மற்றும் 29.6.2021 தேதியிட்ட கடிதங்களிலும் மற்றும் 6.7.2021 அன்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களிடம் அளித்த கோரிக்கை மனுவிலும், விரைவில் நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெண்ணையாற்றின் வடிநில மாநிலங்களின் நீர்வளத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர்களுடன் ஒன்றிய அரசின் நீர்வளத்

2023 மார்ச் 29]

துறையின் செயலாளர் தலைமையில் 1.9.2021 அன்று கூட்டம் நடைபெற்று இப்பிரச்சினைக் குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவிற்கு இடையே மேலும் ஒரு கூட்டம் நடத்தப்படலாம் என கருதப்பட்டது. கர்நாடகா நடுவர் மன்றம் அமைக்கப் பெறுவதற்கு 13.10.2021 அன்று எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மேலும் காலதாமதத்தை தவிர்த்து, விரைவில் ஒரு நடுவர் மன்றத்தை அமைக்குமாறு தமிழ்நாடு அரசு, 1.11.2021, 20.12.2021, 11.3.2022 மற்றும் 9.5.2022 அன்று ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்திடம் வலியுறுத்தியுள்ளது.

ஒன்றிய அரசு நடுவர் மன்றம் அமைப்பதைத் தாமதப்படுத்தியதால் 15.7.2022 அன்று கூடுதல் மனு ஒன்றினை தமிழ் நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்தது. ஒன்றிய அரசின் தரப்பில் 14.12.2022 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் நடுவர் மன்றத்தை அமைப்பதற்கு 6 மாதம் கால அவகாசம் கோரப்பட்டது. உச்ச நீதிமன்றம் 14.12.2022 தேதியிட்ட ஆணையில் ஒன்றிய அரசிற்கு நடுவர் மன்றத்தை அமைக்க 3 மாதம் கால அவகாசம் வழங்கி உத்தரவிட்டது.

19.1.2023 அன்று உச்ச நீதிமன்றம் தனது 14.12.2022 தேதியிட்ட ஆணையை வலியுறுத்தியது. 5.4.2023 அன்று வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்குறிப்பிட்ட உச்ச நீதிமன்ற ஆணையை குறிப்பிட்டு 19.2.2023 தேதியிட்ட கடிதத்தில் ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்திடம் நடுவர் மன்றம் விரைவில் அமைக்க வலியுறுத்தியது. ஒன்றிய அரசு நடுவர் மன்றத்தை விரைவில் அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பெண்ணையாறு வடிநில விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

2.8. நதி நீர் இணைப்பு

2.8.1. கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு—பாலாறு-காவிரி இணைப்பு

தமிழ்நாடு அரசு, தீபகற்ப நதிகள் இணைப்பு திட்டத்தில், மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவிரி-

வைகை–குண்டாறு நதிகளை இணைக்கும் திட்டங்களை செயல்படுத்த, ஒன்றிய அரசையும், உச்ச நீதிமன்ற 27.2.2012 தேதியிட்ட தீர்ப்பின்படி ஒன்றிய அரசு அமைத்துள்ள சிறப்புக் குழுவையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்த இணைபிற்கான சாத்தியகூறு அறிக்கையை தேசிய நீர் மேம்பாட்டு முகமை (NWDA) 2004 ஆம் ஆண்டு தயாரித்தது.

இந்த தீபகற்ப நதிகள் திட்டத்தை எதிர்நோக்கி, தமிழ்நாடு அரசு, 2008 ஆம் ஆண்டிலேயே, காவிரியின் குறுக்கே கட்டளை கதவணை (Barrage) கட்டும் பணியைத் தொடங்கி, 2014-ல் முடித்தது. மகாநதி-கோதாவரி இணைப்பு இறுதி செய்யப்படுவதில் தாமதமாகி வந்ததால், தேசிய நீர் மேம்பாட்டு முகமை முதல் கட்டமாக, கோதாவரி நதியை காவிரியுடன் இணைக்க உத்தேசித்து விரிவான திட்ட அறிக்கை ஏப்ரல் 2021-ல் தயாரித்து சம்மந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தை அறிய அனுப்பியது.

தமிழ்நாடு தண்ணீர் பற்றாக்குறை மாநிலம் என்பதால், தமிழ்நாட்டிற்கு வழங்க உத்தேசித்துள்ள நீரின் அளவை 84 டி.எம்.சி. அடியிலிருந்து 200 டி.எம்.சி. அடியாக முதல் கட்டத்திலேயே உயர்த்தியும், நீரின் தேவை அதிகமுள்ள நிலங்கள் பயன்பெறும் வகையிலும் மற்றும் நீர் மேலாண்மை செய்ய ஏதுவாக இருக்கவும் இணைப்பு கால்வாயை உயர் மட்டத்தில் அமைத்து காவிரி ஆற்றின் கல்லணைக்கு பதிலாக கட்டளை கதவணையில் நிறைவு செய்யக் கோரி வலியுறுத்தப்பட்டது.

இதற்கிடையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.6.2021 அன்று மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம் அளித்த கோரிக்கை மனுவில், பிற வடிநிலங்களில் அதிகபடியாக உள்ள வெள்ள நீரை தென்னிந்திய மாநிலங்கள் பயன்பெறும் வகையிலும், கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்தில், தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு, அதற்குத்தகுந்தாற்போல விரிவான திட்ட அறிக்கையை இறுதி செய்து, இந்தத் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 6.7.2021 அன்று மாண்புமிகு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சரிடம் அளித்த தனது கோரிக்கை மனுவில், மேற்கண்ட கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

2023 மார்ச் 29]

தேசிய நீர் மேம்பாட்டு முகமை 29.10.2021 அன்று இத்திட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒருமித்த கருத்தைப் பெறுவதற்காக ஒரு கூட்டம் நடத்தியது. அக்கூட்டத்தின்போது தமிழ்நாடு தனது கருத்தை மீண்டும் வலியுறுத்தியது. 14.11.2021 அன்று மாண்புமிகு ஒன்றிய உள் துறை அமைச்சர் தலைமையில் திருப்பதியில் நடைபெற்ற 29-வது தென்மண்டல கவுன்சில் கூட்டத்திலும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு தமிழ்நாட்டின் கருத்தை வலியுறுத்தினார்கள். 19.11.2021 அன்று நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள், தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் தலைமை இயக்குநருடன், இந்தத் திட்டம் தொடர்பாக விவாதித்து சம்மந்தப்பட்ட மாநிலங்களிடமிருந்து விரைவில் ஒருமித்த கருத்தைப் பெற வலியுறுத்தினார்கள்.

இதற்கிடையில், ஒன்றிய அரசு தனது 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை உரையில், இந்தத் திட்டத்திற்காக, பயனடையும் மாநிலங்களுக்கிடையே ஒருமித்த கருத்து எட்டப்பட்டவுடன், இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தது.

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி விவாதிக்க, இதில் தொடர்புடைய மாநிலங்களுடன் 18.2.2022 அன்று, மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியது. அதில் தமிழக அரசு, இணைப்புக் கால்வாயை உயர் மட்டத்தில் எடுத்து சென்றால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கம் அளித்தது. கோதாவரியின் மிகைநீர் குறித்து சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்துகளை கேட்ட மத்திய நீர்க் குழுமம் தெற்குப் படுகைகளுக்குத் திருப்பிவிட சுமார் 4000 MCM தண்ணீர்தான் கோதாவரியில் கிடைக்கும் என்று கருத்து தெரிவித்தது.

எனவே, இடைக்காலத் திட்டமாக, தேசிய நீர் மேம்பாட்டு முகமை அக்டோபர், 2022-ல் 4000 MCM (141 TMC) நீரை கோதாவரியிலிருந்து கிருஷ்ணா, பெண்ணாறு மற்றும் காவிரிப் படுகைக்கு மாற்றுவதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொண்டது. மேற்கூறிய தொழில்நுட்ப ஆய்வு பற்றி விவாதிக்க 18.10.2022 அன்று தேசிய நீர் மேம்பாட்டு முகமை

[2023 மார்ச் 29

4-வது ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியது. இந்தக் கூட்டத்தில், தமிழக அரசின் நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள், தீபகற்ப நதிகள் இணைப்பின்மூலம் தமிழ்நாட்டிற்கு கிடைக்கக்கூடிய நீரின் அளவு தொடர்ந்து குறைந்து கொண்டே வருவது கவலையளிப்பதாகத் தெரிவித்ததுடன், பெண்ணாறு-காவிரி (கல்லணை) இணைப்புக்குப் பதிலாக, முதல் கட்டமாக பெண்ணாறு-காவிரி (கட்டளை கதவணை) இணைப்பை சேர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

13.12.2022 அன்று புது தில்லியில் நடைபெற்ற தேசிய நீர் மேம்பாட்டு முகமை சங்கத்தின் 36-வது ஆண்டு பொதுக் கூட்டத்தில், தமிழக அரசின் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால், தேசிய நீர் மேம்பாட்டு முகமையால் 2021-ல் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையில் கூறியுள்ளபடி, கோதாவரியிலிருந்து 7000 MCM (247 TMC) நீரைத் திருப்பவும் மற்றும் இணைப்புக் கால்வாயை கல்லணைக்குப் பதிலாக கட்டளை கதவணைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், கோதாவரி-காவிரி இணைப்புத் திட்டத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ்நாடு நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கருத்துகளை மீண்டும் வலியுறுத்தினார். மாண்புமிகு ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சர் அவர்கள், தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் அதிகாரிகளுடன் தனியே ஒரு கூட்டத்தை நடத்தி, இந்தப் பிரச்சினைகள் குறித்து ஆலோசித்து, தகுந்த முடிவெடுக்குமாறு பரிந்துரைத்தார்.

23.2.2023 அன்று, கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத் துறை, அவர்கள், தமிழ்நாடு மற்றும் தொடர்புடைய மாநிலங்கள் பயன்பெறும் வகையில், கோதாவரியிலிருந்து திருப்பும் நீரை 247 டி.எம்.சி. அடியாக மாற்றியமைக்க, மத்திய நீர் குழுமம் மற்றும் தேசிய நீர் மேம்பாட்டு முகமைக்கு அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்திற்கு எழுதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இதற்கென ஒரு கூட்டத்தை நடத்த தேசிய நீர் மேம்பாட்டு முகமையிடம் கோரப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29]

6.3.2023 அன்று ஹைதராபாதில் நடந்த தேசிய நீர் மேம்பாட்டு முகமையின், *17*-வது பணிக் குழு (Task Force Committee) கூட்டத்தில் கலந்து கொண்டு, தமிழ்நாடு அரசு கோதாவரியிலிருந்து திருப்பும் நீர் அளவினை *4000* MCM–லிருந்து *7000* MCM ஆக அதிகரிக்குமாறும், இணைப்புடக கால்வாயைக் கல்லணைக்கு பதிலாக கட்டளை கதவணைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தியது. பணிக் குழுத் தலைவர் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களிடம் கோதாவரி-காவிரி இணைப்புத் திட்டத்திற்கு விரைவாக ஒப்புதல் வழங்குமாறு கோரினார்.

தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் நீர் பற்றாக்குறையைப் போக்க பன்மாநில நதிகள் இணைப்பு திட்டத்தைச் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

2.8.2. பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்பு

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, *1994* ஆம் ஆண்டு, பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கையை, கேரளாவின் பம்பா-அச்சன்கோவில் ஆறுகளின் மிகை நீரான *22* டி.எம்.சி. அடி நீரினை தமிழ்நாட்டிற்குத் திருப்புவதற்கு ஏதுவாக உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தில், தமிழ்நாட்டின் சங்கரன்கோவில், கோவில்பட்டி, சிவகிரி, திருவில்லிபுத்தூர், இராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் *91,400* ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன், கேரள மாநிலம் *500* மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைத் தயாரிக்க இசைவளித்தபோதிலும், கேரள அரசு இதுவரையில் அதன் இசைவினை அளிக்கவில்லை.

இத்திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தையும் மற்றும் தேசிய நீர் மேம்பாட்டு முகமையையும் தமிழ்நாடு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. *12.11.2021* அன்று புது தில்லியில் நடைபெற்ற சிறப்புக் குழுக் கூட்டத்தில்கூட, *2021* ஆம் ஆண்டில் கேரளாவின் பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை காரணம் காட்டி, பம்பா-அச்சன்கோவில்-வைப்பார் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைத் தயாரிக்க தேசிய நீர் மேம்பாட்டு

முகமையிடம் வலியுறுத்தப்பட்டது. இந்த இணைப்பை விரைவாகச் செயல்படுத்தினால், இந்த இணைப்பு கேரளாவிற்கும் வெள்ள மேலாண்மை செய்ய பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு, தேசிய நீர் மேம்பாட்டு முகமை, நதி நீர் இணைப்பிற்கான சிறப்பு குழு மற்றும் ஒன்றிய அரசு வாயிலாக இந்த இணைப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

2.9. பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்

பாண்டியாறு, புன்னம்புழா மற்றும் சோழத்திபுழா ஆறுகள் பன் மாநில நதியான சாலியாறு நதியின் துணை நதிகளாகும். இத்துணையாறுகள் தமிழ்நாட்டில் நீலகிரி மலையின் சிகரங்களில் தோன்றி மேற்கு நோக்கி பாய்ந்து இறுதியில் கேரளாவில் அரபிக் கடலில் கலக்கிறது.

1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு (Understanding) ஏற்பட்டது. அதன்படி, மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா நதியில், தமிழ்நாட்டில் உள்ள நீர்ப் பிடிப்பு பகுதியிலிருந்து ஆண்டுக்கு சராசரியாக கிடைக்கும் 27.6 டி.எம்.சி. அடி நீரில் 14 டி.எம்.சி. அடி நீரைப் பயன்படுத்தி, (3X50 மெகாவாட்) பாண்டியாறு புன்னம்புழா நீர் மின்சாரத் திட்டத்தினைத் தமிழ்நாட்டின் காரகோட்டபுழாவிலும், 105 மெகாவாட் கேரளாவிலுள்ள புத்தேரிபள்ளத்திலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கு, மத்திய திட்டக் குழுமம் 1968-ல் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தில் நீரை கிழக்கு நோக்கி திருப்பத் திட்டமிடப்படவில்லை.

பவானி உபபடுகையில் வாழும் விவசாயிகள் கேட்டுக்கொண்டதன் பேரில், இத்திட்டத்தின் தயாரிப்பு பணிகளை நிறுத்தவும், பாண்டியாறு-புன்னம்புழா படுகையில் கிடைக்கும் தண்ணீரைக் கிழக்கு நோக்கி மோயார் நதிக்குத் திருப்பிவிட்டு, ஈரோடில் உள்ள கீழ்பவானி நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு செல்லவும் சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்ய அரசு அறிவுறுத்தியது. அதன்படி, மேற்கண்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு சாத்தியமானது என்று கண்டறியப்பட்டது.

2023 மார்ச் 29]

இதற்கிடையில், தமிழ்நாடு மின்சார வாரியம் 2006–ல் தயாரித்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திற்கான திருத்திய திட்ட அறிக்கைக்கு இசைவு அளிக்கும்படி தமிழ்நாடு மின்சார வாரியம், கேரள மின்சார வாரியத்தைக் கேட்டுக்கொண்டது. இதற்குக் கேரள அரசு இசைவினை அளிக்கவில்லை.

தமிழ்நாடு-கேரள மாநிலங்களுக்கிடையே இருந்து வரும் நதி நீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக 25.9.2019 அன்று திருவனந்தபுரத்தில் இரு மாநில முதல்வர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அந்தந்த அரசுகளுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்காக இரு மாநில செயலாளர்கள் நிலையில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 11.9.2020 அன்று திருவனந்தபுரத்தில் இரு மாநிலங்களுக்கு இடையேயான கூட்டம் நடைபெற்றது. மேலும் குழுவின் கூட்டம் 17.9.2021 அன்று காணொலி காட்சிமூலம் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு முன்மொழிந்த திட்டத்தைக் கேரள அரசு பரிசீலிப்பதாக சுட்டிக்காட்டியது. மேலும், முன்மொழிந்த திட்டத்தின் தொழில்நுட்ப அம்சங்களைப் பரிசீலிக்க ஒரு தொழில்நுட்பத் துணைக் குழுவை அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு அரசு 1.10.2021 அன்று ஒரு தொழில்நுட்பத் துணைக் குழுவை அமைத்துள்ளது.

2021-2022 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு தமிழக நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, "பாண்டியாறு- புன்னம்புழா திட்டத்தின் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கத் தேவையான நில அளவை மற்றும் நில மட்டம் எடுக்கும் பணிக்காக" 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியது. முதற்கட்ட நில அளவை மற்றும் ஆய்வு பணிகள் முடிக்கப்பட்டு சாத்தியக்கூறு அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. கேரளாவுடனான பேச்சுவார்த்தை விரைவில் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது, இந்தத் திட்டம் இரு மாநிலங்களுக்கும் எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும் என்பது எடுத்துரைக்கப்படும்.

3.0. கிருஷ்ணா நதி நீர் வழங்கும் திட்டம்

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கிடையே 14.4.1976 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு மாநிலமும் கிருஷ்ணா நதி நீரில் 5 டி.எம்.சி. அடி நீரை ஆந்திர மாநிலத்தின் வழியாக சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்கு (15 டி.எம்.சி. அடி) வழங்க வேண்டும்.

தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்களுக்கிடையே 18.4.1983 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஆந்திரப் பிரதேச அரசு ஒவ்வொரு வருடமும் 3 டி.எம்.சி. அடி நீர் ஆவியாதல் இழப்பு நீங்கலாக 12 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டு எல்லையில் வழங்க வேண்டும்.

I-ஜூலை முதல் அக்டோபர் வரை (4 மாதங்கள்)	:	8 டி.எம்.சி. அடி
II-ஜனவரி முதல் ஏப்ரல் வரை (4 மாதங்கள்)	:	4 டி.எம்.சி. அடி

இத்திட்டம் 1983 ஆம் ஆண்டு இருமாநிலங்களாலும் எடுத்துக் கொள்ளப்பட்டு 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழக எல்லையில் நீர் பெறப்பட்டது. இதற்கான செலவினத்தை ஒப்பந்தத்தின்படி நீர் பங்கீட்டிற்கு ஏற்றவாறு இருமாநிலங்களும் பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டது.

இரு மாநிலங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி சென்னைக்கு வழங்கப்படும் கிருஷ்ணா நதி நீரினை உறுதி செய்வதற்காகவும், மாநிலங்களால் வழங்கப்பட வேண்டிய நீரினை கணக்கிடுவதற்கான நெறிமுறையை உருவாக்கவும் மத்திய நீர்வளம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கா புனரமைத்தல் அமைச்சகத்தின் 5.10.2018 நாளிட்ட ஆணையின்படி கிருஷ்ணா நதி நீர் மேலாண்மை வாரியத் (Krishna River Management Board) தலைவரின் தலைமையில் ஒரு குழு மத்திய அரசால் அமைக்கப்பட்டது. இதில் மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் நீர்வளத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மத்திய நீர்

2023 மார்ச் 29]

ஆணையத்தின் பாசன மேலாண்மை அமைப்பின் தலைமைப் பொறியாளர் ஆகியோர் உறுப்பினர்களாகவும், கிருஷ்ணா நதி நீர் மேலாண்மை வாரிய உறுப்பினர்-செயலர் இக்குழுவில் உறுப்பினர்-செயலராகவும் செயல்படுவர். இக்குழு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் வருடத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு முறை கூட்டப்பட வேண்டும். மேற்காணும் இக்குழு இதுவரை 7 முறை கூடியுள்ளது. இதன் 7-வது கூட்டம் 24.6.2022 அன்று கூட்டப்பட்டது.

1996 ஆம் ஆண்டு முதல் 15.3.2023 வரை மொத்தம் 108.363 டி.எம்.சி. அடி நீர் தமிழ்நாடு எல்லையில் (Zero point) பெறப்பட்டுள்ளது. 2022- 2023 ஆம் நீராண்டில், 3.695 டி.எம்.சி. அடி நீர் தமிழக எல்லையில் பெறப்பட்டுள்ளது.

4.0. மாநிலத்திற்குள் நதி நீர் இணைப்பு

"காவிரி தென்பெண்ணை பாலாறு -தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி -என
மேவியாறு பலவோடத் -
திரு மேனி செழித்த தமிழ்நாடு"-

மகாகவி பாரதியார்

4.1. காவிரி - அக்னியாறு - தெற்கு வெள்ளாறு - மணிமுத்தாறு -வைகை - குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டம்

இத்திட்டத்தில் கட்டளை (மாயனூர்) கதவணையிலிருந்து மொத்தம் 262.19 கி.மீ. நீளத்திற்கு புதிய கால்வாய் அமைத்து, காவிரி ஆற்றினை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு ஆறுகளுடன் இணைக்கும் திட்டப் பணி கீழ்க்காணும் 3 கட்டங்களாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டம்	-	காவிரி (கட்டளை கதவணை) முதல் தெற்கு வெள்ளாறு வரை (தொலைகல் 0 கி.மீ.-118.45 கி.மீ. வரை)
இரண்டாம் கட்டம்	-	தெற்கு வெள்ளாறு முதல் வைகை வரை (தொலைகல் 118.45 கி.மீ.-228.145 கி.மீ. வரை)
மூன்றாம் கட்டம்	-	வைகை முதல் குண்டாறு வரை (தொலைகல் 228.145 கி.மீ.–262.19 கி.மீ. வரை)

[2023 மார்ச் 29

கட்டளை கதவணை முதல் தெற்கு வெள்ளாறு வரையிலான (தொலைகல் 0 கி.மீ. முதல் 118.45 கி.மீ.) இத்திட்டத்தின் முதற்கட்டத்திற்கு ரூ.6941.00 கோடி மதிப்பீட்டில் கால்வாய் அமைப்பதற்கு அரசு கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ளது.

கட்டம்-I

இத்திட்டத்தின் முதற் பகுதியாக கரூர் மாவட்டத்தில் 4.10 கி.மீ. நீளத்திற்கு ரூ.171.00 கோடி செலவிலும், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 5.355 கி.மீ. நீளத்திற்கு ரூ.160.00 கோடி செலவிலும் வெள்ள நீர்க்கால்வாய் அமைக்கும் பணிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகளில் 59 சதவிகிதம் கீழ்க்காணுமாறு முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

வ. எண்	குறுக்கு கட்டுமானம் மற்றும் குறுக்கு வடிகால் பணிகளின் விவரம்	தற்போதைய நிலை
1	நீர்கடத்தி	முன்னேற்றத்திலுள்ளது.
2	குறுக்கு நீரொழுங்கி	கதவு அமைக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.
3	மிகைநீர் நீரொழுங்கி	கதவு அமைக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.
4	கீழ் குமுழி	முடிவடைந்துள்ளது.
5	கீழ்ச்சுருங்கை	முன்னேற்றத்திலுள்ளது.
6	சாலைப் பாலம் (7 எண்கள்)	5 முடிவடைந்துள்ளன. 2 முடிவடையும் தருவாயில் உள்ளன.
7	மூடுதள கால்வாய்	முன்னேற்றத்திலுள்ளது

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு நில கையகப்படுத்தும் அலகுகளை கரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உருவாக்கி நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 மார்ச் 29]

நிலமெடுப்புப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக நில நிர்வாகத் துறை மற்றும் நீர்வளத் துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மற்றும் மாதாந்திரக் கலந்தாய்வுக் கூட்டங்களின் விளைவாக நிலமெடுப்புப் பணிகள் சம்பந்தமான இடர்பாடுகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

கரூர் மாவட்டத்தில் 164.41 ஹெக்டேர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 54.90 ஹெக்டேர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 63.68 ஹெக்டேர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள நிலங்களைக் கையகப்படுத்தப்படும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கட்டம்-II மற்றும் கட்டம்-III ஆகியவற்றிற்கு விரிவான திட்ட அறிக்கைத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

காவிரி-அக்னியாறு-தெற்கு வெள்ளாறு-மணிமுத்தாறு-வைகை-குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டத்தினை செயல்படுத்தப்படுவதன்மூலம் காவிரி முதல் குண்டாறு வடிநிலங்கள் இடையிலான மொத்தம் 52,332.63 ஹெக்டேர் நிலங்களில் 45,810.84 ஹெக்டேர் நிலங்கள் பாசன உறுதி பெறுவதுடன், 6,521.79 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

4.2. தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டம்

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

-குறள்

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள தாமிரபரணி ஆற்றை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் இத்திட்டத்தில் அம்பாசமுத்திரம் வட்டம், வெள்ளாங்குழி கிராமத்தின் அருகில் கன்னடியன் கால்வாயிலிருந்து திசையன்விளை அருகிலுள்ள சாத்தான்குளம் வட்டம் எம்.எல். தேரி வரை, வினாடிக்கு 3,200 கன அடி வீதம் வெள்ள மிகை நீரைக் கொண்டு செல்லும் வகையில் 75.175 கி.மீ., நீளத்திற்கு ஒரு புதிய வெள்ள நீர் கால்வாய் அமைத்து, கடலில் உபரியாக கலக்கும் தாமிரபரணி ஆற்றின் 13,758 மி.க. அடி வெள்ளநீரில், 2,765 மி.க. அடி வெள்ள மிகை நீரைக் உபயோகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2009 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, நான்கு நிலைகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2023 மார்ச் 29

இத்திட்டத்திற்கு 369.00 கோடி ரூபாய்க்கு 12.6.2008 அன்று நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதல் 933.23 கோடி ரூபாய் ஆகும்.

இத்திட்டத்தைச் செயலாக்குவதன்மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 13,481 ஹெக்டேர் (33,312.28 ஏக்கர்) நிலம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் 9,559 ஹெக்டேர் (23,620.80 ஏக்கர்) நிலம் என மொத்தம் 23,040 ஹெக்டேர் (56,933.08 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்திற்கு திருநெல்வேலி மாவட்டத்தில் 913.137 ஹெக்டேர் (2,256.41 ஏக்கர்) மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் 157.42 ஹெக்டேர் (388.99 ஏக்கர்) நிலம் என மொத்தம் 1,070.55 ஹெக்டேர் (2,645.40 ஏக்கர்) நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இதுவரை, 65% நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலம் கையகப்படுத்தும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பணிகளின் தற்போதைய நிலை:-

நிலை எண்	மொத்த சிப்பங்கள்	முடிவடைந்தவை	செயலாக்கத்தில் உள்ளவை	முடிவுற்ற சதவிகிதம்
I	18	18	-	100%
II	18	18	-	100%
III	18	17	1	99%
IV	16	7	9	73%

ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகம் 872.45 கோடி ரூபாய்க்கு முதலீட்டு அனுமதி வழங்கியுள்ளது.

2023 மார்ச் 29]

இவ்வரசு மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக, பிரதம மந்திரியின் விவசாய நீர்ப் பாசன திட்டத்தின் விரைவுபடுத்தப்பட்ட பாசனப்பயன் திட்டத்தின்கீழ் ரூ.44.22 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கி முதல் தவணையாக ரூ.9.0425 கோடியை 31.3.2022 அன்று ஒன்றிய அரசு விடுவித்துள்ளது.

ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதமுள்ள நிதியுதவியை பெறுவதற்கான கருத்துரு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

4.3. ஆய்வில் உள்ள நதி நீர் இணைப்புத் திட்டங்கள்

4.3.1. பெண்ணையாறு (சாத்தனூர் அணை)-செய்யாறு இணைப்பு

இத்திட்டமானது, பெண்ணையாற்றிலிருந்து 5.87 டி.எம்.சி. அடி உபரி நீரை சாத்தனூர் அணையின் நீர் பரப்புப் பகுதியிலிருந்து கால்வாய் வாயிலாக திருப்பி வழியோர ஏரிகளை நிரப்புவதுடன், நந்தன் கால்வாய் பாசன அமைப்பின் 36 ஏரிகளுக்கு பாசன உறுதி செய்யவும் மற்றும் செய்யாறு வழியாக பாலாற்றை இணைக்கவும் உத்தேசிக்கப்பட்ட திட்டமாகும்.

சாத்தனூர் அணையின் மேற்புறம் செயல்படுத்தப்படும் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களைக் கருத்தில் கொண்டு தற்போது, மொத்த நீர் இருப்பை ஆய்வு செய்ததில், உபரி நீர் 0.767 டி.எம்.சி. அடி எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைய சூழலில் இத்திட்டத்தினை இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, சாத்தனூர் அணையிலிருந்து பிரதானக் கால்வாய், ஊட்டுக்கால்வாய் மற்றும் கிளைக் கால்வாய்களை வெட்டி வினாடிக்கு 500 கன அடி நீர் வீதம் 11 நாட்களுக்குத் திருப்பி, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள 22 ஏரிகள் பயனடையவும் மற்றும் நந்தன் கால்வாய்மூலம் 36 ஏரிகள் பயனடையவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் 2,609.04 ஏக்கர் மற்றும் நந்தன் கால்வாய் மூலமாக 6,653.34 ஏக்கர் ஆயக்கட்டுகள் பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்காக 276.34 ஏக்கர் பட்டா நிலமும், 35.30 ஏக்கர் புறம்போக்கு நிலமும் மற்றும் 34.37 ஏக்கர் வன நிலமும் தேவைப்படுகிறது.

[2023 மார்ச் 29

இத்திட்டத்தை செயல்படுத்துவதன்மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் 33 கிராமங்களும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் 24 கிராமங்களும் பயன்பெறும். இத்திட்டத்திற்கு விரிவான நில அளவைகள், புவியியல் கூறுகள் அறிவதற்கான ஆய்வு மற்றும் மட்ட அளவுகள் எடுப்பதற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் முதற்கட்ட பணியான திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 22 ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கவும் மற்றும் நந்தன் கால்வாய்க்கு பாசன உறுதி செய்யவும், ரூ.285.00 கோடி (2022-2023 விலை பட்டியல்) செலவில் கால்வாய் வெட்டும் பணிக்கான திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

பெண்ணையாற்றில் உபரி நீர் இருப்பு மேம்படும்பட்சத்தில், நம்பகத்தன்மை அடிப்படையில் இரண்டாம் கட்டமாக, திட்டத்தின் பிரதானக் கால்வாயை செய்யாற்றுடன் இணைக்க தொழில்நுட்பச் சாத்தியக்கூறு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

4.3.2. பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு)-பாலாறு இணைப்பு

இத்திட்டத்தில் பெண்ணையாற்றில் வெள்ளம் ஏற்படும்போது, 3 டி.எம்.சி. அடி நீரினை கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள நெடுங்கல் அணைக்கட்டிலிருந்து பாலாற்றின் கிளை ஆறான கல்லாற்றிற்கு திருப்புவது இலக்காகும். இத்திட்டத்திற்கு ரூ.648.23 கோடி (2017-18) மதிப்பீட்டிலான விரிவான வரைவு திட்ட அறிக்கை தேசிய நீர் மேம்பாட்டு முகமையால் தயாரிக்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் பெறப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி பெண்ணையாறு வடிநிலத்தில் நடைபெற்று வரும் திட்டங்களையும் பரிசீலனையில் உள்ள திட்டங்களையும் கருத்தில் கொண்டு நீரியியல் நம்பகத்தன்மையினைச் சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும். அதன் அடிப்படையில், இத்திட்டத்திற்கான உரிய ஆய்வுகள் மேற்கொண்டு அதன்பின் திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, இத்திட்டத்தின் நில அளவை, மட்ட அளவை மற்றும் இதர ஆய்வுப் பணிகளுக்கு ரூ.0.96 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2023 மார்ச் 29]

இத்திட்டத்தினைச் செயலாக்குவதன்மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி மற்றும் கிருஷ்ணகிரி வட்டங்களிலும், திருப்பத்தூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி வட்டங்களிலும் உள்ள திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள்மூலம் 24,329 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது.

4.3.3. காவிரி (மேட்டூர் அணை)—சரபங்கா-திருமணிமுத்தாறு-அய்யாறு இணைப்பு கால்வாய் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மேட்டூர் அணையிலிருந்து, காவிரி ஆற்றின் 5 டி.எம்.சி. அடி வெள்ள உபரிநீரை ஒரு புதிய கால்வாய் அமைத்து சேலம், நாமக்கல், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்குத் திருப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படவுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து பவித்திரம் ஏரி வரை 132.305 கிலோ மீட்டர் நீளத்திற்கு இணைப்புக் கால்வாய் அமைக்கும் பணியினை முதற்கட்டமாகவும், பவித்திரம் ஏரியிலிருந்து அய்யாறு ஆறு வரை 36.995 கிலோ மீட்டர் நீளத்திற்கு இணைப்புக் கால்வாய் அமைக்கும் பணியினை இரண்டாம் கட்டமாகவும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டம்

முதற்கட்ட பணிக்காக ரூ.9176 கோடிக்கு (2020-2021 விலைவிகிதம்) சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டப் பணியினை செயல்படுத்த 2,164.87 ஏக்கர் பட்டா நிலமும், 283.03 ஏக்கர் வன நிலமும் தேவைப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயலாக்குவதன்மூலம் 31,263 ஏக்கர் நிலம் பயன்பெறும்.

இரண்டாம் கட்டம்

இரண்டாம் கட்ட பணிக்கான சாத்தியக்கூறு அறிக்கை (2020-2021 விலை விகிதம்) ரூ.1060 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தினைச் செயல்படுத்த 600.56 ஏக்கர் பட்டா நிலமும், 42.71 ஏக்கர் புறம்போக்கு நிலமும் தேவைப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயலாக்குவதன்மூலம் இரண்டாம் கட்டத்திலுள்ள 6,479 ஏக்கர் நிலம் பயன்பெறும். விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2023 மார்ச் 29

4.3.4. தாமிரபரணி-உப்பாறு ஓடை-மலட்டாறு—வைப்பாறு நதி இணைப்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் செல்லும் உப்பாறு ஓடை, மலட்டாறு (கல்லாறு) மற்றும் வைப்பாறு நதிகள் வறட்சிப் பாதித்த பகுதிகளில் அமைந்துள்ளன. குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கு நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. தாமிரபரணி ஆற்றில் செல்லும் உபயோகப்படுத்தப்படாத உபரி வெள்ள நீரினை உப்பாறு ஓடை, மலட்டாறு, வைப்பாறு நதிகளுக்குத் திருப்பிவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தாமிரபரணி ஆற்றில் சீவலப்பேரி தடுப்பணையிலிருந்து 18 நாட்களுக்கு 400 கன அடி உபரி நீரினை முதலில் 13 கி.மீ. தூரத்திற்கு 41 மீ. உயரத்திற்கு நீரேற்று முறையிலும், புவிஈர்ப்பு ஓட்டம்மூலம் அடுத்த 64.50 கி.மீ. தூரத்திற்கு கால்வாயை உருவாக்கி வழிதடத்திலுள்ள அனைத்து ஓடைகள்/ஆறுகளை இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம், ஒட்டப்பிடாரம், எட்டையபுரம் மற்றும் விளாத்திக்குளம் வட்டங்களில் உப்பாறு ஓடை, மலட்டாறு ஓடை மற்றும் வைப்பாறு ஆற்றின் பாசனப்பரப்பான சுமார் 2,204.92 ஹெக்டேர் நிலம் பயன்பெறும்.

இத்திட்டத்திற்கான நில அளவை, ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அரசின் நிர்வாக ஒப்புதல் ரூ.0.40 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் முடிவுற்று விரிவான திட்ட அறிக்கை விரைவில் தயாரிக்கும்பொருட்டு வடிவமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.0. சிறப்பு தூர்வாரும் பணிகள்

5.1. காவிரி டெல்டா பகுதிகளில் தூர்வாருதல்

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது"

-குறள்

காவிரி டெல்டா மாவட்டங்களில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்மூலம் மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீர் காவிரி டெல்டா மாவட்டங்களிலுள்ள பாசன கால்வாய்களில் உரிய நேரத்தில் கடைமடை வரை தங்குதடையின்றி

2023 மார்ச் 29]

சென்றடையவும் மற்றும் வெள்ளக் காலங்களில் விரைவில் நீர் வடிவதை உறுதிசெய்யும் பொருட்டும் செயல்படுத்தப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், காவிரி டெல்டா பகுதிகளான கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 4,964.11 கி.மீ. நீளத்திற்கு 683 தூர்வாரும் பணிகள் ரூ.80 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் உரிய நேரத்திற்குமுன் முடிக்கப்பட்டு, டெல்டா விவசாயிகள் முழுமையாகப் பயன்பெற மேட்டூர் அணை வழக்கத்திற்கு முன்னதாக 24.5.2022 அன்றே திறக்கப்பட்டது.

காவிரி டெல்டா பகுதிகளில் நீர்நிலைகளை வடிவமைக்கப்பட்ட படுகை நிலைக்கு தூர்வாருதல், கால்வாய்கள்/வாய்க்கால்கள்/ கிளைக் கால்வாய்கள்/வடிகால்கள்/வழங்கு கால்வாய்களில் படிந்துள்ள மண் திட்டுகள் மற்றும் புதர்களை அகற்றுதல் போன்ற பணிகள் உழவர் குழுக்களின் ஒத்துழைப்புடன் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு பாசன நீர் கடைமடைவரை தங்கு தடையின்றி சென்றடைந்தது.

இந்த சிறப்பு தூர்வாரும் பணிகள்மூலம் குறுவை சாகுபடி 2021 ஆம் ஆண்டு 4.9 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து 2022 ஆம் ஆண்டு 5.36 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

2023-2024 ஆம் ஆண்டு காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வழங்குவாய்க்கால்களில் தூர்வாரும் பணிகளை மேட்டூர் அணை திறப்பிற்கு முன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.2. மதுரை மண்டல சிறப்பு தூர்வாரும் பணிகள்

2022-2023 ஆம் ஆண்டில் மதுரை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள வைகை மற்றும் தாமிரபரணி வடிநிலங்கள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோதையாறு பாசன அமைப்பில் உள்ள கால்வாய்களில் உள்ள படிவுகளை அகற்றி, அதன் நீர்கடத்துத் திறனை மீட்டெடுக்கும்பொருட்டு ரூ.2.959 கோடி மதிப்பீட்டில் சிறப்பு தூர்வாரும் பணிகள் செயலாக்கப்பட்டு, கடைமடைவரை நீர் சென்றடைவது உறுதி செய்யப்பட்டது.

[2023 மார்ச் 29

இதேபோல், உரிய காலத்தில் விவசாயிகள் பயன்பாட்டிற்காக நீரினைக் கொண்டு செல்லும் வகையில் கால்வாய்களின் நீர்கடத்துத் திறனை மீட்டெடுக்க 2023-2024 ஆம் ஆண்டில் மதுரை மண்டலத்திலுள்ள மேல் வைகை,கீழ் வைகை, குண்டாறு, வைப்பாறு, தாமிரபரணி, மற்றும் நம்பியாறு ஆகிய 6 வடிநிலங்களில் சிறப்பு தூர்வாரும் பணிகள் செயல்படுத்தப்படவுள்ளது.

5.3. கோயம்புத்தூர் மண்டல சிறப்பு தூர்வாரும் பணிகள்

2022-2023 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், ஈரோடு, கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பவானி, அமராவதி மற்றும் பரம்பிக்குளம் உப வடி நிலங்களில் 56 தூர்வாரும் பணிகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட பாசன வாய்க்கால்களில் 125 தூர்வாரும் பணிகள் ரூ.4 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

வடிவமைக்கப்பட்ட படுகை மட்டத்திற்கு நீர்நிலைகளைத் தூர்வாருதல், கால்வாய்/வாய்க்கால், கிளை வாய்க்கால்கள், வரத்துவாய்க்கால்கள் போன்றவற்றில் புதர்கள், சரிந்த மண் மற்றும் குப்பைகளை அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடை மடை வரை பாசன நீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டது.

இதேபோல், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் பாசன நீர் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, 2023-2024 ஆம் ஆண்டில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட வடிநிலம், அமராவதி உப வடிநிலம் மற்றும் கீழ் பவானி உப வடிநிலம் ஆகிய இடங்களில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

6.0. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முக்கொம்பு மேலணையில் புதிய நீரொழுங்கி அமைத்தல்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தற்போதுள்ள முக்கொம்பு (மேலணையின்) கீழ்ப்பகுதியில் கொள்ளிடம் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் சேதமடைந்த பழைய நீரொழுங்கிக்கு மாற்றாக ஒரு புதிய நீரொழுங்கி அமைக்கும் பணி ரூ.414 கோடி திருத்திய மதிப்பீட்டில் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இதன்மூலம் 12,58,460 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

2023 மார்ச் 29]

புதிய நீரொழுங்கி, நீரொழுங்கியின் மேல் ஒரு வழிப்பாலம், வழிகாட்டி சுவர் அமைக்கும் பணி மற்றும் வெள்ளக்கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் ஊசிப்பாலம் கட்டுமானப் பணிகள் ஆகியவை முடிக்கப்பட்டுள்ளன. வனத்துறையின் ஒத்துழைப்பினைப் பெற்று சாலை அமைக்கும் பணிகளை விரைவில் முடிப்பதற்கு சீரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

7.0. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே தலைமதகுடன்கூடிய புதிய கதவணை அமைத்தல்

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.494.60 கோடி மதிப்பீட்டில் தலைமதகுடன்கூடிய புதிய கதவணை அமைக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் திட்ட மதிப்பீடு ரூ.463.25 கோடி மற்றும் நிலம் கையகப்படுத்துவதற்கான மதிப்பீடு ரூ.31.35 கோடி ஆகும்.

இக்கதவணையின் கொள்ளளவு 0.334 டி.எம்.சி. அடி என திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கான கொள்ளளவானது 4 நிரப்புதல்களின் அடிப்படையில் 1.072 டி.எம்.சி. அடி என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கதவணையினால் கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள 31,221 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இதில், நேரடியாக பாசன வசதி பெறும் 26,810 ஏக்கர் நிலங்களும், அருகிலுள்ள கிணறுகளில் நீர் செறிவூட்டுதல்மூலம் பயன்பெறும் 4,411 ஏக்கர் நிலங்களும் உள்ளடங்கும். இத்திட்டத்தினால் சேமிக்கப்படும் நீர் வீராணம் ஏரிக்கும் கொண்டு செல்லப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் குடிநீர் தேவைக்குப் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தில் அமைக்கப்படும் பாலம் கொள்ளிடம் ஆற்றின் கதவணையின் இருபுறங்களிலுள்ள கிராமங்களுக்குப் போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்தும்.

தலைமதகுகளுடன்கூடிய கதவணை, நீரொழுங்கி மேல் இருவழிச் சாலை அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. கரைகளைப் பலப்படுத்துதல், அணுகு சாலை அமைத்தல் மற்றும் இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 93% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

[*2023 மார்ச் 29*

8.0. காவிரி ஆற்றின் குறுக்கே நஞ்சை புகளூர் கிராமத்தில் கதவணை அமைத்தல்

*கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், நஞ்சை புகளூர் கிராமத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மேட்டூர் அணையிலிருந்து 107 கி.மீ. தொலைவில், அதாவது, வாங்கல் தலை மதகிலிருந்து 200 மீட்டருக்குக் கீழ்புறத்தில் கதவணை அமைக்கும் பணி ரூ.406.50 கோடி மதிப்பீட்டில் வைப்பு பணியாக (*Deposit Work*) நபார்டு வங்கியின் நபார்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு (*NIDA*) நிதியுதவியின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு பணி செயலாக்கத்திலுள்ளது.*

இத்திட்டத்தின்மூலம் 800 மி.க. அடி நீரைத் தேக்க இயலும். வாங்கல் வாய்க்காலின் 1,458 ஏக்கர் பாசன நிலம் மற்றும் மோகனூர் வாய்க்காலின் 2,583 ஏக்கர் பாசன நிலம் என மொத்தம் 4,041 ஏக்கர் நிலம் பாசன வசதி உறுதி செய்யப்படுவதோடு, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் நீர்த் தேவையும் பூர்த்தி செய்யப்படும். இதுவரை 54% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

9.0. காவிரி வடிநிலத்திலுள்ள பாசன அமைப்புகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் (ERM)

காவிரி டெல்டாவில் தற்போதுள்ள பாசன அமைப்புகளானது காரை பூசாத கால்வாய்கள்மூலம் பாரம்பரிய பயிர் சாகுபடி முறைகள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட பாசனத்திறன் ஆகியவற்றிற்காக திட்டமிடப்பட்டவையாகும். ஆகையால், காவிரி வடிநிலத்தில் உள்ள நொய்யலாறு பாசன அமைப்பு, கீழ் பவானி திட்ட அமைப்பு, கட்டளை உயர்மட்ட கால்வாய் பாசன அமைப்பு, ராஜவாய்க்கால் பாசன அமைப்பு, கல்லணைக் கால்வாய் திட்ட அமைப்பு மற்றும் காவிரி உப வடிநிலம் ஆகியவற்றில் தற்போது இருக்கும் பாசன அமைப்புகளின் கூறுகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் அவற்றின் பாசனத் திறனை மேம்படுத்துவதன்மூலம் பாசனத்துக்கான நீரின் தற்போதைய தேவை மற்றும் பாதுகாப்பு பற்றிய நவீன காலக் கருத்துகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தரம் உயர்த்தவும் மற்றும் மேம்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டங்களில், காவிரி வடிநிலத்திலுள்ள கால்வாய்கள், வாய்க்கால்களைத் தரப்படுத்துதல், தலை மதகுகள், குழாய் மதகுகள், நீரொழுங்கிகள், உள்வாங்கி நீரேற்றும் கால்வாய்கள், கீழ்ச்சுருங்கை

2023 மார்ச் 29]

போன்றவற்றை மறு கட்டுமானம் செய்யவும், கரைகளின் தரம் உயர்த்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

முத்திரைத் திட்டங்கள் (Iconic Projects)-நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் (ERM) திட்டங்கள்

i. காவிரி உப வடிநில திட்டம்

நபார்டு வங்கியின் நபார்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் பாதுகாப்பு மற்றும் ஆறுகள் மறுசீரமைப்பு கழகம் வாயிலாக காவிரி உப வடிநில திட்டத்தின் பாசன உள்கட்டமைப்பை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம் 33 தொகுப்புகளில் ரூ.3,384 கோடி மதிப்பீட்டில் வைப்பு பணிகளாக (Deposit Work) செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்மூலம் தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள 3,54,147 ஏக்கர் நிலங்களின் பாசன வசதி மேம்படும். ரூ.3,384 கோடி மதிப்பீட்டிலான 33 தொகுப்புகளின் பணிகளும் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன. ஒட்டுமொத்தமாக 43% பணிகள் முடிவுற்று தொடர்ந்து முன்னேற்றத்தில் உள்ளன.

ii. கல்லணைக் கால்வாய் திட்டம்

கல்லணைக் கால்வாயில் முழு மட்ட நீர் செல்லும் அளவை 4,200 கன அடிக்கு மீட்டெடுக்கவும், தற்போதுள்ள நீர் கடத்தும் செயல்திறனை 45 சதவிகிதத்திலிருந்து 61.60 சதவிகிதம் வரை அதிகரிக்கவும், 67,500 ஏக்கர் பாசன நிலங்களின் இடைவெளியை மட்டுப்படுத்துவதன்மூலம் உற்பத்தியை மேம்படுத்தவும், இத்திட்டத்தின்மூலம் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 2,27,472 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறவும், கல்லணைக் கால்வாய் திட்ட அமைப்பில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கால்வாய் கட்டமைப்பை தானியங்கிமயமாக்குதல் மற்றும் நீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்த கண்காணிப்பு மற்றும் தரவு சேகரித்தல் அமைப்பை (SCADA) அறிமுகப்படுத்துதல் மற்றும் தேவைக்கேற்ப நீரின் அளவை நிலங்களுக்கு வழங்குவதை உறுதி செய்தல், கால்வாய் பகுதிகளில் திறன்மிகு நீர் மேலாண்மைக்குரிய

[2023 மார்ச் 29

தீர்வுக்கான உறுதுணை அமைப்பு (DSS) ஆகிய புதுமைகளை இந்தத் திட்டத்தில் செயல்படுத்த கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

அரசு 13.11.2020 அன்று தமிழ்நாட்டில் காவிரி வடிநிலத்தில் நீரினை திறம்பட மேலாண்மை செய்யும் பொருட்டு கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தினை 16 தொகுப்புகளாக ரூ.2,639.15 கோடிக்கு செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்கு ரூ.1,609.125 கோடி (2014-2015 விலைபட்டியலின்படி திட்ட மதிப்பீடான ரூ.2,298.75 கோடியில் 70%) ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) நிதியுதவி பெற அரசு முடிவு செய்து நிதியுதவி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்திற்கு ரூ.1,036.70 கோடி தமிழ்நாடு அரசின் பங்களிப்பாகும்.

18.1.2021 அன்று அரசு ஐந்து சிப்பங்களுக்கு ரூ.1,036.70 கோடி நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது. மொத்தம் உள்ள 16 சிப்பங்களில், 5 சிப்பங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 5 சிப்பங்களில் 72 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

iii. கட்டளை உயர்மட்ட கால்வாய் பாசன அமைப்பு

கரூர் மாவட்டத்தில் 20,185.06 ஏக்கர் பாசன நிலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 3,589 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும் வகையில் கட்டளை உயர்மட்ட கால்வாய் பாசன அமைப்பினை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தில் ரூ.335.50 கோடி மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் நபார்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவிமூலம் செலவினத்தொகையினை பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

இதர நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டங்கள்

i. இராஜவாய்க்கால் பாசன அமைப்பு

நாமக்கல் மாவட்டத்தில் 12,786 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும் வகையில் இராஜவாய்க்கால் பாசன அமைப்பினை

2023 மார்ச் 29]

நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தில் ரூ.184 கோடி மதிப்பீட்டில் இரு தொகுப்புகளாக மாநில நிதியின்கீழ், நபார்டு உள்ளகட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவிமூலம் செலவினத் தொகையினைப் பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொகுப்பு-1-ல் 98 சதவிகிதப் பணிகள் மற்றும் தொகுப்பு-2-ல் பணிகள் முழுமையாக முடிவுற்றுள்ளன. இராஜவாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால் மற்றும் மோகனூர் வாய்க்கால்களில் கான்கிரீட் தாங்கு சுவர் கட்டவும், வாய்க்காலின் கரைகளைப் பலப்படுத்தவும், மதகுகள் மற்றும் மிகுதி நீர்போக்கி அடைப்பானைச் சீரமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii. நொய்யலாறு அமைப்பு

கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 7,000 ஏக்கர் பாசன நிலம் மற்றும் 11,000 ஏக்கர் மறைமுக பாசன நிலம் பயனடையும்வகையில் ரூ.230.00 கோடி மதிப்பீட்டில் நொய்யலாறு பாசன அமைப்பின் பாசன உள்கட்டமைப்புகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் (ERM) திட்டம் மாநில நிதியின்கீழ், நபார்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவிமூலம் செலவினத் தொகையினை பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணி 3 தொகுப்புகளாக தொலைகல் 0 முதல் 34.50 கி.மீ. வரை, தொலைகல் 34.50 முதல் 72 கி.மீ. வரை மற்றும் தொலைகல் 72 முதல் 158.35 கி.மீ. வரை எனப் பிரிக்கப்பட்டுள்ளது. முக்கியப் பணிகள் முடிவுற்றுள்ளன. உப பணிகள் நடைபெற்று வருகின்றன.

iii. கீழ்பவானி திட்ட அமைப்பு

நபார்டு வங்கியின் நபார்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவன (NIDA) நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் பாதுகாப்பு மற்றும் ஆறுகள் மறுசீரமைப்பு கழகம் வாயிலாக கீழ் பவானி திட்ட அமைப்பின் பாசன உள்கட்டமைப்பை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம் 6 சிப்பங்களில் ரூ.933.10 கோடி மதிப்பீட்டில் வைப்பு பணியாக (Deposit Work) செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் ஈரோடு, கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 2,47,247 ஏக்கர் நிலங்கள்

[*2023 மார்ச் 29*

பயனடையும். மொத்தம் உள்ள 6 சிப்பங்களில், சிப்பம் 5 மற்றும் 6 முறையே காலிங்கராயன் வாய்க்கால் மற்றும் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி வாய்க்கால்களில் பணிகள் முடிவுற்றுள்ளன.

விவசாயிகளின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக, சிப்பம் 1 முதல் 4 வரை கீழ்பவானி திட்ட பிரதான கால்வாயின் மைல் 0-0-373 முதல் மைல் 124-2-560 வரை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் ஒத்துழைப்பைப் பெற்று பணிகளை மீண்டும் விரைவாகத் தொடர்வதற்கு துறை மற்றும் மாவட்ட நிர்வாகம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10.0. மேட்டூர்-சரபங்கா நீரேற்று பாசனத் திட்டம்

மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரி நீரைச் சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு வழங்கும் நீரேற்றுத் திட்டம் ரூ.565 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தில், மேட்டூர் அணையின் 555 மி.க. அடி வெள்ள உபரி நீரை நீரேற்றுப் பாசனம்மூலம் கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 79 ஏரிகள்மூலம் 4061.66 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

மேட்டூர் அணையின் இடது கரையின் நீர் பரப்பு பகுதியிலிருந்து நீரேற்று நிலையத்திற்குக் கால்வாய் அமைத்தல் மற்றும் திப்பம்பட்டி கிராமத்தில் (கோனூர்) பிரதான நீரேற்று நிலையம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பிரதான நீரேற்று நிலையத்திலிருந்து நீர் இரண்டு வெளியேற்றிகள்மூலம் இரண்டு ஏரி குழுக்களான கலிபட்டி ஏரியிலிருந்து தொடங்கும் மேச்சேரி ஏரி குழு மற்றும் நங்கவல்லி ஏரியிலிருந்து தொடங்கும் நங்கவல்லி ஏரி குழுவில் உள்ள ஏரிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதுவரை 90% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலம் கையகப்படுத்துதல் மற்றும் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

11.0. அத்திக்கடவு-அவிநாசி நீரேற்றுத் திட்டம்

அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை நீர்ப் பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டமாக ரூ.1,756.88 கோடி மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் வடிவமைத்தல்,

2023 மார்ச் 29]

கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (DBOT) முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காலிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்திலிருந்து 1.5 டி.எம்.சி. அடி உபரி நீரை நீரேற்று முறையில் குழாய்களின்மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள 32 நீர்வளத் துறை குளங்களையும், 42 ஊராட்சி ஒன்றியக் குளங்களையும், 971 குட்டைகளையும் நிரப்பும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 24,468 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டப் பணிகள் 25.12.2019 அன்று தொடங்கப்பட்டது. 99 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. திருப்பணை மற்றும் 6 நீர் உந்து நிலையங்களுக்கான கட்டுமானப் பணிகள் முடிவடைந்தன. மின்மாற்றிகள், VT பம்புகள், மின்மோட்டர்கள், சுவிட்ச்கியர் மற்றும் பேனல் போர்டு ஆகியவை அனைத்து நீர் உந்து நிலையங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன. MS மற்றும் HDPE குழாய்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மின்கம்பங்கள் அமைக்கும் பணி மற்றும் பூமிக்கடியில் மின்சார தொடரமைப்புகள் பதிக்கும் பணிகள் 83% முடிக்கப்பட்டுள்ளன.

20.2.2023 அன்று சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டு நீர் உந்து நிலையம் 1-லிருந்து 6 வரை பிரதான உந்து குழாய்களில் நீரேற்று சோதனை ஓட்டம் நிறைவடைந்துள்ளது. இதர சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

12.0. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் நீர்நிலைகளில் கொள்ளளவுத் திறனை அதிகரித்தல்

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் கொள்ளளவுத் திறனை அதிகரிக்க திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள சோழவரம் ஏரி, பூண்டி நீர்த்தேக்கம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கம் ஏரிகளைத் தூர்வாரும் பணிகள் ரூ.20.44 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. மேலும், திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் செங்குன்றம் ஏரியினைத் தூர்வாரும் பணி தொடங்கப்படவுள்ளது. சென்னையின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் மேற்கண்ட 4 ஏரிகளைத் தூர்வாருவதன்மூலம் 1.904 டி.எம்.சி. அடி கொள்ளளவை மீட்பது குறிக்கோளாகும்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஒன்றியத்திலுள்ள காட்டூர் மற்றும் தட்டாமஞ்சி ஆகிய இரட்டை ஏரிகளின் கொள்ளளவினை மேம்படுத்தி ரூ.62.36 கோடி

மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் உருவாக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதன்மூலம் பெருநகர சென்னைக்குக் கூடுதல் குடிநீர் ஆதாரம் உருவாக்கம் மற்றும் சுமார் 5,804.38 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இதுவரை 95 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம், கொளவாய் ஏரியினை மீட்டெடுத்தல் மற்றும் புதுப்பித்தல்மூலம் விரிவாக்கப்பட்ட சென்னை புறநகர் மற்றும் செங்கல்பட்டு பகுதிகளில் குடிநீர் வழங்குதலை அதிகரிக்க 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் ஏரியின் கொள்ளளவு 477 மி.க. அடியிலிருந்து 650 மி.க. அடியாக உயர்த்துவது குறிக்கோளாகும்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம். செம்பரம்பாக்கம் ஏரியின் மிகை நீர் போக்கியின் குறுக்கே தொலைகல் 750 மீட்டரில் படுகை அணை அமைத்தல் மற்றும் படுகை அணையிலிருந்து நீரினை மூடுதள கால்வாய்மூலம் சிக்கராயபுரம் கைவிடப்பட்ட குவாரிக்கு திருப்புதல் பணிக்கு ரூ.35 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 3.8.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில். பெருநகர சென்னைக்கு குடிநீர் வழங்குவதற்கான நீர் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு பின்வரும் திட்டங்களை ஆய்வு செய்து செயல்படுத்துவதற்குக் கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளார்.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பயன்கள்
1	காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள பிள்ளைப்பாக்கம் ஏரியினைத் தூர்வாரி அதன் முழு நீர்மட்ட அளவை உயர்த்துதல்	21.50	கொள்ளளவு 120 மி.க. அடியிலிருந்து 190 மி.க அடியாக உயர்வதன்மூலம் நாளொன்றுக்கு 72 மி.லி. குடிநீர் பயன்படுத்தப்படும்

2023 மார்ச் 29]

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பயன்கள்
2	காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூர் ஏரியினை தூர்வாரி அதன் முழு நீர்மட்ட அளவை உயர்த்துதல்	*20.00*	கொள்ளளவு *170* மி.க. அடியிலிருந்து *220* மி.க அடியாக உயர்வதன்மூலம் நாளொன்றுக்கு *200* மி.லி. குடிநீர் பயன்படுத்தப்படும்
3	திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், நேமம் ஏரியிலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர் வழங்குதல் மற்றும் வழங்கு வாய்க்காலை மேம்படுத்துதல்	*50.00*	கொள்ளளவு *350* மி.க. அடியிலிருந்து *600* மி.க அடியாக உயர்வதன்மூலம், இரண்டு நிரப்புதலில், *1.20* டி.எம்.சி. அடி கூடுதல் நீர் சேமிக்கப்படும்
4	திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் ஏரியினைத் தூர்வாரி அதன் முழு நீர்மட்ட அளவை உயர்த்துதல்	*100.00*	கொள்ளளவு *200* மி.க. அடியிலிருந்து *500* மி.க. அடியாக உயர்வதன்மூலம் ஆவடி மாநகராட்சி மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படும்

[2023 மார்ச் 29

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பயன்கள்
5	சென்னை மாவட்டம், மாதவரம் இரட்டை ஏரியினைத் தூர்வாரி அதன் முழு நீர்மட்ட அளவை உயர்த்துதல்	40.00	கொள்ளளவு 32 மி.க. அடியிலிருந்து 62 மி.க. அடியாக உயர்வதன்மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குக் குடிநீர் வழங்கப்படும்

இவற்றிற்கு நிர்வாக அனுமதி அளிப்பதற்கான கருத்துருக்கள் பரிசீலனையிலுள்ளன.

13.0. வெளிநாட்டு நிதியதவி பெறும் திட்டங்கள்

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை" குறள்.

13.1. உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தை, 66 உப வடிநிலங்களில் 5.43 இலட்சம் ஹெக்டேர் பாசனப்பரப்பு பயன்பெறும் வகையில் ரூ.2,962 கோடி மதிப்பீட்டில் 2018 ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இத்திட்டம், வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட நீர்வள நிலவளத் திட்டத்தின் (IAMWARM) தொடர் திட்டமாகும்.

இத்திட்டத்தை நீர்வளத் துறை, தொடர்புடைய 6 துறைகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், 4 கட்டங்களாக நீர்வளத் துறையின்மூலம் ரூ.2,131.34 கோடி மதிப்பீட்டில் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளைப் புனரமைத்தல், ஏரியின் நீர்ப்பரப்பு பகுதியில் செயற்கைமுறை நீர்செறிவூட்டும் கிணறுகளை அமைத்தல், காவிரி

2023 மார்ச் 29]

கழிமுகப் பகுதி மற்றும் பிற உப வடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஏரிகள் மற்றும் பாசன வாய்க்கால்கள் புனரமைப்புப் பணிகள்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 59 ஏரி அமைப்புகளில் உள்ள 57 ஏரிகள் மற்றும் 2 பிரதான பாசன வாய்க்கால்களில் புனரமைப்பு பணிகளை 16 சிப்பங்களாகத் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தில், உலகவங்கியின் நிதியின்கீழ் மேற்கொள்ள ரூ.43.63 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 16 சிப்பங்களிலும் பணிகள் முடிவடைந்துள்ளன.

கட்டம்-I பணிகள்

18 உப வடிநிலங்களில், 1,325 ஏரிகள் மற்றும் 107 அணைக்கட்டுகள் ஆகியவற்றைப் புனரமைக்கவும் மற்றும் 42 செயற்கைமுறை நீர் செறிவூட்டும் கிணறுகள் அமைக்கவும், 204 சிப்பங்களாகத் தொகுக்கப்பட்டு ரூ.743.57 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.1.86 கோடி மதிப்பீட்டிலான 18 சிப்பங்களாக தொகுக்கப்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மைத் தொடர்பான பணிகளும் உள்ளடங்கும்.

185 சிப்பங்களில் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. 1 சிப்பப் பணிகள் இரத்து செய்யப்பட்டன. சுற்றுச்சூழல் மேலாண்மைத் தொடர்பான 18 சிப்பங்களின் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

கட்டம்-II பணிகள்

16 உப வடிநிலங்களில் 906 ஏரிகள், 181 அணைக்கட்டுகள் ஆகியவற்றைப் புனரமைக்கவும் மற்றும் 37 செயற்கைமுறை நீர்செறிவூட்டும் கிணறுகள் அமைக்கவும் 57 சிப்பங்களாகத் தொகுக்கப்பட்டு ரூ.649.55 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த 57 சிப்பங்களும் 45 சிப்பங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

[2023 மார்ச் 29

23 சிப்பங்களில் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. 6 சிப்பங்களுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், சுற்றுச்சூழல் மேலாண்மை தொடர்பான 16 சிப்பங்களின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கட்டம்-III பணிகள்

9 உப வடிநிலங்களில் 329 ஏரிகள், 56 அணைக்கட்டுகள் ஆகியவற்றைப் புனரமைக்கவும் மற்றும் 16 செயற்கைமுறை நீர்செறிவூட்டும் கிணறுகள் அமைக்கவும் 25 சிப்பங்களாக பணிகள் தொகுக்கப்பட்டு ரூ.189.81 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.0.77 கோடி மதிப்பீட்டிலான 9 சிப்பங்களாகத் தொகுக்கப்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மைத் தொடர்பான பணிகளும் உள்ளடங்கும்.

11 சிப்பங்களில் புனரமைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 5 சிப்பங்களுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. மேலும், சுற்றுச்சூழல் மேலாண்மை தொடர்பான 9 சிப்பங்களின் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

கட்டம்-IV பணிகள்

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் மற்றும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் ஆகிய திட்டங்களில் ஏற்கெனவே செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 10 உப வடிநிலங்களில் கூடுதல் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. 8 உப வடி நிலங்களில் 12 ஏரிகள், 11 அணைக்கட்டுகள், 110.10 கி.மீ. வாய்க்கால் மற்றும் 11 கால்வாய்களை புனரமைக்க, ரூ.272.18 கோடி நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. புனரமைப்பு பணிகளுக்கான மொத்தமுள்ள 14 சிப்பங்களில், 12 சிப்பங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2 சிப்பங்களில் ஆரம்பக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீதமுள்ள 2 உப வடிநிலங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பங்கேற்பு பாசன மேலாண்மை

பங்கேற்பு பாசன மேலாண்மையை ஊக்குவிப்பதில் முன்னோடியாகத் திகழும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

2023 மார்ச் 29]

பங்கேற்பு பாசன மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக விவசாயிகளுக்கு சட்டரீதியான பொறுப்புகளும், அதிகாரங்களும் வழங்கும்பொருட்டு 2000 ஆம் ஆண்டைய தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/2001) இயற்றப்பட்டு, மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு நீர்வளத் துறையால் மேலாண்மை செய்யப்படுகிறது.

பாசனப் பரப்பிலுள்ள வாய்க்கால்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கும் பாசனப் பரப்பில் சமமாக நீரினைப் பங்கீடு செய்யவும், பங்கேற்பு பாசன மேலாண்மைச் செயல்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களை நிறுவவும், வலுப்படுத்தவும் உலக வங்கியின் திட்ட பகுப்பாய்வு ஆவணத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் பங்கேற்பு பாசன மேலாண்மை நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக ரூ.79.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பங்கேற்பு பாசன மேலாண்மைப் பிரிவின் செயல்பாடுகள் பின்வருமாறு.

I. *பங்கேற்பு பாசன மேலாண்மை கோட்பாட்டினை மாநிலத்தில் செயல்படுத்துவதைக் கண்காணித்தல்.*

II. *தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம் 2000-ன்படி, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள், பகிர்மானக் குழுக்கள், திட்டக் குழுக்கள் மற்றும் உச்ச நிலைக் குழு அமைப்பதற்கு வழி நடத்துதல்.*

III. *திட்டப் பகுதியில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கும், தொடர்புடைய அமைப்புகளுக்கும் திறனை மேம்படுத்துதல்.*

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தில் அனைத்து பாசனப் பகுதிகளில் 61 உப வடிநிலங்களில் இதுவரை தேர்வு செய்யப்பட்ட 2,800 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களை அமைக்க இரண்டாம் முறை தேர்தலும் மற்றும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தில் 43 உப வடிநிலங்களில்

சுமார் 1,500 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களை அமைக்க முதன்முறை தேர்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை, 2,368 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான இரண்டாம் முறை தேர்தலும், 618 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான முதன்முறை தேர்தலும், 29 மாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

13.2. அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்–II (DRIP- II)

அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-II, தமிழ்நாட்டிலுள்ள அணைகளின் பலம், பாதுகாப்பு மற்றும் இயக்க செயல்திறன் மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்கத்தில், உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.610.26 கோடி (நீர்வளத் துறை: ரூ.582.31 கோடி & வேளாண் பொறியியல் துறை: ரூ.27.95 கோடி) திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-I-ன் மிகை பணிகளின் செலவீனத் தொகை ரூ.28.12 கோடியினை இத்திட்டத்தில் மேற்கொள்ள அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்ட காலம் ஏப்ரல் 2021-ல் தொடங்கி 6 ஆண்டுகள் ஆகும்.

அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம்-II-ன் முக்கியக் கூறுகள்:

1. அணை மற்றும் மேலாண்மையைத் திட்டமிடல்.
2. அணை பாதுகாப்பு நிறுவன அமைப்பை வலுப்படுத்துதல்.
3. நிலையான இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கு புதிய நிதியாதாரத்தை உருவாக்குதல் மற்றும் அணைகளை இடர்களிலிருந்து பாதுகாப்பதற்கான மேலாண்மை.
4. திட்ட மேலாண்மை.

அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம்–II–ன்கீழ் 37 அணைகளை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 32 நீர்வளத் துறை அணைகளுக்குப் புனரமைப்புப் பணி நீர்வளத் துறையினாலும், 4 நீர்வளத் துறை அணைகளில் புனரமைப்பு பணிகளும் மற்றும் நீர்பிடி பரப்புப் பகுதியில் மண் அரிப்பை தடுக்கும் பணிகள் நீர்வளத் துறை மற்றும் வேளாண் பொறியியல்

2023 மார்ச் 29]

துறை மூலமும், 1 அணையில் நீர்பிடி பரப்புப் பகுதியில் மண் அரிப்பைத் தடுக்கும் பணி வேளாண் பொறியியல் துறை மூலமும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஆயத்த நடவடிக்கையாக அணைப் பாதுகாப்புக் குழு ஆய்வு, திட்ட வரைவு அறிக்கை தயாரித்து உலக வங்கி/ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கிகளின் ஒப்புதல் பெறுதல், வரைவு ஒப்பந்தப்புள்ளிகள் தயாரித்து ஒப்புதல் பெறுதல் ஆகியவை முன்னேற்றத்தில் உள்ளன. தற்போதுவரை அணைப் பாதுகாப்பு ஆய்வுக் குழு 24 அணைகளைப் பார்வையிட்டு அக்குழுவின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது. ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

சாத்தனூர், சோலையாறு, மேல் நீராறு, கெலவரப்பள்ளி மற்றும் பவானி சாகர் அணைகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.261.26 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் சாத்தனூர் அணையில் 92 சதவிகிதப் பணிகள், சோலையாறு அணையில் 41 சதவிகிதப் பணிகள் மற்றும் மேல்நீராறு அணையில் 20 சதவிகிதப் பணிகள் முடிவுற்றுள்ளன. கெலவரப்பள்ளி அணையில் பணிகள் தொடங்கப்படவுள்ளன. மேலும், பவானி சாகர் அணைக்கு ஆரம்பக் கட்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-1 பணிகளில் மீதமுள்ள பணியான 17 நீர்வளத் துறை அணைகளில் நிகழ்நேர அணை உறுதித் தன்மை கண்காணிப்பு கருவிகள் பொருத்தும் பணிகள் முடிவுற்று, கருவிகளிலிருந்து பெறப்படும் தகவல்களைச் சரிபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

13.3. தேசிய நீரியல் திட்டம் (NHP)

தேசிய நீரியல் திட்டமானது உலக வங்கி நிதியுதவியுடன் நாடு தழுவிய அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும். நீர்வள ஆதாரங்களின் பரப்பு, தரம் மற்றும் அணுகும் நிலை ஆகியவற்றை மேம்படுத்துதல், வெள்ளம் மற்றும் வடிநிலங்களின் நீர் ஆதாரங்களை மதிப்பிடுதல்/திட்டமிடுதல் ஆகியவை தொடர்பாக முடிவெடுக்க உதவும் ஆதார அமைப்பினை உருவாக்குவது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் தேசிய நீரியல் திட்டத்தின் முகமை அமைப்பாக செயல்படுகிறது.

[2023 மார்ச் 29

இத்திட்டத்தின் திட்டக் காலம் 2016-2017 ஆம் ஆண்டு முதல் 2023-2024 ஆம் ஆண்டு வரையிலான 8 ஆண்டுகள் ஆகும். நவம்பர் 2022-ல் , ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாக்கத் திட்டத்தின்படி பின்வரும் 4 பணிகளுக்கு ரூ.103.71 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது:-

(ரூ. கோடியில்)

வ. எண்	பணியின் விவரம்	ஒதுக்கீடு
1	நீர் வானிலையியல் தரவு (Hydro met.) சேகரிக்கும் அமைப்பு	94.46
2	நீர்வள தகவல் அமைப்பு	1.30
3	நீர்வள செயல்பாட்டு மேலாண்மை அமைப்பு	0.30
4	நிறுவன திறன் மேம்படுத்துதல்	7.65
	மொத்தம்	**103.71**

இதுவரை பெறப்பட்டுள்ள ரூ.39.15 கோடி மானியத்தில் ரூ.30.00 கோடி (76.62%) செலவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கியச் சாதனைகள்

1. ஒரு நாளைக்கு நான்கு முறை ஆழ்துளைக் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டத்தைத் தெரிவிக்கும் 386 நிகழ்நேர நீர் மட்ட அளவு பதிவுக் கருவிகள் (DWLRs) நிறுவும் பணி ரூ.4.28 கோடி செலவில் நிலத்தடி நீர் நிகழ்நேர தரவு சேகரிக்கும் அமைப்பு (GWRTDAS) பணியின்கீழ் முடிக்கப்பட்டுள்ளது.

2. 45 தானியங்கி வானிலை நிலையங்கள், 100 தொலையுணர்வு தானியங்கி மழைநீர் மானிகள் மற்றும் 49 தானியங்கி மேற்பரப்பு நீர் அளவு பதிவு செய்யும் கருவிகள் ஆகியவற்றை நிறுவும் பணிகள் மேற்பரப்பு நீர் நிகழ் நேர தகவல்கள் சேகரிக்கும் அமைப்பின்கீழ் (SWRTDAS) ரூ.10.50 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. மேற்கூறிய இரண்டு அமைப்புகளும் நிறுவப்பட்டவுடன் ஒரு முழுமையான நிகழ்நேர நீர் தகவல் அமைப்பு மாநிலத்திற்குக் கிடைக்கும்.

2023 மார்ச் 29]

3. *அக்னியாறு, தாமிரபரணி, வராகநதி மற்றும் வைகைப் படுகைகளில் நில உருவ இயல் கணக்கெடுப்புப் பணிகள் மற்றும் தகவல்கள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.*

4. *நவீன நீர் தர உபகரணங்கள், புவி இயற்பியல் உபகரணங்கள் மற்றும் நீர் வெளியேற்று அளவிடும் கருவிகள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.*

13.4. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் காவிரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதலைத் தழுவல் திட்டம்-II

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் காவிரி கழிமுகப் பகுதியில் வெண்ணாறு உப வடிநிலத்தில் கடற்கரை மாவட்டங்களைப் புயல்களிலிருந்து பாதுகாத்தல், காலநிலை மாறுபாடுகளினால் ஏற்படும் வெள்ள அபாயங்களைத் தணித்தல், பாசனத்திற்கான நீர் பங்கீட்டினை மேம்படுத்துதல், கடல்நீர் உட்புகுவதைத் தடுத்தல் என்பது பருவநிலை மாறுதலைத் தழுவல் திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.1,560 கோடி ஆகும். ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவிப் பங்கு ரூ.1,092 கோடி மற்றும் மாநிலத்தின் பங்கு ரூ.468 கோடி ஆகும். ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி பங்களிப்பு 70%-க்கு மிகாமலும், மாநிலத்தின் நிதி பங்களிப்பு 30%-க்கு குறையாமலும் என்ற விகிதத்திலுள்ளது.

இத்திட்டத்தில், கூடுதல் கடைமடை நீரொழுங்கிகள் அமைத்தல், அனைத்து கடைமடை நீரொழுங்கிகளையும் மறுகட்டுமானம் செய்தல் மற்றும் புனரமைத்தல், வடிகால்களைத் தூர்வாரி அகலப்படுத்தி உரிய தர நிலைகளுக்கு மேம்படுத்தும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்குட்பட்ட காவிரி கழிமுகத்தின்கீழ் வெண்ணாறு உப வடி நிலத்திலுள்ள அரிச்சந்திரா நதி, அடப்பாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாய் மற்றும் உப்பனாறு வடிகால் மற்றும் 13 நீரேற்று திட்டப் பணிகள் ரூ.1,110.17 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு பணிகள் முடிக்கப்பட்டு 78,000 ஹெக்டேர் பாசன நிலம் பயன்பெறுகின்றன.

[2023 மார்ச் 29

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் வெண்ணாறு, பாமினியாறு, கோரையாறு, கடுவையாறு, மரக்ககோரையாறு மற்றும் மனங்கொண்டனாறு என 6 ஆறுகள் மற்றும் 6 நீரேற்று நிலையங்கள் உள்ளிட்ட பணிகளுக்கு ரூ.1,825 கோடி (250 மில்லியன் US டாலர்) செயல்படுத்த ஆரம்பத் திட்ட அறிக்கை ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி பெறும்பொருட்டு ஒன்றிய அரசின், பொருளாதார விவகாரத் துறைக்கு 22.9.2021 அன்று இணையதள வழியாக அனுப்பப்பட்டது. மேலும், இது தொடர்பாக கோரப்பட்ட குறிப்புரைகளுக்கான பதிலறிக்கைகள் 10.1.2022, 17.2.2022 மற்றும் 21.9.2022 ஆகிய தேதிகளில் இணையதள வழியாகவும் மின்னஞ்சல் வழியாகவும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், ஒன்றிய அரசின், பொருளாதார விவகாரத் துறையின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. மத்திய நீர் ஆணையம் கோரும் கூடுதல் விவரங்களை அளித்து ஒப்புதல் பெறுவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

14.0. ஒன்றிய அரசின் பங்களிப்பு நிதியுதவித் திட்டங்கள்

14.1. பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா (PMKSY-HKKP) திட்டத்தின்கீழ் நீர்நிலைகளைச் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டம்

ஒன்றிய-மாநில அரசுகளின் பங்களிப்போடு, பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா (PMKSY)- ஹர் கீத் கோ பானி (HKKP) திட்டத்தின்கீழ் நீர்நிலைகளைச் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கமானது தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்நிலைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளை பாதுகாத்தல் மற்றும் அதன் பாசன பகுதியை மேம்படுத்துதல், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகரித்தல், நிலத்தடி நீரைச் செறிவூட்டுதல், வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் தேவைக்கான குடிநீர் இருப்பை அதிகரிக்கச் செய்வதாகும்.

பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா திட்டத்தின் புதிய வழிகாட்டுதலின்படி ஜனவரி 2022 முதல் தமிழ்நாட்டிற்கான நிதி பங்கீட்டு விகிதம் 60:40 (ஒன்றியம் : மாநிலம்)

2023 மார்ச் 29]

கட்டம் I முதல் IV வரை

கட்டம் I, II, III மற்றும் IV–ன்கீழ், 236 ஏரிகளில் ரூ.124.56 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு, 23,843 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறுகின்றன.

கட்டம் V, VI மற்றும் VII

ஐந்தாவது கட்டத்தின்கீழ், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 9 ஏரிகளை ரூ.4.17 கோடி மதிப்பீட்டில், 1,865.40 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும் வகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

2021-2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் அடிப்படையில், இத்திட்டத்தின்கீழ் 115 ஏரிகள் ஆறாம் கட்டத்திலும், 85 ஏரிகள் ஏழாம் கட்டத்திலும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஆறாவது கட்டத்தின்கீழ், கடலூர் (1), தருமபுரி (6), கள்ளக்குறிச்சி (2), கிருஷ்ணகிரி (4), மதுரை (1), புதுக்கோட்டை (27), இராமநாதபுரம் (10), ராணிப்பேட்டை (3), சிவகங்கை (24), தென்காசி (1), தேனி (1), திருச்சிராப்பள்ளி (5), திருவள்ளூர் (3), திருவண்ணாமலை (4), தூத்துக்குடி (7), வேலூர் (9), விழுப்புரம் (6) மற்றும் விருதுநகர் (1) மாவட்டங்களில் உள்ள 115 ஏரிகள் ரூ.71.89 கோடி மதிப்பீட்டில், 28,260 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும் வகையில் பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை 3 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 112 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஏழாவது கட்டத்தின்கீழ், செங்கல்பட்டு (6), கடலூர் (6), காஞ்சிபுரம் (3), புதுக்கோட்டை (25), ராணிப்பேட்டை (8), சிவகங்கை (30), திருவள்ளூர் (2), திருவண்ணாமலை (1) மற்றும் விருதுநகர் (4) மாவட்டங்களில் உள்ள 85 ஏரிகள் ரூ.90.08 கோடி மதிப்பீட்டில், 24,505 ஏக்கர் பாசன நிலம் பயன் பெறும் வகையில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 3 பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. மீதமுள்ள 82 பணிகள் விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கட்டம் VIII மற்றும் IX

எட்டாவது கட்டத்தின்கீழ், தருமபுரி (4), கள்ளக்குறிச்சி (3), கிருஷ்ணகிரி (8), புதுக்கோட்டை (30), இராமநாதபுரம் (27),

[2023 மார்ச் 29

ராணிப்பேட்டை (4), சிவகங்கை (17), திருவள்ளூர் (1) மற்றும் திருவண்ணாமலை (6) மாவட்டங்களில் உள்ள 100 ஏரிகள் ரூ.92.83 கோடி மதிப்பீட்டில், 20,902 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும் வகையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஒன்பதாவது கட்டத்தின்கீழ், கள்ளக்குறிச்சி (11), இராமநாதபுரம் (39), சிவகங்கை (49) மற்றும் விருதுநகர் (1) மாவட்டங்களில் உள்ள 100 ஏரிகள் ரூ.100.93 கோடி மதிப்பீட்டில், 15,517 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும் வகையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் அதிகளவிலான ஏரிகளைப் பல்வேறு கட்டங்களாக வரும் இரண்டு ஆண்டுகளில் எடுத்து செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

15.0. ஆறுகள் பாதுகாப்புத் திட்டம்

15.1. சென்னை ஆறுகள் மறுசீரமைப்புப் பணிகள்

i) அடையாறு

2018 ஆம் ஆண்டில், சென்னை ஆறுகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT) நிதியின்கீழ், அடையாறு ஆற்றின் தொடக்கத்திலிருந்து முகத்துவாரம் வரை சீரமைப்புப் பணிகளை ரூ.555.46 கோடி மதிப்பீட்டில் 56 குறுகியகால உப திட்டங்களாக 7 துறைகளின்மூலம் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் திருநீர்மலை முதல் அடையாறு முகத்துவாரம் வரை 7 நிலைகளில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள நீர்வளத் துறைக்கு ரூ.104.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.73.13 கோடி மதிப்பீட்டிலான 5 பணிகள் (நிலை 2 முதல் 6 வரை) முடிவுற்றுள்ளன.

நிலை 1 பணியான சென்னை மாவட்டத்தில் ரூ.21.63 கோடி மதிப்பீட்டில் அடையாறு ஆற்றின் முகத்துவாரம் முதல் திரு.வி.க பாலத்தின் கீழ்புறம் வரை (தொலைகல் 0 மீட்டர் முதல் 1963 மீட்டர் வரை) அகலப்படுத்தி, தூர்வாருதல் பணிக்கு கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

நிலை 7 பணியான ரூ.9.55 கோடி மதிப்பீட்டில் சென்னை அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தை திறந்துவிடுதல் பணிக்கு, கடலோர ஒழுங்கு முறை ஆணையத்தின் ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பின் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2023 மார்ச் 29]

ii) கூவம் ஆறு

ஒருங்கிணைந்த கூவம் ஆறு சூழலியல் மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.604.77 கோடி மதிப்பீட்டில் சென்னை ஆறுகள் சீரமைப்பு அறக்கட்டளையின் நிதியுதவியுடன் 60 குறுகிய கால துணைத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தில் பருத்திப்பட்டு அணைக்கட்டு முதல் முகத்துவாரம் வரை சுமார் 27 கி.மீ. நீளத்தில் கூவம் ஆற்றினை 7 நிலைகளில் சீரமைக்க ரூ.135.57 கோடி நீர்வளத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.79.93 கோடி மதிப்பீட்டிலான 6 பணிகள் (நிலை 2 முதல் 7 வரை) முடிவடைந்துள்ளன.

நிலை-1 கூவம் ஆற்றின் முகத்துவாரம் முதல் நேப்பியர் பாலம் வரை (தொலைகல் 0 மீட்டர் முதல் 700 மீட்டர் வரை ரூ.70 கோடி திருத்திய மதிப்பீட்டில்) சீரமைக்க 15.9.2022 அன்று கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

iii) பக்கிங்காம் கால்வாய்

பெருநகர சென்னை நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளை புதுப்பித்து மறுசீரமைக்க, அதாவது பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் தொடர் வடிகால்கள், அடையாறு மற்றும் கூவம் ஆற்றின் பெரிய வடிகால்களை சென்னை ஆறுகள் சீரமைப்பு அறக்கட்டளையின் நிதியுதவியுடன் ரூ.1,281.88 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் நீர்வளத் துறைக்கு ரூ.1,014.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

iv) அடையாறு, கூவம் ஆறு மற்றும் பக்கிங்காம் கால்வாயின் எல்லைகளை வரையறுத்தல்

சென்னை ஆறுகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதியின்கீழ் Digital Global Positioning System *(*DGPS*) உதவியுடன் அடையாறு மற்றும் கூவம் (நிலை-1) ஆறுகளின் எல்லைகளை வரையறுத்து ரூ.3.87 கோடி மதிப்பீட்டில் எல்லை கற்களை நடுவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.*

மேலும், பக்கிங்காம் கால்வாயின் எல்லைகளை வரையறுக்கும் பணிக்கு ரூ.11.93 கோடி மதிப்பீட்டிற்கு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை ஒப்புதல் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

[*2023 மார்ச் 29*

15.2. நடந்தாய் வாழி காவிரி திட்டம்

*நடந்தாய் வாழி காவிரி திட்டத்தில், தமிழ்நாட்டில் காவிரி ஆறு மற்றும் அதன் கிளை ஆறுகளைப் பாதுகாத்தல், புத்துயிர் பெறச் செய்தல், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் மாசுபடுதலை முழுமையாகத் தடுத்தல் ஆகியவை திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கங்கை புனரமைப்பு (*Namami Gange*) திட்டத்தினை ஆதாரமாகக் கொண்டு இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*

இத்திட்டத்தில், காவிரி மற்றும் அதன் துணை ஆறுகளைப் புனரமைக்கும் பணிக்கு ரூ.11,250 கோடி மதிப்பீட்டில் முதல் நிலை திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கொள்கை அளவில் ஒப்புதல் கோரி ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்திற்கு 21.10.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகம் அதன் கருத்துகளை 10.2.2020 அன்று தெரிவித்துள்ளது.

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி திருவாளர்கள் வாப்காஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை இரண்டு கட்டங்களாக முறையே மேட்டூரிலிருந்து திருச்சிராப்பள்ளி வரை முதல் கட்டம் எனவும், திருச்சிராப்பள்ளியிலிருந்து கடல் முகத்துவாரம் வரை இரண்டாம் கட்டம் எனவும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்ட திட்ட அறிக்கையின் முதல் பகுதியாக ரூ.1,631.32 கோடிக்கான மதிப்பீடு ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்திற்கு 20.11.2020 அன்று சமர்ப்பிக்கப்பட்டு சிறப்பு திட்டமாகக் கருதி ரூ.713.39 கோடி நிதியுதவி கோரப்பட்டது.

ஜல் சக்தி அமைச்சகத்தின் தேசிய நதிகள் பாதுகாப்பு இயக்குநரகத்தின் அதிகாரிகள் 4.3.2022 முதல் 7.3.2022 வரை நடந்தாய் வாழி காவிரி திட்டப் பகுதியைப் பார்வையிட்டு, திருவாளர்கள் வாப்காஸ் நிறுவனம் தயாரித்து வரும் திட்ட அறிக்கையினைத் திருத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்கள்.

*தேசிய நதிகள் பாதுகாப்பு இயக்குநரகம் (*NRCD*) குழுவுடன் புதுதில்லியில் நடைபெற்ற இறுதி விவாதங்களின் அடிப்படையிலும், நடந்தாய் வாழி காவிரி திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கையினை இறுதி செய்ய, கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத் துறை அவர்களின் தலைமையில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம)*

2023 மார்ச் 29]

வனத் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர்த் துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மற்றும் நிதித் துறை ஆகிய துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகவும், தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, திருச்சி மண்டலம் அவர்களை உறுப்பினர் செயலராகவும் உள்ளடக்கி அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவில் விவாதிக்கப்பட்டதன் அடிப்படையிலும், கழிவுநீர் மேலாண்மை, நதிமுகப்பு மேம்பாடு, மேற்பரப்பு தூய்மை, திடக்கழிவு மேலாண்மை, காவிரி கிராமம்-ஆற்றங்கரை ஊர் மக்களின் பங்களிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகள், அதிக ஆபத்துள்ள மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகள் மற்றும் தனி கவனம் தேவைப்படும் பகுதிகளில் வாழும் மக்களின் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றப் பணிக்கான தள ஆய்வு, நீரின் தரத்தினைப் பாதுகாக்க நிகழ் நேர கண்காணிப்பு, கல்லணையில் அருங்காட்சியகம் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு, 10 ஒருங்கிணைந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகிய பணிகளுக்கு ரூ.3,090.75 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டத்திற்கான திருத்திய விரிவான திட்ட அறிக்கை ஒன்றிய அரசின் தேசிய நதிகள் பாதுகாப்பு இயக்குநரகத்திற்கு நிதியுதவி கோரி அனுப்பப்பட்டுள்ளது.

16.0. முன்னேற்றத்திலுள்ள பணிகள் (மாநில நிதி மற்றும் நபார்டு)

16.1. புதிய பாசன உள்கட்டமைப்புகளை உருவாக்குதல்

i. *பெரம்பலூர் மாவட்டம், 4,194 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் மருதையாற்றின் குறுக்கே ரூ.149.40 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைத்தல்.*

ii. *நாகப்பட்டினம் மாவட்டம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் கடல் நீர் உட்புகுதலைத் தடுக்க ரூ.65.848 கோடி மதிப்பீட்டில் 3 கடைமடை நீரொழுங்கிகள் கட்டுதல்.*

iii. *தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 428.68 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் ரூ.12.71 கோடி மதிப்பீட்டில் 2 நீரொழுங்கிகள் கட்டுதல்.*

iv. *கடலூர், காஞ்சிபுரம், சிவகங்கை (4), தென்காசி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 10,154.54 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் ரூ.149.331 கோடி மதிப்பீட்டில் 8 அணைக்கட்டுகள் கட்டுதல்.*

[2023 மார்ச் 29

v. சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 1,247 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் ரூ.30.98 கோடி மதிப்பீட்டில் 2 புதிய ஏரிகள் அமைத்தல்.

vi. தேனி மாவட்டம், 535.77 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் ரூ.4.68 கோடி மதிப்பீட்டில் கசிவு நீர்க் குட்டை மற்றும் தடுப்பணை அமைத்தல்.

vii. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி (2-எண்ணேகொல் மற்றும் அலியாளம்), தருமபுரி (ஜெர்த்தலாவ்), இராமநாதபுரம் (கஞ்சம்பட்டி ஓடை), திருநெல்வேலி (கன்னடியன் கால்வாயின் குறுக்கே நீர்வழிந்தோடி) மற்றும் தென்காசி (இராமநதி–ஜம்புநதி இணைப்பு மற்றும் ஊர்மேலழகியான் ஏரி) ஆகிய மாவட்டங்களில் 13,189.80 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் ரூ.383.23 கோடி மதிப்பீட்டில் புதிய கால்வாய்கள் அமைத்தல்.

viii. செங்கல்பட்டு (1), கோயம்புத்தூர் (3), திண்டுக்கல் (12), ஈரோடு (3), காஞ்சிபுரம் (1), கன்னியாகுமரி (1), கரூர் (1), கிருஷ்ணகிரி (1), மதுரை (2), பெரம்பலூர் (4), ராணிப்பேட்டை (1), சேலம் (4), சிவகங்கை (1), தென்காசி (1), தஞ்சாவூர் (2), தேனி (5), திருப்பத்தூர் (2), திருவள்ளூர் (3), திருவண்ணாமலை (1), தூத்துக்குடி (2), திருச்சிராப்பள்ளி (3), திருப்பூர் (4), வேலூர் (4) மற்றும் விருதுநகர் (1) மாவட்டங்களில் 25,379.13 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் ரூ.360.056 கோடி மதிப்பீட்டில் 63 தடுப்பணைகள் அமைத்தல்.

ix. தூத்துக்குடி மாவட்டம், 2,977.56 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் கடைமடை தாமிரபரணி ஆறு கடலில் சங்கமிக்கும் இடங்களில் ரூ.46.14 கோடி மதிப்பீட்டில் கடைமடை தடுப்பணைகள் கட்டுதல்.

x. தஞ்சாவூர் (3) மற்றும் திருச்சிராப்பள்ளி (1) மாவட்டங்களில் நிலத்தடி நீர் செறிவூட்ட ரூ.32.10 கோடி மதிப்பீட்டில் 4 படுகை அணைகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தடுப்புச் சுவர் கட்டுதல்.

xi. ராணிப்பேட்டை, தஞ்சாவூர், திருப்பத்தூர், வேலூர் (2) மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ரூ.106.83 கோடி

2023 மார்ச் 29]

மதிப்பீட்டில் 6 செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டு அமைப்புகள் (நிலத்தடி தடுப்புச்சுவர்) பாலாறு, மலட்டாறு மற்றும் காவிரியாற்றின் குறுக்கே கட்டுதல்.

xii. *சிவகங்கை மற்றும் தென்காசி மாவட்டங்களில் 1,800.912 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் ரூ.4.16 கோடி மதிப்பீட்டில் 2 பிரிவு அணைகள் கட்டுதல்.*

xiii. *கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ.8.75 கோடி மதிப்பீட்டில் 6 பாலங்கள் கட்டுதல்.*

xiv. *தருமபுரி (1), திண்டுக்கல் (2), ஈரோடு (7), மதுரை (1), இராமநாதபுரம் (1), தேனி (2), திருச்சிராப்பள்ளி (1), திருவண்ணாமலை (1) மற்றும் திருப்பூர் (1) மாவட்டங்களில் ரூ.9.096 கோடி மதிப்பீட்டில் 17 அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்.*

16.2. பாசனக் கட்டமைப்புகள் மற்றும் அமைப்புகளைப் புனரமைத்தல்

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் தவிர செயலாக்கத்திலுள்ள நீர்த்தேக்கங்களைப் புனரமைத்தல்

i) *கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள முல்லைப் பெரியாறு அணையில் ரூ.21.99 கோடி மதிப்பீட்டில் அணைகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள்*

ii) *குடகனாறு அணை (திண்டுக்கல் மாவட்டம்), மணிமுக்தா நதி அணை (கள்ளக்குறிச்சி மாவட்டம்), ஸ்டான்லி நீர்த்தேக்கம் (சேலம்). மஞ்சளாறு அணை, (தேனி மாவட்டம்) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்), சத்தியமூர்த்தி சாகர் அணை (திருவள்ளூர் மாவட்டம்) வெலிங்டன் நீர்த்தேக்கம் (கடலூர் மாவட்டம்), வீடூர் (விழுப்புரம் மாவட்டம்), பரம்பிக்குளம் அணை (பாலக்காடு மாவட்டம்), மற்றும் துணக்கடவு அணை (பாலக்காடு மாவட்டம்) ஆகியவற்றில் ரூ.117.51 கோடி மதிப்பீட்டில் அணைகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் நீரியியல் இயந்திரங்களைப் புதுப்பித்தல்.*

[2023 மார்ச் 29

iii) *திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்தில் ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் உள்வாங்கி, நீரொழுங்கி போன்ற கூடுதல் கட்டுமானங்கள் கட்டுதல்*

செயலாக்கத்தில் உள்ள இதர புனரமைப்புப் பணிகள்

iv) *கரூர் மாவட்டத்தில் உள்ள கட்டளை கதவணையினை ரூ.185.26 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.*

v) *கோயம்புத்தூர் (1), தருமபுரி (2), திண்டுக்கல் (4), கள்ளக்குறிச்சி (1), கன்னியாகுமரி, புதுக்கோட்டை (2), இராமநாதபுரம் (2), சிவகங்கை (1), திருச்சிராப்பள்ளி (1) மற்றும் விழுப்புரம் (7) மாவட்டங்களில் ரூ.52.64 கோடி மதிப்பீட்டில் 22 அணைகட்டுகளைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்/புதுப்பித்தல்.*

vi) *திருவள்ளூர் மாவட்டம், கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்-கண்டலேறு பூண்டி கால்வாயின் தொலைகல் 3.88 கி.மீ. முதல் 10.00 கி.மீ. வரை பாதிப்படைந்த பகுதிகளை ரூ.24.79 கோடி மதிப்பீட்டிலும், ஊட்டுக்கால்வாயின் தொலைகல் 14.285 கி.மீ. முதல் 21.500 கி.மீ. வரை ரூ.19.05 கோடி மதிப்பீட்டிலும் சேதமடைந்த பகுதிகளைப் பலப்படுத்துதல்.*

vii) *தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் ரூ.3.12 கோடி மதிப்பீட்டில் 58 கிராம கால்வாய் புனரமைத்தல்.*

viii) *திருப்பூர் மாவட்டம், சமமட்டக்கால்வாய் தொலைகல் 30.100 கி.மீ. முதல் 49.300 கி.மீ. வரை விடுபட்டுள்ள பகுதிகளை ரூ.72 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி.*

ix) *திண்டுக்கல் (6), ஈரோடு (1), ஈரோடு மற்றும் கரூர் (1), கரூர் (2), மதுரை (3), பெரம்பலூர் (1), இராமநாதபுரம் (2), கடலூர் (1), கோயம்புத்தூர் (6), கிருஷ்ணகிரி (2), பாலக்காடு (1), புதுக்கோட்டை (1), சிவகங்கை (2), தேனி (1), தூத்துக்குடி (1), திருவாரூர் (1), திருப்பூர் (6), திருச்சிராப்பள்ளி (2), திருவண்ணாமலை (1) விழுப்புரம் (2), விழுப்புரம் மற்றும் கடலூர் (1) மாவட்டங்களில் (44 பணிகள்) ரூ.307.08 கோடி மதிப்பீட்டில் கால்வாய்/வாய்க்கால் மற்றும் அதன் கட்டுமானங்களைப் புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல்.*

2023 மார்ச் 29]

x) *கோயம்புத்தூர், திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் ரூ.24.59 கோடி மதிப்பீட்டில் சாலைகள்/பாலங்கள்/குழாய் பாலங்களைப் புனரமைத்தல் (5 பணிகள்).*

xi) *வேலூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத்தின் பூங்காவினை ரூ.4.67 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்.*

xii) *கோயம்புத்தூர் (3), இடுக்கி (1), திருநெல்வேலி (1) மற்றும் திருவள்ளூர் (1) மாவட்டங்களில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் 6 கட்டடங்களைப் புனரமைத்தல்.*

xiii) *கடலூர் (1), பெரம்பலூர் (1), சேலம் (1), திருச்சிராப்பள்ளி (1), திருப்பத்தூர் (1), திருவள்ளூர் (1), வேலூர் (1) மற்றும் விருதுநகர் (2) மாவட்டங்களில் 9 பணிகள் ரூ.45.43 கோடி மதிப்பீட்டில் சீரமைத்தல்/புனரமைத்தல்/புதுப்பித்தல்/மீட்டெடுத்தல்.*

ஏரிகளில் புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் (RRR மற்றும் TNIAMP பணிகளைத் தவிர்த்து)

xiv) *சென்னை மாவட்டம், கொரட்டூர், கோவிலம்பாக்கம், எஸ்.கொளத்தூர், மேடவாக்கம், சித்தாலப்பாக்கம், ஜெலடியான்பேட்டை, நாராயணபுரம், பெருங்குடி மற்றும் நெமிலிச்சேரி ஆகிய 9 ஏரிகளில் ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள்.*

xv) *செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மதுராந்தகம் ஏரியில் 2,853 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் ஏரியின் கொள்ளளவினை அதிகரிக்கும் வகையில் ரூ.120.24 கோடி மதிப்பீட்டில் ஏரியினை ஆழப்படுத்தி, கரையினைப் பலப்படுத்துதல் மற்றும் கலிங்கு மறுவடிவமைத்தல்.*

xvi) *செங்கல்பட்டு மாவட்டத்தில் 14 ஏரிகளை ரூ.90.03 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து, மேம்படுத்துதல்.*

xvii) *காஞ்சிபுரம் மாவட்டத்தில், செம்பரம்பாக்கம், சோமங்கலம், மலைப்பட்டு, அத்தென்செரி, வள்ளிமலை மற்றும் முத்தரசிக்குப்பம் ஆகிய 6 ஏரிகளில் ரூ.6.36 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.*

[2023 மார்ச் 29

xviii) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையின் உபரி நீரினை நீரேற்றுமூலம் நீர் வழங்கும் திட்டத்தில் 79 ஏரிகள் மற்றும் குட்டைகள் ரூ.42.10 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்/மேம்படுத்துதல்.

xix) சிவகங்கை மாவட்டம், 42 முன்னாள் ஜமீன் ஏரிகளில் ரூ.24.14 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்தல்/புனரமைத்தல்.

xx) விழுப்புரம் மாவட்டம், கழுவேலி ஏரியில் ரூ.161.00 கோடி மதிப்பீட்டில் 3000 ஏக்கர் பாசன நிலம் பயனடையும்வகையில் மீட்டெடுத்து நன்னீர் தேக்குதல் மற்றும் கடல்நீர் உட்புகுதலைத் தடுத்தல் மற்றும் செறிவூட்டும் ஆழ்துளை கிணறு அமைத்தல்.

xxi) கடலூர் (2), திண்டுக்கல் (3), மதுரை (3), நாமக்கல் (கோனேரிப்பட்டி ஏரி), புதுக்கோட்டை (14), இராமநாதபுரம் (15), ராணிப்பேட்டை (காவேரிப்பாக்கம்), சிவகங்கை (16), தென்காசி (4), தஞ்சாவூர் (16), தேனி (பெரியகுளம்), தூத்துக்குடி (எப்போதும் வென்றான்), திருப்பூர் (10), திருச்சிராப்பள்ளி (10), வேலூர் (இரட்டை ஏரிகள்-தரப்படவெடு மற்றும் கலிஞ்சூர்) மற்றும் விருதுநகர் (3) மாவட்டங்களில், 102 ஏரிகளில் ரூ.244.77 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

17.0. வெள்ளத் தணிப்புப் பணிகள்

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்கள்

சென்னை, செங்கல்பட்டு காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள ஆரணியாறு, கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் உப வடிநிலங்களில் மிக அதிகமாக வெள்ளப் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் நீண்டகால வெள்ளத் தணிப்புப் பணிகள் இரண்டு கட்டங்களாகச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த வெள்ளத் தணிப்புப் பணிகள்-2022-2023

சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அதிகமாக வெள்ள பாதிப்புக்குள்ளாகும் வரதராஜபுரம், பழைய

2023 மார்ச் 29]

பெருங்களத்தூர், முடிச்சூர், பள்ளிக்கரணை, ராயப்பா நகர், நந்திவரம்-கூடுவாஞ்சேரி, மணலி, வெள்ளிவாயல், கொளத்தூர் மற்றும் மாதவரம் ஆகிய பகுதிகளைப் பாதுகாக்கும்பொருட்டு அடையாறு மற்றும் கொசஸ்தலையாறு ஆறுகளை அகலப்படுத்துதல், நீர்வழித்தடங்களை மேம்படுத்துதல் மற்றும் வடிகால்கள் அமைத்தல் போன்ற 8 வெள்ளத் தணிப்புப் பணிகளை ரூ.250 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	**பணியின் பெயர்**	**மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)**	**பணிகள் முடிவுற்ற சதவிகிதம்**
1	*காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் கால்வாய் அடையாறு ஆற்றில் கலக்கும் இடத்திலிருந்து அனகாப்புத்தூர் பாலம் வரை அடையாறு ஆற்றினை அகலப்படுத்தும் பணி*	*70.00*	*70%*
2	*காஞ்சிபுரம் மாவட்டம், போரூர் ஏரியின் உபரி நீர் கால்வாயினை மேம்படுத்துதல் மற்றும் நீர் ஒழுங்கி அமைத்தல் பணி*	*34.00*	*88%*
3	*காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், தேசிய நெடுஞ்சாலையின் புறவழிச்சாலையில் கூடுதல் பெட்டி வடிவிலான கல்வெட்டுகள்* Push through *முறைமூலம் அமைத்தல் பணி*	*9.70*	*60%*

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பணிகள் முடிவுற்ற சதவிகிதம்
4	காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொலுத்துவான்சேரி சாலையில் தந்திக்கால்வாயிலிருந்து போரூர் ஏரியின் உபரி நீர் கால்வாய் வரை புதியதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைத்தல் பணி	16.70	91%
5	சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், போரூர் ஏரியில் புதிய மதகு அமைத்தல் மற்றும் போரூர் ஏரியிலிருந்து இராமாபுரம் ஓடை வரை மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணி	39.60	70%
6	திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், வெள்ளிவாயல் கிராமத்தின் அருகே செல்லும் கொசஸ்தலையாற்றின் வலது கரையின் தொலைகல் 125.60 கி.மீ. முதல் 126.60 கி.மீ. வரை கரையினை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் புதிய கரை அமைக்கும் பணி மற்றும் சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், எடையான்சாவடி, சடையான் குப்பம், மணலி புதுநகர் ஆகிய கிராமங்கள் வழியாகச்	15.00	70%

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பணிகள் முடிவுற்ற சதவிகிதம்
	செல்லும் கொசஸ்தலையாற்றின் தொலைகல் 128.00 கி.மீ. முதல் 132.00 கி.மீ. வரை கரை பலப்படுத்தும் பணி மற்றும் எடையான்சாவடி கிராமம் அருகே செல்லும் கொசஸ்தலையாற்றின் இடது கரை தொலைகல் 128.00 கி.மீ. முதல் 130.00 கி.மீ. வரை கரையினை மறுசீரமைப்பு மற்றும் புதிய கரை அமைக்கும் பணி		
7	சென்னை மாவட்டம், அயனாவரம் வட்டத்தில் கொளத்தூர் ஏரியினை ஆழப்படுத்தி கரைகளை மறுசீரமைத்தல் மற்றும் உபரிநீர் கால்வாயினை மேம்படுத்தும் பணி	7.30	35%
8	சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிக்கரணை அணை ஏரி முதல் பள்ளிக்கரணை கழுவெளி வரை பெருமூடு கால்வாய் அமைக்கும் பணி	57.70	45%

சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிகமாக வெள்ள பாதிப்புக்குக்குள்ளாகும் பகுதிகளில் ரூ.184.22 கோடி மதிப்பீட்டில் 4 பணிகளைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றன.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பணிகள் முடிவுற்ற சதவிகிதம்
I	**<u>பிரதான பணி</u>** சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் செம்மஞ்சேரி மற்றும் பெரும்பாக்கம் பகுதிகளில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு செல்லும் ஒட்டியம்பாக்கம் கால்வாய் மற்றும் மதுரப்பாக்கம் வாய்க்கால் இடையே அவசர கால வெள்ளநீர் கடத்தும் வடிகால் அமைத்தல்		
1	சிப்பம்-A: செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மதுரப்பாக்கம் ஓடையிலிருந்து டி.எல். எப். வளாக சாலையில் எல்.எஸ்.0 மீ. முதல் எல். எஸ்.500 மீ. வரை அவசர கால வெள்ளநீர் கடத்தும் பெருவடிகால் அமைத்தல்	*21.70*	*80%*
2	சிப்பம்-B: செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், மதுரப்பாக்கம் ஓடையிலிருந்து டிஎல்எப். வளாக சாலையில் எல்எஸ். 500 மீ. முதல் எல். எஸ். 970 மீ. வரை அவசர கால வெள்ளநீர் கடத்தும் பெருவடிகால் அமைத்தல்	*26.50*	*77%*

2023 மார்ச் 29]

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பணிகள் முடிவுற்ற சதவிகிதம்
3	சிப்பம்-C: செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், டி.எல்.எப் வளாக வடக்கு பகுதியில் மதுரப்பாக்கம் ஓடை முதல் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள கால்வாய் வரை (டி.எல்.எப். வளாக வடக்கு பகுதியில்) மூடுதளத்துடன் பெருவடிகால் கால்வாய் கட்டும் பணி மற்றும் டி.எல்.எப். வளாக வடக்கு பகுதியில் உள்ள திறந்தவெளி வாய்க்காலில் எல்.எஸ். 0 மீ. முதல் எல்.எஸ். 600 மீ. வரை இருபுறமும் தாங்கு சுவர் கட்டும் பணி	24.00	88%
4	சிப்பம்-D: செங்கல்பட்டு மற்றும் சென்னை மாவட்டம் மற்றும் தாம்பரம் வட்டம், மற்றும் சோழிங்கநல்லூர் வட்டம், பெரும்பாக்கம் மற்றும் செம்மஞ்சேரி கிராமங்களில் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள கால்வாய்க்கு இருபுறமும் தாங்கு சுவர் கட்டும் பணி	24.30	90%

[2023 மார்ச் 29

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பணிகள் முடிவுற்ற சதவிகிதம்
II	**பிரதான பணி** செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், ஒட்டியம்பாக்கம் ஏரி முதல் அரசன்கழனி ஏரி வரை விடுபட்ட பகுதியில் மற்றும் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு இணைப்பு செய்ய மூடுதளத்துடன்கூடிய பெருவடிகால் கால்வாய் அமைக்கும் பணி		
5	சிப்பம்-A: செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், அரசன்கழனி வேலன்தாங்கல் ஏரி முதல் கழுவெளி வரை மூடுதளத்துடன்கூடிய பெருவடிகால் கால்வாய் கட்டும் பணி	29.00	84%
6	சிப்பம்-B: செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், ஒட்டியம்பாக்கம் உபரிநீர் கால்வாய் முதல் அரசன்கழனி வேலன்தாங்கல் ஏரி வரை விடுபட்ட பகுதியில் மூடுதளத்துடன்கூடிய பெருவடிகால் கால்வாய் கட்டும் பணி	39.82	75%
7	சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் மடுவினை KCG கல்லூரி முதல் பங்கிங்காம் கால்வாய் வரை தூர்வாரி அகலப்படுத்தும் பணி	5.00	83%

2023 மார்ச் 29]

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பணிகள் முடிவுற்ற சதவிகிதம்
8	சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், ஆதம்பாக்கம் ஏரியிலிருந்து வீராங்கால் ஓடை வரை உள்ள இணைப்பு கால்வாயினை மேம்படுத்தும் பணி	*13.90*	*96%*

இதர பணிகள்

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில், தாம்பரத்தின் அருகிலுள்ள, அடையாற்றின் வெள்ளப் பெருக்கு சமவெளியில் வசிக்கும் மக்களுக்கு அவசர கால வெள்ள நிவாரணப் பணிகள் (வெள்ளத் தணிப்பு கட்டமைப்புகள் கட்டுவதன்மூலம்) ரூ.70.05 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 78 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையினால் பாதிப்படைந்த பகுதிகளை 15.11.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, அதிகாரிகளிடம் போர்க்கால அடிப்படையில் தற்காலிக வெள்ள சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில் பாதிப்படைந்த 250 இடங்களில் ரூ.8.82 கோடி மதிப்பீட்டில் தற்காலிக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7.3.2022 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்காலிக சீரமைப்பு பணிகளைப் பார்வையிட்டு நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியவாறு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்படி கன்னியாகுமரி மற்றும்

[*2023 மார்ச் 29*

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோதையாறு அமைப்பில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை நிரந்தரமாகச் சீரமைக்கும் பொருட்டு 325 பணிகளுக்கு ரூ.70 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

325 பணிகளில், கன்னியாகுமரி மாவட்டத்தில் 316 பணிகள் ரூ.67.85 கோடி மதிப்பீட்டிற்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் 9 பணிகள் ரூ.2.15 கோடி மதிப்பீட்டிற்கும் என மொத்தம் 325 பணிகள் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

18.0. இதர செயல்பாடுகள்

18.1. நீர்நிலைகளில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றுதல்

நீதிப் பேராணை எண் 10614/2017-ல் 28.4.2017 நாளிட்ட மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில், இப்பொருள் தொடர்பான வழக்கு பெரிய அமர்விற்கு மாற்றப்பட்டுள்ளதாக ஆணையிடப்பட்டு, பெரிய அமர்வின் மறு உத்தரவு வரும் வரை, "சீமைக் கருவேல" மரங்களை அகற்றுவது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று உத்தரவிட்டது.

அரசாணை (டி) எண் 121, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (எப்ஆர்.14) துறை, நாள் 10.5.2017-ல், முதன்மைத் தலைமை வன பாதுகாவலர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான ஒரு குழுவினை அமைத்து, அக்குழு சீமைக்கருவேல மரங்கள் குறித்து அறிவியல் ரீதியான ஆய்வு மேற்கொள்ளவும், அதன் தீய விளைவுகள் மற்றும் பயன்பாடு ஏதேனும் இருப்பின், அதனைப் பரிந்துரைக்கவும், அதன் தொடர்பான அறிக்கையை 3 மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் 11.5.2017 நாளிட்ட தீர்ப்பில், ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழுவில் மேலும் 4 வல்லுநர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து சீமைக்கருவேல மரங்களினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீங்குகள் மற்றும் பயன்பாட்டினை ஆய்வு செய்து 45 நாட்களுக்குள் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்ய ஆணையிடப்பட்டது. இத்தீர்ப்பின்படி அரசாணை (டி) எண் 135, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (எப்ஆர். 14) துறை, நாள் 23.5.2017-ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டன.

2023 மார்ச் 29]

மேற்கண்ட குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் 28.7.2017 அன்று, நீர்நிலைகளில் தடையில்லாமல் நீர் செல்ல சீமைக்கருவேல மரங்களைப் படிப்படியாக அகற்ற திட்டம் வகுக்கவும், மாற்றாக சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்படாத வகையில் வேறு இன மரங்களை நடவும் உத்தரவிட்டது.

மேலும், நீர்வளத் துறையின் நீர்நிலைகளில் அகற்றப்பட வேண்டிய சீமைக்கருவேல மரங்களின் மொத்தப் பரப்பு 1,93,130.63 ஹெக்டேர் எனக் கணக்கிடப்பட்டு, 74,389 ஹெக்டேர் பரப்பில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. நீர்வளத் துறை, நீர்நிலைகளில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றி, அவற்றின் கொள்ளளவுத் திறனை மேம்படுத்தும் பணியில் தொடர் முயற்சி எடுத்து வருகிறது.

18.2. வண்டல் மண்ணை இலவசமாக வழங்குதல்

தமிழ்நாட்டிலுள்ள நீர்நிலைகளின் கொள்ளளவு காலப்போக்கில் வண்டல் படிவுகளால் கணிசமான அளவில் குறைந்துள்ளது. நீர்நிலைகளில் படிந்துள்ள வண்டலை தேவைக்கேற்ப இலவசமாக எடுத்துச் செல்ல வேளாண் பெருமக்களை அனுமதிப்பதன் வாயிலாக நீர்நிலைகளில் இழந்த கொள்ளளவை மீளப்பெற இயலும். ஏரிகளின் மீளப்பெறப்பட்ட கொள்ளளவு மற்றும் தூர்வாரப்பட்ட படிவுகள் இவையிரண்டுமே விவசாயிகளுக்கு பயனளிக்கும்.

இதனடிப்படையில் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகளில், விதி 12 (2) மற்றும் 12 (2-A) (a)-க்கு உரிய திருத்தங்கள் அரசாணை (நிலை) எண் 50, தொழில் (எம்.எம்.சி.1) துறை, நாள்.27.4.2017 மற்றும் அரசாணை (நிலை) எண் 244, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை (எம்.எம். சி.1) துறை, நாள் 14.12.2022-ல் வெளியிடப்பட்டுள்ளன. இதன்மூலம், மாநிலத்திலுள்ள ஏரிகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் அருகில் அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் அவற்றின் சுற்றுவட்டார கிராமங்களின் மட்பாண்டத் தொழிலாளர்கள், பொதுமக்களின் வீட்டு உபயோகம் மற்றும் வேளாண் தேவைகளுக்காக வேளாண் பெருமக்களுக்கு ஏரியின் படுகைகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட்ட

பிறகு, சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் இலவசமாக எடுத்துச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வேளாண் பயன்பாட்டிற்காக 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை வண்டல் மண் மற்றும் களிமண் வழங்கும் அளவு, நன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டருக்கு மிகாமலும், புன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டருக்கு மிகாமலும் இருக்க வேண்டும். வீட்டு உபயோகத்திற்கு மண், சவுடு மற்றும் சரளை மண் எடுக்கும் அளவு 30 கன மீட்டருக்கு மிகாமலும், மட்பாண்டங்கள் செய்வதற்கு எடுக்கப்படும் களிமண் 60 கன மீட்டருக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

18.3. மணல் குவாரி மற்றும் இறக்குமதி மணல்

மணல் குவாரி

2003 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் ஆற்றுப்படுகைகளிலிருந்து மணல் எடுத்து விற்பனை செய்யும் பொறுப்பு நீர்வளத் துறையிடம் அளிக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டிலிருந்து சென்னையை தலைமையிடமாகக் கொண்டு சுரங்கவியல் மற்றும் கண்காணிப்பு வட்டமும், விழுப்புரம், சென்னை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய ஐந்து இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு சுரங்கவியல் மற்றும் கண்காணிப்புக் கோட்டங்களும் மாநிலம் முழுவதும் மணல் குவாரி நடவடிக்கைகளை முறைப்படுத்தும் பணிக்கென இயங்கி வருகின்றன.

ஜூலை 2017 முதல், "நிலையான மணல் சுரங்க மேலாண்மை வழிகாட்டுதல்கள், 2016-க்கிணங்க மணல் குவாரி நடவடிக்கைகளில் பல சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, www.tnsand.in எனும் இணையதளம் மற்றும் TN sand செல்லிடப்பேசி செயலிமூலம் மணல் வேண்டி பதிவு செய்யும் முறை மற்றும் பணம் செலுத்தும் முறை, ஜூலை 2017 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் இடையூறு இல்லாமல் மணல் பதிவு செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், அரசாணை நிலை எண் 4, நீர்வளத் (சி.பா-2) துறை, நாள் 6.1.2022-ல் புதிய நடவடிக்கைகளை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

2023 மார்ச் 29]

மணல் பதிவில் பொதுமக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடத்தின் அடிப்படையில் மணல் வழங்க ஏதுவாக தற்பொழுதுள்ள தகவல் தொழில்நுட்ப இணையம்/கைப்பேசி செயலி மேம்படுத்தப்பட்டு மணல் விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதி மணல்

தமிழ்நாட்டில் கட்டுமானப் பணிகளுக்காக பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மணல் அல்லது பிற மாநிலங்கள்/ ஒன்றியப் பகுதிகளிலிருந்து பெறப்படும் மணலினை விற்பனை செய்வதற்கான உரிமை தமிழ்நாடு நீர்வளத் துறைமூலம் மட்டுமே செயல்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதி 1959-ன்கீழ் பிரத்தியேகமாக கட்டுமானத் தேவைக்காக மணல் இறக்குமதி செய்வதற்கு புதிய விதி 38D, 10.4.2018 அன்று சேர்க்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் கட்டுமானத் தேவைகளுக்கு வெளி நாடுகளிலிருந்து 2 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் சுமார் 5 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆற்று மணல், எண்ணூர் காமராசர் துறைமுகம், காட்டுப்பள்ளி துறைமுகம் மற்றும் தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகம் ஆகிய துறைமுகங்களில் இறக்குமதி செய்ய நீர்வளத் துறைக்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆற்று மணல், எண்ணூர் காமராசர் துறைமுகம் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்களிலிருந்து நீர்வளத் துறையின்மூலம் இணையதளத்தின் வாயிலாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. 9 கப்பல்கள்மூலம் மணல் இறக்குமதி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளது.

19.0. நிர்வாக அமைப்பு

வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரழிவுகளின் காரணத்தையும், பாதிப்பையும் ஆய்வு செய்யவும், நிவாரண நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவும் மற்றும் நீர் ஆதாரங்களைப் பெருக்கி விவசாயத்திற்குத் தொடர்ச்சியான பாசனத்தை உறுதி செய்வதற்காக அரசால் 7.6.2021 அன்று முதல் பொதுப் பணித் துறையிலிருந்து நீர்வளத் துறை தனித் துறையாக அமைக்கப்பட்டுள்ளது

[2023 மார்ச் 29

நீர்வளத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர், 11 தலைமைப் பொறியாளர்களின் அனைத்துப் பணிகளையும் கண்காணித்து, ஒருங்கிணைத்து, துறையின் தொழில்நுட்பத் தலைவராக செயல்பட்டு வருகிறார்.

நீர்வளத் துறை ஆற்று வடிநிலங்களின் அடிப்படையில் செயல்படுகிறது. நீர்வளத் துறையில் 4 மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்றனர். இம்மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் அந்தந்த மண்டல எல்லைக்குட்பட்ட ஆற்று வடிநிலங்களுக்கான வடிநில மேலாளர்களாகப் பணியாற்றுகின்றனர்.

இதுதவிர, 7 செயல்பாட்டு பிரிவுகள் மற்றும் 2 சிறப்புப் பிரிவுகள் பின்வருமாறு:

செயல்பாட்டு பிரிவுகள்

1. திட்ட உருவாக்கம்
2. வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்
3. இயக்கம் மற்றும் பராமரிப்பு
4. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம்
5. நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுபாடு நிறுவனம்
6. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்
7. மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை

சிறப்புப் பிரிவுகள்

1. காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன் மாநில நதி நீர்ப் பிரிவு
2. தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகளைச் சீரமைத்தல் கழகம்

2023 மார்ச் 29]

19.1. நீர்வளத் துறையின் செயல்பாட்டு பிரிவுகளின் நடவடிக்கைகள்

19.1.1. திட்ட உருவாக்கம்

திட்ட உருவாக்கப் பிரிவானது மாநிலத்தின் நீர் ஆதாரங்களின் வளர்ச்சி மற்றும் பெருக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பெரிய, நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் மற்றும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களை மேற்கொள்ள ஆய்வுகள் மேற்கொண்டு முதல்நிலை–சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரித்தல். தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியக்கூறு உள்ள திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் பெற அரசுக்கு சமர்ப்பித்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவு, மண்டலத் தலைமைப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட சில முக்கிய திட்டங்களுக்கான விரிவான மதிப்பீடுகளை அரசுக்கு பரிந்துரைக்கிறது.

மேலும், இப்பிரிவானது நபார்டு, தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனா திட்டங்களின்மூலம் நிதி உதவி பெற ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் மற்றும் மாநில நிதி திட்டங்கள் சார்ந்த சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகள் இப்பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள திட்ட உருவாக்க வட்டம், சேலம் கீழுள்ள மூன்று சுற்றுச்சூழல் குழும கோட்டங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

19.1.2. வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்

வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரப் பிரிவு பின்வரும் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்பட்டு வருகிறது.

- *நீர்நிலைகளைச் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம்*
- *மாநிலத்திலுள்ள அணைகளைத் தூர்வாரும் பணி*
- *ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கடலோர பாதுகாப்புப் பணிகள்*

[2023 மார்ச் 29

இப்பிரிவின்கீழ் செயல்படும் வடிவமைப்பு வட்டத்தில், நீர்த்தேக்கம், கால்வாய், ஏரி, அணைக்கட்டு, நீரொழுங்கி, தடுப்பணை போன்ற பாசனக் கட்டுமானங்களுக்கான வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும், பாசனக் கட்டுமானங்களில் ஏற்படும் வெடிப்புகள், நீர் ஊடுருவல், நீர்க்கசிவு போன்ற பாதிப்புகளுக்கான மாற்றுத் தீர்வுகள், வடிவமைப்பு வட்டத்தால் பரிந்துரைக்கப்பட்டு வருகிறது.

இப்பிரிவின்கீழ் செயல்படும் மண் தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், மண்ணின் தன்மை, கற்காரை மற்றும் கட்டுமானப் பொருட்களின் தரம் குறித்த சோதனைகளை மேற்கொள்ளும் மைய தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடமாக சென்னையில் செயல்பட்டு வருகிறது.

நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், பூண்டி 1944-ல் நிறுவப்பட்டு நீரியல், நீர்நிலையியல் மற்றும் பாசனம் தொடர்பான அடிப்படை ஆராய்ச்சி மற்றும் மாதிரி பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் கடற்கரையியல் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் தமிழ்நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைகளில் சில குறிப்பிட்ட இடங்களில் கடற்புற நிகழ்வுகள் கண்காணித்தல் தொடர்பான தரவுகள் சேகரிக்கும் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பிரிவினால், வண்டல் மண் படிவினால் நீர்த்தேக்கங்களில் ஏற்பட்டுள்ள கொள்ளளவுக் குறைவு மற்றும் நீர்த்தேக்கங்களின் பயன்பாட்டு காலம் மதிப்பிடப்பட்டு, நீர்வடிப் பகுதியிலிருந்து நீர்த்தேக்கங்களைச் சென்றடையும் வண்டல் படிவுகளைத் தடுப்பதற்குத் தேவையான நீர்வடிப் பகுதி மேலாண்மைப் பணிகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

19.1.3. இயக்கம் மற்றும் பராமரிப்பு

இயக்கம் மற்றும் பராமரிப்பு பிரிவுமூலம், மாநிலத்திலுள்ள 15 பெரிய நீர்த்தேக்கங்கள், சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்கும் 6 நீர்த்தேக்கங்கள் (ம) காவிரி வடிநிலப் பகுதிகளில் அமைந்துள்ள கர்நாடக மாநிலத்தின் 4 நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றின் நீரியல் குறித்த விவரங்கள் மற்றும் மத்திய நீர் ஆணையத்தின் பில்லிகுண்டுலு நீர் அளவீடு மற்றும் வெளியேற்று நிலையத்தில் நாள்தோறும் சேகரிக்கப்படும் நீர் அளவீடுகள் ஆகியவற்றைத் தொகுத்து நாள்தோறும் அரசுக்கு அறிக்கை அளித்து வருகிறது.

2023 மார்ச் 29]

தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு அவர்களது அலுவலகத்தில் நீரளவை பிரிவில் வடகிழக்குப் பருவமழை காலங்களில் 24 மணி நேர முறைப் பணி மேற்கொள்ளப்பட்டு மாநிலத்தின் அனைத்து அணைகள்/ நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் கண்காணிக்கப்பட்டு மாநில அவசரகால நடவடிக்கை மையத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

தலைமைப் பொறியாளர் தலைமையிலான இயக்கம் மற்றும் பராமரிப்புப் பிரிவு பின்வரும் 3 வட்டங்களுடன் செயல்படுகிறது:-

i பொதுப் பணி பணிமனை மற்றும் பண்டக சாலைமூலம் புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல், பழைய வாகனங்கள் மற்றும் பயனற்ற இயந்திரங்கள் (ம) கருவி தளவாடங்கள் கழிவு நீக்கம் செய்யப்படுகின்றன. மேலும், நீர்த்தேக்கக் கட்டுமானங்களில் நீர் இயந்திரவியல் பாகங்களுக்கான மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மண்டல அலுவலகங்களிலிருந்து பெறப்படும் மதகு அடைப்பான்களின் மதிப்பீடுகளை ஆய்வு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ii உலக வங்கி நிதியுதவியுடன் செயலாக்கத்திலுள்ள அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக இப்பிரிவின்கீழ் ஒரு மாநிலத் திட்ட மேலாண்மை அலகு செயல்பட்டு வருகிறது.

iii இப்பிரிவின் கீழுள்ள அணை பாதுகாப்பு இயக்ககத்தின்மூலம் அணைகளில் காலமுறை பருவமழை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் தொகுக்கப்படுகின்றன. பருவமழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அனைத்து அணைகளுக்கான ஒருங்கிணைந்த உறுதித் தன்மை அறிக்கை (ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை) மத்திய நீர் ஆணையத்தின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது.

அணை பாதுகாப்பு அமைப்பு

அணை பாதுகாப்புச் சட்டம் 2021, 14.12.2021 அன்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது மற்றும் அதன் விதிகள் 28.12.2021 தேதியிட்ட அறிவிப்பின்படி 30.12.2021 முதல் நடைமுறைக்கு

வந்துள்ளன. இந்தச் சட்டம், குறிப்பிட்ட அணைகள் உடைவதனால் ஏற்படும் பேரிடர்களைத் தடுப்பதற்கான கண்காணிப்பு, ஆய்வு, இயக்கம் மற்றும் பராமரிப்பு மற்றும் அவற்றின் பாதுகாப்பு தொடர்பான செயல்பாட்டை உறுதி செய்வதற்கும் நிறுவன வழிமுறையை வழங்குகிறது. அணைப் பாதுகாப்புச் சட்டம் 2021, கீழ்க்காணும் அம்சங்களைக் கொண்டுள்ளது:-

அ) தேசிய அணைப் பாதுகாப்புக் குழு (NCDS)

ஆ) தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம் (NDSA)

இ) அணைப் பாதுகாப்பிற்கான மாநிலக் குழு (SCDS)

ஈ) மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பு (SDSO)

தமிழ்நாட்டில் அணைப் பாதுகாப்புச் சட்டம், 2021 பின்வருமாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது:-

அணைப் பாதுகாப்புச் சட்டம், 2021-ன்படி, அணைப் பாதுகாப்புக்கான மாநிலக் குழு (SCDS) மற்றும் மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பு (SDSO) அமைப்பதற்கான அறிவிக்கையை 30.6.2022 தேதியிட்ட அரசாணை (நிலை) எண் 56 நீர்வளத் (நீ.வ.2) துறைமூலம் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

தேசிய அணைப் பாதுகாப்புக் குழு (NCDS)

மத்திய நீர் ஆணையத்தின் தலைவர் தலைமையிலான தேசிய அணைப் பாதுகாப்புக் குழுவில் தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, ஓர் உறுப்பினராவார். இக்குழு, மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பின் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்யும்.

இக்குழு ஆண்டிற்கு இருமுறை கூடுகிறது. அணைப் பாதுகாப்புத் தரநிலைகள் தொடர்பான கொள்கைகளை வகுத்தல் (அ) உருவாக்குதல் மற்றும் விதிமுறைகளைப் பரிந்துரைத்தல் ஆகியவை இக்குழுவால் மேற்கொள்ளப்படும்.

தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம் (NDSA)

மாநில அளவிலான அணைப் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் அணைகளின் உரிமையாளர்களுடன் பாதுகாப்பு தொடர்பான விவரங்கள் மற்றும் நடைமுறைகளைத் தரப்படுத்துவதற்காக

2023 மார்ச் 29]

ஒன்றிய அரசு தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம் என்று அழைக்கப்படும் ஓர் ஆணையத்தை 6 உறுப்பினர்களைக் கொண்டு நிறுவியுள்ளது.

தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம், தேசிய அணைப் பாதுகாப்பு குழுவின் (NCDS) கொள்கைகளைச் செயல்படுத்தி, மாநில அணைப் பாதுகாப்பு அமைப்புகளுக்கு (SDSO) தொழில்நுட்ப உதவியை வழங்கும். மேலும், மாநிலங்களின் மாநில அணைப் பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையே அல்லது மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பு மற்றும் அந்த மாநிலத்தில் உள்ள அணை உரிமையாளருக்கு இடையே உள்ள பொருண்மைகளைத் தீர்க்கும்.

அணைப் பாதுகாப்பிற்கான மாநிலக் குழு (SCDS)

தமிழகத்திலுள்ள அனைத்து அணைகளின் பாதுகாப்பு அம்சங்களைக் கண்காணிக்க மாநில அணைப் பாதுகாப்புக் குழு (SDSC) என்ற பெயரில் அணைப் பாதுகாப்பிற்கான மாநிலக் குழு (SCDS) ஏற்கெனவே அரசாணை (நிலை) எண் 261, பொதுப் பணித் துறை, நாள் 18.2.1991-ன்படி மாநிலத்தில் அமைக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 375, பொதுப் பணித் (நீ.வ.2) துறை, நாள் 30.6.1997-ன்படி 14 உறுப்பினர்களைக் கொண்டு மறுசீரமைக்கப்பட்டது.

அணைப் பாதுகாப்புச் சட்டம், 2021-ன்படி, மாநில அணைப் பாதுகாப்புக் குழு (SCDS) அரசாணை (நிலை) எண் 56, நீர்வளத் (நீ.வ.2) துறை, நாள் 30.6.2022-ன்படி மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இக்குழு (SCDS) ஆண்டுக்கு இரு முறை கூடும், அதில் ஒரு கூட்டம் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பு நடத்தப்பட வேண்டும். மேலும், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை இக்குழு மறுசீரமைக்கப்பட வேண்டும்.

மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பு (SDSO)

மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பு, கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் இயக்குநரின் தலைமையில் அணைப் பாதுகாப்பு இயக்ககம் (DSD) என்ற பெயரில் இயங்கி வருகிறது, இது தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, இயக்கம் மற்றும் பராமரிப்பு அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது.

[2023 மார்ச் 29

19.1.4. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்

மாநிலம் முழுவதும் பரவலான கண்காணிப்பு வலையமைப்பைப் பராமரித்து, கண்காணிப்பதன்மூலம், மாநிலத்தின் நிலத்தடி நீர் திறன், மேற்பரப்பு நீர் மற்றும் நீரின் தரம் ஆகியவற்றை இந்தப் பிரிவு அவ்வப்போது ஆய்வு செய்து மதிப்பிடுகிறது. தமிழ்நாடு மாநிலத்தின் நிலத்தடி நீர் ஆதாரங்களின் திட்டமிடல், மேம்பாடு மற்றும் மேலாண்மை ஆகியவற்றின் நோக்கத்திற்காக இந்தப் பிரிவால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ *நிலத்தடி நீர் ஆய்வு மற்றும் அறிவியல் முறைகள்மூலம் மாநிலத்திற்கான நிலத்தடி நீர் திறனை அவ்வப்போது மதிப்பீடு செய்தல்.*
- ❖ *நீரியல், நீர் வானிலையியல் மற்றும் நிலத்தடி நீரின் தரத்தைத் தொடர்ந்து கண்காணித்தல்.*
- ❖ *வளர்ச்சிக்கான நிலைமையை மதிப்பிடுவதற்கு நிலத்தடி நீர் மட்டம் மற்றும் நீர்த்தரத்தின் தரவு மற்றும் மேற்பரப்பு நீர் விவரங்களைக் கண்காணித்தல், சேகரித்தல், செயலாக்குதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல், மிகவும் சரியான மற்றும் துல்லியமான நிலத்தடி நீர் மட்டத் தரவைப் பெறுவதற்காக, மாநிலம் முழுவதும் 386 டிஜிட்டல் நீர் நிலை பதிவு மானிகள் (DWLR) நிறுவப்பட்டுள்ளன.*
- ❖ *நியாயமான/பாரபட்சமற்ற மேம்பாடு மற்றும் நிலத்தடி நீரை உகந்த முறையில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான திட்டத்தை உருவாக்குதல்.*
- ❖ *நிலத்தடி நீர் வளத்தின் இருப்பு மற்றும் தரம் குறையாமல் பாதுகாத்தல்.*
- ❖ *பல்வேறு வகையான செயற்கை நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள்மூலம் சாத்தியமான இடங்களில் நிலத்தடி நீர் சேமிப்பை மேம்படுத்துதல்.*
- ❖ *திறந்த வெளிக் கிணறுகள்/ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்குத் தகுந்த இடத்தைத் தேர்வு செய்வதற்குக் கட்டண அடிப்படையில் பொதுமக்கள், விவசாயம், அரசுத் துறைகள் மற்றும் தனியார் துறையினருக்கு ஆலோசனை வழங்குதல்.*

- ❖ *மாநிலத்தில் பாதுகாப்பான மற்றும் மித அபாயகரமான குறுவட்டங்களில் நீர் சார்ந்த மற்றும் நீர் சாராத தொழில்களுக்கு நிலத்தடி நீர் எடுப்பதற்கான அனுமதி (தடையின்மைச் சான்றிதழ்) வழங்குதல்.*

- ❖ *மாநிலத்தின் 1,076 கி.மீ. நீள கடற்கரையோரத்தில் உள்ள நன்னீர் நீர்நிலையில் கடல் நீர் உட்புகுவதைக் கண்காணிப்பதற்கான சிறப்பு ஆய்வுகள்.*

- ❖ *தேசிய மற்றும் மாநில நீர் கொள்கைகளை உருவாக்குவதற்கு உறுதுணை புரிதல்.*

இப்பிரிவு உலக வங்கி நிதி உதவியுடன் தேசிய நீரியல் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அமலாக்க முகமையாகும்.

ஜல் சக்தி அபியான்

தலைமைப் பொறியாளர், மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் அவர்கள் ஜல் சக்தி அபியான்-ன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார்.

தேசிய நீர் இயக்கம்

இப்பிரிவின்மூலம் தேசிய நீர் இயக்கத்தின் அறிக்கையைத் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய நீர் இயக்கத்தின் முக்கிய நோக்கம் தண்ணீரைப் பாதுகாத்தல், விரயத்தைக் குறைத்தல் மற்றும் ஒருங்கிணைந்த நீர்வள மேம்பாடு (ம) மேலாண்மைமூலம் மாநிலங்களுக்கு இடையேயும் மாநிலத்திற்குள்ளும் நீரின் சமமான விநியோகத்தை உறுதி செய்வதாகும்.

நீர்வளத் துறையின் மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் வளங்கள் தரவு மைய பிரிவுக்கு பின்வரும் அறிக்கையைத் தயாரிக்கும் பணி ஒதுக்கப்பட்டது.

1. *நீர் வளங்கள் பற்றிய நிலை அறிக்கை*
2. *இடைக்கால அறிக்கை*
3. *மாநிலத்திற்கென குறிப்பான செயல் திட்டம்*

[2023 மார்ச் 29

இது தொடர்பாக, மேற்கண்ட அறிக்கைகளைத் தயாரிக்க, ஒன்றிய அரசின் நீர்வள அமைச்சகம், ரூ.50 இலட்சங்களைத் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

நீர் வளங்கள் குறித்த நிலை அறிக்கை 20.2.2020 அன்று அரசின் தலைமைச் செயலாளரால் கண்காணிப்புக் குழு மற்றும் மாநில அளவிலான வழிகாட்டுதல் குழுவில் (SLSC) அங்கீகரிக்கப்பட்டு 21.12.2020 அன்று புதுதில்லியின் தேசிய நீர் இயக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தற்பொழுது மாநிலத்திற்கென குறிப்பான செயல் திட்டம் (SSAP) 1.12.2020 அன்று மத்திய முகன்மை முகவர்கள் (CNA) திட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, செலவழிக்கப்படாத ரூ.1,15,980/- மத்திய முகன்மை முகவர்கள் (CNA) கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. ரூ.18,84,020/- செலவழித்ததற்கான பயன்பாட்டுச் சான்றிதழ், நிதியுதவி நிறுவனமான அசாம், வடகிழக்கு பிராந்திய நீர் மற்றும் நில மேலாண்மை நிறுவனம் (North Eastern Regional Institute of Water and Land Management) மற்றும் தமிழ்நாடு அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

19.1.5. நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்

தமிழ்நாட்டின் ஆற்றுப்படுகைகளில் உள்ள நீர் வள ஆதாரங்களை அறிவியல் பூர்வமாக மிக நுண்ணிய அளவிலான ஆராய்ச்சியின் அடிப்படையில் மதிப்பிடுதல், எதிர்காலத் தேவைகளைக் கணக்கிட்டு திட்டமிடுதல் மற்றும் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள 1974 ஆம் ஆண்டு நீர் ஆய்வு நிறுவனம் நிறுவப்பட்டது. மேலும் 2018 ஆம் ஆண்டில் தரக்கட்டுப்பாடு கோட்டங்கள் இந்த நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு நீர் ஆய்வு நிறுவனம், நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு என்ற நிறுவனமாகப் பெயர் மாற்றப்பட்டு, இயங்கி வருகிறது.

நீர் ஆய்வு, நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு நிறுவனத்தில் தொலையுணர் மையம் செயல்பட்டு வருகிறது. இத்தொலையுணர் மையம் ஆற்றுப்படுகைகள் தொடர்பான புவியின் மேற்பரப்பில் உள்ள நீர் வளங்கள் மற்றும் அதைச் சார்ந்த பூகோள விவரங்களைச் செயற்கைக்கோள் சார்ந்த பூலோக வரைபடங்கள்மூலம் அவற்றை மதிப்பிட்டு, திட்டமிட்டு அதன் விவரங்களை நிர்வகித்து, உபயோகிக்கும் துறைகளுக்குத் தெரிவிக்கும் பணிகளைக் கவனித்து வருகிறது.

2023 மார்ச் 29]

நீர் ஆய்வு, நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு நிறுவனம் தமிழ்நாட்டின் ஆற்றுப் படுகைகளில் உள்ள நீர் வள ஆதாரங்களை அறிவியல் பூர்வமாக மிக நுண்ணிய அளவிலான ஆராய்ச்சியின் அடிப்படையில் மதிப்பிடுதல், வருங்காலத் தேவைகளுக்குத் திட்டமிடுதல் மற்றும் நிர்வகிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தற்பொழுது 2022-2023 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி பணிகள் சென்னை படுகையின் நீர்வள மேலாண்மை மற்றும் திட்டமிடுதலுக்குத் தேவையான நுண்ணிய அளவிலான மறுமதிப்பீடு செய்யப்பட்டு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பருவமழைக் காலங்களில் அடையாறு ஆற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தவிர்ப்பது தொடர்பான ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக் கட்டுப்பாடு நிறுவனம் தொழில்நுட்ப நூலகத்தைப் பராமரித்து வருகிறது. இந்நூலகத்திலுள்ள புத்தகங்கள் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கின்றது.

நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனத்தின்கீழ் இயங்கி வரும் 4 தரக்கட்டுப்பாடு கோட்டங்கள் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு நீர்வளத் துறைகளால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளின் தரங்களைப் பரிசோதிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

19.1.6. மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA)

நிலையான நீர்வள ஆதார மேலாண்மைக்கான நிறுவன அமைப்புகளை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசால், மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை 13.4.2009 அன்று உருவாக்கப்பட்டது.

இப்பிரிவின் செயல்பாடுகள் பின்வருமாறு:-

- *நீர்வளத் துறையில் நன்கு திட்டமிடவும், திறன்பட நீரைப் பகிர்ந்து மேலாண்மை செய்திட உதவும் வகையிலும், வலைதள வடிவமைப்புமூலம் ஒருங்கிணைந்த தமிழ்நாடு நீர்வளத் தகவல் அமைப்பினை (TNWRIS) மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை உருவாக்கப்பட்டது.*

[2023 மார்ச் 29

- கோமுகி நீர்தேக்கத்தின் நீர் பயன்பாடு மற்றும் நீர் பங்கீட்டு முறை ஆய்வு அறிக்கை தயாரித்தல்.
- ஆற்றுப் படுகைகளின் நீர் திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் ஆற்றுப் படுகைகளில் நீரைப் பகிர்ந்து மேலாண்மை செய்திட தகவல் அமைப்பு உருவாக்குதல்.
- நீர்தேக்கத்தின் வெள்ள நீர் செயல்பாடு அமைப்பு உருவாக்குதல்.
- நீர்வளத் துறை பொறியாளர்களின் திறன் மேம்பட பயிற்சிகள், பட்டறைகள், கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்.

19.1.7. பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்

தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி, மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஆகும். இந்த பயிற்சி நிலையம் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975-ன்கீழ் அமையப் பெற்ற நிறுவனமாகும். இப்பயிற்சி நிலையம் 1984 முதல் தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறையின்கீழ் இயங்கி வருகிறது.

இப்பயிற்சி நிலையம், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத் துறை அவர்களின் தலைமையின்கீழ் ஆட்சி மன்றக் குழுமூலம் இயங்குகிறது. ஆட்சி மன்றக் குழு, அதன் தலைவர் உள்பட பல்வேறு துறைகளின் (நிதித் துறை, வேளாண்மை-உழவர் நலன் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உள்ளிட்டவை) செயலர்கள் உள்ளிட்ட 12 உயர் அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர், தலைமை இயக்குநராக உள்ள இப்பயிற்சி நிலையத்தில், நீர்வளத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அயற்பணியில் பணிபுரிகிறார்கள்.

பாசன முறைகளின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் நீர்ப் பாசனத்திற்காக வழங்கப்படும் நீரின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் உகந்த நீர் பயன்பாட்டுடன் அதிக உற்பத்தியை அடைவதன்மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு பயிற்சி திட்டங்களை வழங்குவதே இந்த நிறுவனத்தின் இலக்காகும்.

2023 மார்ச் 29]

*நீர்வளத் துறை, வேளாண்மைத் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகளின் அறிவையும், திறமையையும் மேம்படுத்தும் வகையில் சிறந்த நீர் மேலாண்மைக்கான பயிற்சி திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. நீர்வளத் துறையில் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கான (2014-2020) அறிமுக பயிற்சி திட்டம் இரண்டு தொகுப்புகளாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதல் தொகுப்பில் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட நீர்வளத் துறை உதவிப் பொறியாளர்களுக்கு (2014-2020) 8 கட்டங்களாக அறிமுக பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. 2023-2024 நிதியாண்டில், புதிதாகப் பணியமர்த்தப்பட்ட நீர்வளத் துறை உதவிப் பொறியாளர்களுக்கு (2014-2020) பயிற்சித் திட்டத்தின் இரண்டாம் தொகுப்பில் 8 தொகுதிகளாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் (*TNIAMP*) நீர்வளத் துறையின் திறமையான அதிகாரிகளுக்கான பங்கேற்பு பாசன மேலாண்மை (*PIM*) பற்றிய தொடர் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.*

நீர்ப் பாசன மேலாண்மை, நிலத்தடி நீர் மேம்பாடு மற்றும் மேலாண்மை, கட்டுமானப் பொருட்களின் தரக் கட்டுப்பாடு மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றில் நீர்வளத் துறையின் பங்கேற்பு நீர்ப் பாசன மேலாண்மை மற்றும் AutoCAD, GIS, SWAT, Ms-Project *போன்ற கணினி பயன்பாடுகள் எனப் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகள் நீர்வளத் துறையின் அலுவலர்கள் மற்றும் கள அலுவலர்களுக்கு நடத்தப்படுகின்றன.*

Total Station, *பேரிடர் மேலாண்மை, வெள்ளம் மற்றும் வறட்சி மேலாண்மை, கடலோர நீரியல் மற்றும் கடல் நீர் உட்புகுதலைத் தடுத்தல், அணைப் பாதுகாப்பு மற்றும் கருவிகள், தலைமைச் செயலக நீர்வளத் துறை அலுவலர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்கள் மற்றும் ஓய்வுபெறும் பல்வேறு துறை அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி போன்ற தனித்துவமான பயிற்சிகள் இந்த நிறுவனத்தால் நடத்தப்படுகின்றன.*

வழக்கமான பயிற்சித் திட்டங்களைத் தவிர, பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் நீர்வளத் துறையின் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு 2 கட்டங்களாக ஒரு மாத அறிமுக பயிற்சித் திட்டத்தையும், மாநிலங்களுக்கு இடையேயான மற்றும் மாநிலங்களுக்குள்ளான திட்டங்களுக்குப் பல்வேறு ஆய்வுச் சுற்றுலாத் திட்டங்களையும் நடத்தி வருகிறது.

மேம்படுத்தப்பட்ட சாகுபடி உத்திகளுக்கு கரிம இடுபொருள் தயாரித்தல், பாரம்பரிய பயிர் சாகுபடி, பூச்சி மேலாண்மை, தோட்டம் மறுசுழற்சி மற்றும் உரமாக்குதல் நுட்பங்கள், ஒருங்கிணைந்த பண்ணை முறை மற்றும் பயிர் மேலாண்மை நீர் சேமிப்பு நுட்பங்கள், உயிர்-மந்தை மீன் வளர்ப்பு, பின்-அறுவடை நுட்பங்கள், மண் மற்றும் நீர் மேலாண்மை உத்திகள் போன்ற பயிற்சித் திட்டங்களும் இந்த நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த 2022-2023 நிதியாண்டில் 109 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு, சுமார் 3,477 பங்கேற்பாளர்கள் (நீர்வளத் துறை, வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள்) பயனடைந்தனர்.

19.2. நீர்வளத் துறையின் சிறப்புப் பிரிவுகளின் செயல்பாடுகள்

19.2.1. காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன் மாநில நதி நீர்ப் பிரிவு

காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன் மாநில நதி நீர்ப் பிரிவு அரசுக்கு அனைத்து பன்மாநில நீர் பங்கீடு பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களைக் கையாளுவதில் உதவுகிறது. இந்தக் குழுமம் 1990-ல் அமைக்கப்பட்டது. இக்குழுமம், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் நடுவர் மன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்ய அனைத்துத் தொழில்நுட்ப அறிக்கைகள்/புள்ளிவிவரங்கள் மற்றும் தகவல்களைத் தயாரித்து அரசுக்கு அளித்து வருகிறது. மேலும், தமிழ்நாட்டிற்கு உரிமையுள்ள பல்வேறு பன் மாநில நதி நீர்ப்பங்கீடு தொடர்பான நதி நீர் மேலாண்மை ஆணையம்/ ஒழுங்குமுறைக் குழு நடத்தும் அனைத்துக் கூட்டங்களிலும் இக்குழுமம் பங்கேற்கிறது. கூடுதலாக, இக்குழுமம் பன் மாநில நதி நீர் இணைப்புத் திட்டங்களைப் பற்றியும் மற்றும் நதி நீர் இணைப்புத் திட்டங்களுக்கான ஒன்றிய அரசின் பல்வேறு முகமைகளான தேசிய நீர் மேம்பாட்டு முகமை, மத்திய நீர்வள ஆணையம் மற்றும் ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகம் நடத்தும் பல்வேறு கூட்டங்களில் கலந்து கொள்கிறது. இதுதவிர, இக்குழுமம் தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேம்படுத்த பல்வேறு அறிக்கைகளையும் தயாரித்து வருகிறது.

2023 மார்ச் 29]

இக்குழுமத்தால் காவிரி நதி நீர்ப் பங்கீடு, முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுதல், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் மாநிலத்திற்கு உரிய நீரைப் பெறுதல், நெய்யாறு பாசனத் திட்டம், பெண்ணையாறு மற்றும் பாலாறு நதி நீர் பிரச்சினைகளில் மாநிலத்தின் உரிமைகளை நிலைநாட்டுதல் போன்ற முக்கியமானப் பிரச்சினைகள் கையாளப்பட்டு வருகின்றன. மேலும், கோதாவரி-காவிரி இணைப்புத் திட்டம், பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டம் மற்றும் பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் தொடர்பான பணிகளும் இக்குழுமத்தால் கையாளப்பட்டு வருகின்றன.

19.2.2. தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகளைச் சீரமைத்தல் கழகம்

தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகளைச் சீரமைத்தல் கழகம், பெருநிறுவனங்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டு *25.12.2019* முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இக்கழகத்தின் முக்கிய நோக்கம் நீர் பாதுகாப்பை ஊக்குவித்தல், ஏரி, ஆறுகளை மீட்பது மற்றும் தற்போதுள்ள நீர்ப் பாசன உட்கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல் ஆகும். மேலும், வெள்ள நீர் கால்வாய்களை ஒன்றோடொன்று இணைப்பது, ஆறுகள் மற்றும் நதிப்படுகைகளை ஒன்றோடொன்று இணைப்பது குறித்தும் இக்கழகம் கவனம் செலுத்தும். கடல் நீர் ஊடுருவலைத் தடுப்பது, ஈர நிலப் பாதுகாப்பு மற்றும் வெள்ளத் தணிப்பு ஆகியவற்றிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து பருவநிலை மாறுதல்களுக்கேற்ற தகவமைப்பு உட்கட்டமைப்பை மேம்படுத்துவது போன்றவை இக்கழகத்தின் பிரதானப் பணிகளாகும். அரசால் தொடங்கப்பட்ட நீர் மேலாண்மை இயக்கப் பணியின் நோக்கங்களை நிறைவேற்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இக்கழகம் நீர்வளத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தலைமையில் செயல்படுகிறது.

24.1.2023 அன்று நடைபெற்ற 14-வது தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகளைச் சீரமைப்புக் கழகத்தின் இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில் ரூ.*7144.55* கோடிகளில் *21* புதியத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உரிய செயல் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டங்களானது அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்

துறை அவர்களின் நேர்முகக் கடித எண் 5792/நிதி (பொ.நி.மா) துறை, நாள் 12.2.2022-ன்படி தயாரிக்கப்பட்டுள்ளன.

இருதரப்பு கூட்டுறவின்மூலம் நிலையான நீர்வள ஆதார மேலாண்மையை வலுப்படுத்தும் நோக்கத்திற்கான ஆவணம் (Letter of Intent) டென்மார்க் அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின்கீழ் செயல்படும் டேனிஷ் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமையின் துணை தலைமை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு நீர்வள பாதுகாப்பு மற்றும் ஆறுகள் சீரமைத்தல் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு), சென்னை ஆகியோரால் மின்னஞ்சல் மூலமாக கையெழுத்திடப்பட்டு அவ்வாவணம் 1.3.2023 அன்று இருவருக்குமிடையே பரிமாற்றம் செய்யப்பட்டது.

20.0. மின்னணுத் தரவுதளம் உருவாக்குதல் முன்னோடி திட்டம்

20.1. தமிழ்நாடு நீர்வளத் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (TNWRIMS)

நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நீர்வளத் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பை (TNWRIMS) செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த அமைப்பைச் சீராய்வு செய்யவும், ஒருங்கிணைக்கவும், செயல்படுத்துவதில் வழிகாட்டவும் (i) உயர்மட்டக் குழு (ii) நிர்வாகக் குழு மற்றும் (iii) நிபுணர் குழு என மூன்று குழுக்களை அரசு அமைத்துள்ளது. பல்வேறு நீர்சார்ந்த பங்குதாரர் துறைகளிடமிருந்து தற்போதுள்ள எல்லா தரவையும் சேகரித்து ஒருங்கிணைந்த ஒரு இணைய முகப்பை உருவாக்குவதே இதன் நோக்கம் ஆகும். இணைய முகப்பு உருவாக்கப்பட்ட பிறகு, முழுமையாக உருவாக்கப்பட்ட பிறகு, எதிர்காலத்தில் நீர் பயன்பாட்டு துறைகளால் கருத்துருக்கள் உருவாக்கப்படுவதற்கான நீர் தொடர்பான தரவு தளத்தைப் பொறுத்த வரையில் நம்பகத்தன்மையுள்ள ஒரு ஒற்றை ஆதாரமாக இந்த இணைய முகப்பு திகழ வேண்டும்.

தமிழ்நாடு நீர்வளத் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (TNWRIMS)-ன் செயல்திட்ட பணிகள் 26.10.2022 அன்று தொடங்கப்பட்டது. மத்திய நீர் ஆணையம் (CWC), இந்திய வானிலை மையம் (IMD), இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (ISRO), மாநில மற்றும் உலகளாவிய தரவுகள் (Global Data

set, State Data) ஆகியவற்றிலிருந்து தரவை ஒருங்கிணைத்து நிகழ்நேரத் தகவலைக் கொண்டு வரும் இந்த அமைப்பின் (Real time Dashboards modules) ஒருங்குவிக்கப்பட்ட பதிப்பின் (Beta Version) Go-Live ஆனது 14.11.2022 அன்று தொடங்கப்பட்டது.

20.2. தமிழ்நாடு-செயற்கைக்கோள் அடிப்படையிலான நீர்நிலைகளைப் பற்றிய தகவல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பு (TN-SWIP)

சென்னை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பு மற்றும் நீரின் தரத்தைக் கண்காணிக்க செயற்கை நுண்ணறிவு மற்றும் செயற்கைக்கோள்மூலம் புதிய தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் வகையில் ஒரு மென்பொருள் அமைப்பினை முன்னோடித் திட்டமாக (Pilot study) உருவாக்க ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA), இந்திய தொலையுணர்வு செயற்கைக்கோள் நிறுவனம், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (RDPR) போன்றவற்றுடன் தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப அமைப்புகளில் உள்ள தரவு/தகவல்களை ஒருங்கிணைப்பதன்மூலம் செயற்கைக்கோள் அடிப்படையிலான நீர்நிலைகளைப் பற்றிய தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பு (TN-SWIP) என்ற தளத்தை உருவாக்குவதே இதன் நோக்கம் ஆகும்.

முன்மொழியப்பட்ட இணைய அடிப்படையிலான புவிசார் தகவல் (GIS) அமைப்புடன்கூடிய இந்த தகவல் தொழில்நுட்பத் தீர்வானது இணையவழி மற்றும் அலைபேசி பயன்பாட்டைக் கொண்டிருக்கும். நீர் நிலைகளின் தரத்தை கண்காணித்தல் மற்றும் நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளைக் கண்டறிதல் ஆகியவை இக்கருத்துருவின் இரண்டு அடிப்படை நோக்கங்களாகும்.

இந்த அமைப்பு குடிமக்களுக்கென மற்றும் நிர்வாகத்தினருக்கென இரு தனி தொகுதிகளைக் கொண்டிருக்கும். கைப்பேசி செயலியில் அங்கீகரிக்கப்பட்ட அரசு துறைகள், அரசு சார்பற்ற அமைப்புகள் மற்றும் குடிமக்கள் என மூன்று வகையான பயனீட்டாளர் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 29

நீர்நிலைகளைப் பற்றிய தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு (TN-SWIP) அமைப்புமூலம் நீர்நிலைகளின் நிலப்பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள், திறந்தவெளி செயற்கைக்கோள் தரவுகளை கொண்டு ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து கைப்பேசி செயலிமூலம் உடன் தகவல் அளித்து, கள ஆய்வின் அடிப்படையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் நீர் நிலைகளின் நீரின் தரத்தைக் கண்காணித்தல் ஆகும். ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

20.3. இ-அலுவலக முறையைச் செயல்படுத்துதல்

தற்போது நடைமுறையிலுள்ள அலுவலக கோப்புகள் நடவடிக்கை எடுக்கும் முறையை மாற்றி தேசிய தகவலியல் மையம், புதுடெல்லி உருவாக்கியுள்ள இ-அலுவலக பயன்பாடு அனைத்து அரசு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இப்பயன்பாடு, அனைத்து அலுவலகக் கோப்புகளை மின்னணு முறையில் செயலாக்குவதற்கும் மற்றும் IFHRMS செயலி தொடர்பான மனித வளம்/அலுவலகப் பயன்பாட்டிற்கும் உபயோகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) யின் ஒருங்கிணைப்புடன் நீர்வளத் துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் அலுவலகக் கோப்புகள் நடவடிக்கை எடுக்கும் முறையை மாற்றி அமைத்து இ-அலுவலக முறையை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முறையை நீர்வளத் துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் செயல்படுத்துவதற்குக் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வாங்கும்பொருட்டு ரூ.12.50 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

நீர்வளத் துறையில் உள்ள கோப்புகளைக் கையாளும் அனைத்து அலுவலர்களுக்கும் ஒருங்கிணைந்த மின்னஞ்சல் முகவரி உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமைமூலம் நீர்வளத் துறையில் இ-அலுவலகம் திறன்பட செயல்படும் பொருட்டு முதன்மைப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி மற்றும் TNGIS-ல் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பம் முதல் முடிவு வரை தானியங்கல் செயல்முறைக்காக நிலை-I-க்கான (End to End Automation) மேற்கொள்ள விலைப்புள்ளி (Request for Quotation) TNeGAமூலம் கருத்துரு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

2023 மார்ச் 29]

21.0. ஆய்வு நிலை மற்றும் உருவாக்கத்தில் உள்ள திட்டங்கள்

21.1. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், வி.கே.புரம் கிராமத்தில் கோரையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம்

கோரையாறு, தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறாகும். திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், வி.கே.புரம் கிராமத்தில் கோரையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு ரூ.0.24 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நீர்த்தேக்கத்தின் உத்தேச கொள்ளளவு 1 டி.எம்.சி. அடி ஆகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 254.44 ஏக்கர் சரணாலய காப்பு வன நிலம், 59.85 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 79.37 ஏக்கர் புறம்போக்கு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 9,091.59 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும்.

தற்போது, திட்ட ஆய்வுப் பணிகள் மற்றும் மண் தன்மை ஆய்வுப் பணிகள் முடிவுற்று விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

21.2. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், சீக்கலப்பள்ளி வாணிஒட்டு அருகே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், சீக்கலப்பள்ளி வாணிஒட்டு அருகே சாம்பல்பள்ளம் மற்றும் சூளகிரி சின்னாறு ஆறுகள் தென்பெண்ணை ஆற்றுடன் கூடும் இடத்தில் ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நில அளவை மற்றும் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள ரூ.0.10 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்நீர்தேக்கத்தை 38 மீட்டர் உயரத்திற்கும், 470 மீட்டர் நீளத்திற்கும் 460.60 மி.க. அடி நீர் தேக்கும் வகையில் அமைக்க சுமார் 283.62 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலம் மற்றும் சுமார் 293.07 ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்கள் தேவைப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் சுமார் 4,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்கு நீரியியல் விவரங்கள் அடங்கிய ஒரு முன் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

[2023 மார்ச் 29

21.3. கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் திருக்கழிப்பாலை கிராமம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், அளக்குடி கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கு கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி

இத்திட்டத்தின் உத்தேசத் தளம் வங்காள விரிகுடாவிலிருந்து மேற்புறம் 8.00 கி.மீ. தொலைவில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளது. உத்தேசத் கட்டமைப்பின் இடது கரை கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், திருக்கழிப்பாலை கிராமத்திலும், வலது கரை மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், அளக்குடி கிராமத்திலும் அமையவுள்ளது.

இத்திட்டத்தில் நீர்க் கொள்ளளவு சுமார் 366 மி.க. அடி என உத்தேசிக்கப்பட்டுள்ளது. வெள்ள நீரைச் சேமிக்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் கொள்ளிடம் ஆற்றின் இருபுறங்களிலும் உள்ள நிலம் மற்றும் விவசாய வயல்களில் கடல் நீர் உட்புகுவது தடுக்கப்பட்டு நிலத்தடி நீரின் தரம் மேம்படுத்தப்படும்.

இத்திட்ட செயலாக்கத்திற்கு 6.955 ஏக்கர் பட்டா நிலங்களும் மற்றும் அளக்குடி கிராமத்தில் மயான கொட்டகையும் தேவைப்படுகிறது.

இத்திட்டத்திற்காக நில அளவை மற்றும் ஆய்வுப் பணிக்காக ரூ.0.95 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது, நில அளவை மற்றும் ஆய்வுப் பணிகள் முடிவுற்றுள்ளன. திட்ட மாதிரி வடிவமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து (IIT) பெறப்பட்ட வடிவமைப்பு அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

21.4. மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேளூர் கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம், குமராட்சி ஒன்றியம், நல்லாம்புத்தூர் கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் பணி

இக்கதவணைத் திட்டத் தளமானது கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், மாதிரிவேளூர் கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம், குமராட்சி ஒன்றியம், நல்லாம்புத்தூர் கிராமங்களுக்கிடையே அமையவுள்ளது.

2023 மார்ச் 29]

இக்கதவணை கட்டப்படுவதனால், சுற்றியுள்ள பகுதிகளின் நிலத்தடிநீர் செறிவூட்டப்பட்டு, இதன்மூலம் குடிநீர் ஆதாரங்கள் மேம்படும். நிலத்தடி நீர் மட்டம் உயர்வதன்மூலம், பொதுமக்கள் மற்றும் கால்நடைகளுக்குக் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும்.

இத்திட்டத்திற்கு 242.89 ஹெக்டேர் பட்டா நிலங்களும், 39.958 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களும் தேவைப்படுகின்றன.

இத்திட்டத்திற்காக நில அளவை மற்றும் ஆய்வுப் பணிக்காக ரூ.0.14 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளில் கொள்ளிடம் ஆற்றில் ஏற்பட்ட தொடர் வெள்ளத்தின் காரணத்தால், ஆற்றின் படுகை மாற்றம் அடைந்துள்ளதனாலும் மறு ஆய்வு பணியானது இன்றியமையாததாக உள்ளது. தற்போது, மறு ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன.

21.5. அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு இடையே அணைக்கரையில் பழைய நீரொழுங்கிக்குக் (கீழணை) கீழ்ப்புறம் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே வடக்கு மற்றும் தெற்கு பிரிவுகளில் புதிய நீரொழுங்கி அமைக்கும் பணி

இந்நீரொழுங்கி திட்டத் தளமானது கொள்ளிடம் ஆற்றின் பழைய நீரொழுங்கியின் வடக்கு மற்றும் தெற்கு பிரிவுகளின் கீழே ஆற்றின் குறுக்கே தொலைகல் 108.210 கிலோ மீட்டரில், இடது கரையில் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள வேம்புகுடி கிராமத்திற்கும், வலது கரையில் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் உள்ள விநாயகன்தெரு கிராமத்திற்கும் இடையே அமையவுள்ளது.

இந்நீரொழுங்கியின்மூலம் தேக்கப்படும் நீரின் அளவு 200 மி.க.அடி எனத் தோராயமாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டிற்கு 3 முறை தேக்கப்பட்டால், ஆண்டு கொள்ளளவு 600 மி.க. அடி என உத்தேசிக்கப்படுகிறது.

இந்நீரொழுங்கி அமைவதன்மூலம் 30,352 ஹெக்டேர் நிலங்களின் பாசன வசதி உறுதி செய்யப்படுகிறது. மேலும், இந்நீரொழுங்கி கதவுகளின் உயரத்தினை 2 அடி உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதால், சென்னைக்கு குடிநீர் வழங்கும் வீராணம் ஏரிக்கும் இந்நீரொழுங்கியின்மூலம் கூடுதலாகத் தண்ணீர் வழங்க

[2023 மார்ச் 29

இயலும். இத்திட்டம் செயலாக்கப்படுவதன்மூலம் தற்போதுள்ள அனைத்து ஆயக்கட்டுகளுக்கும் பாசன வசதி உறுதிபெறும்.

மேலும், இந்நீரொழுங்கி அமைவிடத்தைச் சுற்றியுள்ள 500-க்கு மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகளும், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாக அமைக்கப்பட்டுள்ள 30-க்கும் மேற்பட்ட உறை கிணறுகளும் தொடர்ந்து செறிவூட்டப்படும்.

இத்திட்டத்திற்குத் தோராயமாக 17.196 ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்கள் தேவைப்படுகிறது.

இத்திட்டத்திற்காக, நில அளவை, மட்ட அளவை மற்றும் மண் பரிசோதனை செய்தல் பணிக்கு ரூ.1.01 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆய்வுப் பணிகள் முடிவுற்று, விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

21.6. விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், அன்றாயநல்லூர் கிராமம் அருகே பெண்ணையாற்றில் வெள்ளக் காலங்களில் வரும் வெள்ள மிகை நீரைக் கால்வாய்மூலம் கோரையாறு மற்றும் மலட்டாறு பகுதிகளில் திருப்பி நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டம்

பெண்ணையாற்றின் கிளை நதியான மலட்டாறு அன்றாயநல்லூர் கிராமம் அருகே பிரிகிறது. தென்பெண்ணை ஆற்றுப்படுகை மலட்டாற்றின் ஆற்றுப்படுகையை விட தாழ்வாக உள்ளதால், தென்பெண்ணையாற்றின் நீர் மலட்டாற்றில் செல்ல இயலவில்லை. இத்திட்டத்தில் ஆற்காடு கிராமம் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பை ஏற்படுத்தி வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீரை மலட்டாற்றிற்கு திருப்பிவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மலட்டாற்றில் உள்ள நீர் செறிவு மண்டலமானது புத்துயிர் பெறுவதுடன் மலட்டாற்றை சுற்றியுள்ள கடலூர் மாவட்டத்தில் சுமார் 67 கிராமங்களிலும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் சுமார் 20 கிராமங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது.

மேலும், கோரையாற்றின் குறுக்கே பையூர் கிராமம் அருகே ஒரு கட்டுமானமும் மற்றும் சிறுமதுரை கிராமம் அருகே ஒரு கட்டுமானமும் அமைப்பதனால் சிறுமதுரை, மாரங்கியூர்

2023 மார்ச் 29]

மற்றும் பையூர் ஆகிய கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது. மேற்கூறிய திட்டத்திற்கு விரிவான நில அளவை மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிக்கு ரூ.8.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பெண்ணையாற்றின் மிகுந்த வெள்ளப் பெருக்கினால் ஆற்றின் படுகை வடிவம் கணிசமாக மாறியுள்ளமையால், இத்திட்டம் மறு ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. விரிவான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

21.7. தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், ஈச்சம்பாடி கிராமத்தில் பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈச்சம்பாடி அணைக்கட்டிலிருந்து வெளியேறும் பெண்ணையாற்றின் மழைக் கால வெள்ள உபரி நீரை நீரேற்று திட்டத்தின்மூலம் அரூர், பாப்பிரெட்டிபட்டி மற்றும் மொரப்பூர் வட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு நீர் வழங்கும் திட்டம்

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், ஈச்சம்பாடி கிராமத்தில் பெண்ணையாற்றின் குறுக்கே ஈச்சம்பாடி அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வணைக்கட்டிலிருந்து வெளியேறும் பெண்ணையாற்றின் மழைக்கால வெள்ள உபரி நீரினை பொதியம்பள்ளம் ஏரி தொகுப்பு, கம்பைநல்லூர் ஏரி தொகுப்பு, நவலை ஏரி தொகுப்பு, ஈச்சம்பாடி ஏரி தொகுப்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள சாத்தியக்கூறு உள்ள 60 ஏரிகள் மற்றும் குளங்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு விரிவான நில அளவை மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிக்கு ரூ.10 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்நீரேற்றுத் திட்டத்தின் மொத்த நீர்த் தேவை 181 மி.க. அடி ஆகும். இத்திட்டத்தின்மூலம் வினாடிக்கு 140 கன அடி வீதம் 15 நாட்களுக்கு நீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 1,915.50 ஏக்கர் நிலங்கள் பயனடையும். இத்திட்டத்திற்கு 162.42 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் 124.29 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் நில எடுப்பு/நிலமாற்றம் செய்யப்பட வேண்டும். விரிவான திட்ட மதிப்பீடு ரூ.401 கோடிக்கு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

[2023 மார்ச் 29

21.8. கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கோமுகி அணையின் மேல்புறத்தில் கல்படை மற்றும் பொட்டியம் ஆறுகளின் குறுக்கே தலா ஒரு சிறிய அணை அமைத்து கூடுதல் நீர்த்தேக்கம் ஏற்படுத்தும் திட்டம்

கோமுகி நீர்த்தேக்கமானது கள்ளக்குறிச்சி வட்டம், கச்சிராபாளையம் கிராமம் அருகில் கல்வராயன் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. கோமுகி அணையானது பொட்டியம் ஆறு, மல்லிகைபாடி ஆறு மற்றும் கல்படை ஆறுகளின்மூலம் நீர்வரத்துப்பெறுகிறது. இந்த 3 ஆறுகளில் கல்படை மற்றும் பொட்டியம் ஆறுகள்மூலம் பெறப்படும் நீர், கோமுகி அணை நீர்த்தேக்கத்திற்கு நீர் வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. கோமுகி அணைக்குக் கல்படை ஆறு இடது புறத்திலும், பொட்டியம் ஆறு வலது புறத்திலும் வந்து சேர்கின்றன. கோமுகி அணையின் தற்போதைய முழுக் கொள்ளளவு 560 மி.க. அடி ஆகும். இது கோமுகி அணையின் புதிய ஆயக்கட்டு 5000 ஏக்கர் மற்றும் பழைய ஆயக்கட்டு 5000 ஏக்கர் ஆகியவற்றின் நீர்ப் பாசனத்தை முழுமையாகப் பூர்த்தி செய்ய ஏதுவாக இல்லை.

எனவே, உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தில் கல்படை மற்றும் பொட்டியம் ஆறுகளின் குறுக்கே தலா ஒரு சிறிய கட்டுமானங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்ட திட்டத்தின்மூலம் கூடுதலாக நீரைச் சேமிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

மேற்கூறிய திட்டத்திற்கு, விரிவான நில அளவை மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிக்கு ரூ.14.65 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. விரிவான தள ஆய்வு முடிக்கப்பட்டு, பல்வேறு மாற்று கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

21.9. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், கொடியாளம் அணைக்கட்டிலிருந்து பெண்ணையாற்றின் நீரை நீரேற்று முறையில் உயர்மட்ட ஏரிகளுக்கு கொண்டு செல்லும் திட்டத்திற்கு ஆய்வுகள் மேற்கொள்ளுதல்

கொடியாளம் அணைக்கட்டு தென்பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள முதல் அணைக்கட்டாகும். கொடியாளம் அணைக்கட்டிலிருந்து சுற்றியுள்ள முறைசாரா ஏரிகள்

2023 மார்ச் 29]

பெண்ணையாற்றின் மட்டத்தைவிட உயரத்தில் அமைந்துள்ளன. குறைவான மழைப் பொழிவு காரணமாக இவ்வேரிகளுக்குப் போதிய நீர்வரத்து இல்லை.

எனவே, பெண்ணையாற்றின் மட்டத்தைவிட உயரத்தில் அமைந்துள்ள ஏரிகளுக்குக் கொடியாளம் அணைக்கட்டின் வலதுபுறம் 26 ஏரிகளுக்கும், இடதுபுறம் அமைந்துள்ள 24 ஏரிகளுக்கும் நீரேற்று முறையில் நீர் எடுத்து செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த நீர்த் தேவை 156 மி.க. அடி ஆகும். இத்திட்டத்தினால் சுமார் 1,406 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்திற்கு மண் மாதிரி குழிகள், மட்ட அளவுகள் மற்றும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வணைக்கட்டு பெண்ணையாற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் அமைந்துள்ள முதல் அணைக்கட்டாகும். பெங்களூரு நகரத்தின் கழிவு நீர் இவ்வணைக்கட்டுக்கு மிகுதியாக வந்து சேருகிறது. ஆகையால், இக்கழிவு நீரைப் பாசனத்திற்கு உகந்த நீராக மாற்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வு முடிவுகள் பெற்றவுடன் இத்திட்டத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும்.

21.10. தோணிமடுவு பாசனத் திட்டம்

இத்திட்டமானது, தோணிமடுவு பள்ளத்தில், காட்டாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்து, வெள்ள நீரை, புதிதாக வாய்க்கால் அமைத்து, ஈரோடு மாவட்டத்தில் உள்ள வறண்ட பகுதிகளான குளத்தூர், அந்தியூர் மற்றும் பவானி வட்டங்களில் உள்ள குளங்கள் மற்றும் ஏரிகளுக்கு நீர் நிரப்பும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் நில அளவை மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு, இப்பணிகளுக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத் தளமானது வனப் பகுதியினுள் அமைந்துள்ளதால், வனத் துறையிடம் நுழைவு அனுமதி பெறுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2023 மார்ச் 29

21.11. காவிரி ஆற்றின் வெள்ள உபரி நீரை நீரேற்றம்மூலம் கரூர் மாவட்டம், தாதம்பாளையம் ஏரிக்கும், ஆத்துப்பாளையம் அணைக்கும், வெள்ளியணை ஏரிக்கும், ஜகதாம்பி குளத்திற்கும், உப்பிடமங்கலம் ஏரிக்கும் மற்றும் வீரராக்கியம் ஏரிக்கும் கொண்டு செல்லும் திட்டம்

கரூர் மாவட்டத்தில் உள்ள தாதம்பாளையம் ஏரி, ஆத்துப்பாளையம் அணை, வெள்ளியணை ஏரி, ஜகதாம்பி குளம், உப்பிடமங்கலம் ஏரி, வீரராக்கியம் ஏரி ஆகிய பகுதிகளில் மழை பொய்த்ததால், பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைக்கு விவசாயிகள் கடும் தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்பட்டு வருகின்றனர். காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது உபரி நீரைத் திருப்பி விட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி நீர்த்தேக்கம் மற்றும் ஏரிகள் காவிரியின் படுகை மட்டத்தை விட உயரத்தில் அமைந்துள்ளதால் இந்த ஏரிகளுக்கு நீரேற்றம் செய்து குழாய்கள் மூலமே நீர் வழங்க இயலும்.

விரிவான ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.15 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்ட ஆய்வுப் பணிகள் முடிவுற்று, இத்திட்டத்தின் முதல் நிலை சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

21.12. திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடநாதபுரம் கதவணையிலிருந்து நீரேற்றும் முறையில் மானூர் மற்றும் பள்ளமடை குளங்களுக்கு நீர் வழங்கும் திட்டம்

இத்திட்டமானது, திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாளையங்கோட்டை வட்டம், திருவேங்கடநாதபுரம் கிராமத்தில் அமைக்கப்படவிருக்கும் கதவணையிலிருந்து புதிய வாய்க்கால் அமைத்து நீரேற்றும் முறையில் மானூர், பள்ளமடை மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிற்றாறு முறைப் பாசனப் பரப்பின் கீழுள்ள வறண்ட பகுதிகளுக்கு நீர் கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் பள்ளிக்கோட்டை அணைக்கட்டின் கீழுள்ள 12 கண்மாய்களின்மூலம் 554.23 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது.

2023 மார்ச் 29]

இத்திட்டத்திற்கு நில அளவை மற்றும் மட்ட அளவைப் பணிகள் அறிவிக்கப்பட்டு, ரூ.40 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் முடிவுற்றன. முதல்நிலை சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

21.13. அமராவதி ஆற்றின் உபரிநீரை திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வட்டமலைகரை ஓடை நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு செல்லும் திட்டம்

சுமார் 268.04 மி.க. அடி கொள்ளளவுக் கொண்ட வட்டமலைகரை ஓடை நீர்த்தேக்கமானது 1981 ஆம் ஆண்டில், 6,040 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் கட்டப்பட்டது. இந்நீர்த்தேக்கத்தின் நீர்ப் பிடிப்புப் பகுதியில் போதிய நீர் வரத்து இல்லாததால் இந்நீர்த்தேக்கம் கடந்த 28 ஆண்டுகளாக அதன் முழுக் கொள்ளளவை எட்டவில்லை.

எனவே, இந்நீர்த்தேக்கத்தின்மூலம் பாசன வசதி பெறும் நிலங்களுக்கு பாசன வசதி பெறும் விதமாக அமராவதி ஆற்றின் வெள்ள உபரிநீரை புவியீர்ப்புக் கால்வாய் அல்லது நீரேற்றம் மூலமாக வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நில அளவை மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிகளுக்கு ரூ.10 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்ட ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

21.14. பூண்டி சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்தின் முழு நீர்மட்டத்தினை இரண்டு அடி உயர்த்தி, கொள்ளளவை அதிகரிக்கும் பணி

கொசஸ்தலையாற்றின் குறுக்கே பூண்டி நீர்த்தேக்கம் என்று அறியப்படும் சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம், சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் 5 குடிநீர் ஆதாரங்களில் ஒன்றாகும். வெள்ள நீரைத் தேக்கி வைப்பதற்காக 1940 ஆம் ஆண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 1944 ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. பூண்டி நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்பு பகுதி 1,968 சதுர கி.மீ.. மற்றும் அதன்

கொள்ளளவு 2.750 டி.எம்.சி. அடி. ஆகும். கொசஸ்தலையாறு, நகரியாறு மற்றும் கிருஷ்ணா நீர் வழங்கல் (மாநிலங்களுக்கு இடையேயான நீர் ஒப்பந்தம்மூலம்) ஆகியவற்றிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் நீரைப் பெறுகிறது.

கிருஷ்ணா நீர் வழங்கல் திட்டத்தின்கீழ், 1990–1996 ஆம் ஆண்டு மத்திய நீர் ஆணையத்தின் தரத்தை கடைபிடிக்கும் வகையில், நீர்த்தேக்கத்தின் முழு கொள்ளளவினை 33 அடியிலிருந்து 35 அடியாக உயர்த்தியதன்மூலம் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 2.750 டி.எம்.சி. அடியிலிருந்து 3.231 டி.எம்.சி. அடியாக உயர்த்தப்பட்டது.

பெருகி வரும் சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்ற, நீர்நிலைகளின் சேமிப்பு கொள்ளளவை அதிகரிக்க சாத்தியமான தீர்வுகளைக் காண வேண்டியது காலத்தின் தேவை ஆகும். அவற்றில் ஒன்று பூண்டி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை அதிகரிப்பதாகும்.

நீர்தேக்கத்தின் முழு நீர் மட்டத்தை (FRL) மேலும் 2 அடி அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் சேமிப்பு கொள்ளளவு 3.231 டி.எம்.சி. அடியிலிருந்து 3.971 டி.எம்.சி. அடியாக அதிகரிக்கப்பட்டு, கூடுதலாக 0.74 டி.எம்.சி. அடி நீர் சேமிக்கப்படும். இதற்காக ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளவும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கவும் ஒப்புதல் அளித்துள்ளது. ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்ப் பாசனக் கட்டமைப்பின் ஒருங்கிணைந்த புனரமைப்பு

கோதையாறு மற்றும் கொள்ளிடம் வடிநிலங்கள், வெண்ணாறு மற்றும் பரம்பிக்குளம்-ஆழியாறு உப வடிநிலங்களில், நீர்ப் பாசன உட்கட்டமைப்புகளின் ஒருங்கிணைந்த புனரமைப்பு மற்றும் தானியங்கி சமூக நுண்ணீர்ப் பாசனம் வழங்க விரிவான ஆய்வு பணிகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு கீழ்க்காணுமாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

அ) கோதையாறு வடிநிலம்-கன்னியாகுமரி மாவட்டம்— மதிப்பீட்டுத் தொகை ரூ.2.596 கோடி

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய 2 பருவமழைக் காலங்களிலும் கோதையாறு வடிநிலத்திற்கு நீர் கிடைக்கப்

2023 மார்ச் 29]

பெறுகிறது. பொதுவாக ஒவ்வொரு வருடமும் 9 மாதங்கள் வரை நீர்ப் பாசன காலம் நீடிக்கிறது. தொடர்ச்சியாக நீர் வழங்குவதனால் ஏற்படும் கட்டமைப்பின் பழுதுகள் அவ்வப்போது கிடைக்கப்பெறும் வருடாந்திர பராமரிப்பு நிதிமூலம் செப்பனிடப்பட்டு கட்டமைப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது. நீர் கடத்தும் திறனும் வெகுவாகக் குறைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட சிக்கல்களைத் தீர்க்க, காலநிலை மாற்றத்தின் விளைவுகளைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் இந்த அமைப்பின் சீரான செயல்பாட்டிற்காக ஒரு நிலையான மற்றும் காலநிலை மாறுதலுக்கு ஏற்ற நவீனமயமாக்கல் திட்டத்தைக் கொண்டு வர, விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஆ) கொள்ளிடம் வடிநிலம்- திருச்சிராப்பள்ளி, அரியலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்கள்- மதிப்பீட்டுத் தொகை ரூ.9.983 கோடி

பல நூற்றாண்டுகளாகப் பயன்பாட்டில் உள்ள, கொள்ளிடம் ஆற்றின் அமைப்பில் ஒருங்கிணைந்த புனரமைப்பினை மேற்கொள்வது அவசரத் தேவையாக உள்ளது. நீர் இழப்பைக் குறைக்கவும், பாசனத் திறனை மேம்படுத்தவும் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள கால்வாய்கள், வாய்க்கால்கள், வடிகால் உள்வாங்கிகள், மதகுகள், நீரொழுங்கிகள் போன்றவற்றைப் புனரமைக்க வேண்டியுள்ளது. எனவே, திருச்சிராப்பள்ளி, அரியலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள கொள்ளிடம் வடிநிலத்தில், நிலையான மற்றும் காலநிலை மாறுதலுக்கு ஏற்ற நவீனமயமாக்கல் திட்டத்திற்குப் புதிய மேம்பட்ட தொழில்நுட்பத்துடன்கூடிய விரிவான ஆய்வு நடத்துவது அவசியமாகும்.

இ) வெண்ணாறு உப வடிநிலம்—தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள்—மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80 கோடி

காவிரி வடிநிலத்திலுள்ள வெண்ணாறு உப வடிநிலத்தில் வெண்ணாற்றின் தொலைகல் 27.260 கி.மீ. முதல் 55.510 கி.மீ. வரையிலான பாசன அமைப்புகளை புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் காவிரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதலைத் தழுவல் திட்டத்தின் முதல் கட்டத்தின்கீழ் (6 ஆறுகள்) எடுக்கப்பட்ட

[2023 மார்ச் 29

பகுதிகள் மற்றும் பரிசீலனையில் உள்ள இரண்டாம் கட்டத்தின்கீழ் (5 ஆறுகள்) எடுக்கப்படவுள்ள பகுதிகள், நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் வெட்டாறு, ஓடம்போகியாறு மற்றும் வெண்ணாறு உப வடிநிலத்தில் உள்ள அனைத்து ஆறுகளின் 'ஏ' வகுப்பு வாய்க்கால்கள் தவிர, மற்ற பகுதிகள் இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

எனவே, மேற்குறிப்பிட்ட ஆற்று அமைப்புகளின் புனரமைப்புக்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கும், மத்திய நீர் ஆணைய வழிகாட்டுதல்களின்படி தானியங்கி சமூக நுண்ணீர்ப் பாசனத்தை வழங்குவதற்கும், மேலும் ஒன்றிய அரசின் மத்திய நீர் ஆணையத்தின் பல்வேறு இயக்குனரகங்களின் முதலீட்டு அனுமதி மற்றும் ஒப்புதல் பெறுவதற்கும் விரிவான ஆய்வு நடத்துவது அவசியமாகும்.

ஈ) பரம்பிக்குளம்-ஆழியாறு உப வடிநிலம்-கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள்—மதிப்பீட்டுத் தொகை ரூ.7.08 கோடி

பாசன நீர் கால்வாய்களை அதன் வடிவமைக்கப்பட்ட மற்றும் அதன் நிலையான தரத்தினை மீட்டெடுக்கவும், நீர்ப்போக்கின்போது ஏற்படும் நீரிழப்பைக் குறைக்கவும், வடிவமைக்கப்பட்ட நீர்கடத்துத் திறனை அடையவும், கால்வாய்களைச் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டமைப்பின் நிலைத் தன்மையினை உறுதி செய்வதற்கு குறுக்கு கட்டமைப்புகளை மறுகட்டுமானம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டமானது தானியங்கி சமுதாய நீர்ப் பாசனம்மூலம் சீரான நீர் பகிர்மானம் மற்றும் செம்மையான பாசன நீர் மேலாண்மையைச் செயல்படுத்த மிகவும் ஏற்றது. எனவே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட கட்டமைப்புகளைப் புனரமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு விரிவான ஆய்வு நடத்த வேண்டியது அவசியமாகும்.

22.0. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கல் அதிகரித்தல் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வெள்ளத்தணிப்புத் திட்டம்

தொடர் வெள்ளம் மற்றும் குடிநீர் பிரச்சினையிலிருந்து சென்னை மாநகரைக் காக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. சென்னை மாநகரில் மீண்டும் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்க, குறுகிய கால மற்றும் நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29]

தற்போதுள்ள, 6 நீர்த்தேக்கங்களான சோழவரம், செம்பரம்பாக்கம், பூண்டி, கண்ணன்கோட்டை-தேர்வாய்கண்டிகை, செங்குன்றம் மற்றும் வீராணம் ஏரி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கொள்ளளவான 13 டி.எம்.சி. அடி. நீர் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கிறது. தற்பொழுது, சென்னை மாநகரின் குடிநீர் மற்றும் தொழில் துறைக்கான தேவை 22 டி.எம்.சி. அடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், பெருகிவரும் மக்கள் தொகையினைக் கருதி 2035 ஆம் ஆண்டுக்குள் நீர்த் தேவை சுமார் 32 டி.எம்.சி. அடி. ஆக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது, காலநிலை பருவமாற்றம் வெப்பமண்டல பகுதிகளில் காலநிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்படுவதன் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் பல பகுதிகளில் வரலாறு காணாத திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. எனவே, தற்போதைய நீர் தேவைக்கும், வினியோக விகிதத்துக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும், வெள்ளத்தைத் தாங்கும் நகர்ப்புற உள்கட்டமைப்பை உருவாக்கவும், "சென்னை மாநகர நீர் வழங்கல் அதிகரிப்பு மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கும் வெள்ளத்தைத் தணிக்கும்" திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தைத் தணித்தல் மற்றும் மழைநீரைச் சேமித்து நீர் பற்றாக்குறையுள்ள ஆண்டுகளில் பயன்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். புதிய சேமிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குதல், தற்போதுள்ள நீர்நிலைகளின் சேமிப்புத் திறனை அதிகரித்தல், நீர்கடத்தும் திறனை மேம்படுத்துதல் மற்றும் சாத்தியமான நீர்நிலைகளை இணைப்பதன்மூலம் சென்னை மாநகரின் மழைநீர் சேமிப்புத் திறனை மேம்படுத்துதல் ஆகியவை விரிவான கருத்துருவில் உள்ளடங்கியுள்ளன. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் 20.50 டி.எம்.சி. அடி கூடுதல் சேமிப்புத் திறனை உருவாக்கவும், சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு நிரந்தரத் தணிப்பு நடவடிக்கைகளைக் கண்டறியவும் ரூ.22,004 கோடி உத்தேச மதிப்பீட்டில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 6.4.2022 அன்று சட்டமன்றத்தில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான நீர்வளத்

துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது சென்னையில் வெள்ளத் தணிப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும், சென்னை நகருக்கு கூடுதல் நீர் வழங்குவதற்காக ரூ.5.12 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் ஒன்றை அறிவித்தார்.

இதன்படி சென்னையில் வெள்ளத் தணிப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும், சென்னை மாநகருக்குக் கூடுதல் நீர் வழங்குவதற்கும் ஒரு முன்னோடித் திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு ரூ.5.02 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான நிறுவனம் கண்டறியப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

இணைப்பு II

(106 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. தொழிலாளர் துறை

தொழிலாளர் துறையானது தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதன் வாயிலாகவும், பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்துவதன் வாயிலாகவும், பரந்த மற்றும் பன்முகத் தன்மையுடைய அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா உழைக்கும் வகுப்பினரின் நலனை மேம்படுத்தும் நோக்கத்தில் பணியாற்றுகிறது.

அரசமைப்பு ஏற்பாடு

இந்திய அரசமைப்புச் சட்டத்தில், தொழிலாளர் என்ற பொருள் பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. எனவே, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஆகிய இரண்டிற்கும் சட்டமியற்ற அதிகாரம் உள்ளது.

பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ள தொடர்புடைய விவரங்கள் பின்வருமாறு:

22. தொழிற்சங்கங்கள்; தொழில் மற்றும் தொழிற்தகராறுகள்

23. சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக காப்பீடு; வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை.

24. பணி நிலைமைகள், வருங்கால வைப்பு நிதி, வேலையளிப்போரின் பொறுப்புகள், பணியாளர் இழப்பீடு, செயல்பாடற்ற மற்றும் முதியோர் ஓய்வூதியம் மற்றும் மகப்பேறு நலன் உள்ளிட்ட தொழிலாளர்களின் நலன்.

33-A. தர நிர்ணயம் நீங்கலான பிற எடைகள் மற்றும் அளவைகள்.

[*2023 மார்ச் 29*

1.1. துறையின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள்

- ❖ *தொழிலாளர்களைப் பாதுகாத்தல், நியாயமான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தை உறுதி செய்வதன் வாயிலாக உற்பத்தியைப் பெருக்குதல்.*

- ❖ *குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948-ன் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சில தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்தல்.*

- ❖ *ஒத்த தன்மையுடைய பணிக்கு, ஒரே மாதிரியான ஊதியம் என்பதை வேலையளிப்பவரிடம் வலியுறுத்துவதன் வாயிலாக சம வாய்ப்பினை வளர்த்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியிலான பாகுபாடுகளைத் தடுத்தல் அல்லது தடுக்கும் கொள்கைகளை உருவாக்குதல்.*

- ❖ *அனைத்து வடிவங்களிலும் உள்ள குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை ஒழித்தல்.*

- ❖ *நுகர்வோர் பாதுகாப்பு தொடர்புடைய தொழிலாளர் சட்டங்களை அமலாக்குதல்.*

- ❖ *வேலையளிப்பவர், பணியாளருக்கு எதிராக சரியான காரணங்களின்றி தண்டனைக்குரிய நடவடிக்கை எடுப்பதைத் தடுத்திட, வேலையளிப்பவர் மற்றும் பணியாளரிடையேயான உறவினை சமரசத்தின்மூலம் சம நிலைப்படுத்துதல்.*

- ❖ *வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர்களிடையேயான தொழிற்தகராறுகளை சமரச பேச்சுவார்த்தைகளால் முடிவிற்குக் கொண்டு வருவதை ஊக்குவிப்பதன் மாநிலத்தில் தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்தல்.*

- ❖ *நீதிசார் பணிகள் மேற்கொள்ளுதல்மூலம் தொழிலாளர் நலன் பாதுகாத்தல்.*

- ❖ *பல்வேறு தொழிலாளர் நல வாரியங்கள் வாயிலாக, அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்குப் பலவிதமான சமூகப் பாதுகாப்பு உதவிகள் வழங்குதல்.*

TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

1.2. நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில், தொழிலாளர் துறையானது, 1920 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன் தலைமையிடம் சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ்.வளாகத்தில் அமைந்துள்ளது. இத்துறை ஒரு மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலரான, தொழிலாளர் ஆணையரால் தலைமை வகிக்கப்படுகிறது. 12 தொழிலாளர் கூடுதல் ஆணையர்கள், 16 தொழிலாளர் இணை ஆணையர்கள், 24 தொழிலாளர் துணை ஆணையர்கள், 103 தொழிலாளர் உதவி ஆணையர்கள், 2 உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்), 1 கணக்கு அலுவலர் மற்றும் 1 மக்கள் தொடர்பு அலுவலர், 70 தொழிலாளர் துணை ஆய்வர்கள், 220 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள் மற்றும் 1,299 பணியாளர்கள் உள்ளனர்.

1.3. தொழிலாளர் சட்டங்கள்

1.3.1. தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கம் உறுதி செய்தல்

மாநிலத்தில் பெருமளவிலான வேலைவாய்ப்புகளுக்கான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய தொழில் அமைதி இன்றியமையாததாகிறது. தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்திட இத்துறையின் சமரச அலுவலர்கள் தொழிற்தகராறுகளைத் தீர்த்து வைக்க தேவையான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

❖ **தொழிற்தகராறுகள் சட்டம், 1947-ன்கீழ் சமரச அலுவலர்கள் தொழிற்தகராறுகளைத் தீர்த்து வைத்தல்:**

தொழிற்தகராறுகளை சமரசம் செய்து சுமூகத் தீர்வு காணும் பணி சமரச அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 2,178 தொழிற்தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

❖ **வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளைத் தீர்த்து வைத்தல்:**

வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பிற்கான அறிவிப்பு கிடைக்கப் பெற்றதும், தொழிற்தகராறில் தொடர்புடைய வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே சமரச பேச்சு வார்த்தையினை ஏற்பாடு செய்து தொழிற்தகராறுகளை சமரச அலுவலர்கள் தீர்த்து வைக்க முயற்சிக்க வேண்டும்.

[2023 மார்ச் 29

தீர்வு காணப்பட்ட முக்கியத் தொழிற்தகராறுகள்

(அ) இண்டோடெக் ட்ரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட் (INDO TECH Transformers Ltd.)

காஞ்சிபுரம் மாவட்டம், இலுப்பப்பட்டு கிராமம், இண்டோடெக் ட்ரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட் நிறுவனம் 18 ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணியாளர்களாக (Staff) பணியமர்த்தம் செய்யப்பட்டதற்கு எதிராக 2.11.2022 அன்று அந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருப்பெரும்புதூர், தொழிலாளர் துணை ஆணையரின் (சமரசம்)-1 முன்னிலையில் 2.11.2022 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தொழிலாளர்களின் உள்ளிருப்புப் போராட்டம் உடனடியாக விலக்கிக்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் புதிய பணியாளர்களைப் பணியமர்த்துதல், ஊதிய உயர்வு, போனஸ் தொடர்பாக ஏற்புடைய அறிவுரை சமரச அலுவலரால் வழங்கப்பட்டு தொழிற்தகராறு தீர்த்து வைக்கப்பட்டது.

(ஆ) இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட் (India Yamaha Motor Private Limited)

காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகல் கிராமத்தில் அமைந்துள்ள இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையின் தொழிலாளர்களில் ஒரு பிரிவினர், இந்தியா யமஹா மோட்டார் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு.) தொழிற்சங்கத்தை நிர்வாகம், அங்கீகாரம் செய்யக் கோரி, 11.10.2022 முதல் உள்ளிருப்புப் போராட்டம் செய்தனர். இத்துறையின் சீரிய முயற்சியின் பயனாக சென்னை கூடுதல் தொழிலாளர் ஆணையரின் முன்னிலையில் கீழ்க்காணும் பொருள் குறித்த ஏற்புடைய அறிவுரை வழங்கப்பட்டது:

1. பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கத்தை அடையாளம் காணுவதற்கான நடைமுறை,
2. 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளுக்கான போனஸ் வழங்குதல்,

2023 மார்ச் 29]

3. தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட 7 நாட்கள் ஊதியத்தைத் திரும்ப அளித்தல்.

மேற்கண்ட ஏற்பாட்டின்படி தொழிற்சங்கம் 20.10.2022 முதல் உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தை விலக்கிக்கொண்டது.

(இ) தப்தி லெதர்ஸ் பிரைவேட் லிமிடெட் (TAPTI Leathers Private Limited)

காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரத்தில் செயல்பட்டு வரும் தப்தி லெதர்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிலாளர்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கு 18 சதவிகித போனஸ் அளிக்கக் கோரி 27.9.2022 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்த போராட்டம் செய்தனர். திருப்பெரும்புதூர், தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்)-1 அவர்களின் முயற்சியின்மூலம் நிர்வாகம் 2021-2022 ஆம் ஆண்டிற்கு 16 சதவிகித போனஸ் வழங்க ஒப்புக்கொண்டதில் 29.9.2022 அன்று உள்ளிருப்புப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

❖ **ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் தீர்வுத் தொகை ஒப்பந்தம்**

*அரசாணை (நிலை) எண் 171, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 28.12.2022-ன்மூலம் செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோவிலில் செயல்பட்டு வரும் ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு 31.1.2023 அன்று முதல் ஆலை மூடுதலுக்கு அனுமதி வழங்கி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், அதன் தொழிலாளர்களுக்கும் இடையே தீர்வுத் தொகை ஒப்பந்தம் (*severance settlement*) ஏற்படுத்தப்பட்டு, அதன் வாயிலாக 2,592 தொழிலாளர்கள் ரூ.1,296 கோடி அளவில் பயன்பெற்றுள்ளனர்.*

❖ **தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

மற்றும் அதைச் சார்ந்த இதர கோரிக்கைகள் குறித்து, 14-வது ஊதிய ஒப்பந்தத்திற்கான சமரச பேச்சுவார்த்தை, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகங்களுடன் நடைபெற்றது. தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12(3)-ன்கீழ் 24.8.2022 அன்று சென்னை, தொழிலாளர் தனி இணை ஆணையர் முன்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த சமரச ஒப்பந்தத்தின்மூலம் 1.25 இலட்சம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வொப்பந்தம் 4 ஆண்டுக் காலம் அமலில் இருக்கும்.

❖ **பீடி சுற்றும் தொழிலாளர்களின் புதிய ஊதிய ஒப்பந்தம்**

தமிழ்நாடு பீடித் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு தொடர்பாக 10.5.2022 முதல் 9.5.2025 வரை மூன்றாண்டுக் காலத்திற்கு தொழிற்தகராறுகள் சட்டம், 1947, பிரிவு 12(3)-ன்கீழ் புதிய ஊதிய ஒப்பந்தம் சென்னை, தொழிலாளர் தனி இணை ஆணையர் முன்பு 10.5.2022 அன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி பீடி சுற்றும் தொழிலாளர்கள் 1,000 பீடிகள் சுற்றுவதற்கு, சாதா பீடி-ரூ.247.81 மற்றும் ஜாதி பீடி-ரூ.248.01 மறு நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியமாக, அகவிலைப் படியையும் சேர்த்து பெறுவார்கள். இந்த ஒப்பந்தம் காரணமாக தமிழ்நாட்டில் சுமார் 1,78,000 பீடி சுற்றும் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ **தோல் பதனிடும் தொழிலாளர்களுக்குப் புதிய ஊதிய ஒப்பந்தம்**

சென்னை, தொழிலாளர் தனி இணை ஆணையர் முன்னிலையில் தோல் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 9.6.2022 அன்று மூன்று ஆண்டுகளுக்கான புதிய ஊதிய ஒப்பந்தம் தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12(3)-ன்கீழ் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வொப்பந்தத்தின்படி 1.1.2022 முதல் உருப்படி வீதத்தில் (Piece rate) தோல் பதனிடும் தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் அடிப்படை சம்பளத்துடன் நாளொன்றுக்கு ரூ.40/- ஆக

உயர்த்தப்பட்டுள்ளது, இதனால் 5,000 தோல் பதனிடும் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள்

2022 ஆம் ஆண்டில் தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள் பெரும்பாலான வழக்குகளை முடித்து வைத்துள்ளன.

❖ நிலையாணைகளுக்குச் சான்று வழங்குதல்

தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 சான்றளிக்கப்பட்ட நிலையாணையின்கீழ் தொழிலாளர்களின் வேலை நிபந்தனைகளைத் தொழில் நிறுவனங்களின் வேலையளிப்போர் வரையறுக்க இச்சட்டம் வழிவகுக்கிறது. 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 268 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சம்பந்தப்பட்ட கூடுதல் தொழிலாளர் ஆணையர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளது. தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) தமிழ்நாடு திருத்த சட்டம், 2008 (தமிழ்நாடு சட்டம் எண் 11/2016)-ஐ அமல்படுத்துதல் தொடர்பாக பல்வேறு தொழில்களில் உள்ள தற்போதைய சூழ்நிலைகளை ஆராய்ந்து, பரிந்துரைகள் வழங்குவதற்காகத் தொழிலாளர் ஆணையர் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட குழு அரசாணை (டி) எண் 543, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 9.11.2022 மூலம் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

❖ தொழிற்சங்கங்களை பதிவு செய்தல்

தொழிற்சங்கங்கள் சட்டம், 1926, கூட்டு பேரம் பேசுவதற்குத் தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான அமைப்பை வழங்குவதற்கான நோக்கத்துடன் தொழிற்சங்க உறுப்பினர்களின் பதிவு, ஒழுங்குமுறை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்குகிறது. தொழில் அமைதியினைப் பாதுகாப்பதற்கு, வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர்களுக்கிடையிலான தொழிற் தகராறுகளைக் கூட்டு பேரத்தின் வாயிலாகத் தீர்த்து வைப்பதில் தொழிற்சங்கங்கள் முக்கியப்

பங்காற்றுகின்றன. இச்சட்டத்தின்கீழ் 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 167 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1.3.2. குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்தல் மற்றும் உரிய நேரத்தில் ஊதியம் வழங்குவதை உறுதி செய்தல்

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948, சம்பள பட்டுவாடா சட்டம், 1936, சம ஊதியச் சட்டம், 1976 மற்றும் போனஸ் வழங்கல் சட்டம், 1965 ஆகிய தொழிலாளர் சட்டங்கள், குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்திடவும், ஊதியமானது உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்திடவும், போனஸ் வழங்கிடவும் மற்றும் ஒத்த தன்மையுடைய வேலையில் ஈடுபட்டுள்ள ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான ஊதியம் வழங்கிடவும் வழிவகை செய்கின்றன.

- ❖ தமிழ்நாட்டில் 1948 ஆம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் 94 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில், 83 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதியம் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறு நிர்ணயம் செய்யப்படுகிறது. 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 31 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் மறுநிர்ணயம் செய்து முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது மற்றும் 36 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழில், விசைத்தறித் தொழில், சினிமா தொழில் போன்ற அட்டவணைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தப்பட்டதால் பயனடைந்துள்ளனர்.

- ❖ குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக இத்துறை அமலாக்க அலுவலர்களால் சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948-ன்கீழ் அமலாக்க அலுவலர்களால்

2023 மார்ச் 29]

24,994 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு முரண்பாடுகளுக்காக வேலையளிப்பவருக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் ரூ.89,300/- அபராதம் விதிக்கப்பட்டு 58 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்படி காலத்தில், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ், அதிகாரிகளால் 760 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய கேட்புத் தொகை ரூ.7,45,15,061/- வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

- ❖ *தொழிலாளர்களுக்கு, உடனடி மற்றும் உரிய நேரத்தில் ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக இத்துறையின் அமலாக்க அலுவலர்களால் 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 10,809 ஆய்வுகள் சம்பள பட்டுவாடா சட்டம், 1936-ன்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றங்களால் 21 வழக்குகள் முடிக்கப்பட்டு, பல்வேறு முரண்பாடுகளுக்காக வேலையளிப்பவர்களுக்கு ரூ.98,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் அதிகாரிகளால் 164 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ.2,52,68,461/- தொழிலாளர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.*

- ❖ *அமலாக்க அலுவலர்கள் ஆய்வின்போது ஒத்த தன்மையுடைய வேலைக்கு ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு ஒரே மாதிரியான ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்கின்றனர்.*

1.3.3. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-ன் கீழான தொழிலாளர் சட்டத் திருத்தங்கள்

❖ வேலை நேரத்தின்போது அமர்வதற்கான வாய்ப்பு

ஒவ்வொரு நிறுவன வளாகங்களிலும் அனைத்துப் பணியாளர்களுக்கு இருக்கை வசதி வழங்குவதற்காக, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) சட்டம், 2021–ன்கீழ், 22-A என்ற புதிய பிரிவினைச் சேர்த்திட, தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் அறிவிக்கை எண்.465, வெளியிட்டுள்ளது. இதன்படி நின்று கொண்டே பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும்

[2023 மார்ச் 29

பணியிடையே அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி அமரலாம். மேலும், அதன்மூலம் வேலை நேரம் முழுவதும் நின்று கொண்டிருக்கும் சூழலைத் தவிர்க்கலாம். கடைகள் மற்றும் நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு இருக்கை வசதிகளை உறுதி செய்யும்பொருட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 1,407 முரண்பாடுகள் கண்டறியப்பட்டன.

இதன்மூலம் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அமரும் உரிமையை கட்டாயமாக்கிய இந்திய மாநிலங்களுக்குள் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது.

❖ **கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களை 24 x 7 மணி நேரமும் திறப்பது**

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உள்ள 10 மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிகின்ற கடைகள் மற்றும் நிறுவனங்கள், வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் (24 X 7) இயங்கும் வகையில் அரசாணை (நிலை) எண் 61, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 2.6.2022 மூலம் மேலும் மூன்றாண்டுகளுக்கு அனுமதியளித்துள்ளது.

1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் அமலாக்க அலுவலர்களால் இச்சட்டத்தின்கீழ் 99,531 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 4,689 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.10,43,700/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 8 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு, ரூ.52,200/- வேலையளிப்பவர்களுக்கு அபராதமாக விதிக்கப்பட்டது.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டப் பிரிவு 41(2)-ன்கீழ் பணியாளர்களைப் பணி நீக்கம் செய்வது தொடர்பான வழக்குகளை விசாரிக்க மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 164 மேல்முறையீட்டு மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 29]

1.3.4. உணவு நிறுவனங்களில் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்

தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958 உணவு நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட வழிவகை செய்கிறது. 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில், உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து, பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.1,02,34,390/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், 5,777 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 3,230 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.6,13,750/- வசூலிக்கப்பட்டுள்ளது.

1.3.5. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961-ன் அமலாக்கம்

மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தி, அவர்களது நலனை உறுதி செய்திட மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961 இயற்றப்பட்டுள்ளது. 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 81 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டு, பதிவு மற்றும் புதிப்பித்தல் கட்டணமாக ரூ.31,10,950/- வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட காலத்தில் 1,261 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 393 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.1,10,300/- வசூலிக்கப்பட்டுள்ளது.

1.3.6. பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்

பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நலன்களை வழங்கவும், அவர்களது பணி நிலைமையினை முறைபடுத்திட பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966 வழிவகை செய்கிறது. 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 1,059 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களால் 63 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு ரூ.21,000/- அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தினைச் செயல்படுத்தும் தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள், பீடித் தொழிலாளர்களுக்கான பணி மற்றும் விடுப்பு அட்டைகளை பீடித் தொழில் நிறுவனங்களிலிருந்து பெற்று வழங்குவதை உறுதி செய்கின்றனர்.

1.3.7. பத்திரிகை நிறுவனங்களில் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்

மாநிலத்தில் உள்ள 72 பத்திரிகை நிறுவனங்களில், 68 நிறுவனங்கள் 'மஜிதியா ஊதியக் குழுவின்' பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தியுள்ளன. மேலும், மீதமுள்ள நான்கு நிறுவனங்களில் மஜிதியா ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதை உறுதி செய்திட இச்சட்டத்தின்கீழ் அமலாக்க அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955, பிரிவு 17(2)-ன்கீழ் மூன்று வழக்குகள் தொழிலாளர் நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

1.3.8. தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்களில் ஊதியத்துடன் விடுமுறை/இரட்டிப்பு ஊதியம் உறுதி செய்தல்

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், 1958-ன்படி தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக அமலாக்க அலுவலர்களால் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 27,105 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 3,549 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன, இணக்கக் கட்டணமாக ரூ.21,90,300/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், 19 வழக்குகள்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதம் ரூ.21,700/- விதிக்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 மார்ச் 29]

1.3.9. மகப்பேறு உதவிகள் உறுதி செய்தல்

மகப்பேறு நலச் சட்டம், 1961 பெண் தொழிலாளர்களின் மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலத்தில் பணி, ஊதியம் மற்றும் சில மகப்பேறு உதவிகள் வழங்கப்படுவதை முறைப்படுத்தி உறுதி செய்கிறது. இச்சட்டம் மகப்பேறு காலங்களில் குழந்தைப் பிறப்பு எதிர்பார்க்கப்படும் பிரசவ தினத்திற்கு முன் 8 வாரங்களுக்கு மிகாமல் மொத்தம் 26 வாரங்கள் ஊதியத்துடன்கூடிய விடுப்பு வழங்கிட வழிவகுக்கிறது. இச்சட்டத்தின்படி ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் பெண்கள் கடந்த 12 மாதங்களில் குறைந்தது 80 நாட்களாவது பணிபுரிந்து இருக்க வேண்டும். 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில், இச்சட்டத்தின்கீழ், 6,416 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 9 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக ரூ.7,500/- அபராதம் விதிக்கப்பட்டது.

1.3.10. பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981-ன்படி ஒரு தொழில் நிறுவனத்தில் 24 மாத காலத்தில், 480 நாட்கள் தொடர் பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்க வகை செய்கிறது. தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்ட நிறுவனங்கள்) இச்சட்டத்தின்கீழ் அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின்கீழ் 228 பணி நிரந்தரம் கோரும் கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 237 தொழிலாளர்களின் பணியினை நிரந்தரப்படுத்த வேலையளிப்போருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

1.3.11. ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், 1970-ன்கீழ் பதிவு மற்றும் உரிமங்கள்

- ❖ *ஒப்பந்தத் தொழிலாளர் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்பந்தத்தின்மூலம் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறையாகும். 1970 ஆம் வருட ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 20 அல்லது அதற்கு*

மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொருந்தும் மற்றும் சில நிறுவனங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணியினை இச்சட்டம் முறைப்படுத்துகிறது.

❖ 187 பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் 207 உரிமங்கள், முறையே முதன்மை வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. பதிவு புதுப்பித்தல் மற்றும் உரிமக் கட்டணமாக ரூ.95,10,000/- வசூல் செய்யப்பட்டுள்ளது.

1.3.12. புலம் பெயரும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்

❖ சொந்த மாநிலங்களுக்கு வெளியே சேவையில் பயன்படுத்தப்படும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணி நிலைமைகளைப் பாதுகாக்கவும், முறைப்படுத்தவும் மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979 வழிவகை செய்கிறது.

❖ இச்சட்டம் ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணிபுரியும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொருந்தும். மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே பணியில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

❖ 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 6 பதிவுச் சான்றிதழ்களும் மற்றும் 5 உரிமங்களும் முறையே முதன்மை வேலையளிப்பவர்களுக்கும் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கும் இச்சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ளது.

❖ 28.2.2023 அன்றுள்ளவாறு, தொழிலாளர் துறையின் வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கான வலைதளத்தில் (https://labour.tn.gov.in/ism/) 75,321 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2023 மார்ச் 29]

1.3.13. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை அமல்படுத்துதல்

1.3.13.1. சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009

- *இச்சட்டம் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகளை அமல்படுத்துவதுடன் நுகர்வோர் நலனைப் பாதுகாக்கிறது. மேலும், எடை, அளவை அல்லது எண்ணிக்கையின் அடிப்படையில் விற்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் பொருட்கள், எடைகள் மற்றும் அளவைகளைக் கொண்டு செயல்படும் வணிகம் மற்றும் வியாபாரத்தை முறைப்படுத்துகிறது.*
- *1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவுச் சட்டத்தின்கீழ் 41,071 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 6,604 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் அபராதமாக முறையே ரூ.75.57 இலட்சம் மற்றும் ரூ.5,000/- விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது.*
- *1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 713 எடையளவு தயாரிப்பாளர்/விற்பனையாளர்/ பழுதுபார்ப்பவர் உரிமங்கள் வழங்கப்பட்டு/ புதுப்பிக்கப்பட்டு, உரிமக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணமாக ரூ.38.47 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.*

இணையவழி முத்திரையிடுதல்

பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் நலனை பாதுகாக்கும் பொருட்டு மற்றும் வணிகர்கள், எடையளவுகளைப் பரிசீலனை செய்து சான்று பெறும் நடைமுறையை எளிதாக்கும் வகையில் இணைய வழியில் முத்திரையிடும் பணி 23.2.2022 அன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டு சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1.4.2022 முதல் 31.12.2022 முடிய உள்ள காலத்தில் 2,90,496 இணையவழி விண்ணப்பங்கள் பெறப்பட்டு, முத்திரைக் கட்டணமாக ரூ.52.66 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 29

1.3.13.2. சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011

- இவ்விதிகளின்படி பொட்டலப் பொருட்கள் தயாரிப்பாளர், பொட்டலமிடுபவர் மற்றும் இறக்குமதி செய்வோர் அனைவரும் பொட்டலமிடும் பொருட்களின்மீது உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி, பொருட்களின் பொது அல்லது மரபு பெயர், நிகரஎடை, பொட்டலமிடப்பட்ட மாதம் மற்றும் வருடம், சில்லறை விற்பனை விலை உள்ளிட்ட விவரங்களைப் பொட்டலப் பொருட்களின்மீது அறிவிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு, அவர்கள் இவ்விதிகளின்கீழ் பொட்டலமிடுவதற்காகப் பதிவுச் சான்று பெற வேண்டும். அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு அதிகமாக செலுத்துவதிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பது இதன் நோக்கமாகும். மேலும், பொட்டலப் பொருட்கள் குறித்த இதர தகவல்களை நுகர்வோர் அறியவும் இது வழிவகுக்கிறது.
- 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் 2011-ன்கீழ் நீதிமன்ற வழக்குகள் மற்றும் இசைவுத் தீர்வு வழியாக 13,090 நிறுவனங்களில் ஆய்வு செய்யப்பட்டு 1,691 விதிமீறல்கள் கண்டறியப்பட்டு, தீர்வு செய்தவகையில் அபராதமாக ரூ.34,000/- மற்றும் இணக்கக் கட்டணமாக ரூ.75.83 இலட்சம் விதிக்கப்பட்டு, வசூல் செய்யப்பட்டுள்ளது. 1,099 பொட்டலமிடுபவர்/ இறக்குமதியாளர் பதிவுச்சான்றுகள் வழங்கப்பட்டு, பதிவுக் கட்டணமாக ரூ.6.57 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

1.3.14. தோட்ட நிறுவனங்களில் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்துதல்

- தமிழ்நாட்டில் 2,226 தோட்ட நிறுவனங்கள் 62,289 ஹெக்டேர் பரப்பளவில் உள்ளன. இதில் 683 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்கள் 54,654 ஹெக்டேர் பரப்பளவிலும், 1,543 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்கள் 7,635 ஹெக்டேர் பரப்பளவிலும் உள்ளன. தோட்ட நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள

2023 மார்ச் 29]

மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 57,051 ஆகும். இவர்களில் 22,440 ஆண்களும் மற்றும் 34,611 பெண்களும் உள்ளனர்.

❖ தோட்டத் தொழிலாளர்களுக்கான நல வசதிகளை உறுதி செய்வதற்காக, 1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலங்களில் 2,155 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள நல வசதிகள் பின்வருமாறு:

நல வசதிகள்

i. வீட்டு வசதி

1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழ், தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகவும், பயன்பாட்டிற்காகவும் தண்ணீர் வசதி, சிமெண்ட் தரை மற்றும் இணைந்த கழிவறை வசதிகளுடன்கூடிய வீடுகள் தோட்ட நிறுவன உரிமையாளர்களால் இலவசமாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டித் தர வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரை மொத்தம் 41,235 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலகட்டத்தில், 28 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன மற்றும் 10 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.33,500/- அபராதமாக வசூலிக்கப்பட்டது.

ii. குழந்தைகள் காப்பகம்

50 மற்றும் அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் தோட்ட நிறுவனங்களில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலன் மற்றும் பயன்பாட்டிற்காகவும் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் மொத்தம் 227 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன.

iii. கல்வி வசதி

ஒவ்வொரு தோட்ட நிறுவனத்திலும் 6 முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 25 மற்றும் அதற்கு மேலும் இருந்தால் அவர்களுக்குத் தோட்ட நிர்வாகம் கல்வி வசதி ஏற்பாடு செய்து தருவது வேலையளிப்போரின் பொறுப்பு ஆகும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் மொத்தம் 162 பள்ளிக்கூடங்கள் உள்ளன.

iv. உணவகம்

தோட்ட நிறுவனங்களில் 150 மற்றும் அதற்குமேல் தோட்டத் தொழிலாளர்கள் பணிபுரிந்தால் உணவகம் அமைக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் மொத்தம் 81 உணவகங்கள் உள்ளன.

v. குடிநீர் வழங்கல்

தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது தோட்ட நிர்வாகத்தினரின் தலையாயக் கடமையாகும். இப்பாதுகாக்கப்பட்ட குடிநீர் சான்றிதழ் சுகாதார அலுவலர் அல்லது சான்றளிக்கப்பட்ட மருத்துவரிடம் அல்லது தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் பரிசோதனை ஆய்வகங்களிலிருந்தோ பெறப்பட்டிருக்க வேண்டும். மேற்படி காலகட்டத்தில் 38 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது. 20 வழக்குகள் முடிக்கப்பட்டு, அபராதத் தொகையாக ரூ.1,11,500/- வசூலிக்கப்பட்டது.

vi. குளிர்கால பாதுகாப்பு (வெப்ப ஆடை)

தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குளிர் பாதுகாப்பிற்காக ஆண்டுக்கு ஒருமுறை ஒரு காட்டு கம்பளியும், இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை போர்த்தும் கம்பளியும் நிறுவனத்தால் வழங்கப்பட வேண்டும். மேற்படி காலகட்டத்தில் 8 முரண்பாடுகள் கண்டறியப்பட்டன மற்றும் 6 வழக்குகள் முடிக்கப்பட்டு, அபராதத் தொகையாக ரூ.38,500/- வசூலிக்கப்பட்டது.

❖ **சுகாதார வசதிகள்**

i. மருத்துவ வசதி

தோட்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினரால் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்கப்பட வேண்டும். தோட்ட நிறுவனங்களில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் திறம்பட செயல்படுவதை உறுதிப்படுத்துவது உதவி மருத்துவரின் (தோட்டங்கள்) பணியாகும். தமிழ்நாட்டில் 143 தனி மருந்தகங்கள் மற்றும் தொகுதி மருந்தகங்களும், 31 தோட்ட மருத்துவமனைகள் மற்றும் 4 தொகுதி தோட்ட மருத்துவமனைகளும் உள்ளன.

2023 மார்ச் 29]

அமலாக்கம்

1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலகட்டத்தில், 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் மொத்தம் 2,155 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 122 முரண்பாடுகள் கண்டறிப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு நீதிமன்றங்களில் 74 வழக்குகள் முடிக்கப்பட்டு, முரண்பாடு கண்டறியப்பட்ட தோட்ட நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக ரூ.4,56,500/- அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

1.3.15. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் முறைப்படுத்துதல்

குழந்தைத் தொழிலாளர் என்பது நமது சமூகத்தின் சிக்கலான சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பில் வேர்களைக் கொண்ட ஒரு சமூகத் தீமையாகும். தமிழ்நாடு அரசு, குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல், வளரிளம் பருவ தொழிலாளர்களை அபாயகரமற்ற தொழில்களில் பணி முறைப்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய இலக்காகக் கொண்டு தமிழ்நாடு அரசு இந்த அச்சுறுத்தலை அகற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதலில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

- *1986 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 ஆம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டமாகத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.*

- *14 வயதிற்குட்டபட்ட குழந்தைகளை எந்தவித தொழிலிலும்/செயல் முறையிலும் பணியமர்த்த அனுமதிக்க கூடாது.*

- *வளரிளம் பருவத்தினரை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அபாயகரமானத் தொழில்களில் பணியமர்த்தவோ அல்லது வேலை செய்ய அனுமதிக்கவோ கூடாது.*

- இச்சட்ட விதிகளை மீறுவோருக்கு 6 மாதங்களுக்குக் குறையாமல் மற்றும் இரண்டு ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது ரூ.20,000/- முதல் ரூ.50,000/- வரை அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

- குழந்தைகளைப் பணிக்கு அமர்த்திய குற்றத்திற்காக, குற்றவாளியாகக் கருதப்பட்ட பெற்றோர் / பாதுகாவலர் மீண்டும் அதேகுற்றம் செய்யும் நேர்வில் அவர்களுக்கு ரூ.10,000/- வரை அபராதம் விதிக்கப்படும்.

தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் நிலை

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 4.19 இலட்சமாக இருந்த குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டு 1.51 இலட்சம் ஆகும். தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான சட்ட அமலாக்கம், மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் காரணமாகக் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மேற்படி காலத்தில் கணிசமாகக் குறைந்துள்ளது. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின்மூலம் எடுக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் கட்டாயத்தின் பேரில் வருவாய் ஈட்டுதலுக்குப் பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கை 1,091 மட்டுமே ஆகும். குழந்தைத் தொழிலாளர்களை மீட்பதற்கும் மறுவாழ்வு அளிப்பதற்கும் ஒரு விரிவான மாநில செயல் திட்டத்தை (SAP) உருவாக்கியதில் மாநிலங்களுக்குள் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. இதனைத்தவிர குழந்தைத் தொழிலாளர்களை மீட்பதற்கும், மறுவாழ்வு அளிப்பதற்கும் பல்வேறு துறைகளின் பங்களிப்பு குறித்தும் நிலையான இயக்க நடைமுறைகளும் (SOP) வெளியிடப்பட்டுள்ளது.

சட்ட அமலாக்கம்

- *குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் மற்றும் வளரிளம் பருவ தொழிலாளரை பல்வேறு தொழில்கள் / செயல்களில் பணி முறைப்படுத்துதலில் சட்ட அமலாக்கம் என்பது ஒரு முக்கியமான பங்கு வகுக்கிறது. சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும்பொருட்டு, மாவட்ட அளவிலான தடுப்புக் குழு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி மாவட்டத் தடுப்பு குழுக்கள் அரசாணை (2டி) எண் 2, தொழிலாளர்*

மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 11.1.2021-ன்மூலம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

❖ குழந்தைகளைப் பணியமர்த்துவதைத் தடை செய்திட, 1986 ஆம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டங்கள், மாநில அளவில் தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்கள் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

❖ 1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலத்தில், மாவட்ட அளவிலான தடுப்புப் படையால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பாய்வுகளையும் சேர்த்து 47,200 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 222 முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, 285 குழந்தை/ வளரிளம் பருவத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 83 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 176 வழக்குகளில் (முந்தைய ஆண்டு நிலுவையும் சேர்த்து) தண்டனை வழங்கப்பட்டு, ரூ.42,23,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மறுவாழ்வு

❖ மீட்கப்பட்ட குழந்தைகள், முறையான கல்வியினைப் பெறும்பொருட்டு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தில் இணைக்கப்பட்டு அவர்கள் கல்விபெறும் உரிமையை பெறுகின்றனர்.

❖ 1986 ஆம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் குழந்தைத் தொழிலாளரைப் பணிக்கமர்த்திய உரிமையாளர்களிடமிருந்து ரூ.20,000/- முதல் ரூ.50,000/- வரை அபராதத் தொகை வசூலிக்கப்படுகிறது. அபாயகரமான தொழில்களிலிருந்து மீட்கப்படும் குழந்தை/வளரிளம் பருவ தொழிலாளர் ஆகியோருக்கு ரூ.15,000/- தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக வழங்கப்படுகிறது. அபராதத் தொகையினையும், அரசு பங்குத் தொகையினையும்

[*2023 மார்ச் 29*

சேர்த்து, மீட்கப்பட்ட குழந்தை அல்லது வளரிளம் பருவ தொழிலாளர் பெயரில் வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டு, 18 வயதுக்கு பிறகு இத்தொகை குழந்தை/வளரிளம் பருவத்தினருக்கு அளிக்கப்படுகிறது. 2021-2022 வரையிலான காலத்திற்கு 12 குழந்தைத் தொழிலாளர்களுக்கு ரூ.1.80 இலட்சம் அரசின் பங்குத் தொகையாக 2021-2022 ஆம் ஆண்டில் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

விழிப்புணர்வு உருவாக்குதல்

- *பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 12 ஆம் நாள் "உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்புத் தினம்" ஆக கடைபிடிக்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும்பொருட்டு அரசு அலுவலகங்களில் உறுதிமொழி எடுத்தல், ஊர்வலங்கள், மனிதச்சங்கிலிகள் மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 10.6.2022 அன்று அண்ணா நகர் கோபுர பூங்காவில் மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புத் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி அனுசரிக்கப்பட்டது. அன்றையதினம் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு வாசகங்கள் அடங்கிய பலூன்களைப் பறக்கவிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்புத் தின உறுதிமொழி எடுத்தல், விழிப்புணர்வுப் பேரணி, வீதி நாடகம், குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக கையெழுத்து இயக்கம் ஆகியவை நடத்தப்பட்டன.*

பயிற்சிகள்

- *தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய பிற துறைகளான வருவாய்த் துறை, சமூக பாதுகாப்புத் துறை, பள்ளிக் கல்வித் துறை, காவல் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், வேலைவாய்ப்பு மற்றும்*

2023 மார்ச் 29]

பயிற்சித் துறையைச் சேர்ந்த அமலாக்க அதிகாரிகளுக்கு 1986 ஆம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், தொடர்பான மண்டல அளவிலான பயிலரங்கம் 24.1.2023, 2.2.2023, 7.2.2023 மற்றும் 14.2.2023 ஆகிய தினங்களில் சென்னை, அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியால் நடத்தப்பட்டது.

அரசின் முக்கியக் குறிக்கோள்

- ❖ *குழந்தைத் தொழிலாளர் அதிகம் காணப்படும் மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிய கணக்கெடுப்பு நடத்த செயல் திட்டம் உருவாக்குதல்.*
- ❖ *2025 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை ''குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலம்'' ஆக அறிவித்தல்.*

1.3.16. கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல்

மாநில அரசினால் கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவித்தல், மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் தொடர்பாக மாநில செயல்திட்டம் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள் பல்வேறு துறைகளின் பங்குதாரர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கி, 1976 ஆம் ஆண்டு கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டத்தினை சீரிய முறையில் அமல்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

மீட்பு மற்றும் விடுவித்தல்

வருவாய் கோட்டாட்சியர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், காவல் துறை, சுகாதாரத் துறை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் இணைந்து கொத்தடிமைத் தொழிலாளர் முறை தொடர்பான புகார்களைப் பெற்ற 24 மணி நேரத்திற்குள் புகார் குறித்து முதற்கட்ட விசாரணை நடத்தி, புகாரின் உண்மைத் தன்மையைக் கண்டறிய வேண்டும். மீட்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் மீட்கப்பட்ட ஒவ்வொரு கொத்தடிமைத் தொழிலாளருக்கும் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் எனக்

கண்டறியப்பட்ட குழந்தை குடும்பத்துடன் இருந்தாலும் ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட உரிய படிவத்தில் விடுதலை சான்றிதழை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் வழங்க வேண்டும்.

மறுவாழ்வு அளித்தல்

- ❖ கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காகத் தேவைக்கேற்ப மாவட்டந்தோறும் நிரந்தர நிதி மூலதனம் ஏற்படுத்த அரசானது ரூ.121 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.
- ❖ கொத்தடிமைத் தொழிலாளர் முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும்பொருட்டு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.30,000/- வழங்கப்பட்டு வருவதோடு, குடும்ப அட்டை, சாதிச் சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி, தொழிற்திறன் பயிற்சி, சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராகச் சேர்த்தல் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அவர்கள் பணிபுரியும் தொழில்களுக்கு ஏற்ப, உரிய அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டு உரிய திட்டங்களின்கீழ் தகுதியான திட்டப் பயன்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.
- ❖ 2021 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தின்படி ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.1.00 இலட்சம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.2.00 இலட்சம் மற்றும் இதர ஒதுக்கப்பட்ட சிறப்பு பிரிவு தொழிலாளர்களுக்கு ரூ.3.00 இலட்சம் தொகையும் நீதிமன்ற முடிவிற்குப் பின் இறுதி நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.
- ❖ 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலகட்டத்தில் 132 மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.41,40,000/- வழங்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29]

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

- ❖ *அனைத்து மாவட்டங்களிலும் கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக மாநில அரசு ரூ.3.80 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.*
- ❖ *2023, பிப்ரவரி 9 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தின்போது, துண்டு பிரசுரங்கள் விநியோகம், பொது இடங்களில் பதாகைகளைக் காட்சிப்படுத்துதல், கையெழுத்து இயக்கம், வீதி நாடகம், பொது இடங்கள், பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களை ஒட்டுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*
- ❖ *மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தின நிகழ்ச்சி பிப்ரவரி 9, 2023 அன்று சென்னை, ஓட்டல் பாம்குரோவில் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக, சென்னை அமெரிக்க தூதரகத்தின் அரசியல்/பொருளாதாரத் தலைவர் திருமதி விர்சா பெர்கின்ஸ் பங்கேற்றார். பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்களும் பங்கேற்றனர்.*
- ❖ *கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பில் சிறப்பாகப் பணியாற்றிய அமலாக்க அதிகாரிகளுக்கான விருதுகள், காவல் துறை, வருவாய்த் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் மற்றும் தொழிலாளர் துறைக்கு வழங்கப்பட்டன.*

தமிழ்நாடு அரசின் முயற்சிகள்

கணக்கெடுப்பு

கொத்தடிமைத் தொழிலாளர் அதிகம் காணப்படும் 11 மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், நாமக்கல், ஈரோடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் கணக்கெடுப்புப் பணி நடத்தப்பட்டது.

[2023 மார்ச் 29

அரசாணை (டி) எண் 130, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.17.2.2023 வாயிலாக 27 மாவட்டங்களில் கணக்கெடுப்புப் பணி நடத்த ரூ.1,21,50,000/-ஐ அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது

கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் மாவட்ட நிர்வாகத்தை முழுமையாக ஈடுபடுத்தும்பொருட்டு, மாவட்ட ஆட்சியர்களை ஊக்கப்படுத்தும் வகையில், சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட ஆட்சியருக்குச் சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருது வழங்க அரசாணை (நிலை) எண் 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 15.11.2022-ல் ஆணையிட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் தினம்

கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை அகற்றிடவும் மற்றும் தமிழ்நாட்டை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும், ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 9 ஆம் நாள் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் தினமாக அனுசரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

கட்டணமில்லாத் தொலைபேசி எண்

கொத்தடிமைத் தொழிலாளர் குறித்த புகார்களைத் தெரிவிக்க கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1800 4252 650 (Toll Free Helpline) உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் எளிதாக நினைவில் வைத்துக்கொள்ளும்பொருட்டு, சுருக்க எண் 155214 வழங்கப்பட்டுள்ளது.

அரசின் குறிக்கோள்

2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

2023 மார்ச் 29]

தமிழ்நாடு அரசின் சிறப்பு முயற்சி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புத்தகங்கள் வெளியீடு

அனைத்து பங்குதாரர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கொத்தடிமை எனும் தீமைக்கெதிராக உணர்வூட்டவும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சமீபத்தில் பின்வரும் இரண்டு புத்தகங்களைத் தயாரித்துள்ளது:

i. *"குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் - தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்"*

ii. *"கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் - தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்"*

இப்புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.2.2023 அன்று வெளியிடப்பட்டன.

1.3.17. தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பை வழங்கும் நீதிமுறைச் சார்புடைய நடைமுறைகள்

❖ *1923 ஆம் வருட பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழான ஆணையர்கள்/மண்டல இணை ஆணையர்கள் பணியின்போது அல்லது பணி செய்யும்போது ஏற்படும் விபத்தினால் நிகழும் வழக்குகளை விசாரித்து, விபத்து தொடர்பான வழக்குகளுக்கு மரணமடைந்த பணியாளர்களைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் விபத்து ஊனம் தொடர்பான வழக்குகளுக்கு ஊனமடைந்த பணியாளர்களுக்கும் இழப்பீட்டு உத்தரவு பிறப்பிக்கின்றனர். 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 2,371 வழக்குகள் 10 மண்டல தொழிலாளர் இணை ஆணையர்களால் முடிக்கப்பட்டு, மொத்தம் ரூ.69,90,57,857/- இழப்பீட்டுத் தொகையாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.*

❖ *1972 ஆம் வருட பணிக்கொடை பட்டுவாடா சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டு அலுவலர்களாக உள்ள மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத் தொழிலாளர் துணை ஆணையர்களால் தொழிலாளர்களின் பணிக்கொடை கேட்பு*

[2023 மார்ச் 29

மனுக்கள்மீது விசாரணை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் 1,563 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு பணிக்கொடைத் தொகையாக ரூ.10,76,65,863/- கேட்பு மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் / மேல் முறையீட்டு அலுவலர்கள் பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972-ன்கீழ் 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில் தங்கள் முன்பு தாக்கல் செய்யப்பட்ட 210 மேல்முறையீட்டு மனுக்களைத் தீர்வு செய்துள்ளனர்.

❖ 1981 ஆம் வருட பிழைப்பூதிய வழங்கல் சட்டத்தின் கீழான அதிகாரிகளால் 1.4.2022 முதல் 31.12.2022 வரையிலான காலத்தில், 66 கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.60,64,449/- பிழைப்பூதியமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், மேல்முறையீட்டு அதிகாரிகளால் 10 மேல்முறையீட்டு மனுக்கள் தீர்வு காணப்பட்டுள்ளன.

1.4. சட்டபூர்வமான / சட்டபூர்வமற்ற வாரியங்களும், குழுக்களும்

❖ மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் தலைமையில் மறு சீரமைக்கப்பட்ட மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் 27.10.2022 அன்று அதன் 69-வது மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டத்தை நடத்தியது.

❖ தொழிலாளர் ஆணையர் தலைமையில் குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியக் குழுவின் 80-வது கூட்டம் 18.8.2022 அன்று சென்னையில் நடைபெற்றது.

❖ 25.7.2022 அன்று அரசு தலைமைச் செயலாளர் முன்னிலையில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த மாநில பொறுப்பாண்மைக் குழுக் கூட்டம் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்திற்கான மாநில அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஆகியவை நடைபெற்றன.

2023 மார்ச் 29]

- *1976 ஆம் வருட கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டத்தினை சீரிய முறையில் அமல்படுத்தும் நோக்கில், 25.7.2022 அன்று அரசு தலைமைச் செயலாளர் முன்னிலையில் மாநில அளவிலான உயர்மட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.*

- *அரசாணை (டி) எண் 574, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள் 28.11.2022 மூலம் மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.*

- *அரசாணை (டி) எண் 555, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள்.14.11.2022 மூலம் சம ஊதியச் சட்ட ஆலோசனைக் குழு மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.*

1.5. தொழில் நடத்துவதில் எளிய முறை

"தொழில் நடத்துவதில் எளிய நடைமுறைகள்" செயல்படுத்திட பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் சட்டமுறை எடையளவு சட்டத்தின்கீழ் பதிவு, உரிமம், புதுப்பித்தல், திருத்தம், மாற்றம் மற்றும் மூடுதல் முதலிய சேவைகளும், ஆய்வு, ஒதுக்கீடு செய்யும் பணியும் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு தொழிலாளர் துறையின் வலைதளத்தில் https://labour.tn.gov.in/ *இத்துறை வழங்குகிறது. மேலும், கட்டணம் செலுத்தும் வசதி, சான்றிதழ் மற்றும் உரிமங்கள் பதிவிறக்கம் செய்தல் ஆகிய சேவைகள் மின்னணு முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

தொழிலாளர் துறைக்கான 41 மின்னணு சேவைகளில், 37 சேவைகள் இணைய வழி செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 4 சேவைகள் விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளன.

இணையவழி வாயிலாக ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்தல்

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் பல ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்வதைத் தவிர்த்திடவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் காகிதமில்லா இணையதள செயல்முறையின்மூலம் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை தாக்கல் செய்யும் முறை பின்வரும் சட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

[2023 மார்ச் 29

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959.
- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், 1955.
- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் விதிகள், 1965.
- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், 1968.

எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த பதிவேடுகள்

பல்வேறு பதிவேடுகள் மற்றும் படிவங்களைப் பராமரிக்கும் சுமையினைக் குறைத்திடும் வகையில் ஒருங்கிணைந்த எளிமைப்படுத்தப்பட்ட பதிவேடு முறை பின்வரும் விதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959.
- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் விதிகள், 1965.
- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், 1968.
- தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள், 1948.
- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், 1955.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களில் நீதிமன்றத் தண்டணைக்குரிய குற்றங்களை இசைவுத் தீர்வு குற்றமாகக் குறைக்க முயற்சிகள்

பின்வரும் நீதிமன்றத் தண்டணைக்குரிய குற்றங்களை இசைவுத் தீர்வு குற்றமாகக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958.
- தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981.
- தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981.

2023 மார்ச் 29]

- ➢ *தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982.*

1.6. தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அறிமுகம்

தற்போது நடைமுறையிலுள்ள 29 தொழிலாளர் நலச் சட்டங்களை உள்வாங்கி பின்வரும் நான்கு சட்டத் தொகுப்புகளாக உருவாக்க ஒன்றிய அரசால் திட்டமிடப்பட்டு, அந்நான்கு சட்டத் தொகுப்புகளும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு அதன்பின் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது:

i. *ஊதியங்கள் சட்டத் தொகுப்பு, 2019*

ii. *தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு, 2020*

iii. *சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பு, 2020*

iv. *தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பு, 2020*

அதேவேளையில், ஒன்றிய அரசு இந்நான்கு சட்டத் தொகுப்புகளுக்கும் ஒன்றிய விதிகளை இயற்றி அவற்றை அரசிதழிலும் வெளியிட்டுள்ளது.

இந்நான்கு சட்டத் தொகுப்புகளையும் மாநிலங்களில் அமல்படுத்த ஒவ்வொரு மாநிலமும் அதற்கான மாநில சட்டவிதிகளை இயற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசால், ஊதியங்கள் சட்டத் தொகுப்பு, தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு மற்றும் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிபந்தனைகள் சட்டத் தொகுப்பு ஆகிய சட்டத் தொகுப்புகளுக்கு வரைவு விதிகள் தயாரிக்கப்பட்டு, 11.4.2022 அன்று வெளியிடப்பட்டது. தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து இவ்வரைவு விதிகளின்மீது ஆட்சேபணைகளும் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன. மேற்படி மூன்று சட்டத் தொகுப்புகளும் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பிற்கான மாநில சட்ட வரைவு விதிகள் தற்போது தயாரிக்கப்பட்டு, விரைவில் வெளியிடப்படவுள்ளது. மேற்படி வரைவு விதிகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அனைத்துத்

தரப்பினர்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டு அதன் பின்னரே முடிவு செய்யப்படும்.

1.7. நல வாரியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

1.7.1. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

❖ தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972 அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதற்காக இயற்றப்பட்டது. இந்நோக்கத்துடன் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களிடமிருந்தும், வேலையளிப்பவரிடமிருந்தும் பெறப்படும் தொழிலாளர் நல நிதி பங்குத் தொகையின்மூலம் பல்வேறு நலத் திட்ட பயன்கள் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

❖ ஒவ்வொரு தொழிலாளியும் ஆண்டொன்றுக்கு ரூ.20/-ம், வேலையளிப்பவர் ஒரு தொழிலாளிக்கு ரூ.40/-ம், அரசு ஒரு தொழிலாளிக்கு ரூ.20/- என்ற வீதத்திலும் தொழிலாளர் நல நிதி செலுத்தி வருகின்றனர். தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் நிறுவனங்களிடம் உள்ள கொடுபடாத்தொகை, தொழிலாளர் நலச் சட்டம் மற்றும் விதிகளை மீறியமைக்காக வேலையளிப்பவர்மீது நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் அபராதம் மற்றும் அமலாக்க அலுவலர்களால் விதிக்கப்படும் இணக்கக் கட்டணம் ஆகியவை தொழிலாளர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது.

❖ பின்வரும் நலத் திட்டங்களுக்காக தொழிலாளர் நல நிதி செலவிடப்படுகிறது:

- ➢ திருமண உதவித் தொகை
- ➢ கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி ஊக்கத் தொகை
- ➢ பாடநூல் உதவித் தொகை

2023 மார்ச் 29]

- ➢ அடிப்படை கணினிப் பயிற்சி உதவித் தொகை
- ➢ தையல் இயந்திரம் வாங்க உதவித் தொகை
- ➢ மூக்குக் கண்ணாடி உதவித் தொகை
- ➢ 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு விலையில்லா மாதிரி வினாத்தாள் கையேடு
- ➢ நுழைவுத் தேர்வு பயிற்சி வகுப்பு உதவித் தொகை
- ➢ விளையாட்டுப் போட்டிகளுக்கான நிதியுதவி
- ➢ இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை
- ➢ விபத்து மரணம் மற்றும் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை

❖ தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் குறைந்த வாடகையில் விடுமுறையை மகிழ்ச்சியுடன் கழித்திட, மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

❖ தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாக "ஜீவா இல்லம்" சென்னையில் கட்டப்பட்டுள்ளது.

❖ தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் பயன்பெறும் வகையில் முக்கிய நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் தொழிலாளர் நலன் சம்பந்தமான கட்டுரைகள் அடங்கிய "உழைப்பவர் உலகம்" எனும் தமிழ் மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

1.4.2022 முதல் 31.12.2022 வரையான காலத்தில் பல்வேறு நலத் திட்டங்கள்மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் உதவித் தொகை விவரம்

வ. எண்	திட்டங்கள்	பயனாளிகள்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1.	கல்வி உதவித் தொகை	325	9.63
2.	பாடநூல் உதவித் தொகை	4	0.08

[2023 மார்ச் 29

வ. எண்	திட்டங்கள்	பயனாளிகள்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
3.	திருமண உதவித் தொகை	567	56.70
4.	மூக்குக் கண்ணாடி உதவித் தொகை	180	1.67
5.	இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை	185	55.50
6.	விபத்து மரண உதவித் தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை	48	50.40
7.	உழைப்பவர் உலகம் மாத இதழ்	4,195 (மாதந்தோறும்)	4.76
8.	ஓய்வில்லம், விடுமுறை இல்லங்களின் பராமரிப்பு மற்றும் நிர்வாக செலவினம்	5454	44.98
	மொத்தம்	**10,958**	**223.72**

1.7.2. 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம், மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகிய சமூகப் பாதுகாப்பு நல உதவிகள் வழங்குவதற்கான சட்டத்தை இயற்றியதன்மூலம் தமிழ்நாடு ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982 மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட திட்டங்கள், சட்டத்தின் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 70 தொழில்களில் மற்றும் 54 கட்டுமானத் தொழில்களில் ஈடுபடும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு, சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவிகளை வழங்குகிறது.

2023 மார்ச் 29]

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின்கீழ் பின்வரும் 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களை அரசு அமைத்துள்ளது

வ. எண்	வாரியங்களின் பெயர்
1.	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்
2.	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
3.	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்
4.	தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்
5.	தமிழ்நாடு முடித்திருத்துவோர் நல வாரியம்
6.	தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்
7.	தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்
8.	தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்
9.	தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம்
10.	தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம்
11.	தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்
12.	தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம்
13.	தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம்
14.	தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம்
15.	தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம்.
16.	தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம்.

[2023 மார்ச் 29

வ. எண்	வாரியங்களின் பெயர்
17.	தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம்
18.	தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியம்.

அமைப்புசாரா நல வாரியங்களின் செயல்பாடுகள்

பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் பலன்கள் தகுதியான பயனாளிகளுக்குச் சென்றடைவதை உறுதிசெய்யும் வகையில் வாரியங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. சிக்கல் ஏதுமற்ற இவ்வேற்பாட்டின் காரணமாக அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு, புதுப்பித்தல் மற்றும் திட்டங்களின் பலன்களுக்கு இணையத்தின் வாயிலாக விண்ணப்பிக்க இயலும். தொழிலாளர்கள் அவர்களது வீடுகள் அல்லது அருகாமையில் உள்ள சேவை மையங்களிலிருந்து விண்ணப்பிக்க இயலும் என்பது அவர்களது வாழ்க்கையை எளிதாக்கியுள்ளது.

பதிவு பெற்ற உறுப்பினர்களுக்குப் பலன்கள் உரிய காலத்தில் வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட கண்காணிப்புக் குழு கண்காணிக்கிறது. நலத் திட்ட உதவிகள் பயனாளிகள்/பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களின் வங்கிக் கணக்கிற்கு மின்னணு பரிமாற்றத்தின்மூலம் நேரடியாக வழங்கப்படுவதினால், நல உதவிகள் உரிய பயனாளிகளுக்கு விரைவாக சென்றடைகின்றன.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் பதிவு முன்னேற்றம்

7.5.2021 முதல் 31.1.2023 வரையிலான காலத்தில் 8,40,951 கட்டுமானத் தொழிலாளர்களும், 3,16,234 அமைப்புசாரா தொழிலாளர்களும் பல்வேறு நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், 61,626 அமைப்புசாரா தொழிலாளர்கள், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2023 மார்ச் 29]

நலத் திட்ட உதவிகள்

கூரிய கண்காணிப்பின் காரணமாக 7.5.2021 முதல் 31.1.2023 வரையிலான காலத்தில் 8,97,668 பயனாளிகளுக்கு ரூ.679,64,47,600/- மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் ரூ.476,81,42,801/- ஓய்வூதியத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

தரவுகள் தூய்மை நடவடிக்கை

நலத் திட்ட உதவிகள் தகுதியான பயனாளிகளுக்கு மட்டுமே சென்றடைய வேண்டும் என்பதை உறுதிசெய்யும் நோக்குடன், தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் (TNeGA) உதவியோடு தரவுகள் தூய்மை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எந்தவொரு தகுதியற்ற பயனாளியை நீக்குவதற்கு முன்பாக அனைத்து கள அளவிலான சரிபார்ப்புகளும் கவனமுடன் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கான நிரந்தர நிதியம் (Corpus Fund)

பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தி தொழிலில் ஈடுபடும் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கும் பொருட்டு 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வரசின் சீரிய முயற்சியின் பலனாக விருதுநகர் மாவட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கங்கள், இவ்வாரியத்தின் நிரந்தர ஆதார நிதிக்கு தங்களின் பங்களிப்புத் தொகையாக ரூ.5.02 கோடிக்கான காசோலையினை 4.2.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கின.

சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் உருவாக்கம் மற்றும் மேம்பாடு

அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாக வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவ்வகையில், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 85,000 தொழிலாளர்களுக்கு ரூ.12.75 கோடி மதிப்பில் பாதுகாப்புப் பெட்டகங்கள் வழங்கப்பட்டன. மேலும், தமிழ்நாடு

உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் இதர 17 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள் 6-ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயில்வதற்கான கல்வி உதவித் தொகை வழங்கும் புதிய நலத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடையும் நேர்வில் அன்னாரது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நல உதவி ரூ.20,000/-லிருந்து ரூ.50,000/- ஆகவும், விபத்து மரணம் அடையும் நேர்வில் வழங்கப்பட்டு வந்த நல உதவி ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.2.00 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

அதேபோன்று, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடையும் நேர்வில் அன்னாரது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நல உதவி ரூ.20,000/-லிருந்து ரூ.30,000/- ஆகவும், விபத்து மரணம் அடையும் நேர்வில் வழங்கப்பட்டு வந்த நல உதவி ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.1.25 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

2021-2022 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார். தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் வீடு கட்டுவதற்கு / தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளை வாங்குவதற்கு நிதியுதவியாக ரூ.4.00 இலட்சம் வரை வழங்கிடும் வீட்டு வசதித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அரசாணை (நிலை) எண் 7, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.10.1.2022-ன் வாயிலாக அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் 15.11.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. 31.1.2023 அன்றுள்ளவாறு, இத்திட்டத்தின்கீழ் 120 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

2023 மார்ச் 29]

வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள்

பின்வரும் நலத் திட்ட உதவிகள் 18 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களால் வழங்கப்படுகின்றன:

வ. எண்	நலத் திட்டங்கள்	வழங்கப்படும் நலத் திட்ட உதவித் தொகை (ரூ.)		
		தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்
1.	விபத்து நிவாரணத் திட்டம்			
	அ. விபத்து மரணம்	2,00,000	1,25,000	2,00,000
	ஆ விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப)	1,00,000 வரை	1,00,000 வரை	1,00,000 வரை
	இ. செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி	மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் நெறிமுறை மற்றும் நிர்ணய விகிதத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.		
	ஈ. பணிபுரியும் இடத்தில் விபத்து மரணம் மற்றும் மருத்துவ மனையில்	5,00,000	----	----

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வ. எண்	நலத் திட்டங்கள்	வழங்கப்படும் நலத் திட்ட உதவித் தொகை (ரூ.)		
		தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்
	அனுமதிக்கப் பட்ட பின் மரணம் (பணியின்போது/ பதிவு பெறாத தொழிலாளர் களுக்கும்)			
2.	இயற்கை மரண உதவித் தொகை	50,000	30,000	50,000
3.	ஈமச்சடங்கு உதவித் தொகை	5,000	5,000	5,000
4.	திருமண உதவித் தொகை	20,000	5,000 (பெண்)	5,000 (பெண்)
			3,000 (ஆண்)	3,000 (ஆண்)
5.	மகப்பேறு உதவித் தொகை	18,000	6,000	6,000
	மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு / கருச்சிதைவு	3,000	3,000	3,000
6.	கல்வி உதவித் தொகை			

2023 மார்ச் 29]

வ. எண்	நலத் திட்டங்கள்	வழங்கப்படும் நலத் திட்ட உதவித் தொகை (ரூ.)		
		தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்
	அ. 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு	1,000	1,000	1,000
	ஆ 10 ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு	2,400	1,000	1,000
	இ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி	2,400	1,000	1,000
	ஈ 11 ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு	3,000	1000	1000
	உ. 12 ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு	3,000	1,500	1,500
	ஊ 12 ஆம் வகுப்பு தேர்ச்சி	3,000	1,500	1,500
	எ. முறையான பட்டப்படிப்பு	4,000	1,500	4,000
	விடுதியில் தங்கி படிப்பவர்		1,750	

[2023 மார்ச் 29

வ. எண்	நலத் திட்டங்கள்	வழங்கப்படும் நலத் திட்ட உதவித் தொகை (ரூ.)		
		தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்
	ஏ. முறையான பட்ட மேற்படிப்பு	4,000	4,000	4,000
	விடுதியில் தங்கி படிப்பவர்	5,000	5,000	5,000
	ஐ. தொழில்நுட்பப் பட்டப்படிப்பு	4,000	4,000	4,000
	விடுதியில் தங்கி படிப்பவர்	6,000	6,000	6,000
	ஒ. தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு	6,000	6,000	6,000
	விடுதியில் தங்கி படிப்பவர்	8,000	8,000	8,000
	ஓ. ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு	3,000	1,000	1,000
	விடுதியில் தங்கி படிப்பவர்		1,200	1,200
7.	கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை	500 வரை	500 வரை	500 வரை

2023 மார்ச் 29]

வ. எண்	நலத் திட்டங்கள்	வழங்கப்படும் நலத் திட்ட உதவித் தொகை (ரூ.)		
		தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்
8.	*அ. ஓய்வூதியம் (ஒவ்வொரு மாதமும்)*	*1,000*	*1000*	*1000*
	ஆ குடும்ப ஓய்வூதியம் (ஒவ்வொரு மாதமும்)	*500 (மாதந்தோறும்)*	-	-
9.	*வீட்டு வசதி திட்டம்*	*4,00,000 வரை*	-	-

நிதி ஆதாரங்கள்

கட்டுமானம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட கட்டடம் அல்லது கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் ஒரு சதவிகிதத்தை பங்களிப்பாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் பெறுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் (1.4.2022 முதல் 31.1.2023 வரை) ரூ.652.39 கோடி பங்களிப்புத் தொகையாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம், 1974-ன்கீழ் பயணிகள் அல்லது சரக்குகள் ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு வர்த்தக மோட்டார் வாகனங்களுக்காக வசூலிக்கப்படும் 1 சதவிகிதம் கூடுதல் வரியைத் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் பெறுகிறது. 1.4.2022 முதல் 31.1.2023 வரை ரூ.18.67 கோடி கூடுதல் வரியாகப் பெறப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 29

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள்சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள், நலத் திட்ட உதவிகளைச் செயல்படுத்துவதற்கு அரசு மானியங்களை பெறுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டிற்கு அரசால் ரூ.166.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கு ரூ.125.00 கோடி நிதி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. (1.4.2022 முதல் 31.1.2023)

18 அமைப்புசாரா நல வாரியங்களின் சாதனைகள்

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் துவங்கப்பட்ட நாள் முதல் 31.1.2023 வரை பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத் திட்ட உதவித் தொகை விவரங்கள்

வ. எண்	நல வாரியம்	பதிவு (இலட்சத்தில்)	பயனாளிகள் (இலட்சத்தில்)	தொகை (ரூபாய் கோடியில்)
1.	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	21.55	24.19	1259.37
2.	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	17.48	36.71	1343.96
3.	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்	1.66	1.71	70.75
மொத்தம்		**40.69**	**62.61**	**2674.08**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

1.4.2022 முதல் 31.1.2023 வரை பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத் திட்ட உதவித் தொகை விவரங்கள்

வ. எண்	நல வாரியம்	பதிவு	பயனாளிகள்	தொகை (ரூபாய் கோடியில்)
1.	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	2,65,840	3,85,131	242.27
2.	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்	1,02,199	1,84,543	122.62
3.	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்	24,047	23,184	12.94
	மொத்தம்	**3,92,086**	**5,92,858**	**377.83**

1.7.3. தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

- ❖ கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும்பொருட்டு "தமிழ்நாடு கட்டுமானக் கழகம்" அமைக்கப்பட்டுள்ளது.

- ❖ தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின்மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநகரத்தால் (DET) அனுமதிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்நுட்பப் பயிற்சி மையங்களின் வாயிலாகக் கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

[2023 மார்ச் 29

❖ இப்பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் பயிற்சி பெற்றவர்களுக்குத் தேசிய தொழில் நெறிக் கல்விப் பயிற்சி (National Council of Vocational Training) சான்றிதழ் வழங்கப்படுகிறது.

❖ தமிழ்நாடு கட்டுமானக் கழகம் (TAC), தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மற்றும் கட்டுமானத் தொழில் வளர்ச்சிக் குழுமத்துடன் (CIDC) இணைந்து 08.11.2019 முதல் 31.12.2022 முடிய 3,099 தொழிலாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

1.7.4. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

❖ தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, 1988-லிருந்து சங்கமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலையம் தற்போது சென்னையில், அம்பத்தூர், தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் நிர்வாக அலுவலகம் மற்றும் தங்கும் விடுதியுடன் செயல்பட்டு வருகிறது.

❖ இக்கல்வி நிலையம், தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமாகும்.

❖ இக்கல்வி நிலையத்திற்கு 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான மானியமாக ரூ.3,33,18,000/- தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

❖ இக்கல்வி நிலையம், கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் போன்றவற்றைத் தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்கத்தினர், தொழிலாளர் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரக அலுவலர்கள் ஆகியோர்களின் தேவை கருதி, காலமுறையில் நடத்தி வருகிறது.

2023 மார்ச் 29]

- ❖ மேலும், இக்கல்வி நிலையம், புது டெல்லி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் நொய்டாவிலுள்ள வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்துடன் இணைந்து கருத்தரங்குகள்/பயிற்சிகளை நடத்தி வருகிறது.

கருத்தரங்குகள்

கருத்தரங்குகளின் விவரம்	நடைபெற்ற கருத்தரங்குகளின் எண்ணிக்கை	பயனடைந்தோர் எண்ணிக்கை
''தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்கள்'' என்னும் இரண்டு நாள் கருத்தரங்கு	*6*	*1,000*
"கடைகள், வர்த்தக, உணவு மற்றும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களும் தொழிலாளர் நலச் சட்டங்களும்" எனும் ஒரு நாள் கருத்தரங்கு	*2*	*239*
தோட்ட நிறுவனங்களுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்கள்	*2*	*165*

கல்விப் பணிகள்

இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையியலில் இளங்கலை பட்டப் படிப்பு பி.ஏ.- (தொழிலாளர் மேலாண்மை), முதுகலை பட்டப் படிப்பு எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) ஆகியவற்றை சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையில் முழு நேர மற்றும் பகுதி நேர ஆராய்ச்சி (பிஎச்.டி.) படிப்பு நடத்துவதற்கு சென்னை பல்கலைக்கழகத்தால் ஓர் ஆராய்ச்சி

[2023 மார்ச் 29

நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதி நேர (மாலை) "தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயப் படிப்பு" (பி.ஜி.டி.எல்.ஏ) மற்றும் "தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்" என்ற ஓராண்டு (பகுதி நேர-வார இறுதி நாட்கள் - சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) பட்டயப் படிப்பு பணி புரிவோருக்காக நடத்தி வருகிறது.

2022-2023 ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கை விவரம்

வ. எண்	படிப்பு விவரம்	1 ஆம் ஆண்டு	2 ஆம் ஆண்டு	3 ஆம் ஆண்டு	மொத்தம்
1.	பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை)	59	58	59	176
2.	எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை)	44	49	0	93
3.	பி.ஜி.டி.எல்.ஏ.	85	0	0	85
4.	டி. எல்.எல். ஏ. எல்.,	85	0	0	85
5.	பிஎச்.டி	0	0	0	3
	மொத்தம்				**442**

வேலைவாய்ப்பு

இக்கல்வி நிலையத்தின்மூலம் போதிய வேலைவாய்ப்புகளை தேடித் தரும் பொருட்டு "நியோ மானேஜர்ஸ் கைடன்ஸ் பீரோ" என்ற பணியமர்வு வழிகாட்டுக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் மேலாண்மையில் பி.ஏ. மற்றும் எம்.ஏ. படிக்கும் மாணவர்களுக்கான வளாகத் தேர்வு மற்றும் பணியமர்த்தல் ஆகியவற்றுக்கு இக்குழு ஏற்பாடு செய்கிறது.

2023 மார்ச் 29]

இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் அரசு/பொதுத் துறை நிறுவனங்கள்/தனியார் நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் தொழிலாளர் துறை மற்றும் பின்வரும் பொதுத் துறை நிறுவனங்களில் உயர் அலுவலர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். ஓ.என்.ஜி.சி, ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் ட்டி.சி.எஸ்., எச்.சி.எல்., காக்னிசன்ட், ஜி.இ. பைனான்ஸ், அப்பல்லோ மருத்துவமனை, ஹுண்டாய், ஜி.ஆர்.ட்டி கிராண்ட் டேஸ், யூனியன் பாங்க் ஆப் இந்தியா, டாஃபே (TAFE) மற்றும் பல. மேலும், 2022-2023 ஆம் கல்வியாண்டில் 50 மாணவர்கள் பயனடைந்தனர்.

1.7.5. இ-ஷ்ரம்

மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தின் 29 ஜுன் 2020 தேதியிட்ட தன்னார்வ நீதிப் பேராணை மனு எண் 06/2020-ல் வழங்கிய கட்டளைகளின்படி ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், அமைப்புசாரா தொழிலாளர்கள்/ புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பதிவுக்காக இ-ஷ்ரம் (e-SHRAM) வலைப்பக்கத்தை (http://eshram.gov.in) உருவாக்கி, 26 ஆகஸ்ட் 2021 அன்று துவக்கியது.

தமிழ்நாட்டில் 28 பிப்ரவரி 2023 நிலவரப்படி, 83,82,699 அமைப்புசாரா தொழிலாளர்கள் இ-ஷ்ரம் வலைப்பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.


2. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

இந்நாட்டின் தொழில் துறையின் ஆற்றல் மையமாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் இரண்டாவது மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது. இங்கு நிலவும் சுமூகமான சூழல், சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திறமை வாய்ந்த, அறிவுத்திறன் மற்றும் அர்பணிப்புடன் பணிபுரியும் தொழிலாளர்கள் அமையப் பெற்றதன் காரணமாக பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி அலகுகளை நிறுவிட முன்னுரிமை அளிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. சுலபமாகத் தொழில் துவங்க அரசால் மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினாலும், தொழில் முதலீடுகளை ஈர்க்க பின்பற்றப்படும் எளிதாக்கப்பட்ட வெளிப்படைத் தன்மையுடனான நடைமுறைகளினாலும் அந்நிய

முதலீடுகள் அதிகளவில் ஈர்க்கப்பட்டு, தமிழ்நாட்டில் நிலையான மற்றும் தொடர்ச்சியான தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் நிலவும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் தொழில் அமைதியின் காரணமாக திறன்மிகு தொழிலாளர்கள் அதிகளவில் அமையப் பெற்றுள்ள மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதால் இங்கு பெருமளவில் தொழில் முதலீடுகள் ஈர்க்கப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே பெரும்பான்மையான மாவட்டங்களில் தொழிற்பூங்காக்கள் அமையப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் வாகனம் மற்றும் வாகனம் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பொறியியல் தொழிற்சாலைகள், மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள், ஆயத்த ஆடைகள், நூற்பாலைகள், தோல் மற்றும் தோல் பொருட்கள், இரசாயனம், சிமெண்ட், பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தயாரிக்கும் தொழிற்சாலைகள் என பல தரப்பட்ட உற்பத்தி முறைகளை மேற்கொள்ளும் தொழிற்சாலைகள் அமையப் பெற்றுள்ளன. இந்தியாவிலேயே பல தரப்பட்ட உற்பத்தி முறைகளைக் கொண்ட மாநிலங்களில் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மேலும், தொழிற்சாலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

தமிழ்நாட்டில், தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை



வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]


தொழிலாளர்களின் பணியிடப் பாதுகாப்பே தொழிற்சாலை வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்ற காரணத்தினால், நிர்வாகத்தினர் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைபிடிப்பதையும், தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடைமுறைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதையும் அரசு கட்டாயமாக்கியுள்ளது.

சுலபமாகத் தொழில் தொடங்கும் நடைமுறையை மேம்படுத்துவதன்மூலம் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதை ஈர்க்க, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் வழங்கப்படும் சேவைகளுக்கான கால வரம்பினை நிர்ணயித்தல், அச்சேவைகளை இவ்வியக்கக வலைதளத்தின் வாயிலாக வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டபூர்வமான பதிவேடுகள் பராமரித்தலை எளிமையாக்கும்பொருட்டு பல்வேறு சட்டங்களின்கீழ் தனித்தனியே பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகளை ஒருங்கிணைத்து எளிதாக்கி, பல பதிவேடுகள் குறைக்கப்பட்டுள்ளன. பதிவேடுகள் மின்னணு படிவத்திலும் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய சீர்திருத்தங்களால் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளது.

கட்டுமானத் துறையானது வேலைவாய்ப்பினை அதிகமாக உருவாக்குவதன்மூலம், மாநிலத்தின் ஒட்டுமொத்தத் தொழிலாளர் நலச் சட்டங்களைக் கட்டுமானப் பணியிடங்களில் அமலாக்கம் செய்வதோடு, கட்டுமானத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் உடல் நலனைப் பாதுகாக்க இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதிகரித்து வரும் உள்கட்டமைப்பு வளர்ச்சி காரணமாக கட்டுமானத் துறை அதிவேக முன்னேற்றம் கண்டுள்ளதால், ஆண்டுதோறும் அதிகப்படியான கட்டுமான நிறுவனங்கள் தொழிலாளர் சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

[2023 மார்ச் 29

தமிழ்நாட்டில் கட்டட மற்றும் கட்டுமானத் தொழிலாளர் சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கட்டுமான நிறுவனங்கள்



2.1. இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு

தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதிசெய்யும் நோக்கோடு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களைத் திறம்பட அமலாக்கம் செய்து வருகிறது.

இவ்வியக்ககம் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. இவ்வியக்ககத்தில் தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவு, கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

2.1.1. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவு

தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்ய ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், 6 கூடுதல் இயக்குநர்கள், 31 இணை இயக்குநர்கள், 55 துணை இயக்குநர்கள், 46 உதவி இயக்குநர்களைக் கொண்டு

2023 மார்ச் 29]

தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவு இயங்கி வருகிறது. இது மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளவும், தொழிலாளர்களின் உடல் நலனைக் கண்காணிக்கவும் இயக்குநர் அவர்களின் தலைமையில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்படி சான்றளிக்கும் மருத்துவர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ள 8 உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களுடன்கூடிய ஒரு மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

2.1.2. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு

கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில், கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்ய ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், 2 இணை இயக்குநர்கள், 8 துணை இயக்குநர்கள் மற்றும் 16 உதவி இயக்குநர்கள் ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு இயங்கி வருகிறது.

2.2. இவ்வியக்ககத்தால் அமலாக்கப்படும் சட்டங்கள்

2.2.1. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவு

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்கள் தொழிற்சாலைகள் சட்டம், 1948-ல் உள்ள சட்ட வரையறைகளை அமலாக்கம் செய்வதன்மூலம் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளைப் பாதுகாத்து வருகின்றனர்.

நாட்டிலேயே தொழிலாளர் சட்டங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டமாக உள்ள தொழிற்சாலைகள் சட்டம், 1948-ல் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் பாதுகாப்பான பணிச் சூழலை உறுதி செய்வது, வேலை நேரம், வார விடுமுறை, வளரிளம் பருவத்தினர் மற்றும் பெண் தொழிலாளர்களின் பணி நிலைமைகள் ஆகியவற்றை முறைப்படுத்துவது தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் முக்கிய நோக்கமாகும். மேலும், அபாயகரமான

[*2023 மார்ச் 29*

தொழிற்சாலைகளிலுள்ள செயல்முறைகளினால் பெரும் விபத்து ஏற்படுவதைத் தவிர்க்கும்பொருட்டும், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நலனைப் பாதுகாக்கும்பொருட்டும் தொழிற்சாலைகள் சட்டத்தில் கூடுதல் பாதுகாப்பு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் சட்டம், 1948-ஐ அமலாக்கம் செய்வது மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் இதர நல வசதிகளை உறுதி செய்யும்பொருட்டு, இவ்வியக்ககத்தால் பின்வரும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

1. *ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1975.*
2. *மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1979 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1983.*
3. *சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1937.*
4. *குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1953.*
5. *குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1994.*
6. *மகப்பேறு நலச் சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1967.*
7. *தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டம், 1958 மற்றும் விதிகள், 1959.*
8. *தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981 மற்றும் விதிகள், 1981.*
9. *சம ஊதியச் சட்டம், 1976 மற்றும் விதிகள், 1976.*

2023 மார்ச் 29]

10. தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டம், 1981 மற்றும் விதிகள், 1981.

11. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972 மற்றும் விதிகள், 1973.

12. தொழிலாளர் நலச் சட்டங்கள் (சில நிறுவனங்களுக்கு எளிமையாக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம், 1988.

13. பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1973.

14. போனஸ் வழங்கும் சட்டம், 1965 மற்றும் விதிகள், 1975.

15. உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஆபத்தான இரசாயனப் பொருட்கள் இறக்குமதி விதிகள், 1989.

16. தமிழ்நாடு தொழிலக பெரும் விபத்து ஆபத்துகளைக் கட்டுப்படுத்தும் விதிகள், 1994.

2.2.2. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு

இந்த இயக்ககம், கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996-ஐ அமலாக்கம் செய்து வருகிறது.

தொழிலாளர் நலச் சட்டமான கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996, கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை வழங்கும் நோக்கில் இயற்றப்பட்டுள்ளது.

கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் சட்ட விதிகளைச் சிறப்பாக அமலாக்கம் செய்யும் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இவ்வியக்ககத்தில் கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு, உரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு 2013 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

[*2023 மார்ச் 29*

கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996-ஐ அமலாக்கம் செய்வது மட்டுமல்லாமல், கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களுக்கான அடிப்படை பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை உறுதி செய்யவும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் வெளி மாநில தொழிலாளர்களது பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் இவ்வியக்ககத்தால் பின்வரும் தொழிலாளர் நலச் சட்டங்களும், கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

1. *ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1975.*
2. *மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1979 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1983.*
3. *சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1937.*
4. *குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1953.*
5. *குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1994.*
6. *மகப்பேறு நலச் சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1967.*
7. *சம ஊதியச் சட்டம், 1976 மற்றும் விதிகள், 1976.*
8. *போனஸ் வழங்கும் சட்டம், 1965 மற்றும் விதிகள், 1975*

2.3. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் முக்கியச் செயல்பாடுகள்

கீழ்க்கண்டவை இவ்வியக்ககத்தின் முக்கியமான செயல்பாடுகள் ஆகும்.

2023 மார்ச் 29]

2.3.1. தொழிற்சாலைகளில் தொழிலாளர் சட்டங்கள் அமலாக்கம்

தொழிற்சாலைகளில் தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களை அமலாக்கம் செய்யவும் அவற்றை உறுதி செய்யவும் காலமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. இடர் அளவீட்டின் அடிப்படையில், இவ்வியக்கக வலைதளம் மூலமாகத் தொழிற்சாலைகள் ஆய்விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அலுவலர்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முறை ஆய்வுகள் மட்டுமல்லாமல், விபத்துகள் மற்றும் புகார்கள் அடிப்படையில், சிறப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களை முற்றிலும் அகற்றிடவும் கொத்தடிமைத் தொழிலாளர் முறையைக் கண்டறியவும், குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், ஏதேனும் தொழில் துறை தொடர்புடைய குறிப்பிட்ட பிரச்சினைகள் இவ்வியக்ககத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் நேர்வில் சிறப்பு குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பிரச்சினைகளுக்கு சரியான முறையில் தீர்வு காணப்படுகின்றன.

2.3.2. தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுத் திட்டம்

ஆய்வுகளில் வெளிப்படைத் தன்மையை மேலும் அதிகரிக்கும் விதமாக இடர் அளவீட்டின் அடிப்படையில் இணையவழி மூலமாக, அலுவலர்கள் ஆய்வுக்கென தொழிற்சாலைகள் ஒதுக்கீடு செய்யும் முறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வுகளில் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்கும் வகையில், இந்த ஆய்வுத் திட்டத்தில் கீழ்க்காணும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

(i) ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின்கீழ் ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) ஒரே அலுவலர் ஒரே தொழிற்சாலையை இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

(iii) அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கை ஆய்வு முடிந்த 24 மணி நேரத்திற்குள், இயக்ககத்திற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் சமர்பிக்கப்பட வேண்டும்.

[2023 மார்ச் 29

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறையின் அடிப்படையிலும், அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், தொழிற்சாலைகள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

i) அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்

100 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 87 மற்றும் விதி 95-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டவை) ஊறு விளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 2 (cb)-ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் அபாயகரமான இரசாயனங்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள் 1989-ல் வரையறுக்கப்பட்ட அனைத்து பெருவிபத்து இடர் தரும் தொழிற்சாலைகள் ஆகியவை "அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ii) நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்

100 தொழிலாளர்கள் வரை பணிபுரியும் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் தவிர்த்து, அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 87 மற்றும் விதி 95-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டவை), ஊறு விளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 2(cb)-ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் 250 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறைகள் மற்றும் ஊறு விளைவிக்கும் செயல்முறைகள் அல்லாத தொழிற்சாலைகளும் "நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

iii) குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் மற்றும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட

2023 மார்ச் 29]

தொழிற்சாலைகள் தவிர்த்து இதர அனைத்து தொழிற்சாலைகளும் "குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

2.3.3. சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைத் திட்டம்

i. சுய சான்றிதழ் திட்டம்

அபாயகரமான தொழில் முறை மற்றும் ஊறு விளைவிக்கும் செயல்முறை அல்லாத நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும் சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு நேரடி ஆய்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் குறிப்பற்ற முறையில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

ii. எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்

தொழிற்சாலை நிர்வாகத்தினருக்குப் பயனளிக்கும் விதமாகவும் நடைமுறைகளை எளிதாக்கவும் அரசாணை (நிலை) எண் 15, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 31.1.2018, தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950-ன் விதி 100-ன்படி ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையினை படிவம் எண் 22-ல் தொழிற்சாலை நிர்வாகத்தினர் சமர்ப்பிக்க வேண்டும். பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின்கீழ் ஆண்டறிக்கைகள் இணைய வழியாக ஒரே படிவத்தில் சமர்ப்பிக்கப்படுவதால் பல்வேறு சட்டங்களின்கீழ் தனித்தனியாக ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 29

2.3.4. தொழிற்சாலைகளில் அழுத்தக்கலன் செயல்பாட்டின் பாதுகாப்பினை உறுதி செய்தல்

தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு அவற்றைச் "சோதனை செய்யும் அலுவலர்களாக" இவ்வியக்கக அலுவலர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்திய கொதிகலன்கள் சட்டத்தின்கீழ் வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து, வாயு மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களும் இவ்வியக்கக அலுவலர்களால் சோதனை செய்யப்படுகிறது. அழுத்தக்கலன்களில் 6 மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனையும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனையும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலி சோதனையும் இவ்வியக்கக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.3.5. தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

2.3.5.1. பாதுகாப்புப் பயிற்சி

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுவதன் அவசியம் குறித்து தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தொழிற்சாலைகளில் விபத்துகளைத் தடுப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய சட்டப்படியான பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து தொழிலாளர்களுக்குக் கற்பித்திடவும் கால முறைப்படி பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே நடத்தப்படுகின்றன.

2.3.5.2. பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள்

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் மட்டுமல்லாமல், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்களும், இவ்வியக்கக அலுவலர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள் இவ்வியக்ககத்தில் உருவாக்கப்பட்டு, இக்குழுக்கள் இரசாயனம், பட்டாசு, தோல் பதனிடும் மற்றும் வெளுத்தல் தொழிற்சாலைகள் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு கால முறையடிப்படையில் சென்று

2023 மார்ச் 29]

அத்தொழிற்சாலைகளின் பாதுகாப்பு வழிமுறைகளைத் திறனாய்வு செய்து, அத்தொழிற்சாலைகளிலுள்ள அபாயங்கள் குறித்தும், அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கின்றன.

2.3.6. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவின் இதர பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககமானது, பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் அரசுசாரா தன்னார்வ நிறுவனங்களான, "தேசிய பாதுகாப்புக் குழுமம்", "தேசிய உற்பத்திக் குழுமம்" ஆகியவற்றுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினர், முறையான தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்புக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. இவ்வகையான பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகளின் வாயிலாக தொழிலாளர்களிடையே பாதுகாப்புக் கலாச்சாரம் ஏற்படுத்தப்படுகிறது.

தொழிலகப் பாதுகாப்பை உறுதி செய்யும்பொருட்டு, தொழிலாளர்களுக்கு முறையான பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துவது மட்டுமல்லாமல், விபத்துகள் அதிகம் நிகழக்கூடிய பட்டாசு, தீப்பெட்டி, இரசாயனம், உருக்காலை, சிமெண்ட் தொழிற்சாலை போன்ற குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அதன் நிர்வாகத்தினருக்கும், அத்தொழில் சார்ந்த குறிப்பான பாதுகாப்பு பயிற்சிகள் இவ்வியக்ககத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் தொழிலாளர்களிடையே நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, தமிழ்நாட்டில் விபத்துகளைக் குறைப்பதற்குப் பெரிதும் வழிவகுத்துள்ளது.

2.3.7. தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உடல் நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தின்கீழ் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்படி "சான்றளிக்கும் மருத்துவர்கள்" என அறிவிக்கப்பட்டு, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடற்தகுதியை உறுதி செய்ய

ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர். இரத்த அழுத்தம் காட்டும் கருவி, நுண்கதிர் காட்சிப்பெட்டி, ஸ்டெதாஸ்கோப் ஆகிய உபகரணங்கள் மருத்துவ ஆய்வுகளுக்காகவும், நுரையீரலின் செயல்பாட்டினைப் பரிசீலனை செய்ய ஸ்பைரோமீட்டர் சாதனமும் மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2.3.7.1. தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகள்

இவ்வியக்கக சான்றளிக்கும் மருத்துவர்கள், அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், வளரிளம் பருவ தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோருக்குக் காலமுறைப்படி மருத்துவப் பரிசோதனை செய்து உடற்தகுதிச் சான்றிதழ் வழங்குகின்றனர். மருத்துவப் பரிசோதனையில் தொழிலாளி பணி செய்ய உடற்தகுதி இல்லாத நேர்வில், குறிப்பிட்ட அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வேறு இடத்தில் பணிபுரிய மருத்துவ அலுவலரால் பரிந்துரைக்கப்படுகிறது. அத்தொழிலாளியின் உடல்நிலை தொடர்ந்து மருத்துவ அலுவலரால் கண்காணிக்கப்பட்டு, அப்பணிக்கு அவர் முழுமையான உடற்தகுதி பெற்ற பின்னரே மீண்டும் பணியமர்த்த அனுமதிக்கப்படுவார். மேலும், தொழில் வழி நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள மருத்துவ மற்றும் இதர தடுப்பு முறைகள் குறித்தும் தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2.3.7.2. சுகாதார அளவீடு

அபாயகரமான தொழிற்முறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களிடையே தொழில் வழி நோய் கண்டறிவது குறித்து இவ்வியக்கக தலைமை மருத்துவ அலுவலரால் அபாயகரமான செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய அளவீடுகளின்போது தொழிலாளர்களுடைய மருத்துவப் பதிவேடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, அசாதாரணமான உடல் பாதிப்புகள் காணப்படும் நேர்வுகளில், தொழிலாளர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்கும்பொருட்டு, உரிய பரிந்துரைகள் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு எடுத்துரைக்கப்படுகிறது. இதுதவிர பணியிடச் சூழல் குறித்த அளவீடுகள் அபாயகரமான தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

2023 மார்ச் 29]

2.3.7.3. இரைச்சலின் அளவினைக் கண்காணித்தல்

தொழிற்சாலைகளில் நிலவும் அதிகப்படியான இரைச்சலால் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடல் நலக் கேடுகளைத் தடுக்க, இவ்வியக்ககம் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. ஒலி அளப்பான்மூலம் இரைச்சலை அளவிட்டு, தொழிலாளர்களை அதிகப்படியான இரைச்சலின் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிக இரைச்சல் உள்ள பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பணி சுழற்சி முறையில் பணி வழங்கப்படுகிறது. தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட அரசு மருத்துவக் கல்லூரி வல்லுநர்களின் கருத்துக்கள் பெறப்படுகின்றன. ஆய்வுகளின்போது இதுசம்பந்தமாக தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படுவதுடன், தேவைப்படும் நிகழ்வுகளில் சட்ட ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது.

2.3.8. தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை அகற்றுதல்

இந்த மாநிலத்தை, 2025 ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற அரசின் நோக்கத்தினை நிறைவேற்ற இவ்வியக்ககம் சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

14 வயது நிரம்பாத குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் பணியமர்த்துவதை, தொழிற்சாலைகள் சட்டம், 1948, பிரிவு 67 மற்றும் குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 சட்டப் பிரிவு 3 தடை செய்கிறது. மேலும் இச்சட்டம், 14 வயது முடிவடைந்த, ஆனால் 18 வயது முடிவடையாத வளரிளம் பருவத்தினரை அனைத்து இடர்தரும் தொழிற்சாலைகளில் பணிபுரிவதைத் தடை செய்கிறது மற்றும் இடர்தரும் செயல்முறை தொழில்களைத் தவிர்த்து மற்ற தொழிற்சாலைகளில் வளரிளம் பருவத்தினரின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்துகிறது.

குழந்தைத் தொழிலாளர் முறை இல்லா மாநிலமாக மாற்றும் அரசின் நோக்கத்தினை நிறைவேற்ற குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைக் கண்டறியவும், இடர்தரும் செயல்பாடுகளில் பணிபுரியும் வளரிளம் பருவத்தினரைக்

கண்டறியவும் காலமுறைப்படி ஆய்வுகள் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு, சட்ட முரண்பாடுகளுக்கு நிர்வாகத்தினர்மீது சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

மாநிலத்தின் செயல் திட்டத்தினை நிறைவேற்ற மாவட்ட வாரியாக சிறப்புப் பணிக் குழுக்கள் அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிக் குழுவில் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் இணை இயக்குநர்கள் உறுப்பினர் செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழு ஆய்வுகள் காலமுறைப்படி தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்துவதைத் தடுக்கும்பொருட்டு மேற்கொள்ளப்படுகின்றன. குழந்தைத் தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்யும்பொருட்டு இவ்வியக்ககத்தின் சான்றளிக்கும் மருத்துவர்களும் இக்குழு ஆய்வில் பங்கு பெறுகின்றனர்.

1.4.2022 முதல் 31.1.2023 வரை 6,238 முறை ஆய்வுகளும், 1,329 குழு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு, 15 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட காலத்தில், கொத்தடிமைத் தொழிலாளர்களைக் கண்டறிய 2,806 தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 11 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

குழந்தைத் தொழிலாளர்கள் முறை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் முறையை அகற்றுதலில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளின் பயன்பாட்டிற்காகவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவும் “கொத்தடிமைத் தொழிலாளர்கள் முறை ஒழித்தல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்” மற்றும் “குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்” ஆகிய இரண்டு புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.2.2023 அன்று வெளியிடப்பட்டன.

2.3.9. இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளுக்கான வழிவகைகள்

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட உற்பத்தி பணிகளில் கையாளப்படும் மூலப்பொருட்கள், இடைநிலை பொருட்கள், தயாரிக்கப்பட்ட பொருட்கள்

2023 மார்ச் 29]

*அல்லது அவற்றின் கழிவுகள் ஆகியவற்றினால் அதில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும், உடல் நலத்திற்கும் ஊறு விளைவிக்கக்கூடியதாகவும் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ள தொழிற்சாலைகள், இடர்தரும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் சட்டம், 1948 பிரிவு 2(*cb*)-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.*

*தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 2(*cb*)-ன்கீழ் முதல் அட்டவணையில் 29 செயல்முறைகள், இடர்தரும் தொழில் செயல்முறைகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.*

இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யவும் அவற்றைச் சுற்றியுள்ள பொது மக்களைப் பாதுகாக்கவும் பல்வேறு சிறப்பு வழிமுறைகள் 1987 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட தொழிற்சாலைகள் சட்டத்தில் (தொழிற்சாலைகள் சட்டம், 1948) பிரத்யேகமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

2.3.9.1. பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்

ஊறு விளைவிக்கும் இரசாயனங்களின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், 1989-ன் அட்டவணை-3-ல் குறிப்பிட்டுள்ள இரசாயனங்களின் அதிகபட்ச அளவுக்கு மேல் சேமித்து மற்றும் கையாளும் தொழிற்சாலைகள் பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அவசரக் காலகட்டத்தில் ஏற்படக்கூடிய நடைமுறைப் பிரச்சினைகளைச் சரியாக அளவீடு செய்யும்பொருட்டும் அவசரக் காலங்களில் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களது தயார் நிலையினை மதிப்பீடு செய்யவும், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில், இத்தொழிற்சாலைகளில் உள்வளாக அவசர நிலை ஆயத்தத் திட்ட மாதிரி ஒத்திகைகள் ஆறு மாதக் காலத்திற்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

தொழிலாளர்களால் பொதுவாகக் கடைபிடிக்கத் தவறும் முக்கியப் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய விபத்து அல்லது அவசர நிலை குறித்து சித்தரிக்கப்பட்டு, அக வளாக அவசரக் கால தயார் நிலை மற்றும் புற வளாக அவசரக் கால தயார் நிலை குறித்த இரண்டு தனித்தனி பாதுகாப்புக்

காணொலிகள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், அவை பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளின்போது அவசரக்கால சூழ்நிலையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும்வண்ணம் திரையிடப்படுகிறது.

2.3.9.2. மனை மதிப்பீட்டுக் குழு

இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் துவக்குவதற்கு அல்லது விரிவாக்கம் செய்வதற்கு அனுமதி கோரி தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள்மீது அரசுக்கு ஆலோசனை வழங்க, தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் (திருத்தப்பட்ட சட்டம், 1987 பிரிவு 41ஏ-ன்கீழ் வரையறுக்கப்பட்டவாறு 'மனை மதிப்பீட்டுக் குழு' ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது விண்ணப்பங்களைக் கூர்ந்தாய்வு செய்வதோடு, பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி செயல்முறைகளுடன் துவக்க நிலையிலிருந்தே இயங்குவதற்கு உரிய வழிமுறைகள் குறித்து இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்குகிறது.

2.4. பட்டாசு தொழிற்சாலைகளில் பணியிடப் பாதுகாப்பினை மேம்படுத்த சிறப்பு செயல்பாடுகள்

பட்டாசு உற்பத்தியில் நாட்டிலேயே மிகப் பெரிய மாநிலமாக விளங்கும் தமிழ்நாடு, பட்டாசு உற்பத்தியில் 90 சதவிகிதப் பங்களிப்பினை அளித்து வருகிறது.

பட்டாசு உற்பத்தியில் கையாளப்படும் பெரும்பாலான இரசாயனங்கள், இடைப்பட்ட உற்பத்திப் பொருட்கள், இறுதியாகத் தயாரிக்கப்படும் பட்டாசுகள் ஆகிய அனைத்தும் மிகவும் அபாயகரமான தன்மையுடையவை என்பதால் உரிய பாதுகாப்பு வழிமுறைகள் சீரிய முறையில் கடைபிடிக்கப்படாவிடில், அவை தொழிலாளர்களின் உயிருக்கும், பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிப்பதாக அமைந்துவிடும். பல்வேறு அபாயகரமான இரசாயனங்கள் கையாளப்படுவதால், பட்டாசு உற்பத்தியில் ஆபத்துகள் நிறைந்துள்ளபோதிலும் இவ்வியக்ககத்தின் சட்ட அமலாக்கம் மற்றும் பல்வேறு பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் ஆகியவற்றின்மூலம் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகள் நிகழ்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29]

2.4.1. பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வுகள்

பட்டாசு தொழிற்சாலைகள் அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என அரசாணை (நிலை) எண் 9, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள் 31.1.2023 மூலம் வகைப்படுத்தப்பட்டு, 6 மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. பட்டாசு தொழிற்சாலைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950-ன்கீழ் வலியுறுத்தியுள்ளவாறு பாதுகாப்புத் தரங்களுக்கு இணங்க, காலமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதுகாப்பு விதிமுறைகளை மீறும் பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்களின்மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும் வகையில் கடும் முரண்பாடுகள் காணப்படும் தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி தடையாணைகள் இவ்வியக்கக அலுவலர்களால் வழங்கப்படுகின்றன.

2.4.2. பட்டாசு தொழிற்சாலைகளில் சிறப்புக் குழு ஆய்வுகள்

விருதுநகர் மாவட்டத்தில், தீபாவளி பண்டிகையை ஒட்டிய காலங்களில் பட்டாசு உற்பத்தி அதிகமாக இருக்கும் என்பதால் மாநிலத்தின் மற்ற பகுதியிலிருக்கும் இணை இயக்குநர்களைக் கொண்டு சிறப்புக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தக் காலகட்டத்தில் மேற்கொள்ளப்படும் அதிகப்படியான உற்பத்தியின் காரணமாக முக்கியப் பாதுகாப்பு வழிமுறைகள் மீறப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும், பட்டாசு தொழிற்சாலைகளில் அபாயகரமான பொருட்களைச் சேமித்தல் மற்றும் கையாளுதல் ஆகியவற்றில் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுவதைக் கண்காணிக்கவும் இச்சிறப்புக் குழுக்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. விதி மீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர்மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அத்தொழிற்சாலைகளில் கண்டறியப்படும் கடும் விதிமீறல்களுக்கு, உற்பத்தித் தடையாணைகள் வழங்கப்படுகின்றன.

தீபாவளி பண்டிகைக் காலத்தில் செயல்படும் இச்சிறப்புக் குழு ஆய்வுகள் மட்டுமல்லாமல், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இவ்வியக்கக அலுவலர்கள், மாவட்ட வருவாய்த் துறை

அலுவலர்களால் நடத்தப்படும் தினசரி குழு ஆய்வுகளில் இணைந்து பட்டாசு தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள் குறித்து கண்காணித்து வருகின்றனர்.

2.4.3. பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள்

பட்டாசு தொழிற்சாலைகள் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைப் பணியமர்த்தி செயல்படும் உற்பத்திப் பிரிவு என்பதாலும், பெரும்பாலான செயல்முறைகள் முழுமையாகத் தொழிலாளர்களைச் சார்ந்துள்ளதாலும் அதிக விபத்துகள் நிகழ வாய்ப்புள்ள தொழிற்சாலைகள் ஆகும். பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்பாலான தொழிலாளர்கள் இரசாயனங்களை பாதுகாப்பாகக் கையாளும் முறை மற்றும் அபாயகரமான இரசாயனங்களின் தன்மைகள் குறித்து முழுமையாக அறியாதவர்களாக இருப்பதே விபத்துகள் நிகழ்வதற்கான முக்கியக் காரணமாக அமைந்துள்ளது. எனவே, விபத்துகளைக் குறைக்கும்பொருட்டு, பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிப்பதன் அவசியம் குறித்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்திட பல்வேறு பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் இவ்வியக்ககத்தின்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

2.4.3.1. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலை வளாகத்திலேயே பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் பட்டாசு உற்பத்தியின்போது தொழிலாளர்களால் கடைபிடிக்கப்பட வேண்டிய முக்கியப் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து, இவ்வியக்கக அலுவலர்களால் எடுத்துரைக்கப்படுகிறது.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்குத் தனித்தனியாக பாதுகாப்பு காணொளிகள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றில் தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் விற்பனையாளர்களது பொறுப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29]

மேலும், அனைத்து வசதிகளுடன்கூடிய பிரத்தியேக நடமாடும் பிரச்சார வாகனம்மூலம் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் பாதுகாப்பு காணொளிகள் திரையிடப்பட்டு, தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் தவிர, மேலும் ஒரு பாதுகாப்பு பிரச்சாரக் குழு, மதுரை இணை இயக்குநர் (பதிவு) தலைமையில் அமைக்கப்பட்டு, பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு விபத்துகளைக் குறைக்கும்பொருட்டு பாதுகாப்பு குறித்த சிறப்புப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

2.4.3.2. பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள்/ மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குப் பட்டாசு தயாரிப்பின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் பிரத்தியேகமாக ஒரு பாதுகாப்புப் பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சியும், ஃபோர்மேன் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களுக்கு ஒரு மாத பயிற்சி வகுப்பும் நடத்தப்படுகின்றன. இம்மையத்தில் பின்வரும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- இரசாயனங்களின் தன்மை
- இரசாயனங்களைக் கையாளுதல்
- இரசாயனங்கள் சேமித்தல்
- இரசாயனங்களின் வேதி வினை
- பட்டாசு பொருட்களைக் கையாளுதல் மற்றும் சேமித்தல் தொடர்பான பாதுகாப்பான செயல்முறைகள்

மேலும், இப்பயிற்சி மையமானது வருவாய்த் துறை அலுவலர்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்குப் பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பல்வேறு பாதுகாப்பு சட்ட வழிமுறைகள் குறித்து பயிற்சி அளித்து வருகிறது.

[2023 மார்ச் 29

2.4.4. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான நடமாடும் கண்காணிப்புப் குழு

விருதுநகர் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருவதால், பட்டாசு தொழிற்சாலைகளை ஆய்வு செய்யும்பொருட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில், பிரத்தியேகமாக நடமாடும் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. பட்டாசு தொழிற்சாலைகளில் கூடுதல் முனைப்புடன் பாதுகாப்பு வழிமுறைகளை அமலாக்கம் செய்யவும், பாதுகாப்பு பணிமுறைகளை உறுதி செய்யவும் இக்குழுவானது உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு, தொழிலாளர்களது பணி பாதுகாப்பை உறுதி செய்ய தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதோடு, அங்குள்ள தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்குப் பாதுகாப்புடன் பணிபுரியும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கிறது.

2.4.5. பட்டாசு தொழிற்சாலைகளுக்காக விருதுநகர் மாவட்டத்தில் செயல்படும் மாவட்ட அளவிலான பாதுகாப்புக் குழு

பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளைக் குறைக்கும் விதமாக, பட்டாசு தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்படும் பாதுகாப்பு வழிமுறைகளைக் காலமுறைப்படி திறனாய்வு செய்ய, விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான பாதுகாப்புக் குழு 2020 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் இக்குழுவின் உறுப்பினர்-ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் இக்குழு இதுவரை 12 கூட்டங்களை நடத்தியுள்ளது. மாவட்ட அளவிலான பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பின்வரும் கூடுதல் வழிமுறைகள் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளைத் தடுக்க எடுக்கப்பட்டு வருகின்றன.

1. *இவ்வியக்கக அலுவலர்கள், வருவாய்த் துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய அரசுத் துறைகளை உள்ளடக்கிய சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இக்குழுக்கள், தொழிற்சாலைகளில் ஆண்டு முழுவதும் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.*

2023 மார்ச் 29]

2. கிராமங்களில் சட்ட விரோதமாகப் பட்டாசு தயாரிக்கப்படுவதைத் தடுப்பதற்கு குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. "குழந்தைத் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படவில்லை" என்ற வாசகம், அனைத்துப் பட்டாசு பெட்டிகளின்மீது அச்சடிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

4. பல்வேறு அரசு துறைகளால் பட்டாசு தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்யப்படும் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு செயல்முறைகளை பட்டாசு உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களால் கடைபிடிக்கப்பட வேண்டியது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு "PYRO" *புத்தகம் வெளியிடப்பட்டது.*

5. சிவகாசி பயிற்சி மையத்தில் வழங்கப்படும் பாதுகாப்பு பயிற்சியானது, வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கும், இரசாயனங்கள் கலக்குதல் மற்றும் நிரப்புதல் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும், பட்டாசு தொழிற்சாலை வேலையளிப்போர்/ உரிமையாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சியர் உரிமம் பெற்ற பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

6. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களையும் வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பதிவு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2.4.6. ஆய்வு முறையில் திருத்தம்

பட்டாசு தயாரிப்பில் உள்ள அபாயகரமானத் தன்மையை கருத்தில் கொண்டும், இதர தொழிற்சலைகளில் ஏற்பட்ட மொத்த விபத்துகளுடன் ஒப்பிடும்போது பட்டாசு தொழிற்சாலைகளில் அதிகமான விபத்துகள் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வு முறையினை அதிகரிக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொண்டு அரசு ஆணையிட்டுள்ளது.

[2023 மார்ச் 29

அதன்படி, அனைத்து பட்டாசு தொழிற்சாலைகளும் அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டு, ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.4.7. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான தொகுப்பு தனி நபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு உச்ச நீதிமன்ற ஆணையின்படி, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தில் மரணமடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நிவாரணமாக ரூ.50,000/- வழங்க வகை செய்யும் புதிய தொகுப்பு தனி நபர் விபத்து காப்பீட்டுத் திட்டமானது தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான பிரீமியத் தொகை, பல்வேறு காப்பீட்டு நிறுவனங்கள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரீமியம் செலுத்த வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. பணியாளர் இழப்பீட்டுச் சட்டம்/ தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்கீழ் (E.S.I. Scheme) வழங்கப்படும் இழப்பீடு / நிவாரணங்கள் மட்டுமல்லாமல் இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரணமானது கூடுதலாக அளிக்கப்படுகிறது.

2.4.8. தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியம்

பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்குப் பல்வேறு நல வசதிகளை வழங்கும்பொருட்டு, தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியம் என்ற பெயரில் பிரத்யேகமான நல வாரியம் ஒன்று தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982, பிரிவு 6(1)-ன்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்நல வாரியத்திற்கு ரூபாய் 5.02 கோடி நிதியமாக (Corpus fund) பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தினரால் பங்களிப்பாக அளிக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29]

2.4.9. பட்டாசு தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

2.4.9.1. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு விழிப்புணர்வு

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் செயலாளர் மற்றும் டாக்டர் திரு. V. திருப்புகழ், இ.ஆ.ப. (ஓய்வு) ஆகியோரின் வழிகாட்டுதலின்படி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 31.5.2022 அன்று "பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளைத் தடுக்கும் முறைகள்" என்ற தலைப்பின்கீழ் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

2.4.9.2. பட்டாசு தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து அரசு தலைமைச் செயலர் அவர்களின் திறனாய்வு

"விருதுநகர் மாவட்டத்திலுள்ள பட்டாசு தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துகளைத் தடுப்பதற்கான செயல் திட்டம்" குறித்த திறனாய்வு கூட்டம் 28.9.2022 அன்று, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளைத் தடுப்பதற்கான முக்கியக் குறிப்புகள், பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களது பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் நல வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

2.4.9.3. விருதுநகரில் பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம்

விருதுநகர் மாவட்டத்தில், பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்து கருத்தரங்கம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரது தலைமையில் 12.12.2022 அன்று நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் "தொழிலகப் பாதுகாப்பு - தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்" என்ற தலைப்பில் ஒரு கையேடு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்களால் வெளியிடப்பட்டது. பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளின் முக்கியத்துவம் குறித்தும் பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் பங்கு மற்றும் பொறுப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

2.4.9.4. பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள்

பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் விபத்துகளைக் குறைக்க, மேலும் ஒரு முன்னெடுப்பாக, பட்டாசு உற்பத்தியில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு, சிறப்பு பாதுகாப்பு பயிற்சி நிகழ்ச்சிகளை, விருதுநகர் மாவட்ட பட்டாசு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் நடத்த அரசு ஆணையிட்டது. இதுவரை 3 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 300 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2.5. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம்

2.5.1. மாநில பாதுகாப்பு விருதுகள்

தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும்பொருட்டும் அவர்களின் முயற்சிகளை அங்கீகரித்து விபத்து நிகழ்வுகளைக் குறைக்கும் நிர்வாகத்தினருக்கு மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 10 வெவ்வேறு வகை உற்பத்தி முறைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படுகிறது. தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மூன்று வகைப்பாடு தொழிற்சாலைகளுக்கு மூன்று வெவ்வேறு திட்டங்களின்கீழ் 90 எண்ணிக்கையில் முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் வெள்ளி கேடயங்களாக வழங்கப்படுகிறது. மூன்றாம் பரிசு சான்றிதழாக தொழிற்சாலை நிர்வாகத்திற்கு வழங்கப்படுகிறது.

2023 மார்ச் 29]

2.5.2. உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்

தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனை உயர்த்துதல், பணி சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவை குறித்து பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் "தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்" வழங்கப்பட்டு வருகிறது. விருதுகளைத் தேர்வு செய்ய அமைக்கப்பட்ட குழு தொழிலாளர்களால் வழங்கப்பட்ட சிறந்த ஆலோசனைகளுக்கு ஏற்ப ரொக்க பரிசுகள் வழங்கப்படுகிறது. ரூ.5000/- ரொக்கமாக 5 முதல் பரிசுகளும், ரூ.3000/- ரொக்கமாக 10 இரண்டாம் பரிசுகளும், ரூ.1000/- ரொக்கமாக 28 மூன்றாம் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

2.6. கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள்

கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களைச் சிறப்பாக அமலாக்கம் செய்வதன்மூலம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதே கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவின் முதன்மை நோக்கமாகும். சட்ட அமலாக்க நடவடிக்கைகள் தவிர, அலுவலர்களால் கட்டுமானத் தொழிலாளர்களுக்கிடையே பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த காலமுறைப்படி பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

2.6.1. கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கப்படுத்துதல்

கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவு அலுவலர்களால் காலமுறைதோறும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதிமுறைகளை மீறி செயல்படும் கட்டுமான நிறுவனங்களின்மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2023 மார்ச் 29

முறை ஆய்வுகளைத் தவிர பதிவு பெறாத கட்டுமானங்களை இச்சட்ட வரையறைக்குள் அதிக எண்ணிக்கையில் பதிவு செய்யவும், கட்டுமான தொழிலாளர்களது அடிப்படை நல வசதிகளை கண்காணிக்கவும், குழு ஆய்வுகள் முறைப்படி நடத்தப்படுகின்றன.

2.6.2. கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுத் திட்டம்

கட்டடம் மற்றும் இதர கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இடர் அளவீட்டு திட்டத்தின்கீழ் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், கட்டுமானங்களின் தன்மையின் அடிப்படையிலும், கட்டுமான பணியிடங்கள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

i. அதிக அபாயகரமான கட்டுமானங்கள்

கட்டுமான பணியிடங்களில் 500 மற்றும் 500-க்குமேல் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள், தொழிலாளர்களின் எண்ணிக்கையினைக் கணக்கில் கொள்ளாது ஐந்து மற்றும் அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட கட்டுமானங்கள், இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கட்டுமானப் பணிகள், அணை கட்டுமானம் போன்ற அபாயங்கள் நிறைந்த அனைத்துக் கட்டுமானங்களும் அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

ii. நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்

50 தொழிலாளர்களுக்கு மேல் 500 தொழிலாளர்களுக்குள் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையினைக் கணக்கில் எடுக்காமல் 2 முதல் 5 தளங்களுக்குக் குறைவான அனைத்து கட்டுமானங்களும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

iii. குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட

2023 மார்ச் 29]

கட்டுமானங்களைத் தவிர மற்ற அனைத்துக் கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் குறிப்பற்ற முறையில் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

2.6.3. சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைத் திட்டம்

2.6.3.1. சுய சான்றிதழ் திட்டம்

“சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைத் திட்டம்" பின்வரும் கட்டட மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அ. நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

ஆ. குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்களுக்கு நேரடி ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். மேற்படி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை குறிப்பற்ற முறையில் ஆய்வு செய்யப்படும்.

2.6.4. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி

கட்டுமான சட்ட அமலாக்கம் மட்டுமல்லாமல் இப்பிரிவு அலுவலர்கள் கட்டுமானப் பணியில் பாதுகாப்பினை மேம்படுத்தி, விபத்தினைக் குறைக்க கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்குப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சி வகுப்புகளைக் கட்டுமானப் பணியிடங்களிலேயே நடத்தி வருகின்றனர்.

கட்டுமானத் துறையானது அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைச் சார்ந்தது என்பதால், விபத்துகள் நிகழும் அபாயங்களை உள்ளடக்கிய கட்டுமானங்களான பலதரப்பட்ட கட்டமைப்புகள் கொண்ட பல மாடிக் கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், நிலத்தடி கழிவுநீர் கட்டுமானங்கள், சுரங்கங்கள் ஆகியவற்றைக் கொண்டதாக உள்ளது. பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து அதிகமான விழிப்புணர்வு இல்லாத வெளி மாநிலத் தொழிலாளர்களை அதிகளவில் பணியமர்த்தும் இடங்களாகக் கட்டுமானப் பணியிடங்கள் இருப்பதாலும், கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள இத்தொழிலாளர்களுக்கு அவர்களது பணியிடங்களிலேயே அவர்களது தாய்மொழியிலேயே பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.

அதிக உயரங்களில் வேலை செய்தல் மற்றும் மின்சாரப் பாதுகாப்பு குறித்த பாதுகாப்பு காணொளிகள் தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் இயக்ககத்தால் உருவாக்கப்பட்டு, பாதுகாப்பு பயிற்சிகளின்போது தொழிலாளர்களுக்குத் திரையிட்டுக் காண்பிக்கப்படுகிறது.

கட்டுமானப் பணியிடங்களில் விபத்துகளை மேலும் குறைக்கும்பொருட்டு, கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் கனிமச் சுரங்கத் தொழிலாளர்களுக்கெனப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சிகளை வழங்கிட அரசு ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 96 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் இவ்வியக்கக அலுவலர்களால் நடத்தப்பட்டு, 12,908 கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் 283 கனிமச் சுரங்கத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2.7. இவ்வியக்ககத்தின் பிற செயல்பாடுகள்

2.7.1. வெளி மாநிலத் தொழிலாளர்களின் விவரங்களை வலைதளத்தில் பதிவு செய்தல்

தேவைப்படும் நேர்வுகளில் உபயோகப்படுத்திக்கொள்ள தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் வெளி மாநிலத் தொழிலாளர்களின் தரவுகளைச் சேகரித்து ஒருங்கிணைக்கும் பணியில் இவ்வியக்கக அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வெளி மாநிலத் தொழிலாளர்களின் அனைத்து விவரங்களும் இதற்கென உருவாக்கப்பட்ட https://tn.labour.gov.in/ism என்ற பிரத்தியேக வலைதளத்தில்

2023 மார்ச் 29]

பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை, தொழிற்சாலைகளில் பணிபுரியும் 2,38,539 வெளி மாநிலத் தொழிலாளர்கள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் 63,239 வெளி மாநிலத் தொழிலாளர்களின் விவரங்களும் மேற்படி வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2.7.2. தமிழ்நாட்டில் எளிமையாக்கப்பட்ட தொழில் தொடங்கும் முனைப்பில் மேம்பாடு

*தொழில் முனைவோருக்கு சுலபமாகத் தொழில் தொடங்கும் வசதிகளை (*Ease of Doing Business*) வழங்கும்பொருட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ள வலைதளத்தின்மூலம் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின்கீழ் வழங்கப்படும் ஒப்புதல்கள் இணையதளம் வழியாகவே கட்டணம் செலுத்தி, இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் (*Digital Signature*) பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

இவ்வியக்ககத்தின் கீழ்க்கண்ட சேவைகள் இணைய வழியாக https://dish.tn.gov.in *என்ற வலைதளத்தின்மூலம் பெற இயலும்.*

- ❖ *தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் புதுப்பித்தல்.*
- ❖ *தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.*
- ❖ *ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970-ன்கீழ் பதிவுச் சான்று வழங்குதல்.*
- ❖ *ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970-ன்கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் புதுப்பித்தல்.*
- ❖ *மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979-ன்கீழ் பதிவுச் சான்று வழங்குதல்.*
- ❖ *மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979-ன்கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் புதுப்பித்தல்.*
- ❖ *தொழிற்சாலைகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்தல்.*

❖ *கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996-ன்கீழ் கட்டுமான நிறுவனங்களுக்கு பதிவுச் சான்று வழங்குதல்.*

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் 2021 ஆம் ஆண்டு முதல் தானாகவே உரிமங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. நிர்வாகத்தினர் இவ்வியக்கக வலைதளத்தின் வாயிலாக உரிய உரிம கட்டணம் செலுத்தி ஒப்புதல் வழங்கும் அலுவலர்களுடனான நேரடி தொடர்பின்றி உரிமத்தினைத் தானாகவே பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2.7.2.1. இவ்வியக்கக இணையதளத்தில் மாற்றம் மற்றும் மேம்பாடு

இவ்வியக்ககத்தின் இணையதளத்தினை மாற்றம் மற்றும் மேம்படுத்துவதற்காக ரூ.1.73 கோடி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.8. இவ்வியக்ககத்தின் 1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான செயல்பாட்டுப் புள்ளிவிவரங்கள்

2.8.1. தொழிற்சாலை சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள்

2.8.1.1. பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் விவரங்கள்

தமிழ்நாட்டில், 31.1.2023 அன்றுள்ளவாறு தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் 49,325 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு, 25,19,796 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 1.4.2022 முதல் 31.1.2023 வரை 1,846 தொழிற்சாலைகள் புதிதாக இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2.8.1.2. பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்யப்பட்ட விவரம்

1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலகட்டத்தில், தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது கண்டறியப்பட்ட பல்வேறு வகையான விதிமீறல்களுக்காக மொத்தம் 1,740 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.2,88,64,750/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சட்ட வாரியான அமலாக்க விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 29]

வ. எண்	சட்டம்	தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	குற்றம் நிரூபணம் செய்யப்பட்ட வழக்குகள்	அபராதத் தொகை (ரூபாய்)
1	தொழிற்சாலைகள் சட்டம், 1948	1,459	1,170	2,76,86,250
2	சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936	30	22	1,01,000
3	தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டம், 1958	20	38	98,000
4	குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினர் தொழிலாளர் சட்டம் (தடுத்தல் மற்றும் முறைபடுத்துதல்), 1986	19	24	4,22,000
5	தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981	10	12	39,000
6	ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970	37	57	1,30,250
7	தொழிலாளர் நலச் சட்டங்கள் (சில நிறுவனங்களுக்கு எளிமையாக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம், 1988.	91	46	2,68,750
8	குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948	23	28	28,500

வ. எண்	சட்டம்	தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	குற்றம் நிரூபணம் செய்யப்பட்ட வழக்குகள்	அபராதத் தொகை (ரூபாய்)
9	மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைபடுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979.	45	32	76,000
10	தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972,	6	15	15,000
மொத்தம்		**1,740**	**1,444**	**2,88,64,750**

2.8.1.3. தொழிற்சாலைகளில் ஆய்வுகள்

தொழிற்சாலைகளில் 1.4.2022 முதல் 31.1.2023 உடன் முடிவடைந்த காலத்தில், 6,238 முறை ஆய்வுகளும், 115 சோதனை ஆய்வுகளும், 2,933 குழு ஆய்வுகளும், 51 திடீர் ஆய்வுகளும், 4,247 பதிவு செய்யப்படாத தொழிற்சாலை ஆய்வுகளும், 35 விடுமுறை ஆய்வுகளும், 2,939 சிறப்பு ஆய்வுகளும், 391 பிற ஆய்வுகளும் என மொத்தமாக 16,949 ஆய்வுகள் தொழிற்சாலைகள் பிரிவு அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.8.1.4. தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு (பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்)

1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலத்தில் 275 பயிற்சி வகுப்புகள் தொழிற்சாலை வளாகத்தில் நடத்தப்பட்டு, 12,324 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இதே காலகட்டத்தில், பாதுகாப்பு பிரச்சாரக் குழுவினால் பட்டாசு தொழிற்சாலைகளில் 46 முகாம்களும், இரசாயனத் தொழிற்சாலைகளில் 9 முகாம்களும், ஆயத்த ஆடை உற்பத்தி மேற்கொள்ளும் தொழிற்சாலைகளில் 25 முகாம்களும், வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளில் 15 முகாம்களும் நடத்தப்பட்டு, மொத்தம் 95 பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 6,450 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2023 மார்ச் 29]

2.8.1.5. பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்

31.1.2023 அன்றுள்ளவாறு, தமிழ்நாட்டில் 174 தொழிற்சாலைகள் பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் எனக் கண்டறியப்பட்டுள்ளன.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில், 1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலகட்டத்தில் அவசரக்கால ஆயத்த நிலையினை மதிப்பீடு செய்ய 106 உள்வளாக அவசரக்கால மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

2.8.1.6. பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வுகள்

1.4.2022 முதல் 31.1.2023 உடன் முடிவடைந்த காலத்தில், 781 பட்டாசு தொழிற்சாலையில் முறை ஆய்வு செய்யப்பட்டு, பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினரின் விதிமீறல்களுக்கு எதிராக 496 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.42,34,000/-ம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில், நடமாடும் கண்காணிப்புக் குழுவால் 253 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 44 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், இதே காலகட்டத்தில் 1.4.2022 முதல் 31.1.2023 வரை தீபாவளி பண்டிகைகளின்போது பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பாக இயங்குவதை உறுதி செய்ய சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 261 பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.8.1.7. பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கான தொகுப்பு தனி நபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலகட்டத்தில் மரணமடைந்த ஐந்து தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.2,50,000/- இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

2.8.2. 1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலத்தில் மருத்துவப் பிரிவின் செயல்பாடுகள்

2.8.2.1. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் மருத்துவப் பரிசோதனை

அ. இக்காலகட்டத்தில் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்

1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலகட்டத்தில், மருத்துவ அலுவலர்கள், அபாயகரமான மற்றும் இடர்தரும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 1,58,529 தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனைச் சான்றிதழ், உணவகத் தொழிலாளர்களுக்கு 17,808 மருத்துவ சான்றிதழ், வளரிளம் பருவத்தினருக்கு 15,250 உடற்தகுதிச் சான்றிதழ்களும் வழங்கியுள்ளனர்.

உடல் நலக் குறைவால் பணி மேற்கொள்ள உடற்தகுதியில்லாத தொழிலாளர்களுக்கு மாற்றுப் பணி வழங்க பரிந்துரைக்கப்படுகிறது. பணி மேற்கொள்ள தகுதியானவரென்று அறிந்த பிறகே அவர்கள் பணிபுரிய அனுமதிக்கப்படுகின்றனர்.

2.8.2.2. சுகாதார அளவீடு

1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலகட்டத்தில், இவ்வியக்ககத் தலைமை மருத்துவ அலுவலரால் காற்றின் தன்மை மற்றும் ஒலி அளவீட்டினைக் கண்காணிக்க 8 சுகாதார அளவீடுகள் இடர்தரும் செயல்முறை தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட அளவீடுகளில் தொழிலாளர்களுக்கிடையே பரவலாகத் தொழில்வழி நோய் இருப்பது ஏதும் கண்டறியப்படவில்லை.

2.8.3. 1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலத்தில், கட்டடம் மற்றும் இதர கட்டுமானச் சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள்

2.8.3.1. பதிவு செய்யப்பட்ட கட்டுமான பணியிடங்களின் விவரங்கள்

31.1.2023 அன்றைய நிலையில், 15,803 கட்டுமான நிறுவனங்கள் கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம் 1996-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளன.

1.4.2022 முதல் 31.1.2023 உடன் முடிவடைந்த காலத்தில், 584 கட்டுமான நிறுவனங்கள் மேற்காணும் சட்டத்தின்கீழ் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 31.1.2023 அன்றைய நிலையில் 3,451 கட்டுமான நிறுவனங்களில் 4,36,883 தொழிலாளர்களைப் பணியமர்த்தி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2023 மார்ச் 29]

2.8.3.2. கட்டட மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் அமலாக்கம்

1.4.2022 முதல் 31.1.2023 வரை கட்டுமானப் பணியிடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது சட்டவிதிகளை மீறி செயல்பட்ட கட்டுமான நிர்வாகத்தின்மீது 230 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ரூ.3,87,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. சட்டவாரியான அமலாக்க விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	சட்டம்	பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	குற்றம் நிரூபணம் செய்யப்பட்ட வழக்குகள்	அபராதத் தொகை (ரூபாய்)
1	கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996	178	95	3,59,000
2	ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970	23	12	12,000
3	மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைபடுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979.	29	14	16,000
மொத்தம்		**230**	**121**	**3,87,000**

2.8.3.3. கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

1.4.2022 முதல் 31.1.2023 வரையிலான காலகட்டத்தில், இவ்வியக்கக கட்டட மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவு அலுவலர்களால் கட்டுமானப் பணியிடங்களில் 1,201 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.8.3.4. கட்டுமானப் பணியிடங்களில் நடத்தப்பட்ட பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள்

1.4.2022 முதல் 31.1.2023 உடன் முடிவடைந்த காலத்தில், 78 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் கட்டுமானப் பணியிடங்களில் நடத்தப்பட்டு, 7,656 கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2.9. பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்த இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள்

2.9.1. கழிவுநீர்த் தொட்டி சுத்திகரிப்பின்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள்/செயல்முறைகள் குறித்த குறும்படம் தயாரித்தல்

"கழிவுநீர்த் தொட்டி சுத்திகரிப்பின்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள்/செயல்முறைகள்" குறித்த குறும்படம் இவ்வியக்ககத்தால் தயாரிக்கப்பட்டு, 11.5.2022 அன்று சென்னையில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

2.9.2. ஜவுளி ஆலைகளில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் சிறப்பு

ஜவுளி ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென "ஜவுளி ஆலைகளில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் சிறப்பு" என்ற தலைப்பில் பிரத்தியேகமான கருத்தரங்கம் திண்டுக்கல்லில் 27.5.2022 அன்று தேசிய பாதுகாப்புக் குழுமத்துடன் சேர்ந்து நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில், 240 பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

2.9.3. ஓசூரில் "விபத்து தடுப்பு நோக்கிய பணி" என்ற தலைப்பிலான கருத்தரங்கம்

9.7.2022 அன்று ஓசூரில், தேசிய பாதுகாப்புக் குழுமமும், இவ்வியக்ககமும் ஒருங்கிணைந்து நடத்திய "விபத்து தடுப்பு நோக்கிய பணி" என்ற தலைப்பிலான கருத்தரங்கில், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 283 தொழிற்சாலைகளின் நிர்வாகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

2023 மார்ச் 29]

2.9.4. தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில், தொழிற்கூட்டமைப்புகள்/அரசு பொதுத் துறை நிர்வாகத்தினருக்காக 12.9.2022 அன்று நடைபெற்ற பணியிடப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டம்

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களது தலைமையில், 12.9.2022 அன்று சென்னையில் நடைபெற்ற தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பாதுகாப்பான பணியிடம் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இவ்வியக்ககத்தால் பாதுகாப்பு அம்சங்களை நடைமுறைபடுத்துவதில் உள்ள பல்வேறு இடர்பாடுகள் குறித்து தொழிற்சாலை மற்றும் கட்டுமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு தொழிற்சாலை சங்க உறுப்பினர்களுடன் விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், 105 முக்கிய நபர்கள் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானச் சங்கப் பிரதிநிதிகள், பொதுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

2.9.5. எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழிற்சாலைகளில் சட்ட செயலாக்கம் மற்றும் பாதுகாப்புக் கருத்தரங்கம்

எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழிற்சாலைகளில் சட்ட செயலாக்கம் மற்றும் பாதுகாப்பு என்ற கருத்தரங்கம், எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழிலகப் பிரிவு உயர் அலுவலர்களுக்குப் பல்வேறு தொழிலாளர் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள சட்ட வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த 13.3.2023 அன்று அரசு கூடுதல் தலைமை செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழிற்சாலைகளிலிருந்து 122 நிர்வாக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இப்பிரிவுகளைச் சார்ந்த நிர்வாகிகள் பயனடையும்வகையில், "எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழிற்சாலைகளில் சட்ட அமலாக்கம் மற்றும் பாதுகாப்பு" என்ற கையேடு இக்கருத்தரங்கில் வெளியிடப்பட்டது.

[2023 மார்ச் 29

2.9.6. தொழிற்சாலையில் உள்ள உணவகங்களில் கடைபிடிக்கப்படவேண்டிய சட்ட வழிமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி

காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைச் சார்ந்த நிர்வாகப் பிரதிநிதிகளுக்கும், தொழிற்சாலை உணவகங்களின் பிரதிநிதிகளுக்கும், தொழிற்சாலையில் உள்ள உணவகங்களில் கடைபிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு சட்ட வழிமுறைகள் மற்றும் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி சென்னையில் 15.11.2022 அன்று நடைபெற்றது. 100 நிர்வாகங்களிலிருந்து 300 பிரதிநிதிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

2.9.7. தொழிற்சாலை மருத்துவ அலுவலர்களுக்கான “தொழில்வழி உடல் நலம்” என்ற கருத்தரங்கம்

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், மணலி தொழிற்சாலைகள் சங்கங்களுடன் இணைந்து திருவொற்றியூர் மண்டலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கான “தொழில்வழி உடல் நலம்” குறித்த ஒரு நாள் கருத்தரங்கை 27.12.2022 அன்று நடத்தியது. இதில் 97 தொழிற்சாலைகளின் மருத்துவ அலுவலர்கள் பங்கேற்றனர்.

2.9.8. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பாதுகாப்பு அலுவலர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு

தொழிற்சாலைகளில் பணியாற்றும் பாதுகாப்பு அலுவலர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு 2.2.2023 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

“பாதுகாப்பு அலுவலர்களின் முக்கியப் பங்கு” என்ற தலைப்பின்கீழ் ஒரு பாதுகாப்பு கையேடு தொழிற்சாலைகளின் பாதுகாப்பு அலுவலர்களின் பயன்பாட்டிற்குத் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்டது.

2.9.9. அபாயகரமானபணிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான சிறப்பு மருத்துவப் பரிசோதனை

மணலி பகுதியில் அமைந்துள்ள ஊறுவிளைவிக்கும் செயல்முறை தொழிற்சாலைகளில் பணிபுரியும்

2023 மார்ச் 29]

தொழிலாளர்ளுக்கான, சுகாதார அளவீடு மற்றும் சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் 16.2.2023 முதல் 23.2.2023 வரை பிற மாவட்டங்களில் பணியாற்றும் சான்றளிக்கும் மருத்துவர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. மணலி பகுதியில் அமைந்துள்ள 6 ஊறுவிளைவிக்கும் செயல்முறை தொழிற்சாலைகள் இந்த சுகாதார அளவீடுகளுக்குத் தேர்வு செய்யப்பட்டு, மருத்துவப் பரிசோதனை முடிவில் கண்டறியப்பட்டதன் அடிப்படையில், தக்க மருத்துவ ஆலோசனைகள் இத்தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினருக்கு வழங்கப்பட்டது.

2.10. இவ்வியக்ககத்தின் எதிர்காலத் தொலைநோக்குப் பார்வை

தொழிலாளர் நலச் சட்டங்களை நடைமுறைக்கு ஏற்ற வகையில் சிறப்பாக அமல்படுத்தி, மாநிலத்தில் விபத்தில்லாத, ஆரோக்கியமான மற்றும் அமைதியான தொழிலகச் சூழலைப் பராமரிப்பதே தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் முதன்மையான நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைய எதிர்வரும் ஆண்டுகளில் பின்வரும் உத்திகள் நடைமுறைப்படுத்தப்படும்.

- *"எதிர்வரும் ஆண்டுகளில் பணியிட விபத்துகளே இல்லை" என்ற நிலையை அடைய தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் தொழிலாளர் சட்டங்களைத் திறம்பட அமலாக்கம் செய்யவும், தொழிலாளர்களுக்குப் போதுமான பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கவும் இவ்வியக்ககம் முயற்சிகளை மேற்கொள்ளும்.*

- *காலமுறை மருத்துவப் பரிசோதனைகள், காலமுறை சுகாதார ஆய்வுகள், பணியிட இடர் மதிப்பீடுகள்மூலம் அபாயங்களைக் கண்டறிந்து, அவற்றைச் சரிபடுத்தும் நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக அபாயகரமான தொழிற்சாலை மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நலம், சுகாதாரம் ஆகியவற்றிற்குச் சிறப்பு கவனம் வழங்கப்படும்.*

- *பணி தொடர்பான பாதுகாப்பு அம்சங்கள் குறித்து தொழிலாளர்களுக்குப் பயிற்சி வழங்கும்பொருட்டு, சென்னையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பயிற்சிப்*

பிரிவை நவீன தொழிற்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பயிற்சி மையமாக மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும். மாநிலத்தில் உள்ள அனைத்துப் பெரும்பான்மையான தொழிற் பிரிவுகளுக்கும், தொழில் குறித்த பாதுகாப்புப் பயிற்சி வழங்குவதற்கு ஏற்றபடி தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இப்பயிற்சி மையத்திற்கு ஏற்படுத்தப்படும்.

- இவ்வியக்ககமானது பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் சீரிய அமலாக்க நடவடிக்கைகள் வாயிலாக, விபத்தில்லா தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்கள் என்ற இலக்கினை அடைய சீரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.
- இவ்வியக்ககம்மூலம் வழங்கப்படும் இணையவழி சேவைகள் அனைத்தும், குறித்த நேரத்தில், தடையில்லாமல் நேரடித் தொடர்பின்றி பெறும் வகையில் இவ்வியக்ககத்தின் அனைத்து செயல்பாடுகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும்.

3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

வேலைவாய்ப்புப் பிரிவு

மாநிலத்தில் உள்ள அனைத்து இளைஞர்களது வேலைபெறும் திறனை மேம்படுத்துவதே இத்துறையின் முக்கியப் பணியாகும். வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மறுசீரமைக்கப்பட்டு, 2019 முதல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின், வேலைவாய்ப்புப் பிரிவின்கீழ் இயங்கும் இம்மையங்கள் வேலையற்ற இளைஞர்களின் வேலைபெறும் திறனைப் பல்வேறு நடவடிக்கைகளின் வாயிலாக மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன. பதிவு செய்தல், பதிவை இற்றைப்படுத்துதல், பொதுத் துறை பணிகளுக்கு வேலை நாடுநர்களைப் பரிந்துரை செய்தல், தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல், போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், கல்வி தொலைக்காட்சி வாயிலாக அனைத்து வகை போட்டித்

2023 மார்ச் 29]

தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளை ஒளிபரப்புதல், தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்காகத் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துதல் போன்ற பணிகள் இத்துறையின் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக உள்ளது.


வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக கட்டமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் தலைவரான ஆணையர், இந்திய ஆட்சிப் பணியின் மூத்த அலுவலர் ஆவார். ஆணையருக்கு உதவிபுரிய இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (தொழில்நெறி வழிகாட்டல்), நான்கு துணை இயக்குநர்கள், ஒரு முதன்மைக் கணக்கு அலுவலர், மூன்று உதவி இயக்குநர்கள் மற்றும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் தலைமை அலுவலகத்தில் பணியாற்றுகின்றனர்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மண்டலங்களில் மண்டல இணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டின்கீழ் சார்நிலை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

துறையின் செயல்பாடுகள் 48 சார்நிலை அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில், தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், இரண்டு தொழில்சார் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் (சென்னை மற்றும் மதுரை), மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், சென்னை, ஐந்து மாவட்டங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் (கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர்), பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம், உதகமண்டலம் மற்றும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம், சென்னை ஆகியவை அடங்கும். வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு பின்வருமாறு:

[2023 மார்ச் 29



3.1. துறையின் செயல்பாடுகள்

1. வேலை நாடுநர்களைப் பதிவு செய்தல் மற்றும் பதிவினைப் புதுப்பித்தல்.
2. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கு அறிவிப்பு செய்யப்படும் பொதுத் துறை பணிகாலியிடங்களுக்கு வேலை நாடுநர்களைப் பரிந்துரை செய்தல்.
3. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.
4. தன்னார்வ பயிலும் வட்டத்தின் வாயிலாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்காகப் போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
5. அனைத்து வகை போட்டித் தேர்வுகளுக்குமான மென்பாடக் குறிப்புகளைத் துறையின் மெய்நிகர் கற்றல் இணையம் வாயிலாக வழங்குதல்.
6. தனியார் துறையில் பணியமர்த்தம் செய்வதற்காகப் பெரிய மற்றும் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்.

2023 மார்ச் 29]

7. தனியார் துறை வேலை இணையம் வாயிலாகத் தனியார் துறை வேலைவாய்ப்பு வழங்குதல்.
8. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.
9. வேலை நிலவர தகவல் தொடர்பிலான புள்ளிவிவரங்களைச் சேகரித்து தொகுத்தல்.

3.2. வேலைவாய்ப்பு இணையதளம் (www.tnvelaivaaippu.gov.in)

வேலைவாய்ப்புப் பணிகளான வேலைவாய்ப்பு பதிவுகள் மேற்கொள்ளுதல், புதுப்பித்தல், அறிவிக்கப்பட்ட பணிகாலியிடங்களுக்குத் தகுதியான மனுதாரர்களைப் பரிந்துரை செய்தல் உள்ளிட்ட அனைத்து வேலைவாய்ப்பு செயல்பாடுகளும், இணைய வழியில் மேற்கொள்ளும்பொருட்டு 15.9.2010 அன்று அப்போதைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் வேலைவாய்ப்பு இணையதளம் துவக்கி வைக்கப்பட்டது.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து, துறையின் உயிர்பதிவேட்டில் 67,55,466 பதிவுதாரர்கள் உள்ளனர். இவர்களில் 31,47,605 பேர் ஆண்கள், 36,07,589 பேர் பெண்கள் மற்றும் 272 பேர் மாற்றுப் பாலினத்தவர்கள் ஆவர்.

உயிர்ப் பதிவேடு விவரங்கள்:
(28.2.2023 அன்றுள்ளவாறு)

விவரங்கள்	**பதிவுதாரர்கள்**
மொத்த பதிவுதாரர்கள்	67,55,466
18 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்கள்	18,74,522
18 முதல் 30 வயதுக்குட்பட்ட உயர் கல்வி பயிலும் மாணவர்கள்	28,09,940
30 முதல் 45 வயதிற்குட்பட்ட வேலை நாடுநர்கள்	18,34,217
45 முதல் 60 வயதிற்குட்பட்ட பதிவுதாரர்கள்	2,30,976
60 வயதிற்கு மேற்பட்ட பதிவுதாரர்கள்	5,811

3.3. தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள்

உயர் கல்வி, உயர் கல்விக்கான நுழைவுத் தேர்வுகள், பொதுத் துறை வேலைவாய்ப்பு, தனியார் வேலைவாய்ப்பு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு, திறன் பயிற்சி வாயிலாகத் திறன் மேம்பாட்டுத் தொழில்முனைவோர்க்கான திட்டங்கள், உதவித் தொகை, போட்டித் தேர்வுகள் வாயிலாக பொதுத் துறை வேலைவாய்ப்பு போன்றவை குறித்து தனியர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் தொழில்நெறி வழிகாட்டல் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளும் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படுகின்றன.

3.4. தன்னார்வ பயிலும் வட்டங்கள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம்,பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாகத் திறமையான பாட வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. மாதிரி தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. போட்டித் தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள், தினசரி, வாராந்திர மற்றும் மாதாந்திர இதழ்கள் மற்றும் முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் ஆகியவை தன்னார்வ பயிலும் வட்டங்களில் பராமரிக்கப்படுகின்றன. இந்திய அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களால் அறிவிக்கப்படும் தேர்வுகளுக்குச் சிறப்புக் கவனம் அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை (கண்ணகி நகர் மற்றும் மாநிலக் கல்லூரி-சேப்பாக்கம்), திண்டுக்கல் (ஒட்டன்சத்திரம்), திருப்பூர் (உடுமலைப்பேட்டை), ஈரோடு (தாளவாடி மற்றும் பர்கூர்) மற்றும் திருநெல்வேலி (முண்டந்துறை) ஆகிய இடங்களில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்காகத் தேவை அடிப்படையிலான சிறப்புப் பயிற்சி மையங்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்காக செயல்பட்டு வருகின்றன.

2023 மார்ச் 29]

தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக 2022–2023 ஆம் நிதியாண்டில் 446 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், 18,218 தேர்வர்கள் கலந்து கொண்டனர். அதில் 2,216 தேர்வர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பல்வேறு நிலைகளில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாகத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதற்கென அரசால் ஆண்டுதோறும் ரூ.4.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3.5. கல்லூரிகளில் இலவசப் பயிற்சி வகுப்புகள்

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களின் அரசுப் பணி கனவை நனவாக்கும் வகையில் இந்திய அரசு மற்றும் மாநில அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்காக அரசால் ஆண்டுதோறும் ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் கல்லூரிகளில் நடத்தப்பட்ட 90 இலவசப் பயிற்சி வகுப்புகளில் 5,294 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

3.6. மெய்நிகர் கற்றல் இணையதளம்

(https://tamilnaducareerservices.tn.gov.in)

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் நடத்தப்படும் நேரடி பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள இயலாத போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்காக மெய்நிகர் கற்றல் இணையதளம் 22.2.2019 அன்று துவக்கப்பட்டது. போட்டித் தேர்வுகளுக்கு அனைத்து பாடக் குறிப்புகளையும் இலவசமாக இணையக் கற்றல் வாயிலாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான காணொளி காட்சிப் பதிவுகள், ஒலிப்பதிவுகள் மென்பாடக் குறிப்புகள், அலகுத் தேர்வுகள், மாதிரித் தேர்வுகள் மற்றும் பாடத் திட்டம் ஆகியவை இவ்விணையதளத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. பதிவுதாரர்கள் இவ்வனைத்து பாடக் குறிப்புகளையும் இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். போட்டித் தேர்வுகளுக்கான

பாடத் திட்டம், எதிர்வரும் தேர்வுகளுக்கான வருடாந்திர கால அட்டவணை, தேர்வு முகமைகளால் அறிவிப்பு செய்யப்படும் பணிகாலியிடங்கள் இவ்விணையதளத்தில் தொடர்ச்சியாக பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இதுவரை, இவ்விணையதளத்தில் 2,25,118 தேர்வர்கள் பதிவு செய்துள்ளனர். இதுவரை 347 மென் பாடக் குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்விணையதளத்தை இதுவரை 59,59,318 நபர்கள் பார்வையிட்டுள்ளனர்.

3.7. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள்

மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பு உதவிகள் வழங்குவதற்காக சென்னையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இயங்கி வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கான இந்த சேவையினைப் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் வகையில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. போட்டித் தேர்வுகளுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள், தனியார் துறை வேலைவாய்ப்பு பெற உதவுதல், திறன் பயிற்சிகள், உதவித் தொகைகள், சுயவேலைவாய்ப்பிற்கான திட்டங்கள் மற்றும் பல்வேறு வேலைவாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் ஆகிய பணிகள் இப்பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகின்றன. வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை வழங்குதல் இப்பிரிவுகள் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

3.8. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்

கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல், வேலைவாய்ப்பிற்கான திறனை உயர்த்தும் வகையில் பயிற்சிகள் வழங்கி சுய வேலைவாய்ப்புக்கு ஊக்குவித்தல் ஆகிய செயல்பாடுகள் வாயிலாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப்

2023 மார்ச் 29]

பதிவுதாரர்களது தேவைகளை இம்மையங்கள் நிறைவு செய்கின்றன. இம்மையங்களின் செயல்பாட்டிற்காக அரசு ஆண்டுதோறும் ரூ.20.46 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

3.9. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

உதகமண்டலத்தில் செயல்பட்டு வரும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையமானது, பழங்குடியினரிடையே பல்வேறு தொழில்/உயர் கல்வி வாய்ப்புகள், பொதுத் துறை வேலைவாய்ப்பு, தனியார் துறை வேலைவாய்ப்பு, குறுகிய மற்றும் நீண்ட கால திறன் பயிற்சி, பொதுத் துறை வேலைவாய்ப்புக்கான பல்வேறு போட்டித் தேர்வுகள் மற்றும் சுயவேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயங்கி வருகிறது.

3.10. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம்

மாநிலத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நிதி உதவி அளிக்கும் வகையில் 25.8.2006 அன்று வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து, உயிர்ப் பதிவேட்டில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் காத்திருக்கும் வேலை நாடுநர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற, பெற்றோரது ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.72,000/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வயது வரம்பு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு 45 ஆகவும் இதர பிரிவினருக்கு 40 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.200/-, 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/-, மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/-, பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.600/- என்ற வீதத்தில் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் (டிசம்பர் 2022 வரை) 55,417 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.23.68 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 29

3.11. அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம்

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையானது மாற்றுத் திறனாளி வேலைநாடுநர்களுக்கும் வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையானது வேலைவாய்ப்பக உயிர்ப் பதிவேட்டில் ஓராண்டிற்கு மேல் காத்திருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு, வயதுவரம்பு மற்றும் பெற்றோர் வருமானம் போன்ற நிபந்தனைகள் ஏதுமின்றி வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையானது பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி வரை கல்வித் தகுதி உடையவர்களுக்கு ரூ.600/-, மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.750/-, பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.1,000/- என்ற வீதத்தில் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் (டிசம்பர் 2022 வரை) 13,886 பயனாளிகளுக்கு ரூ.9.98 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் வழங்கப்படுகிறது.

3.12. மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

தேசிய வேலைவாய்ப்பு சேவையானது 2014 ஆம் ஆண்டு தேசிய தொழில்நெறி சேவையாக மாற்றம் அடைந்ததையடுத்து, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றப்பட்டன. ஒன்றிய அரசின் மிஷன் மோடு திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாட்டில், வேலூர், கோயம்புத்தூர், சேலம், திருவள்ளூர், உதகமண்டலம், விழுப்புரம், விருதுநகர், மதுரை, இராமநாதபுரம், காஞ்சிபுரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, நாகர்கோவில் மற்றும் ஈரோடு ஆகிய 15 மாவட்டங்களில் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் இயங்கி வருகின்றன. அதன் பின்னர் 2022-2023 ஆம் நிதியாண்டில் அரியலூர், கடலூர், கரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலும் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. வேலை நாடுநர்கள் மற்றும் மாணவர்களுக்கு உளவியல் பகுப்பாய்வு சோதனைகள் செய்து அதன் முடிவுகளின் அடிப்படையில் அவர்களது திறன்கள், விருப்பங்கள், நடத்தைகளுக்கு ஏற்ப தொழில்நெறி மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனைகள் வழங்குவது இம்மையங்களின் முக்கிய நோக்கமாகும். தனியார் துறையில் வேலையளிப்போர்களை ஒருங்கிணைத்து, தனியார்

2023 மார்ச் 29]

துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, பணி நியமனங்களை வழங்குவதும், மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் பணிகளின் ஒரு பகுதியாக உள்ளது.

3.13. தனியார் துறை பணியமர்த்தல்

தனியார் துறை நிறுவனங்களின் மனிதவளத் தேவையினைப் பூர்த்தி செய்வதுடன், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்மூலம், வேலைவாய்ப்பு முகாம்கள் மாதம் ஒருமுறை சிறிய அளவிலும், வருடத்திற்கு இருமுறை பெரிய அளவிலும் நடத்தப்படுகின்றன. இதன் வாயிலாக அதிக எண்ணிக்கையில் தனியார் துறையில் வேலை நாடுநர்களுக்குப் பணி நியமனங்கள் பெற்று வழங்கப்படுகிறது. இம்முகாம்கள் வேலையளிப்பவர் தகுதியான மனிதவளத்தைத் தேர்வு செய்யவும், வேலை நாடுநர்கள் பணி வாய்ப்புகளைப் பெறுவதற்கும் உதவி புரிகின்றன. இப்பணி நியமனங்களில் மாதம் ரூ.10,000/– மற்றும் அதற்கு மேலும் கண்ணியமான ஊதியம் பெறுவது உறுதி செய்யப்படுகிறது. சிலர் ரூ.50,000/–க்கு மேற்பட்ட ஊதியத்திலும் பணி நியமனம் பெற்றுள்ளனர். அரசு இதற்கென ஆண்டுதோறும் ரூ.3.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்கிறது.

ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரம்

வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	:	*731*
வேலையளிப்பவர்களின் எண்ணிக்கை	:	*12,203*
வேலை நாடுநர்களின் எண்ணிக்கை	:	*2,93,578*
பணி நியமனம் பெற்றவர்களின் எண்ணிக்கை	:	*63,206*

3.14. தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் (www.tnprivatejobs.tn.gov.in)

தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையமானது, இணைய வழியாக தனியார் துறை வேலைவாய்ப்புகளை வேலை நாடுநர்களுக்கு பெற்று வழங்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் உள்ளிட்ட

[2023 மார்ச் 29

அனைத்து தனியார் துறை வேலையளிப்போரும் இவ்விணையதளத்தில் இலவசமாகப் பதிவு செய்துகொள்ளலாம். வேலையளிப்பவர்கள் தங்களது தேவைக்கேற்ப வேலை நாடுநர்களைத் தேர்வு செய்துகொள்ளவும், வேலை நாடுநர்கள் தங்களது தகுதி மற்றும் எதிர்பார்க்கும் ஊதியம் ஆகியவற்றிற்கு ஏற்ப வேலையளிப்பவரைத் தேர்வு செய்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்விணையதளத்தில் தனியார் துறை மனிதவளத் தேர்வு முகமைகள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களும் பதிவு செய்துகொள்ளலாம். இதுவரை 12 மனிதவளத் தேர்வு நிறுவனங்கள் இவ்விணையதளத்தில் பதிவுசெய்துள்ளன.

தனியார் துறை வேலை இணையம் - செயலாக்கம் (28.2.2023 அன்றுள்ளபடி)

பதிவு செய்துள்ள வேலை நாடுநர்கள்	2,46,822
பதிவு செய்துள்ள வேலையளிப்பவர்கள்	5,568
அறிவிக்கப்பட்ட பணிகாலியிடங்கள்	1,17,922
வழங்கப்பட்ட பணி நியமனங்கள்	36,052

3.15. கல்வித் தொலைக்காட்சி வாயிலாகப் போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள்

ஒன்றிய/மாநில அரசுகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று அரசுப் பணி பெற விரும்பும் வேலை நாடுநர்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்தபடியே அத்தேர்வுகளுக்குத் தயார் செய்ய உதவும் வகையில், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.3.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம், இரயில்வே பணிகள் தேர்வு வாரியம் போன்றவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள், அனுபவம் வாய்ந்த சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. சிறந்த பேச்சாளர்களைக் கொண்டு ஊக்கமூட்டும் உரைகள் நிகழ்த்துதல்,

2023 மார்ச் 29]

குழு கலந்துரையாடல்கள், நடப்பு நிகழ்வுகள், முந்தைய ஆண்டு வினாத்தாள்களை ஆராய்தல் மற்றும் ஆளுமைத்திறனை மேம்படுத்துதல் குறித்த சிறப்பு நிகழ்ச்சிகளும் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன.

இப்பயிற்சி வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை ஒளிபரப்பப்படுவதுடன், மாலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை மறு ஒளிபரப்பும் செய்யப்படுகிறது. இதுவரை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்காக 504 மணி நேர வகுப்புகள் ஒளிப்பரப்பப்பட்டுள்ளன.

இந்த காணொளிப் பதிவுகள் இத்துறையின் YouTube சேனலிலும் ("TN Career Services Employment") பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சேனலுக்கு இதுவரை 1,21,000 சந்தாதாரர்கள் உள்ளனர்.

பயிற்சிப் பிரிவு

ஒரு மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குத் திறன் பயிற்சி இன்றியமையாததாகும். வேலை பெறும் திறனை அதிகரிப்பதற்கும், உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் இது ஒரு முக்கிய உந்து சக்தியாகும். தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறன்கள் சமீபக் காலங்களில் வேகமாக மாறிவருகிறது. அதற்கேற்பத் தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் இளைஞர்களுக்கு நவீன தொழில் திறன்களை வழங்க வேண்டியுள்ளது.

தமிழ்நாடு அரசு, தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாகப் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத, ஆறு மாத, ஒரு வருட மற்றும் இரண்டு வருட நீண்டகால தொழிற்பிரிவுகளில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் விரிவான பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் திறனை மேம்படுத்தவும், புதிய உருவாக்கங்களை ஊக்கப்படுத்திடவும் அதிவேக உற்பத்திக்குத் தேவையான மேம்பட்ட திறன்களை

[2023 மார்ச் 29

அதிக அளவில் கிடைத்திடச் செய்யவும் தமிழ்நாடு அரசு மாநிலத்திலேயே முதன்முறையாக டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் தலைமையிலான தொழில் குழுமத்துடன் இணைந்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை உருவாக்கி வருகிறது.

3.16. நிர்வாக அமைப்பு

இத்துறையின் தலைமை அலுவலகத்தில் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலரான வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் தலைமையில் மூன்று கூடுதல் இயக்குநர்களும், ஓர் இணை இயக்குநரும் செயல்படுகின்றனர்.

மண்டல அளவில் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி, தொழிற் பழகுநர் பயிற்சி, தொழிற்பள்ளிகள், ஒன்றிய மற்றும் மாநில அரசால் அறிமுகப்படுத்தப்படும் பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்காணிப்பதற்கு 7 மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகங்கள் முறையே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் முதல்வர்களாலும், மாவட்ட அளவில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் உதவி இயக்குநர்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

3.17. கைவினைஞர் பயிற்சித் திட்டம் (CTS)

கைவினைஞர் பயிற்சித் திட்டம், ஒரு வருட மற்றும் இரண்டு வருட நீண்டகால பயிற்சிகளை உள்ளடக்கியதாகும். தற்போதைய மற்றும் எதிர்காலத் தொழில் துறையின் பயிற்சி பெற்ற மனிதவள தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் இளைஞர்கள் முறையான துறையில் வேலைவாய்ப்பைப் பெற்றிடவும், முறைசாரா துறையில் உற்பத்தியை அதிகரிக்கவும் நீண்டகாலத் திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் நீண்டகாலத் திறன் பயிற்சி என்பது செய்முறைப் பயிற்சி, கருத்தியல் தொடர்பான பணிமனைக் கணக்கு மற்றும் அறிவியல், பொறியியல் வரைபடம் மற்றும் வேலைவாய்ப்புத் திறன்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

நீண்டகாலத் திறன் பயிற்சி தேசிய திறன் தகுதிக் கட்டமைப்பில் (NSQF) 4 மற்றும் 5 ஆம் நிலைகளில் உள்ளது.

2023 மார்ச் 29]

3.17.1. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

தமிழ்நாட்டில் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின்மூலம் நீண்டகாலத் திறன் பயிற்சி ஃபிட்டர், எலக்ட்ரீசியன், வெல்டர், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள், டர்னர், மெஷினிஸ்ட் போன்ற 55 பொறியியல் தொழிற்பிரிவுகள் மற்றும் கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் அன்டு புரோகிராமிங் அசிஸ்டெண்ட், டிஜிட்டல் போட்டோகிராபி, சூயிங் டெக்னாலஜி, ஃபுட் புரொடக்சன் (ஜெனரல்), ஃபேஷன் டிசைனிங், டெஸ்க்டாப் பப்ளிசிங் ஆபரேட்டர் போன்ற 24 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளிலும் வழங்கப்படுகிறது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், பிரபலமான தொழிற்பிரிவுகளான ஃபிட்டர், வெல்டர், எலக்ட்ரீசியன் போன்ற தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்குவதோடு மட்டுமல்லாமல், இன்பிளான்ட் லாஜிஸ்டிக்ஸ், ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டெண்ட், டெக்னீசியன் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், ஆட்டோபாடி ரிப்பேர், ஆட்டோபாடிபெயிண்டிங், ஆபரேட்டர் அட்வான்ஸ்டு மெஷின் டூல், ஸ்மார்ட் போன் டெக்னீசியன், டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக்ஸ், ஃபயர் டெக்னாலஜி அன்டு இண்டஸ்ட்ரியல் சேஃப்டி மேனேஜ்மென்ட் போன்ற நவீன கால தொழிற்பிரிவுகளிலும் பயிற்சி வழங்குகிறது. பயிற்சிக் காலம் 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை ஆகும். 14 முதல் 40 வயதுக்குட்பட்ட மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்படுகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் ஜூலை/ஆகஸ்ட் மாதங்களில் சேர்க்கை தொடங்கும். நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றி சேர்க்கை, தகுதி அடிப்படையில் நடத்தப்படுகிறது. மாநில அளவில் இணையவழிக் கலந்தாய்வு URL: www.skilltraining.tn.gov.in *இணையதளம்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மாணவர்கள் தங்கள் விருப்பப்படி அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினைத் தேர்வு செய்யலாம்.*

2022 ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், இதுவரை இல்லாத அளவிற்கு 25,707 மாணவர்களைச் சேர்க்கை செய்து 92.68% சேர்க்கையைப் பதிவு செய்துள்ளது.

3.17.2. பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

நீடித்த வளர்ச்சி இலக்கு 4.5-ல் 2030 ஆம் ஆண்டுக்குள், கல்வியில் பாலின வேறுபாடுகளைக் களைந்து, மாற்றுத்

திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் உட்பட, பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு அனைத்து நிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான சம அணுகலை உறுதி செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வகையில் இந்த இலக்கின் நோக்கம் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்குத் திறன்பயிற்சி அளித்து அதன்மூலம் பயன் பெறத்தக்க வேலைவாய்ப்பைப் பெறவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றவும், தரமான உயர் கல்விக்கான உலகளாவிய அணுகலை அடையவும் வழிவகை செய்து நிறைவேற்றப்படுகிறது.

பட்டியலின மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

மாநிலத்தில் உள்ள பட்டியலின மாணவர்களுக்காகப் பிரத்யேகமாக இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டில், இந்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 272 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 100% சேர்க்கை செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	மாவட்டம்	அரசு தொழிற்பயிற்சி நிலையம்	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்	சேர்க்கப்பட்ட மாணவர்கள்
1	கடலூர்	சிதம்பரம்	148	148
2	திருவள்ளூர்	வடகரை	124	124
மொத்தம்			**272**	**272**

பட்டியல் இனத்தவருக்கென 18% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் இந்த ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 7,860 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 30.6% பட்டியலின மாணவர்கள் சேர்ந்துள்ளது மாநிலத்தின் சமூக உட்சேர்க்கையை மேலும் வலுப்படுத்துகிறது.

பட்டியல் பழங்குடியின மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

மாநிலத்தில் பழங்குடியின மாணவர்களுக்காகப் பிரத்யேகமாக ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டில், இந்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 904 மாணவர்கள் சேர்ந்துள்ளார்கள்.

2023 மார்ச் 29]

வ. எண்	மாவட்டம்	அரசு தொழிற்பயிற்சி நிலையம்	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்	சேர்க்கப்பட்ட மாணவர்கள்
1	கள்ளக்குறிச்சி	சங்கராபுரம்	188	188
2	கோயம்புத்தூர்	ஆனைக்கட்டி	124	124
3	சேலம்	கருமந்துறை	152	133
4	திருவண்ணாமலை	ஜமுனாமரத்தூர்	152	139
5	நாமக்கல்	கொல்லிமலை	168	168
6	நீலகிரி	கூடலூர்	152	152
மொத்தம்			**936**	**904**

3.17.3. மாற்றுத் திறனாளி மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஃபிட்டர் தொழிற்பிரிவில் காது கேளாத மற்றும் வாய் பேச முடியாத மாற்றுத் திறனாளி இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில், 33 மாணவர்கள் இந்த 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

3.17.4. மாணவிகளை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

மகளிர் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில், இத்துறை 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைப் பிரத்யேகமாக மகளிருக்கென நடத்தி வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	மாவட்டம்	அரசு தொழிற்பயிற்சி நிலையம்	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்	சேர்க்கப்பட்ட மாணவர்கள்
1	சென்னை	கிண்டி	380	292
2	சென்னை	அம்பத்தூர்	184	150
3	தேனி	ஆண்டிப்பட்டி	204	204
4	திண்டுக்கல்	திண்டுக்கல்	288	288
5	மதுரை	மதுரை	232	232
6	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	348	289

வ. எண்	மாவட்டம்	அரசு தொழிற்பயிற்சி நிலையம்	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்	சேர்க்கப்பட்ட மாணவர்கள்
7	சேலம்	சேலம்	284	247
8	கன்னியாகுமரி	நாகர்கோயில்	228	228
9	கடலூர்	கடலூர்	364	323
10	திருச்சிராப்பள்ளி	புள்ளம்பாடி	316	245
மொத்தம்			2,828	2,498

3.17.5. சிறைவாசிகளுக்குத் திறன் பயிற்சி

சிறையில் உள்ள சிறைவாசிகள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளும் வண்ணம் திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் 5 தொழிற் பிரிவுகளில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில், 168 சிறைவாசிகள் திறன் பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

3.18. மாணவர்களுக்கான நலத் திட்டங்கள்

மாநிலத்தில் உள்ள இளைஞர்கள் திறன் பயிற்சி பெறுவதை ஊக்குவிப்பதற்காக அரசு தொழிற்பயிற்சி நிலைய மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்குப் பின்வரும் நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- வருடாந்திர கல்விக் கட்டணம் தள்ளுபடி.
- பேருந்து பயணச் சலுகை.
- 2 இணைச் சீருடை மற்றும் 1 இணை காலணிகள்.
- மாதம் ரூ.750/- உதவித் தொகை.
- பாடப் புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்.
- மிதிவண்டி.
- பயிற்சிக்கான மூலப் பொருட்கள் மற்றும் கச்சாப் பொருட்கள்.

3.19. அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாநிலத்தில் 10 அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

2023 மார்ச் 29]

இதில் பெரும்பாலான தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறுபான்மையினத்தவருக்காக நடத்தப்படுகிறது. பின்தங்கிய சமூகத்திலிருந்து வரும் மாணவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு திறன்பயிற்சி அளிப்பதற்காக இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அரசின் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டில் அரசு உதவிபெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் 766 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 2022-2023 ஆம் நிதியாண்டில் இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.1.65 கோடி பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

3.20. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

திறன் பெற்ற மனிதவளத் தேவை அதிகரித்து வருவதைப் பூர்த்தி செய்ய, தமிழ்நாடு அரசு திறன் பெற்ற மனிதவளத்தை உருவாக்குவதில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் தீவிர பங்களிப்பினை ஊக்கப்படுத்துகிறது. தற்போது மாநிலம் முழுவதும் தேசிய தொழிற்பயிற்சிக் குழும அங்கீகாரத்துடன்கூடிய 326 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒவ்வோர் ஆண்டும் 30,276 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டில், 13,653 மாணவர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

3.21. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மானியம்

மாநிலத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், அதிக திறன் பெற்ற மனிதவளத்தை உருவாக்குவதை ஊக்கப்படுத்திட 50% அரசு ஒதுக்கீட்டு இடங்களை அரசுக்கு ஒப்புவித்து இணையதளச் சேர்க்கைமூலம் பூர்த்தி செய்திடும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு, மாநில அரசு பயிற்சிக் கட்டணத்தைத் திரும்ப வழங்குகிறது. கிராமப்புறங்களில், பயிற்சி பெறும் ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ.10,000/-மும், நகர்ப்புறங்களில் ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு, ரூ.12,000/-மும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் திரும்ப வழங்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் 7,430 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இதுவரை ரூ.5.00 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

3.22. தேசிய அளவிலான தொழிற்தேர்வு மற்றும் சான்றிதழ்

பயிற்சிக் காலத்தின் முடிவில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில்

உள்ள மாணவர்களுக்கு தேசிய அளவிலான பொது தொழிற்தேர்வு தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் நடத்தப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டு முதல் புதுடில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் நியமிக்கப்பட்ட நிறுவனம்மூலம் அனைத்து தொழிற்பிரிவுகளுக்கும் கணினி அடிப்படையிலான தொழிற்தேர்வு நடத்தப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்பயிற்சி குழும முறையில் 23,617 மாணவர்கள் தொழிற்தேர்வில் கலந்து கொண்டதில் 20,489 (87%) மாணவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தின்மூலம் தேசிய தொழிற் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மாநில தொழிற்பயிற்சிக் குழும முறையில் 1,509 மாணவர்கள் தொழிற்தேர்வில் கலந்து கொண்டதில் 1,401 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இத்துறையால் மாநில தொழிற்பயிற்சிக் குழுமச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி வழங்குநர்களால் குறுகிய கால பயிற்சி வழங்கப்படுகிறது, இப்பயிற்சியாளர்களும் மாநிலத் தொழிற்பயிற்சி குழுமத்தால் (SCVT) மதிப்பீடு செய்யப்படுகின்றனர். 2022 ஆம் ஆண்டில், 25,114 இளைஞர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, மாநில தொழிற்பயிற்சி குழுமச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஒரு பயிற்சியாளருக்கு ரூ.1,000/- மதிப்பீட்டுக் கட்டணமாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்மூலம் ரூ.2.51 கோடி வருவாய் ஈட்டப்பட்டு, அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

3.23. வளாகப் பணியமர்வு நிலவரம்

பணியமர்வு என்பது தொழிற்பயிற்சி நிலையங்களின் ஒரு முக்கியமான பணியாகும். அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத் தர அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பணியமர்த்தும் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் ஆதரவுடன் வளாக நேர்காணல் நடத்தப்பட்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டில், தேர்ச்சி பெற்ற மாணவர்களில் 76% மாணவர்களுக்குப் பல்வேறு தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும் பணியமர்வு வழங்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29]

3.24. பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு (PPP) முறைமூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்

இத்திட்டம் 2007 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.80.00 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வோர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும் நம்பகமான தொழில் துறை பங்குதாரரின் தலைமையில் ஒரு நிறுவன மேலாண்மைக் குழு (IMC) அமைக்கப்பட்டு, இக்குழு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வட்டியில்லாக் கடன் தொகையாக ரூ.2.50 கோடி ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, ஒவ்வொரு நிலைய மேலாண்மைக் குழுவும் நிலையத்தின் வளர்ச்சிக்கென ஒரு நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை தயாரித்துள்ளது. இந்த நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில், ஒன்றிய அரசு நிலைய மேலாண்மைக் குழு சங்கத்திற்கு நேரடியாக ரூ.2.50 கோடியை வட்டியில்லாக் கடன் தொகையாக வழங்கியுள்ளது. அனுமதிக்கப்பட்ட கடன் தொகையில், ரூ.50 இலட்சம் நிரந்தர வைப்புத் தொகையாகக் கருதப்பட்டு, நிலைய மேலாண்மைக் குழு சங்கத்தால் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைக்கப்பட்டுள்ளது.

நிலைய மேலாண்மைக் குழு சங்கத்தால் பெறப்பட்ட கடனை வழங்கப்பட்ட நாளிலிருந்து 11-வது வருடம் முதல் 20 வருடாந்திர சம தவணைகளாக ஒன்றிய அரசுக்குத் திரும்ப செலுத்த வேண்டும். நிலைய மேலாண்மைக் குழு சங்கத்திற்கு கடன் விடுவிக்கப்பட்ட ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் கடனைத் திருப்பி செலுத்த கால அவகாசம் உள்ளது. கடன் தொகையின் முதல் தவணை ரூ.400 இலட்சம் (ஒவ்வொன்றும் ரூ.12.50 இலட்சம்) அனைத்து நிலைய மேலாண்மைக்குழு சங்கங்கள்மூலம் ஒன்றிய அரசுக்குத் திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

3.25. தொழில் மதிப்பை மேம்படுத்துவதற்கான திறன்களை வலுப்படுத்துதல் (STRIVE)

இந்தத் திட்டம் 2017 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, உலக வங்கி நிதி உதவியுடன் 100% ஒன்றிய அரசின் நிதியால் செயல்படுத்தப்படுகிறது. இது சிறு மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், வணிக சங்கங்கள், தொழில் கூட்டமைப்புகள் ஆகியவற்றில் தொழிற்பழகுநர் பயிற்சி வழங்கப்படுவதுடன், திட்ட தொழில் பயிற்சி நிலையங்களின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கிறது. இத்திட்டம் கீழே விளக்கப்பட்டுள்ளபடி நான்கு கோட்பாடுகளின்மூலம் செயல்படுத்தப்படுகிறது:

கோட்பாடு 1: தொழிற்பயிற்சி நிலையங்களின் மேம்பட்ட செயல்திறன்

அம்பத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கடலூர், மதுரை, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர், நாமக்கல், சேலம், கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய 13 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், டான் போஸ்கோ தனியார் தொழிற்பயிற்சி நிலையம், லால்குடி, பிஏசிஆர் தனியார் தொழிற்பயிற்சி நிலையம், அரியலூர், ராம்கோ தனியார் தொழிற்பயிற்சி நிலையம், விருதுநகர் ஆகிய மூன்று தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இத்திட்டத்தின்கீழ் ரூ.29.01 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அதில் ரூ.13.98 கோடி ஒன்றிய அரசால் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில் திருவண்ணாமலை, கடலூர் (மகளிர்), ஓசூர், உளுந்தூர்பேட்டை, கோயம்புத்தூர் (மகளிர்), மேட்டூர் அணை, ஆண்டிபட்டி (மகளிர்), நாகப்பட்டினம், மதுரை (மகளிர்), புதுக்கோட்டை, திண்டுக்கல் (மகளிர்), கிண்டி, சிதம்பரம், அரியலூர், தஞ்சாவூர் மற்றும் குன்னூர் ஆகிய 16 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இந்தத் திட்டத்தின் 3 ஆம் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கோட்பாடு 2: தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சிக்கு உதவிடும் வகையில் மாநில அரசின் திறன்களை அதிகப்படுத்துதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

இத்திட்டம் மாநில அளவில் தொழிற்பயிற்சி நிலையங்களின் ஒட்டுமொத்த ஒழுங்குமுறை மற்றும் செயல்பாட்டு சூழலை மேம்படுத்தவும், தொழில் கூட்டமைப்புகளை உருவாக்கிடவும் மாநில அரசுக்கு உதவுகிறது.

1. *செயல்திறன் அடிப்படையிலான நிதியுதவிமூலம் திறன் சுற்றுச்சூழல் அமைப்பிற்குள் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த மாநிலங்களை ஊக்குவிக்கிறது.*

2. *மாநில அளவில் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதன்மூலம் இந்தியாவில் திறன் பயிற்சியின் செயல்திறனை மேம்படுத்துகிறது.*

இந்தத் திட்ட நிதி ரூ.10.20 கோடியில், ஒன்றிய அரசு செயல்திறன் அடிப்படையிலான நிதி உதவி ஒப்பந்தத்தின்படி, 30% முன் மானியமாக ரூ.3.06 கோடியினை வழங்கியுள்ளது.

கோட்பாடு 3: மேம்படுத்தப்பட்ட கற்பித்தல் மற்றும் கற்றல் திறன்கள்

புதுடெல்லியில் உள்ள தலைமைப் பயிற்சி இயக்குநரகத்தால் தொழிற்பயிற்சி நிலையங்களில் நிர்வாக சீர்திருத்தங்களை அமல்படுத்த மேற்கொள்ளப்படும் செயல்கள் இக்கோட்பாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.

கோட்பாடு 4: மேம்படுத்தப்பட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்ட தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்

தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்புத் திட்டமானது ஒரு கூட்டமைப்பு முறையில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன கூட்டமைப்புகளில் தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் அமைப்பை உருவாக்கும் ஒரு புதிய முயற்சியாகும்.

இத்திட்டத்தின்படி தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பினை செயல்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு தொழில் கூட்டமைப்பிற்கும் ரூ.1.00 கோடி திட்ட மானியமாக வழங்கப்படுகிறது.

தேசிய கூட்டமைப்பு மதிப்பீட்டுக் குழும (NCEC) பரிந்துரையின் அடிப்படையில் அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள்

சங்கம் - (AIEMA), கோயம்புத்தூர் மாவட்ட சிறுதொழில் சங்கம் (CODISSIA), மதுரை நகை உற்பத்தியாளர் கூட்டமைப்பு பிரைவேட் லிமிடெட், மதுரை, இன்ட்கோசெர்வ், நீலகிரி மற்றும் ஈத்தாமொழி காயர் கூட்டமைப்பு ஆகியவை நமது மாநிலத்தில், கோட்பாடு நான்கின்கீழ் தொழில் கூட்டமைப்புகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தைச் செயல்படுத்த, ஒன்றிய அரசு முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன்மூலம் 40% முன்பண மானியமாக, ஒவ்வொரு தொழில் குழுமத்திற்கும் ரூ.40.00 இலட்சத்தை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 3 தொழில் கூட்டமைப்புகளுக்கு ஒன்றிய அரசு இதுவரை ரூ.120.00 இலட்சம் வழங்கியுள்ளது.

தேசிய கூட்டமைப்பு மதிப்பீட்டுக் குழுமம் (NCEC) தமிழ்நாட்டில் பின்வரும் 8 தொழில் கூட்டமைப்புகளை 2022 ஆம் ஆண்டில் கூடுதலாகத் தெரிவு செய்துள்ளது.

வ. எண்	தொழிற்கூட்டமைப்பின் பெயர்
1	திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம்
2	ஓசூர் சிறு மற்றும் குறு தொழிற்சாலைகள் சங்கம் (HOSTIA)
3	மதுரை மாவட்ட குறு மற்றும் சிறு தொழிற்சாலைகள் சங்கம் (MADITSSIA)
4	கோயம்புத்தூர் தொழிற்சாலை உள்கட்டமைப்பு சங்கம் (COINDIA)
5	நாமக்கல் மாவட்ட சிறு தொழிற்சாலைகள் சங்கம்
6	நிஃப்ட்டீ பின்னலாடை வடிவமைப்பு நிலையம்
7	தென்னிந்திய ஆலைகள் சங்கம்
8	இந்திய ஜவுளி தொழில் முனைவோர் கூட்டமைப்பு

இதன் தொடர்ச்சியாக தொழிற்சாலை கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசு ஆகியவற்றிற்கிடையே முத்தரப்பு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு, தொழில்

2023 மார்ச் 29]

கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர் பயிற்சி அமல்படுத்திட ஒவ்வொரு தொழிற்சாலை கூட்டமைப்பிற்கும் ரூபாய் ஒரு கோடி நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படும்.

3.26. மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையம், மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாகத் தரம் உயர்த்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. மொத்த திட்ட மதிப்பீடான ரூ.10.00 கோடியில் 70:30 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே செலவினம் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஏனைய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு முன்மாதிரியாக செயல்படும் வண்ணம் தொழிற்சாலையுடன் இணைந்து செயல்படுவதில் ஒரு தரஅளவை எட்டுவதற்கு நிலைய மேலாண்மைக் குழுமூலம் இந்த நிதி வழங்கப்படுகிறது.

மொத்த திட்ட மதிப்பீடு ரூ.10.00 கோடியில் (ஒன்றிய அரசு பங்கீடு ரூ.7.00 கோடியில் ரூ.3.50 கோடியும், மாநில அரசின் பங்கீட்டில் ரூ.3.00 கோடியில் ரூ.1.50 கோடியும்) ரூ.5.00 கோடி இதுவரை ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் விடுவிக்கப்பட்டுள்ளது. ரூ.2.50 கோடி கட்டடம் கட்டப்படுவதற்கும், புதுப்பிக்கப்படுவதற்கும் செலவிடப்பட்டுள்ளது. இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.2.16 கோடி செலவிடப்பட்டுள்ளது.

3.27. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் (ATS)

3.27.1. தொழிற்பழகுநர் பயிற்சி

தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம், நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில், பகுதி திறன் கொண்ட தொழிலாளர்களுக்கும், முறையான பயிற்சி பெறாதவர்களுக்கும் செய்முறை பயிற்சி அளிப்பதற்காக தொழிற்சாலைகளில் உள்ள வசதிகளைப் பயன்படுத்துவதாகும்.

8-வது/10-வது தேர்ச்சியுடன் குறைந்தபட்சம் 14 வயதுடைய தேசிய தொழிற் சான்றிதழைப் பெற்றுள்ள பகுதித் திறன் பெற்ற தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர் பயிற்சி

பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். தமிழ்நாட்டில் தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் 56 வரையறுக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் செயல்படுத்தப்படுகிறது. பயிற்சி காலம் 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை ஆகும். புதுதில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் பரிந்துரைக்கப்பட்டபடி குறைந்தபட்சம் ரூ.7,000/- தொழிற்பழகுநர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. தற்போது, 622 தொழிற்சாலைகளில் 9,710 தொழிற்பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சி முடிந்தவுடன் தொழிற்பழகுநர்களுக்குத் தேசிய அளவில் தொழில் தேர்வு நடத்தப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையத்தில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. தொழிற்பழகுநர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவுடன், புதுடெல்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் (DGT) தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் (NAC) வழங்கப்படுகிறது.

3.27.2. தேசிய தொழிற்பழகுநர் பயிற்சி ஊக்குவிப்பு திட்டம் (NAPS)

தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையை அதிகரிக்க, 2016 ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிய அரசு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தொழிற்பழகுநர்கள் மற்றும் தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் பின்வருமாறு பயனடைகின்றன:

(i) தொழிற்பழகுநர் பயிற்சி பெறுபவருக்கு ஒரு மாதத்திற்கு அதிகபட்சமாக ரூ.1,500/-க்கு மிகாமல் நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையில் 25%-ஐ ஒன்றிய அரசு தொழில் நிறுவனங்களுக்குப் பங்களிப்பாக வழங்குகிறது.

(ii) அடிப்படைப் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு ரூ.7,500/-க்கு மிகாமல் அதிகபட்சமாக 500 மணி நேரங்கள் / 3 மாதங்களுக்கான பயிற்சிக் கட்டணத்தை ஒன்றிய அரசு வழங்குகிறது.

இத்திட்டத்தில் பட்டதாரி மற்றும் பட்டயப் பயிற்சி பெற்றவர்களைத் தவிர அனைத்து வகையான தொழிற்பழகுநர்களும் இடம்பெறுவர்.

2023 மார்ச் 29]

3.27.3. முறையான பயிற்சி பெறாதவர்களை நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக நியமித்தல்

தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட மற்றும் விருப்பத் தொழிற்பிரிவுகளில் முறையான பயிற்சியின்றி 8, 10, +2 தேர்ச்சி பெற்றவர்களைத் தொழிற்பழகுநர்களாகச் சேர்க்கை செய்வது ஒரு முக்கியச் சீர்திருத்தமாகும். ஒருவர் தொழிற்பழகுநராகச் சேருவதற்கு முக்கிய அளவுகோல் 14 வயதை நிறைவு செய்வதாகும். தொழிற்சாலையில் தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன் அவர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்குநர்களால் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படுகிறது. தொழிற்பழகுநர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவர்களுக்குத் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவர்கள் தொழிற்பழகுநர்களாகச் சேருவதற்கு அதிகபட்ச வயது வரம்பு இல்லை.

3.27.4. மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்புப் பிரிவு (SAMC)

மாநிலத்தில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையைத் திறம்பட கண்காணிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்புப் பிரிவு இயக்குநரின் தலைமையில், ஓர் இணை இயக்குனர், மூன்று ஆலோசகர்கள் மற்றும் ஆறு துணை பணியாளர்களுடன் இயங்குகிறது. மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்புப் பிரிவின் முக்கிய நோக்கம் மாநிலத்தில் தொழில் மதிப்பை மேம்படுத்துவதற்கான திறன்களை வலுப்படுத்தும் திட்டத்தின்கீழ் (STRIVE) தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பைத் திறம்பட செயல்படுத்துவதாகும். இந்த நோக்கத்திற்காக இப்பிரிவு தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பை செயல்படுத்தும் நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதிலும், கண்காணிப்பதிலும் ஈடுபட்டு வருகிறது.

3.28. சுயநிதி தனியார் தொழிற்பள்ளிகள்

தமிழ்நாட்டில் 187 சுயநிதி மற்றும் 21 அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பள்ளிகள் உள்ளூர் தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டில், தொழிற்பள்ளிகளில் 6,485 மாணவர்கள்

சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் எலக்ட்ரிக்கல், மெக்கானிக்கல், ஆட்டோமொபைல், எலக்ட்ரானிக்ஸ், ஹாஸ்பிடாலிட்டி, அப்பேரல், தகவல் தொழில்நுட்பம், ஆபிஸ் ஆட்டோமேஷன் மற்றும் கன்ஸ்ட்ரக்சன் ஆகிய துறைகளில் ஒரு வருடம் முதல் மூன்று ஆண்டுகள் வரை பயிற்சிக் காலத்துடன்கூடிய 57 தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 8 ஆம் மற்றும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகிறார்கள். பள்ளிகளில் தொழில்நுட்ப ஆசிரியர்களாகச் சேருவதற்கான கல்வி தகுதியான தொழில்நுட்ப ஆசிரியர் சான்றிதழ் பயிற்சி 18 தொழிற்பள்ளிகளில் வழங்கப்படுகிறது. தொழிற்பயிற்சிக்கான மாநிலத் தேர்வு வாரியத்தால் (SBEVT) பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு மாநில தொழிற்பயிற்சிக் குழுமத்தால் (SCVT) சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 21 தனியார் தொழிற்பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.2.27 கோடி பராமரிப்பு மானியமாக அரசு உதவி பெறும் தொழிற்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3.29. டாக்டர் இராதாகிருஷ்ணன் சிறந்த பயிற்றுநர் விருது

நீண்டகால திறன் பயிற்சியில் சிறந்த முறையில் செயலாற்றிய 12 சிறந்த பயிற்றுநர்களைக் (முதல்வர்-2, பயிற்சி அலுவலர்-2, உதவிப் பயிற்சி அலுவலர்-4 மற்றும் இளநிலைப் பயிற்சி அலுவலர்-4) கௌரவிக்கவும், ஊக்கப்படுத்திடவும் சிறந்த பயிற்றுநர் விருது ‘டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது’ என்ற பெயரில் வழங்கப்படுகிறது. இந்த விருது ரூ.10,000/- ரொக்கப் பரிசுடன், ஒரு தகுதிச் சான்றிதழை உள்ளடக்கியதாகும்.

3.30. மாநில திறன் பயிற்சி நிலையம்

மாநில பயிற்சிக் கொள்கை, 2022-ல் ஒவ்வொரு துறையும் தங்கள் துறையின் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க முறையான அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய கொள்கையின்படி இத்துறையின் பயிற்றுநர்களுக்குத் தொழில் துறையின் சமீபத்திய தொழில்நுட்பங்களில் அவர்களின் திறன்களை மேம்படுத்தும் வண்ணம் பயிற்சியளிக்க, மாநில திறன் பயிற்சி நிலையம் சென்னையில் நிறுவப்பட்டு வருகிறது. இந்த நிலையம் துறையின்

2023 மார்ச் 29]

தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு புத்தாக்க மற்றும் பணி தொடர்பான பயிற்சி அளிக்கும் ஒரு தொழில்நுட்ப மற்றும் மேலாண்மைப் பயிற்சி நிலையமாகச் செயல்படும். இந்த நிலையம் ஒவ்வொரு தொழில் துறையிலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு பயிற்சிக்கான செய்முறை சார்ந்த கற்பித்தலுக்கு வழிவகுக்கிறது.

இந்த நிலையத்தில் பின்வரும் பயிற்சிகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- *கற்பித்தல் முறைக்கான கருத்தியல் வகுப்புகள்.*
- *தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி.*
- *பணியமர்த்தும் அலுவலர்களுக்குப் பயிற்சி.*
- *அலுவலர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி.*
- *தொழிற்பிரிவு சார்ந்த தொழில்நுட்பத்தில் செய்முறைப் பயிற்சி*
- *இத்துறையின் பணியாளர்களுக்கு நிர்வாகப் பயிற்சி.*

3.31. பயிற்றுநர்களுக்குப் பயிற்சி

மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. பயிற்றுநர்கள் சிறந்த பயிற்றுவிப்பு முறைகள் மற்றும் மாதிரிகளை பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

இதற்கேற்ப பின்வரும் முன்னணி நிறுவனங்கள்/ தொழிற்சாலைகளில் பயிற்றுநர்களுக்குத் தொடர்புடைய பிரிவுகளில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

1. *தேசிய திறன் பயிற்சி நிலையம், சி.ட்டி.ஐ. வளாகம், கிண்டி, சென்னை.*
2. *சீமென்ஸ் திறன் மிகுமையம், குரோம்பேட்டை, சென்னை.*
3. *மாருதி சுசுகி பிரைவேட் லிமிடேட், குருகிராம், புது டெல்லி.*

4. அசோக் லேலண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை.

5. இந்தோ – ஜெர்மன் தொழிற்பயிற்சி மற்றும் கல்வி நிறுவனம், ஜெர்மனி.

6. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை.

- கொஸ்ட் அலையன்ஸ், பெங்களூரு நிறுவனத்தின்மூலம் சென்னையில் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களுக்கும், பணியமர்த்தும் அலுவலர்களுக்கும் தலைமைப் பண்புகள் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.
- டாடா டெக்னாலஜிஸ், புனே நிறுவனத்துடன் இணைந்து 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக உருமாற்றும் முத்திரைப் பதிக்கும் திட்டத்தில் முதன்மைப் பயிற்றுநர்களுக்கு தொழில் 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்கும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. 180 பயிற்றுநர்களை முதன்மை பயிற்றுநர்களாகப் பயிற்சியளிக்கும் இத்திட்டம் ஜூலை 2023-ல் முடிவடையும்.

3.32. குறுகிய காலப் பயிற்சி

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களுக்குக் குறுகிய கால பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தினமும் வீட்டிலிருந்து வருபவர்களுக்குப் போக்குவரத்து கட்டணமும், விடுதியில் தங்கி பயிற்சி பெறுபவர்களுக்கு உணவு மற்றும் இருப்பிடக் கட்டணமும் வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் மூன்று மாதங்கள் ஆகும். வெற்றிகரமாகப் பயிற்சி முடிப்பவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் பயிற்சி மையங்களாக அங்கீகரிக்கப்பட்டு, ஆட்டோமொபைல், புரடக்சன், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ், இன்பர்மேஷன் டெக்னாலஜி மற்றும் கன்ஸ்ட்ரக்சன் போன்ற துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. 470 இளைஞர்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

2023 மார்ச் 29]

3.33. தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி

தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி என்பது மாணவர்களுக்குத் தொழிற்சாலை சூழ்நிலைகளில் செய்முறை பயிற்சி அளிக்கும் ஓர் அவசியமான திட்டமாகும். மாணவர்கள் தொழிற்சாலை பணிகளுக்குத் தயாராவதற்கு இப்பயிற்சி உதவுகிறது. மாணவர்களுக்குத் தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி வழங்குவதற்கும், தொழிற்சாலை சூழல்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், உடனடி வேலைவாய்ப்புக்கான திறன்களை வழங்குவதற்கும் இத்திட்டத்தின்மூலம் தொடர்புடைய தொழிற்சாலைகளில் மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

3.34. இரட்டைப் பயிற்சி முறை

இரட்டைப் பயிற்சி முறை தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் மிகுந்த வேலைவாய்ப்புள்ள பிரிவுகளில் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு தொழிற்சாலைகள் தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வழிவகுக்கிறது.

இத்திட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களில் கருத்தியல் பாடங்களும், இயந்திரங்கள், தளவாடங்கள், கருவிகள் பற்றிய அடிப்படை அறிவு மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து பயிற்சி வழங்கப்படும். தொழில் தொடர்பான செய்முறை பயிற்சி தொழிற்சாலைகளில் வழங்கப்படும். மாணவர்களுக்கு தொழிற்சாலை பயிற்சி வழங்கும் நிறுவனத்துடன் தொழிற்பயிற்சி நிலையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்கிறது. இந்த ஆண்டில் 20 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 5 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும், 45 தொழிற்சாலைகளுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு இரட்டைப் பயிற்சி முறையை செயல்படுத்தி வருகின்றன. 841 மாணவர்கள் இப்பயிற்சித் திட்டத்தின்மூலம் பயிற்சி பெற்று வருகின்றனர்.

3.35. தமிழ் வழியில் பாடப் புத்தகங்கள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறந்த முறையில் பயிற்சியளிக்க, சென்னையில் உள்ள தேசிய தொழிற்பயிற்சி ஊடக தயாரிப்பு நிறுவனம் (NIMI) மூலம் ரூ.6.80 கோடி செலவில் தமிழில் பாடப் புத்தகங்கள் தயாராகி வருகின்றன. இதன்மூலம் கற்றல் முறை மேலும் மேம்படுத்தப்படும்.

3.36. தொழிற்பிரிவுகளை தேவைக்கேற்ப மாற்றியமைத்தல்

தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான திறன் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், மாநில இளைஞர்களை வேலைவாய்ப்பு பெறத்தக்கவர்களாக மாற்றுவதற்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இருந்த பிரபலமற்ற மற்றும் குறைந்த சேர்க்கை உடைய தொழிற்பிரிவுகள் மாற்றப்பட்டு, இன்டீரியர் டிசைன் அன்டு டெக்கோரேஷன், ஸ்மார்ட் போன் டெக்னிஷியன் கம் ஆப் டெஸ்டர், ஐ.ஓ.டி டெக்னீஷியன் (Smart Health Care), டூரிஸ்ட் கைடு, வாட்ச் அன்டு கிளாக் ரிப்பேர் ஆகிய தொழிற்பிரிவுகள் புதிதாகத் துவங்கப்பட்டுள்ளன.

3.37. தகவல் தொழில்நுட்பக் கண்காணிப்புப் பிரிவு

இத்துறையின் அனைத்து தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்ளவும், கண்காணிக்கவும் தலைமையகத்திலும், மண்டல அளவிலும் தகவல் தொழில்நுட்பக் கண்காணிப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. மெய்நிகர் வகுப்பறைகள், ஸ்மார்ட் வகுப்பறைகள், மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள்மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியை இப்பிரிவு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இப்பிரிவு சேர்க்கையில் வெளிப்படைத்தன்மை மற்றும் தேர்வு மதிப்பீட்டில் துல்லியத்தை உறுதிப்படுத்த இணையதளச் சேர்க்கை மற்றும் கணினி அடிப்படையிலான தேர்வு (CBT) ஆகியவற்றை ஒருங்கிணைத்து வருகிறது.

3.38. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைப் பிரபலப்படுத்துதல்

தொழிற்பயிற்சி நிலைய பட்டதாரிகளைக் கௌரவிக்கும் வண்ணம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர்கள், தொழில் துறை வல்லுநர்கள் மற்றும் உயர் பதவியில் உள்ளோர் ஆகியோரை அழைத்து பட்டமளிப்பு விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விழாக்கள்மூலம் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, தொழிற்பயிற்சி நிலையங்களுக்கென தர அடையாளம் உருவாக்கப்பட்டு, சேர்க்கை அதிகரித்து இடை நிற்றல் குறைந்துள்ளது. பட்டமளிப்பு விழாக்களைத் தவிர ஆண்டு விழாக்கள், பெற்றோர் ஆசிரியர்

2023 மார்ச் 29]

கூட்டங்கள், தொழிற்சாலை மற்றும் முன்னாள் மாணவர் கூட்டங்கள் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நிகழ்வுகளை நடத்திட ஒவ்வோர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் ரூ.1.00 இலட்சம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

3.39. விளையாட்டு நிகழ்ச்சிகள்

மாணவர்களின் தனித் தன்மையினை முழுமையாக மேம்படுத்தும் நோக்கில் விளையாட்டு நிகழ்ச்சிகள் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடத்தப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் விளையாட்டு நிகழ்ச்சிகள், தொழிற்பயிற்சி நிலைய அளவிலும், மண்டல அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கிடையே மண்டல அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்றவர்கள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறுகின்றனர். மண்டல அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ரூ.15.00 இலட்சமும் மாநில அளவில் விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்கு ரூ.2.00 இலட்சமும் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

3.40. தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத இடங்களில் புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்குதல்

மாநிலத்தில் தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத கீழ்க்காணும் இடங்களில் திறன் பயிற்சி அளிப்பதற்காகப் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.97.55 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளன:

வ. எண்	மாவட்டம்	தொழிற்பயிற்சி நிலையம்
1	கோயம்புத்தூர்	வால்பாறை
2	கடலூர்	மங்களூர்
3	தருமபுரி	அரூர்
4	திண்டுக்கல்	ஒட்டன்சத்திரம்
5	கிருஷ்ணகிரி	தேன்கனிக்கோட்டை

[2023 மார்ச் 29

வ. எண்	மாவட்டம்	தொழிற்பயிற்சி நிலையம்
6	பெரம்பலூர்	குன்னம்
7	இராமநாதபுரம்	கடலாடி
8	சிவகங்கை	மானாமதுரை
9	திருவள்ளூர்	கும்மிடிப்பூண்டி
10	திருவண்ணாமலை	செய்யாறு
11	விருதுநகர்	திருச்சுழி

3.41. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நவீன இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

தொழிற்சாலைகளில் மாறிவரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் பயிற்சி அளிக்கும் நோக்கில் பயன்படுத்த முடியாத, உபயோகமற்ற இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மாற்றி ரூ.20.00 கோடி செலவில் 57 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்குப் புதிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

3.42. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக மாற்றுதல்

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக மாற்ற அரசு எடுக்கும் நடவடிக்கைகள் நவீனமயமாக்குதலுக்கான புதிய முனைப்புகளாக உள்ளன. மாநில அரசு, டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் தலைமையிலான சர்வதேச முன்னணி நிறுவனங்கள் இணைந்த குழுமத்துடன் ஒருங்கிணைந்து இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுவரை இல்லாத புதுமையான இத்திட்டம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒரு தரஅளவை நிர்ணயித்துள்ளது. இத்திட்டம் நவீன தொழில்நுட்ப மையங்களை அமைப்பதன்மூலம் புத்தாக்கங்களை உருவாக்குவதையும், மாணவர்கள் மற்றும் தொழிற்சாலை பணியாளர்களின் திறனை வளர்ப்பதன்மூலம் அவர்களை உற்பத்தி தொழிற்சாலைகளின் திறன்பெற்ற மனித வளமாக மாற்றுவதையும், தொழில்முனைவோரை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

2023 மார்ச் 29]

இந்த நவீன தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில் உள்ள இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள், வன்பொருள், மென்பொருள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்தி பின்வரும் 5 நீண்ட கால தொழிற்பிரிவுகள் மற்றும் 23 குறுகிய கால தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

நீண்ட கால தொழிற்பிரிவுகள்

வ. எண்	**தொழிற்பிரிவின் பெயர்**	**பயிற்சிக் காலம்**
1.	மேனுஃபேக்சரிங் பிராசஸ் கன்ட்ரோல் அன்டு ஆட்டோமேஷன்	1 வருடம்
2.	இன்டஸ்ட்டிரியல் ரோபோடிக்ஸ் அன்டு டிஜிட்டல் மேனுபேக்சரிங் டெக்னீசியன்	1 வருடம்
3.	மெக்கானிக் எலெக்ட்ரிக் வெகிக்கிள்	2 ஆண்டுகள்
4.	பேசிக் டிசைனர் அன்டு விர்ச்சுவல் வெரிஃபையர் (மெக்கானிக்கல்)	2 ஆண்டுகள்
5.	அட்வான்ஸ்டு சி.என்.சி மெஷினிங் டெக்னீசியன்	2 ஆண்டுகள்

குறுகிய கால தொழிற்பிரிவுகள்—3 மாதங்கள் பயிற்சி காலம்

வ. எண்	**தொழிற்பிரிவின் பெயர்**	**வ. எண்**	**தொழிற்பிரிவின் பெயர்**
1.	இன்னோவேஷன் அன்டு டிசைன் திங்கிங்	13.	எலக்ட்ரிகல் வெஹிக்கிள்
2.	ஃபண்டமென்டல்ஸ் ஆஃப் புராடெக்ட் டிசைன்	14.	இண்டர்நெட் ஆஃப் திங்ஸ்
3.	புராடக்ட் டிசைன் & டெவலப்மெண்ட்	15.	அட்வான்ஸ்டு மிஷினிங் (மில்)
4.	ஆட்டோ எலக்ட்ரிக்கல் டிசைன் & டெவலப்மெண்ட்	16.	அட்வான்ஸ்டு மிஷினிங் (சிஎன்சி லேத்)

வ. எண்	தொழிற்பிரிவின் பெயர்	வ. எண்	தொழிற்பிரிவின் பெயர்
5.	புராடக்ட் வெரிஃபிகேஷன் அன்டு அனாலஸிஸ்	17.	அட்வான்ஸ்டு மிஷினிங் (ரோட்டரி 4 ஆக்ஸிஸ் மில்)
6.	கம்ப்யூட்டர் எய்டட் மேனுஃபேக்சரிங்	18.	அட்வான்ஸ்டு அடிட்டிவ் மேனுஃபேக்சரிங்
7.	அட்வான்ஸ்டு கம்ப்யூட்டர் எய்டட் மேனுஃபேக்சரிங்	19.	அட்வான்ஸ்டு வெல்டிங்
8.	பிராசஸ் கண்ட்ரோல் அன்டு ஆட்டோமேஷன்	20.	அட்வான்ஸ்டு பெயிண்டிங் டெக்னாலஜி
9.	ஃபண்டமென்டல்ஸ் ஆஃப் ஆட்டோ மொபைல் என்ஜினியரிங்	21.	இண்டஸ்ரியல் ரோபோடிக்ஸ் I
10.	அட்வான்ஸ்டு ஆட்டோமொபைல் என்ஜினியரிங்	22.	இண்டஸ்ரியல் ரோபோடிக்ஸ் II
11.	ஆட்டோமொபைல் மெயின்டனன்ஸ், ரிப்பேர் அன்டு ஓவர்ஹால்	23.	அட்வான்ஸ்டு பிளம்பிங்
12.	ஆட்டோ எலக்ட்ரிகல் மெயின்டனன்ஸ்		

இந்த உன்னதமான திட்டத்தைச் செயல்படுத்திட பணிமனைகள் கட்டுமானத்திற்கான செலவினம் ரூ.264.83 கோடியை உள்ளடக்கி ரூ.2,877.43 கோடியை அரசு ஒப்பளித்துள்ளது. இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள், வன்பொருள் ஆகியவை கொள்முதல் செய்தல் மற்றும் தொடர்புடைய மென்பொருள் சேவைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுடன்கூடிய பயிற்சி கட்டமைப்பினை உருவாக்குவதற்கான செலவினம் மாநில

2023 மார்ச் 29]

அரசு மற்றும் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு இடையே 12.5 : 87.5 என்ற விகிதத்தில் பங்கிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இதர பயன்களைத் தவிர 5,140 கூடுதல் இருக்கைகளையும் உருவாக்கியுள்ளது.

தொழில்நுட்ப மையங்களின் கட்டுமானம் மற்றும் உருவாக்கம் நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள்-அதாவது 2023 ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, பயிற்சிகள் ஆகஸ்டு 2023 முதல் துவங்கப்படும். இத்திட்டம் தொழிற்சாலைத் தேவைகளுக்கும், திறன் பெற்ற மனிதவள எண்ணிக்கைக்கும் இடையிலான இடைவெளியைப் பூர்த்தி செய்யும் விதமாக நீண்ட காலத்திற்குச் செயல்படும்.

3.43. தொழிற்சாலை மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இடையிலான நட்புறவு

தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் தொடர்ச்சியாகத் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கி வருவதால், பயிற்சி நடைமுறைகளில் தொழிற்சாலைகளின் பங்களிப்பு நவீன தொழில்நுட்பங்களில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு உதவிகரமாக இருக்கும். இது தொழில் அறிவு மற்றும் அனுபவத்தை பரிமாறிக்கொள்வதற்கும் வழிவகை செய்யும். இத்தகைய நோக்கத்தை அடைய கீழ்க்காணும் முன்னணி நிறுவனங்கள் நவீன தொழில்நுட்பங்கள் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்குச் சென்றடையும் வண்ணம், பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதன்மூலம் ஆதரவு அளிக்கிறது. இதுதவிர தொழிற்சாலை பணிமனை பயிற்சி, தொழிற்சாலைகளைப் பார்வையிடல், தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி, தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்குத் தொழிற்சாலை பணியாளர்கள்மூலம் பயிற்சி அளித்தல் ஆகியவற்றினால் தொழிற்சாலை தேவைகளுக்கும், பயிற்சி முடித்துச் செல்லும் மாணவர்களுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புகின்றன. மேற்கண்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும், தொடர்புடைய தொழிற்சாலைகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

- *சாம்சங் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை.*
- *பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை.*

[2023 மார்ச் 29

- இந்தியா பிஸ்டன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
- ஹைடெக் அராய் லிமிடெட், மதுரை.
- ஜேபிஎம் ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட், சென்னை.
- இசட்எஃப் டெக்னாலஜிஸ் லிமிடெட், சென்னை.
- இகராஷி மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை.
- பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, சென்னை.
- கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட், ராணிப்பேட்டை.
- வீனஸ் ஹோம் அப்ளையன்சஸ், தூத்துக்குடி.
- வாப்கோ இந்தியா லிமிடெட், சென்னை.
- சிம்சன் அண்ட் கோ லிமிடெட், சென்னை.
- டைகின் ஏர் கண்டிஷனிங் பிரைவேட் லிமிடெட், சென்னை.

4. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்

(தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் (தொ.அ.ஈ.) என்பது அமைப்பு சார்ந்த துறைகளில் பணிபுரியும் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், 1948 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொ.அ.ஈ. சட்டப்படி, "தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம்" என அழைக்கப்படும் நிறுவன அமைப்பின்மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 1955 ஜனவரி 23 ஆம் தேதி முதல் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு உடல்நலக் குறைவு, மகப்பேறு, உடல் ஊனம் மற்றும் பணியிடத்தில் ஏற்படும் விபத்துகள் அல்லது தொழில்சார் நோய்களினால் மரணம் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும்பொருட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 35.60 இலட்சம் தொழிலாளர்கள் மற்றும் 1.07 கோடி

2023 மார்ச் 29]

தொழிலாளர்களைச் சார்ந்தோர்களுக்கு (அதாவது அவர்களது மனைவி, குழந்தைகள் மற்றும் தொழிலாளர்களின் பெற்றோர்) மருத்துவச் சேவைகளை வழங்கி வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவத்தை முழுமையாக வழங்குவதோடு மட்டுமல்லாமல், காப்பீட்டாளருக்கு ஊதிய இழப்பு அல்லது உழைக்க இயலாத நிலை ஏற்படும்போது அதனை ஈடுசெய்யும் வண்ணம், பண உதவியும் வழங்கப்பட்டு வருகிறது.

4.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்

1. *தொ.அ.ஈ. திட்டம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களுக்குப் பொருந்தும்.*
2. *ரூ.21,000/- வரை மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் இணைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள்.*
3. *ரூ.25,000/- வரை மாத ஊதியம் பெறும் அனைத்து மாற்றுத் திறனாளி தொழிலாளர்களுக்கும் தொ.அ.ஈ. திட்டம் பொருந்தும்.*
4. *நாள் ஒன்றுக்கு ரூ.176/- வரை வருமானம் ஈட்டும் பணியாளர்கள் தங்கள் பங்களிப்பு பங்குத் தொகையிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்கள்.*

4.2. திட்டத்தின் நிதி ஆதாரம்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கு (1-7-2019 முதல்) ஊதியத்தில் முறையே 0.75% மற்றும் 3.25% மாதாந்திர பங்களிப்பைத் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்போர் தத்தமது பங்களிப்பாக வழங்குகின்றனர்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் மாநில அரசும் முறையே 7:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் செலவுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில்

7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் திரும்பச் செலுத்துகிறது.

4.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்

தமிழ்நாட்டில், 235 தொ.அ.ஈ மருந்தகங்கள் மற்றும் 10 தொ.அ.ஈ மருத்துவமனைகளில் மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

வ. எண்	தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் / தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மருத்துவமனைகள் விவரம்	துறைத் தலைவர்
1.	தொ.அ.ஈ மருத்துவமனைகள் அயனாவரம், மதுரை, சிவகாசி, சேலம், ஓசூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர்.	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொ.அ.ஈ) இயக்குநரகம், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.
2.	அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர்.	மருத்துவ கல்வி இயக்குநரகம், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.
3.	தொ.அ.ஈ மருத்துவமனைகள் கே.கே.நகர் மற்றும் திருநெல்வேலி	புதுதில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம்மூலம் நேரடியாக நிர்வகிக்கப்படுகிறது.

மேலும், காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள்மூலம் உயர்சிறப்பு மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023 மார்ச் 29]

4.4. தமிழ்நாடு தொ.அ.ஈ. திட்ட நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு முழுவதும் தொ.அ.ஈ. திட்டத்தின் நிர்வாகத்திற்கு, சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் 7 மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களின் தலைமையில் மாநிலம் முழுவதும் 235 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநரின்கீழ் மருத்துவக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் தற்போது 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

4.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன், கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த "ஆயுஷ்" (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகின்றன.

வ. எண்	ஆயுஷ் பிரிவுகள்	தொ.அ.ஈ. மருத்துவமனைகள்	தொ.அ.ஈ. மருந்தகங்கள்
1.	ஆயுர்வேதா	8	13
2.	யோகா	8	--
3.	யுனானி	3	3
4.	சித்தா	8	43
5.	ஹோமியோபதி	3	3

4.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பாக செலுத்தப்படும்

[2023 மார்ச் 29

பங்களிப்பானது, அவசர மருத்துவத் தேவை மற்றும் பிற இடர்களின்போது காப்பீட்டாளரின் வருவாய் மற்றும் சேமிப்புகளில் கூடுதல் நிதிச்சுமை ஏற்படாவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் பின்வரும் பல்வேறு சமூகப் பாதுகாப்பு பயன்களைக் காப்பீட்டாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது.

1. மருத்துவ உதவி

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் (அ) முதற்கட்ட சிகிச்சை (புறநோயாளி) மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்பு (உள்நோயாளி) (ஆ) உயர்சிறப்பு சிகிச்சை போன்றவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள்மூலம் வழங்கப்படுகின்றன.

2. மகப்பேறுகால உதவி

பெண் காப்பீட்டு நபர்களுக்கு முந்தைய இரண்டு பங்களிப்பு காலங்களில் 70 நாட்களுக்கு பங்களிப்பு இருப்பின் பிரசவம் மற்றும் கர்ப்பகாலத்திற்கான மகப்பேறுகால உதவி முழு ஊதிய வீதத்தில் 26 வாரங்களுக்கு வழங்கப்படும். மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மேலும் ஒரு மாதக் காலத்திற்கு இவ்வுதவி நீட்டிக்கப்படும்.

3. சார்ந்துள்ளோருக்கான உதவி

காப்பீட்டாளர் வேலை செய்யும்போது ஏற்படும் விபத்து அல்லது அவர் செய்யும் தொழில்மூலம் ஏற்படும் நோயினால் இறக்க நேர்ந்தால், அவரின் சம்பளத்தில் 90 சதவிகிதம் அவரைச் சார்ந்தவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

4. உடல் நலமின்மைக்கான உதவி

ஒரு வருடத்தில் அதிகபட்சமாக 91 நாட்களுக்கு சான்றளிக்கப்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் 70% ரொக்க இழப்பீடாக உடல் நலமின்மை பலன் வழங்கப்படும். உடல் நலமின்மை உதவித்

2023 மார்ச் 29]

தொகைக்கு தகுதி பெற, காப்பீட்டாளர்கள் 6 மாத காலத்தில் 78 நாட்களுக்கு பங்களிப்பு செய்திருக்க வேண்டும்.

5. நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி

34 வீரியமிக்க மற்றும் நீண்ட கால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் 80% அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிப்பு செய்யப்படும்.

6. அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி

உற்பத்தி வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு வாசக்டமி/ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்துகொள்ளும்போது, அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும்.

கருத்தடை மேற்கொள்ளும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு முறையே 7 நாட்கள் மற்றும் 14 நாட்களுக்கு முழு ஊதியத்திற்குச் சமமான அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும்.

7. இயலாமைக்கான உதவி

(அ) தற்காலிக இயலாமைக்கான உதவி

காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது காயம் ஏற்பட்டால் எவ்வித பங்களிப்பு செய்வதை பொருட்படுத்தாமல் இயலாமை தொடரும் வரை, ஊதியத்தில் 90 சதவிகிதம் மாதாந்திர தொகையாகத் தற்காலிக இயலாமை உதவி வழங்கப்படும்.

(ஆ) நிரந்தர இயலாமைக்கான உதவி

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது நிரந்தர இயலாமை ஏற்படின் நிரந்தர இயலாமைக்கான உதவி வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

மருத்துவக் குழுவின் பரிந்துரையின்படி சம்பாதிக்கும் திறன் இழப்பிற்கு ஏற்ப மாத ஊதியத்தில் 90% மாதாந்திர தொகையாக வழங்கப்படும்.

8. வேலையின்மைக்கான உதவி

(அ) ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா

காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ அல்லது இதர எதிர்பாராத காரணங்களால் சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால், வேலையின்மைக்கான உதவி வழங்கப்படும். வேலையின்மைக்கான உதவியானது 24 மாதங்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதுடன் அவரது சராசரி தினசரி ஊதியத்தில் 50 சதவிகிதத்தை முதல் 12 மாதங்களுக்கும், அடுத்த 12 மாதங்களுக்கு 25 சதவிகிதமும் வழங்கப்படும்.

(ஆ) அடல் பீமித் வ்யக்தி கல்யாண் யோஜனா

தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகமானது 1-7-2018 முதல், காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்ட காப்பீட்டாளர் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு மற்றும் தொடர்ச்சியாக 4 பங்களிப்பு காலங்களில் 78 நாட்களுக்கு குறைவில்லாமல் பணிபுரிந்திருந்தால் வருவாயில் 25 சதவிகிதத்திற்கு மிகாமல் 90 நாட்கள் வரை இழப்பீட்டுத் தொகையினை பணப் பயனாக வாழ்நாளில் ஒருமுறை வழங்கப்படும்.

4.7. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் இதர உதவிகள்

❖ இறுதிச் சடங்கு உதவி

காப்பீட்டாளர் இறக்க நேரிட்டால், ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.15,000/- வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து அவரைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது இறுதிச் சடங்குகளைச் செய்யும் நபருக்கோ வழங்கப்படும்.

❖ மகப்பேறுகால செலவுகள்

காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளருக்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையங்களில் பிரசவ வசதிகள் இல்லாதிருந்தால் ரூ.7,500/- மகப்பேறுகால படியாக வழங்கப்படும்.

2023 மார்ச் 29]

❖ **முதியோர் மருத்துவப் பராமரிப்பு**

முதியோர் மருத்துவ பராமரிப்பு உதவியானது, வயது முதிர்வு ஓய்வு அல்லது விருப்ப ஓய்வு / பணியாளர் ஓய்வுத் திட்டம் ஆகியவற்றின்மூலம் ஓய்வு பெறும் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டம் நிரந்தர இயலாமை காரணமாக பணியை விட்டுச் செல்லும் காப்பீட்டாளர்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

❖ **வழங்கப்படும் உதவிகள்**

- ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்குக் கண்ணாடிகள் மற்றும் காது கேளாதோருக்கான கருவி போன்ற உதவி சாதனங்கள் இத்திட்டத்தின்கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.
- தடுப்பூசிகள், எச்ஐவி / எயிட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்றவை நோய் தடுப்பு வசதிகளாக வழங்கப்படுகின்றன.
- தேசிய திட்டங்களான குடும்ப நலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடு திட்டம் செயல்முறைப்படுத்தப்படுகின்றன.

4.8. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

மருத்துவமனை வளர்ச்சி குழுமூலம் தொ.அ.ஈ. மருத்துவமனை மற்றும் மருந்தகங்களின் பராமரிப்புப் பணிகள், மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் மற்றும் பராமரிப்பு போன்றவற்றிக்கு மருத்துவமனை வளர்ச்சி நிதி வழங்கப்படுகிறது. இரு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்படும், மருத்துவமனை வளர்ச்சி குழு கூட்டத்திற்கு தொ.அ.ஈ. கழகத்தால் நேரடியாக நிதி வழங்கப்படுகிறது.

4.9. தொ.அ.ஈ. பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொண்ட மருத்துவச் செலவினை மீளப்பெறுதல்

தொகுப்பு ஒப்பந்தம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)

தொகுப்பு ஒப்பந்த அடிப்படையின்கீழ் (CGHS Rate) ஒப்பந்தம் செய்யப்பட்ட 93 சிறப்பு மற்றும் 124 உயர்சிறப்பு சிகிச்சை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டாளர்கள்

மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு பணமில்லாத மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவரின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். தனியார் மருத்துவமனைகளுடன் சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரால் (தொ.அ.ஈ) அங்கீகரிக்கப்பட்ட தொகுப்பு ஒப்பந்தத்தின்கீழ் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மருத்துவச் சிகிச்சைக்கான பட்டிகள் நேரடியாக தீர்வு செய்யப்படுகின்றன.

4.10. புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறப்பு

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்ட தொ.அ.ஈ. மருந்தகங்கள் பின்வருமாறு:

வ. எண்.	தொ.அ.ஈ. மருந்தகம்	தொடங்கப்பட்ட நாள்
1.	துரைசாமிபுரம்	1.7.2022
2.	பரமக்குடி	1.9.2022
3.	பர்கூர்	1.10.2022
4.	மண்ணச்சநல்லூர்	1.10.2022
5.	பெரம்பலூர்	1.10.2022
6.	ஏற்காடு	1.11.2022
7.	அரவக்குறிச்சி	1.11.2022
8.	ஒட்டன்சத்திரம்	1.12.2022
9.	அத்திப்பட்டு	1.2.2023
10.	ஊத்துக்கோட்டை	1.2.2023

4.11. காப்பீட்டாளர்களுக்கு உயிர் காக்கும் மருந்துகள் வழங்குதல்

தொ.அ.ஈ மருத்துவமனைகள் மற்றும் தொ.அ.ஈ மருந்தகங்களின் தேவைகளின் அடிப்படையில், அனைத்து அத்தியாவசிய மற்றும் துணை மருந்துகளும் மத்திய தொடர்

2023 மார்ச் 29]

*ஒப்பந்தப்புள்ளி (*Central Rate Contract*) வழியாக கொள்முதல் செய்யப்பட்டு, வழங்கப்படுகின்றன.*

இவை தவிர, புற்றுநோயியல், குருதியியல் மற்றும் சிறுநீரகவியல் நோயாளிகளுக்கான உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் பரிந்துரைக்கப்பட்ட தேவைக்கேற்ப உடனடியாக வழங்கப்படுகின்றன.

4.12. தொ.அ.ஈ மருத்துவமனைகளில் வசதிகள் வலுப்படுத்துதல்

அனைத்து 7 தொ.அ.ஈ மருத்துவமனைகளிலும் தேவைக்கேற்ப மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளின் செயல்திறனை மேம்படுத்தவும், காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவும், அனைத்து இளங்கலை மருத்துவர்களுக்குப் பதிலாக முதுகலை மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

4.13. திட்ட செயலாக்கத் திட்டத்தின்கீழ் (PIP) உபகரணங்கள் வாங்குதல்

*புதுடெல்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் 2020-2021 ஆம் ஆண்டுக்கான திட்ட செயலாக்கத் திட்டத்தின்கீழ் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.23 கோடி வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இக்கருவிகள் தமிழ்நாடு மருத்துவ சேவைப் பணிகள் கழகம் (*TNMSC*) மற்றும் அரசின் இணையவழி கொள்முதல் (*GeM Portal*)மூலம் சம்மந்தப்பட்ட தொ.அ.ஈ மருத்துவமனை மற்றும் தொ.அ.ஈ மருந்தகங்களுக்குக் கொள்முதல் செய்யப்பட்டு, வழங்கப்படுகின்றன.*

4.14. 100 படுக்கைகள் கொண்ட புதிய தொ.அ.ஈ. மருத்துவமனைகள் கட்டுதல்

தமிழ்நாட்டில் திருப்பூர், ஸ்ரீபெரும்புதூர், கன்னியாகுமரி, வாணியம்பாடி, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் 100 படுக்கைகள் கொண்ட புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் கட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருப்பூர்,

ஸ்ரீ பெரும்புதூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

4.15. நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்

வ. எண்	வருடம்	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாயில்)	செலவிடப்பட்ட தொகை (ரூபாயில்)
1.	*2019-2020*	*572,06,81,000*	*571,96,33,000*
2.	*2020-2021*	*606,07,73,000*	*603,49,67,000*
3.	*2021-2022*	*542,56,07,122*	*542,06,76,340*
4.	*2022-2023*	*638,44,07,000*	*469,41,80,000 (28.02.2023 வரை)*

4.16. தொ.அ.ஈ. கழகத்தின் கோவிட்-19 நிவாரணத் திட்டம்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டம், 1948-ன்கீழ் வரும் காப்பீட்டு நபர்கள் கோவிட்-19 காரணமாக இறந்துவிட்டால் அவர்களின் குடும்பத்தினருக்கு, காப்பீட்டாளரின் சராசரி ஊதியத்தில் 90 சதவிகிதம் ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படும். இறந்த காப்பீட்டாளரின் வாழ்க்கைத் துணைவரும் ஆண்டுக்கு ரூ.120/- பெயரளவிலான பங்களிப்புடன் மருத்துவச் சேவைக்குத் தகுதியுடையவர் ஆவார்.

கோவிட் நிவாரணத் திட்டம்			
வருடம்	இறந்த காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை	பயனாளர்களின் எண்ணிக்கை	பயனாளிகளுக்கு ஆண்டொன்றிற்கு வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்)
2021 (ஜூன் 2021 முதல் டிசம்பர் 2021 வரை)	*335*	*730*	*3,47,89,197/- (730 பயனாளிகளுக்கு)*

2023 மார்ச் 29]

கோவிட் நிவாரணத் திட்டம்			
வருடம்	**இறந்த காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை**	**பயனாளர்களின் எண்ணிக்கை**	**பயனாளிகளுக்கு ஆண்டொன்றிற்கு வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்)**
2022 (ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022 வரை)	*76*	*255*	*5,37,71,724/- (985 பயனாளிகளுக்கு)*
2023 (ஜனவரி 2023 முதல் 17.02.2023 வரை)	*2*	*5*	*1,22,93,266/- (990 பயனாளிகளுக்கு)*
மொத்தம்	**413**	**990**	**10,08,54,187/-**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 29

இணைப்பு III

(254 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 25 - இயக்கூர்திகள் சட்டங்கள்- நிருவாகம் (உள் மதுவிலக்கு மற்றும் ஆதிதிராவிடர் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முகவுரை:-

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்ல, பாதுகாப்பான மற்றும் நிலையான போக்குவரத்து அமைப்பு இன்றியமையாதது. பல்வேறு போக்குவரத்து முறைகளில், சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கோவிட்-19 நெருக்கடிக்குப் பிறகு, மற்ற முறைகளுக்கு மாற்றாக சாலைப் போக்குவரத்து பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் வாகனங்களின் எண்ணிக்கை காரணமாக பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களை இணையதளம்மூலம் செயலாக்குதல், ஆதார் அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு நேரில் வராமல் வழங்கும் சேவைகள், ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான ஓட்டுநர் உரிமம் வழங்குதல், கணினிமயமாக்கப்பட்ட சோதனைச் சாவடிகள், செயலாக்க அதிகாரிகளால் PoS இயந்திரங்களைப் பயன்படுத்தி இ-சலான் வழங்குதல் மற்றும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல் போன்ற புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2. நிருவாக அமைப்பு

போக்குவரத்து / சாலைப் பாதுகாப்பு ஆணையர் தலைமையில் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் இயங்கி

2023 மார்ச் 29]

வருகிறது. போக்குவரத்து ஆணையர் மாநிலப் போக்குவரத்து அதிகாரியாகவும் (STA) செயல்படுகிறார். ஆணையரகத்தில் ஒரு கூடுதல் போக்குவரத்து ஆணையர், மூன்று இணை போக்குவரத்து ஆணையர்கள் மற்றும் மூன்று துணை போக்குவரத்து ஆணையர்கள் உள்ளனர். மேலும், ஆணையருக்கு உதவியாக இரண்டு இணை போக்குவரத்து ஆணையர்கள் (செயலாக்கம்), ஒருவர் சென்னையிலும், மற்றொருவர் திருச்சியில் உள்ள ஸ்ரீரங்கத்திலும் உள்ளனர். மேற்பார்வை செய்வதற்கு ஏதுவாக, மாநிலம் 12 சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சரகமும் இணைப் போக்குவரத்து ஆணையர்கள் / துணைப் போக்குவரத்து ஆணையர்களின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), கோயம்புத்தூர் மற்றும் மதுரை சரகங்கள் இணைப் போக்குவரத்து ஆணையர்களின் தலைமையிலும், மீதமுள்ள சரகங்களான விழுப்புரம், வேலூர், சேலம், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகியவை துணைப் போக்குவரத்து ஆணையர்களின் தலைமையிலும் செயல்படுகிறது.

ஒரு தலைமை கணக்கு அலுவலர் மற்றும் ஒரு கணக்கு அலுவலரின் மேற்பார்வையின்கீழ் உட்தணிக்கைப் பிரிவு செயல்படுகிறது. ஒவ்வொரு சரக அலுவலகத்திலும் ஒரு உதவி கணக்கு அலுவலர் இந்தப் பணிகளை மேற்கொள்கிறார். இவ்வாணையரகம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது.

மாநிலத்தில் 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 54 பகுதி அலுவலகங்கள் மற்றும் 22 சோதனைச் சாவடிகள் செயல்படுகின்றன. ஒவ்வொரு பகுதி அலுவலகமும் ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I தலைமையில் இயங்குகிறது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பொறுப்பாக இருப்பதோடு, அப்பகுதிக்கு வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் செயலாளராகவும் பணியாற்றுகிறார். அவ்வலுவலகங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

[2023 மார்ச் 29

போக்குவரத்துத் துறையின்கீழ் செயல்படும் அலுவலகங்களின் விவரம்

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
1.	இ.போ.வ. சென்னை (வடக்கு) வ.போ.அ.-9 வ.போ.அ (செ) -1 ப.அ. -2 சோ.சா-5		1. சென்னை (கிழக்கு)		
		இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	2. சென்னை (மையம்)		
			3. சென்னை (வடக்கு)		
			4. சென்னை (வடமேற்கு)		
			5. சென்னை (வடகிழக்கு)		
			6. திருவள்ளூர்	1, திருத்தணி	1. திருத்தணி 2. பாலவாக்கம்
			7. செங்குன்றம்	2, கும்மிடிப்பூண்டி	3. பெத்திக் குப்பம் (உள் வருகை) 4.பெத்திக் குப்பம் (வெளி செல்கை)
			8. பூந்தமல்லி		5.பூந்தமல்லி
			9. அம்பத்தூர்		
			10.வ.போ.அ (செ)		
2.	இ.போ.ஆ சென்னை (தெற்கு) வ.போ.அ. -11 வ.போ.அ (செ)-1 ப.அ. -2		1. சென்னை (தெற்கு)		
			2. சென்னை (மேற்கு)		
			3. சென்னை (தென்மேற்கு)		
			4. சென்னை (தென்கிழக்கு)		
			5. மீனம்பாக்கம்		
			6. குன்றத்தூர்		
			7. தாம்பரம்		
			8. காஞ்சிபுரம்		

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
		இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	9. செங்கல்பட்டு	1. மதுராந்தகம்	
				2. திருக்கழுக்குன்றம்	
			10. சோழிங்கநல்லூர்		
			11. ஸ்ரீபெரும்புதூர்		
			12. வ.போ.அ (செ)		
3.	விழுப்புரம் வ.போ.அ.-8, வ.போ. அ. (செ)-1 ப.அ. -5 சோ.சா-1		1. விழுப்புரம்		
			2. உளூந்தூர் பேட்டை		
			3.. கள்ளக்குறிச்சி		
			4. திண்டிவனம்	1. செஞ்சி	1 திருச்சிற்றம்பலம்
			5. கடலூர்	2. பண்ருட்டி 3. நெய்வேலி	
			6. திருவண்ணா மலை		
			7. சிதம்பரம்	4. விருத்தாச்சலம்	
			8. ஆரணி	5. செய்யாறு	
			9.வ.போ.அ (செ)		
4.	வேலூர் வ.போ.அ.-6 வ.போ.அ (செ)-1 பு.அ. - 3 சோ.சா-6		1. வேலூர்	1. குடியாத்தம்	1. சேர்க்காடு
					2. காட்பாடி
			2. வாணியம்பாடி	2. ஆம்பூர்	
			3. திருப்பத்தூர்		
			4. ராணிப் பேட்டை	3. அரக்கோணம்	
			5. கிருஷ்ணகிரி		3.காளிக்கோயில்
			6. ஓசூர்		4. ஓசூர் (உள் வருகை)
					5. ஓசூர் (வெளிச் செல்லுதல்) 6. பாகலூர்
			7. வ.போ.அ (செ)		

[2023 மார்ச் 29

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
5.	சேலம் வ.போ.அ. -7, வ.போ.அ. (செ)-1 ப.அ. - 4	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. சேலம் (கிழக்கு)		
			2. சேலம் (மேற்கு)	1. ஓமலூர்	
			3. ஆத்தூர்	2. வாழப்பாடி	
			4. சேலம் (தெற்கு)		
			5. சங்ககிரி		
			6. தருமபுரி	3. அரூர்	
				4. பாலக்கோடு	
			7. மேட்டூர்		
			8.வ.போ.அ (செ)		
6.	ஈரோடு வ.போ.அ.-8, வ.போ.அ (செ)-1 ப.அ. -4 சோ.சா-1		1. ஈரோடு (கிழக்கு)		
			2. ஈரோடு (மேற்கு)		
			3. பெருந்துறை		
			4. கோபிச்செட்டி பாளையம்	1. பவானி	1. பண்ணாரி
				2. சத்தியமங்கலம்	
			5. நாமக்கல் (வடக்கு)	3. ராசிபுரம்	
			6. நாமக்கல் (தெற்கு)	4. பரமத்திவேலூர்	
			7. திருச்செங்கோடு		
			8, குமாரபாளையம்		
			9. வ.போ.அ (செ)		
7.	கோயம்புத்தூர் வ.போ.அ. -11 வ.போ.அ (செ)-1 ப.அ. -5 சோ.சா-6		1. கோயம்புத்தூர் (தெற்கு)	1. சூலூர்	1. கே.ஜி. சாவடி (உள் வருகை)
					2. கே.ஜி. சாவடி (வெளிச் செல்லுதல்)
			2. கோயம்புத்தூர் (வடக்கு)		
			3. கோயம்புத்தூர் (மையம்)		
			4. கோயம்புத்தூர் (மேற்கு)		

2023 மார்ச் 29]

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
			5. திருப்பூர் (வடக்கு)	2. அவினாசி	
			6. திருப்பூர் (தெற்கு)	3. காங்கேயம்	
			7. தாராபுரம்		
			8. பொள்ளாச்சி	4. வால்பாறை	3. கோபாலபுரம்
					4. வலந்தயாமரம்
			9. மேட்டுப் பாளையம்		
			10. ஊட்டி	5. கூடலூர்	5. தலைகுந்தா 6. கூடலூர்
			11. உடுமலைப் பேட்டை		
			12. வ.போ.அ (செ)		
8.	தஞ்சாவூர் வ.போ.அ. -6, வ.போ.அ. (செ)-1 ப.அ. - 7	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம்	1. தஞ்சாவூர்	1. பட்டுக் கோட்டை	
			2. கும்பகோணம்		
			3. திருவாரூர்	2. மன்னார்குடி 3. திருத்துறைப் பூண்டி	
			4. நாகப்பட்டினம்		
			5. மயிலாடுதுறை	4. சீர்காழி	
			6. புதுக்கோட்டை	5. அறந்தாங்கி 6. இலுப்பூர் 7. ஆலங்குடி	
			7. வ.போ.அ (செ)		
9.	திருச்சி வ.போ.அ.-6, வ.போ.அ. (செ)-1 ப.அ.-8		1. திருச்சி (மேற்கு)	1. மணப்பாறை	
			2. திருச்சி (கிழக்கு)	2. திருவெறும்பூர்	
			3. திருவரங்கம்	3. துறையூர் 4. முசிறி 5. லால்குடி	
			4. கரூர்	6. குளித்தலை 7. மண்மங்கலம் 8. அரவக்குறிச்சி	
			5. பெரம்பலூர்		
			6. அரியலூர்		
			7. வ.போ.அ (செ)		

[2023 மார்ச் 29

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
10.	மதுரை வ.போ.அ.-1, வ.போ.அ (செ)-1 ப.அ. -9 சோ.சா-1	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம்	1, மதுரை வடக்கு	1. மேலூர்	
				2. வாடிப்பட்டி	
			2. மதுரை (தெற்கு)	3. திருமங்கலம்,	
				4. உசிலம்பட்டி	
			3. மதுரை (மையம்)		
			4. பெரியகுளம்	5. உத்தம பாளையம்	1. லோயர் கேம்ப்
			5. திண்டுக்கல்	6. வேடச்சந்தூர்	
				7. வத்தலகுண்டு	
				8. நத்தம்	
			6. பழனி	9. ஒட்டன்சத்திரம்	
			7. வ.போ.அ. (செ)		
11.	விருதுநகர் வ.போ.அ.-5, வ.போ.அ (செ)-1 ப.அ. -3		1. விருதுநகர்	1. அருப்புக்கோட்டை	
			2. சிவகங்கை	2. காரைக்குடி	
			3 . ஸ்ரீவில்லிபுத்தூர்		
			4. ராமநாதபுரம்	3. பரமக்குடி	
			5. சிவகாசி		
			6. வ.போ.அ (செ)		
12.	திருநெல்வேலி வ.போ.அ. -8, ப.அ. -2 சோ.சா-2		1. திருநெல்வேலி	1. வள்ளியூர்	
				2 அம்பா சமுத்திரம்	
			2. தென்காசி		1. புளியரை
			3. சங்கரன்கோவில்		
			4. தூத்துக்குடி		
			5. மார்த்தாண்டம்		2. களியக்காவிளை
			6. நாகர்கோவில்		
			7. திருச்செந்தூர்		
			8. கோவில்பட்டி		
	மொத்தம் 12	**2**	**91**	**54**	**22**

2023 மார்ச் 29]

மாவட்ட ஆட்சியர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கான வட்டார போக்குவரத்து அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். சென்னையைப் பொறுத்தவரை, இணைப் போக்குவரத்து ஆணையர்கள், சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு), வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (STAT) மாவட்ட நீதிபதியின் நிலையில் உள்ள நீதித் துறை அதிகாரியைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மாநில போக்குவரத்து அதிகாரி மற்றும் வட்டார போக்குவரத்து அதிகாரிகளின் உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீடுகள் மற்றும் சீராய்வுகள் தீர்ப்பாயத்தில் விசாரிக்கப்படுகின்றன. மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலரின் நிலையில் உள்ள இரண்டு அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். ஒருவர் மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் செயலாளராகவும், மற்றொருவர் இத்துறையின் சார்பில் வழக்குகளை வாதாட துறை சார்ந்த பிரதிநிதியாகவும் உள்ளார்.

3. போக்குவரத்து துறையின் பணிகள்

மோட்டார் வாகனச் சட்டம், 1988, ஒன்றிய மோட்டார் வாகன விதிகள், 1989 மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1989 மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை அமல்படுத்துவதே இத்துறையின் முதன்மையான பணிகளாகும். தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டம், 1974-ன்கீழ் வரி வசூலிக்கும் பணியும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துறையின் பல்வேறு பணிகள் கீழ்க்கண்டவாறு:-

i. பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் வழங்குதல் / புதுப்பித்தல் மற்றும் மேற்குறிப்பு செய்தல்.

ii. நடத்துநர் உரிமம் வழங்குதல் / புதுப்பித்தல்.

iii. ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உரிமம் வழங்குதல்/ புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை ஆய்வு செய்தல்.

iv. மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல் / மறு பதிவு செய்தல், வாகனங்களின் உரிமை மாற்றம் செய்தல், பதிவுச் சான்றிதழ்களைப் புதுப்பித்தல், பதிவுச் சான்றிதழ்

[2023 மார்ச் 29

நகல் வழங்குதல், தவணைக் கொள்முதல் மேற்குறிப்பு / இரத்து செய்தல் மற்றும் வாகனங்களில் வகை மாற்றம் செய்தல்.

v. மோட்டார் வாகனங்களுக்கு வரி, கட்டணங்கள் மற்றும் இணக்கக் கட்டணங்களை வசூலித்தல்.

vi. போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குதல் / புதுப்பித்தல் / உரிமை மாற்றம் செய்தல் / வாகன மாற்றம் செய்தல்.

vii. போக்குவரத்து வாகனங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்குதல் / புதுப்பித்தல்.

viii. போக்குவரத்து வாகனங்களுக்குத் தற்காலிக அனுமதிச்சீட்டு வழங்குதல்.

ix. சோதனை சாவடிகளில் (உள் வருகை மற்றும் வெளி செல்கை) வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிச்சீட்டு வழங்குதல் மற்றும் வரி வசூலித்தல்.

x. விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல்.

xi. மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பாக இயக்கப்படும் வாகனங்களைச் சோதனை செய்தல் மற்றும் இணக்கக் கட்டணம் வசூலித்தல்.

xii. சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்.

xiii. முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.

xiv. புகை பரிசோதனை மையங்களை நிறுவுவதற்கான உரிமங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்.

xv. மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்களை ஏற்படுத்தி மாநிலங்களுக்கிடையே வாகனங்களை இயக்கச் செய்தல்.

4. வாகனங்களின் வளர்ச்சி

சாலைப் போக்குவரத்தை சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து என வகைப்படுத்தலாம். மோட்டார்

2023 மார்ச் 29]

வாகனங்கள் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. சரக்கு மற்றும் பயணியரை வாடகைக்கு அல்லது வெகுமதிக்காக ஏற்றிச் செல்லும் வாகனங்கள் போக்குவரத்து வாகனங்களாகும். போக்குவரத்து வாகனங்கள், சரக்கு வாகனங்கள், நிலைப் பேருந்துகள், ஆம்னி பேருந்துகள், ஆட்டோ-ரிக்ஷாக்கள், சுற்றுலா சீருந்துகள், மேக்ஸிகேப், கல்வி நிறுவன வாகனங்கள் மற்றும் தனியார் சேவை வாகனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. சுய தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் போக்குவரத்து அல்லாத வாகனங்களாகும். சொந்த பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் இரு சக்கர வாகனங்கள் (மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர்), இலகுரக மோட்டார் வாகனம் (மோட்டார் கார் / மூன்று சக்கர வாகனங்கள்), மாற்றுத் திறனாளிகள் இயக்கும் வாகனங்கள் போன்றவை போக்குவரத்து அல்லாத வாகனங்களாகும்.

பதிவு எண்ணானது, போக்குவரத்து வாகனங்களுக்கு, மஞ்சள் பின்னணியில் கருப்பு நிறத்திலும், போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வெள்ளைப் பின்னணியில் கருப்பு நிறத்திலும் இருக்க வேண்டும். மின்சார வாகனங்களில் (பேட்டரிமூலம் இயக்கப்படும் வாகனங்கள்), போக்குவரத்து வாகனங்களுக்குப் பச்சைப் பின்னணியில் மஞ்சள் நிறத்திலும், மற்ற அனைத்து மின்சார வாகனங்களுக்கு, பச்சை பின்னணியில் வெள்ளை நிறத்திலும் பதிவு எண்கள் இருக்க வேண்டும்.

மகாராஷ்டிரா மற்றும் உத்திரப்பிரதேசத்தைத் தொடர்ந்து நாட்டிலேயே வாகன எண்ணிக்கையில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. 28.2.2023 அன்றைய நிலவரப்படி, மொத்தம் 338.22 இலட்சம் வாகனங்களில், 13.33 இலட்சம் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் 324.89 இலட்சம் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் உள்ளன. தமிழ்நாட்டின் மொத்த வாகனங்களில் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் முறையே 3.94% மற்றும் 96.06% ஆகும்.


தமிழ்நாட்டில் உள்ள மொத்த இரு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை 285.24 இலட்சம். இது தமிழகத்தின் மொத்த வாகனங்களில் 84.34% ஆகும்.

[2023 மார்ச் 29

வாகனங்களின் விவரம்

நிதியாண்டு	போக்குவரத்து வாகனங்கள்	போக்குவரத்து அல்லாத வாகனங்கள்		மொத்த வாகனங்கள்	வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு (சதவீதத்தில்)
		இரு சக்கர வாகனங்கள்	பிற வாகனங்கள்		
2017-2018	12,28,259	2,15,86,210	28,47,087	2,56,61,556	7.62
2018-2019	12,63,772	2,33,46,216	30,77,346	2,76,87,334	7.89
2019-2020	12,99,655	2,49,18,384	32,91,824	2,95,09,863	6.58
2020-2021	13,13,661	2,61,45,113	34,86,042	3,09,44,816	4.86
2021-2022	13,35,365	2,72,94,438	37,14,562	3,23,44,365	4.52
2022-2023 (28.02.2023 அன்றைய நிலவரப்படி)	13,32,518	2,85,23,861	39,65,411	3,38,21,790	4.57

வாகனங்களின் பெருக்கம்



TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]


28.2.2023 அன்றைய நிலவரப்படி வாகனங்களின் எண்ணிக்கை

போக்குவரத்து வாகனங்கள்		போக்குவரத்து அல்லாத வாகனங்கள்	
பயணியர் பேருந்துகள்		இரு சக்கர வாகனங்கள்	
மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்	20,127	மோட்டார் சைக்கிள்	1,91,00,607
தனியார் பேருந்துகள்	7,764	ஸ்கூட்டர்	37,63,393
மொத்தம்	**27,891**	**மொபெட்**	**56,59,861**
சிற்றுந்து	3,992	மொத்தம்	2,85,23,861
ஒப்பந்த வாகனங்கள்		மோட்டார் கார்	33,18,222
ஆட்டோ ரிக்க்ஷாக்கள்	3,02,173	ஈப்பு	46,232
வாடகை சீருந்துகள்	2,566	டிராக்டர்	4,21,167
சுற்றுலா சீருந்துகள் (மாநில அனுமதி)	1,00,958	மூன்று சக்கர வாகனம்	67,828
சுற்றுலா சீருந்துகள் (தேசிய அனுமதி)	10,923	ரோடு ரோலர்	2,540
மேக்ஸி கேப் (மாநில அனுமதி)	81,617	இதர வாகனங்கள் முதலியன	1,09,422
மேக்ஸி கேப் (தேசிய அனுமதி)	5,461		
ஆம்னி பேருந்துகள் (மாநில அனுமதி)	1,297		
ஆம்னி பேருந்துகள் (தேசிய அனுமதி)	113		
மொத்தம்	**5,05,108**		
பிற இனங்கள்			
தனியார் சேவை வாகனங்கள்	13,763		
கல்வி நிறுவன பேருந்துகள்	34,725		
அவசர கால ஊர்திகள்	13,367		
தீயணைப்பு வாகனங்கள்	1,716		
மொத்தம்	**63,571**		

[2023 மார்ச் 29

போக்குவரத்து வாகனங்கள்		போக்குவரத்து அல்லாத வாகனங்கள்	
சரக்கு வாகனங்கள்			
சுமையுந்துகள் (மாநில அனுமதி)	3,22,691		
சுமையுந்துகள் (தேசிய அனுமதி)	1,19,789		
உழுவை, இழுவை வாகனங்கள்	78,101		
இலகு ரக வணிக வாகனங்கள்	1,86,666		
கனரக இழுவை வாகனங்கள்	24,709		
மொத்தம்	**7,31,956**		
போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை	13,32,518	போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை	3,24,89,272
		வாகனங்களின் மொத்த எண்ணிக்கை	**3,38,21,790**

வாகன வகைகளின் விகிதாசாரம்



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

5. ஓட்டுநர் உரிமம் வழங்குதல்

எந்தவொரு மோட்டார் வாகனத்தையும் இயக்க விரும்பும் நபர் தகுதியான ஓட்டுநர் உரிமத்தை வைத்திருத்தல் அவசியமானதாகும். 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் https://sarathi.parivahan.gov.in/ என்ற இணையதளத்தின்மூலம் பழகுநர் உரிமம் பெற விண்ணப்பிக்கலாம். புதிய ஓட்டுநர் உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் முன், ஒரு நபர் பழகுநர் உரிமத்தைப் (LLr) பெற வேண்டும்.

தமிழ்நாடு அரசு தற்பொழுது, ஆதாரை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் பொதுமக்கள் நேரில் வராமல், தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே (Contactless Mode) பின்வரும் சேவைகளைப் பெற வழிவகை செய்துள்ளது.

1. பழகுநர் உரிமம் (LLr)
2. ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல்
3. ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம்
4. ஓட்டுநர் உரிமத்திலிருந்து வாகனத்தின் வகையை ஒப்படைத்தல்
5. போக்குவரத்து அல்லாத வாகனத்தின் உரிமையை மாற்றுவதற்கான அறிவிப்பு மற்றும்
6. தவணைக் கொள்முதல் மேற்குறிப்பு செய்தல்

ஆதாரை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தும் விண்ணப்பதாரர்கள் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது விருப்பமான இடத்திலிருந்தோ பழகுநர் உரிமம் (LLr) தேர்வினை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்லாமலே மேற்கொள்ளலாம். 40 வயதிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள், பதிவு செய்யப்பட்ட மருத்துவரிடம் மருத்துவச் சான்றிதழைப் பெற்று உரிய ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆதார் இல்லாத விண்ணப்பதாரர், ஆவணச் சரிபார்ப்பு மற்றும் பழகுநர் உரிமம் (LLr) தேர்விற்காக நேரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். 2022-2023 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை) 3.49 இலட்சம் பழகுநர் உரிமங்கள் தொடர்பு இல்லாத சேவை மூலமாகவும், 6.83 இலட்சம் பழகுநர் உரிமங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் / பகுதி அலுவலகங்கள் மூலமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

பழகுநர் உரிமத்தைப் பெற்ற பிறகு, ஒரு விண்ணப்பதாரர் நிரந்தர ஓட்டுநர் உரிமத்திற்கு 30 நாட்களுக்குப் பிறகு அல்லது பழகுநர் உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் https://sarathi.parivahan.gov.in/sarathiservice/state *என்ற இணையதளம்மூலம் விண்ணப்பிக்க வேண்டும். ஓட்டுநர் உரிம தேர்விற்கு* https://sarathi.parivahan.gov.in/ *என்ற இணையதளம்மூலம் தேர்விற்கான தேதியை பதிவு செய்யலாம். 2022-2023 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை) 6.61 இலட்சம் புதிய ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. 28.2.2023 அன்றைய நாள் வரை மாநிலத்தில் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமங்களின் மொத்த எண்ணிக்கை 2.67 கோடி ஆகும்.*

6. பதிவுச் சான்றிதழ் வழங்குதல்

எந்தவொரு நபரும்/வாகனத்தின் உரிமையாளரும் வாகனத்தை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மோட்டார் வாகனச் சட்டம், 1988 பிரிவு 39-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட பின்பே, எந்தவொரு பொது இடத்திலோ அல்லது வேறு இடத்திலோ இயக்க அல்லது இயக்குவதற்கு அனுமதிக்க முடியும். இந்தப் பதிவுச் சான்றிதழ், போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கான பதிவு தேதியிலிருந்து 15 ஆண்டுகளுக்கு தகுதியுடையதாகும். அதன்பிறகு, ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் வாகனப் பதிவுச் சான்றிதழ் புதுப்பிக்கப்பட வேண்டும். 2022-23 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை), 15.72 இலட்சம் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

7. போக்குவரத்து வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ்

மோட்டார் வாகனச் சட்டத்தின் விதிகளின்கீழ், போக்குவரத்து வாகனங்களுக்கு சரியான தகுதிச் சான்றிதழ் இருந்தால் மட்டுமே வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் தகுதியுடையதாகும். போக்குவரத்து வாகனத்தின் உரிமையாளர் இணையதளம்மூலம் தேவையான ஆவணங்களைப் பதிவேற்றம் செய்து கட்டணம் செலுத்திய பிறகு, தகுதிச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்க வேண்டும். மோட்டார் வாகனச் சட்டம், 1988, பிரிவு 56, ஒன்றிய மோட்டார் வாகன விதிகள், 1989 விதி 62-ன்படி வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்விற்கு உட்படுத்த வேண்டும்.

போக்குவரத்து வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் பதிவு செய்த நாளிலிருந்து எட்டு ஆண்டு வரையிலான வாகனங்களுக்கு

2023 மார்ச் 29]

இரண்டு ஆண்டுகளுக்கும், எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஓராண்டிற்கும் செல்லத்தக்கதாகும். 2022-23 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை), 7.13 இலட்சம் வாகனங்களுக்குத் தகுதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

8. போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குதல்

மோட்டார் வாகனச் சட்டம் 1988, பிரிவு 66-ன்படி, போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு அவசியமாகும். மோட்டார் வாகனச் சட்டம் 1988-ன்படி பல்வேறு பிரிவுகளின்கீழ் போக்குவரத்து வாகனங்களுக்குக் கீழ்க்கண்டவாறு அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது:

- *நிலைப் பேருந்துகளின் அனுமதிச் சீட்டு பிரிவு 72-ன்கீழ் வழங்கப்படுகிறது. இதுவரை, 20,127 அனுமதிச் சீட்டுகள் மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 7,764 அனுமதிச் சீட்டுகள் தனியார்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.*
- *பிரிவு 72-ன்கீழ் சிற்றுந்து அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை 3,992 சிற்றுந்து அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.*
- *ஒப்பந்த ஊர்தி அனுமதிச் சீட்டுகள் பிரிவு 74-ன்கீழ் வழங்கப்படுகின்றன. இதுவரை 5,05,108 ஒப்பந்த ஊர்தி அனுமதிச் சீட்டுகள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:-*

ஆட்டோ ரிக்ஷா	3,02,173
வாடகை சீருந்து	2,566
சுற்றுலா சீருந்து (மாநில அனுமதி)	1,00,958
சுற்றுலா சீருந்து (தேசிய அனுமதி)	10,923
மேக்ஸி கேப் (மாநில அனுமதி)	81,617
மேக்ஸி கேப் (தேசிய அனுமதி)	5,461
ஆம்னி பேருந்து (மாநில அனுமதி)	1,297
ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி)	113
மொத்தம்	5,05,108

TRUTH ALONE TRIUMPHS

[*2023 மார்ச் 29*

- *தனியார் சேவை வாகனம் மற்றும் கல்வி நிறுவன பேருந்து அனுமதிச் சீட்டுகள் பிரிவு 76-ன்கீழ் வழங்கப்படுகின்றன. இதுவரை 13,763 தனியார் சேவை வாகன அனுமதிச் சீட்டுகளும், 34,725 கல்வி நிறுவன பேருந்துகளுக்கான அனுமதிச் சீட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.*

- *சரக்கு வாகனங்களுக்கான அனுமதிச் சீட்டுகள் பிரிவு 79-ன்கீழ் வழங்கப்படுகின்றன. இதுவரை 6,12,167 சரக்கு வாகனங்களுக்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.*

- *தேசிய அனுமதிச்சீட்டு வாகனங்களுக்கான அனுமதிச் சீட்டுகள் பிரிவு 88(12)-ன்கீழ் வழங்கப்படுகின்றன. இதுவரை 1,19,789 தேசிய அனுமதிச்சீட்டு வாகனங்களுக்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.*

மேற்கண்ட வகைகளின் வாகனங்களுக்கு 5 ஆண்டுகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அனுமதிச் சீட்டுகள் புதுப்பிக்கப்படுகின்றன.

9. வருவாய்

அரசின் கருவூலத்திற்கான வருவாயில் முக்கியப் பங்காற்றுவதில் போக்குவரத்துத் துறையும் ஒன்று. தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டம், 1974-ன்படி வரிகள் வசூலிக்கப்படுகின்றன. இந்தத் துறையால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளுக்கான கட்டணங்கள் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988-ன்கீழ் கூறப்பட்டுள்ள பல்வேறு விதிமீறல்களுக்கான இணக்கக் கட்டணங்கள், ஒன்றிய மோட்டார் வாகன விதிகள், 1989 மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1989-ல் பரிந்துரைத்துள்ளபடி வசூலிக்கப்படுகின்றன. 2022 - 2023 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை) மொத்த வருவாய் ரூ.6,674.29 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.


2023 மார்ச் 29]

கடந்த ஐந்து ஆண்டுகளின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு:-


வருவாய் வளர்ச்சி

(ரூபாய் கோடியில்)

வருவாய் ஆண்டு	ஆண்டு இலக்கு	வசூலிக்கப்பட்ட மோட்டார் வாகன வரிகள் மற்றும் கட்டணங்கள்	வசூல் சதவிகிதம்	வளர்ச்சி விகிதம்
2017-2018	*5635.22*	*5362.91*	*95.17*	*10.46*
2018-2019	*5918.82*	*5572.77*	*94.15*	*3.91*
2019-2020	*6018.63*	*5674.54*	*94.28*	*1.83*
2020-2021	*4566.46*	*4561.17*	*99.88*	*-19.62*
2021-2022	*5635.02*	*5627.40*	*99.88*	*23.38*
2022-2023 (பிப்ரவரி 2023 வரை)	*7637.21*	*6674.29*	*87.39*	*33.83*



[*2023 மார்ச் 29*



10. சோதனைச்சாவடிகளில் வருவாய் விவரம்

இத்துறையில், 22 சோதனைச்சாவடிகள் மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில் செயல்படுகின்றன. சோதனைச் சாவடிகளின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:-

1. பிற மாநிலங்களின் சரக்கு வாகனங்களுக்குத் தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்குதல், தமிழ்நாடு மாநிலத்திற்குள் சரக்குகள் தடையின்றி செல்ல அனுமதிச்சீட்டு வழங்குதல்

2. மாநிலங்களுக்கிடையே சுற்றுலாப் பயணிகள் எளிதாகப் பயணிக்கும் பொருட்டு நம் மாநிலம் மற்றும் பிற மாநிலங்களின் சுற்றுலா வாகனங்கள், (அதாவது) மோட்டார் கேப், மேக்ஸி கேப் போன்ற வாகனங்களுக்குத் தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்குதல்.

2023 மார்ச் 29]

3. அனைத்து மாநிலங்களின் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களை ஆய்வு செய்து முறைகேடுகளைக் கண்டறிந்து சோதனை அறிக்கைகள் வழங்கி, கள அபராதம் (Spotfine) வசூல் செய்தல், வரி மற்றும் கட்டணம் ஏதேனும் நிலுவை இருந்தால் அதனை வசூலித்து மாநிலத்தின் வருவாயை அதிகரித்தல்.

சோதனைச் சாவடிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பெறப்பட்ட வருவாய் விவரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

வ. எண்	சோதனைச் சாவடியின் பெயர்	2017-2018	2018-2019	2019-2020	2020-2021	2021-2022	2022-2023 (பிப்ரவரி 2023 வரை)
1	பூந்தமல்லி	24.43	28.37	31.97	5.74	5.88	9.52
2	திருத்தணி	16.67	12.86	15.64	11.25	3.83	8.11
3, 4	பெத்திகுப்பம் (உள்வருகை மற்றும் வெளி செல்லுகை)	37.74	31.54	45.83	13.24	29.26	41.78
5	பாலவாக்கம்		2.42	4.13	2.74	2.4	2.64
6	சேர்காடு	4.11	4.05	6.4	1.26	2.41	4.57
7	காட்பாடி	16.15	17.19	23.92	3.63	5.25	10.05
8	பாகலூர்	6.18	6.86	11.07	6.37	5.6	10.74
9	ஓசூர் (உள்வருகை)	56.19	56	69.43	19.72	29	51.67
10	ஓசூர் (வெளி செல்லுகை)	23.99	24.81	36.89	6.28	8.26	15.32
11	காளிகோயில்		1.38	2.63	2.16	1.92	3.03
12	திருச்சிற்றம்பலம்	5.5	6.69	8.65	1.61	2.83	3.26

வ. எண்	சோதனைச் சாவடியின் பெயர்	2017-2018	2018-2019	2019-2020	2020-2021	2021-2022	2022-2023 (பிப்ரவரி 2023 வரை)
13	கே.ஜி.சாவடி (உள்வருகை)	12.94	11.86	15.79	4.02	4.69	9.96
14	கே.ஜி.சாவடி (வெளி செல்லுகை)	9.34	8.87	11.09	4.51	5.71	7.27
15	கோபாலபுரம்	4.39	5.01	7.45	1.39	1.36	2.22
16	வலந்தாயமரம்	4.31	4.52	5.67	1.02	1.84	2.53
17	தலை-கொண்டா	2.14	2.44	2.26	0.16	0.34	0.62
18	கூடலூர்	3.9	4.45	4.34	0.95	1.73	4.69
19	பண்ணாரி	5	5.36	7.59	3.1	2.11	2.65
20	லோயர்கேம்ப்	9.12	5.83	6.39	2.17	3.01	2.17
21	கலியக்காவிளை	8.01	4.54	6.69	2.44	3.55	4.69
22	புளியரை	4.55	3.98	4.45	1.95	2.19	2.03
	மொத்தம்	254.66	249.03	328.28	95.71	123.17	199.52

மூலம்: சரக அலுவலர்கள் மற்றும் வாகன் அறிக்கை

11. உள்கட்டமைப்பு, மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்துதல்

(அ) உள்கட்டமைப்பு (நிலம் மற்றும் கட்டடங்கள்)

சென்னை மற்றும் ஸ்ரீரங்கத்தில் உள்ள இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்) அலுவலகங்கள், 12 சரக அலுவலகங்கள், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 54 பகுதி அலுவலகங்கள் மற்றும் 22 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. இதில், 12 சரக அலுவலகங்கள், 68 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 28 பகுதி அலுவலகங்கள், 15 சோதனைச் சாவடிகள் சொந்த

2023 மார்ச் 29]

கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 23 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 26 பகுதி அலுவலகங்கள், 7 சோதனைச் சாவடிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

(ஆ) செயலாக்கம்

போக்குவரத்துத் துறையில் 12 செயலாக்கப் பிரிவுகள் சரக அலுவலகங்களுடனும் மற்றும் 2 செயலாக்கப் பிரிவுகள் இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), அலுவலகங்களுடனும் இணைந்து இயங்குகின்றன. திருநெல்வேலி சரகத்தினைத் தவிர, ஒவ்வொரு பிரிவிற்கும், ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலரின்கீழ் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நிலை-I மற்றும் நிலை-II ஆகியோர் செயல்படுகின்றனர்.

2022-23 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை), 10.53 இலட்சம் வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு, பல்வேறு விதிமீறல்களுக்காக 1.92 இலட்சம் சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டு, ரூ.15.77 கோடி வரியாக வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.28.65 கோடி இணக்கக் கட்டணம் வசூல் செய்ய சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. சோதனையில் கண்டறியப்பட்ட பல்வேறு விதிமீறல்களின் விவரங்கள் பின்வருமாறு:-

வ.எண்	விதிமீறல்கள்	எண்ணிக்கை
1	ஓட்டுநர் உரிமங்கள் இல்லாமல் இயக்குதல்	36,078
2	காப்பீட்டுச் சான்றிதழ் இல்லாமல் இயக்குதல்	31,791
3	சிறை பிடிக்கப்பட்ட வாகனங்கள்	24,577
4	சிவப்பு பிரதிபலிப்பான்கள் இல்லாமல் இயக்குதல்	20,673
5	அதிக நபர்கள் ஏற்றிச் செல்லுதல்	15,841
6	நடைசீட்டு பராமரிக்கப்படாமல் இயக்குதல்	15,430
7	புகைப் கட்டுப்பாட்டு சான்றிதழ் நடப்பில் இல்லாமல் இயக்குதல்	15,012
8	அதிக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல்	14,902

[2023 மார்ச் 29

வ.எண்	விதிமீறல்கள்	எண்ணிக்கை
9	வாகன ஆவணங்களின் நடப்பு விவரங்கள் வாகனத்தின் இடதுபுறத்தில் எழுதப்படாதது	14,706
10	கண் கூசும் முகப்பு விளக்குகளைப் பொருத்தி இருத்தல்	12,066
11	தகுதிச் சான்றிதழ் இல்லாமல் இயக்குதல்	11,436
12	பின்புறம் சிகப்பு விளக்குகள் பொருத்தாமல் இயக்குதல்	10,500
13	பல ஒலி எழுப்பும் காற்று ஒலிப்பான்களைப் பயன்படுத்துதல்	8,880
14	அதிக வேகமாக வாகனத்தை இயக்குதல்	8,297
15	வரி செலுத்தாமல் இயக்குதல்	5,134
16	தார்பாயால் மூடப்படாத மணல் லாரிகள்	4,802
17	அனுமதிச் சீட்டு இல்லாமல் இயக்குதல்	3,957
18	அனுமதிக்கப்பட்ட உயரத்திற்கு மேல் பொருட்களை ஏற்றிச் செல்லுதல்	2,822
19	தகுதிச் சான்றிதழைத் தற்காலிகமாக இரத்து செய்தல்	2,685
20	பின்புறம் அதிகமாக பாரம் நீட்டி இருத்தல்	1,710
21	அனுமதிச் சீட்டினை தவறான முறையில் பயன்படுத்துதல்	1,421
22	பக்கவாட்டில் பாரம் அதிகமாக நீட்டி இருத்தல்	1,261
23	அங்கீகரிக்கப்படாத தடங்களில் வாகனத்தை இயக்குதல்	924
24	ஆட்டோ ரிக்ஷா கட்டணமானி பழுதடைந்த நிலையில் வாகனத்தை இயக்குதல்	666
25	மது அருந்திவிட்டு வாகனங்களை இயக்குதல்	607
26	பள்ளிப் பேருந்துகளில் அதிக குழந்தைகளை ஏற்றிச் செல்லுதல்	585

2023 மார்ச் 29]

வ.எண்	விதிமீறல்கள்	எண்ணிக்கை
27	அதிக கட்டணம் வசூலித்தல்	454
28	அனுமதி பெறாமல் திரவ எரிவாயு கிட் பொருத்தி இருத்தல்	270

(இ) இ - சலான்

இ-சலான் செயலி என்பது ஆன்ட்ராய்டு அடிப்படையிலான கைப்பேசி பயன்பாடு மற்றும் இணையதளத்தை உள்ளடக்கிய ஒரு மென்பொருளாகும். இது போக்குவரத்து செயலாக்க அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து காவல் துறையினருக்குக் கள அபராதத்தை வசூலிக்கும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. இச்செயலி கைப்பேசியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதால் எந்த நேரத்திலும், எங்கும் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்கிறது. இந்த பயன்பாடு வாகன் 4 மற்றும் சாரதி 4-ன் தேவைகளுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்டு, தேசிய தரவுத்தளங்களிலிருந்து தரவை எடுத்து புதுப்பிக்க இயலும். வட்டாரப் போக்குவரத்து அலுவலரோ அல்லது காவல் துறை அதிகாரியோ, மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளை மீறிய குற்றத்திற்காக மின்னணு சாதனத்தில் இ-சலான் அனுப்பினால், போக்குவரத்து விதிமீறல் குறித்த விவரங்களுடன் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி அறிவிப்பு அனுப்பப்படும். குற்றங்கள் மின்னணு முறையில் பதிவு செய்யப்படுகின்றன. மேலும், வாகனச் சோதனை அறிக்கை முடிக்கப்படாமல் இருந்தால், வாகனத்தின் அடுத்த பரிவர்த்தனைகளைத் தடுக்க இது உதவுகிறது. ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர் தொடர்ந்து விதிமீறல்களில் ஈடுபட்டால் ஓட்டுநர் உரிமத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. செயலாக்க அதிகாரிகள் பாயின்ட் ஆஃப் சேல் (PoS) இயந்திரங்கள்மூலம் அபராத தொகையினை வசூலித்து வருகின்றனர். பொதுமக்கள் https://echallan.parivahan.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக அபராத தொகையினை செலுத்தலாம். இந்த செயலி தரவு ஒருங்கிணைப்பு, நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும்.

போக்குவரத்து அதிகாரிகளால் ஜனவரி 2022 முதல் பிப்ரவரி 2023 வரை பிஓஎஸ் (PoS) இயந்திரங்கள் மூலமாக வசூலிக்கப்பட்ட இ-சலான் தொகை பின்வருமாறு:-

[2023 மார்ச் 29

மொத்த சலான்களின் எண்ணிக்கை	சலான்கள் தீர்வு செய்யப்பட்டவை	சலான்கள் நிலுவையில் உள்ளவை	மொத்த சலான் தொகை	வருவாய் வசூல் செய்யப்பட்டவை	வருவாய் நிலுவையில் உள்ளவை	வாகனம் சிறைபிடிக்கப்பட்டவை	வாகனம் விடுவிக்கப்பட்டவை	பதிவுறுக்கள் கையகப்படுத்தப்பட்டவை
102299	21919	80380	223191600	41074825	182116775	503	128	0

மூலம்: காவல் துறை மற்றும் இ-சலான் இணையதள அறிக்கை

(ஈ) சாலைப் பாதுகாப்பில் மின்னணுக் கண்காணிப்பு மற்றும் செயலாக்கம்

GSR.575 (E) அறிவிக்கை, மோட்டார் வாகனச் சட்டம் 1988, பிரிவு 136A மற்றும் ஒன்றிய மோட்டார் வாகன விதிகள் 1989, விதி 167A-ன்கீழ் சாலைப் பாதுகாப்பில் மின்னணுக் கண்காணிப்பு மற்றும் செயலாக்கம் தொடர்புடையதாகும். மேற்கண்ட விதிகளின்படி, அபராத இரசீதுகள் வழங்க பயன்படுத்தப்படும் மின்னணுச் செயலாக்கச் சாதனங்கள், இதற்கென நியமனம் செய்யப்பட்ட அதிகாரியால் சரியாக இயங்குகின்றன என சான்றொப்பம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

மின்னணு செயலாக்கச் சாதனம் என்பது வேக நிழற்படக் கருவி, CCTV கருவி, வேக அளவீட்டுக் கருவி, உடலில் அணியக்கூடிய நிழற்படக் கருவி, டாஷ்போர்டு நிழற்படக் கருவி, தானியங்கி பதிவு எண் அடையாளக் கருவி (ANPR), எடைமேடை (WIM) மற்றும் மாநில அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட பிற தொழில்நுட்பம் அடங்கிய சாதனங்களை உள்ளடக்கியதாகும். மின்னணு செயலாக்கச் சாதனங்களைச் சான்றளிக்க, ஒரு தகுதியான அதிகாரியை நியமிப்பதற்கான கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

2023 மார்ச் 29]

(உ) கள அபராதத் தொகையை அதிகரித்தல்

அரசாணை (நிலை) எண் 758, உள் (போக்குவரத்து.VII) துறை, நாள் 19-10-2022-ன்படி கள அபராதத் தொகையை அதிகரித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வரசாணையானது அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டித்தும் உத்தரவிடப்பட்டுள்ளது. மோட்டார் வாகனச் சட்டம் 1988, பிரிவு 200 (1)-ன்கீழ் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் (தொழில்நுட்பமற்ற) மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் (நிலை-II) மற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் (போக்குவரத்து) ஆகியோரும் கள அபராதத் தொகையை வசூல் செய்ய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திருத்தியமைக்கப்பட்ட கள அபராதத் தொகையானது நவம்பர், 2022 முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

12. மின்-ஆளுமை முயற்சிகள்

(அ) மின்-ஆளுமை

அரசு, சிறந்த நிர்வாகத்தை வழங்குவதற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து வருகிறது. பல்வேறு முறைகள், கருவிகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன்மூலம், ஒவ்வொரு குடிமக்களுக்கும் அவர்களது இருப்பிடத்திற்கே சேவைகள் சிறந்த முறையில் வழங்கப்பட்டு வருகின்றன. பெருவாரியான மக்கள் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அணுகுகின்றனர். நவீன தொழில்நுட்பங்கள், குடிமக்களுக்குச் சேவைகளை சிறப்பாக வழங்க வழிவகுப்பதுடன், துறை தொடர்பான தரவுகள் கிடைக்கப்பெறுவதன்மூலம் அதிகாரமளித்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆகியவற்றிற்கு வித்திடுகிறது. "வாகன்" (https://vahan.parivahan.gov.in/vahan) என்ற இணையதளத்தின்மூலம் பொதுமக்கள் வாகனம் தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளையும் பெறலாம். அதாவது, தகுதிச் சான்றிதழ், வரி மற்றும் கட்டணம் செலுத்துதல், உரிமை மாற்றம், தவணைக் கொள்முதல் மேற்குறிப்பு / இரத்து செய்தல், முகவரி மாற்றம் போன்றவை ஆகும். இதேபோன்று, "சாரதி" (https://sarathi.parivahan.gov.in/) என்ற இணையதளம், ஓட்டுநர் உரிமம் தொடர்பான அனைத்துப் பரிவர்த்தனைகளையும் எளிதாக்குகிறது.

[2023 மார்ச் 29

(ஆ)ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான ஓட்டுநர் உரிமம் / பதிவுச் சான்றிதழ் வழங்குதல்

22.1.2019 முதல் அனைத்து அலுவலகங்களிலும், அனைத்து ஓட்டுநர் உரிமங்களும் மற்றும் பதிவுச் சான்றிதழ்களும் ஸ்மார்ட் கார்டு வடிவில் வழங்கப்பட்டு வருகிறது. இது மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் தரவுத்தளம் உருவாக வழிவகுப்பதுடன் போலி மற்றும் இதர சட்டத்திற்குப் புறம்பாக உள்ள ஆவணங்களைக் கண்டறிய உதவுகிறது.

(இ) தகுதிச் சான்றிதழ் மென்பொருள்

வாகன தகுதிச் சான்றிற்கான ஆய்வானது, சாலையில் வாகனம் இயக்குவதற்கு தகுதியாக உள்ளது என்பதை அறியும் பொருட்டு மட்டுமன்றி, வாகனத்தின் மாசு அளவு கட்டுக்குள் உள்ளது என்பதை உறுதி செய்வதாகும். வாகன ஆய்வின்போது, மோட்டார் வாகன ஆய்வாளர்கள் வாகனத்தை ஆய்வு செய்த தேதி மற்றும் நேரத்துடன் புகைப்படம் எடுத்து, அனுமதிக்காக "வாகன்" இணையத்தில் பதிவேற்றம் செய்கின்றனர். இது வாகனத்தின் நிலையைப் பற்றிய ஆதாரங்களை எதிர்காலத் தேவைகளுக்காகவும், ஆய்வின் தரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றது.

(ஈ) ஆதாரை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி நேரடி தொடர்பில்லா சேவைகளை வழங்குதல்

*இணையதளம்மூலம் பொதுமக்கள் ஆதாரை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி, பழகுநர் உரிமம் பெறுதல், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் செய்தல் ஆகிய நேரடி தொடர்பில்லா சேவைகள் (*Contactless Services*) 12.4.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஓட்டுநர் உரிமத்திலிருந்து வாகனத்தின் வகையை ஒப்படைத்தல், போக்குவரத்து அல்லாத வாகனத்தின் உரிமம் மாற்றத்திற்கான அறிவிப்பு மற்றும் தவணைக் கொள்முதல் மேற்குறிப்பு செய்தல் ஆகிய மூன்று நேரடி தொடர்பில்லா சேவைகள் 1.11.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

இது சேவைகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை எளிதாக்குவதுடன், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை ஏற்படுத்தி, விண்ணப்பதாரர்கள் தங்கள் சேவைகளை நேரடியாக, எளிதான வகையில் பெற உதவுகிறது. இது, வட்டாரப் போக்குவரத்து

2023 மார்ச் 29]

அலுவலகங்களுக்கு வரும் மக்களின் எண்ணிக்கையைக் குறையச் செய்கிறது. மேற்கண்ட நேரடி தொடர்பில்லா சேவைகளைச் செயல்படுத்தியதன்மூலம் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

நேரடி தொடர்பில்லாத சேவைகள் (வாகன் மற்றும் சாரதி)

மாதம்	பழகுநர் உரிமங்கள்			ஓட்டுநர் உரிமங்கள் புதுப்பித்தல்			ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம்			வாகன வகையை ஒப்புவிப்பு செய்தல்(*)	தவணைக் கொள்முதல் சேர்ப்பு(*)	வாகன உரிமம் மாற்றத்திற்கான அறிவிப்பு(*)
	இணையதளம் மூலம்	அலுவலகம் மூலம்	மொத்தம்	இணையதளம் மூலம்	அலுவலகம் மூலம்	மொத்தம்	இணையதளம் மூலம்	அலுவலகம் மூலம்	மொத்தம்			
12.04.2022 முதல் 30.04.2022 வரை	12810	55659	68469	529	11157	11686	241	4021	4262			
மே 2022	24893	57605	82498	873	18210	19083	352	7154	7506			
ஜூன் 2022	28341	60317	88658	605	17841	18446	237	7406	7643			
ஜூலை 2022	35939	69878	105817	590	17229	17819	254	7050	7304			
ஆகஸ்ட் 2022	29388	66191	95579	459	15862	16321	200	6832	7032			
செப்டம்பர் 2022	27211	54535	81746	405	14246	14651	196	6331	6527			

[2023 மார்ச் 29

மாதம்	பழகுநர் உரிமங்கள்			ஓட்டுநர் உரிமங்கள் புதுப்பித்தல்			ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம்			வாகன வகையை ஒப்புவிப்பு செய்தல்(*)	தவணைக் கொள்முதல் சேர்ப்பு(*)	வாகன உரிமம் மாற்றத்திற்கான அறிவிப்பு(*)
	இணையதளம் மூலம்	அலுவலகம் மூலம்	மொத்தம்	இணையதளம் மூலம்	அலுவலகம் மூலம்	மொத்தம்	இணையதளம் மூலம்	அலுவலகம் மூலம்	மொத்தம்			
அக்டோபர் 2022	32799	48933	81732	760	10681	11441	307	4767	5074			
நவம்பர் 2022	47778	86758	134536	1714	15102	16816	861	6919	7780	7	17	58
டிசம்பர் 2022	43024	70099	113123	1669	12546	14215	772	6438	7210	4	7	27
ஜனவரி 2023	33547	54045	87592	1059	10457	11516	388	5569	5957	1	3	7
பிப்ரவரி 2023	33200	59300	92500	1234	11383	12617	517	5944	6461	9	5	15
மொத்தம்	348930	683320	1032250	9897	154714	164611	4325	68431	72756	21	32	107

மூலம்: வாகன் மற்றும் சாரதி ()-01.11.2022 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது*

13. சிற்றுந்துத் திட்டம்

போக்குவரத்து சேவை இல்லாத கிராமப்புற மக்களுக்கு பொது போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு 1997 ஆம் ஆண்டு "சிற்றுந்துத் திட்டத்தை" அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தில், சிற்றுந்துகள் அதிகபட்சமாக 16 கி.மீ வரை இயக்கப்பட்டன. இதில், போக்குவரத்துச் சேவை உள்ள பகுதிகளில் 1 கி.மீ.க்கு மிகாமல் இயக்கப்பட்டன. இந்தத் திட்டத்திற்குப் பொது மக்களிடமிருந்து கிடைத்த அமோக

2023 மார்ச் 29]

வரவேற்பைக் கருத்தில் கொண்டு, 1999 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை மாற்றியமைத்து, சிற்றுந்துகள் அதிகபட்சமாக 20 கி.மீ. வரை இயக்கப்பட்டது. இதில், போக்குவரத்துச் சேவை உள்ள பகுதிகளில் 4 கி.மீ.-க்கு மிகாமல் இயக்கப்பட்டன. நகரப் பகுதி, நகராட்சிப் பகுதி, மாநகராட்சிப் பகுதி ஆகியவை பேருந்துகள் இயக்கப்படும் பகுதிகளாகக் கருதப்படுகின்றன. இதுவரை 3,998 சிற்றுந்துகளுக்கு அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

மதுரை உயர் நீதிமன்றக் கிளை உத்தரவின்படி, புதிய விரிவான சிற்றுந்துத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

14. பள்ளிப் பேருந்துகள் - ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு

மாண்பமை உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களின்படி, பள்ளி பேருந்துகளில் பயணிக்கும் மாணவர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்ய, தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளிப் பேருந்துகளின் ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) சிறப்பு விதிகள், 2012-ஐ அரசு வகுத்துள்ளது. இந்த விதிகள் 1.10.2012 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

29-9-2022 நாளிட்ட அரசாணை எண்.728, உள் (போ.வ.VII) துறையின்படி, மேற்கண்ட சிறப்பு விதிகளில் அரசாங்கம் பின்வரும் திருத்தங்களைச் செய்துள்ளது:

கேமராக்கள் மற்றும் சென்சார் பொருத்துதல்- ஒவ்வொரு பள்ளி பேருந்துகளிலும்-

அ) முன் பக்கத்தில் ஒரு கேமரா பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) பின்பக்கத்தில் ஒரு கேமரா, ஓட்டுநர் வாகனத்தைப் பின்புறமாக இயக்கும்போது பின்பக்கத்தை முழுமையாகப் பார்க்க ஏதுவாக பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

இ) எச்சரிக்கை சமிக்ஞை எழுப்பும் வகையில் பின்புறத்தில் ஒரு சென்சார் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

[2023 மார்ச் 29

17,129 பள்ளிப் பேருந்துகளில் கேமரா / சென்சார் பொருத்தப்பட்டுள்ளன.

15. மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தம்

மாநிலங்களுக்கு இடையேயான வழித்தடங்களில் போக்குவரத்து வாகனங்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும், நமது மாநிலத்திற்கும் அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரிக்கும் இடையே ஒப்பந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையேயான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அண்டை மாநிலங்களுக்கு இடையேயான பயணியர் மற்றும் சரக்கு போக்குவரத்தின் பயணத்தை எளிதாக்கும் வகையில், மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்கள் ஒருமுனை வரி அல்லது வரிச் சலுகைகள் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சரக்கு வாகனங்கள், பயணியர் வாகனங்கள், ஒப்பந்த ஊர்திகள் மற்றும் நிலைப் பேருந்துகள் இரண்டு மாநிலங்களுக்கிடையே தடையில்லாமல் சென்று வர வழிவகை செய்கிறது.

ஒப்பந்தங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

வ. எண்	அண்டை மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்கள்	முதன்மை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு	துணை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு
1.	கர்நாடகம்	1973	1973, 1975, 2005, 2008
2.	கேரளா	1976	1979, 1984, 1995, 1999, 2008,2019
3.	ஆந்திரப் பிரதேசம்	1975	1976, 1993, 1994
4.	புதுச்சேரி	1985	2011

2023 மார்ச் 29]

மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்களின்படி இயங்கும் மோட்டார் வாகனங்கள்

வ. எண்	மாநிலங்கள்	நிலைப் பேருந்துகள்		ஒப்பந்த ஊர்திகள்	சரக்கு வாகனங்கள்
		தடங்கள்	பேருந்துகள்		
1.	தமிழ்நாட்டிலிருந்து ஆந்திராவிற்கு	108	392	200	10,000
2.	ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு	123	467	200	10,000
3.	தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகாவிற்கு	219	544	328/5000	15,000
4.	கர்நாடகாவிலிந்து தமிழ்நாட்டிற்கு	227	530	599/5000	15,000
5.	தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு	144	273	300	5,000
6.	கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு	197	225	300	5,000
7.	தமிழ்நாட்டிலிருந்து புதுச்சேரிக்கு	207	428	வரம்பு இல்லை	8,000
8.	புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு	140	171	வரம்பு இல்லை	800

16. பேட்டரிமூலம் இயக்கப்படும் வாகனங்களுக்கு வரிவிலக்கு

பேட்டரியில் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு, போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு 31-12-2022 வரை மோட்டார் வாகன வரி செலுத்துவதிலிருந்து 100% விலக்கு அளித்திருந்தது. மேலும், 13-1-2023 நாளிட்ட அரசாணை நிலை எண்.17, உள் (போக்குவரத்து.I) துறையின்படி, வரி விலக்கை, அரசு 31-12-2025 வரை நீட்டித்துள்ளது.

[2023 மார்ச் 29

ஆண்டு வாரியாக பதிவு செய்யப்பட்ட பேட்டரியில் இயங்கும் வாகனங்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு:-

ஆண்டு	போக்குவரத்து வாகனங்கள்	போக்குவரத்து அல்லாத வாகனங்கள்	மொத்தம்
2020-2021	3,009	8,927	11,936
2021-2022	2,751	36,866	39,617
2022-2023 (பிப்ரவரி 2023 வரை)	2,531	59,951	62,482
ஆக மொத்தம்	8,291	1,05,744	1,14,035

17. வாகன மாசு கட்டுப்பாடு

காற்று மாசு என்பது கடுமையான உடல் நலக் கேடாகும். இதில், வாகன புகையின் பங்கு கணிசமானது. வாகன மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக, ஒன்றிய மோட்டார் வாகன விதிகள், 1989-ன்படி, வாகன மாசு புகை பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்குள் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த அவ்வப்போது வாகன சோதனைகள் நடத்தப்படுகின்றன.

மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு முடிவடைந்த பிறகு, மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட புகை பரிசோதனை மையங்களால் வழங்கப்பட்ட தகுதியான “புகை கட்டுப்பாட்டுச் சான்றிதழை” வைத்திருக்க வேண்டும். சான்றிதழின் தகுதியான காலம் ஆறு மாதங்கள் ஆகும். பாரத் நிலை-IV மற்றும் நிலை-VI விதிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட வாகனங்களுக்கு புகைச் சான்றிதழின் தகுதியான காலம் பன்னிரண்டு மாதங்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் 493 அங்கீகரிக்கப்பட்ட சோதனை நிலையங்கள் உள்ளன. அவை வாகன் தரவுத்தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 29]

18. சாலைப் பாதுகாப்பு

மேம்படுத்தப்பட்ட சாலைகள், வாகனங்களில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றம், அதிகரித்து வரும் வாகனங்களின் எண்ணிக்கை, சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கடைபிடிப்பதில் பொதுமக்களின் கவனக்குறைவு போன்றவற்றால் விபத்துகள் அதிகரித்து வருவதால், சாலைப் பாதுகாப்பு கவனம் செலுத்த வேண்டிய ஒன்றாக மாறியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் சாலை விபத்துகளால் உயிரிழப்புகள் மற்றும் கொடுங்காய விபத்துகளும் அதிகரித்து வருகின்றன. எனவே, சாலைப் பாதுகாப்புக் கல்வி/சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஓட்டுநர்கள் மற்றும் சாலையைப் பயன்படுத்துபவர்களிடையே ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். பெரும்பாலான விபத்துகள் மனித தவறுகளாலேயே ஏற்படுகின்றன. விபத்துகளைக் குறைக்க காவல், நெடுஞ்சாலை, சுகாதாரம், கல்வி போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில சாலைப் பாதுகாப்பு குழுவானது சாலைப் பாதுகாப்பு தொடர்பான அனைத்துக் கொள்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் ஓர் உயர்மட்ட அமைப்பாகும். மேலும், இது மோட்டார் வாகனச் சட்டம் 1988-பிரிவு 215(2)-ன்கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 21 உறுப்பினர்கள் கொண்ட அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனச் சட்டம் 1988-ன் பிரிவு 215(3)-ன்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 13 உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு நிறுவப்பட்டுள்ளது. இந்த மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு, மாதம் ஒருமுறை கூடி, சாலைப் பாதுகாப்பு பிரச்சினைகளை மதிப்பாய்வு செய்வதற்காகத் தேவையான இடங்களில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கும்.

[2023 மார்ச் 29

மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுவின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:-

அ. மாவட்டத்தில் நிகழ்ந்த சாலை விபத்துகளை ஆய்வு செய்தல் மற்றும் விபத்துக்கான காரணங்களைக் கண்டறிந்து, நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ஆ. மற்ற துறைகளால் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

இ. சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, போக்குவரத்து நெரிசல் இல்லாத வகையில், சாலை விபத்துகளைக் குறைக்க வழிவகை செய்தல்

ஈ. சாலைப் பயனாளிகளிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வைப் பரப்புவதற்கான திட்டங்களைத் தயாரித்தல்.

உ. சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வின் ஒரு பகுதியாக தலைக்கவசம் மற்றும் இருக்கை பட்டை அணிவது போன்ற பல்வேறு சாலைப் பாதுகாப்பு பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல்.

மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:-

1.	மாவட்ட ஆட்சியர்	தலைவர்
2.	துணை காவல் ஆணையர்/காவல் கண்காணிப்பாளர்	உறுப்பினர்
3.	சுகாதாரத் துறையின் தலைமை மருத்துவ அதிகாரி	உறுப்பினர்
4.	செயற்பொறியாளர், நெடுஞ்சாலைகள் (சாலைகள்)	உறுப்பினர்
5.	சரக அலுவலகத்தின் பிரதிநிதி (இந்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் உறுப்பினர்)	உறுப்பினர்
6.	திட்ட இயக்குநர், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையரகம்	உறுப்பினர்

2023 மார்ச் 29]

7.	நகராட்சிகள்/நகர்ப்புற அமைப்புகள் / அறிவிக்கப்பட்ட அதிகாரிகளின் செயல் அதிகாரி	உறுப்பினர்
8.	மாநிலத்தில் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதில் குறைந்தபட்சம் ஒரு சிவில் சமூக அமைப்பு அல்லது எந்தவொரு அரசு சாரா அமைப்பு (என்.ஜி.ஓ.) பணிபுரிகிறது.	உறுப்பினர்
9.	வட்டாரப் போக்குவரத்து அலுவலர்	உறுப்பினர்
10,	மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கிய மாவட்ட சாலைகளின் நெடுஞ்சாலை நிர்வாகி	செயற் உறுப்பினர்

மேலும், பின்வரும் ஆறு தலைப்புகளின்கீழ் சாலைப் பாதுகாப்பு விதிமீறல்கள் கண்காணிக்கப்பட்டு, தொடர்ந்து விதிமீறல்களில் ஈடுபடுவோர்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:

1. அதிவேகம்
2. அதிக பாரம் ஏற்றுதல்
3. சரக்கு வாகனங்களில் ஆட்களை ஏற்றிச் செல்லுதல்
4. சிவப்பு விளக்கை தாண்டுதல்
5. குடிபோதையில் வாகனத்தை இயக்குதல்
6. வாகனம் ஓட்டும்போது கைபேசி உபயோகித்தல்

2022 ஆம் ஆண்டில், மேலே குறிப்பிட்ட போக்குவரத்து விதிமீறல்களுக்காக 66,147 ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பு முயற்சிகளை திறம்பட செயல்படுத்தும் வகையில் "இன்னுயிர் காப்போம் திட்டம்" வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

1. சாலைப் பாதுகாப்பு குறித்த சிறப்புப் பணி
2. சாலைப் பாதுகாப்பு ஆணையம்

3. சீரான சாலைகள்

4. நம்மை காக்கும் 48

5. இன்னுயிர் காப்போம் – உதவி செய் திட்டம்

அரசாணை (நிலை) எண். 146, உள்(போக்குவரத்து-V) துறை, நாள்: 15-3-2022-ன்படி மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களின் தலைமையில் இதர 4 உறுப்பினர்களுடன் சாலைப் பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சாலைப் பாதுகாப்பிற்கான சிறப்புப் பணிக்குழுவின் முக்கிய நோக்கம் பின்வருமாறு:-

அ) சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை குறைப்பதற்கான குறுகிய மற்றும் நீண்ட கால தீர்வுகளை கண்டறிதல்.

ஆ) மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சாலையை பராமரிக்கும் முகமைகள்மூலம் குறுகிய கால தீர்வுகளை செயல்படுத்துவதை கண்காணித்து அறிக்கை சமர்ப்பித்தல்.

இ) தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு ஆணையத்தை உருவாக்குவதற்குத் தொடர்புடைய அனைத்து ஆயத்தப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

ஈ) மாநிலத்தில் உள்ள அடிக்கடி விபத்துகள் நிகழும் இடங்களைக் (Hot Spots/Black Spots) கண்டறிந்து, குறுகிய மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள்மூலம் மேம்படுத்துதல்

சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து, சாலை பாதுகாப்பு சிறப்புப் பணிக்குழு அமைக்க ரூ.7.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சாலைப் பாதுகாப்பிற்கான சிறப்புப் பணிக்குழு தமிழ்நாடு முழுவதும் அடிக்கடி விபத்துகள் நிகழும் 3,668 இடங்களைக் (Hot Spots) கண்டறிந்து, சாலைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.196.94 கோடி முன்மொழிந்துள்ளது. முன்னுரிமை அடிப்படையில், 2,093 அடிக்கடி விபத்துகள் நிகழும் இடங்களை (Hot Spots) சரி செய்வதற்கு ரூ.90 கோடி செலவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன. இதில், நடப்பு நிதியாண்டில் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்

2023 மார்ச் 29]

ரூ.43.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை 2023-2024 ஆம் நிதியாண்டில் வழங்கப்படும்.

சாலைப் பயனாளிகளுக்கு, சாலைப் பாதுகாப்புத் தகவல், கல்வி மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த, "இன்னுயிர் காப்போம்-உதவி செய் திட்டம்" தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 18-12-2021 முதல் 6-2-2023 வரை விபத்துக்குள்ளான 1,43,175 நபர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் ரூ.126.47 கோடி செலவிடப்பட்டுள்ளது.

விபத்துகள், உயிரிழப்புகள் போன்ற விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

தமிழ்நாட்டில் நடந்த விபத்துகளின் விவரங்கள்


ஆண்டு	மொத்த வாகனங்களின் எண்ணிக்கை	மொத்த விபத்துகள்	உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள்	உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை	முந்தைய ஆண்டை விட இறப்பு சதவீதம் அதிகரித்துள்ளது
2017	*25147056*	*66763*	*16899*	*17918*	*4.07*
2018	*27141431*	*67279*	*17387*	*18392*	*2.65*
2019	*29012556*	*62685*	*17196*	*18129*	*-1.43*
2020	*30450289*	*49844*	*13868*	*14527*	*-19.87*
2021	*31910687*	*55682*	*14747*	*15384*	*5.90*
2022	*33505611*	*64105*	*17080*	*17884*	*16.25*

மூலம்: மாநில குற்ற ஆவணக் காப்பகம், காவல் துறை தலை இயக்குநரகம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 29

மொத்த விபத்துகள் மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு அறிக்கை



2020 மற்றும் 2021 ஆண்டுகள் கொரோனா பெருந்தொற்றுக் காலமாக இருந்த காரணத்தினால், 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட விபத்து மற்றும் உயிரிழப்புகளை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்வது சரியான ஒன்றாக இருக்கும். அவ்வாறு ஒப்பீடு செய்கையில், சாலையின் நீளம் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், "இன்னுயிர் காப்போம் திட்டம்" என்ற முத்தாய்ப்பான திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியதன் விளைவாகவும், அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளின் காரணமாகவும் உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் குறைந்துள்ளன.

(அ) சாலை பாதுகாப்பு நிதி

ஒவ்வோர் ஆண்டும் வரவு செலவு திட்டத்தில் சாலை பாதுகாப்பு நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. இச்சாலைப் பாதுகாப்பு நிதியானது, போக்குவரத்து மற்றும் காவல் துறையினரால் வசூலிக்கப்படும் கள அபராதம் மற்றும் இணக்கக் கட்டணம்மூலம் பெறப்படுகிறது. மேலும், இந்த நிதியானது சாலை விபத்துகள் மற்றும் அதனால்

2023 மார்ச் 29]

ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்கும் நோக்கத்துடன் பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

2012-13 முதல் 2022-23 வரை, ஒவ்வோர் ஆண்டும் சாலைப் பாதுகாப்பு நிதி ரூ.65 கோடி அரசால் ஒதுக்கப்படுகிறது. சாலைப் பாதுகாப்பு நிதியைப் பயன்படுத்துவதற்காக, அரசாணை (நிலை) எண் 198, உள்துறை, நாள்: 13-3-2018-ன்படி, காலாவதியாகாத சாலை பாதுகாப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதி

அரசாணை (நிலை) எண் 1530, உள்துறை, நாள்: 3-7-1978-ன்படி அரசானது, சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்குவதற்காக முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியை உருவாக்கியுள்ளது. மாநிலப் போக்குவரத்து கழகப் பேருந்துகள் அல்லது மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் பேருந்துகள் மற்றும் பிற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்ட ஆனால் மாநிலத்திற்குள் இயங்கும் பேருந்துகளால் விபத்துக்குள்ளாகி உயிரிழந்த அல்லது காயமடைந்த நபர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்.

முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ் கடந்த ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	**ஆண்டு**	**ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)**
1.	2016 – 2017	50
2.	2017 – 2018	80
3.	2018 – 2019	80
4.	2019 – 2020	100
5.	2020 – 2021	100
6.	2021 – 2022	100
7.	2022 – 2023	100

[2023 மார்ச் 29

(இ) சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு

சாலைப் பாதுகாப்பின் கோட்பாடு, சாலைப் பயனாளர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதை முக்கிய கருப்பொருளாக கொண்டிருக்கிறது. மக்களிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் சாலைப் பாதுகாப்பு வாரம்/மாதம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்காக, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யவும் தலா ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) சாலை பாதுகாப்பு மன்றம்

இளைஞர்களிடையே சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 6,043 அரசு பள்ளிகளிலும், 2,038 அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் சாலை பாதுகாப்பு மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(உ) ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தளம் (i-RAD)

*ஒன்றிய தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம் மற்றும் தேசிய தகவல் மையத்தினரால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தளம் (*i-RAD*) என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது விபத்து விவரங்களை மின்னணு முறையில் பதிவு செய்ய* IOS *மற்றும்* Android *ஆகிய இயங்குதளங்களில் பயன்படும் கைப்பேசி செயலியாகும். போக்குவரத்து, காவல், கல்வி, நெடுஞ்சாலைகள் மற்றும் சுகாதாரம் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டு, சாலை விபத்துகள் தொடர்பான அனைத்து தரவுகளும் இந்த தளத்தில் பதிவு செய்யப்படுகின்றன.*

(ஊ) மாவட்டங்கள் மற்றும் காவல் துறை ஆணையர்களுக்கான முதலமைச்சரின் விருது

சாலை விபத்து மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைத்ததற்காக சிறந்த மூன்று மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் ஒரு காவல் ஆணையருக்கு விருது வழங்கும் திட்டம் 2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தேர்வுக்கான அளவுகோல் அரசால் வகுக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29]

விருதுகள் பின்வருமாறு வழங்கப்படுகிறது:

சிறந்த மாவட்டங்களுக்கான கேடயம்	
முதல் பரிசு :	ரூ.25.00 இலட்சம்
இரண்டாவது பரிசு:	ரூ.13.00 இலட்சம்
மூன்றாவது பரிசு:	ரூ.10.00 இலட்சம்
காவல் ஆணையருக்கான கேடயம்	
ரூ.15.00 இலட்சத்துடன்கூடிய கேடயம்	

19. முடிவுரை

சாலைப் பாதுகாப்பு என்பது திறம்பட்ட செயலாக்கத்துடன் இணைந்த தொழில்நுட்ப தீர்வுகள் மட்டுமல்லாமல், சாலைப் பயனாளர்களிடையே நடத்தை மாற்றத்தையும் உள்ளடக்கியதாகும். தமிழ்நாடு அரசு, சாலை விபத்துகளையும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளையும் குறைக்க தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதை அடைவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், “நம்மை காக்கும் 48”, அவசர மருத்துவச் சேவைகள் சட்டம், உதவி செய் திட்டம், சீரான சாலைகள் மற்றும் விரிவான தகவல் பரிமாற்ற பிரச்சாரங்கள் ஆகிய கருப்பொருள்களை மையமாகக் கொண்டு “இன்னுயிர் காப்போம் திட்டம்” என்ற முத்தாய்ப்புத் திட்டத்தை அறிவித்துள்ளார்.

பொதுமக்களிடையே சாலை விதிகளை மதிப்பதை ஊக்குவிக்கும் வகையில், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், சாலை விபத்துகளைக் குறைக்க இத்துறை பல்வேறு திட்டங்களை நடத்தி வருகிறது.

பொதுமக்கள் தரப்பில் பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்ற மனப்பான்மையும், அரசின் திட்டங்களும் விபத்துகளின் எண்ணிக்கையை குறைக்க பெருமளவில் பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

இத்துறை பொதுமக்கள் சேவைகளை எளிதாகப் பெறுவதற்கு ஏதுவாக, வணிகம் செய்வதற்கான எளிதான கொள்கைகளுக்கு இணங்க (Ease of Doing Business Principles), இணையதள சேவைகளை மேலும் முனைப்புடன் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 29

இணைப்பு IV

(254 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

போக்குவரத்து தேசிய/மாநில கட்டமைப்பிற்கு மையமாக உள்ளது. பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் போக்குவரத்து பன்மடங்கு பங்காற்றுகிறது. போக்குவரத்து என்பது சமவாய்ப்புக் கருவியாகவும், அடிப்படை உரிமையாகவும் கருதப்பட வேண்டும். பரந்த போக்குவரத்து சேவைகள் குறைந்த கட்டணத்தில் கிடைக்கும்பட்சத்தில் தனி நபர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் திறன் அதிகரிக்கிறது. இது பரந்த வாய்ப்புகளை உருவாக்கி, சமூக மற்றும் பொருளாதார இலக்கை அடைவதற்கு, பலவிதமான நன்மைகளை அளித்து அதன்மூலம் செயல்பாட்டுத்திறன் அதிகரித்து பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு வழிவகுக்கிறது.

“போக்குவரத்து அமைப்புகள் செயல்திறன் மிக்கவையாக இருக்கும்போது, அவை பொருளாதார மற்றும் சமூக வாய்ப்புகளை வழங்குவதோடு, பொருட்களை சந்தைப்படுத்துதல், வேலைவாய்ப்பு மற்றும் கூடுதல் முதலீடுகள் போன்ற பன்மடங்கு நன்மைகள் ஏற்படுகின்றன. போக்குவரத்து அமைப்புகள் திறன் அல்லது நம்பகத்தன்மையின் அடிப்படையில் குறைபாடுடையதாக இருக்கும்போது,பொருளாதார வாய்ப்புகளைத் தவறவிடும்பொழுது, குறைந்த பொருளாதாரம் மற்றும் குறைந்த வாழ்க்கைத் தரம் போன்றவைதான் கிடைக்கும்”.

போக்குவரத்துத் துறையில், சாலைப் போக்குவரத்து பிரிவு ஒரு முக்கிய இயக்கியாக உள்ளதுடன், குறைவான செலவு கொண்டதால், சாலைப் போக்குவரத்து "மிகவும் விருப்பமான போக்குவரத்து முறையாக” விளங்குகிறது. சாலைப் போக்குவரத்துப் பிரிவில் பேருந்து போக்குவரத்து என்பது உள்ளூர், நகரப் பகுதி, கிராமப்புறப் பகுதிகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளுக்கு மக்களின் நகர்வினை எளிதாக்குவதை நோக்கமாகக்

2023 மார்ச் 29]

கொண்ட பொதுவான போக்குவரத்து முறையாகும். மேலும், சமவெளி மற்றும் மலைப் பகுதிகளிலுள்ள கடைக்கோடி மக்களுக்கும், முதல் மற்றும் கடைசி மைல் இணைப்புகள்மூலம் பேருந்து வசதிகளை வழங்குகிறது.

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள், பயணிகள் போக்குவரத்தில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. அவற்றை மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியிலிருந்து பிரிக்க முடியாது. முதலாவதாக, இது அத்தியாவசியப் பேருந்து சேவைகளைக் குறைந்த கட்டணத்தில் வழங்குவதால், சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் கல்வி போன்றவற்றில் சமமான மேம்பாடு அடைவதற்கு வழிவகுக்கிறது. இரண்டாவதாக, பொதுப் போக்குவரத்து சேவைமூலம் தனியார் வாகனங்கள் குறைந்து, அந்த வாகனங்களால் ஏற்படும் மாசு அளவு மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார அபாயங்கள் குறைந்து, சாலைகளில் நெரிசல் குறைகிறது. மூன்றாவதாக, போக்குவரத்துக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் உள்ள வலுவான தொடர்பில், பொருளாதார வளத்தில் தமிழ்நாடு இன்றளவும் முன்னணியில் உள்ளதைக் காணலாம்.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் உள்ளூர், நகரப் பகுதி, கிராமப் பகுதி, நகரங்களுக்கு இடையே மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளுக்கு மக்கள் செல்வதற்குப் பல்வேறு வகையான சேவைகளைக் குறைந்த கட்டணத்தில் வழங்குவதால், நாளொன்றுக்கு ஏறத்தாழ 1.70 கோடி மக்கள் பயணம் செய்ய முடிகிறது. தமிழ்நாடு அரசு குறிப்பிட்ட பிரிவினருக்குக் குறைந்த கட்டணத்தில் அல்லது கட்டணம் இல்லாமல் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய பயணக் கட்டணச் சலுகை வழங்குகிறது. மேலும், தினமும் பயணிப்போரில் பாதிபேர் சலுகைக் கட்டணத்தில் பயணிக்கின்றனர். சலுகைப் பயணம் செய்யும் பயணிகளில் பெண்கள், மாணவர்கள், திருநங்கைகள் 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலுள்ள மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் ஆவர்.

மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை, இதர நகரங்களில் தனியார் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்களும் இணைந்து நகரங்களுக்கிடையிலான பேருந்து சேவைகளை வழங்குகின்றன. மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னையில் பொதுப் போக்குவரத்து அமைப்பை நிலை நிறுத்தவும், மேம்படுத்தவும்

[2023 மார்ச் 29

அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் நிலையில், சென்னை பெருநகரில் போக்குவரத்து நெரிசல், அதனால் ஏற்படும் எரிபொருள் இழப்பு மற்றும் காத்திருப்பு நேரம் ஆகியவற்றினால் நகரம் தொடர்ந்து பெரும் சிரமத்தைச் சந்தித்து வருகிறது. கட்டுமான நிலையிலுள்ள மெட்ரோ இரயில் விரிவாக்கத் திட்டம், மூலதனம் நிறைந்த திட்டமாகும். இத்திட்டம், முழுமையாகச் செயல்படுவதற்கு குறிப்பிட்ட காலமாகலாம் மற்றும் அடர்த்தியான மக்கள் தொகைக் கொண்ட நகரத்தில் நீண்ட தூரம் பரவ முடியாமல் போகலாம். இந்தச் சூழ்நிலையில், பேருந்து போக்குவரத்தானது பயனாளர்களுக்கு ஏதுவாகவும் மற்றும் குறைந்த கட்டணத்தில் பெரும்பாலான மக்களுக்கு ஏற்றதாகவும் உள்ளது.

சுற்றுச்சூழலின் மீதான தாக்கத்தைக் குறைப்பதற்கும், பூஜ்ஜிய உமிழ்வுகளை அடைவதற்கும், நீண்ட கால நோக்கில் செலவை மிச்சப்படுத்துவதற்கும், சாலையில் மின்சார வாகனங்களின் எண்ணிக்கையை (மின்சாரப் பேருந்துகள், மின்சார மூன்று சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள்) அதிகரிப்பதற்கு அரசு கவனம் செலுத்தி வருகிறது. கைபேசிமூலம் வழங்கப்படும் இடம் சார்ந்த, போக்குவரத்து சம்பந்தமான, திசை சம்பந்தமான தொழில்நுட்பங்கள் பெரும்பாலான மக்களால் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பயணிகள் பயண நேரத்தைத் திட்டமிடுவதற்கு தகவல் கைபேசி செயலி சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்பிற்காக கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் அவசரக் கால எச்சரிக்கை அழைப்பு பொத்தான் (SOS Panic Button) போன்றவை பேருந்துகளில் பொருத்தப்பட்ட முக்கியமான கருவிகளாகும். தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் நுண்ணறிவு பேருந்து சேவைகள்மூலம் பேருந்தின் வருகையினை அறிந்துகொள்ளுதல், பயணிகள் தகவல் அமைப்பு, ரொக்கமில்லா பரிவர்த்தனை போன்றவை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்கிறது. அடிச்சட்டம் நல்ல நிலையிலுள்ள பழைய பேருந்துகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்துத் துறையின் எதிர்காலக் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் (Future Policies and Road Map) நோக்கமானது 3C-க்களை உள்ளடக்கியதாகும். அதாவது, தூய்மையான (Clean), வசதியான (Convenient) மற்றும் நெரிசல் இல்லாத (Congestion-free) மற்றும் 2030 ஆம் ஆண்டிற்குள் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதாகும்.

2023 மார்ச் 29]

தென்னக இரயில்வே துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு மாநில அரசின் ஒருங்கிணைப்பு முகமையாகப் போக்குவரத்துத் துறை செயல்பட்டு வருகிறது. மாநிலத்திலுள்ள இரயில் பாதைகளை வலுப்படுத்தவும், புதிய இரயில் பாதைகள், இரட்டை இரயில் பாதைகள் மற்றும் அகல இரயில் பாதைகள் அமைப்பதற்குத் தேவையான நிலத் தேவையைப் பூர்த்தி செய்ய இரயில்வே துறையுடன் போக்குவரத்துத் துறை ஒருங்கிணைந்து செயலாற்றுகிறது.

மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை, பேருந்து இயக்க தூரம், பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை, பயணிகளின் அடர்வு விகிதம் மற்றும் விபத்துகளைக் குறைத்தல் போன்ற அம்சங்களின் அடிப்படையில், தமிழ்நாட்டின் பொதுப் போக்குவரத்தினை நாட்டின் முதலாவது இடத்திற்குக் கொண்டு வருவதற்கு போக்குவரத்துத் துறை தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

1.1 கண்ணோட்டம்

இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களில், மொத்த மக்கள் தொகையில் 48.4 விழுக்காடு மக்கள் நகரப் பகுதிகளில் வசிக்கும் மாநிலமான தமிழ்நாடு தொடர்ந்து நகரமயமாக்கப்பட்ட மாநிலமாக விளங்குகிறது. மாநிலத்தின் அனைத்து பகுதிகளையும் இணைக்கும் வகையில் நன்கு கட்டமைக்கப்பட்ட போக்குவரத்து அமைப்பை தமிழ்நாடு கொண்டுள்ளது. இது மாநிலத்தின் தொழில் முதலீட்டிற்கு ஓரளவு காரணமாக உள்ளது. பொதுப் போக்குவரத்து அமைப்பு சுமார் நான்கில் ஒரு பங்கு தொழிலாளர்களின் போக்குவரத்து சேவைகளைப் பூர்த்தி செய்கிறது. வலுவான பொதுப் போக்குவரத்து மாநிலத்தின் அனைத்து பகுதிகளையும் இணைக்கிறது.

பொதுப் போக்குவரத்து அமைப்பு என்பது உள்ளூர், நகரப் பகுதி, கிராமப் பகுதி, நகரங்களுக்கு இடையே மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளுக்கு வயது, வருமானம், சமுதாய நிலை, பாலினம் வேறுபாடின்றி அனைத்து மக்களும் எளிதில் குறைந்த கட்டணத்தில் பயணிப்பதை இலக்காகக் கொண்டு செயல்படுவதுடன், கடைக்கோடி மக்களுக்கும் பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். பேருந்து போக்குவரத்து என்பது மக்களின் வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் சார்ந்த

[2023 மார்ச் 29

பயணம், பராமரிப்பு, சந்தைகள், சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், நகரம் மற்றும் பெருநகரங்களுக்கு விவசாயப் பொருட்களை விற்பனைக்காகக் கொண்டு செல்வதற்கும் பயன்படுகிறது.

அரசாங்கத்தின் பார்வையென்பது நவீன செயல்திறன்மிக்க, பொருளாதார, காலநிலை நட்புடன் பாதுகாப்பான போக்குவரத்தை வடிவமைத்து பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் தேவைகளைச் சமன்படுத்தும்விதமாக, அனைத்து மக்களுக்கும் தேவையான போக்குவரத்துச் சேவையை வழங்குவதாகும். அதன்படி,

I. பயனாளர்களுக்கு ஏதுவாகவும், நட்பாகவும், திறமையானதாகவும், குறைந்த கட்டணத்தில் கடைக்கோடி மக்களுக்கும் பேருந்து வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்;

II. மின்சாரப் பேருந்துகள், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), திரவ நிலை எரிவாயு (LNG) முதலிய மாற்று எரிபொருளுடன் இயக்கக்கூடிய பேருந்துகளைப் பொது மக்கள் பயணிக்கும் வகையில் வழங்குதல்;

III. மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயணிக்கக்கூடிய பேருந்துகளை அறிமுகம் செய்தல்;

IV. தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இணைக்கப்பட்ட சேவைகள், நுண்ணறிவு போக்குவரத்து முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இணையத்தின் வழியாக பேருந்துகளைக் கண்காணித்தல் மற்றும் பயணிகளுக்கான தகவல்களை நிகழ்நேர அடிப்படையில் வழங்குதல்;

V. புதுமையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதன்மூலம் தனியார் வாகனப் பயன்பாட்டினைக் குறைத்து எளிதான மற்றும் பாதுகாப்பான பயணங்களை வழங்குதல்;

VI. சிறந்த வாடிக்கையாளர் சேவையுடன், எளிதாகச் செலுத்தக்கூடிய முறையில் பயணச்சீட்டுக்களை பெறுவது;

VII. 2030 ஆம் ஆண்டிற்குள் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவது.

2023 மார்ச் 29]

1.2 தமிழ்நாட்டில் பேருந்து அடிப்படையிலான பொதுப் போக்குவரத்து

அரசு பொது போக்குவரத்தானது அனைவரும் அறிந்தவிதமாக குறைந்தளவு சாலைப் பகுதியினைப் பயன்படுத்துவதால், ஒவ்வொரு பயண கிலோ மீட்டருக்கும், தனியார் வாகனத்தால் ஏற்படும் மாசினைவிடக் குறைந்த அளவிலான மாசு ஏற்படுகிறது. அதனால், பொதுப் போக்குவரத்து மிகவும் நிலையான போக்குவரத்து அமைப்பாகும்.

1971 ஆம் ஆண்டு வரை மாநிலத்தின் பேருந்து போக்குவரத்து, தமிழ்நாடு அரசுத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தன. 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு, நிறுவனங்கள் சட்டம், 1956 இன்கீழ், பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிடம் பேருந்து போக்குவரத்து ஒப்படைக்கப்பட்டது.

போக்குவரத்தில் இரயில் சார்ந்த போக்குவரத்து அமைப்புகளான, கனரகப் பயணிகள் இரயில், புறநகர் இரயில், பறக்கும் இரயில் (MRTS), மெட்ரோ இரயில் சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும், பேருந்து போக்குவரத்தானது கடைக்கோடி மக்களும் பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, குறைந்த கட்டணத்தில் மக்கள் எளிதில் பயணம் செய்து சேருமிடத்தை அடைய வழிவகை செய்கிறது. தமிழ்நாட்டிலுள்ள பொதுப் போக்குவரத்து அமைப்பு வலுவாகவும் நகரின் மையப் பகுதியையும், கிராம பகுதியையும் பேருந்துகள்மூலம் இணைத்து, முதல் மற்றும் கடைசி மைல் இணைப்பினை நடத்தல்மூலம் பல்வேறு இடங்களை அடையும் வகையில் மக்கள் எளிதில் குறைந்த கட்டணத்தில், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட பாதையில் பயணிப்பதை இலக்காகக் கொண்டு செயல்படுவதுடன், அதேநேரத்தில் சொந்த வாகனத்தைப் பயன்படுத்துவதினால் ஏற்படும் வாகன நெரிசலைக் குறைப்பதற்கும், வாகனங்களால் ஏற்படும் விபத்துகள் மற்றும் காற்று மாசினைக் குறைக்கவும் உதவுகிறது.

தமிழ்நாட்டில், அரசுக்குச் சொந்தமான அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் பிற தனியார் பேருந்து நிறுவனங்கள் கட்டண நிலை பேருந்துகளை (Stage Carriage) அரசினால் நிர்ணயிக்கப்பட்ட பேருந்து கட்டண அடிப்படையில் இயக்க அனுமதிக்கப்பட்டு உள்ளன. 1-1-2023 அன்றுள்ளவாறு, தமிழகத்தில் இயக்கப்படும்

[2023 மார்ச் 29

28,027 கட்டண நிலை பேருந்துகளில், அரசு போக்குவரத்துக் கழகங்களின்மூலம் 20,213 பேருந்துகளும், தனியார் பேருந்து நிறுவனங்களின்மூலம் 7,814 பேருந்துகளும் மற்றும் 3,990 சிறிய பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

அரசுப் பேருந்துகள் என்பது சமூக மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட முதலீடாகும். இது, மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கும், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளை அடைவதிலுள்ள சிரமங்களை நீக்கவும் உதவுகிறது. இது வேலைவாய்ப்புகளையும் மேம்படுத்துகிறது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக 2021-2022 ஆம் ஆண்டில், அரசு பேருந்துகளில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 1.21 கோடியாக இருந்தது, பின்னர் 2022-2023 ஆம் ஆண்டில் பயணிகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 1.70 கோடியாக அதிகரித்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரசுப் பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லாப் பயணச் சலுகை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், ஒரு குறிப்பிட்ட சமூக இலக்கு கொண்ட குழுவிற்குக் கட்டணமில்லாப் பொது போக்குவரத்தை வழங்கும் பல உலகளாவிய நகரங்களின் வரிசையில் தமிழ்நாடு இணைந்துள்ளது. ஏற்கெனவே, பேருந்து போக்குவரத்தைப் பயன்படுத்தி வரும் பெண்களுக்குக் குறிப்பாகக் கல்வி நிறுவனங்கள், பணியிடங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்குச் செல்பவர்களுக்கும், சமூக நோக்கங்களுக்காகப் பயணிப்பவர்களுக்கும் இந்தத் திட்டம் வெளிப்படையான நன்மைகளைத் தந்துள்ளது. மேலும், கட்டணமில்லாப் பயணச் சலுகைத் திட்டம் மிதிவண்டியை பயன்படுத்தி பயணிப்பவர்கள் மற்றும் கால்நடையாகச் செல்லும் நபர்களையும் பொதுப் போக்குவரத்து முறையை உபயோகப்படுத்துவதற்கு மாற்றியிருக்கிறது. இத்திட்டம் குறித்து சமீபத்தில், மாநில திட்டக் குழு ஆய்வு மேற்கொண்டதில், சராசரியாக ஒவ்வொரு பெண் பயணியும் பயணக் கட்டணத்திற்கு ஈடாக மாதத்திற்கு ரூ.888/- சேமித்துள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் 7,164 சாதாரண நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வகை பேருந்துகளில் தினமும் சுமார் 45.51 இலட்சம் பெண்கள் பயணம் செய்கின்றனர். இதுவரை, மகளிர் 256.66 கோடிக்குமேல் பேருந்துகளில் பயண நடைகள் மேற்கொண்டுள்ளனர். இத்திட்டத்தின்மூலம் பயணித்த மொத்த பெண் பயணிகளின் சதகிகிதம் 40 சதவீதமாக இருந்த


2023 மார்ச் 29]

நிலையில், தற்போது 64.65 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இந்தக் கட்டணமில்லா பயணத் திட்டத்தின்மூலம் 14.66 இலட்சம் பயண நடைகள் திருநங்கைகளாலும், 1.93 கோடி பயண நடைகள் 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலுள்ள மாற்றுத் திறனாளிகளாலும், 10.02 இலட்சம் பயண நடைகள் அவர்களின் உதவியாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேருந்து நிறுத்தங்களில் காத்திருக்கும் பயணிகளின் பயணத் திட்டமிடலுக்காகச் செயலி அடிப்படையிலான நிகழ்நேர பயணிகள் தகவல் மற்றும் பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிச் செய்வதற்காக கண்காணிப்புக் கேமரா (CCTV) மற்றும் எச்சரிக்கை பொத்தான் அடிப்படையிலான கண்காணிப்பு முறையை அரசு செயல்படுத்தியுள்ளது. பயணிகளின் குறைகளை அவ்வப்போது தீர்க்கும் வகையில் பயணிகள் குறை தீர்க்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. ஜெர்மனி வளர்ச்சி வங்கியின் (KfW) நிதியுதவி மற்றும் அரசு மானியங்களுடன் போக்குவரத்துத் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் BS-VI தரத்திலான டீசல் பேருந்துகள் மற்றும் மின்சாரப் பேருந்துகள் உள்ளிட்ட பேருந்துகளை வாங்கவும், சிறந்த பயணிகள் தகவல் அமைப்பு, ரொக்கமில்லா பரிவர்த்தனை முறை, ஈஆர்பி போன்றவற்றை அரசு செயல்படுத்த தொடங்கியுள்ளது. இந்த மாற்றம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் நுண்ணறிவு போக்குவரத்து முறைக்கு மாறுவதற்கான வாய்ப்பைப் பெறுவதுடன், பயணிகள் வழித்தடச் சீரமைப்பு பயண தகவல்களைப் பெறுவதற்கும் உதவுகிறது.

1.3 போக்குவரத்துத் துறையின் நிருவாக அமைப்பு

மாநிலத்தின் பொது போக்குவரத்திற்கான பேருந்து சேவைகளை நிர்வகிக்கும் பொறுப்பு போக்குவரத்துத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையின்கீழ் அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுகின்றன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் போக்குவரத்துத் துறை இயங்கி வருகிறது. போக்குவரத்துத் துறையின் நிருவாகத் தலைவராக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் செயல்படுகிறார். அவருக்குப் போக்குவரத்துத் துறை சார்ந்த பணிகளில் உதவியாக சிறப்புச் செயலாளர், துணைச் செயலாளர், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் செயல்படுகிறார்கள்.


மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
கூடுதல் தலைமைச் செயலாளர் போக்குவரத்துத் துறை
தலைமைச் செயலகம் போக்குவரத்துத் துறை
தலைவர் அலுவலகம்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்
தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்
சாலைப் போக்குவரத்து நிறுவனம்
பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு
தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை
மா.போ. கழகம்
அ.வி.போ. கழகம்
அ.போ.கழகம் விழுப்புரம்
அ.போ.கழகம் சேலம்
அ.போ.கழகம் கோவை
அ.போ.கழகம் கும்பகோணம்
அ.போ.கழகம் மதுரை
அ.போ.கழகம் திருநெல்வேலி

2023 மார்ச் 29]

போக்குவரத்துத் துறை கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன:-

1. அரசு போக்குவரத்துக் கழகங்கள்

i. *மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை*

ii. *அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை*

iii. *தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்*

iv. *தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்*

v. *தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்*

vi. *தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்*

vii. *தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை*

viii. *தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி*

2. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

3. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

4. சாலைப் போக்குவரத்து நிறுவனம்

5. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு

போக்குவரத்துத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் அலுவல்வழி தலைவராகவும் உள்ளார். அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள தலைவருக்கு,

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATIVE ASSEMBLY

தலைவர் அலுவலகம் உதவி புரிகிறது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகவும் செயல்படுகிறார்.

மேலும், இத்துறை தென்னக இரயில்வே விரிவாக்க திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு முகமை துறையாகச் செயல்படுகிறது.

2. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் தேவைகளில் சமரசம் செய்து கொள்ளாமல் அனைத்து மக்களின் முழுமையான வளர்ச்சி என்பதே நிலையான வளர்ச்சி இலக்குகளின் முக்கிய நோக்கமாகும். 2030 ஆம் ஆண்டிற்குள் 17 வகையான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கினை அடைய நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள்மூலம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கினை அடைவதற்கு போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்புள்ளது. பொது போக்குவரத்தின் மூன்று முக்கிய இலக்குகள் - இலக்கு 3: ஆரோக்கியமான உடல் நலம் மற்றும் நல்வாழ்வு (சாலை பாதுகாப்பு); இலக்கு 11: நிலையான மாநகரங்கள் மற்றும் சமூகங்கள்; மற்றும் இலக்கு 13: காலநிலை செயல்பாடு (காலநிலை மாற்றத்திற்கேற்ப மாசினைக் குறைத்தல்). மேலும், பொது போக்குவரத்து முறை, பின்வரும் இலக்குகளை அடைய உதவுகிறது. அவை: இலக்கு 8: தரமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி; இலக்கு 9: தொழில், புது முயற்சி மற்றும் உள்கட்டமைப்பு; இலக்கு 10: குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்; மற்றும் இலக்கு 12: பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி. இந்த இலக்குகளை நிலையான முறையில் அடைய அரசு போக்குவரத்துக் கழகங்கள் அனைத்து சாத்தியமான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

பொது போக்குவரத்தானது நகர்ப்புறத்தின் அடிப்படை தேவையாகும். பொது போக்குவரத்தை விரிவுபடுத்துவதன் வாயிலாக 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்துக் குடிமக்களுக்கும்

2023 மார்ச் 29]

பாதுகாப்பான, போதுமான, அணுகக்கூடிய மற்றும் நிலையான போக்குவரத்து முறைகள் கிடைக்கச் செய்வதை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 11.2 நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வாறு செய்யும்போது, பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர்கள், பெண்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களின் தேவைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். நகர்ப்புற பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லாப் பயணம் என்ற முன்னோடித் திட்டம் மற்றும் அரசால் வழங்கப்பட்ட பல இதர திட்டங்கள் அல்லது சலுகை அடிப்படையில் பெரும்பாலான மக்களுக்குப் பயனளிக்கும் விதத்தில் இந்த இலக்கினை அடைய அரசு உதவி செய்கிறது.

மாநிலத்தில் மாசு அளவைக் குறைப்பதற்காக, 3,313 சுற்றுச்சூழலுக்கு உகந்த BS-VI இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் அறிமுகம் செய்வதற்கு அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

பொது போக்குவரத்தை நாம் தொடர்ந்து ஆதரித்து வந்தால், அது மக்களை நகரங்களுக்கு அழைத்துச் சென்று, சிறந்த, நிலையான சுற்றுச்சூழலையும், பொருளாதாரத்தையும் உருவாக்கும்.

நீடித்த நிலையான வளர்ச்சி தொடர்பாக தேசியளவில் 2020-2021 ஆம் ஆண்டில் இலக்கு 11-ல் தமிழ்நாட்டின் கூட்டு மதிப்பெண் 79 மற்றும் மாநில தரவரிசை 10 ஆகும். நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் என்ற நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 11 மற்றும் 2030 ஆம் ஆண்டிற்கான இலக்கின்கீழ் பொது போக்குவரத்து வருகிறது:

இலக்கு 11.2.1a, 11.2.1b மற்றும் 11.2.1c ஆகியவை அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பொருந்தும். 2015-2016 முதல் 2021-2022 வரையிலான தமிழ்நாட்டின் மதிப்பெண் விவரம் வருமாறு:-

குறியீடு	2015-2016	2016-2017	2017-2018	2018-2019	2019-2020	2020- 2021	2021-2022
11.2.1a மொத்த பேருந்து எண்ணிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்காக இயக்கப்பட்ட பேருந்து	11	11	11	12	13	13	13
11.2.1b வயது முதிர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டணமில்லாப் பேருந்து பயணச் சீட்டுகளின் எண்ணிக்கை	213021	283575	306941	329554	351617	382758	388392
11.2.1c மகளிருக்கான சிறப்புப் பேருந்து எண்ணிக்கையின் விகிதம்	200	250	250	250	210	210	210

தமிழ்நாட்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களால் பின்வரும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் செயல்பாடு விவரம் பின்வருமாறு:-

- தமிழ்நாடு முழுவதும் சாதாரண நகரப் பேருந்துகளில் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.
- சென்னையில் இயக்கப்படும் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மூத்த குடிமக்கள் பேருந்து பயண அட்டையினைப் பயன்படுத்தி கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

2023 மார்ச் 29]

- அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், பெண் பயணிகள், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கெனக் குறிப்பிட்ட இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

- குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 2,500 பேருந்துகள் மற்றும் 66 பேருந்து முனையங்கள்/பணிமனைகளில் எச்சரிக்கை பொத்தானுடன்கூடிய கண்காணிப்பு ஏற்பாட்டு முறை செய்யப்பட்டுள்ளது.

- மாற்றுத் திறனாளிகளுக்கான புதிய தாழ்தள சிறப்புப் பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் இயக்குவதற்காக 500 மின்சாரப் பேருந்துகள் படிப்படியாகக் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (இப்பேருந்துகள் புகையினை வெளியிடாத காரணத்தினால் சுற்றுச்சூழலுக்கு எந்தவித மாசினையும் ஏற்படுத்தாது)

- மாநிலத்தில் மாசு அளவைக் குறைப்பதற்காக, 3,213 சுற்றுச்சூழலுக்கு உகந்த BS-VI இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் அறிமுகம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

- மின்சார செலவைக் குறைக்கும் வகையில் அரசு போக்குவரத்துக் கழக வளாகங்களில் மேற்கூரையில் சூரிய மின்னாற்றல் தகடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- மின்னாற்றலை சேமிப்பதற்கு மரபு சார்ந்த / சி.எஃப்.எல் பல்புகளுக்குப் பதிலாக எல்.ஈ.டி பல்புகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

போக்குவரத்துத் துறை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு உறுதிபூண்டுள்ளது.

[2023 மார்ச் 29

3. அரசு போக்குவரத்துக் கழகங்கள்

3.1 அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மாநிலத்தில் சாலை வழியிலான பயணிகள் போக்குவரத்தை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மாநிலத்தில் இயக்கப்படும் கட்டணநிலை பேருந்துகளில் 72 விழுக்காடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாகும். மீதமுள்ள 28 விழுக்காடு தனியாரால் இயக்கப்படுகிறது. மாநிலத்தில், சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்களும், பிற மாவட்டங்களில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்தும் போக்குவரத்துச் சேவை வழங்குகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

மாநிலத்தில் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன. ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்தின் செயல்பாடுகளை உள்ளடக்கிய மண்டல மற்றும் மாவட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்.	அரசு போக்குவரத்துக் கழகங்கள்	மண்டலம்	உள்ளடக்கிய மாவட்டங்கள்
1.	மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட்.	சென்னை	சென்னை பெருநகரப் பகுதி
2.	அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்.	-	தமிழ்நாடு முழுவதும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் புதுச்சேரி
3.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்.	விழுப்புரம்	விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி
		வேலூர்	வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர்
		காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு
		திருவண்ணாமலை	திருவண்ணாமலை
		திருவள்ளூர்	திருவள்ளூர்
		கடலூர்	கடலூர்

2023 மார்ச் 29]

வ. எண்.	அரசு போக்குவரத்துக் கழகங்கள்	மண்டலம்	உள்ளடக்கிய மாவட்டங்கள்
4.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்.	சேலம்	சேலம் மற்றும் நாமக்கல்
		தருமபுரி	தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி
5.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
		உதகமண்டலம்	நீலகிரி
		ஈரோடு	ஈரோடு
		திருப்பூர்	திருப்பூர்
6.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட்.	கும்பகோணம்	தஞ்சாவூர்
		நாகப்பட்டினம்	நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை
		திருச்சி	திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர்
		கரூர்	கரூர்
		காரைக்குடி	சிவகங்கை மற்றும் இராமநாதபுரம்
		புதுக்கோட்டை	புதுக்கோட்டை
7.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்.	மதுரை	மதுரை
		திண்டுக்கல்	திண்டுக்கல் மற்றும் தேனி
		விருதுநகர்	விருதுநகர்
8.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட்.	திருநெல்வேலி	திருநெல்வேலி மற்றும் தென்காசி
		தூத்துக்குடி	தூத்துக்குடி
		நாகர்கோவில்	கன்னியாகுமரி

3.2 அரசு போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்பு

28-2-2023 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் வாரியான உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

வ. எண்	அரசு போக்குவரத்துக் கழகங்கள்	மண்டலம்	பணிமனைகள்	தொழிற்கூடம்	வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி	பேருந்துகள்	பணியாளர்களின் எண்ணிக்கை	பயணிப்போரின் எண்ணிக்கை (இலட்சத்தில்) 2022-2023 (பிப்ரவரி 2023 வரை)
1	*மா.போ.கழகம்*	*1*	*31*	*2*	*1*	*3436*	*20245*	*10016.68*
2	*அ.வி.போ. கழகம்*	*1*	*22*	*2*	*1*	*1078*	*4626*	*194.97*
3	*அ.போ.க (விழுப்புரம்)*	*6*	*57*	*3*	*6*	*3285*	*20014*	*8787.53*
4	*அ.போ.க (சேலம்)*	*2*	*32*	*2*	*4*	*2044*	*11633*	*5837.49*
5	*அ.போ.க (கோயம்புத்தூர்)*	*4*	*43*	*2*	*2*	*2774*	*16039*	*8570.20*
6	*அ.போ.க (கும்பகோணம்)*	*6*	*60*	*4*	*7*	*3438*	*19799*	*10670.23*
7	*அ.போ.க (மதுரை)*	*3*	*40*	*3*	*3*	*2299*	*13734*	*7079.46*
8	*அ.போ.க (திருநெல்வேலி)*	*3*	*30*	*2*	*2*	*1773*	*10169*	*5328.86*
மொத்தம்		**26**	**315**	**20**	**26**	**20127**	**116259**	**56485.42**

3.3 பேருந்து இயக்கங்கள்

மாநிலத்தில் உள்ள மொத்த அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் எண்ணிக்கை 20,127 ஆகும், அதில் 18,723

2023 மார்ச் 29]

வரையறுக்கப்பட்ட பேருந்துகளும், 1,404 மாற்று பேருந்துகளும் உள்ளன. வெளியிடப்பட்டுள்ள நேர அட்டவணையின்படி, அனுமதிக்கப்பட்ட 10,152 வழித்தடங்களில் இந்த பேருந்து சேவைகள் முறையாக இயக்கப்படுகின்றன. சமவெளி மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இயக்கப்படும் கிலோ மீட்டர்களின் அடிப்படையில் நகர்/புறநகர் பேருந்துகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்து சேவைகள், குறிப்பிட்ட நிறுத்தங்களின் அடிப்படையில் வேறுபட்ட கட்டணத்துடன் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:-

நகர் பேருந்து	புறநகர் பேருந்து	மலைப் பகுதி
சாதாரண, விரைவு, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்து, சொகுசு மற்றும் குளிர்சாதனப் பேருந்து	சாதாரண, சாதாரண சொகுசு / விரைவு, நவீன சொகுசு, அதிநவீன சொகுசு, குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை), அதிநவீன குளிர்சாதனமில்லா சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன், குளிர்சாதன பேருந்து இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் மற்றும் கழிப்பறை வசதி கொண்ட பேருந்து (Classic)	சாதாரண மற்றும் சொகுசு / விரைவு பேருந்துகள்

பேருந்து சேவைகளின் விவரங்கள் 28-2-2023 அன்றுள்ளவாறு பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:


அரசு போக்குவரத்துக் கழகங்கள்	நகர்		புறநகர்/ விரைவு	மலைப் பகுதி	வரையறுக்கப்பட்ட சேவைகள்	மாற்று பேருந்துகள்	மொத்தம்
	சாதாரண / மகளிர் கட்டணமில்லா பயணம்	வரையறுக்கப்பட்ட நிறுத்தங்கள் / விரைவு / சொகுசு					
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(6)+(7)
மா.போ.க.சென்னை, லிட்.,	*1,559*	*1,674*	*0*	*0*	*3,233*	*203*	*3436*
அ.வி.போ.க. தமிழ்நாடு, லிட்.,	*0*	*0*	*1,000*	*0*	*1,000*	*78*	*1,078*
அ.போ.க. (விழுப்புரம்) லிட்.,	*1,036*	*0*	*1,955*	*29*	*3,020*	*265*	*3285*
அ.போ.க. (சேலம்) லிட்.,	*813*	*24*	*1,038*	*25*	*1,900*	*144*	*2,044*
அ.போ.க (கோவை) லிட்.,	*991*	*180*	*1,031*	*357*	*2,559*	*215*	*2,774*
அ.போ.க. (கும்பகோணம்) லிட்.,	*1,229*	*28*	*1,927*	*0*	*3,184*	*254*	*3,438*
அ.போ.க. (மதுரை) லிட்.,	*890*	*380*	*832*	*64*	*2,166*	*133*	*2,299*
அ.போ.க, (திருநெல்வேலி) லிட்.,	*646*	*170*	*845*	*0*	*1,661*	*112*	*1,773*
மொத்தம்	*7,164*	*2,456*	*8,628*	*475*	*18,723*	*1,404*	*20,127*

2023 மார்ச் 29]

3.4 அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன்

மாநிலத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் குறைந்தபட்சம் 1000 மக்கள் தொகைக் கொண்ட ஒவ்வொரு கிராமங்களுக்கும் பேருந்து வசதி வழங்குகின்றன. இதன்மூலம் நகர்ப்புறங்களில் உள்ள அனைத்து வாழ்விடங்கள், மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்கள் இணைக்கப்படுகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களின்மூலம் நாளொன்றுக்கு சுமார் 1.70 கோடி (2022-2023, பிப்ரவரி 2023 வரை) பயணிகள் பயணம் மேற்கொண்டனர். இதனால் போக்குவரத்தானது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியுள்ளது. கொரோனா பெருந்தொற்று மற்றும் கொரோனா பெருந்தொற்றிற்குப் பிந்தைய காலங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் சேவைகள் குறைக்கப்பட்டதாலும், பயணிகள் பிற போக்குவரத்து முறைகளுக்குக் குறிப்பாக, சொந்த வாகனங்களில் பயணிக்கும் முறைக்கு மாறியதன் காரணமாகவும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் பயணிகளின் எண்ணிக்கைக் குறைந்து வந்தது.

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதை கீழ்க்கண்ட வரைபடத்தில் காணலாம்:-



மேலும், அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள்மூலம் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டமிட்டுள்ளன.

இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த கட்டணத்தில் கட்டண நிலைப் பேருந்துகளை இயக்கி வருகின்றன. 29-1-2018 முதல் நடைமுறையில் உள்ள கட்டண அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

சேவை வகைகள்	**இயக்க வகைகள்**	**கட்டணம் (தீர்வை தவிர்த்து)**
நகர பேருந்துகள் (குறைந்தபட்ச கட்டணம்)	சாதாரண	ரூ.4
	குறிப்பிட்ட பேருந்து நிறுத்தம்	ரூ.5
	விரைவு	ரூ.6
	சொகுசு	ரூ.10
	இரவு பேருந்து	ரூ.10
புறநகர் பேருந்துகள்	சாதாரண	ஒரு கிலோ மீட்டருக்கு 58 பைசா
	சாதாரண சொகுசு	ஒரு கிலோ மீட்டருக்கு 75 பைசா
	விரைவு / நவீன சொகுசு பேருந்து	ஒரு கிலோ மீட்டருக்கு 85 பைசா
	அதிநவீன சொகுசு	ஒரு கிலோ மீட்டருக்கு 100 பைசா
	அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை)	ஒரு கிலோ மீட்டருக்கு 130 பைசா
	அதிநவீன குளிர்சாதனமில்லா சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன்	ஒரு கிலோ மீட்டருக்கு 155 பைசா
	அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன்	ஒரு கிலோ மீட்டருக்கு 200 பைசா

2023 மார்ச் 29]

ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா பேருந்து கட்டணத்துடன் தமிழ்நாடு பேருந்து கட்டண ஒப்பீடு பின்வருமாறு:-

மாநிலம்	கடைசியாக கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட நாள்	புறநகர் பேருந்துகள் (ஒரு கிலோமீட்டருக்கு பைசாவில்)									
		சாதாரண	சாதாரண சொகுசு	விரைவு / நவீன சொகுசு பேருந்து	அதிநவீன சொகுசு	அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை)		அதிநவீன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் (குளிர்சாதனமில்லாதது)		அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன்	
						வேலை நாட்கள்	இதர நாட்கள்	வேலை நாட்கள்	இதர நாட்கள்	வேலை நாட்கள்	இதர நாட்கள்
தமிழ்நாடு	29.01.2018	58	75	85	100	130	110	155	135	200	180
ஆந்திர பிரதேசம்	1.07.2022	102	125	-	162	196	196	221	221	260	260
கர்நாடகா	26.02.2020	66	123	-	145	214	-	163	-	240	-

அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் 10 கிலோ மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

(ரூபாயில்)

மாநிலம்	சாதாரண பேருந்து கட்டணம்	விரைவு பேருந்து கட்டணம்
தமிழ்நாடு	8.00	12.00
ஆந்திரப் பிரதேசம்	20.00	30.00
கர்நாடகா	15.00	16.00

[*2023 மார்ச் 29*

மேலும், அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் புறநகரப் பேருந்துகளில் 100 கிலோ மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

(ரூபாயில்)

மாநிலம்	சாதாரண பேருந்து கட்டணம்	விரைவு பேருந்து கட்டணம்	அதி நவீன சொகுசு	குளிர்சாதன பேருந்து கட்டணம்	
				இருக்கை	படுக்கை
தமிழ்நாடு	58.00	75.00	100.00	130.00	200.00
ஆந்திர பிரதேசம்	102.00	125.00	162.00	196.00	260.00
கர்நாடகா	66.00	123.00	145.00	214.00	240.00

3.5 இயக்கச் செயல்பாட்டுத் திறன் குறியீடுகள்

தமிழ்நாட்டில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய செயல்திறன் குறியீடுகள் பின்வருமாறு:-

பொருள்	2019-2020 (கொரோனாவிற்கு முன்)	2020-2021 (கொரோனா காலத்தில்)	2021-2022 (கொரோனா காலத்தில்)	2022-2023 (பிப்ரவரி 2023 வரை)
பேருந்துகளின் எண்ணிக்கை	21,513	20,670	20,304	20,127
வரையறுக்கப்பட்ட பேருந்து சேவைகள்	19,290	19,290	19,290	18,723
ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ)	83.68	60.25	73.65	77.81

2023 மார்ச் 29]

பொருள்	2019-2020 (கொரோனாவிற்கு முன்)	2020-2021 (கொரோனா காலத்தில்)	2021-2022 (கொரோனா காலத்தில்)	2022-2023 (பிப்ரவரி 2023 வரை)
எரிபொருள் செயல்திறன் (கி.மீ / லிட்டருக்கு சராசரியாக)	5.33	5.39	5.37	5.29
கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கி.மீ)	2.54	2.77	2.98	3.03
நபர் / பேருந்து ஒன்றுக்கு ஆண்கள்	6.45	6.35	6.26	6.21

3.6 தேசிய அளவிலான விருதுகள்

ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் 6-11-2022 அன்று கொச்சியில் "நகர்ப்புற சிறப்புக்கான விருது" என்ற பிரிவின்கீழ் சென்னை பேருந்து செயலி பயன்பாட்டிற்கான "சிறந்த நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புடன்கூடிய நகரம் (ITS)" விருதை மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் பெற்றுள்ளது.

7-11-2022 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் புலனம் (Whatsapp) மற்றும் வலைதளம்மூலம் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளால் பெறப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ததற்காக வணிக நகர்ப்புற உள்கட்டமைப்புக் குழுமத்தின் (Business Urban Infra Group) சார்பில் 2022 ஆம் ஆண்டிற்கான விருது மற்றும் பாராட்டுச் சான்றிதழ் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. இத்திட்டம், அக்கழகத்தின் சேவைகளைப் பயன்படுத்தும் பயணிகளிடையே மிகவும் பிரபலம் அடைந்துள்ளது.

[2023 மார்ச் 29

3.7 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிச் செயல்திறன்

அரசு போக்குவரத்துக் கழகங்களின் அன்றாட செயல்பாடுகளில் கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும் தொடர்ந்து சிறந்த சேவையை அளித்து வருகின்றன. டீசல் விலை உயர்வு, 14-வது ஊதிய ஒப்பந்தம் காரணமாக ஊதிய உயர்வு, ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு, கொரோனா காலத்திலும், அதற்குப் பின்னரும் ஊதியம் மற்றும் சட்டரீதியாக கொடுக்கப்படவேண்டிய தொகைக்கான கூடுதல் கடனுக்கான வட்டி ஆகியவை அதிகரித்ததன் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் கூட்டாக 2022-2023 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை) மாதத்திற்கு ரூ.452 கோடிக்கு மேல் இழப்பை சந்தித்து வருகின்றன. இது கொரோனாவிற்கு முந்தைய காலத்தில் அதாவது 2019-2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பான ரூ.436 கோடிக்கு இணையாகவுள்ளது. இருப்பினும், 14-வது ஊதிய ஒப்பந்தம் காரணமாக ஊதிய உயர்வு மற்றும் 2022-2023-ல் அகவிலைப்படி உயர்த்தப்பட்டு உள்ளது. மேலும், செலவு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் இழப்பு ரூ.452 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், போக்குவரத்து, சேவைத் துறையாக இருப்பதால், போக்குவரத்துக் கழகங்கள் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் சேவை வழங்குவதால், ஜனவரி 2018-ல் நிர்ணயிக்கப்பட்ட அளவிலேயே பேருந்து கட்டணம் உள்ளது. மேலும், கொரோனா காலத்திலும், கொரோனாவுக்குப் பிந்தைய காலத்திலும் ஊழியர்களுக்கு முறையாகச் சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. 2019-2020, 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023 (பிப்ரவரி 2023 வரை) காலத்திற்கான நிதி செயல்திறன் பின்வருமாறு:-

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை

செயல்பாட்டு திறன் - 2019-20, 2020-21, 2021-22 & 2022-23

(ரூபாய் கோடியில்)

வ. எண்.	விவரங்கள்	2019-20 (கொரோனாவிற்கு-முன்)	2020-21 (கொரோனா-காலத்தில்)	2021-22 (கொரோனா-காலத்தில்)	2022-23 (பிப்ரவரி வரை) தணிக்கைக்கு முன்
	வருவாய்				
1	இயக்க வருவாய்	8827.39	3529.92	5534.90	6705.69
	ஒப்பந்த பேருந்து வருவாய்	6.08	58.16	18.09	5.15
	கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் விற்ற இலாபம்	24.04	16.73	33.37	8.65
	இயக்கம் அல்லாத ஏனைய வருவாய்	1694.91	1842.31	4088.06	5256.89
	இதர கழிவுகள் விற்பனை	20.09	19.36	22.81	31.12
	மொத்த வருவாய்	10572.52	5466.48	9697.23	12007.50
	செலவு				
2	மாறுபடும் செலவு Variable cost				
	உயர்வேக டீசல் எண்ணெய்	3860.32	1961.91	3865.14	4815.94
	இதர செலவுகள்(மசக்கெண்ணெய், டயர் மற்றும் உதிரி பாகங்கள் உட்பட)	312.15	127.15	277.02	378.74
	மொத்தம்	4172.47	2089.06	4142.16	5194.68
3	நிலையான செலவு Fixed cost				
	நிர்வாகச் செலவுகள்(வருங்கால வைப்புநிதி நம்பகம், பங்களிப்பு ஓய்வூதிய திட்டம், பணிக்கொடை நம்பகம் மற்றும் இதர நிலையான செலவுகள்)	8849.63	8766.98	8987.92	9015.29
	வரிகள்	196.45	105.01	162.42	172.05
	தேய்மானம்	540.65	635.99	384.09	245.91
	வட்டி	1177.65	1581.40	1818.14	1926.85
	இதர செலவுகள்	866.23	616.57	824.71	431.10
	மொத்தம்	11630.61	11705.95	12177.28	11791.20
	மொத்த செலவுகள் (ரூபாய் கோடியில்)	15803.08	13795.01	16319.44	16985.88
	ரொக்க இழப்பு (ரூபாய் கோடியில்) Short Fall	-5230.56	-8328.53	-6622.21	-4978.38
	ஒரு மாதத்திற்கு இழப்பு	-435.88	-694.04	-551.85	-452.58


[2023 மார்ச் 29

3.8 இயக்கச் செலவினம்

அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிருவாகச் செலவு மற்றும் அதிவேக டீசல் விலையேற்றம் ஆகியவை முக்கிய செயல்பாட்டுச் செலவினமாகும். இதன் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்கச் செலவினம் ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் செலவு கூறுகளின் சதவிகிதம் பின்வருமாறு:-

வ. எண்	இயக்கச் செலவு வகைகள்	சதவிகிதத்தில்
1.	சம்பளம் மற்றும் கூலி, வருங்கால வைப்பு நிதி & ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் இதர பண பயன்கள்	53.08
2.	அதிவேக டீசல் செலவு	28.35
3.	மாறுபடும் செலவினங்களான உருளிப்பட்டை, உதிரி பாகங்கள்	2.23
4.	மோட்டார் வாகன வரி	1.01
5.	கடன்களுக்கான வட்டி	11.34
6.	இதர செலவு	3.99
	மொத்தம்	**100.00**

2011 முதல் 2023 (பிப்ரவரி 2023 வரை) வரையிலான ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் வரைபட விவரங்கள் சதவிகிதத்தில் பின்வருமாறு:-



2023 மார்ச் 29]

நிருவாகச் செலவினங்களான சம்பளம், தொழிலாளர் வைப்பு நிதி, பணிக்கொடை போன்ற செலவினங்கள் தற்பொழுது அதிகரித்துள்ளது. அதேபோல மற்ற செலவுகளின்கீழ் வரும் வட்டிக்கான செலவினங்களும் அதிகரித்துள்ளது. டீசல் விலை மற்றும் பராமரிப்புச் செலவுகள் போன்றவை சந்தை அடிப்படையிலான விலை மற்றும் பயன்பாட்டின் அளவு ஆகியவற்றுடன் தொடர்புடையது. கொரோனா ஊரடங்கு காலத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடு தளர்வுகளின் காரணமாக இரண்டு அளவுருக்களும் 2020-2021 ஆண்டை விட 2021-2022 ஆண்டில் அதிகரித்துள்ளன. 2022-2023 ஆண்டிலும் (பிப்ரவரி 2023 வரை) அதிகரித்து நிலை காணப்படுகிறது.

3.9 அரசின் நிதியுதவி

கொரோனா பெருந்தொற்று பேரழிவு காலகட்டத்தில் அரசின் நிதியுதவியினால் போக்குவரத்துக் கழகங்கள் நிலைத்திருக்கின்றன. புதிய பேருந்துகளைக் கொள்முதல் செய்தல், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருதல் மற்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு சட்டரீதியான ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை வழங்குதல் போன்றவற்றிற்காக பங்கு மூலதன உதவி, கடன்கள், வழிவகை முன்பணம் மற்றும் மானியத்தின்மூலம் தொடர்ந்து உதவிகளை வழங்கி, அரசு போக்குவரத்துக் கழகங்களை ஆதரித்து வருகிறது. பெண்கள், மாணவர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் இதர கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டைதாரர் போன்ற பல்வேறு பிரிவினரால் ஏற்படும் நிதி இழப்பீட்டினை, போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஈடு செய்கிறது. அதிவேக டீசலின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன்மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பினைத் திரும்பப் பெறவும் அரசு அனுமதித்துள்ளது.

[2023 மார்ச் 29

2023-2024 ஆம் நிதியாண்டில் வரவு-செலவு ஒதுக்கீட்டில் கீழ்க்கண்ட இனங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது:-

(ரூபாய் கோடியில்)

வ. எண்	பொருள்	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2023-2024
1.	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன நிதியுதவி	900.00
2.	மாணவர்களுக்குப் பேருந்துக் கட்டண வகையில் வழங்கும் சலுகைக்காக ஏற்படும் சமுதாயச் செலவை ஈடுசெய்தல்	1500.00
3.	மகளிருக்கு இலவசப் பேருந்து பயண அனுமதிச்சீட்டு வழங்கியதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்தல்	2800.00
4.	அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கடன் (KfW) வழங்குதல்	700.00
5.	மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதிச் சீட்டு வழங்குவதால் ஏற்படும் இழப்பினை ஈடுசெய்தல்	22.00
6.	அதிவேக டீசல் எண்ணெய் விலையேற்றம் / மேல்வரி விதிப்பு காரணமாக ஏற்படும் விலை வித்தியாசத் தொகையை திரும்ப வழங்குதல்	2000.00
7.	இதர இனங்கள்	48.00
	மொத்தம்	7970.00

3.10 கடன்களுக்கான அரசு உத்தரவாதம்

கொரோனா பெருந்தொற்று நிலைமை மற்றும் அதைத் தொடர்ந்து மாநிலம் மற்றும் அண்டை மாநிலங்களில் முழு ஊரடங்கு காரணமாக அத்தியாவசியச் சேவைகளுக்குத் தேவையான பேருந்துகளைத் தவிர அனைத்து வழக்கமான

2023 மார்ச் 29]

பேருந்துகளையும் இயக்குவது நிறுத்தப்பட்டது. இதனால் அரசு போக்குவரத்துக் கழகங்கள் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டன. படிப்படியாகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர், தேவைக்கேற்ப பேருந்துகள் இயக்கப்பட்டன. இயக்க வருவாய், டீசல் செலவு மற்றும் அத்தியாவசியப் பராமரிப்புச் செலவுகளை ஈடுகட்டுமளவே இருந்தது. அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேசிய அளவிலான வங்கிகளிடமிருந்து ரூ.2,955 கோடி கடன் பெறுவதற்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

3.11 பொது சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

i) புதிய பேருந்து வழித்தடங்கள் அறிமுகம் மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்களில் மீண்டும் இயக்குதல்

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, புதிய பேருந்து அறிமுகப்படுத்துவதன் மூலமாகவோ அல்லது ஏற்கெனவே உள்ள பேருந்து வழித்தடங்களை அப்பகுதிக்கு அருகில் விரிவுபடுத்துவதன் மூலமோ புதிய பேருந்து இணைப்பு வழங்கப்படுகிறது. 7-5-2021 முதல் 28-2-2023 வரை 206 நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் 260 பேருந்து சேவைகளை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதேபோன்று, முன்பு நிறுத்தப்பட்ட சில வழித்தடங்களுள் 409 வழித்தடங்களில் 510 பேருந்து சேவைகள் அரசால் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன.

அரசு போக்குவரத்துக் கழகங்கள்	**நீட்டிக்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்)**		**மீண்டும் தொடங்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்)**	
	வழித் தடங்கள்	**பேருந்து சேவைகள்**	**வழித் தடங்கள்**	**பேருந்து சேவைகள்**
மா.போ.க. சென்னை, லிட்.,	*55*	*88*	*64*	*120*
அ.வி.போ.க. தமிழ்நாடு, லிட்.,	*14*	*30*	*12*	*24*
அ.போ.க. (விழுப்புரம்) லிட்.,	*73*	*75*	*70*	*70*

[2023 மார்ச் 29

அரசு போக்குவரத்துக் கழகங்கள்	நீட்டிக்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்)		மீண்டும் தொடங்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்)	
	வழித் தடங்கள்	பேருந்து சேவைகள்	வழித் தடங்கள்	பேருந்து சேவைகள்
அ.போ.க. (சேலம்) லிட்.,	2	2	4	6
அ.போ.க. (கோயம்புத்தூர்) லிட்.,	36	39	13	13
அ.போ.க. (கும்பகோணம்) லிட்.,	14	13	88	83
அ.போ.க. (மதுரை) லிட்.,	0	0	51	55
அ.போ.க. (திருநெல்வேலி) லிட்.,	12	13	107	139
மொத்தம்	206	260	409	510

ii) சென்னையில் சிறிய பேருந்துகள் இயக்கம்

சென்னையில் உள்ள பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு சாதாரண பேருந்துகள் இயக்க இயலாத குறுகலான சாலை உள்ள பகுதிகளுக்கு சிறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் 207 சிறிய பேருந்துகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் தற்போது இயக்கப்படும் 146 சிறிய பேருந்துகளுடன், நகரத்தின் உள்பகுதிகளை மெட்ரோ இரயில் நிலையத்துடன் இணைத்து இயக்கப்படும் 56 சிறிய பேருந்துகளும் அடங்கும். இந்த 56 சிறிய பேருந்துகளில் 22 சிறிய பேருந்துகள் குறிப்பாக மெட்ரோ இரயில் நிலையத்தை இணைக்கும் பொருட்டு இயக்கப்படுகின்றன. இயக்கப்படாத சிறிய பேருந்துகளை சிறந்த முறையில் பயன்படுத்த மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனமும் இணைந்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்குப் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை

2023 மார்ச் 29]

இயக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனால் மெட்ரோ இரயிலில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கான வருவாய் அதிகரிக்கும்.

iii) மின்னணு முறையில் பயணச்சீட்டு முன்பதிவு

*அரசு போக்குவரத்துக் கழகங்கள் மின்னணு முறையில் பயணச் சீட்டு முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. பயணிகள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் பேருந்து பயணச்சீட்டினை இணையவழியில் முன்பதிவு செய்யலாம். பயணங்களைத் திட்டமிடுவதற்கும், விருப்பங்களுக்கு ஏற்ப பயணத்தை வடிவமைப்பதற்கும், புறப்படும் மற்றும் வருகைக்கு மிகவும் வசதியான நேரத்தைத் தேர்ந்தெடுப்பதற்கும் பயணிகளுக்கு மின்னணு முறையில் முன்பதிவு வழிவகுக்கிறது. இணையதள முன்பதிவு வசதியானது (*Online Ticket Reservation System*) தமிழ்நாடு மற்றும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற அண்டை மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி போன்ற யூனியன் பிரதேசத்தில் 62 இடங்களில் 66 முன்பதிவு மையங்களின் மூலமாக முன்பதிவு செய்யப்படுகின்றன.*

அரசு போக்குவரத்துக் கழகங்களில் தொலை தூரப்பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் வலைதளமான https://www.tnstc.in *மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதனை* TNSTC *செயலியின் மூலமும் முன்பதிவு செய்யலாம். 2022-2023 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை) விற்பனை செய்யப்பட்ட மொத்த பயணச்சீட்டுகளில் 77.40% மின்னணு முறையில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. அனைத்து வகையான பேருந்துகளிலும் இருவழி பயணத்திற்கு முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு 10% கட்டண சலுகை வழங்கப்படுகிறது. இச்சலுகை பண்டிகை மற்றும் முக்கிய நாட்களுக்குப் பொருந்தாது.*

iv) மின்னணு முறையில் ஏலமிடுதல்

*ஒன்றிய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி-யின்மூலம் (*M/s MSTC*) கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் கழிவுப் பொருட்கள் மின்னணு முறையில் ஏலமிட அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமூலம், கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் கழிவு செய்யப்பட்ட உதிரி*

பாகங்கள் சிறந்த விலையைப் பெற முடிகிறது. கொரானோ பெருந்தொற்று காரணமாக, மின்னணு ஏலம் நிறுத்தப்பட்டது. கொரானோ பெருந்தொற்று கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பிறகு, ஒன்றிய அரசின் தேசிய தகவல் மையம் (NIC) மூலம் மின்னணு ஏலம் மற்றும் மின்னணு ஒப்பந்த முறையை 2021 ஆம் ஆண்டில் சோதனை அடிப்படையில் மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் மீண்டும் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது, இதர அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

3.12 பேருந்துகளை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:-

i) தமிழகத்திலுள்ள நகரங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நவீன பேருந்து சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புகளுடன் BS-VI இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும் மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்தல்.

உலகம் முழுவதும் பொது போக்குவரத்தில் மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. இந்தியா மற்றும் தமிழ்நாடு இதற்கு விதிவிலக்கல்ல. தரமான பொது போக்குவரத்தை மேம்படுத்தாமல், சாலைகளில் அதிக அளவிலான முதலீடுகள் செய்வது அதிக தனியார் போக்குவரத்து முறைகளைப் பின்பற்றுவதற்கு வழிவகுக்கிறது. இது உயிரிழப்புகள், காற்று மாசுபாடு, நெரிசல் போன்ற பல எதிர்மறையான வெளிப்படையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. மாறிவரும் தன்மைக்கேற்ப நுகர்வோரின் முன்னுரிமை, நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு, தொழில்நுட்பத்தில் புதுமைகள் மற்றும் மேம்பாடுகள், கட்டண முறை, வாகனத்தின் இயக்கத்திற்கான மாற்று எரிபொருள் போன்றவை அரசு பொதுப் போக்குவரத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு உந்தப்படுகிறது. இதன்மூலம் வயது முதிர்ந்த பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் வாங்குவதற்கு தமிழ்நாடு அரசு ஜெர்மனி வளர்ச்சி வங்கியுடன் (KfW) 12,000 BS-VI பேருந்துகள் மற்றும் 2,000 மின்சாரப் பேருந்துகளைக் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, 2021 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் 80% (KfW)

2023 மார்ச் 29]

வட்டியில்லா கடனாகவும், 20% தமிழ்நாடு அரசு பங்கு என்ற விகிதத்தில் செலவின பகிர்வு என்ற அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய டீசல் பேருந்துகள் ஏழு போக்குவரத்துக் கழகங்களுக்கும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) மற்றும் மின்சாரப் பேருந்துகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் இயக்கப்படும்.

முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக 2,213 டீசல் பேருந்துகளும், 500 மின்சாரப் பேருந்துகளும் (முதற்கட்டமாக 100 மின்சாரப் பேருந்துகளும் மற்றும் அதன் தொடர்ச்சியாக 400 மின்சாரப் பேருந்துகளும்) ரூபாய் 2,380 கோடி திட்ட மதிப்பீட்டில் வாங்கப்படவுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களின் தகவல் தொழில்நுட்ப மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்களை மேம்படுத்துவது, பயணிகள் தகவல் அமைப்பு, ரொக்கமில்லா பரிவர்த்தனை முறை, இயக்க மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த மென்பொருள் தீர்வு போன்றவை இதன் இதர முக்கிய முதலீட்டுக் கூறுகளாகும்.

ii) சென்னையில் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு

ஜப்பான் நிதியுதவித் திட்டத்தின் (JICA) மூலம் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கான தீர்வு ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பு (ITMS) மூலம் கிடைக்கிறது. இவ்வமைப்பு, தானியங்கி வாகன இருப்பிடம் கண்டறியும் அமைப்பு, பேருந்து முனையங்களில் பயணிகள் தகவல் அமைப்பு, பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பணியாளர்களுக்கான செயலி/ வலைதளங்களின் பயன்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. பணிமனைகளை நிர்வகிக்கும் முறை என்பது வாகன இயக்கம் தொடர்பான திட்டமிடல் மற்றும் அட்டவணைப்படுத்துதல், வாகனம் அனுப்புதல், பணியாளர்களின் வேலைமுறை பட்டியல், வருகை மேலாண்மை மற்றும் அனைத்து பணியாளர்களுக்கான செயலி பிரத்யேக பயன்பாடு என்பதாகும். மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் இத்திட்டத்திற்கான மொத்த திட்டச் செலவு ரூ.136 கோடி. இத்திட்டத்திற்கு ஜப்பான் நிதியுதவி பங்குமூலம் 51 சதவிகிதம் மற்றும் மாநில அரசு பங்குமூலம் 49 சதவிகிதம் ஆகும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காகவும், இயக்குவதற்காகவும் கணினி ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்படவுள்ளார்.

[2023 மார்ச் 29

iii) மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை சேவை மாற்றத்திற்கான முடிவுகளுக்கான திட்டம்

இத்திட்டம் உலக வங்கி ஆதரவுடன் செயல்படுத்தப்படும் சென்னை நகர கூட்டாண்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். பொது பேருந்துச் சேவை ஒப்பந்தமானது (PTSC) தமிழ்நாடு அரசு மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றிற்கிடையே தற்போதுள்ள பேருந்துகளின் ஆற்றலை மேம்படுத்த வெளிப்படையான நிதியுதவி செய்வதே இத்திட்டத்தின் முக்கியக் கூறாகும். நிதியுதவி, மாநகர் போக்குவரத்துக் கழகம் அடையக்கூடிய குறியீடுகளைப் பொருத்திருக்கும். புதுமையான இயக்க முறையின்மூலம் தற்போதுள்ள பேருந்துகளுடன் புதிய பேருந்துகள் இயக்கப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.855.4 கோடியாகும். இதில் 70 சதவிகிதம் உலக வங்கியும் 30 சதவிகிதம் தமிழ்நாடு அரசும் நிதியுதவி செய்யும். இதற்கான வணிகத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பொது பேருந்து சேவை ஒப்பந்தம் மாநில அரசுக்கும், மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட்க்கும் இடையே செயல்படுத்தப்படும்.

iv) பெண்கள் பாதுகாப்பு நகரத் திட்டம்

பொது இடங்களில் குறிப்பாக பேருந்துகள், பேருந்து நிலையங்கள், பேருந்து பணிமனைகள் போன்ற பொது போக்குவரத்து அமைப்புகளில் பெண்களுக்குப் பாதுகாப்பான மற்றும் அதிகாரமளிக்கும் சூழலை உருவாக்குவதை பாதுகாப்பான நகரத் திட்டத்தின்கீழ் நிர்பயா திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக 2,500 பேருந்துகள், 66 பேருந்து முனையங்கள்/பணிமனைகள்/அலகுகளில் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் அவசர அழைப்பு பொத்தான்கள் வாகன கண்காணிப்பு அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், ரூ.72.71 கோடி செலவில் இந்திய அரசு மற்றும் மாநில அரசின் 60:40 என்ற விகிதாச்சார பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், 10-1-2023-ல் முழு பயன்பாட்டிற்கு வந்தது.

2023 மார்ச் 29]

v) பயணிகள் தகவல் அமைப்பு (Chennai Bus App)

சென்னையில் பேருந்து பயணிகள் பேருந்திற்காகக் காத்திருக்காமல் பேருந்து பயணத்தைத் திட்டமிடுவதற்கு சென்னை செயலி என்ற தகவல் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கைபேசி செயலி தேர்ந்தெடுக்கப்பட்ட பேருந்தின் புறப்பாடு, சேருமிடம் மற்றும் வழியினை வரைபடத்தில் காண்பிக்கும். மேலும், அந்த வழித்தடத்தில் ஓடும் பேருந்துகளின் தற்போதைய இருப்பிடம், அந்த பேருந்து நிறுத்தத்திற்கு அடுத்து வரும் 5 பேருந்துகள் வந்து சேரும் நேரம், வழித்தட எண்கள், அருகிலுள்ள பேருந்து நிறுத்தங்களின் பட்டியல் போன்றவற்றுடன் அந்த நபரின் தற்போதைய இருப்பிடத்தினையும் காட்டுகிறது. ஏதேனும் ஒரு பேருந்தை தேர்ந்தெடுத்து பயணிக்கும்போது, அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தை எப்போது வந்தடையும் என்பதை பயணிகள் அறிந்துகொள்ளலாம். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் இச்செயலி பயன்பாட்டிலுள்ளது. வலைதளத்தின் மூலமாகவும் இதனை அணுகலாம். இச்செயலி இதர அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் அறிமுகப்படுத்தப்படும்.

vi) அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான வலைதளம்

www.arasubus.tn.gov.in *என்பது அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான இரு மொழி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வலைதளமாகும். இது 9-3-2023 அன்று தொடங்கப்பட்டது. பொது மக்கள்/பயணிகள் இந்த வலைதளத்திற்குச் சென்று பேருந்து வழித்தடங்கள் நேரம், அரசு போக்குவரத்துக் கழகங்களின் சேவைகள், தொடர்பு விவரங்கள், பேருந்து செயல்பாடுகள், பணியாளர்கள் பற்றிய புகார்கள் உள்ளிட்ட தகவல்களைப் பெறலாம்.*

மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து வருகை மற்றும் இயக்க நேரம் குறித்த விவரங்கள், வழித்தட தகவல்களைப் பயணிகள் அறிந்துகொள்ள உரிய வசதி செய்யப்பட்டுள்ளது. "சென்னை பேருந்து செயலியை" பதிவிறக்கம் செய்வதன்மூலம் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து வருகை, பேருந்துகளின் நிகழ்நேர இருப்பிடம் மற்றும் எதிர்பார்க்கப்படும் வருகை நேரம் குறித்த விவரங்கள் பயணிகள் அறிந்துகொள்ள உரிய வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் உருவாக்கப்பட்டுள்ள இணைப்பு வசதிமூலம் பயணிகள் மற்றும் பொதுமக்கள் உடனடி தளவழிப் பதிவு திட்டத்தின் (OTRS) வழியாக தொலைதூரப் பேருந்துகளுக்கு முன்பதிவு செய்வதற்கும், திருவிழாக் கால சிறப்பு பேருந்து இயக்கம் குறித்த தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இந்த இணையதளத்தில் உருவாக்கப்பட்டுள்ள இணைப்பு வசதிமூலம் சாலைப் போக்குவரத்து நிறுவனம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் போன்ற போக்குவரத்து தொடர்பான நிறுவனங்களின் இணையதளங்களை எளிதாக அணுக வசதி செய்யப்பட்டுள்ளது.

vii) பயணிகள் குறைகள் மற்றும் புகார் தீர்வு உதவி எண்

பொதுமக்கள் மற்றும் பயணிகள் பேருந்து தொடர்பான அம்சங்கள் குறித்த தகவல்களைப் பெறவும், புகார்கள் மற்றும் குறைகளைத் தெரிவிக்கவும், ஒருங்கிணைந்த பயணிகள் குறை தீர்க்கும் மற்றும் புகார் தீர்வு எண் மையம் அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொதுவாக 9-3-2023 அன்று தொடங்கப்பட்டது. உதவி மையத்தைத் தொடர்பு கொள்ள “1800 599 1500” என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 24 மணி நேரமும் தொலைபேசி அழைப்புகள்மூலம் உதவி மையத்தைத் தொடர்பு கொள்ளலாம். சென்னையிலுள்ள மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் உதவி மையம் செயல்பட்டு வருகிறது.

தொலைபேசி அழைப்புகள்மூலம் பெறப்படும் புகார்கள் மற்றும் குறைகளுக்கு தனித்துவமான ID ஒதுக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, பின்னர் ஒப்புகை குறுஞ்செய்தி (SMS) பயணிகளுக்கு அனுப்பப்படும். பெறப்படும் புகார்கள் மற்றும் குறைகளை அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள்மூலம் கண்காணித்து விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தந்த அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு உட்பட்ட புகார்கள் மற்றும் குறைகளுக்குத் தீர்வு காணப்பட்டபின் பயணிகளுக்கு மீண்டும் குறுஞ்செய்தி (SMS) அனுப்பப்படும்.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் தொடர்பான புகார்கள் மற்றும் குறைகளான பேருந்துகளின் தூய்மை, தாமத இயக்கம், தட முறிவு, பேருந்து நிலையங்களிலிருந்து தங்கள் இருப்பிடங்களுக்குச்

2023 மார்ச் 29]

செல்ல பேருந்து கிடைக்காமை, நெரிசல் மிகுந்த நேரங்களில் பேருந்து நிறுத்தங்களில் நீண்ட நேரம் காத்திருப்பது, பேருந்து நிறுத்தங்களில் நிற்காமல் செல்லுதல், பேருந்தினுள் பொருட்களை தவற விடுவது, பணியாளர்களின் தவறான நடத்தை, சக பயணிகளால் துன்புறுத்தல், அதிவேகம் இயக்கம், பேருந்துகளை சரியாக பராமரிக்காதது, விபத்துகள், வெள்ளம் மற்றும் கலவரம் போன்ற நேரங்களில் பேருந்து இயக்கம் தொடர்பான விவரங்கள் மற்றும் பண்டிகைக் கால சிறப்பு பேருந்து இயக்கம் போன்ற தகவல்களையும் பெறலாம். பேருந்தின் ஊழியர்கள், அசம்பாவிதங்கள் குறித்த எச்சரிக்கை செய்திகளை உதவி எண்ணிற்கு தொலைபேசி வாயிலாக தெரிவிக்கலாம். மாற்றுத் திறனாளிகள் தங்களது புகார்கள் மற்றும் குறைகளை 'கூகுள் வாய்ஸ் அசிஸ்டென்ட்' மூலம் உதவி எண்ணிற்கு தெரிவிக்கலாம்.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டு மேலாளர்கள் பயணிகளின் புகார்கள்/குறைகளை உன்னிப்பாகக் கண்காணித்து கவனம் செலுத்தி, பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப சேவைத் தரத்தை மேம்படுத்தவும், மேம்பாட்டிற்கான பகுதிகளைக் கண்டறிந்து, அரசு போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து இயக்கத்தின்மீது பயணிகளுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் செயல்படுகிறார்கள்.

viii) புவியிட அமைப்பு (GPS) அடிப்படையிலான தானியங்கி பேருந்து நிறுத்த அறிவிப்பு அமைப்பு

பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளுக்கு பேருந்து நிறுத்தம் பற்றிய அறிவிப்புகள் தானியங்கி பேருந்து நிறுத்த அறிவிப்பின் மூலமாக அறிவிக்கப்படுவதால் பிறரை சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வமைப்புமூலம் அடுத்து வரும் பேருந்து நிறுத்தத்தின் பெயரினை 100 மீட்டருக்கு முன்னர் தெரிந்து கொள்ளலாம்.

பேருந்து நிறுத்த அறிவிப்பு இடைவெளியில் விளம்பரங்கள் ஒளிபரப்பப்படும். இதன்மூலம் போக்குவரத்துக் கழகம் எந்த முதலீடும் செய்யாமல் கூடுதல் வருவாய் ஈட்டும். ஒவ்வொரு பேருந்திலும், ஆறு ஒலிப்பான்கள் (Speaker) மற்றும் ஒரு ஒலிபெருக்கியுடன் (Amplifier) புவியிட அமைப்பு சாதனத்தை (GPS) செயல்படுத்துபவர் நிறுவ வேண்டும். இவ்வமைப்பு 710 பேருந்துகளில் பயணிகளின் வசதிக்காக சென்னை, சேலம்,

கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன மற்றும் பிற நகரங்களில் செயல்படுத்தப்படவுள்ளன.

ix) பேருந்துகளில் பக்கவாட்டு பாதுகாப்பு அலகு

பேருந்து பக்கவாட்டு பாதுகாப்பு அலகு, சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக பயணிகள் பேருந்துகளில் ஏறும்போதும், இறங்கும்போதும், சாலைகளில் நடந்து செல்பவர்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களில் பயணிப்போரும் வாகன விபத்துகளில் பேருந்துகளின் பின்புற சக்கரங்களில் சிக்காமல் பாதுகாக்க உதவுகிறது. இது பெருமளவு உயிர் இழப்புகளைக் குறைப்பதுடன், பெரும் காயங்கள் மற்றும் உயிர் இழப்பைத் தடுக்கிறது. பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த அமைப்பு மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 315 பேருந்துகளில் நிறுவப்பட்டுள்ளது.

x) பேருந்து நிலையங்கள்/பேருந்து முனையங்களை வருவாய் ஈட்டக் கூடியதாக மேம்படுத்துதல்

இயக்க வருவாய் கொரோனா பெருந்தொற்றுக்கு முந்தைய நிலையை எட்டியிருந்தாலும், பயணக் கட்டணம்மூலம் பெறக்கூடிய வருமானம் செலவுகளைச் சமாளிக்கப் போதுமானதாக இல்லாததால், பயணக் கட்டண மற்ற வருவாயைப் (Non fare box revenue) பெருக்குவதற்கு, போக்குவரத்துக் கழகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சொத்துகளின்மூலம் வருவாயினை பெருக்குவது என்பது காலத்தின் தேவையாகும். இதர வருவாய்களைப் பெருக்குவதற்கு உந்துதலாக உள்ள முக்கிய ஆதாரமான சொத்துகள் அதாவது சென்னை போன்ற பெருநகரங்களில் மற்றும் பிற நகரங்களில் உள்ள பேருந்து நிலையங்கள், நகரங்களின் மையப் பகுதிகளில் கழகங்களுக்கு சொந்தமான இடங்கள்மூலம் வருவாய் ஈட்டலாம். இதன் அடிப்படையில், மாநகர் போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டிலுள்ள 12 பேருந்து பணிமனைகள்/முனையங்களை நவீனப்படுத்துவதற்கும், வணிக வளர்ச்சி அடைய செய்வதற்கும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் (TNIDB) மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் மூன்று பணிமனைகள்/பேருந்து நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தகுதிக்கான கோரிக்கை

2023 மார்ச் 29]

(RFQ) வெளியிடப்பட்டுள்ளது. இவை தவிர, சொத்துகளின்மூலம் வருவாயினைப் பெருக்க இதர போக்குவரத்துக் கழகங்களின் 11 பணிமனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

xi) குமுளியில் பணிமனையுடன்கூடிய பேருந்து நிலையம் கட்டுதல்

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியத்திலிருந்து (Infrastructure & Amenities Fund) ரூ.4.50 கோடி செலவில் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், மேலக்கூடலூர் தெற்கு கிராமம், புல எண் 3041-ல் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்டிற்கு சொந்தமான 1.07 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட குமுளி பணிமனையில் பணிமனையுடன்கூடிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3.13 கட்டணச் சலுகைகள்

பொது போக்குவரத்துப் பேருந்தில் குறைந்த கட்டணத்திலோ, கட்டணம் இல்லாமலோ அல்லது சலுகைக் கட்டணங்கள் அடிப்படையில் குறிப்பிட்ட பிரிவினருக்குப் பயணச் சலுகைகள் வழங்கப்படுகிறது. குறைந்த வருமானம், கல்வி மேம்பாடு, ஒரு குறிப்பிட்ட நோய்க்காக அடிக்கடி மருத்துவமனைக்குச் செல்வது, மூத்த குடிமக்கள் போன்றவர்களுக்கு சலுகைகள் வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

i) பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயனாளிகளின் வகைகள் பின்வருமாறு:-

1. *நாடாளுமன்ற/சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.*
2. *பெண் பயணிகள், திருநங்கைகள், 40% மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்.*
3. *அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள்/ஊடக நபர்கள்.*
4. *மத்திய/மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.*
5. *புற்று நோயாளிகள்.*

[2023 மார்ச் 29

6. நாடகக் கலைஞர்கள் அவர்கள் கொண்டு வரும் இசைக் கருவிகள்.
7. எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகள்.
8. மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை (60 வயதிற்கு மேற்பட்டோர்) – குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்.

ii) மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்

மாநிலத்தில் கல்வியறிவு விகிதத்தை அதிகரிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களை ஊக்குவிக்கவும், சமுதாயத்தில் அவர்களின் நிலையை மேம்படுத்தவும், இளைஞர்கள் தங்களது தரத்தை மேம்படுத்தி சிறந்த வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நிலையை அடையவும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) பயணம் செய்யும் மாணவர்களுக்கு 100% கீழ்க்கண்ட கட்டணமில்லாப் பயணச் சலுகைகளை வழங்குகிறது.

1. அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் (1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை).
2. தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்.
3. அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.
4. அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.
6. சமுதாயக் கல்லூரிகள்.
7. அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
8. இசைக் கல்லூரிகள்.
9. சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

iii) 50% பயணக் கட்டணச் சலுகை

1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகள்.
2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்.
3. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பொறியியல் கல்லூரிகள்.

2023 மார்ச் 29]

iv) விருப்பம்போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச்சீட்டுகள்

நகரங்களில் குறிப்பிட்ட பணியாளர்கள் தங்கள் பணி தொடர்பான பயணங்களுக்காக ஒரு நாளில் பல பயணங்களை மேற்கொள்கின்றனர். சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் இதுபோன்ற பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில், நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாதாந்திரப் பயணச் சீட்டானது, ரூ.1,000/- கட்டண விகிதத்தில் விருப்பம்போல் பயணம் செய்ய, பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

v) மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை

வழக்கமான பேருந்துப் பயணிகளின் நலனுக்காக, மாநகர்/ நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக நடைமுறையில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது புறநகர் பேருந்துகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தினந்தோறும் பயணம் செய்யும் பொதுமக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இச்சலுகைகளை வழங்குவதினால் ஏற்படக்கூடிய இழப்புத் தொகை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

vi) குழு பயணச்சீட்டு சலுகை

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்டில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் குழுவாகப் பயணச்சீட்டு முன்பதிவு செய்பவர்களுக்கு 10 சதவிகிதம் தள்ளுபடி சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

vii) ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3.14. பணியாளர்கள் தொடர்பான நடவடிக்கைகள்

3.14.1 ஊதிய ஒப்பந்தம்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிற் தகராறு சட்டம், 1947 பிரிவு

[2023 மார்ச் 29

12(3)-ன்கீழ் ஊதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டது. 1977 முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களுடன் 13 ஊதிய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களின் தகுதியான பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் இதர சலுகைகளை நிர்ணயம் செய்ய நிருவாகம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே 14-வது ஊதிய ஒப்பந்தம் 1-9-2019 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த ஊதிய ஒப்பந்தம், ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறும்.

3.14.2. இதர நல நடவடிக்கைகள்:-

பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக அரசு போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன:-

1. பணிக்கால அடிப்படையிலான சிறப்பு ஊதிய சம்பள உயர்வு / ஆய்வு பலன்கள்.
2. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு வழங்கப்படும் தினப்படி.
3. 12(3)-வது ஊதிய ஒப்பந்தத்தின்கீழ் வரும் தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை.
4. போனஸ், பொங்கல் ஊக்கத்தொகை.
5. விடுப்பு பலன்கள்.
6. திருப்பான் படி (Steering Allowance).
7. சலுகைக் கட்டண உணவக வசதி மற்றும் தீபாவளி பண்டிகைக்கு இனிப்புகள் வழங்குதல்.
8. இலவச சீருடைகள் மற்றும் சலவைப்படி.
9. பணியாளர்களின் வாரிசுதாரர்களின் திருமண முன் பணம்.
10. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.
11. உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ஈடு செய்தல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2023 மார்ச் 29]

12. இறந்த பணியாளர்களின் குடும்பத்திற்கு இறுதிச் சடங்குச் செலவுகள் ரூ.3,000/-.

13. பணியாளர்களின் குழந்தைகள் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்று வர கட்டணமில்லாப் பயண அனுமதிச்சீட்டு.

14. இறந்த பணியாளர்களின் குடும்ப நல நிதி ரூ.5,00,000/-

15. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதி வசதிகள்.

16. வழக்கமான மருத்துவப் பரிசோதனை.

17. ஓட்டுநர்களுக்கான இலவச கண் பரிசோதனை.

18. பணியிலுள்ள பணியாளர்களுக்குப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.

19. பணியாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இலவச பயண அட்டை (ஒரு வருடத்திற்கு 5500 கி.மீ).

20. பண்டிகை முன்பணம் ஒரு வருடத்திற்கு ரூ.10,000/-

21. 31-3-2003-க்கு முன்னர் பணியில் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் 1998 நடைமுறையில் உள்ளது. 28-2-2023 அன்றுள்ளவாறு மொத்தம் 87,395 ஓய்வூதியதாரர்கள் உள்ளனர்.

22. பணிமனைகள் மற்றும் சென்னை போன்ற முக்கியப் பேருந்து நிலையங்களில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க ஓய்வு அறைகள்.

23. யோகா மற்றும் மன அழுத்தத்திற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள்.

24. இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பணியாளர்களுக்காகச் சிறப்பு பேருந்து இயக்கம்.

25. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு.

[2023 மார்ச் 29

3.14.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி

1998 ஆம் ஆண்டு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்கள் பணியாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர வழங்கல் சட்டம் 1952-ன்கீழ் இருந்து வந்தனர். அதன்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களுக்கும் தனி ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக, 1-9-1998 முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சியின் முக்கிய செயல்பாடானது, இந்த ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் உள்ள தகுதியுள்ள ஓய்வுபெற்ற/விருப்பார்ந்த ஓய்வுபெற்ற/காலமான ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை சரிபார்த்து, மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்குவது ஆகும். மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுவதைத் தவிர, சரிபார்ப்பு மற்றும் ஓய்வூதியக் கொடுப்பாணை வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு, ஓய்வூதியம் பெறுவோரின் குறைகளுக்குத் தகுந்த பதில்கள் அளிக்கப்படுகிறது. 1-9-1998 அன்று பணியில் இருந்த பணியாளர்கள் மற்றும் 31-3-2003 அன்று அல்லது அதற்கு முன் பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் இந்த 1998 ஆம் ஆண்டு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் மொத்தம் 1.28 இலட்சம் பணியாளர்கள் உள்ளனர். 2022-2023 ஆம் நிதியாண்டில், 87,809 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியத் தொகையாக (Pension) ரூ.1,360.90 கோடி வழங்கப்பட்டுள்ளது. இவ் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் ஓய்வூதியதாரர்களின் மொத்த மாத ஓய்வூதியம் சராசரியாக ரூ.113.41 கோடி ஆகும்.

3.14.4 சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை அளிப்பது

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சேமநல நிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு ஊதியம், ஓய்வூதிய ஒப்பளிப்பு மற்றும் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டம் போன்ற சட்டரீதியான

2023 மார்ச் 29]

ஓய்வூதியப் பணப் பலன்களை வழங்குவதற்கான நிதி ஆதாரம் இல்லை. மேற்கண்ட சட்டரீதியான ஓய்வூதியப் பணப் பலன்களை வழங்கும் பொருட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குப் பங்கு மூலதன உதவி, குறுகிய கால கடன்கள் மற்றும் வழிவகை முன்பணம் ஆகியவற்றின் மூலமாக அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகின்றது.

3.15 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்

தனியார் வாகனங்களைப்போல தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வாகன காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இணையவில்லை. வாகன விபத்துகளால் பாதிக்கப்படுபவர்கள் மாண்பமை நீதிமன்றங்களின்மூலம் விபத்து இழப்பீடு பெற வழக்கு தொடர்ந்து, நிவாரணம் பெறுவதற்கு கால அவகாசம் ஏற்படுகிறது. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு, 2010-2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டிற்கும் முறையே அரசின் பங்காக ரூ.20 கோடியும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.40 கோடியில் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொகை ரூ.60 கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.30 கோடியும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.30 கோடியுமாக உள்ளது. மேற்படி நிதியம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

20-1-2018 முதல் பேருந்து பயணிகளிடம் தீர்வை (Cess) வசூல் செய்யப்பட்டு, விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. இதற்கெனத் தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வைக் கட்டணம் பின்வருமாறு:

[2023 மார்ச் 29

(ரூபாயில்)

வ. எண்.	பயண கட்டண விலை	பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை	
		நகர்	புறநகர்
1.	ரூ.25 வரை	1	1
2.	ரூ.26 முதல் ரூ.50 வரை	_	2
3.	ரூ.51 முதல் ரூ.75 வரை	_	3
4.	ரூ.76 முதல் ரூ.100 வரை	_	4
5.	ரூ.101 முதல் ரூ.200 வரை	_	5
6.	ரூ.201 முதல் ரூ.300 வரை	_	6
7.	ரூ.301 முதல் ரூ.400 வரை	_	7
8.	ரூ.401 முதல் ரூ.500 வரை	_	8
9.	ரூ.501 -க்கு மேல்	_	10

20-1-2018 முதல் 28-2-2023 வரை ரூ.2,206.58 கோடி தீர்வையாக வசூலிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ரூ.796.01 கோடி சுங்கக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. விபத்து இழப்பீடு கோரிய 17,196 வழக்குகளில் விபத்து இழப்பீட்டுத் தொகையாக ரூ.927.22 கோடி நேர் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின்படி, 12,101 வழக்குகளுக்கு ரூ.625.14 கோடியும், மக்கள் நீதிமன்றத்தின்மூலம் தீர்வு செய்யப்பட்ட 5,095 வழக்குகளுக்கு ரூ.302.08 கோடியும் விபத்து இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

அரசு போக்குவரத்துக் கழகங்கள்

3.16 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை

மாநகர் போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமையகம் பல்லவன் சாலையில் உள்ள பல்லவன் இல்லத்தில் அமைந்துள்ளது. மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னை

2023 மார்ச் 29]

பெருநகரில் அதிகமாக பேருந்துகளை இயக்கும் தனியுரிமை நிறுவனம். மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னை மற்றும் அதன் அருகிலுள்ள காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் நகரப் பேருந்துகளை இயக்குகிறது.

- *28-2-2023 அன்றுள்ளவாறு இப்போக்குவரத்துக் கழகம் 31 பணிமனைகளையும், 3,436 பேருந்துகளைக் கொண்டு 3,233 சேவைகளை 629 வழித்தடங்களில் ஒவ்வொரு நாளும் இயக்கி வருகிறது. இதன் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 20,245 ஆகும். இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, குளிர்சாதனப் பேருந்து ஆகியவற்றை இயக்கி வருகிறது. இக்கழகத்தின் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் அமைந்துள்ளது.*
- *பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக நிர்பயா திட்ட நிதியின்கீழ் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் இயங்கும் 2500 பேருந்துகளில்* CCTV *கண்காணிப்பு மற்றும் அவசர அழைப்பு பொத்தான்களுடன்கூடிய வாகன கண்காணிப்பு அமைப்பு செயல்படுத்தும் பணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது, அரசு ஆணை(2ப) எண்.86, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (*M.C.*1) துறை, நாள். 20-11-2018-ன்படி வழங்கப்பட்டுள்ள ரூ.72.71 கோடியில், மத்திய அரசின் பங்கு (60%) மற்றும் மாநில அரசின் பங்காக (40%) உள்ளது.*
- *சென்னை பேருந்து செயலி திட்டத்தின் முக்கிய நோக்கம், பேருந்து வருகை பற்றிய தகவலை திறன்பேசிமூலம் வழங்குவதாகும். சென்னை பேருந்து கைபேசி செயலி மற்றும் வலைதளம்மூலம் வழித்தடப் பேருந்துகள் வந்து சேரும் சரியான நேரத்தைப் பற்றிய தகவல்களைப் பயணிகளுக்கு வழங்குகிறது. மேலும், பேருந்து நிறுத்தங்களில் காத்திருக்கும் பயணிகளின் நலனுக்காக எளிதான பயணத்தைத் திட்டமிடவும், பேருந்து வரும் இடத்தைக் கண்டறிந்து அணுகவும், இந்தத் திட்டம் அனைத்து மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.*

TRUTH ALONE TRIUMPHS

- மாநகர் போக்குவரத்துக் கழகத்தை உலகத் தரம் வாய்ந்த பொது போக்குவரத்து நிறுவனமாக மாற்றுவதற்கான வணிகத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில், தமிழ்நாடு அரசு மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகம் இடையேயான பொதுப் போக்குவரத்துச் சேவை குறித்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்பட்சத்தில் அத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட DLI-களை அடைவதன்மூலம் ஏற்கெனவே உள்ள பழைய பேருந்துகளுக்கு நீண்ட கால நிதியுதவி வழங்கப்படும். மேலும், 1000 கூடுதல் பேருந்துகள் மொத்த செலவு ஒப்பந்த மாதிரியில் (GCC Model) வாங்க வாய்ப்புள்ளது. இதற்கான பரிவர்த்தனை ஆலோசகரை நியமிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- பயணிகள் தகவல் அமைப்பு, தானியங்கி வாகன இருப்பிட அமைப்பு, பணிமனை மேலாண்மை அமைப்பின்மூலம் பேருந்துகளை இயக்குவது, பணியாளர்கள் பட்டியல், வருகை மேலாண்மை அமைப்பு, பணியாளர்கள் கைபேசி செயலி பயன்பாடு போன்ற மாநகர் போக்குவரத்துக் கழகத்துக்கான ITS கூறுகளை வரிசைப்படுத்தி செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே சென்னை ஸ்மார்ட் சிட்டி நிறுவனம் ஆகும். சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் மூலமாக இத்திட்ட ஒருங்கிணைப்பாளரை தேர்ந்தெடுப்பதற்கு (RFP) நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

- மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 12 பணிமனை/பேருந்து நிலையங்கள் நவீனமயமாக்கி வணிக வளாகம் அமைத்து மேம்படுத்த தேர்வு செய்யப்பட்டு, பணிகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சி குழுமம் (TNIDB) விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (DFR) மற்றும் பரிவர்த்தனை ஆலோசனை தயார் செய்ய ஆலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- அதன்படி, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் திருவான்மியூர், வடபழனி மற்றும் வியாசர்பாடி பணிமனை மற்றும் பேருந்து நிலையத்தை நவீனமயமாக்க பொது தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் (DBFOT basis) 30 வருடங்களுக்கு சலுகையாளர்

(Concessionaire) தேர்வு செய்ய தகுதிக்கான கோரிக்கை (RFQ) கோரப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக மேலும் மூன்று இடங்களுக்கு (தாம்பரம், திருவொற்றியூர் மற்றும் சைதாப்பேட்டை) தகுதிக்கான கோரிக்கை (RFQ) தயாரிக்கப்பட்டு வருகிறது.

3.17 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட், சென்னை

✓ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 300 கி.மீட்டருக்கும் மேற்பட்ட நீண்டதூர பயணத்திற்காகத் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும், வழிபாட்டுத் தலங்களையும், வர்த்தக இடங்களை இணைக்கும் பொருட்டும், அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களை இணைக்கும் பொருட்டும் இயங்கி வருகிறது. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

✓ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் 22 பணிமனைகள் அமைந்துள்ளன. 28-2-2023 அன்றுள்ளவாறு மொத்தம் 1078 பேருந்துகள் உள்ளன. இக்கழகம் தமிழ்நாட்டுடன் அண்டை மாநிலங்களை இணைக்கும் விதமாக 251 வழித்தடங்களை இயக்கி வருகிறது. அதில் அண்டை மாநிலங்களுக்கு 112 வழித்தடங்களும், தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 139 வழித்தடங்களும் இயக்கப்படுகின்றன.

✓ இந்நிறுவனத்தில் 28-2-2023 அன்றுள்ளவாறு, மொத்தம் 4,626 தொழிலாளர்கள் பணியில் உள்ளனர். மேலும் அதிநவீன மிதவை பேருந்து, குளிர்சாதனப் பேருந்து, குளிர்சாதனப் படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனப் படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து மற்றும் கழிப்பறை வசதி கொண்ட பேருந்து ஆகியவை இயக்கப்படுகின்றன.

✓ ஒரு மாதத்திற்கு முன்னரே இணையதளம் மற்றும் கைபேசி செயலிமூலம் மின்னணு முன்பதிவு செய்யும் வசதி (E-Ticketing) பயணிகளுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

✓ தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம், கேரளா, புதுச்சேரி மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் 62 இடங்களில் 66 மையங்களுடன் உடனடி வழித்தட முன்பதிவு அமைப்பு (OTRS) உள்ளது.

✓ இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலும் இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

✓ பயணிகளுக்கு அனைத்து வகையான முன்பதிவுகளின் மூலமாக அனைத்து வகை பேருந்துகளில் இருவழி பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும்போது 10% கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இச்சலுகையானது பண்டிகை மற்றும் முக்கிய நாட்களுக்குப் பொருந்தாது.

✓ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் "கிளாசிக்" பேருந்து கழிப்பறை வசதியுடன் சென்னையிலிருந்து மாநிலத்திலுள்ள பல்வேறு இடங்களுக்கு இயக்கப்படுகிறது.

✓ அனைத்து பணிமனைகளும் தலைமையகத்துடன் மறைகாணி (CCTV) மூலம் இணைக்கப்பட்டு பணிமனைகளின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

✓ அனைத்து பணிமனைகளிலும் பயோமெட்ரிக் (Biometric) வருகைப் பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டு வருகைப் பதிவு கண்காணிக்கப்படுகிறது.

✓ குறைந்த நிறுத்தங்கள் மற்றும் விரைவான சேவையினை நேரடியாகப் பயணிகளுக்கு வழங்குவதற்காக முக்கிய இடங்களுக்குக் குறிப்பிட்ட அடையாள பெயர்களுடன் (Brand Names) "பிரீமியம் சர்வீஸ்" (Premium Service) பேருந்துகள் இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட இடங்களில்

2023 மார்ச் 29]

ஏறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வசதி கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற முக்கிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

- ✓ பொது மக்கள் எளிதாகப் பயணம் செய்யும் வகையில் தீபாவளி, பொங்கல் பண்டிகையின்போது சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக அனைத்துத் தரப்பு மக்களும் போக்குவரத்து நெரிசலின்றியும், மிகுந்த பயண நேரம் இல்லாமலும் பயணம் செய்ய ஏதுவாக ஐந்து பேருந்து நிலையங்களிலிருந்து இயக்கப்பட்டு வருகிறது.

- ✓ முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகளுக்கு பேருந்தின் பதிவு எண், நடத்துநரின் பெயர் மற்றும் கைபேசி எண் விவரங்கள் குறுஞ்செய்தியாக பயண நேரத்திற்கு 30 நிமிடங்கள் முன்னதாக, முன்பதிவின்போது பயணி அளித்த கைபேசி எண்ணிற்கு அனுப்பப்படும். மேலும், அனைத்து பேருந்துகளிலும் புவித்திசைக்காட்டி (GPS) கருவிபொருத்தப்பட்டு, இக்கருவியின் தொழில்நுட்பத்தின் வாயிலாக முன்பதிவு செய்த பயணிகளுக்குப் பேருந்து வந்துகொண்டிருக்கும் நிகழ்விடம் அறிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ✓ பயணிகள் குறிப்பிட்ட பேருந்து நிறுத்தத்தில் குறிப்பிட்ட பேருந்தின் வருகை நேரத்தினை திறன்பேசி (Smart Phone) மூலம் புவித்திசைக்காட்டி (GPS) தொழில்நுட்பத்தின் வாயிலாக அறிந்திட சென்னை பேருந்து செயலி என்னும் திறன்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- ✓ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், “புலனம் (Whatsapp) கைப்பேசி எண்” மூலம் பயணிகளின் புகாரினைப் பெற்று அவர்களின் குறைகளை உடனுக்குடன் களைந்து வருவதன்மூலம் பயணிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

- ✓ சென்னை, மதுரை திருச்சி மற்றும் நாகர்கோவில் ஆகிய நான்கு இடங்களில் நவீன பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் விபத்தில்லா இயக்கம், KMPL-ஐ அதிகப்படுத்துதல், புதிய தொழில்நுட்ப மேம்பாடு, பராமரிப்பு நடைமுறைகள் மற்றும்

மன அழுத்த மேம்பாடு ஆகியவற்றில் பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுனர்களைக் கொண்டு ஓட்டுநர், நடத்துநர் மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

✓ பயணிகளின் குறைகளை நிவர்த்தி செய்ய OTRS-ல் தங்களின் பயண அனுபவங்களைப் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

3.18 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் வாயிலாக பொது மக்களின் போக்குவரத்துத் தேவைக்கேற்ப நகர், புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 57 ஆகும்
- இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,285 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,020 ஆகும்.
- இக்கழகம் புறநகரப் பேருந்துகளில் சாதாரண, விரைவு, சொகுசு, இடைநில்லா மற்றும் 3X2 இருக்கை கொண்ட குளிர்சாதன பேருந்து போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.
- இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 20,014.
- இப்போக்குவரத்துக் கழகம் கீழ்க்கண்ட பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகிறது. புதுப்பித்தல் பிரிவு-3, உருளிப்பட்டை புதுப்பித்தல்-3, பேருந்து கூண்டு கட்டும் பிரிவு-3, தகுதிச்சான்று பிரிவு-9, ஓட்டுநர் பயிற்சி பள்ளி-6, தொழிற்பயிற்சி பள்ளி-1, கழிவு ஏலப்பிரிவு-3 மற்றும் பயிற்சி மையம்-6.

2023 மார்ச் 29]

- பொது மக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காகவும் மற்றும் வழக்கமாக பிரதி அமாவாசை மற்றும் பௌர்ணமி போன்ற நாட்களுடன் ஆடிக் கிருத்திகை, தைப் பூசம், கூவாகம், கார்த்திகை தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் விஷேச நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

- மலைவாழ் மக்களின் நலனுக்காக 29 மலைவழித் தடங்கள் கீழ்க்கண்ட பகுதிகளுக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

 10 பேருந்துகள் (கல்வராயன், சேராப்பட்டு மற்றும் வெள்ளிமலை மலைப்பகுதி), 3 பேருந்துகள் (ஜமுனாமரத்தூர் மலைப்பகுதி) மற்றும் 16 பேருந்துகள் (புதூர்நாடு, ஏலகிரி, வெலத்திகாமணிபென்டா, அரவட்லா, ஜமுனாமரத்தூர், பாலமதி, செங்காநத்தம் மலைப்பகுதி).

- தொலைதூர மற்றும் நேரிடை பயணிகளின் வசதியினைக் கருத்திற் கொண்டு நடத்துநர் இல்லா மற்றும் இடைநில்லா பேருந்துகள் கீழ்க்கண்ட 8 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன:-

1.	விழுப்புரம்	-	சென்னை
2.	புதுச்சேரி	-	சென்னை
3.	கள்ளக்குறிச்சி	-	சென்னை
4.	கடலூர்	-	சென்னை
5.	விருதாச்சலம்	-	சென்னை
6.	திருவண்ணாமலை	-	சென்னை
7.	வேலூர்	-	சென்னை
8.	காஞ்சிபுரம்	-	சென்னை

தொடக்கத்தில் இயக்கப்பட்ட 30 எண்ணிக்கையிலான பேருந்துகளுக்குப் பொது மக்களிடையே கிடைக்கப் பெற்ற நல்ல வரவேற்பினைத் தொடர்ந்து, தற்போது 129 பேருந்துகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

- மேலும் பயணிகளைக் கவரும் வகையில் 92 குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

[2023 மார்ச் 29

- *ஆறு பயிற்சி மையத்தின் தரத்தை மேம்படுத்திடவும் மற்றும் இரண்டு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளியினை நிறுவவும் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*
- *அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்குப் பயிற்சி மையம்மூலம் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதைப் போன்று தனியார் கனரக ஓட்டுநர்களுக்கு உரிமம் புதுப்பிப்பதற்காக ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சியும் மற்றும் உயிர்ச்சேத விபத்து ஏற்படுத்திய தனியார் கனரக வாகன ஓட்டுநர்களுக்கு இரண்டு நாட்கள் புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.*
- *இப்போக்குவரத்துக் கழகத்தில் பயோ மெட்ரிக் வருகைப் பதிவு இயந்திரம் மூலம் பணியாளர்களின் வருகைப் பதிவு விவரத்தைப் பதிவு செய்யும் புதிய நடைமுறை 67 இடங்களில் (கூட்டாண்மை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், பணிமனைகள் மற்றும் இதரப் பிரிவுகள்) பொருத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.*

3.19 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்

- ➢ *தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூரில் சிறு பகுதி ஆகிய மாவட்டங்களுக்குப் பேருந்து சேவையை வழங்கி வருகிறது.*
- ➢ *சேலத்தினை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநர் தலைமையில் சேலம் மண்டலம் மற்றும் தருமபுரி மண்டலம் என இரண்டு மண்டலங்களாகச் செயல்படுகிறது.*

மண்டலம்	**பணி மனைகளின் எண்ணிக்கை**	**வரையறுக் கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை**	**பணியாளர் களின் எண்ணிக்கை**	**நாள்தோறும் சராசரியாக இயக்கப்படும் தூரம் கி.மீ.**
சேலம்	*18*	*1,047*	*6,171*	*4,73,012*
தருமபுரி	*14*	*853*	*5,462*	*4,22,043*
மொத்தம்	*32*	*1,900*	*11,633*	*8,95,055*

2023 மார்ச் 29]

- *இப்போக்குவரத்துக் கழக இயக்க வரம்பில் சேலம் மாவட்டத்தில் உள்ள 640 கிராமங்களும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 322 கிராமங்களும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள 251 கிராமங்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 485 கிராமங்களும் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 113 கிராமங்களும் உள்ளடக்கியது.*

- *தினசரி ஏறத்தாழ 17.48 இலட்சம் மக்கள் போக்குவரத்திற்காக இக்கழக பேருந்துகளை பயன்படுத்தி வருகின்றனர்.*

- *இப்போக்குவரத்துக் கழகத்தில் இரண்டு ஓட்டுநர்கள் விபத்தில்லா இயக்கத்திற்காகத் தேசிய அளவில் "சாலை நாயகர்கள்" என்ற (ASRTU) விருதிற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.*

- *இப்போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சிப்பம் சேவைகள் மற்றும் வணிக விளம்பரங்கள் மூலமாகக் கூடுதல் வருவாயை ஈட்டியுள்ளது.*

- *இப்போக்குவரத்துக் கழகம் ஏற்கெனவே இயக்கப்பட்டு வரும் பேருந்துகளைக் கொண்டு தடநீட்டிப்பின் மூலமாக 2022-2023 ஆம் ஆண்டில் 50 கிராமங்களுக்குப் புதிதாக பேருந்து வசதி அளித்ததால், 45,913 பயணிகள் பயண வசதி பெற்றுள்ளனர்.*

- *இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட சுற்றுலாத் தலங்களுக்கும் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கும் கூடுதல் வசதிகளைச் செய்து வருகிறது.*

 (i) வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய விஷேச நாட்களில், ஏற்காடு மலை, கொல்லிமலை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது.

 (ii) விஷேச நாட்களில் சிவாலயங்கள் அமைந்துள்ள மாதேஸ்வரன் மலை, தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளுர் மற்றும் அறகலூர் பகுதிகளுக்கும், முருகாலாயங்கள் அமைந்துள்ள காளிப்பட்டி, கபிலர்மலை, புத்திரகவுண்டம்பாளையம் (146 அடி

உயரம் முத்துமலை முருகன் சிலை) மற்றும் நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் ஆகிய வழிபாட்டுத் தலங்களுக்கும் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இப்போக்குவரத்துக் கழகம் 25 மலை இயக்கப் பேருந்துகளைக் கொண்டு, ஏற்காடு மலை, கொல்லிமலை, கல்வராயன்மலை (வெள்ளி மலை), நல்லமதிமலை (பச்சமலை), தொட்டமஞ்சி மற்றும் வத்தல்மலை ஆகிய பகுதிகளுக்குப் போதிய பேருந்து வசதி அளித்து வருகிறது. இதன்மூலம் மலைவாழ் பகுதி பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.
- இப்போக்குவரத்துக் கழகத்தில் "பயணிகளுடன் நாம்" என்ற செயல்பாட்டின்படி, மாதத்திற்கு ஒரு முறை அனைத்து அலுவலர்களும் பேருந்தில் பயணச்சீட்டு பரிசோதகருடன் பயணம் செய்து, பயணிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, பேருந்து சேவை தொடர்பான, குறைகள் மற்றும் நிறைகளைக் கேட்டறிந்தும் கண்டறிந்தும், தக்க நடவடிக்கை மேற்கொண்டு, குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படுகின்றன. பேருந்தின் உட்புற மற்றும் வெளிப்புற தோற்றத்தில் உள்ள குறைகளும் கண்டறியப்பட்டு, உடனடியாகச் சரிசெய்யப்பட்டு வருகின்றன.

3.20 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பேருந்துகளை இயக்கி வருகிறது. மேலும், அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகாவிற்கும் பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநரின் தலைமையில் கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

28-2-2023 அன்றுள்ளவாறு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்டில் கட்டமைப்புகள், பேருந்துகள் மற்றும் பணியாளர்கள் விவரம் பின்வருமாறு:-

2023 மார்ச் 29]

வ. எண்	பொருள்	எண்ணிக்கை
1	மண்டலங்கள்	4
2	பணிமனைகள்	43
3	தொழிற்கூடங்கள்	2
4	ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்	2
5	பேருந்துகள்	2,774
6	பணியாளர்கள்	16,039

- இக்கழகம், பேருந்துகள் மற்றும் சுவர்களில் விளம்பரம் செய்வதன் மூலமாக கூடுதல் வருவாய் பெற்று வருகிறது.
- இக்கழகமானது, பொள்ளாச்சியில் ஓட்டுநர், நடத்துநர், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்குப் பயிற்சிப் பள்ளி நடத்தி வருகிறது. பொள்ளாச்சியில் புதியதாகப் பணியில் சேரும் மற்றும் சேவை செய்யும் ஓட்டுநர்களுக்கு ஓட்டுதல் ஒத்த கருவிமூலம் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட மற்றுமொரு ஓட்டுதல் ஒத்த கருவி ஓட்டுநர்களின் திறமையை மேம்படுத்திட, ஈரோடு மாவட்டம், பவானிசாகரிலுள்ள பயிற்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- இக்கழகத்தின்மூலம் வால்பாறை, உதகமண்டலம் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் கட்டி பராமரிக்கப்பட்டு வருகின்றன.
- இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் பேருந்து பயணிகளின் வசதிக்காக சாலையோர சிற்றுண்டி விடுதிகளைப் பராமரித்து வருகிறது.

3.21 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்டு இயங்கி வருகிறது.

இக்கழகம் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, காரைக்குடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

- *28-2-2023* அன்றுள்ளவாறு, இக்கழகத்தில் மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை 60 ஆகும். பேருந்துகளின் எண்ணிக்கை 3,438. இப்பேருந்துகள் வரையறுக்கப்பட்ட 3,184 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 19,799 ஆகும்.

- இக்கழகம் சாதாரண, விரைவு, சொகுசு மற்றும் 3X2 இருக்கை கொண்ட குளிரூட்டப்பட்ட பேருந்துகளை இயக்கி வருகிறது. பொறையார், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கூண்டு கட்டும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. மேலும், கும்பகோணம், திருச்சி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதுப்பிக்கும் பிரிவு மற்றும் உருளிப்பட்டை பிரிவினையும் கொண்டு இயங்கி வருகின்றது.

- இக்கழகம் 11 மாவட்டங்களிலும் மற்றும் காரைக்கால் உள்ளடக்கிய புதுச்சேரி யூனியன் பிரதேசப் பகுதிகளை இயக்க எல்லையாகக் கொண்டு பேருந்துகளை இயக்கி வருகிறது. மேலும் உலகப் புகழ்பெற்ற வேளாங்கண்ணி திருத்தலம், உலக புராதனச் சின்னமான தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் மற்றும் புகழ்பெற்ற திருவரங்கம் கோயில், சமயபுரம் கோவில், நவக்கிரக கோயில்கள் ஆகிய முக்கிய வழிபாட்டு தலங்களும் இப்போக்குவரத்துக் கழகத்தின் இயக்க பகுதியில் அமைந்துள்ளன. மேலும் வழிபாட்டுத் தலங்களுக்குப் புனித நாட்களில் சிறப்பு பேருந்துகளை இயக்குகிறது. இக்கழகம் விழாக் காலங்களில் இதர புனிதத் தலங்களான பழனி, தாயமங்கலம், நாகூர் மற்றும் ஏர்வாடி தர்கா போன்ற இடங்களுக்குச் சிறப்பு பேருந்து வசதிகளை வழங்கி வருகிறது.

- பேருந்துகளிலும் மற்றும் பணிமனைகளின் வளாகச் சுவர்களிலும் வணிக விளம்பரப் பலகைகளை அனுமதிப்பதன் மூலமும் மற்றும் சாலையோர சிற்றுண்டி

விடுதிகளில் பேருந்து நிறுத்தக் கட்டணம் பெறுவதன் மூலமும் இந்த நிறுவனம் கூடுதல் வருவாய் ஈட்டுகிறது.

- கும்பகோணம் தலைமையகத்தில் 10 கிலோவாட் திறனுள்ள சூரிய ஒளி மேற்கூரை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதன்மூலம் மின்சாரக் கட்டணத்தில் 20% வரை சேமிக்கப்பட்டுள்ளது.

3.22 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை

இப்போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநரின் தலைமையில் மதுரை மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளது. மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு நகர், புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில் பேருந்து சேவையை இயக்கி வருகின்றது.

இக்கழகத்தில் உள்ள பணிமனைகளின் எண்ணிக்கை 40 ஆகும். இக்கழகத்தில் உள்ள மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,299 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,166 ஆகும்.

இக்கழகத்தில் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 13,734 ஆகும். இக்கழகம் சாதாரணப் பேருந்து, விரைவுப் பேருந்து மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

மேலும், நாளொன்றுக்கு இக்கழகத்தின் நிர்ணயிக்கப்பட்ட இயக்க தூரம் 9.74 இலட்சம் கிலோமீட்டர் ஆகும். இதனால், மாதத்திற்கு 292.20 இலட்சம் கிலோமீட்டர் தூரம் இயக்கப்படுகிறது.

இக்கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு 15.07 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர். மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.

உயிரிழப்பு விபத்து ஏற்படுத்திய கழக மற்றும் தனியார் ஓட்டுநர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஓட்டுதல் ஒத்த கருவிமூலம் சிறந்த ஓட்டுநர் பயிற்சி இக்கழகத்தின் பயிற்சி மையத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலமாக ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மண்டலங்களில் மொத்தம் 219 ஓட்டுநர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 29

இக்கழகத்தின் பணிமனை/அலுவலகக் கட்டடங்களின் கூரையில் சூரிய மின்னாற்றல் தகடுகள் நிறுவப்படவுள்ளது. CAPEX மாதிரியின்கீழ் முதற்கட்டமாக ஒரு பணிமனையில் இதனை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள இடங்களுக்குப் படிப்படியாக நிறுவ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இக்கழகத்தால் 30 இரவு நகரப் பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

பேருந்து நிறுத்தங்களின் பெயர்களை ஒலிபெருக்கிமூலம் தானாகவே அறிவிக்கும் முறையை மதுரை மாநகரில் இயக்கப்படும் 75 பேருந்துகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

திருவிழாக்களை முன்னிட்டு கீழ்க்கண்ட இடங்களுக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. (1) வீரபாண்டி, (2) இருக்கன்குடி, (3) வேளாங்கண்ணி (4) பழனி, (5) சபரிமலை ஐயப்பன் கோயில் (குமுளி வரை), (6) அழகர்கோயில், (7) திருச்செந்தூர் கோயில், (8) மாசாணியம்மன் கோயில், (9) திருவண்ணாமலை கிரிவலம் மற்றும் திருப்பரங்குன்றம் கோயில்.

வெளி மாநிலங்களிலிருந்து வரும் பக்தர்களின் பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் போக்குவரத்து நெரிசல் காரணங்களுக்காக அனுமதிக்கப்படாததால், மீனாட்சி அம்மனை வழிபட வரும் பக்தர்களின் வசதிக்காக நான்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

மதுரை ஏராளமான சுற்றுலாத் தலங்களைக் கொண்ட ஒரு பண்டைய நகரம் என்பதால், மதுரையிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கும், 23 கி.மீ. தொலைவிலுள்ள கள்ளழகர் திருக்கோயிலுக்கும் பொதுமக்களின் தேவைகளின் அடிப்படையில் சுற்றுலாப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

3.23 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

இக்கழகம், மேலாண் இயக்குநர் தலைமையின்கீழ் திருநெல்வேலி நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. போக்குவரத்து சேவையை நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, திருநெல்வேலி,

2023 மார்ச் 29]

நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர்ப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- 28-2-2023 அன்றுள்ளவாறு இக்கழகத்தில் மொத்தம் 30 பணிமனைகள் உள்ளன. இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,773 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,661 ஆகும். இக்கழகத்தில் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 10,169 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு, அதிசொகுசு மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகிறது.
- திருச்செந்தூர், சங்கரன்கோவில், பாபநாசம், ஸ்ரீவில்லிபுத்தூர், உவரி. கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் சுற்றுலா மையங்களுக்கு இக்கழகம் பேருந்துகளை இயக்கி வருகிறது.
- புனித யாத்திரை செல்லும் மக்களின் நலன் கருதி நவகைலாயம், நவதிருப்பதி மற்றும் பஞ்சபூதத் தலங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி மண்டலங்களிலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக 29 வழித்தடங்களில் கூடுதலாக 60 நடைகள் இயக்கப்படுகின்றன.
- இக்கழகம், மாத வாடகை அடிப்படையில் 30 குளிரூட்டப்பட்ட பேருந்துகளின் கூண்டு முழுவதும் வணிக விளம்பரம் அனுமதிப்பதன் மூலமும், 52 நகர சிவப்பு நிற பேருந்துகளில் இடது மற்றும் வலது பக்க விளம்பரம் அனுமதிப்பதன் மூலமும், பணிமனை வளாகச் சுவர்களில் விளம்பரங்களை அனுமதிப்பதன் மூலமும் கூடுதல் வருவாய் ஈட்டுகிறது.
- இக்கழகத்தில் 250 நகரப் பேருந்துகளில் பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 29

- திருநெல்வேலி மண்டல தலைமை அலுவலகத்தில் 10 கிலோவாட் சூரிய மின்னாற்றல் தகடு நிறுவப்பட்டதன்மூலம் 11.12% மின்சாரக் கட்டணம் சேமிக்கப்படுகிறது.
- ஓட்டுநர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, பயிற்சி மையம் கன்னியாகுமரியிலுள்ள இராணித் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

4.1 முன்னுரை

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையானது சென்னை மற்றும் பல்வேறு மாவட்டத் தலைமையகங்களில் அமைந்துள்ள 20 அரசு தானியங்கி பணிமனைகள் மற்றும் மூன்று மண்டல துணை இயக்ககங்கள் உட்பட மாநிலம் முழுவதும் உள்ள அரசுத் துறை வாகனங்களைப் பராமரிப்பதற்காக, இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பாதுகாப்பு வாகனங்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மிகவும் முக்கியப் பிரமுகர்கள், அரசுச் செயலாளர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களின் வாகனங்களின் பராமரிப்புத் தேவைகளை, பொது மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் சென்னையில் உள்ள அரசு மத்திய தானியங்கி பணிமனை கவனித்து வருகிறது. நவீன தொழில்நுட்பம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பு மற்றும் வசதி அம்சங்களின் நன்மைகளைப் பெறுவதற்காக மாநில அரசுத் துறைகள்மூலம் புதிய தலைமுறை உயர் தொழில்நுட்ப வாகனங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்தப் புதிய தலைமுறை உயர் தொழில்நுட்ப வாகனங்களின் பராமரிப்புப் பணிகள் சென்னை அரசு மத்திய தானியங்கி பணிமனையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டல துணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டின்கீழ் திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சேலம் ஆகிய மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன. இதர சார் நிலை அலுவலகங்கள் கோயம்புத்தூர், வேலூர், தருமபுரி, நாகர்கோவில், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல், தூத்துக்குடி, விழுப்புரம்,

உதகமண்டலம், விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

4.2 நோக்கம்

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மாநிலம் முழுவதும் இயக்கப்படும் ஏறத்தாழ 21,000 அரசுத் துறை வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புத் தேவைகளைக் கவனித்து வருகிறது. தலைமைச் செயலகம் அருகிலுள்ள சேவை நிலையமானது முக்கியப் பிரமுகர்களின் வாகனங்களுக்கு சிறு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அரசுச் செயலாளர்களின் வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. இத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் 10 எரிபொருள் விநியோக நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அனைத்து அரசுத் துறை வாகனங்களின் பராமரிப்புத் தேவைகளைச் சிக்கனமான மற்றும் திறமையான முறையில், தரமான மற்றும் முறையான சேவையை வழங்குவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

4.3 இதர பணிகள்

4.3.1 அரசுத் துறை வாகனங்களைக் கழிவு செய்தல்

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையானது அரசாணை எண்.2275 உள் (போக்குவரத்து-இ) துறை, நாள் 10-10-1990-ல் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மாநில அரசுத் துறை ஊர்திகளைக் கழிவு செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி பொதுத் துறை, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊர்திகளையும் கழிவு செய்வதற்கு கழிவுச் சான்று வழங்கும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது.

நீதிமன்ற ஆணையின்படி பறிமுதல் செய்யப்பட்ட ஊர்திகளை விற்பனை செய்து அகற்றும் பணியினையும் தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

4.3.2 பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, வனத் துறை, காவல் துறை, வருவாய்த் துறை, உணவு பொருட்கள் வழங்கல் துறை ஆகிய

துறைகள்மூலம் பறிமுதல் செய்யப்படுகின்ற ஊர்திகளை ஆய்வு செய்து, மதிப்பீடு செய்து தற்போது நடைமுறையில் இருக்கும் அரசாணைகளின்படி, விற்பனை செய்யும் பணிகளைத் தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

4.3.3 ஓட்டுநர் பயிற்சி மையங்கள்

அரசு தானியங்கி பணிமனைகள் மதுரை, திருச்சி, சேலம் ஆகியவற்றில் செயல்பட்டு வரும் "ஓட்டுநர் பயிற்சி மையங்கள்" மூலமாக பல்வேறு அரசுத் துறைகளில் பணியாற்றுகின்ற ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களின் திறன் மேம்படுத்தும் பணியினைத் தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

4.3.4 அரசு நடமாடும் தானியங்கிப் பணிமனை

தற்போது இத்துறையின் கட்டுபாட்டில் 20 மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே அரசு தானியங்கிப் பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன. அரசு தானியங்கிப் பணிமனை இல்லாத பிற மாவட்டங்களில் இயக்கப்படும் அரசுத் துறை ஊர்திகள் அருகில் உள்ள அரசு தானியங்கிப் பணிமனைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதற்கான எரிபொருள் செலவினைத் தவிர்க்கும் பொருட்டும், கால விரயத்தினைத் தவிர்க்கும் பொருட்டும் தேவையான ஆய்வு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள முன்னோட்ட அடிப்படையில் (Pilot basis) திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டது. தற்சமயம், கூடுதலாக அரசு நடமாடும் பணிமனைகள் திண்டுக்கல், காஞ்சிபுரம், சேலம், வேலூர், மதுரை, திருநெல்வேலி, தருமபுரி ஆகிய ஏழு இடங்களில் 31.12.2022 அன்று துவக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

4.4 துறையின் செயல்பாடு

i. 2022-2023 ஆம் (1-4-2022 முதல் 15-3-2023 வரை) நிதியாண்டில் இத்துறையின்மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை – 29,940

ii. 2022-2023 ஆம் (1-4-2022 முதல் 15-3-2023 வரை) நிதியாண்டில் பயனற்றதென கழிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

2023 மார்ச் 29]

ஆண்டு	கனரக மோட்டார் வாகனங்கள்	மகிழுந்து	ஈப்பு	வேன்	மோட்டார் சைக்கிள்	மொத்தம்
2022-2023 (1-4-2022 முதல் 15-3-2023 வரை	74	167	457	129	749	1,576

5. சாலைப் போக்குவரத்து நிறுவனம்

5.1 அறிமுகம்

சாலைப் போக்குவரத்து நிறுவனம் 1860 ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 1976 ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. சாலைப் போக்குவரத்து நிறுவனம், பேருந்து போக்குவரத்துத் தொடர்பான மேம்பாட்டு பணிகள், சாலைப் பாதுகாப்பு ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, போக்குவரத்துக் கழக அலுவலர்கள்/பணியாளர்கள் புத்தாக்கப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினைப் பரிசோதித்தல் பணியையும் செய்து வருகின்றது.

5.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

சாலை போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களைக் கும்மிடிப்பூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து கீழ்க்கண்ட 15 இடங்களிலும் நடத்தி வருகிறது:-

1.	திருவள்ளூர்	6.	மதுரை	11.	பொள்ளாச்சி
2.	வேலூர்	7.	திண்டுக்கல்	12.	ஈரோடு
3.	விழுப்புரம்	8.	திருநெல்வேலி	13.	கும்பகோணம்
4.	சேலம்	9.	நாகர்கோவில்	14.	காரைக்குடி
5.	தருமபுரி	10.	விருதுநகர்	15.	புதுக்கோட்டை

[2023 மார்ச் 29

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியங்களின் நிதியுதவிமூலம் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியும் நடத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில், அரசின் வழிகாட்டுதலின்படி வழங்கப்படும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2021-2022 வரை	2022-2023	மொத்தம்
1.	கும்மிடிப்பூண்டி	24,565	684	25,249
2.	திருச்சிராப்பள்ளி	2,600	138	2,738
3.	இதர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கனரக வாகன பயிற்சி மையங்கள்	36,780	547	37,327
மொத்தம்		**63,945**	**1,369**	**65,314**
புத்தாக்கப் பயிற்சிகள் கும்மிடிப்பூண்டியில்		66,807	1,480	68,287

5.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள்

1997 ஆம் ஆண்டு இரு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் இலகுரக வாகன பயிற்சியளிப்பதற்கு சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டது. பொது மக்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி மட்டுமல்லாமல் நிதியுதவி திட்டங்களின்மூலம் சென்னை பெருநகர மாநகராட்சி போன்ற பிற துறைகளின் ஓட்டுநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 29]

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2021-2022 வரை	2022-2023	மொத்தம்
1.	தரமணி, சென்னை	3,155	301	3,456
2.	திருச்சிராப்பள்ளி	1,110	120	1,230
மொத்தம்		4,265	421	4,686

மேலும் அரசாணைப்படி, அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களின் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்புப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2021-2022 வரை	2022-2023	மொத்தம்
1.	தரமணி, சென்னை	7,306	80	7,386
2.	கும்மிடிப்பூண்டி	3,667	29	3,696
3.	திருச்சிராப்பள்ளி	25,679	28	25,707
மொத்தம்		36,652	137	36,789

5.4 திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, அப்பயிற்சி, தரமணியிலுள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. பிப்ரவரி 2023 வரை 1861 பயிற்சி வகுப்புகளின்மூலம் மொத்தம் 43,625 போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும், போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

5.5 சாலை போக்குவரத்து இதழ்

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு இதுவரை போக்குவரத்து சம்பந்தமாக பல ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. மேலும், அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு பயன்படும் வகையில் விபத்து விசாரணை கையேடு என்ற வழிகாட்டியினை வெளியிட்டுள்ளது.

சாலை போக்குவரத்து, சாலைப் பாதுகாப்பு, விபத்து ஒப்பீடு குறித்த தகவல்கள் அடங்கிய சாலைப் போக்குவரத்து இதழினை சாலை போக்குவரத்து நிறுவனம் வெளியிடுகிறது.

5.6 கொள்முதல் நடவடிக்கைகள்

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாகக் கட்டப்பட்ட பேருந்துகள், பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் (Lubricants) ஆகியவற்றினைக் கொள்முதல் செய்வதற்கு சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாகச் (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

5.7 உபகரணங்கள் பரிசோதனை மற்றும் தரக் கண்காணிப்பு

சாலை போக்குவரத்து நிறுவனத்திலுள்ள உபகரணங்கள் பரிசோதனைக்கூடத்தில் 54 வகையான மோட்டார் வாகன உதிரி பாகங்கள் ASRTU மற்றும் BIS விவரக் குறியீடுகளின்படி, பரிசோதனை செய்யும் வசதி உள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில் பிப்ரவரி 2023 வரை 5,932 மாதிரிக் கூறுகள் (Samples) பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

5.8 கல்வி நிறுவனங்கள்

சாலை போக்குவரத்து நிறுவனம்மூலம், அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இடஒதுக்கீட்டு பாதுகாப்புடன் கீழ்க்கண்ட கல்வி நிறுவனங்களைத் தொடங்கியுள்ளது.

2023 மார்ச் 29]

1. அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்தவமனை, பெருந்துறை (முன்னர் சாலை போக்குவரத்து நிறுவனம் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெருந்துறை) (1986-1987).

2. அரசு பொறியியல் கல்லூரி, ஈரோடு (முன்னர் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, ஈரோடு) (1984-1985).

3. அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி (முன்னர் சாபோநி பல் தொழில்நுட்பக் கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி) (1992-1993).

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (PMCH) 2019 ஆம் ஆண்டு முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டு பாதுகாப்புடன் மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறையால் (அரசாணை (நிலை) எண் 308, நாள் 24-10-2018) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 165, (உயர் கல்வித் (ஜே2) துறை), நாள் 27-8-2021-ன்படி, 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டு பாதுகாப்புடன் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரியை அரசு பொறியியல் கல்லூரியாக மாற்றி, உயர் கல்வி துறைத் ஆணை வெளியிட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 25, 26&27 (உயர்கல்வித் (பி2) துறை), நாள் 9-2-2023-ன்படி 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டு பாதுகாப்புடன் சாலைப் போக்குவரத்து நிறுவனம் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளாக மாற்றி, உயர் கல்வித் துறை ஆணை வெளியிட்டுள்ளது.

இக்கல்லூரிகள் இதுவரை 1,821 மருத்துவர்களையும், 10,756 பொறியியல் பட்டதாரிகளையும், 13,616 பட்டயப் பொறியாளர்களையும் உருவாக்கியுள்ளன.

[2023 மார்ச் 29

6. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் மூலதனம் மற்றும் செயல்பாட்டு மூலதனத் தேவைகளுக்குப் பொது மக்களிடமிருந்து நிதியை ஈர்க்கும் நோக்கத்துடன் 25-3-1975 அன்று தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் வங்கி சாரா நிதி நிறுவனமாக இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

6.1. நிதி செயல்திறன்

- தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இலாபகரமாக இயங்கி வருகின்றது.
- கடந்த எட்டு ஆண்டுகளில் பெறப்பட்ட வருமானம் வருமாறு:-

(இலட்சங்களில்)

ஆண்டு	வட்டி தள்ளுபடிக்கு முன் லாபம்	அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வட்டி தள்ளுபடி	வட்டி தள்ளுபடிக்குப் பிறகு லாபம் ஆனால் வரிக்கு முன்	வருமான வரி	வரிக்கு பிந்தைய லாபம்
2014-2015	3294.25	2509.00	785.25	254.77	530.48
2015-2016	5283.29	4648.68	634.61	211.25	423.36
2016-2017	7322.42	6469.00	853.42	282.17	571.25
2017-2018	7996.71	6964.50	1032.21	357.23	674.98
2018-2019	9885.93	8684.16	1201.77	419.95	781.82
2019-2020	1874.64	—	1874.64	656.24	1220.74
2020-2021	4737.37	—	4737.37	2330.70	2406.67
2021-2022	5508.48	—	5508.48	2190.64	3317.84
2022-2023 (B.E.)	6000.00	—	6000.00	1510.08	4489.92

2023 மார்ச் 29]

6.2 வைப்பீடுகள்

- இந்நிறுவனம் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்று முதலீட்டிற்கு ஏற்ற ஒன்றாகவுள்ளது. 28-2-2023 அன்றுள்ளவாறு, இந்நிறுவனத்தில் ரூ.9440.88 கோடி வைப்புத் தொகையாக உள்ளது.

6.3 வைப்புத்தொகை மீதான வட்டி வீதங்கள்

- சந்தை நிலவரத்திற்கேற்பவும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் தேவை மற்றும் திருப்பிச் செலுத்தும் நிலையைப் பொறுத்தும் வைப்புத் தொகைக்கு வழங்கப்படும் வட்டி மாற்றியமைக்கப்படுகிறது.
- இந்நிறுவனம் பிற அரசு நிதி நிறுவனங்களின் வட்டி விகிதங்களுக்கு இணையாக வட்டி விகிதங்களை நிர்ணயித்துள்ளது. வைப்பு நிதிக்கான தற்போதைய வட்டி விகிதம் பின்வருமாறு:-

காலம்	வைப்புத் தொகை மீதான வட்டி விகிதம் (காலாண்டுக்கு ஒரு முறை வட்டி கூட்டு) 01.03.2023 முதல்	
	பொதுமக்கள்	மூத்த குடிமக்கள்
12 மாதங்கள்	7.50%	7.75%
24 மாதங்கள்	7.60%	7.85%
36 மாதங்கள்	7.75%	8.00%
48 மாதங்கள்	8.00%	8.25%
60 மாதங்கள்	8.00%	8.25%

6.4 வைப்புத் திட்டங்கள்

- தற்போது இரண்டு வைப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

விவரம்	திட்டம் I (PIPS)	திட்டம் II (MMS)
திட்டங்கள்	காலமுறை வட்டி செலுத்தும் திட்டம்	பணப் பெருக்கல் திட்டம்
குறைந்தபட்ச வைப்பு	ரூ.50,000/-	ரூ.50,000/-
காலம் (மாதங்களில்)	24,36,48 & 60	12, 24, 36, 48, & 60
வழங்கப்படும் வட்டி விகிதம்	24 மாதங்கள் - காலாண்டு 36-60 மாதங்கள்- மாதாந்திர, காலாண்டு மற்றும் வருடாந்திர	முதிர்வு காலத்தில் (காலாண்டு அடிப்படையில் கூட்டு வட்டி)

6.5 வைப்பீடுகளின் வளர்ச்சி

கடந்த 5 நிதியாண்டுக்கான வைப்பீடுகளின் வளர்ச்சி பின் வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	வைப்பீடு	வைப்புத் தொகை அதிகரிப்பு
2018-2019	5044.38	—
2019-2020	5996.44	952.06
2020-2021	6792.01	795.57
2021-2022	8011.75	1219.74
2022-2023 (28.02.2023 வரை)	9440.88	1429.12

தொடங்கப்பட்டதிலிருந்து 2022-2023 ஆம் ஆண்டில் அதிகபட்ச வைப்பு வளர்ச்சி அடையப்பட்டது.

2021-2022 ஆம் நிதியாண்டில் வைப்புத் தொகையின் நிகர வளர்ச்சி ரூ.1219.74 கோடியாக அதிகரித்துள்ளது. இது தொடங்கப்பட்டதிலிருந்து ஒரு வருடத்தில் அதிக வைப்பீடு அதிகரிப்பின் வாழ்நாள் சாதனையாகும்.

2023 மார்ச் 29]

6.6 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட வைப்பீடுகள்

- தமிழ்நாடு அரசின், சமூக நலத் துறையுடன் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். 28.02.2023 அன்றுள்ளவாறு, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 77,236 வைப்பாளர்கள் ரூ.11.70 கோடியினை வைப்பீடு செய்துள்ளனர்.

6.7 நிறுவனத்தின் நிதி

28-2-2023 அன்றுள்ளவாறு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மொத்த நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:-

(ரூ. கோடியில்)

விவரம்	தொகை	தொகை
பங்கு மூலதனம் — (அ) அரசு பங்கு வகை (ஆ) அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்கு தொகை	 2032.10 18.71	2050.81
இருப்பு மற்றும் உபரி		207.20
வைப்பு நிதி		9440.88
பாரத ஸ்டேட் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்கள்		4719.00
மொத்தம்		**16417.89**

6.8 கடன்கள்

- 2022-23 ஆம் ஆண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(ரூ. கோடியில்)

விவரம்	தொகை
வாடகை கொள்முதல் கடன்	—
குறுகிய கால கடன்	2735.60
நடைமுறை மூலதனத்திற்காக பருவக் கடன்கள்	7991.05
மொத்தம்	10726.65

- தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த 8 ஆண்டுகளாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ள நிதியுதவி விவரம் பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	நிதியுதவி
2014-2015	2151.24
2015-2016	2776.33
2016-2017	3574.32
2017-2018	3757.58
2018-2019	445.75
2019-2020	6190.11
2020-2021	7725.25
2021-2022	10786.33
2022-2023 (பிப்ரவரி 23 வரை)	10726.65

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 29]

6.9 நிலுவையிலுள்ள கடன்கள்: (28.02.2023) அன்றுள்ளவாறு

(ரூபாய் கோடியில்)

அரசு போக்குவரத்துக் கழகங்கள்	கடன் நிலுவை	
	2021-2022	2022-2023 (28-2-2023 வரை)
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்	2521.04	2810.43
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட்	1715.94	1948.75
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்	1578.81	1801.88
மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட்	1716.90	2183.10
அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்	1508.21	1626.98
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்	1459.41	1615.99
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட்	2126.96	2393.45
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்	1418.37	1765.65
மொத்தம்	**14045.64**	**16146.23**

அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கடன் வழங்குவது அதிகரிக்கப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 29

6.10. புதிய கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி வீதம்

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவும் வகையில், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் அதிக விளிம்பு (Margin) இல்லாமல் கடன்களைக் கீழ்க்கண்டவாறு வழங்குகிறது.

விவரம்	வட்டி வீதம்	நாளன்றுள்ளவாறு
வாடகை கொள்முதல் கடன்	6.90%	01.04.2021
நீண்ட காலக் கடன்	7.00%	01.04.2021

வங்கிக் கடன்களை எந்த விளிம்பும் (Margin) இல்லாமல் அதே விகிதத்தில் மீண்டும் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்குகின்றது.

6.11. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் செயல்பாட்டு மூலதன ஏற்பாடுகளை முறைப்படுத்திட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள்

- வங்கிகளுடன் நடைமுறையில் உள்ள செயல்பாட்டு மூலதன ஏற்பாடுகளை முறைப்படுத்தவும், வட்டி விகிதத்தைக் குறைக்கவும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், அரசாணை (நிலை) எண்.113 போக்குவரத்து (டீடி1) துறை, நாள் 4-7-2019-ன்படி ரூ.900 கோடிக்கும், அரசாணை (நிலை) எண்.54 போக்குவரத்து (டீடி1) துறை, நாள் 7-7-2019-ன்படி ரூ.225 கோடிக்கும் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து ரொக்கக் கடன் வசதியைப் பெற்றுள்ளது. இதன்மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஆண்டுக்கு ரூ.80 கோடி வரை பயனடைந்து வருகின்றன.

7. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவானது ஏப்ரல் 1984 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், ரூ.10.00 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம்

2023 மார்ச் 29]

சாலைப் போக்குவரத்துத் துறையில் ஆலோசனை சேவைகளை வழங்குவதாகும்.

- போக்குவரத்து மற்றும் போக்குவரத்துப் பொறியியல், நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு மற்றும் எண்முறை (Digital) மயமாக்கல் ஆகிய துறைகளில் இந்நிறுவனம் இதுவரை சுமார் 67 ஆலோசனை திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

- இந்நிறுவனம் பின்வரும் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. 1. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான ஒருங்கிணைந்த பயணிகள் குறைகள் மற்றும் குறை தீர்க்கும் முறையைச் செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் 2. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான பொது இணையதளம் 3. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்துப் பயணச் சீட்டினை நிகழ்நிலை இணையதள (Online) வழங்கும் முறை 4. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான இணையதளப் பயணச்சீட்டு முன்பதிவு முறையின் செயல்பாடு மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பைக் கண்காணித்தல் 5. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான இணையவழி பயணச்சீட்டு முன்பதிவு முறை (OTRS) மற்றும் மின்னணு பயணச்சீட்டு இயந்திரம் (ETM) திட்டத்தைச் செயல்படுத்துதல். (தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்)

- இந்நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பயணச்சீட்டு அல்லாத வருவாய் ஈட்டும் திட்டத்தின்கீழ் புதிய தொழில்நுட்பம் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான தொழில்நுட்பக் கருத்துருக்களையும் வழங்கியுள்ளது. மேலும், புதிய திட்டங்களை மேற்கொள்வதன்மூலம் அதன் வருவாய் ஆதாரத்தை அதிகரிக்க ஒருங்கிணைந்த முயற்சிகளை எடுத்து வருகிறது.

8. துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு

8.1 இரயில்வே திட்டங்கள்

தமிழகத்தில், நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் புதிய இரயில்

[2023 மார்ச் 29

பாதைகள், இரட்டை இரயில் பாதைகள் மற்றும் அகல இரயில் பாதைகள் அமைப்பதற்கு நிலங்களைக் கையகம் செய்து இரயில்வே துறைக்கு வழங்குவதற்கு போக்குவரத்துத் துறை முகமைத் துறையாக செயல்படுகிறது.

8.2 தமிழ்நாட்டின் இரயில்வே திட்டங்கள்

8.2.1 மணியாச்சி - நாகர்கோவில் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டம், மணியாச்சி முதல் நாகர்கோவில் வரை 102 கி.மீட்டர் தூரத்திற்கு இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 68.39.23 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 15.99.78 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

8.2.2 திண்டிவனம் – நகரி புதிய அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டம், திண்டிவனம் முதல் நகரி வரை 184.45 கி.மீட்டர் தூரத்திற்கு இணைக்கும் புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். திண்டிவனம் (தமிழ்நாடு) – நகரி (ஆந்திரப் பிரதேசம்) இடையே, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு மாவட்டங்களைக் கடந்து செல்லும் வகையில் இரயில் பாதை அமையவுள்ளது. மேற்காணும் மாவட்டங்களில் உள்ள 560.18 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 121.19 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

8.2.3 பேரளம்–காரைக்கால் புதிய அகல இரயில் பாதைத் திட்டம்

இத்திட்டம், பேரளம் முதல் காரைக்கால் வரை 23.5 கி.மீட்டர் தூரத்திற்குப் புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும்.

2023 மார்ச் 29]

இத்திட்டத்திற்காக, 2.03 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

8.2.4 நாகப்பட்டினம் – திருத்துறைப்பூண்டி புதிய அகல இரயில்பாதை திட்டம்

இத்திட்டம், நாகப்பட்டினம் முதல் திருத்துறைப்பூண்டி வரை 43 கி.மீட்டர் தூரத்திற்கு புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக, 01.87.73 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

8.2.5 சின்னசேலம்—கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதைத் திட்டம்

இத்திட்டம், சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை 16 கி.மீட்டர் தூரத்திற்கு புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காகக் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 44.66 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 3.04 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

8.2.6 விழுப்புரம்-திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டம், தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களை இணைத்து அதிக பயணிகளின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டத்திற்காக விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 141.00.97 ஹெக்டேர் பட்டா நிலம், 40.92.61 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

[2023 மார்ச் 29

8.2.7 மதுரை – தூத்துக்குடி இரட்டை அகல இரயில் பாதைத் திட்டம்

இத்திட்டம், மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். மதுரை மற்றும் தூத்துக்குடி இடையிலான அகல இரயில் பாதை அமைப்பதற்கு 95.70.17 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 21.23.30 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

8.2.8 கன்னியாகுமரி – திருவனந்தபுரம் இரட்டை அகல இரயில் பாதைத் திட்டம்

இத்திட்டமானது, கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவில், நாகர்கோவிலிலிருந்து இரணியல் மற்றும் இரணியலிலிருந்து பாரசாலா வரையிலான மூன்று அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு அலகுகளான கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவில் மற்றும் நாகர்கோவிலிலிருந்து இரணியல் வரையிலான இரட்டை அகல இரயில் பாதைத் திட்டத்திற்கு 14.03.73 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 0.96.54 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்த செய்வதற்கு நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இரணியிலிலிருந்து பாரசாலா வரையிலான வழித்தடத்திற்குத் தேவையான நிலம் கையகம் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

8.2.9 மதுரை – தூத்துக்குடி வழி அருப்புகோட்டை புதிய அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டம், மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் சுமார் 143.5 கி.மீ. உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மீளவிட்டான் – மேலமருதூர் வரையிலான 18 கி.மீட்டர் தூரத்திற்குப் புதிய இரயில் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்காக, தூத்துக்குடி மாவட்டத்தில் 14.99 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும்

2023 மார்ச் 29]

1.91.90 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரையிலிருந்து தூத்துக்குடி வரை அருப்புகோட்டை வழியாகப் புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டத்தில் தூத்துக்குடி மாவட்டத்திற்கான நிலம் கையகம் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

8.2.10 சென்னை கடற்கரை – கொருக்குப்பேட்டை இடையே 3-வது மற்றும் 4-வது புதிய இரயில் பாதைத் திட்டம்

சென்னை கடற்கரை முதல் கொருக்குப் பேட்டை வரை 3-வது மற்றும் 4-வது புதிய இரயில் பாதையானது சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் வழியாகச் செல்கிறது. இது சென்னை கடற்கரை மற்றும் கும்மிடிப்பூண்டி இடையிலான புறநகர் இரயில் பயணிகளின் சேவைக்காக உருவாக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மாவட்டங்களில் 506 சதுர மீட்டர் நிலப்பரப்பைக் கையகப்படுத்த அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

8.2.11 கொருக்குப்பேட்டை–எண்ணூர் இடையே 4-வது புதிய இரயில் பாதைத் திட்டம்

கொருக்குப்பேட்டை முதல் எண்ணூர் வரை 4-வது புதிய இரயில் பாதை அமைப்பதற்காக, சென்னை மாவட்டத்தில் 6,464 சதுர மீட்டர் நிலத்தை கையகப்படுத்த அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

9. சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

9.1 சாலைப் பாதுகாப்பு

1-1-2023 அன்றுள்ளவாறு, 0.13 கோடி போக்குவரத்து வாகனங்கள் மற்றும் 3.22 கோடி போக்குவரத்து அல்லாத வாகனங்கள் உள்பட மொத்தம் 3.35 கோடி போக்குவரத்து வாகனங்கள் தமிழ்நாட்டில் இயக்கப்படுகின்றன. இந்தியாவிலேயே அதிக வாகன எண்ணிக்கைக் கொண்ட மாநிலங்களில்

தமிழ்நாடும் ஒன்றாகும். போக்குவரத்து வாகன வகைகளில் 28,027 கட்டண நிலை பேருந்துகளும் மற்றும் 3,990 சிற்றுந்துகளும் உள்ளன. கட்டண நிலைப் பேருந்துகளில் 20,213 போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், 7,814 தனியார் பேருந்துகளும் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும்ஏறத்தாழ 20 இலட்சம் வாகனங்கள் கூடுதலாக பதிவு செய்யப்படுகின்றன. விரைவான நகரமயமாக்கல் காரணமாக, தமிழ்நாட்டில் வாகனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 80 இலட்சம் கி.மீட்டருக்கு மேல் இயங்கி சாலைப் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதுடன், சாலைப் பாதுகாப்பிற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

9.2 அரசு போக்குவரத்துக் கழகங்களின் சாலைப் பாதுகாப்பு முயற்சிகள்

சாலைப் பாதுகாப்பு என்பது வாகன உற்பத்தியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சாலையைப் பயன்படுத்துபவர்களால் அனைத்து சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பயன்படுத்தி சாலை விபத்துகளைத் தடுப்பது மற்றும் பாதுகாப்பதாகும். சாலைப் பாதுகாப்பு சாலைகளில் பயணிப்போரை பாதுகாக்கிறது.

காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து "விபத்து இல்லாத தமிழ்நாடு" என்ற இலக்கை அடைவதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சாலைப் பாதுகாப்பு முன்முயற்சிகளை செயல்படுத்த போக்குவரத்து ஆணையரகத்துடன் அரசு போக்குவரத்துக் கழகங்கள் இணைந்து செயல்பட்டு வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள பேருந்துகளில் கீழ்க்கண்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது:-

i)	தானியங்கி கதவு மூடும் அமைப்பு
ii)	ஓட்டுநர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய பயிற்சி
iii)	ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்கான வசதிகளை மேம்படுத்துதல்

2023 மார்ச் 29]

iv)	பயணங்களின்போது பேருந்து வழித்தடம் தொடர்பான அறிவிப்புகள்
v)	மறைவு பகுதிகளைக் காட்டும் கண்ணாடிகளை பொருத்துதல்
vi)	ஓட்டுநருக்கு அருகிலுள்ள வாகனங்கள் குறித்து எச்சரிக்கும் கருவிகள்
vii)	அதிக விபத்து நடக்கும் வழித்தடங்களைக் கண்டறிதல்
viii)	விபத்துகளின் அறிவியல் பகுப்பாய்வு
ix)	பக்கவாட்டு பாதுகாப்பு அலகு

9.3 சாலை விபத்துகளைக் குறைக்க அரசு போக்குவரத்துக் கழகங்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

அரசு போக்குவரத்துக் கழக பேருந்து ஓட்டுநர்களால் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதால் நிதிச்சுமை ஏற்படுகிறது. எனவே, பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிப்பதன்மூலம் விபத்துகளைத் தவிர்க்க அரசு போக்குவரத்துக் கழகங்கள் கவனம் செலுத்தி வருகின்றன.

மாநிலத்தில் சாலை விபத்துகளைக் குறைக்க அரசு போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன:-

i) ஓட்டுநர் வாகனம் ஓட்டும்போது கைபேசிகளைப் பயன்படுத்துதல் மற்றும் பணியின்போது மது அருந்துதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

ii) ஓட்டுநர் பேருந்தினை எடுப்பதற்கு முன்னர் சுவாசப் பரிசோதனைக் கருவிமூலம் மது அருந்தியிருக்கிறாரா என்பதைக் கண்டறியும் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

iii) போக்குவரத்துத் துறை பறக்கும் படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்துதல். மேலும், காவல் துறையின்மூலம் தொடர் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தல்

[2023 மார்ச் 29

iv) அடிக்கடி விபத்து நடைபெறும் மறைவுப் பகுதிகள் வரைபடமாக்கப்பட்டு, தொடர்புடைய துறைகளுக்கு சரிசெய்வதற்காக அனுப்பப்படுகின்றன.

v) நெடுஞ்சாலைத் துறை, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மற்றும் காவல் துறையின் உதவியுடன் அடிக்கடி விபத்துகள் ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதிகளில் சாலைகளை மேம்படுத்துவது, எச்சரிக்கை பலகைகள் மற்றும் போக்குவரத்து இயக்கங்களை ஒழுங்குபடுத்துவதன்மூலம் விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

vi) உயிரிழப்பு விபத்துகளைத் தொடர்ந்து ஏற்படுத்தும், தவறு செய்யும் ஓட்டுநர்கள்மீது, அரசு போக்குவரத்துக் கழகங்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

vii) பிற துறைகள் மற்றும் பங்குதாரர்களுடன் இணைந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.

viii) ஓட்டுநர்களின் மன அழுத்தத்தைக் குறைக்க யோகா மற்றும் தியான பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன

ix) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

x) அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களும் விபத்தில்லா வாகனம் ஓட்டுவதை ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் விருதுகள் ஓட்டுநர்களுக்கு வழங்கப்படுகின்றன.

xi) கடந்த சில ஆண்டுகளாக அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் விபத்துகள் குறைந்துள்ளன. அரசு பேருந்து விபத்துகள்மூலம் உயிரிழந்தவர்களின் விவரங்கள் பின்வருமாறு:-

2023 மார்ச் 29]

ஆண்டு	பேருந்து சேவைகளின் எண்ணிக்கை	உயிரிழப்பு விபத்துக்களின் எண்ணிக்கை	இறப்புகளின் எண்ணிக்கை
2019-2020 (கொரோனாவுக்கு முன்)	*19,290*	*867*	*969*
2020-2021 (கொரோனா காலத்தில்)	*19,290*	*343*	*381*
2021-2022 (கொரோனா காலத்தில்)	*19,290*	*705*	*762*
2022-2023 (ஜனவரி 2023 வரை)	*18,723*	*767*	*839*

9.4 சாலைப் பாதுகாப்பு நிதி

மாநில அரசு ஒவ்வோர் ஆண்டும், சாலைப் பாதுகாப்பு நிதியை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்து வருகிறது. சாலைப் பாதுகாப்பு நிதியானது, சாலைப் பாதுகாப்பு தொடர்பான பணிகள்/ திட்டங்களுக்காகப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படுகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டிற்குத் தலா ரூ.2.37 கோடியினை கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

வ. எண்	அரசு போக்குவரத்துக் கழகங்கள்	அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய்)
1	மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை	*36,75,000*
2	அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை	*12,75,000*
3	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்	*26,50,000*

வ. எண்	அரசு போக்குவரத்துக் கழகங்கள்	அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய்)
4	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்	*25,00,000*
5	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்	*37,71,000*
6	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்	*28,30,100*
7	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை	*30,00,000*
8	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி	*38,65,000*
மொத்தம்		**2,37,66,100**

9.5 சாலைப் பாதுகாப்பு வாரம்

சாலையைப் பயன்படுத்துபவரிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்பொருட்டு ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் சாலைப் பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கப்படுகிறது.

9.6 சாலைப் பாதுகாப்பு விருதுகள்

சிறந்த செயல்திறன், விபத்து இல்லாத, புகாரற்ற, தண்டனையற்ற செயல்களைத் தங்களது பணிக்காலத்தில் மேற்கொள்வதற்கு அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வும், ஊக்கமும் அளிக்கப்பட வேண்டுமென மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் நற்பெயரை மேம்படுத்துவதிலும், அடுத்த தலைமுறை ஓட்டுநர்களுக்கு ஊக்கமளிப்பதிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய ஓட்டுநர்கள் மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பால் சிறந்த ஓட்டுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் உள்ள 5 அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 10 ஓட்டுநர்கள் (கோயம்புத்தூர், சேலம், விழுப்புரம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு போக்குவரத்துக் கழகங்களிலிருந்து

2023 மார்ச் 29]

தலா 2 ஓட்டுநர்கள்) “சாலை நாயகர்கள்” (Heros on the Road) விருது பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஒன்றிய அமைச்சர், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அவர்களால் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

10. எதிர்கால கொள்கைகள் மற்றும் திட்டங்கள்

பேருந்து போக்குவரத்தின் எதிர்காலக் கொள்கையின் முக்கிய நோக்கம் பின்வரும் மூன்று குறிக்கோள்களை அடைவதாகும்:

- *சுத்தம்: மாசு இல்லா நிலை, சுத்தமான காற்றுக்கு வழிவகுக்கிறது, இதுவே சிறந்த ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரத்திற்கு வழிவகுக்கிறது.*
- *வசதி: தடையற்ற, பாதுகாப்பான, மலிவான, வயதானவர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் மற்றும் இதர அனைத்துப் பிரிவுகளுக்கும் அணுகக்கூடிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மற்றும் முக்கிய கிராமப்புற மற்றும் நகர்ப்புற மையங்களை இணைப்பது.*
- *நெரிசல் இல்லாமை: குறைந்தபட்ச நெரிசல் அளவுகள் அடைவதன்மூலம் மேம்பட்ட பொருளாதார செயல்திறன்.*

10.1 தொழிலாளர் நலன்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணியாளர்களில் 98 விழுக்காடு பணியாளர்கள் ஊதிய ஒப்பந்தத்தின்கீழ் வரக்கூடிய தொழிலாளர்களாக உள்ளனர். ஊதிய ஒப்பந்தம் நிர்வாகத்திற்கும் மற்றும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே குறிப்பிட்ட கால இடைவெளியில் நிறைவேற்றப்படுகிறது. தற்போதைய ஊதிய ஒப்பந்தத்தின் கால இடைவெளி நான்கு ஆண்டுகளாகும். நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் தொழிலாளர்களின் நலனுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10.2 மாற்று எரிபொருள்கள் (மரபுசாரா எரிபொருள்கள்)

வாகனங்களை இயக்க பெட்ரோலிய அடிப்படையிலான புதைபடிவ எரிபொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது சுற்றுச்சூழலை மாசுப்படுத்தும் மற்றும் காலப்போக்கில் தீர்ந்துவிடும். அண்மைக் காலங்களில் வழக்கமான பேருந்துகளுடன்

[*2023 மார்ச் 29*

*ஒப்பிடும்போது வாகன இயக்கம், புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் அதிக இணக்கத்தன்மை, குறைந்த புகை வெளியேற்றும் குழாய் (*tail pipe*) மற்றும் வாகனத்தின் ஆயுட்காலம் முழுவதும் வெளியேற்றப்படும் புகை ஆகியவற்றிற்காக எரிசக்தி ஆற்றலைத் திறம்பட மாற்றக்கூடிய பல்வேறு பயன்கள் காரணமாக நகரங்களில் இந்த மாசில்லா வாகனத் தொழில்நுட்பங்கள் பெருமளவில் அனைவரையும் ஈர்த்துள்ளன. இந்தத் தொழில்நுட்பங்கள், நகரங்களின் ஒட்டுமொத்தமாகக் காற்றின் தரம் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதோடு, உலகளாவிய பருவநிலை மாற்றத்திற்கும் பயனளிக்கும். மேலும், இத்தகைய தொழில்நுட்பம், அரசு போக்குவரத்து பொது மக்களை எவ்வாறு கவரும் என்பது குறித்து பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கும். மாசில்லா பேருந்துகளின் பயன்பாடுகளுக்கான இத்தகைய மாற்றமானது, பேருந்து செயல்பாட்டை "மேம்படுத்துவது" மட்டுமின்றி, மக்கள் தனியார் பேருந்துகளிலிருந்து அரசு பேருந்துகளை பயன்படுத்துவதன் வாயிலாக கணிசமான பயன்களை அடையும். இது பொதுவாக, கார்பன் புகை வெளியேறுவதைக் குறைப்பதற்கும், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒட்டு மொத்த நகர்ப்புற செயல்திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.*

*அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (*CNG*), திரவ இயற்கை எரிவாயு (*LNG*), மின்கல-மின்சாரப் பேருந்துகள் (*BEB*), டீசல்-மின்சார கலப்பின வகை (*Hybrid/HBD*), உயிரி எரிபொருள் மற்றும் ஹைட்ரஜன்-2 ஆகியவை மாற்று எரிபொருள்களாக உள்ளன.*

மாசில்லா பேருந்து தொழில்நுட்பங்களின் இயக்க செயல்பாடு, புகை உமிழ்வுகள் மற்றும் செலவுகள், எரிசக்தி விலைகள் மற்றும் வாகனங்கள் மற்றும் உதிரிபாகங்கள் சந்தையில் கிடைக்கும் தன்மை உள்ளிட்ட உள்ளூர் நிலைமைகளைப் பொறுத்து கணிசமாக மாறுபடும். ஒரு குறிப்பிட்ட நகரம் அல்லது பெருவழிக்கான மாசில்லா பேருந்து தொழில்நுட்பத்தை உகந்த முறையில் தேர்வு செய்வது புகை உமிழ்வுகள் (எ.கா. காற்று மாசுபடுத்திகள் அல்லது CO_2*) உட்பட பல்வேறு காரணிகளைச் சார்ந்திருக்கும். தொடக்க விலை, நிதி இருப்பு, இலகுவான செயல்பாடு மற்றும் பராமரிப்பு, நிறுவன திறன்கள் மற்றும் கொள்கை மாற்றங்கள் போன்ற சாத்தியக்கூறுகளைக் கருத்தில்கொள்ள வேண்டியது அவசியமாகும். மாநிலத்தில் மாசில்லா வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, மாநில அரசு அண்மையில் மின்சார வாகனக் கொள்கை 2023-ஐ அறிவித்து, மின்சாரப் பேருந்துகள் வாங்குவதற்கு ஊக்கத்தொகை*

2023 மார்ச் 29]

வழங்குகிறது. மேலும், தமிழ்நாடு அரசு வாகனங்களுக்கு திரவ இயற்கை எரிவாயு/அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுக்காக நகர எரிவாயு விநியோகக் கொள்கை 2023-ஐ அறிவித்துள்ளது.

10.3 ஒருங்கிணைந்த போக்குவரத்து அமைப்பு

தடையற்ற போக்குவரத்து என்பது ஒருங்கிணைந்த போக்குவரத்து அமைப்பின் முக்கிய நோக்கமாகும், இதை உறுதிப்படுத்த, பேருந்து, புறநகர் இரயில், மெட்ரோ இரயில், பறக்கும் இரயில் போன்ற அனைத்து பொதுப் போக்குவரத்துகளின் கட்டணம், பயணிகள் தகவல்களை ஒருங்கிணைக்க வேண்டும். சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) இந்த ஒருங்கிணைப்பை எளிதாக்குகிறது.

வ. எண்	ஒருங்கிணைப்பு	விவரம்
1	கட்டண ஒருங்கிணைப்பு	பல்வேறு போக்குவரத்து சேவைகளுக்கான ஒருங்கிணைந்த பயண அட்டை (தேசிய பொது பயணச்சீட்டு ஏற்பாட்டு முறை) இருக்கக்கூடிய போக்குவரத்து வழிமுறை எளிதான போக்குவரத்து சேவைக்கு உதவும்.
2	தகவல் ஒருங்கிணைப்பு	சரியான நேரத்தை பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில், பேருந்துகள், பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்து நிறுத்தங்களை தகவல் தொழில்நுட்ப முறையின் வாயிலாக தகவல் மற்றும் கைபேசி செயலிமூலம் தெரிவித்தல். பெருநகர பேருந்து நிலையங்களில் வழித்தட மற்றும் பயண அட்டவணைத் தொடர்பான தகவல்களைக் காண்பிக்கும் நிலையான காட்சி பலகை நிறுவப்பட வேண்டும்.

[2023 மார்ச் 29

10.4 இரயில்வே திட்டங்களுக்காக தென்னக இரயில்வேயுடன் தொடர் ஒருங்கிணைப்பு

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நில நிருவாக ஆணையர் ஒருங்கிணைப்புடன் தமிழ்நாட்டில் இருவழி இரயில் பாதைகள், புதிய இரயில் பாதைகளை அமைப்பதற்கு நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான மாநில அரசின் ஒருங்கிணைப்பு முகமையாக போக்குவரத்துத் துறை உள்ளது. இரயில்வே திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த இரயில்வே அதிகாரிகளுடனான தொடர் கண்காணிப்பையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

10.5 செயல்திறன் அளவுகோல்கள்

*அரசு அல்லது பலதரப்பு நிதி நிறுவனங்கள், சாத்தியக்கூறு இடைவெளி நிதி (*Viability Gap Fund*) அல்லது மானியங்களை வழங்குவதற்கான அளவுகளை மதிப்பிடுவதற்கான அளவுருக்களை நிர்ணயிக்கின்றன. நடைமுறையில், செயல்திறன் குறியீடுகள், பணிகள், எவ்வாறு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதை மதிப்பிடவும், முன்னேற்றப் பகுதிகளை அடையாளம் காணவும், அவற்றின் செயல்பாடுகள், செயல்திறன் நிலைகளில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றனவா என்பதை மதிப்பிடவும் உதவுகின்றன. ஒரு மாதத்தில் அடைய வேண்டிய இலக்குகளுடன் உரிய அளவு செயல்பாட்டிற்குக் கண்டறியப்பட்ட நடவடிக்கை வருமாறு, கி.மீ. செயல்திறனின் சதவிகிதம், முதல் மற்றும் கடைசி பேருந்து நேரந்தவறாமை, குறைவான காத்திருப்பு நேரம், வாடிக்கையாளர் மன நிறைவு, பயண நேரம் கடைபிடித்தல், 1,00,000 கி.மீட்டருக்கு ஏற்படும் விபத்துகள் எண்ணிக்கை, ஒரு நாளைக்கு ஒரு பேருந்தில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை, இருக்கை பயன்பாட்டு விகிதம், பேருந்துகளின் பயன்பாடு விழுக்காடு, ஒரு நாளுக்கு ஒரு பேருந்து செல்லும் சராசரி கி.மீ. மற்றும் வருவாய்க்கும் செலவுக்கும் இடையே உள்ள இடைவெளி ஆகியனவாகும். செயல்திறன் குறியீடுகள் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் செயல்திறன் நிலைகளை மதிப்பிட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.*

10.6 பணிகளைப் பல்வகைப்படுத்தல்

புதிய வகை நகர்ப்புற பொதுப் போக்குவரத்து முறையில், பயணிகளின் பலவிதமான தேவைகளைப் பூர்த்தி செய்வதே பல்வகைப்பட்ட பேருந்து சேவையாகும். அரசு போக்குவரத்துக்

2023 மார்ச் 29]

கழகங்கள், இழப்பைக் குறைப்பதற்கும், பேருந்து பயண முறையை மேம்படுத்துவதற்கும், உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அனுபவம் வாய்ந்த தனியார் போக்குவரத்துச் சேவை வழங்குநர்களுடன், கூட்டு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. நிருவாகம் மற்றும் செயல்பாட்டுச் செலவுகளைக் குறைப்பது, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவது மற்றும் வருவாய் செயல்திறனை அதிகரிப்பது ஆகியவை இதன் இலக்காகும். இந்த நடவடிக்கை நிலைப்படுத்தப்பட்ட, தரமான சேவையுடன் பொது பயணிகளுக்கு நிலையான பொதுப் போக்குவரத்து சேவைகளை பெறுவதற்கு வகை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யும் பயணிகளுக்கு சரியான நேரத்தில் பேருந்துகள் கிடைப்பது, பாதுகாப்பான, மலிவான, வசதியான, தூய்மையான மற்றும் நம்பகமான பயணிகள் தகவல் அமைப்பு முறைகளில் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.

10.7 வட்டார பேருந்து சேவைகளை வழங்குதல்

*வட்டார பேருந்து சேவைகள் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆட்சி எல்லைக்குட்பட்டவை, ஆயினும் அவை ஊரகப் பகுதிகளுக்குள் செயல்படலாம் அல்லது ஒரு நகர்ப்புறத்தை இணைக்கலாம். வட்டார சேவைகள் பொதுவாக 30 முதல் 100 கி.மீ. வழித்தட நீளம் கொண்டவை. வட்டார சேவைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட சந்தைப் பகுதிகளைச் சுற்றியே இருக்கும். அரசு சேவைகளைப் பெறுவதற்கு, மருத்துவப் பயணங்கள் மேற்கொள்வதற்கு அல்லது பிற இடங்களுக்குச் செல்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய மக்களுக்குச் சேவை செய்ய வட்டார பேருந்து வழித்தடங்கள் அமைக்கப்படலாம். சில வட்டார பேருந்துகள் ஒரு நாளில் ஒன்று முதல் இரண்டு பயணத் தடவைகள் மட்டுமே இயக்கப்படுகின்றன, மற்றவை அட்டவணைகளின்படி இயக்கப்படும். பேருந்துகளின் இயக்கத்தில் முடிந்தவரை குவிய மற்றும் ஆர (*Hub and Spoke Model*) மாதிரிமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*

10.8 பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை எளிதாக்குவதற்கான பேருந்து சேவைகள்

வேலை, கல்வி அல்லது சமூக கடமைகளை நிறைவேற்ற வேறு இடங்களுக்குச் செல்ல மக்களுக்குப் பேருந்து போக்குவரத்து அவசியமாகும். பேருந்து போக்குவரத்தின் பொருளாதார பங்களிப்பினைத் தவிர்க்க இயலாது. இது பொருளாதாரத்தின்

அடிப்படை பகுதியாகும், தொலைதூர கிராமங்களையும், உற்பத்திக்கான வளங்களையும் உருவாக்குகிறது. மேலும், கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க உதவுகிறது. சிறந்த பேருந்து போக்குவரத்து வசதி இருப்பதால், பொது மக்கள் எளிதாக அங்கும் இங்கும் பயணிக்க முடியும். தொலைதூர கிராமங்களில் வசிக்கும் மக்கள் நகரங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்று தங்கள் குடும்பங்களை நிர்வகிக்க முடியும். எனவே, ஒரு சிறந்த போக்குவரத்து அமைப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் பல்வேறு துறைகளில், பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது.

10.9 பேருந்துக் கட்டுமானம் (முழுமையாகக் கட்டப்பட்டது மற்றும் வழக்கமான முறையிலான கட்டுமானம்)

கடந்த இருபது ஆண்டுகளில், இந்தியாவில் வாகனங்களின் எண்ணிக்கையில் அதிவேக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. பொதுப் போக்குவரத்து வாகனங்களுடன் ஒப்பிடும்போது தனியர் வாகனங்களில் வளர்ச்சி விகிதம் பன்மடங்கு உள்ளது. துரதிஷ்டவசமாக, வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்ப சாலைகளின் எண்ணிக்கை மற்றும் சாலைகள் விரிவாக்கம் அதிகரிக்கவில்லை. இந்த நிலைமை சாலை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலுக்குக் கடுமையான சவாலை ஏற்படுத்தியுள்ளது. பேருந்துகளில் பாதுகாப்பு விதிகளை மேம்படுத்தி, பேருந்து கூண்டு குறியீடு இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு மற்றும் பேருந்து கூண்டு குறியீடு (AIS 052) 2015, ஆகஸ்டு முதல் நாளுக்குப் பிறகு பதிவு செய்துள்ள அனைத்துப் பேருந்துகளுக்கும் பொருந்தும். இந்த பேருந்து கூண்டு குறியீட்டின்படி, பேருந்து கூண்டு கட்டும் நிறுவனத்தினர் அனைத்து அளவீடுகளுக்கும் இணக்கமாக இருக்கும் வகையில், பேருந்து கட்டமைப்பின் நிலைத்த மற்றும் வலுவான தன்மை, உறுதியான இருக்கை அமைப்புகள் மற்றும் ஒருவேளை பேருந்து கவிழ்ந்தால், அதன் பாதிப்பு குறைவாக இருக்கும் வகையில், பேருந்து கவிழ்தலின்போது நடைபெறும் பாதிப்புகள் குறித்த பகுப்பாய்வுகள் செய்து வடிவமைக்கப்பட வேண்டும்.

முழுமையான கட்டுமானப் பேருந்து என்பது ஒரு தனி ஒப்பந்த அடிப்படையிலானது, இதில் பேருந்து அமைப்பின் வலிமை, நீடித்த தன்மை மற்றும் பாதுகாப்பு, கொள்முதல் நேரத்தில் விலையேற்றம் தொடர்பான அனைத்து அம்சங்களுக்கும் உற்பத்தியாளரே பொறுப்புடையவராவார்.

2023 மார்ச் 29]

தனிப்பட்ட கட்டமைப்பு மாதிரியில், பேருந்தின் அடிச்சட்டம் மற்றும் கூண்டு கட்டமைப்பு தனித்தனியாகக் கொள்முதல் செய்வதாகும். இது ஒரு பல்வகையான விற்பனை மேலாண்மையாகும்.

10.10 வயது முதிர்ந்த பேருந்துகளின் கூண்டு கட்டமைப்பு முழுவதையும் மறுசீரமைத்தல்

கழிவுசெய்தல் கொள்கையின்படி, விரைவுப் பேருந்துகள் 7 ஆண்டுகளின் முடிவில் அல்லது 12 இலட்சம் கி.மீட்டர் தூரம் ஓடி முடித்தல் இவற்றில் எது முந்தையதோ, அதைக் கணக்கில் கொண்டு அந்த பேருந்துகள் மாற்றப்பட வேண்டும். மற்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் 9 ஆண்டுகளின் முடிவில் அல்லது 12 இலட்சம் கி.மீட்டர் தூரம் ஓடி முடித்தல் இவற்றில் எது முந்தையதோ அதைக் கணக்கில் கொண்டு மாற்றப்பட வேண்டும். 31-1-2023 அன்றுள்ளவாறு, கோவிட்-19 தாக்கம் மற்றும் நிதிப் பற்றாக்குறை காரணமாக 2019-2020 ஆம் ஆண்டிலிருந்து புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படாததால் அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து எண்ணிக்கையில் சுமார் 50 சதவிகிதம் வயது முதிர்ந்த பேருந்துகளாக உள்ளன.

பயணிகள் தங்கள் பயணத்திற்காக, தரமான மற்றும் வசதியான பேருந்துகளை விரும்புகின்றனர். குறிப்பிட்ட ஆயுட்காலத்தில் பாதி ஆண்டுகள் நிறைவடைந்தவுடன், பேருந்தின் நிலையை உறுதி செய்வதற்கு, பேருந்தினைப் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. இதனால் பேருந்து அடுத்த 5 முதல் 6 ஆண்டுகள் வரை யாதொரு கூடுதல் செலவினமின்றி இயங்குவதை உறுதி செய்யலாம். பழைய பேருந்தின் அடிச்சட்டம் நல்ல நிலையில் இருக்கும்பட்சத்தில் அப்பேருந்துகளின் முழு கூண்டினையும் புதுப்பிக்க வாய்ப்பு உண்டு. பேருந்து புதுப்பிக்கப்பட்ட பின்னர், அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு யாதொரு கூடுதல் செலவினமுமின்றி பேருந்துகளை இயக்கலாம். ஆயிரம் பழைய பேருந்துகளைப் புதுப்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து பணிகளுக்கான நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

[2023 மார்ச் 29

10.11 அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான நிலங்களை வணிகப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்துதல்

அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயணக் கட்டண வருவாய், பயணியர் பயண அட்டைகள் விற்பனை வாயிலாக வருவாய் ஈட்டுகின்றன. இது போக்குவரத்து வருவாய் என அழைக்கப்படுகிறது. வேறு சில வருவாய் ஆதாரங்கள் ஆராயப்படவுள்ளன. போக்குவரத்து வருவாய் தவிர மற்ற வருவாய் ஆதாரமாக உள்ள வணிக வருவாயை ஏற்படுத்துவதன்மூலம், அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொடர் செலவினங்களைக் குறைப்பதற்கு நிச்சயம் உதவும். அண்மைக் காலங்களில், கட்டுமான உள்கட்டமைப்பு மற்றும் நிலம் உடைமை ஆகியவற்றை நிலையான வணிக வருவாயை ஈட்டுவதற்கு பயன்படுத்தப்படலாம் என்பதை அரசு போக்குவரத்துக் கழகங்கள் உணர்ந்துள்ளன.

பேருந்து பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் போன்ற முக்கிய இடங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான மதிப்புமிக்க நிலங்கள் உள்ளன. இந்த கட்டடங்களுக்கு மேலே உள்ள வான்பகுதி வணிக நோக்கங்களுக்காக, அவர்களின் சொந்த வளங்களைப் பயன்படுத்தியோ அல்லது தனியார் துறையின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படலாம். இது குத்தகை/ வாடகை வடிவில் கணிசமான வருவாயை ஈட்டித் தரலாம். எவ்வாறாயினும், எதிர்கால பொது போக்குவரத்துத் தேவைகள் போதுமான அளவு நிறைவேற்றப்பட வேண்டும் மற்றும் அத்தகைய முன்னேற்றங்கள் விரிவாக்கத்திற்கான திட்டங்களைப் பாதிக்காது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும்.

10.12 விளம்பரத்தின்மூலம் பயணக் கட்டணமல்லாத ஏனைய வருவாய் ஈட்டுதல்

இந்தியாவிலுள்ள பெரும்பாலான அரசு போக்குவரத்துக் கழகங்கள் இலாபம் ஈட்டாத நிலையில் உள்ளன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. நிலையான இயக்கம், ஊதியம், ஓய்வூதியம், சட்டரீதியாகக் கொடுக்கப்பட வேண்டிய தொகை, பேருந்துகளை அதிகரித்தல் அல்லது பேருந்துகளை மாற்றம் செய்தல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு அல்லது மேம்பாடு தேவைகளைப் பூர்த்தி செய்தல் உள்ளிட்ட செயல்பாடுகளை நிலைநிறுத்துவதற்கு அரசு போக்குவரத்துக் கழகங்கள் அரசின் ஆதரவைச் சார்ந்துள்ளன.

2023 மார்ச் 29]

மாநிலங்கள் முழுவதிலும் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் 'பயணக் கட்டணமில்லா ஏனைய வருவாய்' போன்ற பல்வேறு புதுமையான கண்ணோட்டத்தில்/பல்வேறு விதங்களில் தங்களுடைய நிதி நிலைமையை அதிகரிக்க வேண்டும். ஏனைய வரவுக்கான முக்கிய ஆதாரமாக விளம்பரப் பிரிவு உள்ளது. இதன்மூலம் வருவாயை எளிதாக அடையலாம். கழக சொத்துகளின் மேல் விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்துவதாலும், பேருந்துகள் (வெளிப்புறம் மற்றும் உள்புறம் இரண்டும்), பயணச்சீட்டு மற்றும் பயண அட்டை ஆகியவை வாயிலாக விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவதாலும் கணிசமான வருவாயைப் பெறலாம். ஆண்டுதோறும் விளம்பர உரிமைகள் ஏல முறையில் வழங்கப்படலாம். அதிகார அமைப்பின் கொள்கைகளுக்கு விளம்பரங்கள் இணக்கமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விளம்பரத்தை ஒழுங்குபடுத்தி அதற்கு வரி விதிக்கின்றன). உணவகம், சரக்கு சிப்பம் அனுப்புதல், சரக்கு மற்றும் விரைவஞ்சல் சேவைகள், திருமணங்கள் மற்றும் கூட்டங்கள் போன்றவற்றிற்கு மண்டபங்களை வாடகைக்கு விடுதல், பேருந்து நிலையங்கள்/பேருந்து நிறுத்தங்களில் பணம் செலுத்தி வாகனத்தை நிறுத்தி வைக்கும் வசதி, பொதுமக்களுக்கு ஓட்டுநர் பயிற்சி மற்றும் வாடகை இழுவை வாகனங்கள் மற்றும் ஏனைய பகுதிகள் போன்றவை வருவாய் ஈட்டுவதற்கான பகுதிகளாகும்.

10.13 பேருந்துகளை மாற்றுதல்

வயது முதிர்ந்த பேருந்துகளை மாற்றுவது என்பது அரசின் கொள்கையாகும். மேலும், இது வாகனத்தின் வயது, ஓடிய கி.மீட்டர் எண்ணிக்கை, கூண்டின் நிலை போன்ற சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக உள்ளன. சாலையின் தரம், உயரும் வாகன தொழில்நுட்பங்கள், பேருந்து கூண்டுகளின் ஆயுட்காலம், இந்திய அரசின் புதிய பழைய வாகன அழிப்புக் கொள்கைகள், அண்டை மாநிலங்களால் கடைபிடிக்கப்படும் கொள்கைகள், அரசு போக்குவரத்துக் கழகங்களால் கடைபிடிக்கப்படும் பராமரிப்பு முறையில் முன்னேற்றம். மின்சார வாகனங்கள், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) போன்றவற்றைப் பயன்படுத்தும் மாற்று எரிபொருளில் இயங்கும் வாகனங்கள் போன்ற மாசில்லா வாகனங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு விதிமுறைகள் அவ்வப்போது திருத்தி

[*2023 மார்ச் 29*

அமைக்கப்படுகின்றன. மேலும், எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம், பராமரிப்புச் செலவு மற்றும் மூலதனச் செலவு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு நன்மைகளை முறையாக பகுப்பாய்வு செய்தல்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் சாலையில் இயக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவு செய்த அல்லது 12 இலட்சம் கி.மீட்டர் தூரம் பயணம் நிறைவு செய்த பேருந்துகள் (இவற்றில் எது முந்தையதோ அதை நிறைவு செய்யும்) மற்றும் ஏனைய அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்தவரை ஒன்பது ஆண்டுகளின் முடிவில் அல்லது 12 இலட்சம் கி.மீட்டர் தூரம் பயணம் நிறைவு செய்யும் (இவற்றில் எது முந்தையதோ அதை நிறைவு செய்யும்) பேருந்துகளைக் கழிவு செய்வதற்கான விதிமுறைகளை மாற்றி அமைத்து அரசாணை (நிலை) எண்.70, போக்குவரத்து (அ) துறை, நாள். 8-7-2021-ல் வெளியிடப்பட்டுள்ளது.

10.14 மொத்த செலவு ஒப்பந்த மாதிரி (GCC)

நிதி ஆதாரம் இல்லாத மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்து சேவைகளை அறிமுகப்படுத்தவோ அல்லது அதிகரிக்கவோ பொது மற்றும் தனியார் கூட்டாண்மை (PPP) ஒரு வழியாக உருவெடுத்துள்ளது. போக்குவரத்திற்கான அதிகரித்து வரும் தேவையுடன், போக்குவரத்துத் துறையின் முதலீட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பேருந்து சேவைகளை அதிகரிப்பதற்கும் ஒரு தீர்வாக செயல்படும் திறனை பொது மற்றும் தனியார் கூட்டாண்மை கொண்டுள்ளன.

மொத்த செலவு ஒப்பந்த (GCC) மாதிரி என்பது ஒரு பொது தனியார் கூட்டாண்மை மாதிரியாகும். போக்குவரத்து வலைதளங்களை நிர்வகிக்கும் பொறுப்பு, வருவாய் ஈட்டுதல் அரசு போக்குவரத்துக் கழகங்களால் மேற்கொள்ளப்படுகிறது, அதேசமயம் பேருந்துகளை வாங்குதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை இயக்குபவரின் (Operator) பொறுப்பாகும். பயணிகளுக்கான சேவையின் நிலை மற்றும் தரத்திற்கு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பொறுப்பாகும். வழக்கமாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் இயக்குபவரால் இயக்க வேண்டிய தினசரி கிலோ மீட்டர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. இயக்குபவருக்கு கி.மீ. அடிப்படையில் கட்டணம் வழங்கப்படும்.

பேருந்துகள் கொள்முதல் செய்ய மாநில போக்குவரத்துக் கழகத்திற்குதேவைப்படும்பெரும்மூலதனச்செலவினைக்குறைப்பதே

2023 மார்ச் 29]

மொத்த ஒப்பந்த மாதிரியால் ஏற்படும் பெரும் நன்மையாகும். கூடுதலாக, உதிரிபாகங்கள் மற்றும் பிற நுகர்பொருட்களைப் பராமரிப்பதற்காக புதிய மேம்படுத்தப்பட்ட வாகனங்களுக்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்திற்கும் மாநில போக்குவரத்து நிறுவனத்திற்கு தேவைப்படும் பெரும் மூலதனச் செலவினம் குறைக்கப்படுகிறது. மேலும், பராமரிப்பு மற்றும் இதர ஊழியர்களின் ஊதியத்திற்கான செலவும் குறைக்கப்படுகிறது. மொத்த செலவு ஒப்பந்த (GCC) மாதிரி முறையைப் பின்பற்றுவதால், ஒப்பந்தக் காலம் முழுவதும் கணிசமான சேமிப்பு மற்றும் மேம்பட்ட செயல்திறனை அடைய முடியும். இருப்பினும், நெருக்கடி நிலையைச் சமாளிக்க அரசு போக்குவரத்துக் கழகம் போதிய அளவிலான பேருந்துகள் மற்றும் ஊழியர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

10.15 பெண்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள்

பொதுப் போக்குவரத்து நம்பகமானதாக இல்லாவிட்டால், பெண்களுக்கான போக்குவரத்து ஒரு சவாலாகும். எனவே, பேருந்துகளில் பயணம் செய்யும்போதும், பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்து பணிமனைகளில் காத்திருக்கும்போதும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், கண்காணிப்புக் கேமரா (CCTV) அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, கண்காணிக்க தனிச் சிறப்புடைய கட்டளை கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 2,500 பேருந்துகள் மற்றும் 66 பேருந்து முனையங்கள்/பணிமனைகள்/அலகுகளை உள்ளடக்கி முழு செயல்பாட்டில் உள்ளது. மேலும், பேருந்துகளில் அவசர நிலை குறித்து கட்டுப்பாட்டு மையம் மற்றும் காவல் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கும் வகையில் எச்சரிக்கை பொத்தான்கள் பொருத்தப்பட்டுள்ளன. இது எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களின் அனைத்துப் பேருந்துகளுக்கும் உரிய காலத்தில் விரிவுபடுத்தப்படும்.

10.16 மானியங்கள் வழங்குவதற்கான முக்கிய அளவுருக்களை நிர்ணயிப்பதற்கான குழு

போக்குவரத்துக் கழகங்களின் செலவு குறைக்கப்படுவதற்காகவும், அவை விதிமுறை அடிப்படையிலான செயல்திறன் குறியீடுகளை அடைவதற்காகவும் இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இலவச

[2023 மார்ச் 29

அல்லது மானிய விலையில் பயணிப்பதற்காக அல்லது அதிக கட்டண வழித்தடங்களை இயக்குவதற்கான நெறிமுறை செலவு அளவுருக்களின் அடிப்படையில் மானியங்களை வழங்குவதற்கான முக்கிய செயல்திறன் குறியீடுகளை (Key Performance Indicator) நிர்ணயிக்க அரசாணை (நிலை) எண்.36 போக்குவரத்து (ட்டி.1) துறை, நாள்.1-4-2022-ன்படி குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, போக்குவரத்துக் கழகங்களின் செலவுகளைக் குறைத்தல் மற்றும் செயல்திறன் குறியீடுகள் அடிப்படையில் விதிமுறைகளை உருவாக்குவதன்மூலம் பயணியர்கள் வசதியாக பயணிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும். இக்குழு, தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

10.17 கட்டணக் கொள்கை

தமிழ்நாட்டில் கட்டண நிலைப் பேருந்துகளுக்கான கட்டணத்தை நிர்ணயிக்கும் அதிகாரம் அரசிடமே உள்ளது. பேருந்து கட்டணம் 2001 ஆம் ஆண்டிற்கு பிறகு, 2011 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாற்றி அமைக்கப்பட்டது. ஆனால், அதே காலகட்டத்தில் அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கேரளா முறையே 16, 10 மற்றும் 10 முறைகள் பேருந்து கட்டணங்களில் மாற்றம் மேற்கொண்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டிற்குப்பின் 2 முறைகள் மட்டுமே பேருந்து கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் தானியங்கு குறியீட்டு முறையில் கட்டணத்தை மாற்றியமைக்கும் நோக்கத்திற்காக ஒரு நிபுணர் குழுவும், அதிகாரமளிக்கப்பட்ட குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

10.18 பொது இயக்க அட்டை (Single Mobility Card)

சில்லறை வணிகம், பொருட்களை வாங்குவதற்கு மற்றும் அனைத்து நோக்கங்களுக்காகப் பேருந்துகள் மற்றும் பிற போக்குவரத்து அமைப்புகளில் தடையற்ற பயணத்தை உறுதி செய்வதற்காக பொது இயக்க அட்டை வெளியிடப்பட்டது. இது குறைந்த அளவிலான மின்னணு பண பரிமாற்றத்திற்கான உகந்த தொழில்நுட்ப அமைப்பாகும்.

மெட்ரோ இரயில், பேருந்து, புறநகர் இரயில், சுங்கம், வாகன நிறுத்தம், சீர்மிகு நகரங்கள் மற்றும் சில்லரை விற்பனையகங்கள்

2023 மார்ச் 29]

உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் பணம் செலுத்துவதற்கு தற்போது வாடிக்கையாளர்கள் வைத்துள்ள பற்று/கடன் அட்டைகளைப் பயன்படுத்த அவர்களுக்கு பொது இயக்க அட்டை உதவுகிறது. பொது இயக்க அட்டையில் சேமிக்கப்பட்ட தொகை, பங்குதாரர்களுக்கான குறைந்தளவு நிதி அபாயத்துடன் அனைத்து பயணத் தேவைகளிலும் இணைய பயன்பாடின்றியே பரிவர்த்தனைகளை மேற்கொள்ள உதவுகிறது. இந்த அட்டையின் இந்த சிறப்புக்கூறு, பயனாளிகளின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுகிறது. உதாரணமாக, மாதாந்திர அனுமதி அட்டைகள், குறிப்பிட்ட கால அனுமதி அட்டைகள். RuPay இயங்குதளத்தால் இயங்கும் பொது இயக்க அட்டை, பல்வகை இணையமற்ற கட்டண முறைகளை எளிதாக்குகிறது. ஜெர்மனி வளர்ச்சி வங்கித் திட்டத்தின்கீழ் ரொக்கமில்லா பரிவர்த்தனை செயல்படுத்தப்பட்டவுடன், மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பொது இயக்க அட்டை செயல்படுத்தப்படும்.

10.19 புவியிடஞ்சுட்டி (GPS) அடிப்படையிலான பேருந்து நிறுத்த அறிவிப்பு முறை

பேருந்து அதன் வழித்தடத்தில் செல்லும்போது, காட்சித்திரை மற்றும் ஒலி பெருக்கி வாயிலாக, அடுத்த பேருந்து அமைவிடம் குறித்து புவியிடஞ்சுட்டிமூலம் தானியங்கி பேருந்து நிறுத்த அறிவிப்பு முறையை வழங்குகிறது. இந்த நிறுத்த அறிவிப்புகள், மின்னணு செய்தியாகக் காட்சிப்படுத்துதல் மற்றும் ஒலிபெருக்கி வாயிலாக அல்லது பொது தகவல் திட்டத்தின் வாயிலாக அறிவிக்கப்படலாம். பேருந்து நிறுத்த தானியங்கி அறிவிப்பு முறையில், நடத்துநர் அறிவிப்பை மேற்கொள்ள வேண்டிய தேவையின்றி, நிறுத்த அறிவிப்புகள் தொடர்ந்து அறிவிக்கப்படுவதை உறுதி செய்ய உதவுகிறது. இந்த அமைப்புகள் வழித்தடம் குறித்து தெரியாத புதிய பயணிகளுக்கு உதவுவது மட்டுமின்றி, பார்வை குறைபாடுள்ளவர்களும் தங்கள் நிறுத்தத்தை அடையாளம் காண உதவுகின்றன. இந்த தானியங்கி முறைகள்மூலம் அறிவிப்பு திரையில் காண்பிக்கப்படும் நிலையில் அதனைத் தீர்மானிக்க தானியங்கி வாகன இருப்பிடத்தை (AVL) அறிய பயன்படுத்தப்படலாம். ஆறு அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 710 பேருந்துகளில் பயணிகளின் வசதிக்காக பேருந்து நிறுத்த அறிவிப்பு அமைப்பு உள்ளது.

[2023 மார்ச் 29

10.20 இயக்க மற்றும் நிதி சார்ந்த செயல்திறனைக் கண்காணிக்கும் முகப்புப் பலகை

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்க மற்றும் நிதி சார்ந்த செயல்திறன் குறியீடுகள் நாள்தோறும் கைபேசிமூலம் அறியப்படுகிறது. இவற்றை அரசு போக்குவரத்துக் கழகங்களின் தலைவர், மேலாண்மை இயக்குநர்கள்/தலைமை நிதி அலுவலர்கள் ஆய்வு செய்வார்கள். செயல்திறன் குறியீடுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்குத் தினமும் தெரிவிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முகப்புப் பலகையில் காட்சிபடுத்தப்படும். முக்கிய செயல்திறன் குறியீடு மாதந்திர செயல்திறனை மதிப்பீடு செய்து அவற்றை முந்தைய காலங்களுடன் ஒப்பிடுகின்றன.

10.21 பல்வேறு வகையான கடைக்கோடி பகுதிகளையும் இணைக்கும் பொதுப் போக்குவரத்து அமைப்பு

முதல் மற்றும் கடைக்கோடி இணைப்பை வழங்குவதற்கான ஒரே பொதுப் போக்குவரத்து முறை பேருந்து போக்குவரத்தாகும். ஏனெனில் இது தேவைப்படும் பகுதிகளின் மூலை முடுக்குகளிலெல்லாம் இயக்க நெகிழ்வானது. அரசு போக்குவரத்துக் கழகங்கள் அதன் 9,620 மாநகர்/நகரப் பேருந்துகள்மூலம் கடைக்கோடி இணைப்பை நிறைவேற்றியுள்ளன.

10.22 மின்னணு முறையில் சேவை வழங்குதல்

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை விநியோகம்) விதிகள் 2016-ன்கீழ், மின்னணு சேவை வழங்குதல் முறையின்கீழ் இணைய முறையில் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பயணம் மேற்கொள்ளும் வெவ்வேறு வகை நபர்களுக்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் 13 வகையான கட்டணச் சலுகைகளை (100% இலவசம், 75%, 50%, 1/3, இலவச அடையாளவில்லை போன்றவை) வழங்க வேண்டியிருக்கிறது. இணையவழி பயண அட்டை வழங்கும் மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது.

10.23 ரொக்கமில்லா பயணச்சீட்டு முறை

ஒருங்கிணைந்த பரிவர்த்தனை தரவு (UPI) நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மிகக் குறைந்த அளவிலான

2023 மார்ச் 29]

பணப் பரிமாற்றத்தை மேற்கொள்ள நாடு ரொக்கமில்லா பரிவர்த்தனை முறைக்கு நகர்ந்து வருகிறது. தற்போது, பேருந்து பயணிகள் ஒருங்கிணைந்த பரிவர்த்தனை தரவு (UPI) முறைகளை நன்கு அறிந்திருக்கிறார்கள் மற்றும் பொருட்களை வாங்குவதற்கும் பயன்படுத்துகிறார்கள். இணையவழி மின்னணு பயணச்சீட்டு முறையில் ரொக்கமில்லா பரிவர்த்தனை என்ற வாய்ப்பு பயணிகளுக்கும் நடத்துநர் பயணச்சீட்டை வழங்குவதற்கும் அதனை முறையாக கணக்குகளை வைத்துக்கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த முறை, நடத்துநர்களுக்கு சோர்வினைப்போக்கி, முறையாகக் கணக்குகளைக் கையாளவும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் உதவுகிறது. ஜெர்மனி வளர்ச்சி வங்கி (KfW) திட்டத்தின்கீழ். ரொக்கமில்லா பயணச்சீட்டு முறையை செயல்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

10.24 அதிவேக டீசல் கொள்முதல் செய்யும் முறை

திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட், திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட். மற்றும் திருவாளர் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட். போன்ற பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து அதிவேக டீசல் (HSD) தள்ளுபடி விலையில் வாங்கப்படுகிறது.

10.25 கைவிரல் ரேகை வருகைப் பதிவு முறை

கைவிரல் ரேகை வருகைப்பதிவு முறை என்பது தொழில்நுட்ப வருகைப்பதிவு முறையாகும். கைவிரல் ரேகை வருகைப்பதிவு முறையில் பணியாளர்களின் தினசரி வருகைப் பதிவு செய்யப்படுகிறது. இது பணியாளர்களின் வருகை பதிவினை முறையாகக் கண்காணிக்க உதவுகிறது. பணி நேரத்தின்போது, பணியாளர்கள் அலுவலகத்திற்குள் வரும் நேரத்தையும் அலுவலகத்தைவிட்டு வெளியே செல்லும் நேரத்தையும் பதிவு செய்து வைக்கும் வகையில் ஒவ்வொரு பணியாளரின் விரல் ரேகை பதிவும் பயன்படுகிறது. தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள், பணிமனைகள் மற்றும் இதர அலகுகள் உட்பட 88% இடங்களில் இந்த முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. ஐந்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் அனைத்து பணியாளர்களும் கைவிரல் ரேகை வருகைப் பதிவு முறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

[2023 மார்ச் 29

10.26 நைட்ரஜன் வாயுவை பயன்படுத்தி உருளிப்பட்டையின் ஆயுளை அதிகரித்தல்

உருளிப்பட்டை (Tyre) செயல்திறனை அதிகரிப்பது குறித்த நேர்வில், வழக்கமான அழுத்தக் காற்றினால் நிரப்பப்பட்ட உருளிப்பட்டைகளைக் காட்டிலும், நைட்ரஜன் வாயு நிரப்பப்பட்ட உருளிப்பட்டைகள் சிறப்பாகச் செயல்படுகின்றன. நைட்ரஜன் வாயு, உருளிப்பட்டையின் இயங்கும் வெப்பநிலையைக் குறைக்கிறது, ஆயுளை அதிகரிக்கிறது, சிறப்பு பயண அனுபவத்தை வழங்குகிறது. உருளிப்பட்டைகளுக்குச் சாலைகளின்மீது நல்ல பிடிப்பினை அளிக்கிறது. இரண்டு நாட்களுக்கொரு முறை காற்று அழுத்தத்தை சரி செய்யவேண்டிய அவசியம் இருக்காது. மேலும், மிகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கும். உருளிப்பட்டையில் கிழிசல் ஏற்படும் பொழுது நைட்ரஜன் வாயு மெதுவாக வெளியேறுவதால் அருகிலுள்ள பணிமனைக்குச் செல்ல போதுமான நேரத்தை அளிக்கிறது. உருளிப்பட்டையின் ஏற்ற இறக்கத்திற்கு நைட்ரஜன் வாயுவை பயன்படுத்தும் 34 பணிமனைகள் உள்ளன.

11. முடிவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரசுக்குச் சொந்தமான எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள், இடுபொருள் செலவினங்கள் அதிகரித்து பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்ட போதிலும், 2018 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட அதே கட்டணத்தில், பெருந்தொற்றுக்குப் பிந்தைய காலத்திலும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட பேருந்து சேவைகளைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கி வருகின்றன. பெண்களுக்கான சமூக நலத் திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதுமுள்ள சாதாரண நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லாமல் பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் திருநங்கைகளுக்கும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவரது உதவியாளருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சாதனை குறித்து சமீபத்தில் மாநில திட்டக் குழுவால் ஆய்வு மேற்கொண்டதில், ஒவ்வொரு பெண் பயணியும் மாதத்திற்கு சராசரியாக ரூ.888/- சேமித்துள்ளதாகவும், இச்சேமிப்பு தொகையை உணவு, துணிகள், கல்விக் கட்டணம், சுகாதாரம் போன்ற முக்கியத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பெண்கள் இதுவரை 256.66 கோடிக்கு மேல் பேருந்துகளில் பயண நடைகளை மேற்கொண்டுள்ளனர்.

2023 மார்ச் 29]

தமிழ்நாடு அரசு பேருந்து பயணிகளின் பயணத் திட்டமிடலுக்காக கைபேசி செயலி மற்றும் இணையதள அடிப்படையிலான நிகழ்நேர பயணிகளின் தகவல்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக பேருந்துகளில் கண்காணிப்புக் கேமரா மற்றும் அவசரக்காலங்களில் பெண்கள் பயன்படுத்தும் விதமாக எச்சரிக்கை பொத்தான் அடிப்படையிலான கண்காணிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், பேருந்து பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, பயணக் கட்டண வருவாய்மூலம் கொரோனா காலத்திற்கு முந்தைய (2019-2020 ஆம் நிதியாண்டில்) நிலையினை அடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புகையில்லா பேருந்துகள் அதாவது, BS-VI குறியீட்டிற்கு இணக்கமான டீசல் பேருந்துகள், தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள், நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு, தானியங்கி வாகன இருப்பிட அமைப்பு, மேலாண்மை செயல்பாட்டிற்கான ஒருங்கிணைந்த மென்பொருள் தீர்வு (ERP), அனைத்து வகையான பயணத்திற்கும் பயன்படுத்தப்படும் பயண அட்டை, பணிமனை மேலாண்மை அமைப்பு (பேருந்து இயக்க திட்டமிடல் மற்றும் வரையறுத்தல், பேருந்து இயக்குதல் மற்றும் ஓட்டுநர் / நடத்துநர் வருகையை அட்டவணைப்படுத்துதல், வருகைப் பதிவு மேலாண்மை அமைப்பு மற்றும் ஊழியர்களின் கைபேசி மென்பொருள் பயன்பாடு ஆகியவற்றை அமல்படுத்துவதற்கான கணினி ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்படவுள்ளார்.

பயணிகள் போக்குவரத்தில் பொதுப் போக்குவரத்துப் பங்கினை அதிகரிக்க, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) பேருந்து, தொடர் வண்டி, மெட்ரோ இரயில், பறக்கும் இரயில் (MRTS) போன்ற பல்வேறு போக்குவரத்துச் சேவைமூலம் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வருவாய், ஒருங்கிணைந்த பயண அட்டைமூலம் தொடர் பயணம் மேற்கொள்ளவும் ஒருங்கிணைப்பு பணியினை மேற்கொண்டு வருகிறது.

இந்நாள்வரை பணிமனை சொத்துகள் பேருந்து இயக்கத்திற்கு மட்டுமே பயன்பட்டு வந்த நிலையில், தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்கள், பேருந்து பணிமனைகள்/பேருந்து முனையங்களை வணிக ரீதியில் பொது மற்றும் தனியார்

[2023 மார்ச் 29

பங்களிப்புடன் நவீனப்படுத்தி கட்டணமில்லா வருவாய் ஈட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றன. மேலும், பேருந்துகளில் விளம்பரம், பேருந்து அதன் வழித்தடத்தில் செல்லும்போது ஒலிப்பெருக்கி வாயிலாக அடுத்த பேருந்து நிறுத்த அறிவிப்புமூலம் பெறப்படும் வருவாய், பெட்ரோல், டீசல் விற்பனை செய்வதற்கான சில்லறை விற்பனை நிலையம், மின்னேற்ற நிலையம் (e-charging station) அமைத்தல் போன்றவற்றின் மூலமாக வருவாயை ஈட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றன. வலுவான நிருவாக அர்ப்பணிப்பு, பிற துறை ஒருங்கிணைப்பு மற்றும் செயல்பாடுகள்மூலம் நம் மாநிலம் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இதன் காரணமாக அரசு பேருந்துகளால் ஏற்படும் சாலை விபத்துகள் பெருமளவில் குறைந்துள்ளன.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிந்தைய காலத்தில் பேருந்துக் கட்டண உயர்வு இல்லாமல் பேருந்துகளை இயக்கியதன்மூலம் கொரோனா பெருந்தொற்றிற்கு முந்தைய காலகட்டத்தில் ஈட்டிய வருவாயை, இயக்கம் மற்றும் கட்டணமில்லா ஏனைய வருவாய்மூலம் இத்துறை ஈட்டியுள்ளது. பேருந்து இயக்கங்களிலுள்ள இடைவெளியைக் களையவும், செயல்திறனை அதிகரிக்கவும், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 3,713 புதிய பேருந்துகளை இயக்கவும், கூடுதலாக 1,000 புதிய பேருந்துகளை இயக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்மூலம், நம் மாநிலம் பேருந்து அடிப்படையிலான பொது போக்குவரத்தில் நாட்டிலேயே முதல் இடத்தை மீண்டும் பெறுவதற்கு இத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2023 மார்ச் 29]

இணைப்பு

மானியக் கோரிக்கை எண் 48

போக்குவரத்துத் துறை

வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023-2024

(ரூபாய் ஆயிரங்களில்)

வ. எண்	துறை தலைமையகம்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1	போக்குவரத்துத்துறை, தலைமைச் செயலகம்	*6,381,71,24*	*900,00,03*	*700,80,09*	*7,982,51,36*
2	மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை	*73,57,23*	—	—	*73,57,23*
	மொத்தம்	*6,455,28,47*	*900,00,03*	*700,80,09*	*8,056,08,59*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.